மோகத்தை வென்றவனே

முதல் பாகம்

மோகம் – 1

கைகள் நடுங்க தனக்கு வழங்கப்பட்ட அந்த நவீன ஆடையை தன் கையில் ஏந்திக் கொண்டவளுக்கு அதை பார்த்த கணமே உடல் கூசியது.

இரத்தச் சிவப்பு நிறம் கொண்ட அந்த மெல்லிய ஆடையோ மார்பில் இருந்து தொடை வரை மிக மிக இறுக்கமாக உடலைக் கவ்வி நிற்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

அந்த ஆடையை அணிவதும் ஆடையின்றி செல்வதும் சமமே என எண்ணிக் கொண்டவள் பொங்கி வந்த அழுகையை அடக்க முயன்று பரிதாபமாக தோற்றுப் போனாள்.

நேரம் இரவு ஒன்பது என கடிகாரம் காட்ட, இன்னும் சற்று நேரத்தில் தன் ஒழுக்கம் மறந்து யாரென்றே தெரியாத ஒரு ஆடவனுக்கு தன் உடலை விருந்தாக்க போகின்றோம் என்ற நிதர்சனம் அவளது முகத்தில் அறைய, அந்த நொடியே பூமிக்குள் புதைந்து போய்விட மாட்டோமா என்ற எண்ணம் அவளை ஆட்கொள்ளத் தொடங்கியது.

அவளும் இதுவரை கற்புடைய மகளிர்தான். மதுரையை எரித்த கண்ணகியின் குணத்தை ஒத்தவள்தான். ஆனால் இன்று அவளது உலகம் தலை கீழாக அல்லவா சுற்றப் போகின்றது.

இதுவரை கட்டிக் காத்த கற்பு பணம் என்ற காகிதத் தாளுக்காக சிதறப் போகின்றது.

சட்டென தன் கரத்தில் இருந்த ஆடையை வெறுப்போடு தூக்கி எறிந்தவள் அக்கணமே தற்கொலை செய்துகொண்டால் நிம்மதியாக இருக்குமோ என எண்ணிக் கொண்டாள்.

‘நோ என்னால முடியாது. என்னை யாரும் தப்பாகத் தொடக் கூடாது. நான் அந்த மாதிரி பொண்ணு இல்ல....’ என தனக்குத் தானே கூறிக் கொண்டவள் அங்கிருந்த கண்ணாடியில் தெரிந்த தன் மோகன விம்பத்தை பார்த்து முகம் சுளித்தாள்.

அடுத்த நொடியே ‘நான் ஒன்னும் விபச்சாரி இல்லை....’ என

உரத்த குரலில் கண்ணாடியில் தெரிந்த தன் விம்பத்தை பார்த்துக் கத்தியவளின் மார்போ அதீத அழுத்தத்தின் காரணமாக வலிக்கத் தொடங்கியது.

ஏதேதோ எண்ணி வெறி பிடித்தவள் போல அந்த சிவப்பு நிற ஆடையை தானே கிழித்து எறிந்தவள் தன் கைப்பையை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பிய நேரம் அவளுடைய அலைபேசி ஒலித்து அவளுடைய வெளிநடப்பை சற்றே நிறுத்தி வைத்தது.

அலைபேசியை எடுத்து காதில் வைத்தவள் மறுமுனையில் கேட்ட வைத்தியரின் குரலில் அவளது உடலோ அழுகையில் குலுங்கத் தொடங்கியது.

“உங்க பையனோட ட்ரீட்மென்ட்டுக்கு சீக்கிரமா பணத்தை கட்டுங்க. அப்போதான் எங்களால அவரைக் காப்பாத்த முடியும்.” என்றார் வைத்தியர்.

“ச... சரி டாக்டர் மார்னிங் கட்டிடுறேன்....” என்றவாறு அழைப்பைத் துண்டித்தவள், அனைத்தும் தன் கை மீறி போய் விட்டதை உணர்ந்தாள்.

கற்பே முக்கியம் என திரும்பிச் செல்ல முயன்றவளின் மனக் கண்முன் மருத்துவமனையில் தனக்காக காத்துக் கொண்டிருக்கும் தன் குழந்தையின் ஆபத்தான நிலை நினைவு வர உணர்வுகள் அற்ற பாவை போல மீண்டும் அதே இடத்திலேயே நின்றாள்.

உயிருக்கு உயிராக அதற்கும் மேலாக நேசிக்கும் தன் குழந்தையை விட கற்பு முக்கியம் அல்ல. என எண்ணியவள் மனதை திடப்படுத்திக் கொண்டு அதே ஹோட்டலில் இருந்த பதின் மூன்றாம் எண் அறையைத் தேடி நடக்கத் தொடங்கினாள்.

அவள் தன்மயா....!!

பிற ஆண்களுடன் பேசுவதைக் கூட தவிர்ப்பவள் தற்போது யாரென்றே தெரியாத ஒருவனின் அறையை நாடிச் சென்று கொண்டிருந்தாள்.

அவள் அந்த அறையை நெருங்கிய கணம் அந்த இடத்திற்கு ஓடி வந்தான் ஒருவன்.

“மேடம் நீங்கதானே தன்மயா....?”

“ஆ.... ஆமாங்க....”

“ஓகே உங்களுக்கு கொடுத்த ட்ரெஸ் எங்கே....? சார் சொன்னது போல போகலைன்னா உங்களுக்குத்தான் கஷ்டம்.” என்றவனது பார்வை அவளது உடலை மேய்ந்தது.

சட்டென தன் முந்தானையால் தன் உடலை போர்த்திக் கொண்டவள் அவனை அழுத்தமாக பார்த்தாள்.

அவளது பார்வையில் திணறியவன் “சரி சரி உள்ளே போம்மா. இன்னும் கொஞ்ச நேரத்துல சார் வந்துருவாரு.” என்றதும் பாதங்கள் கூச அந்த அறைக்குள் நுழைந்தாள் தன்மயா.

அந்த அறைக்குள் நுழைந்ததும் பளிச்சிட்ட மின்விளக்குகளின் வெளிச்சம் அவள் கண்களைக் கூசச் செய்ய, தன் பார்வையை தரையில் பதித்தவள் சுய நினைவை இழந்தாற் போல அப்படியே நின்றாள்.

வெண்ணிற பஞ்சு போன்ற படுக்கையை பார்த்தவளுக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

தாலியின்றி யாரோ ஒருவனின் இச்சைக்கு அவளது உடல் பலியாக போகிறது என்ற எண்ணமே அவளை உயிரோடு வதைத்தது.

இந்த இக்கட்டில் இருந்து தன்னை யாரால் காப்பாற்றக் கூடும் என எண்ணி தவித்தவள் சட்டென தன் கரங்களைக் கூப்பி “முருகா, நீ நல்லவங்களை கை விடமாட்டேன்னு

தெரியும். கடைசி நேரத்துலையாவது என்னை எப்படியாவது காப்பாத்திரு முருகா....” என மனம் உருக வேண்டிக் கொண்டிருந்த நிமிடம் அந்த அறைக் கதவு திறந்தது.

அவளுக்கோ உடலில் ஓடிய இரத்தம் உறைந்து நின்றாற் போல அவளும் எவ்வித அசைவும் இன்றி அப்படியே நின்ற வண்ணம் உள்ளே நுழைந்தவனை வெறித்துப் பார்த்தாள்.

ஆறடி உயரத்தில் ஆளை அசத்தும் அழகில் கறுப்பு நிற கோர்ட் சூட் அணிந்து விலை உயர்ந்த ஷூ தரையில் அழுத்தமாக பதிய, அறைக்குள் நுழைந்தான் ஆதித்யன்.

அளவுக்கு அதிகமாக வளர்ந்து இறுகிப் போயிருந்த அவனுடைய

தசைக் கோளங்கள் அவன் மிகுந்த பலசாலி என்பதை அவளுக்கு உணர்த்தின.

அவனோ சடாரென்ற சத்தத்தோடு அறைக் கதவை அடித்துச் சாற்ற, அவளது மெல்லிய உடலோ அந்த சத்தத்தின் அதிர்வில் தூக்கிவாரிப் போட்டது.

கதவைப் பூட்டிவிட்டு திரும்பியவனின் நீல நிற விழிகள் அவளை இரசனையாகப் பார்க்க, அவனது தடித்த அதரங்களோ “நாட் பேட்....” என முணுமுணுத்தன.

அவளோ அச்சத்தில் செதுக்கி வைத்த சிலை போல அசையாது நின்றாள்.

“ஏய் நான் கொடுத்து அனுப்பின ட்ரெஸ் எங்க....?” என்ற அவனுடைய கர்ஜனைக் குரலில் உடல் அதிர அவனைப் பார்த்து மிரண்டு விழித்தாள் தன்மயா.

“இடியட். போய் அந்த ட்ரெஸ்ஸ போட்டுகிட்டு வா....” என்றதும் அவளுக்கோ விழிகளில் கண்ணீர் முட்டியது.

அவள்தான் அந்த ஆடையை கிழித்து விட்டாளே. அவனது சீற்றமான குரலில் கை விரல்கள் நடுங்க, கண்களை மூடிக் கொண்டாள் அவள்.

“இ.... இல்ல. அந்த ட்ரெஸ் கிழிஞ்சிருச்சு....” என நடுக்கமான குரலில் கூறியவளை தன் ஸ்கேனிங் விழிகளால் அளவெடுத்தவன் தான்

அணிந்திருந்த கோர்ட்டை கழற்றி அவளின் முகத்தில் விட்டெறிந்தான்.

அதற்கு அடுத்ததாக அவனுடைய வெண்ணிற ஷர்ட்டும் அவள் மீது வந்து விழுந்தது.

அவனது ஆடையில் இருந்து வந்த வியர்வை வாசனையில் சட்டென முகம் சுளித்தவள் தன் முகத்தில் இருந்து அவனுடைய ஆடையை விலக்கினாள்.

“உன் ட்ரெஸ் எல்லாம் கழட்டிட்டு இந்த ஷர்ட்டை மட்டும் போட்டுக்கிட்டு வா....” என்றவனுடைய அழுத்தமான குரலில் மீண்டும் அதிர்ந்தாள் தன்மயா.

முடியாது என தொண்டை வரை வந்த வார்த்தைகளை தனக்குள்

விழுங்கிக் கொண்டவள் அவனுடைய ஷர்ட்டை எடுத்துக் கொண்டு வேறு ஒரு அறையினுள் நுழைய முயன்றாள்.

அவனோ தடித்த கண்ணாடிக் குவளையில் அடர் சிவப்பு மதுபானத்தை ஊற்றி தன் கையில் ஏந்தியவாறு படுக்கையில் அமர்ந்தவன் "ஹேய் வெயிட். எனக்கு முன்னுக்கே ட்ரெஸ்ஸை மாத்து." என்றான்.

அவனது வார்த்தைகள் என்ன எரிமலைக் குழம்பா....? அவளுடைய உடலோ அந்த வார்த்தைகளில் பற்றி எரிவதைப் போல இருந்தது.

"எ.... எனக்கு அஞ்சு லட்சம் ரூபா பணம் வ்வேணும்...." எனத் திக்கித்

திணறிக் கேட்டவளின் வதனத்தை பார்த்தவன் புருவம் சுளித்தான்.

“சர்வீஸ் நல்லா இருந்தா நீ கேட்டதை விட அதிகமாவே கிடைக்கும். ம்ம் சீக்கிரமா ட்ரெஸ்ஸை மாத்திட்டு வந்து பெட்ல படு....” என எவ்விதக் கூச்சமும் இன்றி அவளை அழைத்தான் ஆதித்யன்.

அவளோ அப்போதும் அவன் சொன்னதைச் செய்யாது அசையாது அப்படியே நிற்க, அவளை நெருங்கியவன் அடுத்த கணம் அவனது கரத்தில் இருந்த கண்ணாடிக் குவளையின் மதுபானம் முழுவதையும் அவள் மீது கொட்டினான்.

அவனது செயலில் திகைத்து நிமிர்ந்தவளது இதழ்களோ

அழுகையில் துடித்தன. விழிகள் உவர் நீரை வழிய விட, அவனோ அவளுடைய புடவையை முந்தானையை பற்றி இழுத்தவன் அவளது ஆடைகளை ஒரு வித அவசரத்தோடு களையத் தொடங்கினான்.

அவனது வேகத்தில் அவளுடைய ஆடைகள் பரபரவென கிழியத் தொடங்க, சட்டென அவனைத் தள்ளிவிட்டவள் பூட்டியிருந்த கதவை நோக்கி ஓடத் தொடங்கினாள்.

அவளது செயலில் அவனுக்கோ பொறுமை இழக்கத் தொடங்கியது. “ஏய் இரிட்டேட் பண்ணாத. காசுக்கு ப××க்க வந்தவதானே நீ. இப்போ எதுக்குடி ஓடுற.? இங்கே யாரையும்

கட்டாயப்படுத்தி வர வைக்கலை. பிடிக்கலைன்னா போய்த் தொலை.” என்றவன் எரிச்சலோடு தன் பீஏவிற்கு அழைப்பெடுத்தான்.

“ஹேய் இடியட் இவளை எதுக்குடா அழைச்சுட்டு வந்த.? வேற எவளையாவது அனுப்பு.” எனக் கர்ஜித்தவன் அவளைப் பார்த்து “கெட் லாஸ்ட்....” என்றான்.

அந்த நொடியே அந்த இடத்தில் இருந்து ஓட வேண்டும் போலத்தான் அவளுக்கு இருந்தது. அவள் போனால் அவளுடைய பிள்ளையின் கதி....?

சட்டென விழிகளைத் துடைத்தவள் மீண்டும் அவனை நோக்கி வந்து அவன் அருகில் நின்று கொண்டாள்.

“நவ் வாட்...?”

“.....”

“ஏய் நீ என்ன பைத்தியமா....?”

“.....”

அவளோ விரல்கள் நடுங்க அவனுடைய ஷர்ட்டை எடுத்தவள் தன்னுடைய ஆடைகளைக் களைந்துவிட்டு அவனுடைய ஷர்ட்டை மாத்திரம் போட்டுக் கொண்டு அவன் முன்னால் வர, அவனது விழிகளோ கொட்டிக் குவிந்திருந்த அவளுடைய அழகில் பதிந்தன.

அடுத்த கணமே அவளை இழுத்து படுக்கையில் தள்ளியவன் அவள் மீது படர்ந்து அவளுடைய

கழுத்தில் முத்தம் பதிக்க, விக்கித்துப்போனாள் மாது.

கழுத்தில் ஏதோ ஊர்வதைப் போல இருக்க, தன்னை அறியாமல் துள்ளிவிடுபட முயன்றவளின் கன்னத்தில் பளாரென அறைந்தவன் அவளை அசைய விடாமற் தன் உடலுக்கு அடியில் பதுக்கிக் கொண்டான்.

அவனுடைய அகன்ற கரமோ அவளது வளைவு நெளிவுகளில் அழுந்திப் படிய, நரக வேதனையை உணரத் தொடங்கியவளுக்கு விம்மி வெடித்தது அழுகை.

“ஹ்ஹஹாஆஆ சோ ஸ்வீட்....” என்றவாறு அவளது உடலில் பற் தடங்களை அவன் பதிக்கத் தொடங்க, ஒரு கட்டத்திற்கு மேல் முடியாமல்

அவனைத் தள்ளி விட்டவள் கட்டிலுக்கு அருகில் மண்டியிட்டு அமர்ந்து முழங்கால்களால் தன் உடலை மறைத்துக் கொண்டு கரம் கூப்பிய வண்ணம் கதறத் தொடங்கினாள்.

"என்னை விட்ருங்க ப்ளீஸ். நீ.... நீங்க நினைக்கிற மாதிரி நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை. என.... எனக்கு மூச்சடைக்குது. சத்தியமா முடியலைங்க.." எனக் கதறி கதறி அழுதவளை சில நொடிகள் பார்த்துக் கொண்டிருந்தவன், படுக்கையில் இருந்து இறங்கி தரையில் அமர்ந்தவளின் அருகே தானும் அமர்ந்து கொண்டான்.

"உன்னோட அழுகை எனக்கு ரொம்ப பிடிச்சுருக்கு ஹனி. நீ

அழுறதை கேட்கவே கிக்கா இருக்கு. நீ என்ன பண்ணுறன்னா நிறுத்தாம இதே மாதிரியே அழுதுகிட்டே இரு." என்றதும் அவளுக்கோ மனம் நொறுங்கிப் போனது.

மனிதாபிமானமே அற்ற ஒரு சைக்கோவின் பிடியில் தான் சிக்கிக் கொண்டதை உணர்ந்தவள் அவனுடைய முகம் பார்க்காது திரும்பிக் கொண்டாள்.

"ஹேய் ட்ராமா குயின் போதும். இன்னும் எவ்வளவு நேரம்தான் அந்த பக்கமே பார்த்துட்டு இருப்ப....? ம்ம்....? அழு.... நல்லா அழு...." என்றவன் அவளைத் தரையில் சாய்த்து அவள் மீது படர்ந்தவன் வன்முறைகளின் தலைவனாக மாறிப் போனான்.

அவன் தொட்ட இடங்கள் யாவும் கண்றிச் சிவந்து போனது.

அவளுடைய குரலோ கதறிக் கதறி ஓய்ந்து போனது.

பட்டுப் போன்ற மென்மையான உடலோ அந்த ஆண்மகனின் இறுகிய உடலின் வலிமையில் சிதைந்து போனது.

அவன் முத்தம் இட்ட இடங்கள் யாவும் மொத்தமாய் ரணப்பட்டு போக, தவித்து துடித்து கதறிச் சோர்ந்து அவன் கரங்களிலேயே மயங்கிப் போனாள் பேதை.

பசுங் கொடி மலராய் இருந்தவளை கருக வைத்தவன் தன் தேவை முடிந்ததும் அவளை கட்டிலுக்கு அடியே உருட்டித் தள்ளி

விட்டு மதுபானத்தை கையில் இருந்த குவளையில் ஊற்றிக் கொண்டு அமர்ந்து கொண்டான்.

அவளது கதறலும் துடிப்பும் அங்கே அவனை இன்பப்படுத்தும் சங்கீதமாய் மாறிப் போயின.

ஒரு தாயாய் வென்றவள் ஒரு பெண்ணாய் மிகக் கேவலமாக தோற்றுப் போனாள்.

மோகம் – 2

நள்ளிரவில் மயக்கம் தெளிந்து கண்விழித்துப் பார்த்தவள் தன் நிலை கண்டு விரக்தி அடைந்தாள். தரையில் இருந்து எழுந்து கொண்டவளோ அந்த இடத்திலேயே தடுமாறி விழ, அவளது பின்னந்தலை தரையோடு

மோதுண்டது. அதில் இருந்து வழிந்த இரத்தம் தரையில் சிந்தியது.

“ம்மாஆ....” என வலியில் முனகியவள் மீண்டும் மீண்டும் எழ முயன்று தோற்றுப் போனவளாய் விழிகளை மூடிக் கொண்டாள்.

அவளது மெல்லிய உடலோ சாறு பிழிந்து எடுக்கப்பட்ட கரும்பினைப் போல சக்கையாக மாறியிருந்தது.

முடிந்தது இன்றோடு அவளுடைய வாழ்க்கையின் அத்தியாயம் முடிந்தே போனது. வாய்விட்டுக் கதற வேண்டும் போல இருந்த எண்ணத்தை எங்கே அவன் எழுந்தால் மீண்டும் தன்னை நாடி வந்து வதைப்பானோ என எண்ணி சிரமப்பட்டு அடக்கிக் கொண்டவள்

தன்னை கடவுள் கூட காப்பாற்றாது கைவிட்டதை எண்ணி மருகினாள்.

ஒரு மூச்சு வாய்விட்டு கதறி அழுதால் கூட அவளுக்கு சற்றே நிம்மதி கிடைத்திருக்கும். ஆனால் அவள் அவனுக்கு அஞ்சி தன் உணர்வுகளையும் வேதனையையும் அழுகையையும் அடக்கிக் கொண்டே இருக்க, அதுவோ ஒரு கட்டத்தில் பெரிய விம்மலாக வெடித்து வெளிப்பட்டது.

சட்டென தன் கைகளால் தன் வாயை இறுக மூடியும் அவளது அழுகை விக்கலாக வெளிப்பட, அந்தச் சத்தத்தில் தூக்கம் கலைந்து எழுந்தான் மலை போன்ற அசைக்க முடியாத திடகாத்திரமான உடலைக் கொண்ட ஆதித்யன்.

அடித்துப் போட்டாற் போல அசதியில் படுத்துக் கிடந்தவனது செவிகளில் விழுந்தது அவளுடைய விசும்பல்.

“ம்ப்ச்....” என எழுந்து கொண்டவன் படுக்கையில் புரண்டு கட்டிலுக்கு கீழே குனிந்து அவளைப் பார்த்து கண் சிமிட்டியவாறு “ஹாய் ட்ராமா குயின்....” என்றான்.

அவ்வளவுதான் அவனது குரலில் மொத்த உடலும் உதறல் எடுக்க, நடுங்கியவாறு கட்டிலுக்கு கீழேயே பதுங்கிக் கொண்டது அந்த பெண் மான்.

சிங்கத்தின் வேட்டைப் பார்வையில் சிக்கிக் கொண்ட பெண் மானால் இனி தப்பிக்கத்தான் முடியுமா....?

“கட்டிலுக்கு கீழ நல்ல வசதியா இருக்கா ட்ராமா குயின்....? சரி போதும் மேல வா. இல்லைன்னா நான் கட்டிலுக்கு கீழ வரட்டுமா....? ஐ கான்ட் வெயிட்....” என்றவாறு அவளைப் பார்த்தான் அவன்.

“வ்வேணாம்.... ப்ளீஸ் நான் போ.... போகணும். எனக்கு த.... தர வேண்டிய பணத்தை கொ.... கொடுத்திருங்க. நான் போயிடுறேன்....” என அழுகையோடு மன்றாடினாள் தன்மயா.

அவனோ சட்டென படுக்கையில் இருந்து இறங்கியவன் கீழே குனிந்து அவளது கால்களைப் பிடித்து வெளியே இழுத்து எடுத்தான்.

“ஆஆஆ... வ்விடுங்க.... ஐயோ என்னை விட்ருங்க ப்ளீஸ்.”

“உஷ்ஷ்.... இப்படி கத்துறதுலாம் எனக்கு சுத்தமா பிடிக்காது. உனக்கு தேவை பணம். அது என்கிட்ட கோடி கோடியா கொட்டிக் கிடக்கு. பேசாம வந்து படு. நீ கேட்டதை விட அதிகமா தர்றேன்.”

என்றவனின் கரத்தில் இருந்து திமிறியவள் “நீங்க எவ்ளோ கொடுத்தாலும் எனக்கு வேணாம். அந்த அஞ்சு லட்சத்தை மட்டும் கொடுங்க நான் போகணும்.” என்றவளின் பேச்சை அலட்சியப் படுத்தியவன் அவளுடைய கழுத்தைப் பற்றி தரையில் படுக்க வைத்து அவள் மீது படர்ந்தான்.

“ஓ.... அஞ்சு லட்சம் போதுமா....? ஆனா எனக்கு போதாதே. உன்கிட்ட என்னவோ இருக்குடி. ஆளை

மயக்குது. இது எல்லாத்தையும் விட ப்ளஸ் உன்னோட அழுகை. ஆஹா.... நீ அழுறதை கேட்டாலே கிக்கா இருக்குடி. ஹ்ஹ்ம்ம்.... ஆரம்பிக்கலாமா.? ஓகே நீ உன் அழுகையை ஸ்டார்ட் பண்ணு." என்றவன் அவளுடைய கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.

அவனுடைய வார்த்தைகளில் விக்கித்துப் போய் சிலையாக சமைந்து போனாள் அவள்.

பெண் என்றால் பேயும் இரங்குமாமே. இவன் பேயையும் மிஞ்சும் கொடூரனோ....? என எண்ணி தவித்தவள் விழிகளை இறுக மூடிக் கொண்டாள்.

கெட்ட கனவு போல இது மறைந்து போய் விடாதா என்ற ஏக்கம் அவளுள் எழுந்தது.

ஆதித்யனுக்கோ அவளுடனான அனுபவம் புதுமையைக் கொடுத்தது. இத்தனை நாட்கள் வந்த விலை மகளிர் அனைவரும் எள் எனும் முன் எண்ணெய்யாக மாறி அவன் மேல் விழுந்து வைக்க, தன்மயாவின் ஒதுக்கம், அழுகை, தவிப்பு , துடிப்பு அனைத்தும் அவனை பித்தம் கொள்ளச் செய்தன.

எப்போதும் வேறுபட்டவையின் சுவையே தனி அல்லவா.? அவனோ அவளது சிறு அசைவுகளில் கூட ருசி கண்ட பூனையாக மாறிப் போனான்.

மீண்டும் மீண்டும் அவளை நாட, அவளும் மீண்டும் மீண்டும் அவனைத்

தள்ளி விலக்க, அந்த விளையாட்டே அவனுக்கு சுவாரஸ்யத்தைக் கொடுத்தது.

அவளது செயல்கள் இன்னும் இன்னும் அவனை போதையேற்ற, அவளைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டவன் படுக்கையில் தொப்பென அவளைப் போட்டான்.

"ஆஆஆஆ....." என அலறியவளைப் பார்த்து பறக்கும் முத்தத்தை பரிசளித்தவன் நிதானமாக குனிந்து அவளுடைய இதழ்களில் அழுந்த முத்தம் பதிக்க, மீண்டும் அழுகையில் குலுங்கியது அவளுடைய உடல்.

அவனோ அவளது அழுகையை ரசித்தான்.

உடலுறவில் கூட புதுமையை விரும்பும் அவன் நிச்சயம் ஒரு புதுமைப் பித்தன்தான்.

அவளது அழுகையை அவன் ரசிக்கிறான் என்பது புரிய, தன்னை கட்டுப்படுத்த முயன்று பார்த்தாள் அவள்.

அவனது உடலின் வலிமை அவளை துன்புறுத்தியது. ஒரு கட்டத்தின் மீது அவளுக்கோ உடல் தூக்கித் தூக்கிப் போட சட்டென அவளை விட்டு விலகினான் ஆதி.

“ஏய்.... ஏய்... என்னாச்சு....? ம்ப்ச்..” என்றவாறு அவளை விட்டு எரிச்சலோடு எழுந்து கொண்டவன் “நீங்களே தேடி வர்றீங்க. பிறகு எதுக்குடி நடிக்கிறீங்க....?” எனக் கத்தினான்.

உடல் வெட்டித் துடிக்க, கண்கள் சொருகுவதைப் போல இருந்தது அவளுக்கு.

“த.... தண்... தண்ணீஈஈஈ....” என முனகியவளின் அருகே வந்தவன் சினத்தில் அவளைத் தூக்கிக் கொண்டு விறுவிறுவென நடக்கத் தொடங்கினான்.

அவளுக்கோ அச்சத்தில் மேலும் தொண்டை உலர்ந்து உடல் தூக்கி வாரிப்போட்டது.

அந்த அறையினுள்ளேயே இருந்த பாத்டப்பினுள் அவளைத் தொப்பென போட்டவன் “இந்த தண்ணீ போதுமா ட்ராமா குயின்...?” என்க, அவளோ பதறி எழ முயன்று மீண்டும் தொட்டிக்குள் விழுந்து மூச்சுத்

திணறிய வண்ணம் அப்படியே அதற்குள் அமர்ந்து கொண்டாள்.

அவனோ மீண்டும் அறைக்குள் சென்றவன் அவள் கேட்ட பணத்தை எடுத்து பாத்டப்பிற்கு முன் இருந்த மேஜையில் வைத்தான்.

“இன்னும் அஞ்சு நிமிஷம்தான் உனக்கு டைம். இந்தப் பணத்தை எடுத்துக்கிட்டு ஓடிப் போயிரு. ச்சை வேஸ்ட் ஃபெல்லோ.” என உரத்த குரலில் திட்டியவன் அந்த பாத்ரூமை விட்டு வெளியேற, அவளுக்கோ அந்த பணத்தைப் பார்த்த கணம் அழுகை பீறிட்டது.

இந்தப் பணத்திற்காக அல்லவா அவள் கெட்டுப் போய் நிற்கின்றாள்.

ஆடையற்ற தன் உடலைக் குனிந்து பார்த்தவளுக்கு குமட்டிக் கொண்டு வந்தது.

அந்தக் கொடூரனின் கரங்களும் பற்களும் அவளை வதைத்து பலவெட்டுக்களை பதித்திருக்க, அருவருப்போடு முகம் சுளித்தவள் அந்தக் கணமே மனதால் மாண்டு போனாள்.

'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற பண்பாட்டோடு வாழ்ந்த அவளுக்கு இந்த விடயம் மிகப்பெரிய அடியாக அவள் இதயத்தில் விழுந்தது.

கண்களை துடைத்துக் கொண்டு எழுந்தவள் அணிவதற்கு எந்த ஆடையும் இன்றி திணறிப் போனாள்.

அவள் அணிந்து வந்த புடவையும் அந்த அசுரனின் வேட்கையில் சிக்கி கிழிந்து விட்டதே.

வேறு வழியின்றி அந்த பாத்ரூமினுள் இருந்த அவனுடைய டீஷர்ட்டை எடுத்து அணிந்தவள் அங்கே மாட்டப்பட்டிருந்த பெரிய கோர்ட் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டு அதனுடைய பட்டன்களை போட்டுக் கொண்டாள்.

அவனுடைய கோர்ட்டோ அவளின் முழங்கால் வரை நீண்டிருந்தது. கரங்கள் நடுங்க அந்தப் பணத்தை கண்ணீரோடு எடுத்துக் கொண்டவள் அந்த பாத்ரூமை விட்டு மெல்ல மெல்ல வெளியே வந்தாள்.

அவள் வெளியே வந்ததும் அவள் இடையில் தன் கரத்தை

பதித்து அழுந்தப் பிடித்தவன் அவள் முகம் நோக்கிக் குனிந்தவாறு “உன்னோட பேர் என்ன....?” எனக் கேட்டான்.

இதழ்களை அழுந்த முடிக் கொண்டு தலை குனிந்து நின்றாள் அவள்.

அவளது உதடுகளோ அவன் கேட்டதும் பதில் கூற வேண்டுமா என்ற பிடிவாதத்தில் இறுகிப் போயின.

அவனது பார்வையோ ஓர் நிமிடம் அழுந்த மூடிய அவளுடைய செவ் இதழ்களில் பதிந்து விலகியது. அடுத்த கணம் அவனுடைய வலிமையான கரம் அவளுடைய உடலின் மென்மைப் பிரதேசத்தை அழுந்தப்பற்றி இறுக்கிப் பிடிக்க,

அவளுடைய இடுப்பு எழும்போ இன்னும் சற்று நேரத்தில் உடைந்து விடும் நிலையை அடைந்தது.

பதறித் துடித்தவாறு அவனைப் பார்த்தவள் உதடுகள் நடுங்க, “த.... தன்மயா....” என்றாள்.

அவனோ தன் காதருகே ஒரு கரத்தை வைத்தவன் “ஹாங்....? கேட்கலை.” என்றான்.

அவளோ வலி தாங்காது வடிந்த கண்ணீரோடு “த.... தன்.... தன்மயா. என்னோட பேரு தன்மயா.” எனக் கூறி முடித்தாள்.

அவள் மட்டும் பலசாலியாக இருந்தால் அவனை ஒரே அடியில் தரையில் வீழ்த்தி அவன் மார்பின் மேலேயே மிதித்திருப்பாள்.

தவறாகத் தொடும் அவன் கரங்களை பிய்த்து எறிந்திருப்பாள்.

முத்தமிட்டு தன்னை அசுத்தப்படுத்திய இதழ்களை நகங்களால் காயப்படுத்தியிருப்பாள்.

ஆனால் அவள்தான் பலசாலி அல்லவே. அந்த மலைமாட்டின் முன்பு அணில் குஞ்சு போலல்லவா அவள் இருக்கிறாள்.

“தன்மயா....? ம்ம் நாட் பேட். பட் உனக்கு ட்ராமா குயின்னு நான் வெச்ச பேருதான் செட் ஆகுது. ஓகே.... இன்னொரு தடவை நீ என் கண்ணுக்கு முன்னே வந்துராத.. கெட் லாஸ்ட்...” என எச்சரித்து விட்டு விலக, அவளோ படபடவென துடிக்கும் இதயத்தோடு அந்த அறையை விட்டே வெளியேறினாள்.

மிகக் கொடூரமான சிங்கத்தின் குகைக்குள் இருத்து தப்பிய உணர்வுடன் விடியற்காலை மூன்று மணி என்றும் பாராது, தன்னந்தனியாக அந்த வீதியில் நடக்கத் தொடங்கினாள் தன்மயா.

ஒரு தாய் தன் குழந்தைக்காக உயிரையும் கொடுப்பாள். இவளோ உயிருக்கும் மேலான கற்பையும் தன் மகனுக்காக கொடுத்து விட்டு உயிரற்ற பிணமாக அந்த வீதியில் சென்று கொண்டிருந்தாள்.

உடலில் அவன் ஏற்படுத்திய காயங்கள் அவளை தடுமாற வைத்தன. மயக்கத்தில் கால்கள் துவண்டு விழ முயன்றன.

அனைத்தையும் ஒதுக்கித் தள்ளியவள் தன் மகனைக் காணும் நோக்கில் விரைந்து நடந்தாள்.

இருள் என்றாலே அஞ்சி நடுங்கும் அவளுக்கு தற்போது அந்த இருளின் அச்சம் கூட அகன்று போயிருந்தது.

****

அவள் தன் அறையில் இருந்து சென்றதும் தன்னுடைய டீஷர்ட்டை எடுத்து அணிந்தவன் கீழே கிழிந்து கிடந்த அவளுடைய புடவையை குனிந்து எடுத்தான்.

அந்தப் புடவையில் இருந்த அவளுடைய நறுமணம் அவனை பித்தனாக்க, அந்தப் புடவையை தன் முகத்தருகே கொண்டு வந்து

முகர்ந்தவன் அந்தப் புடவையை தன் கரங்களில் சுற்றிக் கொண்டான்.

கட்டிலின் அருகே கீழே சிந்திக் கிடந்த இரத்தத்தைக் கண்டவன் அலட்சியமாக உதட்டை சுளித்துக் கொண்டான்.

வழமையாக பெண்களை நாடியதும் மோகம் தீர்ந்து அடங்கி விடும்.

ஆனால் இவளைத் தொட்டதன் பின்னர் மோகம் அளவுக்கதிகமாக தோன்ற, வித்தியாசமான உணர்வில் தத்தளித்தான் ஆதித்யன்.

அவள் மீதான மோகம் வேட்டையாகத் தொடரப் போவதை அவன் அப்போது அறியவில்லை.

அவளுடைய புடவையைக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு பால்கனியில் வந்து நின்றவன் புகைக்கத் தொடங்கினான்.

மோகம் – 3

தன் பால்கனியில் நின்று புகைபிடித்துக் கொண்டிருந்தவனின் சிந்தனை முழுவதும் தன்னிடம் வந்து போன அந்த இரவு நாயகியின் மீதே இருந்தது.

அவளேதான் படுக்கைக்கு வந்தாள். அவள்தான் தனக்கேற்ற விலையும் பேசினாள். அவள்தான் வேண்டாம் என்றாள். அவளே மீண்டும் வந்தாள். அவள் என்னைப் பற்றி என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாள்...?

அவனுக்கோ தன்மயாவின் மீது எரிச்சலே மேலோங்கியது.

‘நான் தொட்ட போதெல்லாம் பொண்ணுங்க உருகிக் கரைந்து என்னோடு கலந்து விடும் போது இவள் மாத்திரம் என்னை விலக்கித் தள்ளி அழுதுகிட்டே இருந்தாளே. ச்சை சரியான ட்ராமா குயின்...’ என நினைத்தவன் அடுத்த சிகரெட்டை எடுத்துப் புகைத்தான்.

சற்று நேரத்தில் படுக்கையில் வந்து படுத்துக் கொண்டவன் தன் தூக்கத்தை தொலைத்தான்.

****

இரவு நேரம் என்றும் பாராது நேரடியாக மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தவள் தன் மகன்

அனுமதிக்கப்பட்ட அறையின் வெளியே வந்து நின்றாள்.

தான் கொண்டு வந்த பையை எடுத்தவள் அதனுள் இருந்த மாற்றாடையை எடுத்து அணிந்து கொண்டாள்.

பின் உள்ளே சென்று மகனின் நெற்றியில் முத்தமிட்டவள் அவனது காலடியில் படுத்துக் கொண்டாள்.

விழிகள் மூடிய அடுத்த கணமே அவளுக்கு நடந்த கொடூரங்கள் கண் முன்னே தோன்ற, சட்டென விழிகளைத் திறந்தவளுக்கு உடல் பதறியது. அவன் தொட்ட இடங்கள் யாவும் தீயாய் எரிந்தது.

வியர்வையில் உடல் குளிக்க, நடுங்கிய உடலை கட்டுப்படுத்த

முடியாது அழத் தொடங்கினாள் அந்த அழகிய மாது.

விழிகளை மூடினால்தானே அந்த கொடூரனின் நினைவுகள் வந்து வதைக்கும்.

விழிகளை மூடாது தன் மகனுடைய முகத்தைப் பார்த்தே அந்த நாளைக் கழிக்க எண்ணியவள், வாடிய பூங்கொடியைப் போல துவண்டு போனாள்.

அவளது உலகமே அன்றோடு சுழற்சியை நிறுத்தியது. ஆனால் நிஜத்தில் அப்படி அல்லவே. உலகம் சுழல இயற்கையின் நியதிப்படி அழகாக பூமியில் விடியல் தோன்றியது.

விடிந்ததும் நேரே வைத்தியரிடம் சென்றவள் தன் மகனுடைய உடல் நிலை பற்றி விசாரிக்கத் தொடங்கினாள்.

“டோன்ட்வர்றி தன்மயா. இனி பயப்படத் தேவலை. ஆப்ரேஷன் பண்ணினா சரியாகிரும்.” என்றார் டாக்டர்.

“டாக்டர் ஆரம்பத்துலையே இவன் பிறந்ததும் இந்த ஹெர்னியா பிரச்சனை இருக்கிறது தெரிஞ்சு ஆப்ரேஷன் பண்ணி சரியாகிருச்சுன்னுதான் சொன்னாங்க. ஆனா இப்போ அவனுக்கு மறுபடியும் இதே பிரச்சனை வந்துருக்கே டாக்டர்.” என கவலையான குரலில் கேட்டாள் தன்மயா.

“ஆமா இந்த டயாபிராக்மிக் ஹெர்னியா சம்டைம் திரும்பவும் வளர்றதுக்கு சான்ஸ் இருக்கு. நீங்கதான் பத்திரமா பார்த்துக்கணும் தன்மயா. இப்படி நிறைய குழந்தைங்களுக்கு நடந்துருக்கு. பட் ஒழுங்கான அறுவை சிகிச்சை மூலம் குழந்தையை காப்பாத்திரலாம்.”

“அவனோட ஹார்ட் பீட் அதிகமாகிருச்சு. தோல் கூட ப்ளூ கலர்ல மாறியிருந்துச்சு டாக்டர்.” என்றவளின் குரல் நடுங்கியது.

“இதெல்லாம் இந்த நோய்க்கான சிம்டம்ஸ்தான். நீங்க பணத்தை கட்டிருங்க. இன்னைக்கே ஆப்ரேஷன் பண்ணிரலாம். பயப்படாதீங்க. தைரியமா இருங்க..” என்றார் டாக்டர்.

“ஓகே டாக்டர்.” என்றவள் நெஞ்சம் பதற வெளியே வந்தாள்.

நேரே சென்று உரிய பணத்தை கட்டியவள் எந்தவித ஆதரவும் இன்றி வைத்தியசாலையில் தனித்திருக்க, அதே நேரம் அவளுடைய தனிமையை போக்கும் வண்ணம் அவளுடைய அலைபேசி ஒலித்தது.

“ஹலோ தனு, நான் ஜெகன் பேசுறேன்.”

“சொல்லுங்க ஜெகன்.”

“பையன் இப்போ எப்படி இருக்கான்மா...?”

“ஆப்ரேஷன் பண்ணா சரியாகிருவான்னு டாக்டர் சொல்லிருக்காரு.” என்றவளது குரல் அழுகையில் நடுங்கியது.

“ஹேய் தனு. அழாதம்மா. நான் இருக்கேன். நான் ஹாஸ்பிடலுக்கு முன்னுக்கு இருக்கிற ஐஸ்கிரீம் ஷாப்லதான் இருக்கேன். நீ எதுவும் சாப்பிட்டுருக்க மாட்டேன்னு தெரியும்.

சோ முடியாதுன்னு சொல்லாம வெளியே வா தனு.”

“இல்லை பரவால்ல....”

“ம்ப்ச் வா தனு.” என அவர் கட்டாயப்படுத்தி அழைக்க வேறு வழியின்றி நர்ஸிடம் கூறிவிட்டு வெளியே சென்றாள் தன்மயா.

தன்மயா வெளியே வந்ததும் அவளை அந்த கடையினுள் அழைத்துச் சென்றான் ஜெகன்.

“சாரி தனு என்கிட்ட நீ கேட்ட பணம் இல்ல.”

“பரவால்ல ஜெகன். பணம் கிடைச்சிருச்சு.”

“ஓ.... நல்லது.” என்றவனின் முகம் சற்றே ஏமாற்றத்தை தழுவியது.

“ஏதாவது சாப்பிடு தனு....”

“இல்லை ஜெகன். நீங்க கூப்பிட்டதுக்காகத்தான் வந்தேன். உங்களை விட்டா உறவுன்னு சொல்லிக்க எனக்கு யார் இருக்கா...?” என்றவளின் கண்கள் கலங்கியது.

“ம்ப்ச் அழாத தனு.” என்றவன் சற்று தயங்கி அவளுடைய முகம் பார்த்தான்.

“கவலைப்படாத உனக்கு நான் இருக்கேன்.”

“ம்ம்....”

“நீ பேசாம குழந்தையோட என்னோட பீச் ஹவுஸ்கு வந்துரு.”

“இல்ல ஜெகன்.”

“நான் உன்னை பத்திரமா பார்த்துக்கிறேன்.”

“.....” அவனுடைய வித்தியாசமான பேச்சில் அதிர்ந்து போனாள் அவள்.

“புருஷனும் இல்லாம இந்தக் குழத்தையை வெச்சுகிட்டு தனியா உன்னால இருக்க முடியாது தனு.

என்னோட ஆ.... ஆசைக்கு ஒத்துழைச்சா.....” என அவன் பேசி முடிப்பதற்கு முதலே “ஜெகன்ன்....” என அலறினாள் தன்மயா.

சிறு வயதில் இருந்து பார்த்து வளர்ந்த ஜெகனின் குணம் அவளை திகைக்க வைத்தது.

“உங்க மனைவிக்கு இது தெரியுமா....?” என அழுத்தமான குரலில் கேட்டாள் தன்மயா.

மனைவி என்றதும் ஓர் நொடி திகைத்தவன் அடுத்த நிமிடமே தன்னை சமாளித்துக் கொண்டு நிமிர்ந்தான்.

“உன்னால இந்த உலகத்துல தனியா வாழ முடியாது தனு. ஆண் உதவி உனக்கு கண்டிப்பா வ்வேணும்.”

“எனக்கு ஒரு மண்ணும் வ்வேணாம் சார் கிளம்புங்க....” எனச் சீறினாள் அவள்.

“உனக்கு நான் சொல்ல வர்றது புரியலை தனு. நான் உன்னை எங்கூடவே வெச்சிருக்கேன். உனக்கு தேவையான பணத்தையும் நானே தர்றேன்.” என்றவன் அவளுடைய கரத்தை பிடித்து அழுத்தினான்.

சட்டென தன் கரத்தை இழுத்து எடுத்தவள் “உங்களை நான் என்னோட சின்ன வயசுல இருந்தே பார்க்கிறேன். அண்ணா மாதிரி நினைச்சுத்தான் பழகினேன். ரொம்ப நன்றிங்க சார். கிளம்புங்க இலலைன்னா அசிங்கமா போயிரும்.” என்றவள் அவனைப் பார்த்து கை எடுத்து கும்பிட, அவளை முறைத்துப் பார்த்துவிட்டு அங்கிருந்து எழுந்து சென்றான் ஜெகன்.

அவன் சென்றதும் அப்படியே தனக்கு முன் இருந்த மேஜையில் கவிழ்ந்து படுத்தவள் ஆற்றுவார் தேற்றுவார் இன்றி அழத் தொடங்கினாள்.

அவளுக்கு வாழ்க்கையே வெறுத்துப் போனது.

வருவோர் போவோர் எல்லோரும் தன்னை போகப் பொருளாக பார்ப்பதை எண்ணி அவள் உள்ளம் துடித்தது.

பெண்கள் என்றால் வெறும் சதை மட்டும்தான் ஆண்களுடைய கண்களுக்கு தெரியுமா....? அதற்குள் மறைந்திருக்கும் மனம் பற்றி அவர்கள் ஏன் சிந்திப்பதே இல்லை....? என எண்ணி அழுது

கொண்டிருந்தவளை சட்டென சூழ்ந்து கொண்டனர் சிறுவர்கள்.

“அக்கா... அக்கா எந்திரிங்க....? எதுக்கு அழுறீங்க....?” என அவளை சூழ்ந்து கொண்ட சிறுவர்களின் குரலில் நிமிர்ந்து அவர்களைப் பார்த்தவள் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

“ஹேய் குட்டிப் பசங்களா....” என்றவள் அவர்களைப் பார்த்து புன்னகைத்தாள்.

“ஏன்கா அழுதீங்க. உங்களுக்கும் யாரும் ஐஸ்க்ரீம் வாங்கித் தரலையா....?” எனக் கேட்டான் ஒரு சிறுவன்.

அவளும் தன் இதழ்களை பிதுக்கியவாறு “ஆமா பேபீஸ் எனக்கு

யாருமே ஐஸ்க்ரீம் வாங்கித் தரலை.” என சோகமாகக் கூறினாள் தன்மயா.

இன்னொரு சிறுவனோ தூரத்தில் ஐஸ்க்ரீம் வாங்கிக் கொண்டிருந்த ஒருவனைப் பார்த்து “ஹேய் டான் இன்னொரு ஐஸ்க்ரீமும் வாங்குங்க....” எனக் கத்த, அந்த ஆடவனும் தன் கட்டை விரலை உயர்த்தி சரி எனும் விதமாக சைகை செய்தான்.

அதே நேரம் தன்மயாவும் அந்த ஆடவனைத் திரும்பி பார்த்தவள் அதிர்ச்சியில் உறைந்து போனாள்.

‘இவனாஆஆ....?’ என அதிர்ச்சியில் சட்டென இருக்கையை விட்டு எழுந்தவள் நடுங்கித்தான் போனாள்.

எவன் ஒருவனின் கண்ணில் இனி அவள் பட்டு விடக் கூடாது என எண்ணினாளோ...

எவன் ஒருவனது நிழலைக் கூட இனி தீண்டக் கூடாதென்று நினைத்தாளோ

அவள் தன் வாழ்வில் எவன் ஒருவனை அதிகமாக வெறுத்தாளோ அவனை மீண்டும் நேரில் பார்த்ததும் அவளது உடலின் ஐம்புலன்களும் தன் செயலை மறந்து ஸ்தம்பித்தன.

அந்த அரக்கனின் பார்வை தன் மேல் விழுவதற்கு முன் அங்கிருந்து ஓட எண்ணியவள் அவசர அவசரமாக அங்கிருந்து நகர முயன்றாள்.

ஆனால் அவளை நகரவிடாமல் பிடித்துக் கொண்டனர் சிறுவர்கள்.

“ஹேய் குட்டீஸ் அக்கா அவசரமா போகணும். ப்ளீஸ் அக்கா கையை வ்விடுங்க.”

“ம்ஹூம் நோஓஓ....” என மறுத்தனர் சிறுவர்கள்.

அவன் வேறு அவளை நெருங்கி வந்து கொண்டிருக்க, அவளுடைய மொத்த சத்தும் உடலில் இருந்து வடிந்து போனது.

அதற்கு மேல் முடியாது தேம்பித் தேம்பி அழத் தொடங்கியவளை நெருங்கினான் அவன்.

அவர்களை நெருங்கி வந்தவனோ “ஹாய் மச்சி. யாருடா இந்த பொண்ணு....? எதுக்கு அழுகுறாங்க....?” எனக் கேட்க,

அவனது குரலில் அவனை திகைத்துப்போய் பார்த்தாள் தன்மயா.

அவள் அறிந்த ஆதித்யனின் குரலில் இத்தனை மென்மை இருந்ததே இல்லையே.

தன்னைத் தெரியாதது போல பேசும் அவனைப் பார்த்த வண்ணம் அதிர்ந்து நின்றவளை சிறுவர்கள் பிடித்து உலுக்கினர்.

“ஹாய் டான். இந்த அக்காக்கு யாருமே ஐஸ்க்ரீம் வாங்கி கொடுக்கலையாம் டான். அதனாலதான் அழுகுறாங்க....” என்றான் ஒரு சிறுவன்.

“ஓஹோ அப்படியா....?” என்றவன் அவளைப் பார்த்து மென்மையாகப் புன்னகைத்தவாறு

“ஹாய் லேடி ஐ அம் கவின். நைஸ் டு மீட் யு.” எனக் கூறினான்.

அதற்குள் அங்கிருந்த சிறுவர்கள் அவனது கரங்களில் இருந்த குளிர் களியை பறித்து உண்ணத் தொடங்க, அவனோ அவர்களை துரத்திக் கொண்டு ஓடத் தொடங்கினான்.

சட்டென நின்று அவளைத் திரும்பிப் பார்த்தவன் தன் கரத்தில் இருந்த ஐஸ்க்ரீமைக் காட்டி கண்களால் வேணுமா என சைகை செய்ய, அவளோ உச்ச கட்ட அதிர்ச்சியில் அசையாத மரமாய் நின்றாள்.

அவளது திகைத்த பார்வையில் உதடுகளை சுளித்த கவினோ குளிர்களியை சுவைத்தவாறு

அங்கிருந்து சென்றுவிட, அதன் பின்னரே அந்தச் சிலைக்கு உயிர் வந்தது.

சட்டென தன் கைப் பையை எடுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டவள் ஆழ மூச்செடுத்தவாறு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

தன் குழந்தைக்கு சரியானதும் இந்த ஊரை விட்டே கண் காணாத இடத்திற்கு செல்ல வேண்டும் என எண்ணிக் கொண்டவள் தன் மனதை திடப்படுத்திக் கொண்டாள்.

ஆனால் மீண்டும் அவனிடமே போய் நிற்க வேண்டிய நிலை வரப் போகின்றதை அவள் அறிந்தால்....?

மோகம் – 4

பழைய கால முறையில் மிக ஆடம்பரமாக அமைக்கப்பட்டிருந்தது ஆதித்யனின் வீடு.

நகரத்தை விட்டு சற்றே தள்ளியிருந்த அந்த வீட்டினைச் சுற்றி அடர்ந்த மரங்களும் அழகாக பராமரிக்கப்பட்ட தோட்டமும் என கண்ணைக் கவரும் வண்ணம் இருந்த வீட்டினுள் நுழைந்தது கவினுடைய கறுப்பு நிற கார்.

காரை விட்டு இறங்கியவன் தன் ஷர்ட் பட்டன்களைக் கழற்றியவாறு வேகமாக உள்ளே நுழைந்தான்.

அவன் முகத்தில் இருந்த மென்மை அனைவரையும் அவனை விரும்பச் செய்யும்.

எதையும் இலகுவாக எடுத்துக் கொள்ளும் கவினின் குணமும் சிறு விடயத்தைக் கூட பெரிய விடயமாக கருதும் ஆதித்யனும் ஒருவருக்கு ஒருவர் முற்றிலும் வேறுபட்டவர்களே.

ஆதியோ கரடு முரடான டெனிம் ஜீன்ஸ்ஸை அணிந்து , தலை முடிக்கு ஜெல் பூசி இறுக்கமான டீஷர்ட் மற்றும் கோர்ட் சூட் போன்றவற்றை அணியும் நீல நிற கண்களைக் கொண்ட திடகாத்திரம் நிறைந்த கம்பீரமான ஆண்மகன்.

கவினோ ஆதிக்கு அப்படியே மாறுபட்ட குணத்தைக் கொண்டவன். எப்போதும் ஷர்ட் அணிந்து அதை ஒழுங்காக இன்ங்க் பண்ணி நேர்த்தியாக தலை வாரி எப்போதும்

புன்னகை முகத்துடன் இருக்கும் நல்ல குணம் கொண்ட ஆண்மகன்.

ஆதியிடமோ போதை தொடக்கம் பெண்கள் வரை அத்தனை கெட்ட பழக்கங்களும் குடிகொண்டிருக்க, கவினிடமோ டீ குடிக்கும் பழக்கம் கூட இல்லை. தேடினாலும் கிடைக்காத புடம் போட்ட பொன் அவன்.

அவனோ ஆதியின் வீட்டினுள் நுழைந்தவன் ஹாலில் கிடந்த மதுபான போத்தலைக் கண்டு முகம் சுளித்தான்.

“ச்சே நடு வீட்ல இப்படி யார் போட்டது....?” என முணுமுணுத்தவன் “ராமு இங்க வா....” என அந்த வீட்டின் வேலையாளை அழைத்தான்.

“சார்.... சொல்லுங்க சார்.”

“வாட் இஸ் திஸ் ராமு? எனக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு உங்களுக்கு நல்லாவே தெரியும்ல. யார் இப்படி பண்ணது.?”

“அது.... வந்து... ஆதி தம்பிதான் குடிச்சாரு சார்.”

“ஆதியா....? இவன் ஏன் இப்படி இருக்கான்? திருந்தவே மாட்டானா....?” என தனக்கு மட்டும் கேட்கும் குரலில் முணுமுணுத்தவன் கீழே கிடந்த போத்தலை இரண்டு விரலை பயன்படுத்தி தூக்கினான்.

“ஓ.... ஷிட் குமட்டுது ராமு. இதைப்போய் எப்படி குடிக்கிறாங்களோ.... கப்படிக்குது?” என்றவாறு அதனைக் கொண்டு போய்

குப்பைத் தொட்டியில் போட்டவன் தன் கைகளை நன்கு கழுவி பாடி லோஷனை கைகளில் நன்கு பூசிக் கொண்ட பின்பே திருப்தி அடைந்தான்.

“ஆதி இப்போ எங்க....? வீட்ல இருக்கானா ராமு.?”

“இல்லை சார். இப்போதான் வெளியே போனாரு.”

“அப்படி எங்கதான் அடிக்கடி காணாம போறானோ தெரியல. வீட்ல இருக்கிறதே இல்லை.” என்றவாறு அறைக்குள் நுழைந்தவன் வழமை போல ஆதியின் அறையை எட்டிப் பார்த்தான்.

ஆதித்யனின் அறையோ ரொம்ப ரொம்ப அசுத்தமாக இருக்க, வழமை

போல மீண்டும் அவனுக்கு திட்டியவன் அந்த அறையை மளமளவென சுத்தப்படுத்தி அனைத்தையும் அடுக்கி வைத்தான்.

அந்த அறையினுள் வந்த சிகரெட் மணத்தில் மூக்கைப் பொத்தியவன் தனக்குப் பிடித்த ரூம் ல்பிரேயை எடுத்து வந்து அந்த அறையினுள் ஸ்பிரே செய்த பின்பே நிம்மதி அடைந்தான்.

ஆதித்யனின் அறையை பூட்டி விட்டு தன் அறைக்குள் நுழைந்தவன் தன் அறையின் சுத்தத்தில் திருப்தி கொண்டவனாய் குளித்து விட்டு வந்து படுக்கையில் விழுந்தான்.

இன்று தான் என்னவெல்லாம் செய்தான் என்பதை மனதில் நினைவு படுத்திக் கொண்டே வந்தவன்

ஐஸ்க்ரீம் பார்லரில் நடந்த விடயங்கள் நினைவு வந்ததும் சட்டென புன்னகைத்தான்.

“யார் அந்த க்யூட்டி கேட்....? செம க்யூட்டா இருந்தாளே. யெப்பா என்ன அழகுடா சாமி.” என எண்ணி பெருமூச்சு விட்டவன் அவள் தன்னைக் கண்டு அதிர்ந்து நின்றதை நினைவு கூர்ந்து குழம்பிப் போனான்.

‘அவ எதுக்கு என்னைப் பார்த்து ஷாக் ஆகிருப்பா....? ம்ஹூம் நோ ஐடியா. பட் அந்த க்யூட்டி கேட் லேடியை மறுபடியும் பார்த்தா ரொம்ப நல்லா இருக்கும்” என முணுமுணுத்தவன் மாலை நேர வேளையில் இனிதான தூக்கத்தை தழுவிக் கொண்டான்.

****

இரவு மணி ஏழைத் தொட்டிருக்க, தன் கையில் மதுக் குவளையுடன் அதே பதின் மூன்றாம் அறையினுள் நுழைந்தான் ஆதித்யன்.

அவனது உடலின் ஒவ்வொரு அணுக்களும் பெண் மூலம் கிடைக்கும் சுகத்தை அந்த நொடியே முழுதாய் அனுபவிக்கத் துடித்துக் கொண்டிருந்தது.

கையில் இருந்த குவளை மதுவை ஒரேடியாக வாயினுள் சரித்தவன் "ஹாவ்...." என ஏப்பம் விட்டவாறு அந்த அறைக் கதவை பூட்டித் தாழ் இட்டான்.

அங்கே இருந்த வெண்ணிற படுக்கையில் ஓயிலாக அமர்ந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தாள் ஓர் விலை மாது.

ஆதி உள்ளே நுழைந்ததும் “ஹாய் டார்லிங் வெல்கம்....” என வரவேற்கவும் செய்தாள் அவள்.

வழக்கம் போல ஆதியின் உதடுகள் அந்த அழகியை பார்த்து “நாட் பேட்....” என முணுமுணுத்தன.

“தேங்க் யு டார்லிங். இந்தக் கலர் ட்ரெஸ் நீங்க கொடுத்து அனுப்பியதுதான். இந்த ட்ரெஸ்ல நான் எப்படி இருக்கேன்....?” என மயக்கும் குரலில் அவனைப் பார்த்து கேட்டவள் அவன் முன்னே வளைந்து நெளிந்து தன் உடல் எழிலை காட்டத் தொடங்கினாள்.

அவளது செயல்களை அலட்சியப் படுத்தியவன் மீண்டும் “நாட் பேட்....” என அதே வார்த்தையையே உச்சரிக்க, அந்த

பெண்ணின் முகத்தில் சட்டென சீற்றம் தோன்றி மறைந்தது.

‘அழகா இருக்கேன்னு சொன்னா குறைஞ்சா போயிருவான் இடியட்....’ என மனதினுள் எண்ணிக் கொண்டவள் வெளியே அதை மறைத்து புன்னகைத்தாள்.

தன் பாக்கெட்டினுள் இருந்த சிகரெட்டை பற்ற வைத்தவன் “உனக்கு அந்த ட்ரெஸ் போடத் தெரியுமா....?” எனக் கேட்டான்.

“வாட்....? அந்த ட்ரெஸ்னா எந்த ட்ரெஸ் டார்லிங்....?”

“அதுஉஉ ரொம்ப நீளமான துணியா இருக்குமே. பொண்ணுங்க எல்லாம் உடம்புல சுத்திகிட்டு வருவாங்க.” என்றவாறு புகையை

இழுத்து அவளது கழுத்து வளைவில் ஊதினான்.

“யு மீன் சேரி...? புடவையா....?” எனக் கேட்டாள் அந்த விலை மாது.

“ஹாங் எஸ் எஸ் அதே தான். நீ ஏன் புடவை கட்டலை.” எனக் கேட்டான் ஆதி.

“நீங்கதானே டார்லிங் இந்த ட்ரெஸ்ஸை போடச் சொன்னீங்க.”

“ஏய்.... இதை அவுத்துட்டு அந்த புடவையை போய் கட்டிகிட்டு வா....” என அவன் உரத்த குரலில் கத்தவும் சட்டென அவனது கன்னம் பற்றியவள் “ஸ்ஸ் டார்லிங் இன்னும் கொஞ்ச நேரத்துல நாம எல்லா ட்ரெஸ்ஸையும் கழட்டத்தானே போறோம். இதுல எதுக்கு சேரிலாம்

கட்டணும்....?" என்றவள் அவனுடைய கழுத்தை வளைத்து அவனுடைய இதழ்களில் தன் இதழ்களைப் பொருத்தினாள்.

சட்டென அவளை தன்னில் இருந்து பிடுங்கி எறிந்தவன் "எனக்கு மூட் வரலை. சோ போய் புடவையைக் கட்டிட்டு வா. தன்மயா புடவையோடதான் என்கிட்ட வந்தாள்.." என்றவன் தன்மயா பற்றி எண்ணத் தொடங்கினான்.

அவளோ நிலத்தில் இருந்து எழுந்தவள் 'எவளோ புடவை கட்டிகிட்டு வந்தாங்கிறதுக்காக என்னையும் கட்ட சொல்லி சாவடிக்கிறானே....' என மனதுக்குள் எண்ணிக் கொண்டவள் தன்

∴போனை எடுத்து ஒரு புடவையை ஆன்லைனில் ஆர்டர் செய்தாள்.

சற்று நேரத்தில் புடவை வந்ததும் அதனை எடுத்து அவன் முன்னேயே உடுத்திக் கொண்டவளை ஆதி இழுத்து அணைத்துக் கொண்டான்.

“டார்லீஈஈங்....” என்றவாறு அவனை படுக்கையில் தள்ளி அவன் மீது படர்ந்தவளை புரட்டி படுக்கையில் போட்டவன் அவளது புடவையை விலக்கினான்.

அவளது முகம் முழுவதும் முத்தம் வைத்து அதில் ஒன்ற முயன்றான் ஆதி.

“ஹ்ஹ்ஹாஆஆ....” என்ற அவளது சிணுங்கலில் “ஸ்டாப்....”

எனக் கத்தினான் ஆதி. அவனுக்கோ இந்த புதுப் பெண்ணின் எந்த செயலும் சற்றும் ரசிக்கவே இல்லை.

“வாட் டார்லிங்.?” எனக் கேட்டாள் அவள்.

“கொஞ்சம் அழு.... அப்போதான் கிக்கா இருக்கும்....” என தன்மயாவின் அழுகையை மனதில் வைத்துக் கொண்டு கூற அந்தப் பெண்ணுக்கோ வெறுத்துப் போனது.

“ம்ப்ச்.... எனக்கு அழுகை வரலையே....” என உடலை நெளித்தவாறு கூறியவளின் கன்னத்தில் பளாரென அறைந்தான் ஆதி.

அவனது முரட்டு கரங்களின் வலிமையில் கன்னம் தீப் பற்றியதைப்

போல எரியத் தொடங்க, வலி தாங்க முடியாது அழத் தொடங்கினாள் அப் பெண்.

“குட். அப்படித்தான் அழு....” என்றவன் அவளுடைய உடலில் மிச்சம் இருந்த ஆடைகளையும் களைந்து அவளை சுகிக்கத் தொடங்கியவன் அவள் கொடுத்த ஒத்துழைப்பில் “ச்சை....” என அவளைத் தள்ளி விட்டான்.

“ஆஆஆ....” என அலறியவாறு கீழே விழுந்தவள் தன் ஆடைகளை பொறுக்கிக் கொண்டு அவற்றை அணிந்தவாறு “போடா சைக்கோ உன்னை எல்லாம் எவளாலையும் திருப்தி படுத்த முடியாது.” என திட்டியவாறு வெளியே ஓடியே விட தன் ஆடையை எடுத்து அணிந்தவாறு

படுக்கையில் அமர்ந்தவன் “என்னை திருப்தி படுத்த அந்த ட்ராமா குயினால முடியும்....” என்றவாறு கோணலாக புன்னகைத்த வண்ணம் அந்த அறையை விட்டு வெளியேறினான்.

முதன் முறையாக எந்த பெண்ணையும் தொடாது ஒரு நாள் இரவு அவன் வாழ்வில் தன்மயாவால் ஏற்பட்டது.

தன் காரில் ஏறியவன் தன் போக்கில் வண்டியை ஓட்டத் தொடங்கினான்.

****

மருத்துவமனையில் தன் மகனின் ஆப்ரேஷன் நல்லபடியாக முடிந்த மகிழ்வில் இறைவனுக்கு

நன்றி கூறிக் கொண்டிருந்தாள் தன்மயா.

அதே நேரம் வெளியே வந்த தாதியோ "மேடம் இந்த டேப்ளட்ஸ் இங்க இல்ல. நீங்க வெளியே வாங்கிட்டு வர முடியுமா....?" எனக் கேட்டார்.

"ஓகே சிஸ்டர். போய் வாங்கிட்டு வர்றேன்."

"வேற யாரும் பாய்ஸ் இருந்தா அவங்ககிட்ட கொடுத்து வாங்குங்க மேடம்...."

"இட்ஸ் ஓகே சிஸ்டர் நானே வாங்கி வர்றேன்..." என்றவாறு வீதியில் நடக்கத் தொடங்கினாள் அவள். சற்று தூரம் நடந்தே சென்றவளுக்கு கால்கள் வலிக்க,

சாலையோரம் நின்றவள் அங்கே ஒருத்தன் யாரையோ போட்டு அடிப்பதைக் கண்டு அதிர்ந்தாள்.

“ஐயோ அவரை அடிக்காதீங்க ப்ளீஸ் விடுங்க....” என்றவாறு அவர்களின் அருகே ஓடியவள் அங்கே அடித்துக் கொண்டிருந்தவனைக் கண்டு மின்சாரம் தாக்கியதைப் போல அதிர்ந்து நின்றாள்.

“ஹேய் ட்ராமா குயின் வெல்கம் பேக்.....” எனக் கூச்சலிட்டவாறு அவளை நெருங்கினான் ஆதி.

மோகம் – 5

குழந்தைக்காக மருந்து வாங்க வந்தவள் அந்த இரவு நேர சாலையோரத்தில் ஆதியைக்

காணுவோம் என கிஞ்சித்தும் நினைத்துப் பார்த்திருக்க மாட்டாள்.

முதலில் யாரோ யாரையோ அடிக்கிறார்கள். ஏதோ பிரச்சனை போல என எண்ணிக் கொண்டு உதவி செய்யச் சென்றவளுக்கு அங்கே தான் வெறுக்கும் கொடிய அரக்கனைக் கண்டதும் உலகமே தட்டாமாலை சுற்றியது.

அவன் தன்னைப் பார்ப்பதற்குள் அங்கிருந்து விலகிச் செல்ல முயன்றவளை "ஹேய் ட்ராமா குயின் வெல்கம் பேக்...." எனும் ஆதியின் மகிழ்ச்சிக் கூச்சல் அவள் உடலை உறைய வைத்தது.

அவளோ அதிர்ந்து நிற்க, "ஒன் செக் ட்ராமா குயின்...." என்றவன் தன் கரத்தை மடக்கி அடி வாங்கிக்

கொண்டிருந்த ஆடவனின் முகத்திலே நிறுத்தாமல் குத்திக் கொண்டே போக, அந்த ஆடவனின் மூக்கு உடைந்து இரத்தம் பீறிட்டது.

"ஹௌ டேர் யு. என்னோட கார்ல மோதிட்டு எனக்கே எதிர்த்து பேசுறியா....? சாவுடா...." என்றவன் வெறி கொண்டவனாய் அவனை அடிக்க, அதைக் கண்ட தன்மயாவின் உடல் ஆடித்தான் போனது.

இத்தனை நாட்களும் பெண்களை வதைக்கும் அரக்கன் என்றுதான் அவனை எண்ணியிருந்தாள். ஆனால் அவன் கொலையையே சாதாரணமாக செய்வான் போலவே என எண்ணியவாறு மிரண்டு போய் பார்த்தாள்.

ஒவ்வொரு அடிக்கும் “சாவுடா.... சாவுடா....” எனக் கர்ஜித்த வண்ணம் அவன் வெறி கொண்டவனாய் மற்றையவனைத் தாக்கிக் கொண்டே இருந்தான்.

அடிவாங்கிக் கொண்டிருந்தவனோ ஒரு கட்டத்தில் இறந்து விடுவான் என்பது புரிய, எப்படியாவது அவனை இந்த அரக்கனிடம் இருந்து காப்பாற்ற வேண்டுமென எண்ணியவள் தன் அருகே கிடந்த கட்டை ஒன்றை குனிந்து தன் கையில் எடுத்துக் கொண்டாள்.

வன்முறை என்றால் என்னவெனக் கேட்கும் மெல்லினத்தின் மெல்லிடையாளுக்கோ கட்டையை

கைப்பற்றியதும் கரங்கள் கிடுகிடுவென நடுங்கி நர்த்தனம் ஆடின.

தன் அச்சத்தையும் நடுக்கத்தையும் தனக்குள் விழுங்கிக் கொண்டவள் கட்டையை எடுத்த வேகத்தில் ஆதித்யன் பார்க்காத நேரம் அவனுடைய தலையில் வேகமாக அடிக்க "படார்...." என்ற சத்தத்தோடு பாதியாக உடைந்து போனது அந்த உருட்டுக் கட்டை.

அவன் மயங்கி விடுவான் என அற்ப ஆசையில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள் "ஸ்ஸ்ஸ்...." என்ற முனகலோடு தன் தலையை பிடித்துக் கொண்டு அவளை ரௌத்திர மூர்த்தியாக திரும்பிப் பார்த்தான் ஆதி.

கட்டுக்கடங்காத சினத்தில் ஓங்கி அந்த ஆடவனின் முகத்தில் குத்த, அடி வாங்கிய ஆடவனின் தலையோ தொங்கியது.

அவனை கீழே உதறிவிட்டு கைகளை நெட்டி முறித்தவாறு அழுத்தமான காலடிகளுடன் அவளை நெருங்கினான் அவன்.

அவனுடைய நீல நிற கண்களோ அவளை மிகுந்த வெறியோடு நோக்கின.

அவளது கரங்களின் நடுக்கமோ கூடிப் போனது.

உடலோ வியர்வையில் குளித்து நனைந்தே போனது.

இன்னும் சற்று அருகே அவன் வந்தால் அவளுடைய இதயமே தன்

துடிப்பை நிறுத்தி விடும் போல இருந்தது.

அதற்கு மேலும் அவள் அப்படியே அசையாது நின்றால் கீழே தலை தொங்கிப் போய் கிடப்பவனின் நிலைதான் தனக்கும் என எண்ணியவள் அடுத்த நொடியே தன் மார்பை கைகளால் அழுத்தியவாறு அங்கிருந்து வேக வேகமாக ஓடத் தொடங்கினாள்.

ஆனால் இரண்டே எட்டில் அவளைத் தாண்டி அவளின் முன்னே வந்து நின்றான் அந்த அசுரன்.

அவளோ அவனது மார்போடு போய் முட்டியவள் பதறியடித்து விலகினாள்.

கால்கள் துவண்டு கண்கள் இருண்டு விடும் போல இருக்க, அப்படியே பின் பக்கமாக சரிந்தவளின் இடையை வளைத்து இறுகப் பற்றிக் கொண்டவன் அவளது முகத்தை உணர்வுகள் ஏதும் இன்றி வெறுமையாக பார்த்தான்.

“இப்போ நீ என்ன பண்ணின....?” அவனுடைய குரல் எள்ளலாக வெளிவந்தது.

“சா.... சா.... சா.....” என பயத்தில் திணறினாள் அவள்.

“என்ன பாட்டு பாடப் போறியா....?” மீண்டும் அதே எள்ளல்.

“சா.... சாரி சார்....” என்றவாறு கூறி முடித்தவளின் விழிகள் உவர் மழையைப் பொழிந்தன.

அவன் தன்னையும் அடித்தே கொல்லப் போகிறான் என நினைத்தவளின் உடல் தூக்கிவாரிப் போட்டது.

“மறுபடியும் ட்ராமா பண்ண ஆரம்பிச்சுட்டா.... சரியான ட்ராமா குயின்” என எரிச்சலோடு எண்ணியவன் “எதுக்குடி என்னை அடிச்ச....?” என உறுமினான்.

அவளோ பேச்சற்றுப் போய் உறைந்து நிற்க, தன் பின்னந் தலையைத் தொட்டுப் பார்த்தவன் அதில் கசிந்த இரத்தத்தை அவளுக்குக் காட்டினான்.

சர்வ நாடியும் அடங்கி ஒடுங்க நின்றவளின் கரத்தை பிடித்தவன் அவள் கதறக் கதற அவளை

இழுத்துக் கொண்டு தன் காரை நோக்கிச் சென்றான்.

“ஐயோஓஓ வ்விடுங்க ப்ளீஸ். என்னை விட்ருங்க ஆதி சார்.” என்றதும் சட்டென தன் நடையை நிறுத்தியவன் “வாட் டிட் யு செய்ட்....?” என உறுமினான்.

“நான் ப்போகணும் என்னை வ்விடுங்க ப்ளீஸ். உ.... உங்களை கெஞ்சிக் கேட்கிறேன் விட்ருங்க.” என கதறி அழுதாள் தன்மயா.

“ஆதின்னு என் பேரை சொன்னேல்ல.... அதெப்படி நீ என் பேரை சொல்லலாம்....?” என அவளை முறைத்தவன் அவளது கதறலில் தன் காதைக் குடைந்தான்.

பின் அவளை மீண்டும் இழுத்து வந்து தன் காரினுள் தள்ளியவன் தானும் உள்ளே ஏறி கார்க் கதவை லாக் செய்தான்.

அவனது அத்துமீறலில் பயந்து போனவள் “ஹெல்ப்.... ஹெல்ப்... யாராவது என்னைக் காப்பாத்துங்க ப்ளீஸ்....” என அலற, அவளது செயல்களில் அவனுக்கோ சினம் கூடிப் போனது.

கார்க் கதவைத் தட்டித் தட்டி கூண்டுக்குள் அடைபட்டிருக்கும் சிறு பறவை போல பதறிப் பதறி கதறியவளின் தலையில் தட்டியவன் “ஸப்பாஆஆ ஷட் ஆப் பண்ணுடி. முடியலை.” என்றவன் அவள் தோள் மீது சாய்ந்து கொண்டான்.

“என்னோட காயத்துக்கு கட்டுப் போட்டு விடு...”

“நான் போகணும் என்னை விட்ருங்க ப்ளீஸ்....”

“நீ தானே அடிச்ச....? சோ நீதான் கட்டுப் போடணும் போட்டு விடு....” என்றவனின் அதட்டலில் தன் வார்த்தைகள் தந்தி அடிக்க “என்கிட்ட கட்டுப்போட து... துணி ஏதும் இல்லைங்க...” என்றாள்.

அவளுக்கோ மூச்சு முட்டியது. இந்த அரக்கனிடம் இருந்து தப்பித்தால் போதும் என்ற எண்ணமே அவள் உள்ளத்தில் மிகையாக இருந்தது.

அவளோ துணி இல்லை என்றதும் சட்டென அவளது புடவை

முந்தானையை இழுத்து எடுத்தவன் அதன் ஓரத்தை சர்ரென கிழித்தான்.

“ஐயோ என்னோட புடவை வ்விடுங்க ப்ளீஸ்....” என மன்றாடியவளின் கரத்தில் கிழிந்த புடவைத் துண்டை கொடுத்தவன் தன் தலையை அவளுக்குக் காட்ட, வேறு வழியின்றி அழுதவாறே அவனது தலையைப் பற்றி அவனுக்கு கட்டிட்டாள் தன்மயா.

அவனோ அவளை ஆழ்ந்து நோக்க, அவளோ தன் கரங்களைக் கூப்பியவாறு “கார்க் கதவை திறந்து விடுங்க சார். நா... நான் போகணும்... இனி நான் உங்க கண்லையே பட மாட்டேன். ப்ளீஸ் என்னை விட்ருங்க. நா.... நான் ஹாஸ்பிடல் போகணும்....” என அழுதவாறு பேசிக் கொண்டே

போக, அவளது கன்னங்களை பற்றிப் பிடித்தவன் விடாது பேசும் அவளுடைய செவ் இதழ்களை தன் அதரங்களுக்குள் விழுங்கிக் கொண்டான்.

அவனது அதிரடியான அத்துமீறலில் உடல் எரிய, உள்ளம் பதற துடித்து திமிறி விடுபட முயன்றவளின் அத்தனை முயற்சியும் அந்த பலசாலியின் முன் வீணாய்ப் போனது.

இடைவிடாது நச்சரித்துக் கொண்டிருந்த அவளுடைய இதழ்களுக்கு பூட்டுப் போட எண்ணியவன் சற்று நேரத்திலேயே தன் நிலை மறந்து அந்த முத்தத்தில் மூழ்கிப் போகத் தொடங்கினான்.

தன்மயாவின் நிலைமையோ மிகவும் கவலைக்கிடமாகியது. அவளது விழிகளின் வழியே வழிந்த கண்ணீர் அவளது குண்டுக் கன்னத்தை வருடி அவள் இதழில் மோதுண்டு அவனது இதழ்களையும் தீண்டியது.

அவளோ தன் கரங்களால் அவனுடைய மார்பினில் பலமாக குத்தினாள். தன் உடலை திமிறி விடுபடப் போராடித் துடித்தாள்..

அவளுக்கோ இதழ்கள் கசந்தன. பிடிக்காத முத்தம் வேப்பங்காயாய் மாறிப் போனது.

இப்படி ஒரு கொடூரனிடம் சிக்கியதை எண்ணி அவள் துடித்துக் கொண்டிருக்க, அவனோ அவளுடைய இதழ்களை ரசித்து தீண்டி

ருசித்துவிட்டு வெகு நேரம் கழித்தே அவளிடம் இருந்து விலகினான்.

அவன் விலகியதும் பெரிய பெரிய மூச்சுக்களை எடுத்து தன்னை நிதானப்படுத்திக் கொண்டவள் அவள் உணர்ந்த மதுபானத்தின் சுவையில் குமட்டிக் கொண்டு வர வாயைத் தன் கரங்களால் பொத்திக் கொண்டாள்.

“ஹேய் வெயிட் வெயிட். என்னோட

காரை நாசம் பண்ணிராதே.” என்றவன் சட்டென கார் கதவை திறந்து விட்டான்.

மளமளவென காரில் இருந்து இறங்கி வெளியே ஓடியவள் வாந்தி எடுக்க, அவள் அருகே கொண்டு வந்து தன் காரை நிறுத்தினான் ஆதி.

“வாமிட் பண்ணி முடிச்சிட்டியா....?”

“ம்ம்....”

“வந்து கார்ல ஏறு....”

“ஏ.... ஏன்?”

“வாடீஈஈ....”

“எ... என்னை எதுக்கு இப்படி டாச்சர் பண்றீங்க....?” என கலங்கிய குரலில் கேட்டவளைப் பார்த்தவன் “இன்னைக்கு நைட் என்கூட வர்றியா அஞ்சு லட்சம் ம்ஹூம் பத்து லட்சம் தர்றேன்.” என பேரம் பேச அவளுடைய இதழ்களோ துடித்தது.

“சார் நான் நீங்க நினைக்கிற மாதிரி பொண்ணு இல்ல. ப்ளீஸ் சார் என்கிட்ட எதையுமே எதிர் பார்க்காதீங்க. நீங்க சொன்னா எத்....

எத்தனையோ பொண்ணுங்க உங்க பின்னாடி வருவாங்க சார்... என்னை விட்ருங்க சார்...."

"லாஜிக் கரெக்ட்தான் ட்ராமா குயின். பட் எனக்கு கூப்பிட்டதும் வர்ற பொண்ணுங்களை விட விலகிப் போற உன்னைதானே ரொம்ப பிடிச்சிருக்கு." எனக் கூறி கண் சிமிட்டினான் ஆதி.

அவளோ விக்கித்துப் போய் நிற்க, அவனோ அவளது முகத்தைப் பார்த்தவன் "எவளாலையும் என்ன திருப்தி படுத்த முடியலை. ஒன் டே மட்டும் என்கூட வர்றியா ட்ராமா குயின்....?" எனக் கேட்டான்.

"சாரி சார். என்னால முடியாது. என்னோட பையன் எனக்காக

காத்துகிட்டு இருக்கான். நான் போகணும்.”

“வாட்....? உனக்கு பையன் இருக்கானா....?”

“ஆ... ஆமா சார். ப்ளீஸ் எங்களை நிம்மதியா வாழ விடுங்க.”

“ஓஹோ....” என்றவன் “நீயே என்கிட்ட திரும்ப வருவ. வர வைப்பேன்.” என்றவாறு விருட்டென தன் காரை ஸ்டார்ட் செய்தவன் அதனை மின்னல் வேகத்தில் ஓட்டத் தொடங்கினான்.

தன்னை புறக்கணித்து விட்டு செல்பவளை தன் கைப்பாவையாக மாற்ற வேண்டுமென எண்ணிக் கொண்டவன் வீட்டிற்குச் சென்று தன் அறையினுள் நுழைந்தான்.

அவனுடைய அறையோ ரூம் ஸ்பிரேயின் நறுமணத்தை வெளிப்படுத்த “கவீஈஈஈஈஈன்....” என தன் பற்களைக் கடித்தவன் தான் வைத்திருந்த மதுபான போத்தலை கவிழ்த்து அந்த அறையினுள் கொட்டினான்.

சற்று நேரத்தில் அந்த அறை எங்கும் மதுபான வாடை அடிக்க, அதன் பின்னரே அவனது மனம் திருப்தி அடைந்தது.

படுக்கையில் சரிந்து படுத்துக் கொண்டவன் தன் தலையில் கட்டியிருந்த அவளது புடவைத் துண்டை எடுத்து தன் கையில் சுற்றிக் கொண்டு உறங்கத் தொடங்கினான்.

அவனது நாசியோ தன்மயாவின் நறுமணத்தையும் அந்நொடி முகரத் துடித்தது.

மோகம் – 6

இரண்டு வாரங்களுக்கு பிறகு....

அந்த காலைப் பொழுதில் மகிழ்ச்சியைத் தொலைத்து விட்டு தன் தாயின் முகத்தை மனக் கண்ணில் கொண்டு வந்து அவருக்காக ஏங்கி அழுது கொண்டிருந்தான் அந்த பதின்மூன்று வயதைச் சேர்ந்த சிறுவன்.

அவன் சித்தார்த் எனப்படும் சித்து..!!

அனைத்து சிறுவர்களும் தன் பெற்றோருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்க, தான் மட்டும்

அநாதையாக நடுக் காட்டில் நிற்பதைப் போல உணர்ந்தான் அவன்.

தாயின் மடியில் முகம் புதைத்து தன் வாழ்வில் தினமும் நடக்கும் விடயங்களை அவரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அவா அவனை வாட்டி வதைத்தது.

தினமும் தாயின் மார்பில் தூங்க வேண்டுமென அவன் மனம் தவித்தது.

அவன் வெளியே செல்லும் நேரங்களில் ஒரு தாய் தன் குழந்தையை தூக்கிக் கொஞ்சுவதைக் கண்டாலே உள்ளம் உருக அதே இடத்திலேயே ஏக்கத்தில் அழுது விடுவான் இந்தப் பிஞ்சுப் பாலகன். அன்றைய தினம் வைத்தியசாலைக்கு தன் அங்கிளோடு புறப்பட்டான் சித்தார்த்.

ஜுரத்திற்கு மருந்தை எடுத்தவன் திரும்பி வரும் போது மருத்துமனையில் அழுது கொண்டு ஓடிய தன்மயாவைக் கண்டு விழிகள் விரித்தான்.

‘ஏன் அந்த ஆன்ட்டி அழுதுகிட்டே ஓடுறாங்க....?’ என எண்ணியவாறு அவள் சென்ற அறைக்குள் போய் பார்த்தவன் நெகிழ்ந்து போனான்.

தன்மயாவோ உடல் நிலை சரியான தன் மகனை அணைத்து முத்தமிட்டு மகிழ்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் சிந்த, அந்தக் காட்சி அப்படியே அவன் மனதில் பதிந்து போனது. தன்மயாவின் மகனோ தூக்கம் கலைந்து எழுந்து தன்

தாயைப் பார்த்து சிரிக்கத் தொடங்கினான்.

“யஷ்விந்த் குட்டி அம்மாவைப் பார்த்து சிரிக்கிறீங்களா...?” என குனிந்து மீண்டும் முத்தம் இட்டாள் தனு.

“ம்மா.. ம்ம்மா வீத்துக்கு போவோமா...?” எனக் கேட்டான் யஷ்விந்த் குட்டி.

அவளோ தன் மகனுக்கு பதில் அளித்துக் கொண்டே அவனை முத்தத்தால் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய இத்தனை போராட்டமும் அவளது மகனுக்காகத்தானே. அவன் நல்ல படியாக மீண்டு வந்து பேசியதே

அவளுக்கு பெரும் இன்பத்தை ஊட்டியது.

சித்தார்த்தோ தன் பாக்கெட்டில் இருந்த ஃபோனை வெளியே எடுத்தவன் அந்தக் காட்சியை அப்படியே புகைப்படமாகக் கிளுக்கிக் கொண்டான்.

“ஹேய் சித்து இங்கே என்ன பண்ற...? வா வீட்டுக்கு போகலாம். உனக்கு ஹோம் வர்க் இருக்குல்ல....” என அழைத்தார் அவனுடைய அங்கிள்.

“அங்கிள் எனக்கு அந்த ஆன்ட்டி வ்வேணும்... இல்ல இல்ல அந்த அம்மா வ்வேணும்.” எனக் கைகாட்ட திகைத்துப் போனார் சித்தார்த்தின் அங்கிள்.

“ம்ப்ச் உன் டாடிக்கு தெரிஞ்சா திட்டுவாரு. வா போகலாம்.” என அவனுடைய கரத்தை பிடித்து இழுத்தவாறு அழைத்துச் சென்றார் அவர்.

சித்தார்த்தோ கண்கள் கலங்க தன் வீட்டிற்கு வந்தவன் தன்னுடைய ∴போனை எடுத்து தன் தந்தைக்கு வாட்ஸ்ஆப்பில் மெசேஜ் அனுப்பத் தொடங்கினான்.

அவன் இன்று மருத்துவமனையில் எடுத்த புகைப்படத்தை தன் தந்தைக்கு அனுப்பியவன் “இவங்க எனக்கு அம்மாவா வ்வேணும் டாடி....” எனவும் அனுப்பி வைத்தான்.

தன்மயாவை தனக்கு அன்னையாக மாற்ற வேண்டும் என்ற

பேராசை அந்நொடியே அந்த பதின் மூன்று வயதுச் சிறுவனின் மனதில் அழுத்தமாக பதிந்து போனது.

****

தன்மயாவின் குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்து இரண்டு வாரங்கள் கடந்து விட, தன் குழந்தையோடு வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டவள் மருத்துவமனைக்கு வெளியே வந்து ஆட்டோ ஒன்றிற்காக காத்திருக்கத் தொடங்கினாள்.

“ம்மா எனக்கு அத வாங்கித்தாம்மா...”

“என்னதுப்பா...?” என்றவாறு அவன் கை காட்டிய திசை பக்கம் திரும்பிப் பார்த்தவள் அங்கே இருந்த

பஞ்சு மிட்டாயைக் கண்டு புன்னகைத்தாள்.

“சரி வாங்கித் தர்றேன்.” என மகனின் கன்னத்தில் முத்தம் இட்டவள் அவனைத் தூக்கிக் கொண்டு நடக்க, சட்டென அவளது கரத்தில் இருந்து குதித்து இறங்கிய யஷ்விந்த் குட்டியோ வீதியிலே ஓடத் தொடங்க, அதிர்ந்து போனது அந்த தாயுள்ளம்.

பதறியடித்து “யஷ்விந்த் ஓடாதப்பா அங்கேயே நில்லு....” எனக் கத்தியவாறு தன் பையனின் பின்னே ஓடியவள் இருவருக்கும் இடையே வேகமாக வந்து நின்ற காரைக் கண்டு அவளது இதயம் தொண்டைக்குள் வந்து துடித்தது.

சட்டென அந்த கார் வந்த வேகத்தில் பிரேக் போட்டு நின்றுவிட, அதனுள் இருந்து இறங்கினான் கவின்.

ஓடிச் சென்று வீதியில் திகைத்து நின்ற யஷ்விந்த்தை தன் கரங்களில் தூக்கிக் கொண்டவன் தன்மயாவை நெருங்கி வந்தான்.

“ஹேய் என்ன பொண்ணும்மா நீ. குழந்தையை இப்படியா தெருவுல விடுறது? அறிவில்லையா....?” என்றவாறு திட்டியவன் தன்மயாவைப் பார்த்ததும் வாயைப் பிளந்தான்.

“ஹேய் நீங்களா....? நாம அன்னைக்கு ஐஸ்க்ரீம் ஷாப்ல பார்த்தோமே.... இட்ஸ் மீ கவின்.” என தன் கையை அவளை நோக்கி புன்னகையுடன் நீட்டினான்.

அவளோ அவனைப் பார்த்தும் ஆதி என நினைத்து பதறியவள் உடல் வியர்க்க, தலை கிறுகிறுக்க அப்படியே நடுத் தெருவில் மயங்கிச் சரிந்தாள்.

குழந்தை திடீரென வீதியில் இறங்கி ஓடியதுடன் ஆதியும் வந்து விட்டான் என்ற அதிர்ச்சி அவளை மயக்கமடையச் செய்தது.

அவள் திடீரென திகைத்து பின் மயங்கியதைக் கண்டு அதிர்ந்தவன், தன் கரத்தில் இருந்த குழந்தை "ம்மாஆ...." என அழத் தொடங்கவும் சட்டென அவன் முகத்தில் ஏமாற்றம் பரவியது.

தன் ஏமாற்றத்தை தனக்குள் விழுங்கிக் கொண்டவன் குழந்தையை காரில் இருத்திவிட்டு

அவளைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டு வந்து தன் காரின் பின் சீட்டில் படுக்க வைத்தான்.

காரில் இருந்த தண்ணீர் போத்தலை எடுத்து அவள் முகத்தில் தெளித்தவன் அவள் மயக்கம் தெளிவதற்காகக் காத்திருந்தான்.

அவனுடைய பார்வையோ அவளுடைய கழுத்தில் படிந்து தாலியை தேடிப் பார்த்து பின் அவளது வதனத்தில் படிந்தது.

அவளோ தண்ணீர் தன் முகத்தில் பட்டதும் மெல்ல விழிகளைத் திறந்தவள் கவினை அருகில் கண்டதும் ஆதி என எண்ணி அலறத் தொடங்கினாள்.

தன்னருகே இருந்தவனை தள்ளி விட்டவள் கதறித் துடிக்க, அவளது கதறலைக் கண்டு தானும் பயந்து கத்தத் தொடங்கினான் கவின்.

கவினும் உரத்த குரலில் கத்த, அந்த சத்தத்தில் அவனை நிமிர்ந்து பார்த்தவள் தான் கத்துவதை நிறுத்திக் கொண்டாள்.

“ப்ளீஸ் என்னை வ்விட்ருங்க....”

“ஐயோ பைத்தியமா நீங்க...? உங்களை யாருங்க இங்க பிடிச்சு வெச்சாங்க.? ஐயோ பாவமே மயங்கிட்டீங்கன்னு உதவி பண்ணினா என்னையே இப்படி பயமுறுத்துறீங்க.” என்றவாறு கார்க் கதவோடு ஒன்றிக் கொண்டு அவளை எச்சரிக்கையாகப் பார்த்தான் கவின்.

அவனது மென்மையான குரலில் அதிர்ந்தவள் அதன் பின்னரே அவனுடைய முகத்தை உற்றுப் பார்த்தாள்.

ஆதிக்கோ நீல நிறக் கண்கள் அல்லவா, இவனுக்கோ சாதாரண கருவிழிகளே இருந்தன. இருவரது ஆடை முறையின் வித்தியாசமும் அவளது கவனத்தை ஈர்க்க, தன் மூச்சை நன்கு இழுத்து வெளியே விட்டாள் தன்மயா.

“அ.... அப்போ நீங்க அவ... அவன் இல்லையா....? உ... உங்க பேரு என்ன...?” எனக் கேட்டாள்.

“நீங்க எவனைப் பத்திக் கேக்கறீங்கன்னு புரியலை. என்னோட பேரு கவின். உங்க பேரு என்ன....?”

“என்னோட பேரு த.. தன்மயா.” என்றவள் காரில் இருந்த தன் குழந்தையை தூக்கிக் கொண்டாள்.

“ த.... ன்.... ம.... யா....” என அவளது பெயரின் ஒவ்வொரு எழுத்தையும் ரசித்து உச்சரித்தவன் “நான் உங்களை மயா ன்னு கூப்பிடுறேன்.” என்றான்.

அவனது சிரித்த முகமும் இலகுவான பேச்சும் நேர்த்தியான ஆடை அமைப்பும் இவனும் ஆதியும் வேறு வேறு என்ற உண்மையை அவளுக்கு உணர்த்த, அவனைப் பார்த்து “தேங்க்ஸ்....” என்றவள் காரில் இருந்து இறங்கினாள்.

கவினும் அவளுடன் சேர்ந்து கீழே இறங்கியவன் “இவன் உங்க குழந்தையாங்க...?” எனக் கேட்டான்.

“ஆமாங்க. என்னோட மகன்தான்...உங்க உதவிக்கு ரொம்ப நன்றி கவின்.” என்றவாறு அவனிடம் இருந்து விடை பெறும் பொருட்டு தலை அசைத்தாள் மாது.

“பத்திரமா போய்ட்டு வாங்க.” என்றவன் புன்னகையோடு கை அசைத்தான்.

கவின் சென்றதும் வீதியில் இறங்கி ஓடிய தன் மகனைக் கடிந்து கொண்டவள் அவனைத் தூக்கிக் கொண்டு தன்னுடைய இல்லம் நோக்கிச் சென்றாள்.

மூன்று அறைகளும் ஒரு ஹாலும் ஒரு சமையல் அறையுமென அழகாக இருந்தது அவளுடைய சிறிய வீடு.

தன் கைப்பையினுள் இருந்து சாவியை எடுத்தவள் தன் வீட்டுக் கதவைத் திறந்ததும் அதிர்ந்து போனாள்.

அவளுடைய வீட்டினுள்ளே புதிய தொலைக்காட்சி, சோபா, மேஜை , பிரிட்ஜ் , வாஷிங் மிஷின் என பல புதிய பொருட்கள் அடுக்கப் பட்டிருந்தது.

இவ்வளவு பெறுமதியான பொருட்கள் தன் வீட்டில் எப்படி வந்திருக்கும்....? அதுவும் பூட்டிய வீட்டினுள் இதையெல்லாம் கொண்டு வந்து வைத்தது யார்.? என சிந்தித்துச் சோர்ந்தவள் தன் கையில் தூங்கி விழுந்த மகனை கீழே பாய் விரித்து தரையில் கிடத்தினாள்.

தன் அறைக்குள் ஏதோ வெளிச்சம் வருவதைக் கண்டு சட்டென அச்சம் துளிர்க்க, நடுங்கிய கால்களுடன் தன் அறைக்குள் நுழைந்தவள் அந்த அறையைப் பார்த்து உறைந்து போனாள்.

அவளது படுக்கை அறையினுள் விலை உயர்ந்த கட்டில் நுரை போன்ற மெத்தையுடன் இருக்க, அதன் மீது சிவப்பு நிற ரோஜா இதழ்கள் தூவப்பட்டிருந்தது.

படுக்கையைச் சுற்றி மெழுகுவர்த்திகள் வரிசையாக ஏற்றப்பட்டிருந்தது.

ஒரு சிறிய மேஜையில் மதுபானம், அழகிய கண்ணாடிக் குவளைகள் மற்றும் சிவப்பு நிறத்தில் அங்கங்களை மறைக்காது

அப்பட்டமாக காட்டும் ஆடை என இருக்க, அவை எல்லாவற்றையும் பார்த்து பயந்து போனாள் தன்மயா.

அந்த அரைகுறை ஆடைக்கு மேல் ஒரு காகிதம் இருக்க, அதனை நெருங்கி நடுங்கும் விரல்களுடன் அக் கடதாசியை எடுத்தவள் அதில் எழுதியிருந்ததை படிக்கத் தொடங்கினாள்.

“ஹாய் ட்ராமா குயின். ஐ அம் ஆதி. இந்த ட்ரெஸ்ஸ போட்டுக்கிட்டு தயாரா இரு. இன்னைக்கு நீதான் என்னோட விருந்து.

நீ என்கூட இருக்கப் போறதுக்கான பரிசுதான் அந்த டீவி சோபா ப்ரிட்ஜ் எல்லாமே. உனக்கு எவ்வளவு பணம் வேணுமோ தர்றேன். இன்னைக்கு நைட்

வரைக்கும் எனக்காக வெயிட் பண்ணு. ஐ நீட் யுவர் ஸ்மெல். ஐ நீட் யுவர் பாடி(body) ஐ நீட் யு டாமிட்.....” என எழுதி வைத்திருந்தான் அந்த அசுரன்.

அதைப் படித்து முடித்த கணமே கண்களில் கண்ணீர் அருவியாக வழிய, துடைக்கக் கூட திராணியற்றவளாக அசையாது நின்றாள் அந்த அப்பாவிப் பேதை.

அடுத்த நொடியே வெறி பிடித்தவள் போல அந்த அறையின் அலங்காரங்களை அழித்தவள் அவன் வாங்கிக் குவிந்திருந்த டீவி ப்ரிட்ஜ் போன்றவற்றை அடித்து நொறுக்கத் தொடங்கினாள்.

மோகம் – 7

எதிர்பாராத விதமாக தன்மயாவைச் சந்தித்த கவினின் மனமோ ஏமாற்றத்தால் துவண்டது.

இதுவரை அவன் எந்தப் பெண்ணையும் நிமிர்ந்து கூட பார்த்ததே இல்லை. எவ்வளவு அழகி என்றாலும் சட்டென கடந்து செல்லும் குணம் கொண்ட ஆண்மகனே கவின்.

அப்படிப்பட்டவனை தன் செயலால் ஈர்த்திருந்தாள் தன்மயா.

அன்று ஐஸ்கிரீம் ஷாப்பில் ஜெகன் தன்மயாவிடம் தவறாகப் பேசியதும் அதற்கு அவள் நேரடியாக நெத்திப் பொட்டில் அடித்தாற் போல “இது உங்க மனைவிக்குத் தெரியுமா....?” எனக் கேட்டது

எல்லாவற்றையும் அவளின் இருக்கைக்கு பின் இருந்து ரசித்துக் கொண்டிருந்தான் கவின்.

சிறுவர்களோடு அந்த இடத்திற்கு வந்தமர்ந்த கவினுக்கு தன்மயா ஜெகனின் பிற்பாதி உரையாடலே செவியில் விழுந்தது.

பணத்திற்காக தவறான வழியில் செல்லாது துணிந்து நின்ற அவளுடைய நேர்மை அவனை பெரிதும் கவர்ந்தது. (அவள் ஆதியுடன் படுக்கையை பகிர்ந்து கொண்டது கவினுக்குத் தெரியாதல்லவா...)

அவள் தைரியமாக அவனைச் சமாளித்து விட்டு அனுப்பியதைப் பார்த்தவன் “ஸ்ட்ராங் லேடி....” என தன் மனதினுள் அவளை மெச்சிக் கொண்டான்.

ஆனால் அடுத்த நொடியே அவள் குழந்தை போல மேஜை மீது படுத்து தேம்பித் தேம்பி அழத் தொடங்க, “ஓ மை க்யூட்டி கேட்....” என அவனது உதடுகள் தன்னை அறியாமலே முணுமுணுத்து விட, தன் தலையில் தட்டிக் கொண்டவன் தன்னோடு வந்த சிறுவர்களை தன்மயாவிடம் அனுப்பி வைத்தான்.

அழுது அழுது மூக்கு நுனி சிவந்து தலை கலைந்த கோலத்திலும் பேரழகியாக இருந்த தன்மயாவின் மோகன ஸ்வரூபம் அந்த நொடியே கவினின் இதயப் புத்தகத்தில் ஆழப் பதிந்து போனது.

இந்தக் காதல் எங்கே எப்போது எப்படி எதனால் வருகின்றது என இதுவரை யாரும் அறிந்ததில்லையே.

இந்த உருவம் இல்லாத காதல்தான் உருவம் கொண்ட மனிதர்களை எப்படியெல்லாம் வாட்டி வதைக்கின்றது.

முதல் சந்திப்பிலேயே தன்மயாவிடம் தன் இதயத்தை பறிகொடுத்தவன் அடுத்த இரண்டு வாரங்களும் அவளுடன் கனவிலேயே காதல் செய்தான்.

ஒவ்வொரு ஆணுக்கும் யாராவது ஒரு ட்ரீம் கேர்ள் நிச்சயமாக இருப்பாள். அந்த வரிசையில் கவினின் கனவுக் காதலியாக கற்பனையில் மாறிப் போனாள் தன்மயா.

இந்த இரண்டு வாரங்களில் அவளைத் தேடி அடிக்கடி அந்த ஐஸ்கிரீம் ஷாப்பில் வந்து நின்றதை

எண்ணி அவன் மனம் விரக்தி கொண்டது.

கவினோ காதல் செடியை விருட்சமாக மாற்றி வளர்த்துக் கொண்டிருக்க, இன்றைய தினம் அவளை குழந்தையோடு பார்த்ததும் மொத்தமாக நொறுங்கிப் போனான் அவன்.

திருமணமாகி குழந்தையும் உள்ள பெண்ணிடம் தன் மனதை தொலைத்தது பெரும் வேதனையாகவே இருந்தது.

இலகுவில் அவ்வளவு சீக்கிரம் எதற்கும் ஆசைப் படாதவன் தன்மயாவின் மீது மாத்திரம் கொள்ளை கொள்ளையாக நேசம் கொண்டான்.

அந்த நேசம் தனக்கு உரியதல்ல என்பது புரிந்ததும் அவனது கண்கள் கலங்கிப் போனது.

தன்மயாவின் முன் எதையும் காட்டிக் கொள்ளாது சிரித்த முகமாக பேசி அனுப்பி வைத்தவன் அவள் சென்றதும் சாலையோரத்தில் நிறுத்தி வைத்திருந்த தன் காரினுள் ஏறி அமர்ந்தான்.

நொடிக்கு ஒரு தடவை "ஐ லவ் யு மயா பேபி...." என அடம்பிடித்த தன் இதயத்தை அடக்க வழி தெரியாது ஸ்டேரிங்கில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

கண்ணீரோ அவன் அனுமதி கேளாமலேயே அவனுடைய ஆயுத விழிகளில் நின்றும் வழியத் தொடங்கியது.

‘எனக்கு என்னோட மயா பேபி வ்வேணும்....’ என அடம் பிடித்தது அவனுடைய காதல் மனம்.

‘ஹேய் இடியட் அவ இன்னொருத்தருடைய மனைவி.

அவளை நீ மறந்துரு...’ என்றது இன்னொரு மனம்.

கசந்த புன்னகையோடு அவளைத் தொட்டுத் தூக்கிய தன் கரங்களை தன் அதரங்களுக்கு அருகே கொண்டு வந்து மென்மையாக முத்தம் இட்டான்.

தன் மனதுக்கு மிகவும் பிடித்த இனியவளை ஏந்திய கரங்கள் அல்லவா இவை.

ஏதோ அவளையே முத்தம் இட்டதைப் போல அவனுடைய இதழ்கள் குறுகுறுத்தன.

‘ஒரு சிலருக்கு அவங்க ஆசை பட்ட வாழ்க்கை ஈசியா கிடைச்சிரும்...

ஒரு சிலருக்கு அவங்க ஆசைப்பட்ட வாழ்க்கை போராடிய பிறகு கிடைக்கும்...

ஒரு சிலருக்கு அவங்க எவ்வளவு ஆசைப்பட்டாலும் அவங்க நேசிச்ச அந்த வாழ்க்கை மட்டும் கிடைக்கவே கிடைக்காது.

நானும் இதுல மூணாவது வகை போல. நெஞ்சு முட்ட காதல் இருந்தும் ஆயுள் அளவுக்கு ஆசை இருந்தும் நான் ஆசைப்பட்ட வாழ்க்கை எனக்கு கிடைக்காது.’ என

எண்ணியவனது முதுகு அழுகையில் குலுங்கியது.

“ஐ லவ் ஹெர்.... ரியலி ரியலி ஐ லவ் ஹெர் சோ மச்..” என தன் காருக்குள் இருந்து கதறினான் அந்த மென்மையான மனம் படைத்த ஆண்மகன்.

அவன் கார் நிறுத்தியிருந்த இடத்திற்கு பக்கத்தில் இருந்த பெரிய மைதானம் ஒன்றில் இன்னும் ஏழு மணி நேரத்தில் பிறக்கப் போகின்ற காதலர் தினத்தை விமர்சையாக கொண்டாட யுவன் யுவதிகள் அங்கே ஒன்று கூடியிருந்தனர்.

அந்த இடமே சிகப்பும், இளஞ் சிவப்பு நிறமும் கொண்ட பலூன்கள் மற்றும் ரோஜாக்களால் விமர்சையாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஈரம் கசிந்த விழிகளை துடைத்துக் கொண்டு எழுந்தவன் வேதனையில் வாடும் தன் மனதை மாற்ற முயன்று அந்த நிகழ்வு நடக்கும் இடத்தை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

அங்கே பலர் ஜோடி ஜோடியாக கரங்களைப் பற்றிக் கொண்டும் அணைத்தவாறும் தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

அங்கே அமைக்கப்பட்ட மேடையில் ஒவ்வொருத்தராகச் சென்று காதல் பாடல்கள் பாடி குதூகலிக்க, அவனுக்கோ இன்னும் வேதனை கூடிப் போனது.

ஒரு கட்டத்தில் மனதின் ரணத்தை தாங்காது பாய்ந்து மேடை ஏறியவன் மைக்கை தன் கரத்தில்

உயர்த்திப் பிடித்தான். அவன் மேடை ஏறியதும் அவனுடைய பாடலைக் கேட்க, அனைவரும் அமைதியாகினர்.

“ஹாய் ஐ அம் கவின். கவின் கிருஷ்ணா.... இந்தப் பாடல் என்னோட பேபிக்காக.....” என்றவன் உயிரை உருக்கும் குரலில் உருகி உருகி பாடத் தொடங்கினான்.

“காதல் என்னை பிழிகிறதே

கண்ணீர் நதியாய் வழிகிறதே

நினைப்பதும் தொல்லை

மறப்பதும் தொல்லை

வாழ்வே வலிக்கிறதே....”

எனப் பாடியவனின் விழிகளில் பொல பொலவென வழியத் தொடங்கியது அவனுடைய காதலுக்கான கண்ணீர்.

அவன் பாடத் தொடங்கியதும் உற்சாகமாக கை தட்டியவர்கள் அவனுடைய கண்ணீரில் உறைந்து போய் அமைதியாகினர்.

“காட்டில் தொலைந்த மழை துளி போல்

கண்ணே நீயும் தொலைந்ததென்ன

நீரினை தேடும் வேரினை போல

பெண்ணே உன்னை கண்டெடுப்பேன்....”

என்றவாறு தன் இதயம் உள்ள பக்கத்தை தன் கரங்களால் வருடியவன், தன் சிகையை அழுந்தக் கோதி தன் வேதனையை கட்டுப்படுத்த முயன்றவாறு பாடலைத் தொடர்ந்தான்.

“கண்கள் ரெண்டும் மூடும் போது

நூறு வண்ணம் தோன்றுதே

மீண்டும் கண்கள் பார்க்கும் போது

லோகம் சூன்யம் ஆகுதே....”

எனப் பாடியவனின் விழிகளின் வெண்படலம் சிவந்து போனது.

“தொடு வானம் தொழுகின்ற நேரம்

தொலைவினில் போகும்

அட தொலைந்துமே போகும்

தொடு வானமாய் பக்கமாகிறாய்

தொடும் போதிலே தொலைவாகிறாய்....”

என தன் வசீகரமான குரலில் தன் காதலின் அத்தனை உணர்வுகளையும் கொட்டிக் கவிழ்த்தவன் கன்னத்தில் வடிந்த கண்ணீரை சுண்டி எறிந்தவாறு "ஐ லவ் யு தன்மயா." என்றவாறு மேடையில் இருந்து இறங்கினான்.

"ஒன் மினிட் ப்ரோ." என்றான் கூட்டத்தில் இருந்த ஒருவன்.

"எஸ் சொல்லுங்க ப்ரோ." என்றான் கவின்.

"உங்களோட வேதனையைப் பார்க்கும் போது ரொம்ப கஷ்டமா இருக்கு ப்ரோ. லவ் பெயிலியரா....? நாங்க வேணும்னா உங்க லவ்வர் கிட்ட பேசட்டுமா....?" என்றதும் கசப்பான புன்னகையை வீசியவன்,

“அவங்களுக்கு ஆல்ரெடி கல்யாணம் ஆகிருச்சு பாஸ். ஆனா அவ எப்போவும் என் மனசுல என்னோட மனைவியா, என் குழந்தைங்களுக்கு அம்மாவா என்கூடவே வாழ்ந்துட்டு இருப்பா....” என அவன் கூறியதும் அவனுடைய காதலின் ஆழத்தை உள்வாங்கிக் கொள்ளவே அங்கிருந்த அனைவருக்கும் சற்று நேரம் பிடித்தது.

“அவங்க பேரு என்ன நண்பா....?”

“அவளோட பேரு த.... ன்.... ம.... யா. தன்மயா. எனக்கு மட்டும் மயா பேபி.” எனக் கூறி வெளியே புன்னகைத்தவன் உள்ளே கதறும் மனதோடு மேடையை விட்டு கீழே இறங்கினான்.

அடுத்த நொடியே அவனது விழிகள் அதிர்ச்சியில் விரிய, அவனது கால்களோ நிலத்தினுள் புதையுண்டது போல அசைய மறுத்து அதே இடத்திலேயே நின்றன.

அப்படி அவன் அதிர்ந்து நிற்கும் வண்ணம் எதைக் கண்டானாம்....?

****

தன்மயாவுக்கோ இரவு நெருங்க, நெருங்க ஆதி தன்னைத் தேடி தன் வீட்டிற்கு வந்து விடுவானோ என்ற அச்சமும் பதற்றமும் அவளை மிரட்டிக் கொண்டே இருந்தது.

தனியாக வீட்டில் இருந்து அந்த அரக்கனின் கரங்களில் சிக்கி வதை படுவதை விட, கண் காணாத இடத்திற்கு சென்று விடலாம் என

எண்ணியவள் மீளாத துயரில் மூழ்கியவளாக தூங்கிய தன் மகனை தோளில் தூக்கிக் கொண்டு தன்னந்தனியாக அந்த வீதியிலே நடக்கத் தொடங்கினாள்.

இந்த இருள் சூழ்ந்த பொழுதில் எங்கே செல்வது எனத் தெரியாது தவித்தவளுக்கு நெஞ்சம் பதறியது.

யாரோ ஒருவனுக்கு பயந்து தன் சொந்த வீட்டில் கூட நிம்மதியாக உறங்க முடியாத நிலையில் தன் மீதே கழிவிரக்கம் கொண்டாள் பேதை.

அதே நேரம் காதலர் தினத்தை முன்னிட்டு நடந்து கொண்டிருந்த நிகழ்வை பார்த்தவள் இன்று இரவு இங்கேயே பாதுகாப்பாக இருக்கலாம்

என எண்ணி அந்த நிகழ்வு நடக்கும் மைதானத்திற்குள் நுழைந்தாள்.

அங்கே நுழைந்தவளோ மேடையில் நின்ற கவினைக் கண்டு ஆச்சரியம் கொண்டாள்.

‘ஓ இவரும் லவ் பண்றாரு போல.’ என எண்ணிக் கொண்டவள் குழந்தையோடு அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள்..

ஆனால் அடுத்தடுத்து நிகழ்ந்த சம்பவங்கள் யாவும் அவளை அதிர வைத்தன.

கவினின் காதலும் அவன் தன் காதலிக்காக உருகி பாடிய விதமும் அவனுடைய ஏக்கமும் அதை விட அவனுடைய கண்ணீரும் அவளை ஸ்தம்பிக்கச் செய்தன.

ஒரு ஆண் மகன் காதலுக்காக கண்ணீர் சிந்தவும் கூடுமா....?

பெண்கள் என்றால் போகப் பொருளாக பார்க்கும் ஆடவர்களின் மத்தியில் புடம் போட்ட பொன் போன்ற ஆண்களும் இருக்கின்றனரா....?

இன்னும் உண்மையான காதல் இந்த அவனியில் மாண்டு போகாமல் இருக்கின்றதே என எண்ணி வியந்தாள்.

கவினுடைய காதல் அவளை உருகிக் கரைய வைத்தது.

கவினுடைய காதலி கொடுத்து வைத்தவள் என நினைத்து முடிக்க முன்னரே அவன் அவளுடைய

பெயரை உச்சரிக்க அவளுக்கோ ஒரு கணம் எதுவுமே புரியாத நிலை.

அடுத்தடுத்து அவன் அவளைப் பற்றிக் கூற அதிர்ச்சியில் இருக்கையை விட்டே எழுந்தவள் சீற்றத்தோடு அவனைப் பார்த்தாள்.

அதே நேரம் மேடையை விட்டு இறங்கி வந்த கவினோ அதே கூட்டத்தில் கையில் குழந்தையோடு தாங்க முடியாத அதிர்ச்சியில் அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தன்மயாவைப் பார்த்து ஆடிப் போய் நின்றான்.

பின் தன்னை நிலைப் படுத்திக் கொண்டவனாக அவள் அருகே வந்து "சாரி மயா...." என்க, அவளோ விழிகளில் வழிந்த நீரோடு அவன் முகம் பார்த்தவள் "உங்களுக்கு நல்ல

வாழ்க்கை இருக்கு கவின். நான் உங்களுக்கு கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவ. என்னை மறந்துருங்க. என் வாழ்க்கைல என் பையனைத் தவிர வேற யாருக்குமே இடம் இல்ல" என்றாள்.

"அப்போ உங்க கணவருக்கும் உங்க வாழ்க்கைல இடம் இல்லையாங்க....?" என நிதானமாகக் கேட்க, திகைத்து விழித்தவள் திணறிப் போனாள் மாது.

இல்லாத கணவனுக்கு எங்கணம் அவள் இடங் கொடுப்பதாம்....?

மோகம் – 8

கவின் கேட்ட கேள்வியில் அவள் திகைத்துத்தான் போனாள்.

“ஏன் மயா அமைதியா இருக்க....? உன்னோட மனசுல உன் குழந்தைக்கு மட்டும்தான் இடம் இருக்குன்னு சொன்ன.? உன் ஹஸ்பண்டுக்கு இடம் இல்லையா.? இல்லை உனக்கு ஹஸ்பண்ட்டே இல்லையா....?” எனக் கேட்டான் கவின்.

அவனுக்கு அவளைப் பற்றிய உண்மை தெரிய வேண்டியிருந்தது.

“என்னைப் பத்தி எதுக்கு கேட்குறீங்க...?” என சினந்தவள் தன் மகனோடு அங்கிருந்து நகர்ந்து செல்லத் தொடங்கினாள்.

“மயா நில்லு.”

“.....”

“மயா ப்ளீஸ்....”

“என்னோட பேரு தன்மயா.” என அழுத்தமாகக் கூறியவள் திரும்பிப் பாராது நடக்கத் தொடங்கினாள்.

“ஹேய் வெயிட்.” என்றவன் அவள் முன் வந்து வழியை மறைத்தான்.

“கவின் ப்ளீஸ் வழியை வ்விடுங்க....”

“இந்த நேரத்துல குழந்தையையும் தூக்கிட்டு எங்க போற மயா...?” என்றவன் அவளுடைய கரத்தில் இருந்த குழந்தையை தன் கரங்களில் எடுத்துக் கொண்டான்.

“ஐயோ என் பையனை கொடுங்க..” என பதறினாள் அவள்.

“ம்ப்ச் ஒரு மணி நேரமா உன்னோட கைலயே தூக்கி வெச்சிருக்க. உனக்கு கை வலி வந்துரும் மயா.” என அவளுக்காக வருந்தியவன் குழந்தையோடு தன் காரை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

“ஐயோ எங்க போறீங்க. அவனை என்கிட்ட கொடுங்க.”

“ம்ம் தர்றேன். கார்ல ஏறு. உங்க ரெண்டு பேரையும் பத்திரமா உங்க வீட்ல ட்ராப் பண்ணிட்டு போறேன்.” என்றவன் அவள் மறுக்க மறுக்க யஷ்விந்த் குட்டியோடு காரில் ஏறிக் கொண்டான்.

வேறு வழியின்றி அச்சத்தோடு தானும் அவன் காரினுள் நுழைந்தவள் குழந்தைக்காக கை நீட்டினாள்.

“அவன் என்கிட்ட இருக்கட்டும்.”

“கவின் குழந்தையை என்கிட்ட கொடுங்க. நீங்க நினைக்கிறது என்னைக்குமே நடக்காது. நான் உங்களுக்கு கிடைக்கவும் மாட்டேன். உங்க மனசை மாத்திக்கோங்க...”

“லிசின் மயா. இன்னொருத்தரோட மனைவிகிட்ட தப்பா நடந்துக்கிற அளவுக்கு நான் கேவலமானவன் இல்ல. எஸ் நான் உன்னை லவ் பண்றேன்தான் பட் என் காதல் என்னோட மட்டும்தான். அதனால உனக்கு எந்த தொந்தரவும் வராது மயா ட்ரஸ்ட் மீ.” என்றவன் குழந்தையை தன் மார்பில் சாய்த்துக் கொள்ள அவளுடைய கண்களோ கலங்கிப் போனது.

இவர்களின் உரையாடலில் தூக்கம் கலைந்து எழுந்த யஷ்விந்த்தோ சிணுங்கத் தொடங்க, அவனை தன் மார்பில் போட்டு தட்டிக் கொடுத்தான்.

“ஏன் ஒரு மாதிரி இருக்க? ரெண்டு பேரும் சாப்பிட்டீங்களா...?”

“ம்ம் யஷ்விந்த்துக்கு இட்லி ஊட்டி விட்டேன்.”

“நீ என்ன சாப்பிட்ட.?” எனக் கேட்டான் கவின்.

சற்று நேரம் விழிகளை மூடி சிந்தித்தவள் “தெரியலையே...” என்க, அவனோ அதிர்ந்து போனான்.

“வாட்? தெரியலையா....? கடைசியா எப்போ சாப்பிட்ட.?”

“ரெண்டு நாளைக்கு முன்னாடி டீ குடிச்சேன்.” என்றதும் அவனது விழிகள் அதிர்ச்சியை வெளிப்படுத்தின.

குழந்தையை தூக்கி அவளிடம் கொடுத்தவன் காரை ல்டார்ட் செய்ய, அவனைத் தடுத்தாள் தன்மயா.

அவனோ அவளை தீர்க்கமாகப் பார்த்தவன் அவளது மறுப்பை அலட்சியம் செய்தவாறு காரை செலுத்தத் தொடங்கினான்.

அவளுக்கோ தன் குழந்தையை பாதுகாக்க தான் வேண்டும் என்ற எண்ணத்தில் தன் மகனோடேயே நேரத்தை செலவழித்தவள் தன் மீது கவனம் செலுத்த மறந்து போனாள்.

கவின் குழந்தை மீது காட்டும் அக்கறையும் அன்பும் அவளுடைய மன இறுக்கத்தை தளரச் செய்ய இத்தனை நேரமும் தாக்குப் பிடித்த அவளுடைய பூஞ்சை உடல் மயக்கத்தின் வசம் போனது.

அவனோ தன் காரை சாப்பாட்டுக் கடை ஒன்றில் நிறுத்தியவன் கீழே இறங்கி இரவு உணவு வாங்கியவன் மீண்டும் காரில் ஏறி அவள் அருகே அமர்ந்தான்.

“மயா.... இந்தா இதை சாப்பிடு...” என அழைத்தவன் அவள் எந்த அசைவும் இன்றி இருக்க உரத்த குரலில் மீண்டும் அழைத்தான்.

அந்த அழைப்பிற்கும் அவளிடம் இருந்து எந்த பதிலும் வராது போக அவனுக்கோ பதற்றம் அதிகரித்தது.

“ஹேய் பேபி....” என அவளுடைய கன்னத்தில் தட்டியவன் அவள் மயக்கத்தில் இருக்கிறாள் என புரிந்து துடித்துப் போனான்.

சட்டென தண்ணீர் போத்தலை எடுத்து அவள் முகத்தில் நீரை தெளிக்க, மெல்ல அசைந்தாள் தன்மயா.

அவள் எழுந்ததும் அவளது வாடிப் போன முகத்தைக் கண்டு துடித்தவன் அவளுக்காக வாங்கி வந்த உணவை பிசைந்து அவளுக்கு ஊட்ட ஆரம்பித்தான்.

அவ்வளவுதான் அவனது செயலில் மொத்தமாக உடைந்து போனாள் தன்மயா.

“ம்ப்ச் இப்போ எதுக்கு மயா அழுகுற....?”

“எ.... என்னோட அப்பாவும் இப்படித்தான் எனக்கு ஊட்டி விடுவாரு.” என்றவளுக்கோ அழுகை விக்கலாக வெளிப்பட்டது.

தந்தையைப் பற்றிக் கூறி அழுதவளை காண அவனுக்கோ சிறு குழந்தை போலத் தெரிந்தாள் அவள்.

“உன்னோட வயசு எத்தனை பேபி....?”

“இருபத்தொன்னு....” என அழுதவாறு கூறினாள் தன்மயா.

‘இவ நாம நினைச்சதை விட ரொம்ப சின்னப் பொண்ணா இருக்காளே. அப்போ இவளுக்கு பதினெட்டு வயசுலையே குழந்தை

பிறந்திருச்சா....?' எனக் குழம்பியவன் அவளது அழுகையில் தன் சிந்தனையை ஒதுக்கி வைத்தான்.

"ஷ்ஷ் நோ மயா பேபி. நோ க்ரையிங்." என்றவன் அவளுக்கு உணவை ஊட்டினான்.

ரெண்டு நாட்களாக உணவு உண்ணாதவள் கவின் கொடுத்த உணவை மளமளவென தன் வாயில் வாங்கிக் கொண்டாள்.

"உன்னோட அப்பா இப்டித்தான் உனக்கு ஊட்டுவாரா....?"

"ம்ம்...."

"இப்போ அவர் எங்க....?"

"அப்.... அப்பா ஆக்ஸிடன்ல எ.... என்னை வ்வ்விட்டு போ.... போ...." என்றவள் விசும்பத் தொடங்க

அவளது வலக் கரத்தின் மீது தன் கரத்தை பதித்து அழுத்தியவன் அவளுக்கு தன் விழிகளால் ஆறுதல் மொழி கூறினான்.

“அப்பா மட்டும் தானா பேபி....?”

“இ... இல்ல என்னோட அம்.... அம்மா. அக்கா அத்.... அத்தான் எ... எல்லாரும் அந்த ஆக்ஸிடன்ல போ... போய்ட்டாங்க. என்னை த... தனியா வ்விட்டு போய்ட்டாங்க. இ... இவனை எ.... என் கைல கொடுத்திட்டு எ.... என்னை அநாதையா வ்விட்டு போ.... போய்ட்டாங்க.” என்றவள் கதறி அழத் தொடங்கினாள்.

சட்டென அவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டான் கவின்.

அவளது அழுகை அவனை சுக்கு நூறாக சிதற வைத்தது.

அதன் பின்னரே அவளுடைய வார்த்தைகள் புத்தியில் உறைக்க சட்டென அவளை விட்டு விலகியவன் அவளுடைய தோளைப் பற்றியவாறு,

“வாட்...? வாட் டிட் யு செய்ட்....? இவனை உன்கிட்ட கொடுத்துட்டு போய்ட்டாங்களா....? அப்போ இவன் உன் குழந்தை இல்லையா.? ஓ மை காட்.? அப்போ இது உன்னோட அக்காவோட குழந்தையா....?” என அதிர்ச்சியுடன் கேட்டான் கவின்.

அவன் அப்படிக் கேட்டதும்தான் தான் உளறிவிட்டோம் என்பது புரிய திகைத்தவள் “அதுஉ வந்துஉ” என திகைக்க, அவனுடைய அழுத்தமான பார்வையில் தலை குனிந்தாள் மாது.

“ஹேய் உண்மையை சொல்லுடி. இவன் உங்க அக்காவோட குழந்தையா.?” என்றதும் ஆம் என தலை அசைத்தவள் “இவன் எனக்கும் குழந்தைதான். இவன் இல்லைன்னா நான் எப்பவோ செத்துருப்பேன். இவன் என்னோட மகன்” என நா தழுதழுக்க கூறினாள் தன்மயா.

சட்டென தளர்ந்து போய் இருக்கையில் சாய்ந்தான் கவின். அவனது விழிகள் மகிழ்ச்சியில் கலங்கின.

அடுத்த நொடியே அவளது கூந்தலை ஒதுக்கி விட்டு அவளுக்கு உணவை ஊட்டியவன் அவளது கரத்தை பற்றியவாறு “என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா மயா பேபி....? ப்ளீஸ்....” எனக் கேட்க,

அவளுக்கோ சட்டென மூச்சடைத்துப் போனது.

அவளால் எப்படி அவனைத் திருமணம் செய்து கொள்ள முடியும்....? அவள்தான் பணத்திற்காக ஆதித்யனிடம் விலை போய் விட்டாளே.

கவினைப் போன்ற நல்லவனுடைய காதல் கிடைக்க, தனக்கு கிஞ்சித்தும் தகுதி இல்லை என எண்ணியவள் அவனிடம் இருந்து விலகி அமர்ந்தாள்.

“என்னால முடியாது கவின். நான் போகணும்.” என்றவளை எழ விடாது தடுத்தவன் “ஏன்....?” என காரணம் கேட்டான்.

“என்னால எந்தக் காரணமும் இப்போ சொல்ல முடியாது கவின். என்னை விட்ருங்க. ப்ளீஸ்....”

“ம்ப்ச் மயா யஷ்விந்த்தை பத்தி நினைச்சு கவலைப் படுறியா அவன் எனக்கும் பையன்தான்டி. புரிஞ்சிக்கோ மயா. என் காதலுக்கு ஒரே ஒரு வாய்ப்பு கொடு ப்ளீஸ்.”

“சா.... சாரி என்னால மு.... முடியாது.”

“ஏன்டி ஏன்....? என்னைப் பிடிக்கலையா....?” என அவள் முகத்தைப் பார்த்துக் கேட்டவனின் விழிகள் கலங்கிப் போனது.

“.....”

“பதில் சொல்லுடி ப்ளீஸ்....”

“.....”

“எனக்கு நீ வ்வேணும் மயா பேபி ப்ளீஸ்....”

“.....”

“ஏய் வாயைத் திறந்து ஏதாவது சொல்லுடி. நான் உன்னை வற்புறுத்த மாட்டேன் மயா. எனக்கு உன்னோட சந்தோஷம்தான் முக்கியம்....”

“.....”

அட்லீஸ்ட் நீ என்னை வேணாம்னு சொல்றதுக்கு என்ன காரணம்னாவது சொல்லிரு ப்ளீஸ் இல்லைன்னா நான் செத்துருவேன் மயா.”

“.....”

அவளது அமைதி அவனது இதயத்தை பலவீனமாக்க சட்டென தன் காரில் இருந்து இறங்க

முயன்றவனின் கரத்தை பிடித்தவள் “நா.... நான் அழுக்கானவ.... கெட்டுப் போனவ.... இந்த உடம்பை இன்னொருத்தன்கிட்ட பணத்துக்காக வித்த கேவலமான பொண்ணு. வி.... விபச்சாரி. இப்போ சொல்லு நான் உனக்கு வ்வேணுமா....? சொல்லு கவின் நான் உனக்கு வ்வேணுமா....?” எனக் கத்தியவள் தன் மார்பில் அடித்துக் கொண்டு கதறி அழத் தொடங்கினாள்.

“நா.... நான் நல்ல பொண்ணு இல்ல.... குடும்ப வாழ்க்கைக்குள்ள போறதுக்கு எனக்கு எந்த தகுதியும் இல்ல.... இந்த உடம்பு சா.... சாக்கடை மாதிரி. வெளிய பார்க்கத்தான் அழகா இருக்கு. உள்ள அப்படி இல்ல கவின். இதுக்கு மேலையும் நான் உனக்கு

வ்வேணுமாஆஆ....?” என முகத்தை மூடிக் கொண்டு கதறியவளின் காதருகே நெருங்கியவன் “எஸ்....” என்றான்.

“ஹாங்....?” தன் செவிகளில் விழுந்த வார்த்தைகளை நம்பாது விழி விரித்தாள் அந்தக் காரிகை.

“எனக்கு இப்போவும் நீ தான் வ்வேணும். இந்த தன்மயா மட்டும்தான் வ்வேணும். நான் காதலிச்சது உன்னோட உடம்பை இல்லைடி. உன்னோட மனசை. நீ எப்படி இருந்தாலும் எனக்கு நீ வ்வேணும் மயா.”

“நீ சாக்கடை இல்லைடி. நீ அழகான பூந்தோட்டம், எனக்கே எனக்கான காதல் தேவதை. என்னோட வாழ்க்கைல எனக்காக

கடவுள் படைச்ச ஒரே உறவு நீதான் மயா. நீ இல்லாத வாழ்க்கையை என்னால வாழ முடியாதுடி. ஐ கான்ட் ப்ரீத் வித்தவுட் யு. டாமிட் நீ இல்லைன்னாதான் இந்தக் கவின் மூச்சுக்காத்து இல்லாம செத்துருவான்.

உன்னை என் கண்ணுக்குள்ள வெச்சு பொக்கிஷமா பார்த்துக்கிறேன்டி. என்கூட வந்துரு மயா பேபி ப்ளீஸ்..” என்றவனின் வார்த்தைகள் அவளை திகைக்கச் செய்தன.

“ஆனா என்னோட கடந்த காலம்....” என அழுதவாறு கூற வந்தவளின் இதழ்கள் மீது தன் விரலை வைத்து அவளுடைய பேச்சை நிறுத்தியவன்,

“உன்னோட கடந்த காலம் கடந்து போகட்டும்... நம்ம எதிர்காலம் எப்படி வேணாலும் போகட்டும். இந்த நிமிஷம் உனக்காக நானும் எனக்காக நீயும் நமக்காக நம்ம பையனும்னு வாழ்ந்து பார்த்திரலாம்டி.” என்றவன் தன் கண்ணீரை துடைத்துக் கொண்டு அவள் முன் தன் கரத்தை யாசகமாக நீட்டினான்.

அது உண்மையான காதலனின் காதல் யாசகம்....!!

ஆதியிடம் உடலைக் கொடுத்தவள் கவினிடம் மனதைக் கொடுக்க சம்மதிப்பாளா....??

சித்து எனும் பதின் மூன்று வயது சிறுவனோ தன்மயாவை தன் தாயாக மாற்ற அடித்தளம்

இட்டுள்ளானே.... அதன் விளைவுதான் என்ன...?

மூன்று பக்கமும் சிக்கித் தவிக்கப் போகும் மென்மையானவளின் காதல் காவியம் இது.

மோகம் – 9

தன் கைகளைப் பிடித்துக் கொண்டு காதலை யாசிக்கும் ஆண் மகனை ஏதோ உலக அதிசயத்தை பார்ப்பதைப் போல பார்க்கலானாள் தன்மயா.

தான் இவ்வளவு கூறியும் தன் காதலை கிஞ்சித்தும் மாற்றிக் கொள்ளாது தன்னை உயிருக்குயிராக நேசிக்கும் ஜீவனைப் பார்த்த நொடி

அவளின் உடலில் உள்ள அத்தனை உரோமங்களும் சிலிர்த்து எழுந்தன.

ஆனாலும் அவளோ இறுதிவரை அவனுடைய கரங்களை பிடிக்கவே இல்லை.

“நீ சொல்றதெல்லாம் சினிமாலதான் நடக்கும் கவின். நான் இன்னொருத்தரோட இருந்ததை நீ மறக்கலாம். ஆனா என்னால மறக்க முடியாது. அது கடைசி வரைக்கும் என் மனசை உறுத்திக்கிட்டேதான் இருக்கும்.” என வலியோடு கூறினாள் பெண்.

“ப்ச் இப்போ என்னதான்டி சொல்ல வர்ற....?”

“உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் என்னால

உன்கூட வாழ முடியாது கவின். என்னை மறந்துட்டு நீ உனக்கான வாழ்க்கையை ஆரம்பி.”

“இட்ஸ் ஓகே. இட்ஸ் ஓக்கே மயா பேபி. நீ என்கூட வாழவே வ்வேணாம். என்னை இப்பவே கல்யாணம் பண்ணிக்கோ. என்கூட எங்க வீட்டுக்கு வந்துரு. எனக்கு நீ என் பக்கத்துல இருந்தாலே போதும்டி.” என்றவனின் வார்த்தைகள் அவளை நெகிழச் செய்தன.

ஏன் இவனுக்கு என் மேல் இத்தனைக் காதல்....?

இவன் காதலுக்கு நான் பொருத்தமானவளும் இல்லையே..

அவனது காதல் அவளை உருக வைத்துக் கொண்டிருந்தது. ஆனால்

அவனுடைய முகமோ அந்த அரக்கன் ஆதியை அல்லவா அடிக்கடி நினைவு படுத்துகின்றது.

அவளின் மனமோ குழம்பிப் போயிருந்தது. இந்தப் போராட்டத்தில் அவளோ சோர்ந்து போய் கண்கள் கலங்கி நிற்க,

அவளின் கண்ணீரைக் கண்டதும் நொந்து போனான் அவன்.

“வ்வேணாம் பேபி. நீ உன்னை கஷ்டப்படுத்திக்காத. உன்னோட முடிவை நீ நாளைக்கே சொல்லு. இப்போ நான் உன்னை உங்க வீட்ல ட்ராப் பண்ணிடுறேன்.”

அவன் வீட்டுக்குப் போவோம் என்றதும் அவளுக்கோ ஆதியை எண்ணி முதுகுத் தண்டு சில்லிட்டது.

ஆதி வந்தால் தன் நிலை என்ன ஆவது என எண்ணிப் பயந்தவள் “இல்ல கவின் இன்னைக்கு எனக்கு மனசே சரியில்ல. நான் என்னோட ப்ரண்ட் வீட்டுக்கு போகலாம்னு இருக்கேன்.” என்றாள்.

“ம்ம் நானே ட்ராப் பண்ணிடுறேன்.” என்றவன் அவள் போகும் வழியைக் கூற, அதன்படியே வண்டியைச் செலுத்தி காரை அவள் சொன்ன இடத்தில் நிறுத்தியவன் அவள் அந்த வீட்டிற்குள் செல்லும் வரை நின்று பார்த்து விட்டு அதன் பின்னரே தன் இல்லம் நோக்கிச் சென்றான்.

தன்மயாவோ தன் பள்ளி தோழியான நிஷாவின் வீட்டில் அன்றிரவு தங்கியவள் விடிந்ததும்

நிஷாவிற்கு நன்றி கூறி விடை பெற்றுக் கொண்டு தன் இல்லம் நோக்கிச் சென்றாள்.

சாவியை எடுத்து கதவைத் திறந்தவள் தன் ஹேன்ட் பேக்கை தூக்கி இருக்கையில் போட்டாள்.

யஷ்வந்த்தோ “ம்மா பசிக்குது....” என அழத் தொடங்க, அவனை சமாதானப் படுத்தி அவனுடைய பந்தை எடுத்து அவனிடம் விளையாடக் கொடுத்தவள் தான் உடைத்து நொறுக்கி வைத்திருந்த பொருட்களை வெறித்துப் பார்த்தாள்.

ஆதியின் நினைவு வந்த கணமே அவள் முகம் இறுகிப் போனது. அவளைப் பொறுத்த வரைக்கும் ஆதி என்பவன் கொடூரன். ஈவு இரக்கமே அற்ற பித்தன்.

அவனை மனதினுள் திட்டியபடியே தன் அறைக்குள் நுழைந்தவள் அங்கே படுத்திருந்த ஆதித்யனைக் கண்டதும் மின்சாரம் தாக்கியதைப் போலானாள்.

அழையாத விருந்தாளியாக பதற்றம் பயம் அனைத்தும் வந்து சேர, “வீல்....” என அலறினாள் மாது.

சட்டென படுக்கையில் இருந்து பாய்ந்து எழுந்தவன் அலறியவளின் செம் மாதுளை இதழ்களின் மீது தன் விரலைப் பதித்து “உஷ்ஷ்....” என்றான்.

“ஹாய் ட்ராமா குயின். டிட் யு மிஸ் மீ....?” என்றவனின் பார்வை அவளை ஆராய்ந்து முடிக்க, அவனுடைய உதடுகளோ அவளைப் பார்த்து கோணலாக

புன்னகைத்தவாறு “நாட் பேட்” என்றன.

தன் இதழ்களின் மீதிருந்த அவனுடைய கரத்தை தட்டி விட்டவள் “நீ.... நீங்க எப்படி இங்க வந்தீங்க....? ப்ளீஸ் இங்க இருந்து போயிருங்க.” என அஞ்சியவாறே கூறினாள்.

“நான் போறது இருக்கட்டும். நீ நைட் எங்க போன....?” என்றவனின் குரல் சாதாரணமாக தொடங்கி கர்ஜனையில் முடிந்தது.

அவனது கர்ஜனையில் பயந்து நடுங்கிப் போய் நின்றவளின் கன்னங்களை பற்றியவன் “இந்த ரெண்டு வாரமா நான் நானா இல்லை. என்னால எந்த பொண்ணையும் தொட முடியல. தொட பிடிக்கல. நீ என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ற.

அதான் நானே உன்னைத் தேடி வந்துட்டேன்.” என்றான்.

“எனக்கு தேவையானது உன்கிட்ட இருக்கு.” என்றவனின் கரம் அவளது அந்தரங்கம் தீண்ட,

அவளோ அவனது பிடியில் இருந்து விடுபட்டு சுவற்றோடு ஒன்றியவள் தன் முகத்தை மூடிக் கொண்டு கதறத் தொடங்கினாள்.

“ப்ச் இப்போ எதுக்கு அழுற....?”

“சார்.... நீங்க நினைக்கிற மாதிரி பொண்ணு நான் கிடையாது. தாலி இல்லாம ஒன்னா இருக்கிறது ரொம்ப தப்பு. நான் கற்பை உயிரா நினைக்கிற பொண்ணு சார். எ.... என்னோட குழந்தையோட உயிரைக் காப்பாத்த எட்டு லட்சம் தேவை பட்டிச்சு.

நான் என்னோட சின்ன வீட்டை வித்து கூட பணம் போதலை. தெருத் தெருவா ஒவ்வொருத்தர் கிட்டேயும் உதவி கேட்டு அலைஞ்சு கடைசில முடியாமதான் உங்ககிட்ட வந்தேன் சார்.

எப்போ நான் உங்ககிட்ட வந்தேனோ அந்த நிமிஷமே நான் செத்துட்டேன். நான் தப்பு பண்ணது உண்மைதான். ஆனா உடல் சுகத்துக்காகவோ வேற ஆடம்பர தேவைக்காகவோ பண்ணலை. என் பையன் இப்போ நல்லா இருக்கான் சார். எனக்கு அதுவே போதும். என்னால திருப்பி அந்த மாதிரிலாம் வர முடியாது. உங்களுக்கு தேவை செக்ஸ்.... அதுக்கு எ.... எத்தனையோ பொண்ணுங்க இருக்காங்க. என்னை

இதோட விட்ருங்க சார். ப்ளீஸ்....” என கரம் கூப்பி கெஞ்சினாள் அவள்.

“பேசி முடிச்சிட்டியா ட்ராமா குயின்....?” என்றவன் “கம் ஐ நீட் யு....” என அழைத்தான்.

தான் அவ்வளவு கூறியும் தன்னை படுக்கைக்கு அழைக்கும் ராட்சசனை கொல்ல வேண்டுமென்ற வெறியே தோன்றி விட்டது அவளுக்கு.

சட்டென தன் அலைபேசியை எடுத்தவள் போலீஸிற்கு அழைத்து “ஹலோ போலீஸ் ஸ்டேஷனா....?” எனக் கேட்க, அவளது செயலைப் பார்த்தவன் மெச்சுதலாக புருவம் உயர்த்தினான் அவன்.

அவள் பேசத் தொடங்கவும் ஆதி அவளுடைய மகனை தன் கையில் தூக்கி மேலே உயரத் தூக்கிப் போட்டு பிடித்து விளையாடத் தொடங்கவும் சரியாக இருந்தது.

அவனது மறைமுக மிரட்டலில் விதிர்விதிர்க்க ஃபோனை கட் பண்ணியவள் சட்டென குனிந்து அவன் கால்களை பற்றிக் கொண்டாள்.

“அவனை ஒன்னும் பண்ணிராதீங்க சார். ப்ளீஸ்.... அவனை என்கிட்ட கொடுத்திருங்க....” என கதறினாள் அவள்.

அவனோ தன் காலை உதறியவன் தன் கரத்தில் இருந்த யஷ்விந்த்தைப் பார்த்து புன்னகைத்தான்.

“இவனோட உசிரு உனக்கு ரொம்ப முக்கியம்ல....?” என ஏளனமாக கேட்டவாறு அவளைப் பார்த்தவன் “இவனுக்காகத்தானே நீ என்கிட்ட வந்த...? சோ இவனுக்கு ஏதாச்சும் நடந்தா நீ மறுபடியும் எங்கிட்ட வருவல்ல....?” என்றவன் சட்டென தான் கொண்டு வந்திருந்த துப்பாக்கியை எடுத்து குழந்தையின் தலையில் பதிக்க, அந்தப் பிஞ்சுப் பாலகனோ தனக்கு வந்த ஆபத்தை பற்றி அறியாது கிளுக்கி நகைக்கத் தொடங்கினான்.

தன் மகனின் தலையில் துப்பாக்கியைப் பார்த்த கணம் “ஆதீஈஈஈஈ....” என அலறியவளுக்கு மூச்சு நின்றே போனது. கண்கள்

இருட்டிக் கொண்டு வர, கால்களோ பலமின்றி கிடுகிடுவென நடுங்கின.

அதிர்ச்சியில் சுவாசம் தடைப்பட்டு விட, மூச்செடுக்க முடியாது திணறியவள் தொப்பென தரையில் விழுந்து துடிக்கத் தொடங்கினாள்.

சட்டென குழந்தையை படுக்கையில் விட்டவன் தரையில் துடித்துக் கொண்டிருந்தவளினை தூக்கி இறுக அணைத்துக் கொண்டான்.

அவள் இந்த அளவுக்கு அஞ்சி நடுங்குவாள் என அவன் சற்றும் எதிர்பார்க்கவே இல்லை.

“ஹேய் மை டியர் குயின் வாட் இஸ் திஸ்....? ரிலாக்ஸ் ஆகுடி. ம்ப்ச்

ஒன்னும் ஆகலை. உன் பையன் நல்லாதான் இருக்கான். ஹேய் மூச்சு விடுடி.... ப்ரீத் எடு. ஓ காட் ஷிட்.... கமான் குயின் மூச்சு விடுடி...” எனக் கூற அவளோ அதிர்ச்சியில் தன் சுய நினைவை இழந்து கொண்டிருந்தாள்.

“டாமிட்.... மூச்சு வ்விடு. ஏய் செத்துகித்து போயிராதடி இடியட்.” என்றவனின் குரலோ நடுங்கியது.

அவள் பேச்சு மூச்சின்றி கிடப்பதைக் கண்டு அவனுள்ளம் துடிக்க, சட்டென அவளது இதழ்களில் தன் அதரங்களைப் பொருந்திக் கொண்டவன் அவளுக்கு செயற்கை சுவாசம் வழங்கத் தொடங்கினான்.

அவனது செயலில் நின்ற சுவாசம் அவளுக்கு சீரடையத் தொடங்கியது. பெரிய பெரிய

மூச்சுக்களாக எடுத்தவள் அவனை மிரண்டு போய் பார்த்தாள்.

அடுத்த நொடி பளாரென அவளது பட்டுக் கன்னத்தில் அறைந்தான் ஆதி.

அவனது இரும்பை ஒத்த கரங்களின் மொத்த பலமும் அவளுடைய கன்னத்தில் இறங்க, நிலை குலைந்து மீண்டும் தரையில் விழுந்தாள் மாது.

“முட்டாள். முட்டாள்.... முட்டாள்....” என அவளைப் பார்த்து உரத்த குரலில் கத்தினான் ஆதி.

அவளோ தீயாய் எரிந்த கன்னத்தோடு எழுந்து தன் மகனை தூக்கிக் கொண்டவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அவள் உடல் அழுகையில் விம்மி அடங்கியது. அவள் கரங்கள் நடுக்கத்தோடு தன் மகனின் உடலை வருடின.

அவனோ அவளுடைய மகனை பிடுங்கி படுக்கையில் விட்டவன் “மெண்டல் இன்னும் கொஞ்சம்னா பேச்சு மூச்சில்லாம செத்துப் போயிருப்ப....” என கர்ஜித்தான்.

“இப்படி நரக வாழ்க்கை வாழுறதுக்கு செத்துறலாம் சார்....” என அழுதாள் அவள்.

“உனக்கு சாகணும்னா தாராளமா செத்துப் போ.... பட் இப்போ இல்ல. உன் மேல எனக்கு இருக்கிற மோகம் எப்போ அடங்குதோ அப்போ செத்துப்போ. ஐ டோன்ட் கெயார். ஆனா அது வரைக்கும் நீ

என்கூடதான் இருந்தாகணும்.” என்க, மீண்டும் அவளது உடல் அச்சமுற்று நடுங்கத் தொடங்கியது.

“ட்ராமா குயின் இன்னும் முப்பது நாள் நீ என்கூடதான் இருக்கணும். இந்த முப்பது நாள்ல எனக்கு உன் மேல இருக்கிற மோகம் அடங்கிரும்னு நினைக்கிறேன்..”

“முப்பது நாளா....?” என திகைத்தவளின் காதோரம் குனிந்தவன்,

“ஆசை அறுபது நாள்...

மோகம் முப்பது நாள்....” எனக் கூறி கண் சிமிட்டினான் அந்த அசுரன்.

அவளோ அதிர்ந்து அவனை வெறித்துப் பார்க்க, அவனோ குழந்தையை தன் ஒரு கரத்தால்

தூக்கியவன் மற்றைய கரத்தால் தன்மயாவின் கரத்தைப் பற்றி தரதரவென இழுத்துக் கொண்டு செல்லத் தொடங்கினான்.

அவன் வாசலுக்கு வந்த நொடியே ஒரு கார் அவன் முன்பு வந்து நிற்க, தன் பார்வையால் அந்தக் காரினுள் இருந்த ராமுவை கீழே இறங்கப் பணித்தவன் அவளைக் காரினுள் தள்ளி குழந்தையை தன் மடியில் வைத்துக் கொண்டு தன் இல்லம் நோக்கி புறப்படத் தொடங்கினான்.

“ஹேய் ட்ராமா குயின் லெட்ஸ் ஸ்டார்ட் அவர் ஹனி மூன்..” என்றவன் அவள் கன்னத்தில் முத்தம் பதித்து விட்டு “இது தேன் நிலவு

இல்ல.... மோக நிலவு...” என சிரித்தான்.

அருவருப்பில் அங்கம் கூச காரின் இருக்கையோடு ஒன்றிக் கொண்டாள் பெண் மான்.

அடுத்து அவள் வாழ்வில் நடந்தவை எல்லாம் அவள் தன் கனவில் கூட எண்ணிப் பாராத விடயங்களே.

மோகம் – 10

ஆகாய மேகங்களை மோகத்தோடு தழுவிய வண்ணம் கிழக்கு வானில் உதித்தான் ஆதவன். அவனது ஆயிரமாயிரம் பொற் கரங்களும் கூடி பூமிதனில் வீழ்ந்து பரவசத்தை ஏற்படுத்தும் அழகான காலைப் பொழுது அது.

அந்த விடியலின் அழகில் மனம் திளைக்காது தனக்குள் மருகுவதும் வீதியை இலக்கின்றி வெறிப்பதும் வெளிப்படத் துடித்த அழுகையை அடக்கப் போராடுவதுமென தன்மயாவின் பொழுதுகள் காரிலேயே கழிந்து கொண்டிருந்தன.

ஆதியோ காரை வெகு லாவகமாக ட்ரைவ் செய்தவன் தன் காரில் பாடலை சத்தமாக ஒலிக்க விட்டான்.

“தீப்பிடிக்க தீப்பிடிக்க முத்தம் கொடுடி... என் திமிரெல்லாம் அடங்காது கொஞ்சம் கடி நீ....” என பாடலோடு இணைந்து அவனும் பாட, தன் காதுகளை தன் கரங்கள் கொண்டு பொத்திக் கொண்டாள் தன்மயா.

அவளைத் திரும்பிப் பார்த்தவன் அவளது தோளின் மீது தன் கரத்தைப் போட்டு தனக்கருகே கொண்டு வந்தான்.

அவள் அதிர்ந்து விழிக்க, அவளது கரங்களை வலுக்கட்டாயமாக விலக்கி அவளது காதருகே நெருங்கி மீதிப் பாடலைப் பாடத் தொடங்கினான்.

“அலறுது அலறுது இருதயம்....
அதிருது அதிருது இளமனம்....
கதறுது கதறுது இளமையும்....
உன் மோகம் கூப்பிடுதே....” என அவள் காதினில் பாட அவனைத் தள்ளி விட்டவள் அவன் மடியில் இருந்த தன் மகனை தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டாள்.

விழிகள் மேலும் உவர் நீரை சுரந்து தள்ள, அதனைத் துடைக்கக் கூடத் தோன்றாது விசும்பத் தொடங்கியவளைப் பாராத்தவன் பாடலை நிறுத்தினான்.

அவனுடைய தடித்த உதடுகளோ “ரைட்டூ ட்ராமா குயின் அவளோட ட்ராமாவ மறுபடியும் ஆரம்பிச்சுட்டா.... இனி காருக்குள்ள நைல் நதியே ஓடுமே....” என முணுமுணுத்தவன் அவள் மடியில் இருந்த சிறுவனை முறைத்துப் பார்த்தான்.

‘இவன் அவங்க அப்பாவை மாதிரி போல, இவ்ளோ நேரத்துக்கு அழவே இல்லையே.’ என எண்ணியவன் தன்னுடைய வீட்டை ஒரு மணி நேரத்தில் வந்தடைந்தான்.

தன்மயாவின் உணர்வுகளோ கொஞ்சம் கொஞ்சமாக இறந்து கொண்டிருந்தது.

உணர்வு மரத்த நிலையில் கார்க் கதவோடு சரிந்து கிடந்தவளின் நினைவில் வந்து சிரித்தான் கவின்.

“ஐ லவ் யு மயா பேபி. எனக்கு நீ மட்டும் போதும்..” அவனுடைய வார்த்தைகள் அவளது செவிகளில் மீள ஒலித்தன.

‘என்னோட வாழ்க்கைல நீ முதலே வந்திருக்கலாம் கவின். உன்னோட காதல அனுபவிக்க முடியாத பாவியா போய்ட்டேன். எனக்கும் உன்னை பிடிச்சிருக்கு.... ஆனா இந்த உலகமும் இந்த அரக்கனும் என்னோட மனசாட்சியும் நம்மள சந்தோஷமா வாழ

விடமாட்டாங்க..' என தனக்குள் எண்ணி மருகினாள்.

"ஏய் ட்ராமா குயின் திஸ் இஸ் மை வேர்ல்ட்.... உள்ளே வா." என்றவாறு காரை விட்டு இறங்கினான் ஆதி.

அவளோ அவனுடைய வீட்டை நிமிர்ந்து பார்த்தவள் பலியாடு போல இறங்கினாள்.

அவளுக்கோ அந்த இடம் நரக வாசல் போல இருந்தது. தன்னை இழுத்துச் சென்று பலிகடாவாக மாற்றப் போகிறார்கள் போல என எண்ணிக் கொண்டவள் அப்படியே அசையாது நின்றாள்.

"நவ் வாட் குயின்? கம் ஆன்...." என எரிச்சலுடன் கூறினான் ஆதி.

அவள் ஏதோ ரோபோ போல ஒவ்வொரு இடத்திலும் அசையாது நிற்க, அவனுக்கோ எரிச்சலே மேலிட்டது.

தன்னை மிரட்டும் அந்த அரக்கனின் நீல விழிகளை பார்த்தவள் “நான் உங்ககூட வரலைன்னா என்ன பண்ணுவீங்க....?” எனக் கேட்டாள்.

“என் மூட் நல்லா இருந்தா உன்னை தூக்கிட்டு போவேன். என் மூட் நல்லா இல்லைன்னா உன்னை நாய் மாதிரி இழுத்துட்டு போவேன்.” என அலட்சியமாக பதில் அளித்தான் ஆதித்யன்.

“உங்களுக்கே தெரியாம நான் இங்க இருந்து தப்பிச்சு போனா....?”

“நீ இந்த உலகத்துல எந்த மூலைக்கு போனாலும் தேடி வந்து உன்னை ம்ஹூம் உன் குழந்தையை கொல்லுவேன்.” என்றதும் அவளது உடலின் அத்தனை பாகங்களும் ஆட்டம் கண்டது.

“என்ன குயின் என்னால முடியாதுன்னு நினைக்கிறியா....? இந்த ஆதி நினைச்சா எதுவும் செய்ய முடியும்.... ஜஸ்ட் தர்ட்டி டேஸ் என்கூட இருந்தீன்னா நானே உன்னை அனுப்பி வெச்சிருவேன்.

என்கிட்ட இருந்து தப்பிச்சு போக நினைச்சீன்னா அது உன் குழந்தையை நீயே கொல்லுறதுக்கு சமம்.”

அவனுடைய வார்த்தைகள் அவளை நடுங்கச் செய்தன. தன்

மகனை எதுவும் செய்து விடுவானோ என அஞ்சி அவனை இறுக அணைத்துக் கொண்டாள் தன்மயா.

தாயின் கரங்களில் ஒய்யாரமாக அமர்ந்திருந்தவன் அவளது அணைப்பு திடீரென இறுகவும் அவளுடைய கரங்களில் இருந்து திமிறினான்.

துள்ளி விடுபட்டு கீழே இறங்கிய யஷ்விந்தோ தோட்டத்துப் பக்கம் ஓடிச் செல்ல, அவனை சட்டென தன் கரங்களில் தூக்கிக் கொண்ட ஆதியோ "நாம துப்பாக்கி வெச்சு விளையாடுவோமா....?" என தன் துப்பாக்கியை வெளியே எடுக்க,

நெஞ்சம் பதைபதைத்துப் போனது அவளுக்கு. தடுமாறியபடி ஓடி வந்தவள் தன் மகனை அவனிடம் இருந்து பறித்துக் கொண்டாள்.

“நான் இன்னும் முப்பது நாள் இங்கேயே இருக்கேன். என் குழந்தையை மட்டும் எதுவும் பண்ணிராத ப்ளீஸ்.”

“நாட் பேட்....” என சிரித்தவன் அவளை அழைத்துக் கொண்டு நேரே தன் அறைக்குச் சென்றான்.

அதே நேரம் அங்கே வந்த ராமுவோ தன்மயாவைக் கண்டு அதிர்ந்து போனான்.

“ஆதி ஏன் இந்த பொண்ணை இங்க கூட்டி வந்த....?” என்ற கேள்வியில் ராமுவை நெருங்கியவன் “முப்பது நாளைக்கு எனக்கு இவதான் பொண்டாட்டி. உனக்கு சின்னம்மா.

ஹான் அப்புறம் என்கிட்ட கேள்வி கேட்குற வேலைலாம்

வெச்சுக்காத ராமு. எனக்கு பொறுமை ரொம்ப கம்மி. அடுத்த தடவை இப்படி பொறுமையா சொல்லிகிட்டு இருக்க மாட்டேன்." என எச்சரித்தவன் தலை குனிந்து நின்றிருந்த தன்மயாவை தன் அறைக்குள் அழைத்துச் சென்றான்.

அந்த அறைக்குள் நுழைந்ததும் மதுபான வாடை அவள் நாசியைத் தாக்க, சட்டென தன் மூக்கைப் பொத்திக் கொண்டு அறைக்கு வெளியே வந்து நின்று கொண்டாள்.

"ஊஃப்ப் மறுபடியும் ட்ராமா பண்ண ஆரம்பிச்சுட்டா. என்னைக் கோபப்படுத்தாம உள்ள வாடி...." என்றவனின் கர்ஜனையில் கண்கள் கலங்க மீண்டும் அந்த அறைக்குள் நுழைந்து கொண்டவள் "என்....

என்னால இத்த ரூம்ல இருக்க முடியாது.

யஷ்விந்துக்கு இந்த ஸ்மெல் எல்லாம் ஒத்துக்காது ப்ளீஸ்.” என்க,

அவளை வேறு ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றவன் “நீ இந்த ரூம்ல தங்கிக்கோ. பட் நைட்ல நீ என் ரூமுக்கு வத்தாகணும்....” என்றான்.

“சரி.”

அவனோடு போராட சற்றும் மனதில் பலமின்றிப் போக, அவன் கூறுவதற்கெல்லாம் தலை அசைத்துக் கொண்டிருந்தாள் மாது.

அவள் மாத்திரம் என்றால் ஆத்துலையோ குளத்திலையோ விழுந்து தன் வாழ்க்கையை

முடித்துக் கொண்டு நிம்மதியாக போய்ச் சேர்ந்திருப்பாள்.

ஆனால் அவள் ஒன்றும் தனி ஆள் அல்லவே. அவளை நம்பி அவளின் உயிரான யஷ்விந்த் குட்டி இருக்கிறானே.. நிம்மதியாக வாழவும் முடியாது நிம்மதியாக சாகவும் முடியாது இருதலைக் கொள்ளி எறும்பு போல தவித்துப் போனாள் அவள்.

யஷ்விந்த் குட்டியோ மெல்ல மெல்ல அந்த அறையில் நடந்து அங்கிருந்த பொருட்களை எடுத்து விளையாடத் தொடங்கினான்.

சிந்தனைகளில் சூழப்பட்டிருந்த தன்மயாவின் இடையை சுற்றி வளைத்தன இரு வலிமையான கரங்கள்.

சட்டென தூக்கி வாரிப்போட திரும்பியவள் ஆதியின் மார்பில் மோதி நின்றாள்.

அவளை அப்படியே சுவற்றோடு சாய்த்து நிறுத்தியவனின் நீல விழிகள் அவளுடைய காந்த விழிகளை ஆழ்ந்து நோக்கின.

“உன்னோட கண்ணு என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுதுடி. ஒரு நிமிஷத்துல எத்தனை எக்ஸ்பிரஷன்ஸ் வாவ்....” என சிலாகித்தவன் அவளது விழிகளில் அழுத்தமாக முத்தம் இட்டான்.

பிடிக்காத ஒருவனின் இதழ்கள் அவளுடைய விழிகளை தீண்டியதும் முகம் சுளித்து அருவருப்போடு விலகிக் கொண்டாள் தன்மயா.

விலகினால் விட்டுவிடும் ரகமா அவன்.? மீண்டும் அவளைப் பிடித்து தன் கை வளைவிற்குள் கொண்டு வந்தவன் அதே விழியில் மறுபடியும் முத்தம் பதித்தான்.

அவனை கன்னம் கன்னமாக அறைந்து தள்ள வேண்டுமென துடித்த கரங்களை கடினப்பட்டு அடக்கிக் கொண்டாள் தன்மயா.

அவனது இதழ்களோ அவளது விழியில் இருந்து இறங்கி கன்னத்தில் பதிய, அதற்கு மேல் தாங்க முடியாது அவனைத் தள்ளி விலக்கியவள் “யஷ்விந்த்தை தூங்க வைக்கணும்....” என்றாள்.

“லேட்டா தூங்கட்டும்....” என்றவன் அவளின் பின்னே வந்து

முதுகில் படர்ந்திருந்த கூந்தலை ஒதுக்கி விட்டான்.

“உன்னோட இருக்கப் போற இந்த முப்பது நாளும் ரொம்ப சுவாரஸ்யமா இருக்கும்டி....” என்றவன் அவளது கழுத்து வளைவில் முத்தம் பதிக்க, பொல பொலவென கண்ணீர் வடியத் தொடங்கியது அவளுக்கு.

அவளுடைய அழுகையை அலட்சியப் படுத்தியவன் அவள் அணிந்திருந்த புடவையின் முந்தானையை விலக்க, அவளது உடலோ இறுகத் தொடங்கியது.

“ஹேய் ரிலாக்ஸ் ட்ராமா குயின். ரிலாக்ஸா இரு.... கூல்.” என்றவன் அவளுடைய இதர

ஆடைகளை களைய முனைய பதறி விலகினாள் அவள்.

குழந்தைக்கு முன் அவனுடைய அத்து மீறல் அவளை வெறுக்கச் செய்தது.

“என்னை விட்ருங்க ப்ளீஸ். என்னால இதை சகிச்சுக்க முடியலை.” என நலிந்த குரலில் கூறினாள் அவள்.

“அன்னைக்கு அஞ்சு லட்சத்துக்காக சகிச்சுகிட்டு இருந்தவ தானே நீ....? இப்போ மட்டும் முடியலையாடி....?” என எரிந்து விழுந்தான் ஆதி.

அவனுடைய தீப்பொறி போன்ற வார்த்தைகள் அவளுடைய மனதை காயப்படுத்த, அவளது உடலோ

அவனது வார்த்தைகளில் கூசிப் போனது.

அதற்கு மேல் பொறுக்க முடியாது கதறி அழத் தொடங்கினாள் பேதை.

சற்று நேரத்தில் அருகே விழுந்து உடைந்த மதுபான போத்தலில் திகைத்து நிமிர்ந்தாள் தன்மயா.

“ஓ மை காட். ச்சே குமட்டுது. எப்படித்தான் ஆதி இதைக் குடிக்கிறானோ.” என்றவாறு நெளிந்து கொண்டிருந்தவனை குழம்பிப் போய் பார்த்தாள் தன்மயா.

அவனோ அவள் தரையில் கிடப்பதைக் காணாது தன் கண்களில் இருந்த நீல நிற லென்ஸ்ஸை

கழற்றியவன் தான் அணிந்திருந்த டீஷர்ட்டை கழற்றி எறிந்தான்.

"ஓ காட் ஷிட்.." என்றவாறு தன் தலை அலங்காரத்தை கலைத்து விட்டு திரும்பியவன் அங்கே ஸ்தம்பித்த வண்ணம் இருந்த தன்மயாவைக் கண்டு அதிர்ந்தான்.

"ஹேய் மயா பேபி. நீ இங்கே என்ன பண்ற.? அச்சோ ஏன் அழுற? என்னாச்சு மயா.?" என கேட்டவனுடைய குரலின் மென்மை அவளின் மூளையை செயல் இழக்கச் செய்தது.

இத்தனை நேரமும் அரக்கன் ஆதியாக பேசிக் கொண்டிருந்தவன் திடீரென அவள் விரும்பும் கவினாக மாறி அன்பு காட்டினால் அவளும் என்னதான் செய்வாள்....?

வேறென்ன சுற்றம் மறந்து சுயம் மறந்து மயக்கத்தின் வசத்தில் மாட்டிக் கொண்டாள் மாது.

மோகம் – 11

தன்மயா தன் கண் முன்பே மூச்சுப் பேச்சின்றி மயங்கி விழவும் பதறித்தான் போனான் அவள் மீது மெய்க்காதல் கொண்ட கவின்.

ஐந்தடி ரோஜா ஒன்று நீரின்றி வாடி தரையில் கிடப்பதைப் போல தன் காதல் தேவதை மயங்கிக் கிடப்பதைக் கண்டு உள்ளம் துடிதுடித்தவனாக அவளைச் சட்டென தன் கரங்களில் ஏந்திக் கொண்டான்.

அவளைத் தூக்கிச் சென்று தன்னுடைய அறையின் படுக்கையில் கிடத்தியவன் மீண்டும் யஷ்விந்த்

குட்டியையும் தூக்கி வந்து தன்னுடைய அறையில் விட்டான்.

தண்ணீரை எடுத்து அவள் முகம் மீது தெளித்து அவளுடைய மயக்கத்தை தெளிவிக்க முயல, சற்று நேரத்தில் அவளுடைய விழிகளை மெல்ல அசைத்துக் கொண்டு விழி திறந்து பார்த்தவளது வதனம் பேயறைந்தாற் போல மாறிப் போனது.

அவளது அதிர்ந்த முகத்தைக் கண்டு அவனது மனமும் சோர்ந்து போக, படுக்கையில் அவளின் அருகே அமர்ந்தவன் "என்னாச்சு மயா பேபி....?" எனக் கேட்டவாறு அவளது கூந்தலை வருடி விட்டான்.

அவனது கரம் பட்ட நொடி அச்சத்தில் படுக்கைக்குள்ளேயே புதைந்து போவதைப் போல

படுக்கையோடு ஒன்றியவள் அடுத்த நொடியே பேயைப் பார்த்ததைப் போல உரத்த குரலில் வீறிடத் தொடங்கினாள்.

“ஹெல்ப்..... ஹெ.... ஹெல்ப் மீஈஈஈ.... ப்ளீஸ் ஹெல்ப் மீ....” என கவினைப் பார்த்து அரண்டவாறு அவள் உதவிக்கு அழைக்க, கவினின் இதயம் உடைந்தது.

“ஹேய் என்னடி....? இங்க உனக்கு எந்த ஆபத்தும் இல்ல மயா. ட்ரஸ்ட் மீ. எந்த ஆபத்து வத்தாலும் என்னைத் தாண்டித்தான் உன்னைத் தொட முடியும்.” எனக் கூறியவனை ஏதோ கொலைகாரனைப் பார்ப்பதைப் போல அரண்டு போய் பார்த்தவள் கட்டிலில் இருந்து இறங்கி அந்த

அறையின் மூலையில் சுவற்றோடு ஒன்றிக் கொண்டாள்.

அவள் தன்னைப் பார்த்துத்தான் பயப்படுகிறாள் என்பதை உணர்ந்து கொண்டவனுக்கு கொதிக்கும் எண்ணெய்யை தன் உடலில் ஊற்றிக் கொண்டதைப் போல இருந்தது.

“மயா ப்ளீஸ் டோன்ட் டூ திஸ் டு மீ....” என உடைந்த குரலில் கூறியவன் அவளது அச்சம் கண்டு அவள் அருகே செல்லாமல் அவளைப் பார்த்த வண்ணம் தரையிலேயே அமர்ந்து கொண்டான்.

அவளது நிலை கண்டு அவனுடைய கண்களும் கலங்கிப் போயின.

“மயா....”

“.....”

“மயா பேபி ப்ளீஸ் அழாதடி....”

“.....”

“ப்ளீஸ் ஸ்டாப் இட் மயா. தயவு செஞ்சு அழாத. என்னால நீ அழுறதை பார்க்க முடியலைடி. இட்ஸ் ஹர்ட்டிங் மீ. நீ எப்படி இங்க வந்த? என்னைத் தேடித்தான் இங்க வந்தியா....?”

அவனது வார்த்தைகள் அவளை சென்றடைந்ததும் “நீ.... நீ யாரு....?” எனக் கேட்டாள் தன்மயா.

அவளது கேள்வியில் கவினின் மனமோ இன்னும் காயப்பட்டுப் போனது.

“நான் உன்னோட கவின்டி....”

“பொய்.... பொய்ய்.... நீ சொன்னது செஞ்சது எல்லாமே பொய்.. இத்தனை

நாளும் என்னை டார்ச்சர் பண்ணிட்டு கவின்னு சொல்லி என்னை ஏமாத்திட்டல்ல. சே உன்னைப் போய் நம்பினேனே....” என்றவள் முகத்தை மூடிக் கொண்டு அழுதாள்.

அதற்கு மேல் அவள் கதறுவதை தள்ளி நின்று பார்க்க முடியாது தவித்தவன் அடுத்த நொடியே அவளை நெருங்கி இறுக அணைத்துக் கொண்டான்.

“வ்விடு.... வ்விடு ப்ளீஸ் என்னை விட்ரு....” என தன் கரங்களுக்குள் திமிறி படபடத்தவளை விட்டு விலகியவன் “நீ பண்றது பேசுறது எதுவுமே எனக்கு புரியலைடி.” என்றான்.

அதே நேரம் யஷ்விந்த் குட்டியோ அங்கிருந்த மேஜையின்

காலில் முட்டிக் கொண்டு அழத் தொடங்க, மற்றவை யாவும் அவளுக்கு மறந்தே போயின.

“அச்சோ....” என பதறியவாறு சென்று தன் மகனைத் தூக்கியவள் அடிபட்ட அவனுடைய நெற்றியைப் பார்த்து அதிர்ந்து போனாள்.

அவனை படுக்கையில் கிடத்தி அவன் தலையை தூக்கி தன் மடியில் வைத்தவள் அவனது நெற்றியை அழுகையோடு தேய்த்து விடத் தொடங்கினாள்.

“அம்மா சொல்றதை கேட்க மாட்டியா கண்ணா.? பார் எப்படி அடிபட்டிருக்குன்னு.” என மகனைக் கவலையோடு கடிந்து கொண்டவள் நெற்றி வீங்கி விடாது சற்றே

அழுத்தமாக அடிபட்ட இடத்தில் தேய்த்தாள்.

“ம்மாஆ....” என சிணுங்கி அவளின் மடியில் முகம் புதைத்த தன் மகனை குனிந்து முத்தமிட,

“அம்மாஆஆ நானும் உங்க மடியில படுத்துக்கவா....?” என்ற குரல் அவளை அதிர வைத்தது.

“கவின்....????” என அதட்டினாள் தன்மயா. அவளுக்கோ அவனது நடிப்பைக் கண்டு எரிச்சலாக இருந்தது.

“நோ ம்மா. என்னோட பேரு கவின் இல்ல. சித்தார்த். எல்லாரும் என்னை சித்தூன்னு கூப்பிடுவாங்க. எனக்கு அம்மான்னா ரொம்ப பிடிக்கும். நானும் உங்களோட

மடியில படுத்துக்கவா....? உங்க பாப்பாக்கு முத்தம் கொடுத்த மாதிரி எனக்கும் முத்தம் கொடுப்பீங்களா....?" என்ற ஏக்கமான குரலில் சித்து பேசப் பேச தன் தலையை இறுகப் பற்றிக் கொண்டாள் தன்மயா.

"போதும் கவின். இத்தோட எல்லாத்தையும் நிறுத்திக்கோ. தயவு செஞ்சு இப்படி நடிக்கிறதை முதல்ல நிப்பாட்டு. சே...." என முகத்தில் அடித்தாற் போல பதில் கூறியவள் தன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"ஏன்மா என்னை பிடிக்கலையா....? நானும் சின்னப் பையன் தானேம்மா. என்னை மட்டும் ஏன் யாருக்குமே பிடிக்கலை?." எனக் கேட்டவன் ஏங்கி ஏங்கி அழத் தொடங்கினான்.

தலைக்கு மேல் வளர்ந்த ஆண்மகன் விக்கி விக்கி அழுவதைக் கண்டு அவளுக்கு அதிர்ச்சியே மிஞ்சியது.

‘நான் இவனுக்கு ஏதாவது அநியாயம் பண்ணிட்டேனா....? அதனாலதான் என்னை இப்படி இங்க வெச்சு கொடுமை படுத்தி பழிவாங்க ட்ரை பண்றானா....?

ஆனா நான்தான் யாருக்கும் எதுவுமே பண்ணலையே.... என்னை பைத்தியமா மாத்த பார்க்கிறானோ.....? இல்லைன்னா இவன் உண்மைலயே ஒரு சைக்கோவா....? இல்லை இதெல்லாம் ஒரு கெட்ட கனவா....?’ என எண்ணி எண்ணி அவளுக்கு மொத்தமும் சுத்தமாய் குழம்பிப் போனது.

கேவிக் கேவி அழுது கொண்டிருந்தவன் ஒரு கட்டத்தில் தரையில் விழுந்து வலிப்பு வந்தது போல வெட்டித் துடிக்க, அவளுடைய விழிகளோ அவன் மீதே நிலை குத்தின.

'ஆதி..., கவின்..., சித்தூ இவர்களில் யார் நிஜம்....? இந்த வலிப்பும் நடிப்பாக இருக்குமோ....?' என எண்ணியவளின் உள்ளம் பிசையத் தொடங்கியது.

ஒரு கட்டத்தில் அவனுடைய தலை நிலத்தில் அடிபட, அவனுடைய வாயில் இருந்து வெளியேறியது வெண்நுரை.

"ஓ மை காட் ஹெல்ப்...." என அலறியவள் தன் மடியில் தூங்கிப் போன மகனை படுக்கையில் கிடத்தி

விட்டு கீழே தான் வரும் போது பார்த்த ராமுவை தேடி ஓடினாள்.

அவரோ ஹாலில் சோபாவில் இருப்பதைப் பார்த்ததும் அவரின் முன் மூச்சிரைக்க ஓடி வந்து நின்றவள் "ஆ.... ஆதி இல்ல.... இல்ல க.... கவின்..... ஐ... ஐயோ சீக்கிரமாக மேல வாங்களேன் அண்ணா. அவருக்கு வலிப்பு வந்திருச்சு...." என பதறினாள் தன்மயா.

ராமுவோ வலிப்பு என்றதும் திகைத்தவர் மாடிப் படிகளில் பாய்ந்தோடி கவினுடைய அறைக்குள் பதற்றத்தோடு நுழைந்தார்.

அங்கே தரையில் புழுவாக துடித்துக் கொண்டிருந்தவனைப் பார்த்து "சித்தூஊஊ...." என அலறியவர் சட்டென அந்த அறையின்

சாவிக் கொத்தை அவனுடைய கரத்தில் திணித்து அழுத்தம் கொடுக்கத் தொடங்கினார்.

கண்கள் சொருக, வாயில் நுரை பொங்க, அரை மயக்கத்திற்கு போனவனைப் பார்த்து அவளுடைய மனதின் ஓரம் வலித்தது.

சற்று நேரத்தில் அவனுடைய துடிப்பு அடங்கியதும் அவனை எழுப்பி சோபாவில் படுக்க வைத்தவர் அவனுக்கு முகம் துடைத்து விட்டார்.

தன்மயா அப்படியே உறைந்து போய் நின்றாள்.

சற்று நேரத்தில் கண் விழித்த சித்தார்த்தோ "அங்கிள் அம்மா ஏன் என்னைத் திட்டுறாங்க....?" என அழுதவாறு கூறவும் அவளுக்கோ

மனதின் அழுத்தம் ஏகத்துக்கும் ஏறியது.

எத்தனை கம்பீரமான திடகாத்திரமான ஆண்மகன் பத்து வயதுச் சிறுவன் போல ஏங்கி ஏங்கி அழுதது அவளை மேலும் ரணகளப்படுத்தியது.

அவன் துடித்த துடிப்பும் அவனுடைய ஏக்கமும் பொய் அல்லவே.

‘ஆண்டவா இன்னும் என்ன சோதனையெல்லாம் நீ எனக்காக எழுதி வெச்சிருக்க.? என்னால முடியலை.’ என்றவள் ராமுவை நெருங்கினாள்.

“அங்கிள் நான் உங்க கூட கொஞ்சம் பேசணும்.”

“நானும்தான். இங்கே பேச வேணாம்மா. நாம கீழ போகலாம்.” என்றவர் அவளை தன்னோடு அழைத்துச் சென்றார்.

“அங்கிள் இங்க என்னதான் நடக்குது....? இவர் நிஜத்துல யாரு? எ.... என்கிட்ட ஆதியா அறிமுகமானாரு....” என்றவள் சட்டென அழுதே விட்டாள்.

“ரொம்ப முரடனா அரக்கன் மாதிரி இருந்தாரு. என்னை ரொம்ப டார்ச்சர் பண்றாரு அங்கிள். அப்புறம் எங்கிட்ட கவினா அறிமுகமானாரு....” என்றவளுடைய முகம் மலர்ந்தது.

“ஒருத்தரால இந்த அளவுக்கு காதலிக்க முடியுமாங்குற அளவுக்கு என் மேல காதலை கொட்டினாரு.”

என்றவள் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

“இத்தனை நாளும் நான் ஆதி வேற, கவின் வேறன்னுதான் நினைச்சுகிட்டு இருந்தேன் அங்கிள். ரெண்டு பேரோட உருவம் தான் ஒரே மாதிரி இருந்திச்சு ஆனா இவங்களோட ஸ்டைல், நடை , உடை ,பாவனை ஏன் குரல் கூட வேற வேறையாதான் இருந்திச்சு. எனக்கு ஆதியால பிரச்சனை வந்திச்சு, கவின்கிட்ட இருந்து எனக்கு பாதுகாப்பு கிடைச்சுது... ஆனா இன்னைக்கு புதுசா சித்தூன்னு ஒருத்தர்....” என்றவள் தன் பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

தன் தலையை கரங்களால் பற்றிக் கொண்டவள் “என்னால

சத்தியமா முடியலை அங்கிள்.” என்றவள் வந்த அழுகையை அடக்கத் தோற்றுப் போனாள்.

“எனக்கு உன்னோட நிலமை புரியுதுமா. அவனோட உருவம்தான் ஒன்னு. ஆனா அவனுக்குள்ள நிஜமாவே மூணு கேரக்டர் உயிரோட இருக்கும்மா.” என்றார் ராமு.

“வாட்....? அப்போ கவின் மல்டிபிள் பர்சனால்டி டிசோடரால பாதிக்கப் பட்டிருக்காரா.?” என அதிர்ந்து போய் கேட்டாள் மயா.

“ஆமா. மூணு பேரும் மூணு குணம். அதுலையே ரொம்ப டேஞ்சரான கேரக்டர் ஆதி. அவனுக்கு எதிர்த்து பேசினாலே பிடிக்காது. பொண்ணுங்க மேல சுத்தமா நம்பிக்கை இல்ல. அவனுக்கு

ஒருத்தர் மேல கோபம் வந்தா தன் கையால அடிச்சு கொல்லக் கூட தயங்க மாட்டான்.

இந்த அன்பு , பாசம் , காதல் , கல்யாணம், சொந்தம், பந்தம், சென்டிமென்ட் எல்லாத்துக்கும் அவன் வெச்ச ஒரே பேரு குப்பை. ரொம்ப அழுத்தக்காரன். யார்கிட்டேயும் அதிகமா பேச மாட்டான். ஆனா இந்த ரெண்டு வாரமா அவன் ட்ராமா குயின்னு மட்டும் அடிக்கடி சொல்லிகிட்டே இருப்பான்.

அவன் காட்டுல வாழ்ற தனி சிங்கம் மாதிரி. அவனோட விருப்பம் இல்லாம இங்க எதுவுமே அசையாது.” என்றவரின் கண்கள் கூட ஆதியின் மேல் இருந்த பீதியை வெளிப்படுத்தின.

அவளோ தன் வாயின் மீது கரத்தை பதித்தவாறு உறைந்து போய் நின்றாள்.

அவள் இப்படிப் பட்டவர்களை எல்லாம் அந்நியன் படத்திலும் ஆங்கில திரைப்படமான ல்பிலிட் படத்திலும்தான் பார்த்திருக்கிறாள். அந்த படத்தை ரசித்துப் பார்த்த அவளுக்கு தன் வாழ்க்கையில் நிஜமாக வந்த மல்டிபிள் பர்சனால்டியை ரசிக்கத்தான் முடியவில்லை.

வெவ்வேறுபட்ட குணங்கள் ஒரே மனிதனுக்குள்....

வியப்பே மேலிட்டது அவளுக்கு.

“அங்கிள் அப்போ கவின்....? அவனைப் பத்தி சொல்லுங்க ப்ளீஸ்....” என்க,

“நான் வேணும்னா அந்தப் பரதேசி புறம்போக்கைப் பத்தி உன்கிட்ட சொல்லட்டுமா ட்ராமா குயின்....?” என்றவாறு மதுக் குவளையோடும் நீல நிற லென்ஸ் விழிகளோடும் அவர்களை நெருங்கி வந்து கொண்டிருந்தான் ஆதித்யன்.

அந்தக் கம்பீரமான குரலில் உள்ளங்கால் முதல் உச்சி முடி வரை நடுங்கியது அவளுக்கு.

இனி நித்தம் நித்தம் காமத்துடன் நெருங்கும் ஆதியுடன் போரிட வேண்டுமோ....?

இல்லை காதல் காதல் என உயிரை உருகச் செய்யும் கவினுடைய அன்பில் கரைய வேண்டுமோ....?

இல்லை ஈன்றெடுக்காத சித்தார்த் எனும் வளர்ந்த குழந்தைக்கு தாயாக மாற வேண்டுமோ....?

என எண்ணிக் கொண்டிருந்தவளின் காதோரம் "நீ ஒரு ஆணியும் பிடுங்க வ்வேணாம் மேல ரூமுக்கு வா." என்றவாறு கண் சிமிட்டினான் ஆதித்யன்.

அவனை வெறுப்பாக பார்த்தவள் "நீ ஒரு டெவில் ஆதி..." என்றாள்.

"நாட் பேட் ட்ராமா குயின். எனக்கு ஸ்ரீ வினிதாகிட்ட இருந்து ஆடர் வந்துருக்கு. சோ ஆட்டத்தை ஆரம்பிக்கலாமா....? சும்மா அதிர

அதிர சிறப்பான சம்பவம்லாம் இனிதான் பண்ணணும் குயின் கம் ஃபாஸ்ட்....” என்றவன் அசைய மறுத்த அவளை தூக்கி தோளில் போட்டுக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

மோகம் – 12

அவனது வார்த்தைகள் செவியில் விழுந்ததும் அதற்கு எப்படி எதிர்வினையாற்றுவதென தெரியாது விழித்தபடி நின்றவளை தூக்கித் தன் தோளில் போட்டுக் கொண்டு வேகமாக நடக்கத் தொடங்கினான் ஆதி.

அவன் தூக்கி தோளில் போட்ட பின்பும் அலறாமல் பேயடித்தாற் போல இருந்தவளைப் பார்த்து புருவம் உயர்த்தியவன் ‘என்னாச்சு

இவளுக்கு....? இவ்ளோ நேரத்துக்கு அழுது ட்ராமா பண்ண ஆரம்பிச்சிருப்பாளே....' என எண்ணியவன் மீண்டும் அவளது வதனத்தை பார்த்தான்.

அவள் இந்த உலகத்திலேயே இல்லை என்பது புரிய, அவளை அப்படியே தூக்கிக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்து கதவைப் பூட்டி தாழ் இட்டவன் அவளுடைய எலும்புகள் நொறுங்கும் அளவுக்கு அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அந்த அணைப்பில் சுயநினைவை அடைந்தவளுக்கு உடல் வலிக்கத் தொடங்கியது.

அவனுடைய அணைப்பில் இருந்து விலகத் துடித்தவாறு

“வ்விடுங்க ஆதி....” என சினந்தாள் அவள்.

“ஹேய் என்னடி ஏதோ நீதான் எனக்கு பெயர் வெச்ச மாதிரி ஆதி ஆதின்னு உன் இஷ்டத்துக்கு சொல்ற....? என்னோட பேரை சொல்ற அளவுக்கு உனக்கு தைரியம் வந்திருச்சா....?” என்றவனின் முகம் இறுகிப் போனது.

“ஏன் அதுதானே உங்க பேரு....” என்றவளை விலக்கியவன் அவளை தள்ளி நிறுத்தினான்.

அவளது புடவையில் குத்தியிருந்த ஃசேப்டி பின்னை அவளது அறுமதியின்றியே கழற்றி எடுக்க, பதறிப் போனாள் மாது.

அந்த கூரான ஃசேப்டி பின்னை எடுத்து அவளது உள்ளங்கையை விரித்தவன் அவளுடைய ஆள்காட்டி விரலில் அந்த ஊசியை ஏற்றினான்.

“ம்மாஆஆ ஐயோ என்ன பண்றீங்க. வலிக்குது.... வ்விடுங்க....” என துடித்தவளின் மற்றைய விரலை பற்றிக் கொண்டவன் அதிலும் அந்த ஊசியை இறக்க, அவளுக்கோ அழுகை பீறிட்டது.

“என்னை ஏன் இப்படி கொடுமை படுத்துறீங்க. ப்ளீஸ் விட்ருங்க அம்மா வலிக்குதே....” என அழுதவளின் கன்னத்தில் அழுந்த முத்தம் பதித்தவன் அவளது அடுத்த விரலையும் பற்றிக் கொள்ள அவளுக்கோ உடல் நடுங்கத் தொடங்கியது.

“ஐயோ ப்ளீஸ் ஆதி விட்ருங்க.. வலிக்குது ப்ளீஸ்....” என மன்றாட மன்றாட அவளது விரலில் மீண்டும் ஊசி ஏற்றியவன் “கால் மீ சார். எங்கே சார்னு சொல்லு பார்ப்போம்....” என்க,

அப்போதுதான் அவளுக்கு அவன் தன்னைக் காயப்படுத்துவதின் காரணமே புரிந்தது.

“இல்ல சார்... இல்ல சார்... இனி எப்பவுமே உங்க பேரை சொல்ல மாட்டேன். ப்ளீஸ் ப்ளீஸ் ப்ளீஸ் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன் ப்ளீஸ்... போதும் என்னை விட்ருங்க. என்னால வலி தாங்க முடியலை.” எனக் கதறிவளின் மறு கன்னத்திலும் அழுத்தமாக முத்தம் பதித்தான்.

“நாட் பேட்.... சொன்ன உடனேயே புரிஞ்சிக்கிட்டியே.”

என்றவன் அவளை விடுவிக்க, சட்டென அவனை விட்டு தள்ளி நின்று கொண்டாள் அவள்.

சிறு சிறு புள்ளிகளாய் அவன் குத்திய இடத்தில் இரத்தம் துளிர்த்திருக்க, அதையே சற்று நேரம் வெறித்தாள் தன்மயா.

அவள் மருத்துவமனையில் போடும் ஊசிக்கு பயந்தே அந்தப் பக்கம் கூட செல்ல மாட்டாள். அவளது பெற்றோர்கள் இருக்கும் வரை அவளும் செல்லப் பிள்ளையாகவே வளர்ந்து விட்டாள்.

இந்த இருபத்தொரு வயதில் அவள் சந்தித்த அனுபவங்களும் வலிகளும் ஏராளம்.

இந்தச் சிறுவயதில் இதை எல்லாம் அனுபவிக்க வேண்டுமென இறைவன் அவள் தலையில் எழுதி வைத்து விட்டான் போலும்.

சொட்டுச் சொட்டாக துளிர்த்த இரத்தத்தை பார்த்து அச்சம் பிறந்தது அவளுக்கு.

அந்த அறையினுள் இருந்த பாத்ரூமை நோக்கி சென்றவள் தன் கையைக் கழுவிக் கொண்டாள்.

பக்கத்து அறையில் தான் இன்றி தனியாக உறங்கிக் கொண்டிருந்த மகனின் மீது அவளுடைய எண்ணம் சென்றது.

தன்னை நினைத்தே அவளுக்குள் இரக்கம் சுரக்க, அவளுடைய கண்ணீர் சுரப்பிகளோ

தன் வேலையை தம் பாட்டுக்குச் செவ்வனவே செய்யத் தொடங்கின.

அவனோ அவளை நெருங்கியவன் அவளை அழைத்துக் கொண்டு படுக்கையில் அவளை படுக்க வைத்தான்.

அவளோ மருண்ட விழிகளால் அவனை நோக்க, அவனது இறுகிய முகம் சற்றே தளர்ந்தது. தானும் அவளின் அருகே படுத்தவன் போர்வையை எடுத்து இருவருக்கும் போர்த்தி விட்டான்.

படுக்கையின் ஓரத்தில் சுருண்டவளை இழுத்து தன் மீது போட்டுக் கொண்டவனுக்கு அவளது உடலின் நடுக்கம் தாலாட்டைப் போல இருந்தது.

அவளோ அவனது நெருக்கத்தில் அனலுக்குள் தகித்த மலரைப் போல வாடி வதங்க, அவனோ அவளது ஆடைகளை களையத் தொடங்கினான்.

ஒவ்வொரு ஆடையின் விலகலுக்குப் பின்னும் அவளது உடல் கொஞ்சம் கொஞ்சமாக இறுகிப் போனது.

அழுகையில் உதடுகள் துடித்தன.

அவளை புரட்டி படுக்கையில் கிடத்தியவன் அவள் மீது படர்ந்து அவனுடைய இதழ்களை அவளின் நெற்றியில் பொருத்தினான்.

அவளின் மொத்த ஆடையும் அகன்று போயிருக்க, அவளின் மீது படர்ந்தவனுக்கு அவள் மீது கொண்ட

மோகம் பன் மடங்காக அதிகரித்துப் போனது.

எந்தப் பெண்ணையும் இவ்வளவு தூரம் நாட விரும்பாதவன் தன்மயாவிடம் மட்டும் அளவுக்கதிகமான மோகத்தில் மூழ்கிப் போனான்.

மோகம் என்பது ஒரு போதையைப் போல. அந்த போதையை முழுதாக உணர்ந்து அனுபவித்தவன் ஒரு நாளும் அதனை இழக்க விரும்பவே மாட்டான்.

அதைப்போலத்தான் ஆதியின் நிலையும் அவளால் மாறிப் போனது. பல மலர்களை மொய்க்கும் ஆண் வண்டாக இருந்தவன் தன்மயா என்ற மலரில் மாத்திரம் மயங்கிப் போனது ஆச்சரியமே.

அவனது ஒவ்வொரு தொடுகையும் அவளை கூசச் செய்ய தீயால் தீண்டுவதைப் போல துடிதுடித்தாள் மாது.

இக்கணமே அவனை தன் மேல் இருந்து உதறித் தள்ளிவிட்டு செல்ல வேண்டுமென அவளுடைய இதயம் போராட்டம் நடாத்த அவளது மூளையோ அவனை விலக்கும்படி கட்டளை இட்டது.

ஆனால் அவளால் அதனை செய்து விட முடியாதல்லவா....?

வேறு வழியின்றி பல்லைக் கடித்துக் கொண்டு சகித்துக் கொண்டிருந்தவளின் இதழ்களை தன் அதரங்கள் கொண்டு கொய்யத் தொடங்கினான் ஆதி.

அதே நேரம் அவளுடைய மூக்கின் மீது ஏதோ திரவம் சிந்த சட்டென தன் கண்களை திறந்து அவனுடைய வதனம் பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

ஆதித்யனின் மூக்கில் இருந்து வழிந்து கொண்டிருந்தது உதிரம்.

அதில் ஒரு துளி இவளது முகத்திலும் விழ, அடித்துப் பிடித்து அவனைத் தள்ளி விட்டவாறு எழுந்தவள் போர்வையால் தன் உடலை மறைத்தாள்.

“ப்ச் என்னடி....? என்னை டென்ஷன் பண்ணாத ட்ராமா குயின் கம்....”

“உங்க.. உங்க நோஸ்ல ப்ளட் வருது....” என பதற்றத்துடன்

கூறியவளை உணர்வுகள் அற்ற பார்வை பார்த்தவன் “இட்ஸ் ஓக்கே....” என்றவாறு படுக்கையை விட்டு விலகினான்.

கட்டிலின் அருகே அழகுக்காக வைக்கப்பட்டிருந்த கண்ணாடி மேஜையில் இருந்து டிஷ்யூ ஒன்றை எடுத்தவன் தன் மூக்கில் இருந்து வடிந்த இரத்தத்தை துடைத்துக் கொண்டான்.

தன்னுடைய உதிரம் அவளுடைய முகத்தில் இருப்பதைப் பார்த்தவன் இன்னொரு டிஷ்யூவை எடுத்து அவளது முகத்தை துடைத்து விட்டு அதனைக் குப்பைத் தொட்டியில் போட்டான்.

“சார்....?” எனத் தயங்கி தயங்கி அவனை அழைத்தாள் தன்மயா.

“சொல்லுடி.”

“ஏன் உங்களுக்கு ப்ளட் வருது....?”

“தெரியலை....”

“ஹாஸ்பிடல் போகலையா....?”

“நான் எதுக்கு போகணும்....?”

“உங்களுக்கு உடம்புக்கு முடியலைன்னு நினைக்கிறேன்....”

“நோ வே ஐ அம் பெர்பெக்ட்லி ஆல்ரைட்.”

“அப்போ ஏன் ரத்தம் வந்திச்சு....?”

“அதான் தெரியலைன்னு சொல்லிட்டனே....”

“ப்ளீஸ் சார். மனம் சம்பந்தப்பட்ட நோய் இருந்தா கூட இப்படிலாம் ஆகும். நீங்க நல்ல

டாக்டரை பார்க்கிறது உங்க ஹெல்த்துக்கு நல்லது சார்.” என்றவளை இழுத்து தன் கைவளைவில் கொண்டு வந்தவன் அதிகம் பேசிய அவளுடைய இதழ்களுக்கு தண்டனை வழங்கத் தொடங்கினான்.

முதன் முறையாக அந்த அரக்கனை எண்ணி கவலை கொண்டாள் தன்மயா.

‘இது ஒரு வகையான மன நோய். இதை இப்படியே விட்டா இந்த மூணு கேரக்டரும் முன்னூறு கேரக்டராக மாறும். இதுக்கான ட்ரீட்மெண்ட்டை சீக்கிரமே எடுத்தாகணும். இவ.... இவனுக்காக இல்லைன்னாலும் கவினுக்காக நான் இதை பண்ணியே ஆகணும்....’ என

எண்ணியவளின் நெற்றியில் முத்தம் பதித்தவன் “எனக்கு ரொம்ப டயர்டா இருக்கு குயின். நான் அப்புறமா உன்கூட பேசுறேன். அது வரைக்கும் என்கூட தூங்கு.” என்றவன் அவளை மீண்டும் படுக்க வைத்து அந்த போர்வைக்குள் புகுந்து கொண்டான்.

சற்று நேரத்திலேயே அவன் தூங்கிப் போக, அவனுடைய உதடுகளோ “மயா பேபி....” என முணுமுணுத்தன.

அந்த குரலில் அவள் உடல் விறைக்க, விக்கித்துப் போனாள்.

‘ஐயோ இது கவின்தானே....? இந்த நிலமைல அவன் என்னைப் பார்த்துறக் கூடாது கடவுளே....’ என தனக்குள் வேண்டிக் கொண்டவள் கண்கள் கலங்க, சட்டென தன்

ஆடைகளை எடுத்துக் கொண்டு பாத்ரூமினுள் நுழைந்து கொண்டாள்.

மளமளவென தன் ஆடைகளை அணிந்து கொண்டவளுக்கு கண்ணீரோ நீருற்றுப் போல பெருகியது.

தன் முகத்தை அங்கிருந்த பெரிய கண்ணாடியில் பார்த்தவள் வெறுப்போடு அந்தக் கண்ணாடியை வெறித்தாள்.

தடம் புரண்டு போன தன் வாழ்க்கையை எண்ணி அவளது மனம் வேதனையில் மருகியது.

அவளது நிலை எந்தப் பெண்ணிற்கும் வரக் கூடாத அவல நிலையே ஆகும்.

அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியாது கதறிக் கதறி அழத் தொடங்கினாள் அந்த மாது.

யாரும் இல்லாத தனி உலகம் ஒன்றிற்கு சென்றுவிட வேண்டுமென அவளுடைய உள்ளம் மருகித் துடித்தது.

நடக்க இயலாத சாத்தியமற்ற எண்ணங்களை நினைத்து ஏங்கித் தவித்தாள் அவள்.

அதே நேரம் அந்த பாத்ரூமின் கதவு திறக்க, அதிர்ந்து போய் பார்த்தாள் தன்மயா.

இப்போது வந்திருப்பது யார்....?

கவினா....?

ஆதியா....?

சித்துவா....?

அவளது உள்ளத்து கேள்விகளுக்கு விடை அளிக்கும் வண்ணம் அவளை ஏக்கமாக பார்த்து “அம்மா....” என அழைத்தான் சித்தார்த்.

அழுது கண்ணீர்த் தடம் காய்ந்து போயிருந்த தன் கன்னங்களை தன் புறங் கையால் துடைத்தவள் சித்துவைப் பார்த்தாள்.

“என்னைப் பிடிக்கலையாமா....?” என குரல் நடுங்கக் கேட்ட அந்தப் பாலகனை பார்த்து “உனக்கு எத்தனை வயசு....?” எனக் கேட்டாள் தன்மயா.

“பதின் மூணு வயசும்மா....” என்றவனை நெருங்கி தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டாள் அந்தத் தாய்.

“நீயும் என்னோட மகன்தான். இனி எப்பவும் அழக் கூடாது சரியா....?” என்க, ஆனந்தத்தில் நெஞ்சு விம்ம மூச்சுக்கு முன்னூறு தடவை அம்மா அம்மாவென அவளை அழைத்து இறுக அணைத்தான் சித்து.

ஆனால் தன்மயாதான் மனதாலும் உடலாலும் முதல் நாளே மிகவும் சோர்ந்து போனாள்.

மோகம் – 13

தன்மயா இயல்பாகவே அன்புள்ளம் கொண்ட அருமையான பெண். அவளிடம் வந்து தாய்ப் பாசத்தை எதிர்ப்பார்க்கும் ஒரு அபலைச் சிறுவனை அவளால் எங்கணம் ஏமாற்ற முடியும்.?

ஆரம்பத்தில் கவின்தான் ஆதியாகவும் சித்துவாகவும் நடிக்கின்றான் என நினைத்திருந்தவள் சித்துவின் வலியையும் துடிப்பையும் கண்டு பதறித்தான் போனாள்.

பின் ராமுவின் மூலம் அனைத்து உண்மைகளையும் அறிந்தவள் வருத்தமே அடைந்தாள்.

மல்டிபிள் பர்சனாலிட்டி டிசோடர் அதாவது டிசோசியேட்டிவ் ஐடென்டிட்டி டிசோடர் எனும் மன நோய் மிக மிக விசித்திரமானது. ஒருவருக்கு தன்னுடைய சிறு வயதில் ஏற்பட்ட பாதிப்புக்கள் இவ்வகையான மன நோய்களை உண்டாக்கி விடுகின்றன. இந்த நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு இரண்டு

முதல் நூறு வரையான பர்சனாலிட்டிகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒரு நபர் அறியாமல் அவருக்குள்ளேயே பல நபர்கள் வாழ்ந்து கொண்டிருப்பது எவ்வளவு கொடுமையான விடயம் தெரியுமா....?

அத்தகைய கொடுமையைத்தான் நம் நாயகன் அனுபவித்துக் கொண்டிருக்கின்றான்.

ஆரம்பத்தில் ஆதியின் மீது வெறுப்பும் கோபமும் அருவருப்பும் கொண்டிருந்தவளுக்கு அவனைப் பற்றிய உண்மை தெரிந்ததும் மனம் வலித்தது.

ஆதியின் மீது இருந்த கோபத்தை தாய்ப் பாசத்துக்காக

ஏங்கும் சித்தார்த் மீது காட்டுவது சரியல்ல என்பதை உணர்ந்து கொண்டவள் சித்துவை தன் மகனாக ஏற்றுக்கொள்ள நினைத்தாள்.

அதே போல இன்று அவனே வந்து அவளை அம்மா என அழைத்தும் அவளுக்கு உள்ளம் உருகிப் போனதென்னவோ உண்மை.

அவனுடைய வயதைக் கேட்டவள் அதிர்ந்தாலும் அதனை அவன் அறியாது சமாளித்து மறைத்து விட்டு அவனை புன்னகையோடு அணைத்துக் கொண்டாள்.

“ம்மா அப்போ உங்களுக்கு என்னை பிடிக்குமா....?”

“பிடிக்குமே கண்ணா....? எந்த அம்மாக்காவது பிள்ளையை பிடிக்காம போகுமா....?”

“அப்போ ஏன்மா என்னை திட்டினீங்க....?”

“அ.... அது வந்துஉஉ அம்மா தெரியாம திட்டிட்டேன்பா....”

“அப்போ ஓகேம்மா....” என்றவன் அவளது கரத்தைப் பிடித்துக் கொண்டு வெளியே அழைத்து வந்தான்.

“சித்து என்கூடவா உனக்கொரு தம்பிப் பாப்பா இருக்கு வா அவனை காட்டுறேன்.” என அழைத்துச் சென்றவள் மெத்தையில் படுத்துக் கொண்டு விரலைச் சப்பியவாறு உறங்கிய தன் மகனை கண்டு

சிரித்தவளாய் குனிந்து தன் மகனின் முகத்தில் முத்தம் பதித்தாள்.

அவளது முத்தத்தை தூக்கத்தில் உணர்ந்த யஷ்விந்த் குட்டியோ கிளுக்கிச் சிரிக்க, அவளுடைய முகத்திலும் புன்னகை மலர்ந்தது.

அதே மாறாத புன்னகையுடன் சித்துவை பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

அவனது கண்களில் தெரிந்த ஏக்கம் மற்றும் பொறாமை அவளை வெகுவாக அதிர வைத்தது.

“சித்து அம்மாகிட்ட வா....” என நடுங்கும் குரலில் அழைத்தவள் அவன் வந்ததும் தயங்கித் தயங்கி அவனுடைய கன்னத்திலும் முத்தம் பதித்தாள். அவன் சிறுவன்தான்

ஆனால் அவனுடைய வெளித்தோற்றம் ஒன்றும் சிறுவனைப் போல அல்லவே.

அவளது ஒற்றை முத்தத்தில் மீண்டும் முகம் மலர்ந்தவன் அதன் பின்னரே இயல்பாகினான்.

அந்நொடி சித்துவை சமாளிப்பதும் கடினம் என்பதை உணர்ந்து கொண்டாள் தன்மயா.

அவளுக்கு தலை வலிப்பதைப் போல இருந்தது.

“சித்தும்மா நீ கொஞ்சம் வெயிட் பண்றியா....? நான் யஷ்விந்த் குட்டியை குளிப்பாட்டிட்டு வந்துர்றேன்....”

“ஓகே மா. நீங்க வந்ததை நான் எங்க அப்பாகிட்ட சொல்லிட்டு வந்துர்றேன்.”

“வாட்....? அப்பாவா....? சித்து உனக்கு அப்பா இருக்காங்களா....?” என திகைத்த வண்ணம் கேட்டாள் மயா.

“ஆமா. இருக்காரே. நான் அவர்கூட டெய்லி பேசுவேன்..”

“எ.... எப்படி பேசுவ....? அவர் எங்க இருக்காரு....?”

“நான் வாட்ஸ்ஸப்ல பேசுவேன்மா.” என்றவன் துள்ளித் துள்ளி ஓடியவாறு அவனுடைய ∴போனை எடுத்து வந்து அவளுக்கு காட்டினான்.

“இதோ அப்பா நம்பர்....” என அவன் கூறியதும் சட்டென அதனை வாங்கி பார்த்தவளுக்கு அழுகை பீறிட்டது.

அவன் அந்த எண்ணிற்கு கடந்த ஒரு வருடங்களுக்கும் மேலாக சாட் செய்து கொண்டிருப்பதை பார்த்தவள் மனதளவில் துடித்துப் போனாள்.

ஏதோ ஒரு இலக்கத்தை அலைபேசியில் சேமித்து வைத்திருப்பான் போலும். அந்த வாட்ஸ்ஸப் எண்ணின் உரிமையாளர் இவனை யாரென தெரியாது திட்டி ப்ளாக் செய்திருந்தார்.

ஆனால் அதைக் கூட உணராது இன்று வரை அந்த எண்ணிற்கு அவன் அனுப்பிய குறுஞ்

செய்திகளைக் கண்டு அவள் உள்ளம் ஊமையாகக் கதறியது.

அந்த குறுஞ் செய்திகளை படிக்க படிக்க அத்தனையிலும் அவனுடைய அம்மாவிற்கான ஏக்கமே வெளிப்பட்டது.

சில தினங்களுக்கு முன்பு அவளுடைய புகைப்படம் அனுப்பப்பட்டிருப்பதைக் கண்டவளுக்கு பொல பொலவென கண்ணீர் கண்களில் நின்றும் வழியத் தொடங்கியது.

அவளுடைய கண்ணீரைக் கண்டு தானும் அழத் தொடங்கினான் சித்து.

“ம்மா அழுதா சித்துக்கு வலிக்கும்....” என்றவனை அணைத்துக்

கொண்டவள் இம்முறை உண்மையான நெகிழ்வுடன் அவன் நெற்றியில் இதழ் பதித்தாள்.

“சித்து நான் சொன்னா கேட்பியா....?”

“எஸ் ம்மா....”

“இனி இந்த நம்பருக்கு மெசேஜ் அனுப்பாத ஓகேவா. உனக்கு என்ன சொல்லணுமோ அதை என்கிட்ட சொல்லு.”

“சரிம்மா.” என சமத்தாக அவளுடைய பேச்சை ஏற்றான் சித்து.

அவளோ “குட் பாய்....” என்றவள் யஷ்விந்த்தின் ஆடைகளைக் களைந்து விட்டு அவனைக் குளிப்பாட்ட பாத்ரூமினுள் அழைத்துச் சென்றாள்.

சற்று நேரத்தில் பாத்ரூமினுள் இருந்து வெளியே வந்தவள் யஷ்விந்திற்கு ஆடை அணிவித்து விட்டு விளையாடுவதற்கு பந்து ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.

“ம்மா வாம்மா எனக்கும் குளிப்பாட்டி விடு....” என்றவாறு சித்து தன் ஆடைகளைக் களையத் தொடங்க பதறித்தான் போனாள் மாது.

“டேய் டேய் என்னடா பண்ற....?”

“ட்ரெஸ்ஸ கழட்டுறேன்....”

“எ.... எதுக்கு....?” அவளுக்கோ வியர்த்தது.

அவனோ தன்னுடைய டீஷர்ட்டை கழற்றியவன் பேண்ட்டையும் கழற்றியவாறு

“என்னையும் குளிப்பாட்டி வ்விடும்மா....” என்றவனின் வார்த்தைகளில் அவளுக்கோ ஐயோவென்றானது.

“இல்ல.... இல்லடா நீ இப்போ பெரிய்ய்ய பையன் நீதான் குளிக்கணும்....”

“ஏன்....?”

“நீ குளிச்சுட்டு வந்தீன்னா உனக்கு சாப்பாடு ஊட்டி விடுவேன்....” என்றதும் சரி எனும் விதமாக தலை அசைத்தவாறு பாத்ரூமினுள் நுழைந்தான் சித்து.

அவன் உள்ளே நுழைந்ததும் சட்டென அவன் அறியாது அந்த பாத்ரூம் கதவை வெளிப் புறமாக

பூட்டியவள் யஷ்விந்த்தை தரையில் இறக்கி விட்டாள்.

“கண்ணா இங்கேயே விளையாடிகிட்டு இரு. அம்மா இப்போ வந்துர்றேன்....” என்றவாறு மளமளவென படிகளில் இறங்கி கீழே ஓடினாள்.

“ராமு அங்கிள்.... எங்க இருக்கீங்க....? ராமூஊஊஊஊ அங்கிள்....” என அவள் அழைக்க, சற்று நேரத்தில் அறைக்குள் இருந்து வெளியே வந்தார் ராமு.

“என்னாச்சும்மா ஏதாவது பிரச்சனையா....?”

“இவனுங்க கூட இருந்தா பிரச்சனை இல்லாம எப்படி அங்கிள்

இருக்கும்....? எனக்கு அதிர்ச்சில ஹார்ட் நின்னுரும் போல இருக்கு."

"இத்தனை நாளும் எனக்கும் அப்படித்தான்மா இருந்திச்சு...."

"அங்கிள் எனக்கு கவினை பத்தி சொல்ல முடியுமா....?"

"ம்ம் எனக்கு தெரிஞ்ச வரைக்கும் எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லாத கேரக்டர்தான் கவின். என்கூட ரொம்ப மரியாதையா நடந்துப்பான். ப்யூர் கோல்ட் மாதிரி. யாராவது அவனை அடிச்சா கூட அத்தனை அடியையும் வாங்கிட்டு வருவான்மா. ஆதிக்கு அப்படியே ஆப்பசிட்டா இருப்பான். ஆதி ரொம்ப பலசாலி. ஒரே நேரத்துல எத்தனை பேரையும் சுலபமா சமாளிப்பான். பட்

கவினுக்கு அந்தளவுக்கு ஸ்ட்ரெந்த் கிடையாதும்மா....”

“ம்ம்... அங்கிள். கவினுக்கு ட்ரீட்மென்ட் கொடுத்தாகணும் அங்கிள்.

இல்லைன்னா அது அவனோட

உயிருக்கே ஆபத்து.”

“நான் எவ்வளவோ ட்ரை பண்ணிட்டேன். ஆதிகிட்ட இதைப் பத்தி சொன்னா என்னை கண்டிப்பா கொன்னுருவான். கவின்கிட்ட பேசினாலும் அவன் ஒத்துக்க மாட்டான். சித்து மட்டும்தான் என் பேச்சைக் கேட்பான். அதனால சித்துக்கு ஜுரம்னு பொய் சொல்லி ஹாஸ்பிடல் கூட்டிப் போவேன். ஆனா அந்த ட்ரீட்மென்ட் ஆரம்பிக்க

முதலே ஆதியோ கவினோ வந்து இடைல எல்லாத்தையும் நிறுத்திறுவாங்க.” என சலிப்போடு கூறினான் ராமு.

****

“ஜானி ஜானி....

எஸ் பாப்பா....

ஈட்டிங் சுகர்....

நோ பாப்பா....” என பாத்ரூமினுள் பாடியவாறு குளித்துக் முடித்தவன் தனக்குப் பிடித்த சூப்பர் மேனின் சிவப்பு நிற ஜீன்ஸையும் பச்சை நிறத்தில் பென்டன் டீஷர்ட்டையும் எடுத்து அணிந்தான்.

தன் சிகையை படிய இழுத்து விட்டு கண்ணாடியைப் பார்த்தவனது உடல் சட்டென விறைத்தது.

சித்துவின் ஆல்ட்டர் உள்ளே போய்விட வெளியே வந்தான் ஆதித்யன். (ஒரு நபருக்குள்ளே இருக்கும் பல பர்சனாலிட்டிகளை ஆல்ட்டர் என அழைப்பர்.)

கண்ணாடியில் தன்னைப் பார்த்தவனுக்கு தன் உருவம் கண்டு அதிர்ச்சியாக இருந்தது.

“டாமிட் இதென்ன கோலம்...?” சிவப்பும் பச்சையும் என இருந்த தன்னுடைய ஆடையைக் கண்டு எரிச்சல் அடைந்தான் ஆதி.

“நான் எப்படி இங்க வந்தேன்....? நான் குயின் கூட தூங்கிகிட்டுதானே இருந்தேன்....? ஓ மை காட் நான் எப்போ குளிச்சேன்னே தெரியலையே.... இந்த கேவலமான ஜோக்கர் ட்ரெஸ் வேற

போட்ருக்கேன். ஷிட் இங்க என்னதான் நடக்குது....?" என்றவன் தன் தலையை அழுந்தப் பிடித்துக் கொண்டான்.

உள்ளே இருந்த டவலைக் கட்டிக் கொண்டு அந்த ஆடைகளை கழற்றி எறிந்தவன் கதவைத் திறக்க அதுவோ திறக்காமல் அப்படியே இருந்தது.

தன்மயாதான் கதவை வெளிப்புறமாக பூட்டி விட்டாளே. கதவை திறக்க முயன்று தோற்றவனின் முகமோ விகாரமாக மாறியது.

"ட்ராஆஆமாஆஆ குயின்ன்....." என உரத்த குரலில் கர்ஜித்தவன் கதவை தன் பலம் கொண்ட

தோள்களால் உடைக்கத் தொடங்கினான்.

“ஷிட் ஓபன்.... டாமிட் ஓபன்....” என இடித்துக் கொண்டிருந்தவன் திரும்பி அருகே இருந்த கண்ணாடியைப் பார்த்தான்.

அடுத்த நொடி அவனுடைய கரத்தின் பலத்தினால் அந்தக் கண்ணாடி உடைந்து நொறுங்கிப் போனது.

“ஏன் என்னோட வாழ்க்கைல நடக்குற பாதி விஷயம் எனக்கு நினைவுல இல்ல....? ஏன்....? ஏன்....? ஏன்....? எனக்கு அம்னீசியாவா....? இல்லைன்னா குயின் சொன்னதைப் போல எனக்கு ஏதாவது மன நோயா....?” என்றவனுக்கோ

ஏகத்துக்கும் மன அழுத்தம் கூடிப் போனது.

உடைந்து கிடந்த கண்ணாடித் துண்டை எடுத்தவன் அதனை தன் கரத்தில் வைத்து அழுத்த குபுக்கென பாய்ந்து வெளிப்பட்டது அவனுடைய உதிரம்.

“எதுவுமே தெரியாம நான் எதுக்காக வாழணும்....?” என நினைத்தவன் அந்தக் கண்ணாடித் துண்டை எடுத்து தன் கழுத்தில் பதிக்கத் தொடங்கினான்.

****

ராமு அங்கிளிடம் பேசியவள் “அங்கிள் உங்க ஃபோனை கொஞ்சம் தர முடியுமா ப்ளீஸ்.” எனக் கேட்டு வாங்கிக் கொண்டாள்.

தன்னுடைய தோழியான மன நல வைத்தியர் தாரதிக்கு அழைப்பெடுத்தவள் அவள் தன் அழைப்பை ஏற்றதும் “ஹலோ தாரதி நான் தனு பேசுறேன்டி. ஐ நீட் யுவர் ஹெல்ப்.” என்றாள்.

அவளுடைய குரலில் இருந்த பதற்றத்தில் பிரச்சனையின் தீவிரத்தை புரிந்த தாரதியோ சுத்தி வளைக்காமல் “சொல்லு தனு....?” என்றாள்.

“ஹேய் எனக்கு மல்டிப்பிள் பர்சனால்டி டிசோடரால பாதிக்கப்பட்டவங்க எப்படி இருப்பாங்க....? என்னென்ன பண்ணுவாங்க....? அவங்களை எப்படி ட்ரீட் பண்ணணும்னு சொல்லுடி ப்ளீஸ்.”

“ஓ.... ஓகே தனு. இந்த நோயை சுருக்கமா (D.I.D) டி.ஐ.டி னு சொல்லுவாங்க. ஒரு நபர் தனக்குத் தெரியாமலேயே ஒரு கேரக்டரை தனக்குள்ள உருவாக்கிப்பாங்க. இட்ஸ் வெரி டேஞ்சரஸ். இந்த நோயால பாதிக்கப்படுறவங்களுக்கு ஞாபக மறதி அதிகமா இருக்கும். இந்த நோயால பாதிக்கப்பட்டவங்க பலர் தற்கொலை பண்ண ட்ரை பண்ணுவாங்க....” என தாரதி கூற, அதிர்ந்து போனாள் தன்மயா.

அதே நேரம் மேலே கண்ணாடி உடையும் சத்தம் கேட்க, இவளுடைய கரத்தில் இருந்த அலைபேசியோ நழுவி கீழே விழுந்தது. அடுத்த நொடி ராமுவும் தன்மயாவும் மாடி நோக்கி வேகமாக ஓடத் தொடங்கினர்.

மோகம் – 14

தன் தோழியான தாரதியின் வார்த்தைகள் தன்மயாவின் மனதை மிகவும் அதிர வைத்தன.

ஞாபகமறதி , தற்கொலை என தாரதி அடுக்கிக் கொண்டே போக, அச்சத்தில் உறைந்து கொண்டே போனவளது கரங்கள் நடுங்கத் தொடங்கின.

ஏற்கனவே பீதியில் இருந்தவள் மேலே உடைந்து நொறுங்கிய கண்ணாடித் துண்டுகளின் ஓசையில் தன் கரத்தில் இருந்த அலைபேசியை தவறவிட்டாள்.

என்னவோ ஏதோவென உள்ளம் பதற, அறையை நோக்கி வேகமாக ஓடத் தொடங்கினாள் தன்மயா.

அவளின் பின்னேயே ராமுவும் ஓடிச் சென்றார்.

யஷ்விந்த்தோ நல்ல உறக்கத்தில் இருப்பதைக் கண்டவள் அந்த அறையின் பாத்ரூம் கதவு உடைந்து விழுந்திருப்பதைக் கண்டு விக்கித்து நின்றாள்.

தேக்கு மரத்தால் செய்யப்பட்ட அந்த மொத்தமான மிகப் பெரிய கதவை இவனா உடைத்தான் என்பதைப் போல திகைத்து நின்றவள் உள்ளே அவன் நின்ற கோலத்தைக் கண்டு பதறிப்போனாள்.

கரத்தில் இருந்து உதிரம் வழிந்தோட தன் கரத்தில் இருந்த கண்ணாடித் துண்டை கழுத்தில் வைத்த வண்ணம் நின்றான் அவன்.

அவன் நின்ற தோரணையே அவன் ஆதித்யன் என்பது புரிந்து விட, சட்டென அவன் முன் வந்தவள் “அதை கீழ போடுங்க சார்....” என்றாள்.

அவனோ நிதானமாக ராமுவை நிமிர்ந்து பார்த்தவன் “அவுட்....” என்க, அவரோ தன்மயாவை ஒரு பார்வை பார்த்துவிட்டு தூங்கிக் கொண்டிருந்த அவளுடைய குழந்தையையும் தூக்கிக் கொண்டு அறையை விட்டு வெளியேறினார்.

“ஏன் சார் இ.... இப்படிலாம் பண்றீங்க.... ஐயோ ரத்தம் வருது..” எனப் பதறியவாறு அவனை நெருங்கியவள் அவனுடைய கரத்தை இரத்தம் வழியாதவாறு உயர்த்திப் பிடித்தாள்.

மறு கரத்தில் இருந்த கண்ணாடித் துண்டை பறிக்க முயல அதனை தன் கழுத்தில் இருந்து விலக்கியவன் அவளுடைய இடையை வளைத்து அவளது கழுத்தில் அதே கண்ணாடித் துண்டை பதித்தான்.

“செத்து போவமா ட்ராமா குயின்....?” என்றவனுடைய கேள்வியில் அவளது விழிகள் மூடிக் கொண்டன. உடல் ஒரு தடவை அதிர்ந்து அடங்கியது.

“எனக்கு வாழணும்னு எந்த ஆசையும் இல்ல சார். மரணம் வந்தா சந்தோஷமா அதை ஏத்துக்குவேன். ஆனா என் பையனுக்காக நான் வாழணும்..” என்றவளின் குரலில் மரண வலி தெரிந்தது.

“ஓ.... உனக்கு இந்த உலகத்துல வாழ்றதுக்கு ஒரு காரணம் இருக்கு.. பட் எனக்கு எந்த காரணமும் இல்லையே. நான் எதுக்காக வாழணும்....? நான் இல்லைன்னா நீயும் வாழக்கூடாது குயின். கிங் இல்லாம குயின் மட்டும் இருந்தா நல்லாவா இருக்கும்....?” என்க அவளது உடலோ நடுக்கம் கொண்டது.

“வ.... வலிக்கும் ஆதி....” திணறினாள் மாது.

“என்னோட மம்மி இப்படித்தான் என்னை கூப்பிடுவாங்க. ஆதின்னு அவங்க கூப்பிட்டாலே என்னோட உடம்பு நெருப்புல எரியுற மாதிரி இருக்கும்.” என்றவனின் குரல் கரகரத்தது.

“ம... மம்மியா....?” எனக் கேட்டவளின் கழுத்தில் சற்றே கண்ணாடித் துண்டு அழுந்த , “ஸ்ஸ் இட்ஸ் ஹர்ட்டிங் மீ ஆது....” என தடுமாறினாள் அவள்.

அவளுடைய ஆதி என்ற அழைப்பு ஆதுவாக மாறியதை கவனித்தவன் “நாட் பேட்.” என்றான்.

“என்னை வ்விடுங்க. ப்ளீஸ்....” அசைய முடியாத கத்தி முனையில் நின்றவளின் கன்னத்தில் முத்தம் இட்டவன் “இப்படித்தான் அவங்களும் எனக்கு கிஸ் பண்ணுவாங்க....” என்றான்.

அவளோ அவனிடம் மாட்டிக் கொண்டு தவித்தவள் எப்படி தப்பிப்பது எனப் புரியாது

அசையாமல் அவன் கைப்பிடியில் நின்றாள்.

“அவங்க என் கண்ணு முன்னாடியே....” என்றவனுடைய முகம் அருவருப்பில் சுருங்கியது.

சட்டென அவனுடைய கன்னத்தில் தன் கரத்தை வைத்தவள் அதனை மென்மையாக வருடத் தொடங்கினாள்.

“ஈஸி.... ஈஸி..... காம் டவுன் ஆது....”

அவளது மென்மையில் அவனது கரத்தில் இருந்த கண்ணாடி துண்டை கீழே போட்டவன் அவளது கரத்தை பிடித்து தன் கன்னத்தில் பதித்தான்.

“ஹாஸ்பிட்டல் போகலாம் ஆது ப்ளீஸ்....” என்றவளை இழுத்து அணைத்துக் கொண்டான் ஆதி.

“நான் எதுக்குடி ஹாஸ்பிடல் போகணும்...?”

“ஐயோ உங்க கைல இரத்தம் வருது....”

“இரத்தம் தானே. நான் சிந்தாத ரத்தமா....?” எனக் கேட்டவன் இமை சிமிட்டி சிரித்தான்.

அவனது பேச்சு ஏதோ தனியாக தவிக்க விடப்பட்ட ஒருவனின் தவிப்பு போல இருக்க, அவளது உள்ளமோ அவனுக்காக இரங்கியது.

என்ன நினைத்தாளோ அவன் வலுக்கட்டாயமாக பிடித்த கரத்தை உருவி எடுத்தவள் அவன் எதிர்பாராத

நேரம் அவன் மார்பில் சாய்ந்து அவனை தன்னோடு இறுக அணைத்துக் கொண்டாள்.

கவினிடம் தோன்றாத நெருக்கம், ஆதி மேல் அவளுக்கு அந்நொடி தோன்றியது.

அவளது செயலில் அதிர்ந்தவன் அவளது வதனம் பார்க்க முயல, அவளோ தன் வதனத்தை அவன் மார்பில் புதைத்தவள் “எ.... என்னால உங்களை மாத்த முடியும் ஆது.” என்றாள்.

சட்டென அவளைத் தள்ளி விட்டவன் “நான் எதுக்கு மாறணும்.? நீ உன்னோட லிமிட்டை க்ரோஸ் பண்ணாத.” என எச்சரித்தான்.

அவன் திடீரென தன்னை தள்ளுவான் என எதிர்பாராதவள் தொப்பென தரையில் விழுந்து பின் எழுந்து நின்றாள்.

“ஏன் இப்படி மிருகம் மாதிரி நடந்துக்கிறீங்க.???” எனச் சீறியவளை அலட்சியமாக பார்த்தவன் அந்த பாத்ரூமை விட்டு வெளியேறினான்.

அவனின் பின்னேயே ஓடிச் சென்றவள் “கவீஈஈஈஈஈன்....” என உரக்க அழைத்ததும் அவனுடைய நடை நின்றது.

சட்டென திரும்பிப் பார்த்தவன் “மயா பேபீஈஈ....?” என்றான். ஆதித்யனின் ஆல்ட்டர் உள்ளே சென்றுவிட கவினுடைய ஆல்ட்டர் வெளிப்பட்டது.

“ஆஆஆஆ ஸ்ஸ் ஓ மை காட் ப்ளட் வருது....” என தன் கரத்தை பார்த்து உதறினான் கவின்.

ஆதித்யனால் தாங்க முடிந்த வலியை கவினால் தாங்க முடியாது போக, அவனது வெண்ணிற முகமோ வேதனையில் சிவக்கத் தொடங்கியது.

“ஓ காட் பெயினா இருக்கா கவின்....?” எனப் பதறியவள் சட்டென ஓடிச் சென்று முதலுதவி பெட்டியை எடுத்து வந்து அவனுக்கு மருந்திடத் தொடங்கினாள்.

“கவின் நான் என்ன சொன்னாலும் செய்வியா....?” எனக் கேட்டாள் மயா.

“கண்டிப்பா மயா. நீ என்ன சொன்னாலும் செய்வேன்.”

என்றவனைப் பார்த்து புன்னகைத்தவள் அவனுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு கீழே அழைத்துச் சென்றாள்.

“ஹேய் இருடி ட்ரெஸ் மாத்திட்டு வர்றேன்....”

“ப்ளீஸ் கவின் சீக்கிரமா வா.”

“ஏன்டி...”

“நான் எல்லாத்தையும் உனக்கு அப்புறமா சொல்றேன். நீ ட்ரெஸ் சேன்ஞ் பண்ணிகிட்டு சீக்கிரமா வா.”

“ஓகே மயா. வெயிட்....” என்றவன் உள்ளே சென்றுவிட, அந்த அறையில் இருந்த சித்துவின் ∴போனை எடுத்தவள் மீண்டும் மனநல வைத்தியரான தாரதியை அழைத்தாள்.

“ஹலோ ஐ அம் தாரதி.”

“தாரு ஐ க்நோ தட். நான் தனு பேசுறேன்.” என்றவள் ஃபோனிலேயே அழத் தொடங்கினாள்.

“ஹேய் என்னாச்சுடி.? எதுக்கு அழுற....? எதுக்கு அப்போ டி.ஐ.டி பத்தி கேட்ட....?”

“தாரதி நான் ஒரு டி.ஐ.டி பேஷன்ட் கிட்ட மாட்டிக் கிட்டேன்டி. என்னால இதுல இருந்து வெளி வர முடியல. அவன் என்னோட க்ளோஸ் ப்ரண்ட்.

எப்படியாவது அவனை சரி பண்ணணும். பட் எப்படின்னு தெரியலை.”

“ஹேய் லிசின் அந்த பேஷன்ட்கிட்ட எத்தனை ஆல்ட்டர் இருக்கு....?”

“மூணுடி. ஒருத்தன் ஆதி ரொம்ப டேஞ்சர். இன்னொருத்தன் கவின் ரொம்ப நல்லவன். அடுத்தது சித்து அம்மா பாசத்துக்காக ஏங்குற பதின்மூணு வயசு பையன்.”

“ஓ.... இதுல யார் நிஜம்னு தெரியுமா தனு....? பிகாஸ் ஒருத்தன் நிஜமாவும் மத்த ரெண்டு பேரும் அவனுக்கே தெரியாம உருவான கேரக்டர்ஸ்ஸாகவும் இருப்பாங்க....”

“கவின்தான் ஒரிஜினல்னு நினைக்கிறேன்.”

“குட். முதல்ல யார் நிஜம்னு கண்டு பிடி. அப்போதான் அந்த

பர்சனால்டிக்கு என்ன பிரச்சனைன்னு கண்டு பிடிக்க முடியும். இப்போ சித்துங்கிற கேரக்டர் உருவானதுக்கான காரணம் அம்மா இல்லாத ஏக்கம். ஒரிஜினல் நபருக்கு மனசுல இருக்கிற அம்மாக்கான ஏக்கத்தை நாம இல்லாம பண்ணிட்டோம்னா சித்துங்கிற கேரக்டர் வெளியே வராது.

இப்போ கவின்தான் நிஜம்னா அவனோட மனசுல அம்மாக்கான ஏக்கம் கண்டிப்பா இருக்கும். அந்த ஏக்கமும் அவனோட தாய்ப்பாசத்துக்கான உணர்வுகளும்தான் சித்து கேரக்டரை உருவாக்கியிருக்கும்.

சோ கவினுக்கு இருக்கிற பிரச்சனையை தெரிஞ்சுகிட்டு

அதுக்கேத்த தீர்வுகளை நாம கண்டு பிடிச்சாலே இந்த கேரக்டர்ஸ்ஸை நிரந்தரமாக இல்லாம ஆக்க முடியும்.”

“ஓ.... இப்போ புரியுது தாரதி. இது குணமாக எவ்வளவு நாளாகும்....?”

“கொஞ்ச நாட்கள்ல மாறலாம் அல்லது கொஞ்ச மாசத்துல மாறலாம், இல்லைன்னா சில வருஷங்கள் கடந்து பல வருஷங்கள்ல கூட மாறலாம். அது அவங்களை ட்ரீட் பண்றதைப் பொறுத்து.”

“ஓ..... தேங்க்ஸ் டி.”

“முடிஞ்சா உன்னோட ப்ரண்டை என்னைப் பார்க்க அழைச்சுட்டு வா. அவரை செக் பண்ணிரலாம்.”

“ஓகேடி நான் உன்னோட ஹாஸ்பிடலுக்கு வர்றதுக்காகத்தான் ரெடியாகிட்டு இருக்கேன். இன்னும் ஒன் அவர்ல நான் அங்க இருப்பேன்.” என்றதும் அந்த அறைக் கதவு திறக்கப்பட்டது.

சட்டென அழைப்பைத் துண்டித்துவிட்டு அந்த ஃபோனைத் தூக்கி கட்டிலுக்கு கீழே போட்டவள் எதுவும் தெரியாததைப் போல சாதாரணமாக நின்று கொண்டாள்.

தனக்கே உரிய ஸ்டைலில் தயாராகி வந்த கவினோ “ஹேய் நாம எங்க போறோம்.” எனக் கேட்டான்.

வந்திருப்பது கவின் எனத் தெரிந்த பின்பே நிம்மதியாக மூச்சு விட்டவள், “ஹாஸ்பிடல்.... போறோம்.”

என்றதும் கவினுடைய நடை அப்படியே நின்றது.

“ம்ப்ச் கம்.... கம்..... ஃபாஸ்ட்டா வா கவின். நமக்கு அவ்ளோ டைம் இல்ல.” என பதறினாள் தன்மயா.

“ஏன்..... ஹாஸ்பிடல்...?”

“சொல்றேன் கவின். இப்போ என்கூட வா ப்ளீஸ்....”

“நீ எதுக்கு ஹாஸ்பிடல் போறேன்னு சொல்லு மயா ப்ளீஸ்...”

“ஐயோஓ.... உனக்குள்ள ரெண்டு பேரோட பர்சனால்டி இருக்கு கவின். இதை உன்னால நம்ப முடியுதா....?” என தவிப்போடு கேட்டாள் தன்மயா.

அவனோ ஓர் நொடி திகைத்தவன் அடுத்த நொடியே “வாட்....?” என அதிர்ந்தான்.

“எஸ்.... அவங்க யாராவது உனக்குள்ள வர்றதுக்கு முதல் நாம கிளம்பியாகணும் கவின்.” என அவனை தன்னோடு வருமாறு அவசரப்படுத்தினாள் தன்மயா.

“சாரி மயா என்னால ஹாஸ்பிடல் வர முடியாது.”

“ஏன்....?” எனக் கேட்டவளின் புருவங்கள் உச்சி மேட்டைத் தொட்டன.

“அ... அது வந்துஉஉ எனக்கு கொஞ்சம் டயர்டா இருக்கு மயா. இப்போ என்னால எந்த டாக்டரையும் பார்க்க முடியாது.” என தடுமாறியவனை பார்த்தவள் சட்டென தன் வயிற்றை பிடித்துக் கொண்டாள்.

“சரி அப்போ நீ போ. நான் ராமு அங்கிளை கூட்டிட்டு போறேன்.” என்றவள் முன்னே நடக்க,

“ஹேய் வெயிட் வெயிட் உனக்கு என்னாச்சு....? நீயா டாக்டரைப் பார்க்கணும்....?” சந்தேகமாக வெளிப்பட்டது கவினின் வார்த்தைகள்.

“ஆமா.... எனக்கு ரொம்ப வயிறு வலிக்குது கவின். சத்தியமா முடியலை. உனக்கு கஷ்டம்னா விடு. நான் ராமு அங்கிள் கூட போறேன்....”

“நோ.... நோ... மயா பேபி. நானே வர்றேன். வா போகலாம்.” என்றவன் அவளை அழைத்துச் செல்ல, முதன் முறையாக கவின் மீது அவளுக்கு சந்தேகம் எழத் தொடங்கியது.

மோகம் – 15

காரில் சென்று கொண்டிருந்தவளின் எண்ணங்கள் முழுவதும் ஆதியின் தற்கொலை முயற்சியிலேயே இருந்தது.

மனிதர்களை படைத்த இறைவன் ஏன் இப்படி விசித்திரமான வியாதிகளையும் படைக்க வேண்டும்....?

உடல் சார்ந்த நோய்களை விட மனம் சார்ந்த நோய்கள் மிகவும் கொடியவை அல்லவா....?

தன் சிந்தனைகளை சற்று நேரம் ஒதுக்கி வைத்தவள் பெருமூச்சோடு கவினைப் பார்த்தாள்.

மிக நேர்த்தியாக காரைச் செலுத்திக் கொண்டிருந்தான் கவின்.

அவனது கரங்களில் கார் லாவகமாக வளைந்து நெளிந்து சென்று கொண்டிருந்தது.

“என்ன மயா....? என்ன திங் பண்ற.....?” எனக் கேட்டான் கவின்.

“ம்ஹூம் நத்திங் கவின்.” என சாலையோரம் தன் பார்வையை திருப்பிக் கொண்டாள் மாது.

“மயா பேபி.... உனக்கு என்னை பிடிக்கலையா....? என்னோட காதலுக்கு நீ இதுவரைக்கும் எந்த முடிவுமே சொல்லலையே.” என்றவனின் பார்வை அவள் மீது கனிவாக படிந்தது.

“உன்னோட காதல் கிடைக்க கொடுத்து வெச்சிருக்கணும் கவின்.

ஆனா....” என நிறுத்தியவள் அவனுடைய முகம் பார்த்தாள்.

“ஆனா....? என்ன மயா சொல்லு..”

“உனக்குள்ள இருக்கிற ஆதிங்கிற கேரக்டர் கூட நான் வாழ்ந்துட்டேன் கவின். என்னால இனி இன்னொருத்தரை என்னோட வாழ்க்கைல அனுமதிக்க முடியாது.”

“ஓ.....” என இழுத்தவனது முகம் வெகுவாக சோர்ந்து போனது. அவனது விழிகள் கூட கலங்கிப் போயின.

“சா.... சாரி கவின். என்னால அதை மறக்க முடியலை.”

“இட்ஸ் ஓக்கே மயா.” என்றவனின் குரல் இறுகியது.

“உனக்கு டி.ஐ.டி நோய் பத்தி தெரியுமா....?” எனக் கேட்டாள் மயா.

“ம்ம் தெரியும். டிசோசியேட்டிவ் ஐடென்டிட்டி டிசோடர் விசித்திரமான நோய். இதை நோய்னு சொல்றதை விட வரம்னு சொல்லலாம் மயா.”

கவினுடைய பேச்சில் மொத்தமாக அதிர்ந்து போனாள் தன்மயா.

“வாட்....? இது வரமாஆஆ....? நோ வே.... இது எவ்வளவு கொடுமையான நோய்.” என உடனடியாக மறுத்தாள் அவள்.

“நோ.... நோ.... அப்படி சொல்ல முடியாது பேபி. பில்லி மில்லிகன்னு ஒருத்தர் இந்த நோயால பாதிக்கப்பட்டிருந்தாரு. அவருக்குள்ள

கிட்டத்தட்ட இருபத்து மூணு கேரக்டர் இருந்துருக்கு.”

“ஓ மை காட்.... இருபத்து மூணா....?” என வாயடைத்துப் போனாள் மயா.

“எஸ். பில்லியோட சின்ன வயசுல அவனோட ஸ்டெப் ஃபாதர் அவனை ரொம்ப அடிச்சு துன்புறுத்தினாரு. அவனால அந்த வலியை தாங்கிக்கவே முடியலை. ஆனா இதனால அவனுக்குள்ள ஒரு ஆல்ட்டர் உருவாகிச்சு. அந்த கேரக்டர் பில்லியை அவங்க அப்பா கொடுமை படுத்தும் போதெல்லாம் வெளியே வந்து அந்த கொடுமைகளை தானே சுலபமா ஏத்துக்கும். இதனால பில்லி நிம்மதியா இருந்தான்.”

“ஐ கான்ட் பிலீவ் திஸ் கவின்.”

“இதெல்லாம் நிஜமாவே நடந்ததுதான் மயா. அதே போல மற்ற கேரக்டர்களும் அவனோட ஆசையை அவனோட ஏக்கங்களை நிறைவேத்துறதா இருந்திச்சு. அவனுக்கு ஆபத்து ஏற்படும் போதெல்லாம் அந்த கேரக்டர்ஸ் வெளியே வந்து அவனுக்கு ஹெல்ப் பண்ணும்” என்றவன் அவளை அழுத்தமாக பார்த்தான்.

“எ.... என்ன கவின்....? ஏன் என்னை அப்படி பார்க்கிற....?”

“நத்திங் பேபி. நிஜமான ஒருத்தன் தன்னோட வாழ்க்கைல ரொம்ப கோழையா இருப்பான். இதனால அவனுக்கு நிறைய அவமானங்கள் நிறைய மன அழுத்தங்கள் கண்டிப்பா வரும்.

அப்போ அந்த மன அழுத்தத்தை குறைக்க புதுசா ஒரு ஆல்ட்டர் வெளியே வரும். நிஜமானவனை விட ரொம்ப ரொம்ப பலசாலியா வரும்...” என்றவனின் கண்கள் ஜொலித்தன.

“ஆ.... ஆமா ஆமா....” என இழுத்தவாறு தடுமாறியவள் “அந்நியன் படத்துல வர்ற மாதிரிதானே...” என புன்னகைத்தாள்.

“எஸ்... அதுல அம்பி ஒரு அப்பாவி அவனால தப்பு பண்ற யாரையும் தண்டிக்க முடியலை. அதனால தப்பு பண்றவங்களை தண்டிக்கிறதுக்காகவே ரொம்ப டேஞ்சரான அந்நியன் கேரக்டர் வெளியே வரும். அதே மாதிரி அம்பிக்கு லவ் பண்ண தெரியலை. காதல் தோல்வியில தவிச்ச

அம்பியோட மன அழுத்தத்தை குறைக்க ரெமோங்கிற புது லவ்வர் பாய் ஆல்ட்டர் வெளியே வந்திச்சு.. இப்போ சொல்லு மயா இந்த நோய் வரமா....? சாபமா....?" என கேட்க அவளோ வாயடைத்துப் போனாள்.

"எ... எனக்கு சரியா சொல்லத் தெரியலை கவின் பட் இதனால நிஜமான நபருக்கு ஆபத்துதானே....? உனக்குள்ள இப்படி ரெண்டு கேரக்டர்ஸ் இருக்கிறது உனக்கு தெரியுமா....?"

"இல்ல மயா. எனக்கு இதுவரைக்கும் கொஞ்சம் டவுட் இருந்திச்சு. இப்போ நீ சொல்லித்தான் தெரிஞ்சுகிட்டேன். பட் நான் நிஜமாவே இப்படி இருக்கும்னு எதிர்பார்க்கலை."

“ம்ம் தேங்க்ஸ் கவின். நான் சொன்னதும் புரிஞ்சிக்கிட்டதுக்கு.”

“ம்ம்....” என்றவன் அருகே உள்ள மருத்துவமனையில் வண்டியை நிறுத்தினான்.

“ஹேய் ஏன் இங்க வண்டியை நிறுத்திட்ட....?”

“ஏன் இதுவும் ஹாஸ்பிடல்தானே....?” என்றான் கவின்.

“நான் சொல்ற ஹாஸ்பிடலுக்குப் போ கவின். அங்கேதான் என்னோட ப்ரண்டும் இருக்கா. அதனாலதான் அங்கே போகணும்னு சொன்னேன்.”

“ம்ம்....” என்றவனின் கரங்களில் கார் மிக வேகமாகப் பறந்தது. அவள்

சொன்ன மருத்துவமனை வந்ததும் காரை நிறுத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

“மயா நீ போய் டாக்டரை பார்த்துட்டு வா. நான் இங்கேயே வெயிட் பண்றேன்.”

“ஏன் கவின் நீயும் என்கூட வரலாமே.”

“நோ மயா பேபி. நீ போய்ட்டு வா. நான் வெயிட் பண்றேன்.”

“ம்ம் ஓகே. இங்கேயே இரு கவின்.” என்றவள் தாரதியைத் தேடிச் சென்றாள்.

அவளைப் பார்த்ததும் ஓர் நொடி அணைத்து விடுவித்தவள் மளமளவென காரில் நடந்த

உரையாடல் முழுவதையும் தாரதியிடம் அவசர அவசரமாக கூறி முடித்தாள்.

“தாரதி எனக்கென்னவோ கவின் ஒரிஜினல் இல்லையோன்னு சந்தேகமா இருக்கு.” என்றாள் தன்மயா.

“தனு கவின் ஒரிஜினலா இருக்கிறதாலதான் அவனுக்கு சித்து ஆதி பத்தி தெரியலை. அதாவது ஒரிஜினலுக்கு மட்டும்தான் எந்த கேரக்டர்ஸ் பத்தியும் தெரியாது. ஆனா மத்த ஆல்டர்களுக்கு எல்லா கேரக்டர்ஸ்ஸையும் நல்லாவே தெரிஞ்சிருக்கும்.”

“அப்போ ஆதிக்கும் சித்துக்கும் இடையில பழக்கம் இருக்குமோ....?” என கேட்டாள் தன்மயா.

“கண்டிப்பா. இதுல எதுவுமே தெரியாம ஞாபக மறதியால குழம்பிப் போய் தற்கொலைக்கு முயற்சி பண்றதுலாம் ஒரிஜினல் கேரக்டரா இருக்கும். உன் ப்ரண்ட் வந்திருக்காரா....?”

“ம்ம் ஆனா உள்ளே வர்றான் இல்லையே. அவனை எப்படி செக்கப்புக்கு சம்மதிக்க வைக்கிறதுன்னு தெரியலை.”

“ஏதாவது சொல்லி அழைச்சுட்டு வா தனு..”

“ஓகேடி....” என்றவள் கவின் இருந்த இடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

“கவின் என்கூட வா....” என்றதும் அவளைப் பார்த்து கழுத்தை

வளைத்து நெட்டி முறித்தவன் “யார் கவின்....?” எனக் கேட்டான்.

‘அச்சச்சோ இந்த கம்பீரமான குரல் ஆதியோடதுதானே....?’ என எண்ணியவள் அச்சத்தில் இரண்டு அடி பின்னால் நகர்ந்து நின்றாள்.

“யாரு கவின்னு கேட்டேன்....?” என்றவனுடைய கர்ஜனையில் கடந்து சென்ற தாதி நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்.

“ஷ்ஷ் ஏன் கத்துறீங்க ஆது. ப்ளீஸ் காம் டவுன்.”

“ஜஸ்ட் ஷட் யுவர் மவுத் இடியட்....” என இன்னும் அவன் உரத்த குரலில் அவளைத் திட்டவும் அவளது விழிகளோ கலங்கிப் போனது.

ஆதியோ தன் அருகே நின்று தன்மயாவை ஏளனமாகப் பார்த்துக் கொண்டிருந்த தாதியை ஏறிட்டவன் அவர் கரத்தில் வைத்திருந்த சிறு ஆப்ரேஷன் கத்தியை எடுத்துக் கொண்டான்.

"ஐயோ அதெல்லாம் எடுக்கக் கூடாது சார்." என்ற தாதியின் கழுத்தில் கத்தியை வைத்தவன் "எதுக்கு இப்போ என்னோட ட்ராமா குயினை அப்படிப் பார்த்த....?" என மிரட்டத் தொடங்க, தன்மயாவுக்கோ அவனது அடாவடியில் தலை சுற்றத் தொடங்கியது.

அவனை எப்படி சமாளிப்பது எனத் தெரியாது தவித்தவள் சட்டென மயங்கி விழுவதைப் போல தொப்பென தரையில் சரிந்தாள்.

எப்படியும் தான் மயங்கிச் சரிந்தால் பதற்றத்தில் தன்னை நெருங்கி வருவான் என நினைத்திருக்க, அவனோ குனிந்து மயங்கிக் கிடந்தவளைப் பார்த்தவன் “நாட் பேட் நல்லாவே ட்ராமா பண்றா....” என்றவாறு மீண்டும் அந்த தாதியை நோக்கி திரும்பினான்.

“ஐயோ சார். தெரியாம பார்த்துட்டேன். என்னை விடுங்க....” என அலறத் தொடங்கினாள் அந்த தாதி.

தன்மயாவோ தரையில் விழுந்து கிடந்து அவன் தன்னைத் தூக்க வருவான் என எண்ணிக் கொண்டிருந்தவள் அவன் அவளை கிஞ்சித்தும் கவனியாது போக சீற்றத்துடன் எழுந்து கொண்டாள்.

சட்டென அவனுக்கும் தாதிக்கும் இடையே புகுந்து ஆதியின் மார்பில் முகம் புதைத்தவள் “வீட்டுக்கு போகணும் ஆது....” என்க, அவனுடைய கோபமோ நொடியில் குறைந்தது.

தன் மார்பில் சாய்ந்திருந்தவளின் முகம் அவனது மார்புக் கூட்டில் புதைந்து போக, சட்டென அவளைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டவன் தன் காரை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

“ஹேய்....”

“சொல்லுங்க....”

“நீ எதுக்கு இப்படிலாம் ட்ராமா பண்றன்னு தெரியல. பட் இதுவும் நல்லாதான் இருக்கு.” என்றவன்

அவளைக் காரின் பின் சீட்டில் கிடத்தி தானும் காருக்குள் நுழைந்து கொண்டான்.

“ஹேய் அப்போ யார் காரை ட்ரைவ் பண்றது....?” எனக் கேட்டவளின் மீது படர்ந்தவன் “என்னை இப்போ ஹக் பண்ணு குயின்.” என கிசுகிசுப்பான குரலில் கூறினான்.

“எ.... எதுக்கு....?” அவனது அதீதமான நெருக்கத்தில் தடுமாறினாள் அவள்.

“காரணம் தேவைதானா குயின்....?” என்றவன் அவளுடைய கன்னத்தில் இதழ் பதிக்க நடுக்கத்தோடு அவளுடைய இமைகள் மூடிக் கொண்டன.

“நீ ஒரு டெவில் ஆதி.” என முணுமுணுத்த அவளுடைய இதழ்களை தன் இதழ்களால் உரசியவன் அவளை இறுக அணைத்தான்.

முதன் முறை அவனுடைய செயல்களில் தன்னை மறக்கத் தொடங்கினாள் தன்மயா.

“என்னடி உன்கிட்ட ஏதோ மாற்றம் தெரியுதே....” என்றவன் அவளது விழிகளில் முத்தம் இட்டான்.

“அப்படியா....? சரி போதும் விடுங்க.” என விலகியவளின் இடையில் தன் கரம் பதித்து அழுத்தியவன் “அசையாத ட்ராமா குயின். உன்னோட கண்ணு என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுதுடி....” என கிசுகிசுப்பான குரலில் கூறினான்.

படக்கென தன் விழிகளை மூடிக் கொண்டாள் தன்மயா.

அவளது விழிகள் மூடிய அடுத்த கணம் அவளுடைய இதழ்களை நெருங்கியவன் அவற்றை தன் தடித்த அதரங்கள் கொண்டு சுவைக்கத் தொடங்கினான்.

“ஆதீஈஈஈஈ.....” என தன்னை மறந்து முனகியவளின் அழைப்பு அவனுடைய இதழ்களுக்குள்ளேயே அடங்கிப் போனது.

ஆதியின் கரங்களின் வலிமை அவளது இடையை வலிக்கச் செய்தது.

ஒரு பூவைப் போல அவளை ஏந்தி அவளது இதழ்களில் தேனை அருந்தத் தொடங்கியவன் சட்டென

தன் தலையை உதறிய வண்ணம் அவளை வெறித்துப் பார்த்தான்.

அந்த நொடி ஆதி மறைந்து போக கவினுடைய ஆல்ட்டர் வெளியே வந்தது.

மிக மிக நெருக்கத்தில் அவனுடைய மயாவைக் கண்டவன் தடுமாறிப் போனான்.

அவனுடைய கரங்களில் இருந்த அவளை அவள் அனுமதி இன்றி தீண்டினான் கவின்.

இத்தனை நேரமும் தன் இடையை இறுகப் பற்றியிருந்த ஆதியின் கரத்தில் இருந்த வலிமை மறைந்து போக, சட்டென விழிகளைத் திறந்தாள் தன்மயா.

அதே நேரம் அவளை முத்தமிட நெருங்கினான் கவின்.

அவனது பார்வையில் அவன் ஆதி அல்ல என்பது புரிய சட்டென தள்ளி விட்டவள் "நீ.... நீ.... கவின் தானே....?" எனக் கேட்டாள் தன்மயா.

"நோ.... ஐ அம் ஆதி." என பொய் கூறியவாறு அவளை நெருங்கினான் கவின்.

மோகம் – 16

தன்னை மறந்து ஆதித்யனின் முத்தத்தில் திளைத்திருந்தவள் தீடீரென தன் இடையில் உணர்ந்த மென்மையில் மூடிய விழிகளை பதறியவாறே திறந்தாள்.

மீண்டும் தன்னை முத்தமிட நெருங்கியவனின் பார்வை

மாற்றத்தில் அவளுடைய இருதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

“நீ... நீ கவின்தானே....?” என பதற்றத்தோடு கேட்டவளை பார்த்தவன் “நோ ஐ அம் ஆதி....” என பொய் கூறினான்.

ஆதியின் கம்பீரமான குரல், அவனுடைய வலிமையான கரங்களின் அழுத்தம், தீர்க்கமான பார்வை போன்றவை இல்லாது போக, சட்டென அவனைத் தள்ளி விட முயன்றாள் தன்மயா.

அவளது மென்மையான இதயமோ படபடவென அடித்துக் கொண்டது.

கவினோ அவள் மீதுள்ள காதலை அடக்க முடியாது அவனைத்

தள்ள முயன்ற கரங்களை இறுகப் பற்றிக் கொண்டவன் காதலுடன் குனிந்து அவளது கன்னத்தில் முத்தம் பதித்தான்.

முத்தத்தில் கூட வேற்றுமையை உணர முடியுமா என்ன....?

அவளால் உணர முடிந்தது. அதை உணர்ந்த கணம் உதடுகள் அழுகையில் துடிக்க, அவனை உதறித் தள்ளியவள் சட்டென காரில் இறந்து இறங்கி வெளியே வந்து நின்று கொண்டாள்.

அவளுடைய மனம் தற்சமயம் எதை விரும்புகின்றது என அவளுக்கே புரியாது போக, தலை வெடிப்பதைப் போல இருந்தது.

இறுதியாக அவளை முத்தமிட்டது ஆதி அல்ல கவின் என்பதை உணர்ந்தவளுக்கு கவின் கூறிய பொய் கசந்து வழிந்தது.

'நீ ரொம்ப நல்லவன் கவின். ஏன் இப்படிலாம் பண்ற....?' என தனக்குள் கேட்டுக் கொண்டவள் வேதனையுடன் விழி மூடிக் கொண்டாள்.

தன் குழந்தையுடன் கண் காணாத இடத்திற்கு சென்றால்தான் என்ன...? என்ற எண்ணம் அவளை ஆக்கிரமிக்க சித்துவின் ஏக்கம் நிறைந்த முகம் அவளை அந்த முடிவு எடுக்க விடாமற் தடுத்தது.

'இவங்கள்ல யாரு நிஜம்....? எப்படி தெரிஞ்சிக்கிறது....? ஓ மை காட் கவின் நிஜமா....? ஆதி நிஜமா....?

குழப்பமா இருக்கே.' என தவித்தபடி நின்றவளின் தோள்களில் கரம் பதித்தான் கவின்.

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தவளைக் கண்டு அவனுக்கோ உள்ளம் உருகிப் போனது.

"ஹேய் ரிலாக்ஸ் மயா.... ஏன் பயப்படுற....?"

"ம்ஹூம் நத்திங்...."

"ம்ம்.... போகலாமா மயா பேபி....?"

"ம்ம்...." என்றவள் அவனை வைத்தியரிடம் காட்ட முடியாத ஏமாற்றத்தோடு மீண்டும் காரினுள் ஏறினாள்.

கவினுடைய முகமும் சற்றே இறுகிப் போயிருந்தது. அமைதியாக

காரை ஓட்டியவன் “எனக்கு உன்னை ரொம்ப ரொம்ப பிடிக்கும் மயா.” என்றான்.

“ம்ம் தெரியும்.”

“உன்கூட வாழணும்னு நான் ஆசைப்படுறது தப்பா மயா....?”

“.....”

“ப்ளீஸ் பதில் சொல்லு.”

“எனக்குன்னு ஒரு மனசு இருக்கும்தானே கவின்....? என்னால ஆதியையும் உன்னையையும் எப்படி ஃபேஸ் பண்ண முடியும்....?” என்றவள் தலை வலியை பரிசாக பெற்றுக் கொண்டாள்.

“ஹ்ம்ம்....”

“கவின் நீ ஏன் ட்ரீட்மென்ட் எடுத்துக்க கூடாது....?”

“ம்ப்ச் வேணாம் மயா.”

“இல்ல கவின் இந்த நோயை குணப்படுத்துறதுதான் உனக்கு நல்லது.”

“ஹேய் நான்தான் சொன்னேன்ல இது நோய் இல்ல வரம்னு.”

“வாட்....? வரமா....? நீ என்ன காரணம் சொன்னாலும் இதை என்னால ஏத்துக்க முடியாது கவின். உனக்கு இதோட சீரியஸ்னஸ் புரியல.”

“எனக்கு எல்லாமே தெரியும் மயா. இந்தப் பேச்சை இத்தோட வ்விடு.”

“என்ன தெரியும் உனக்கு....? உனக்குள்ள இருக்க ஆதிங்கிற

கேரக்டர் எவ்வளவு டேஞ்சர்னு உனக்கு தெரியுமா....? கோபம் வந்தா கன் எடுக்குறான் இல்லைன்னா கத்தியை கழுத்துல வைக்குறான்.

அதுவும் இல்லைன்னா அவனே சூசைட் பண்ண ட்ரை பண்ணிக்கிறான்.

அவனால எத்தனை பேருக்கு ஆபத்துன்னு யோசி கவின். நான் ஒவ்வொரு நிமிஷமும் பதறி பதறி நிம்மதி இல்லாம வாழ்ந்துகிட்டு இருக்கேன் கவின்." என்றவள் தன் கட்டுப்பாட்டை மீறி கதறி அழத் தொடங்கினாள்.

"ஐயோ மயா பேபி ப்ளீஸ்டி. டோன்ட் க்ரை...." என்றவன் காரை நிறுத்தினான்.

“ப்ளீஸ் மயா அழாத...”

“எப்படி அழாம இருக்க முடியும்....? நீங்கள்ளாம் யாரு....? எதுக்கு என்னோட வாழ்க்கைல வந்தீங்க....? நான் என்னோட லைஃப்ல இது வரைக்கும் எந்தவித சந்தோஷத்தையும் அனுபவிக்கலை கவின்.

எல்லாத்தையுமே இழந்து கஷ்டப்பட்டுட்டு இருக்கிற எனக்கு இன்னும் இன்னும் துன்பத்தை எதுக்காக கொடுக்கிறீங்க....?” என்றவள் தன் கண்ணீரை அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

“எஸ் என்னோட பையனோட உயிருக்காக ஆதிகிட்ட போனேன். அன்னைக்கே என்னோட எதிர்காலத்தை நான் குழி தோண்டி

புதைச்சுட்டேன். அன்னைல இருந்து இன்னைக்கு வரைக்கும் என்னை அவன் விடாம துரத்திகிட்டே இருக்கான்.

என்னால சமாளிக்க முடியல. இன்னொரு பக்கம் உன்னோட காதல். ஒரே உடம்புல நீங்க ரெண்டு பேரும் இருந்தாலும் நீயும் ஆதியும் ஒருத்தராகிட முடியாது கவின். ரெண்டு பேருமே வேற வேறதான். ஆதிக்கு என்னோட உடம்பையும் உனக்கு என்னோட மனசையும் என்னால கொடுக்க முடியாது. அது கேவலம் கவின். ப்ளீஸ் ட்ரை டு அன்டர்ஸ்டான்ட் மீ. ப்ளீஸ் ட்ரீட்மென்ட் எடுத்துக்கோ. நீ முழுசா சரியாகு கவின்.” என கிட்டத்தட்ட மன்றாடியவாறு கேட்டாள் தன்மயா.

அவளால் அந்த அழுத்தத்தை தாங்கிக் கொள்ள முடியாது போனது. இந்த பிரச்சனைக்கு முடிவு வேண்டுமெனில் கவின் முழுதாக குணமடைய வேண்டும் என்பதை உணர்ந்தவள் அவன் மனதை மாற்ற போராடினாள்.

“ஓகே மயா. நான் முழுசா குணமான நீ என்னைக் கல்யாணம் பண்ணிப்பியா....?”

“கவீஈஈஈன்....?” வாயடைத்துப் போனாள் தன்மயா.

“சொல்லு மயா. எனக்குள்ள இருக்கிற கேரக்டர்ஸ்ஸால உனக்கு இவ்ளோ பிரச்சனை வர்றதுல எனக்கு உடன்பாடு இல்லைடி. நீ எப்பவுமே கஷ்டப்படக் கூடாதுன்னுதான் நான் நினைப்பேன்.

ஆதி வெளியே வந்தா தானே உனக்கு பிரச்சனை....? இனி ஆதி வெளியே வராம தடுக்கிறதுக்கு நான் ட்ரை பண்றேன் மயா." என்றதும் அவளோ திகைத்தாள்.

'அப்போ இனி ஆதி வரமாட்டானா....? அப்போ என்னை யாரு ட்ராமா குயின்னு கூப்பிடுவாங்க....? என்னோட கண்ணை பார்த்து டிஸ்டர்ப்னு சொல்ல இனி அவன் வரமாட்டானா....?' என எண்ணி தவித்தாள் அவள்.

அடுத்த நொடியே தன் எண்ணம் போகும் போக்கை எண்ணி அவளுக்கோ வியப்பாக இருந்தது. தன்னை அணு அணுவாக துன்புறுத்தும் ஆதியைப் பற்றி அவள்

ஏன் எண்ணி கவலை கொள்ள வேண்டும்....?

'ஆண்டவா ஏன் என்னை இப்படி சோதிக்கிற....? என் மனசு ஏன் இப்படி தடுமாறுது....? ஒரு அரக்கனுக்காக நான் ஏன் இவ்ளோ யோசிக்கணும்....? கவின் பாவம். அவன் அவனோட வாழ்க்கையை ஒழுங்கா வாழணும்னா ஆதியும் சித்துவும் ஒரேடியா இல்லாம போகணும்.

இடைல வந்த ஆல்ட்டர் கவினை கட்டுப்படுத்த விடக் கூடாது.' என தனக்குள்ளேயே சிந்தித்து மூளையைக் கசக்கி பிழிந்தாள் தன்மயா.

"மயா நீ டென்ஷன் ஆகாதடி. எனக்கு ஒன்னும் ஆகாது. பார்த்துக்கலாம்...."

“ம்ம்ம் கவின் உனக்கு உன்னோட சின்ன வயசுல நடந்தது ஏதாவது ஞாபகம் இருக்கா....? ஏதாவது ட்ரெஸ் அதாவது மன அழுத்தம் ரொம்ப அதிகமா இருந்தாதான் இப்படி மன நோய் வரும்னு சொல்லுவாங்க. உன்னோட மனசுல இருக்கிறதை என்கிட்ட சொல்லு கவின்.

என்னால முடிஞ்ச அளவுக்கு அதை நான் சரி பண்ண ட்ரை பண்றேன்.”

“இதை உன்னால செய்ய முடியுமா மயா....?”

“உன்னோட சப்போர்ட் கிடைச்சா இதை என்னால பண்ண முடியும் கவின். ட்ரஸ்ட் மீ. ஐ வில் ஹெல்ப் யு.”

“தேங்க் யு மயா பேபி.” என்றவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான். அவனது அணைப்பில் உடல் தூக்கி வாரிப்போட அவன் அதை உணராதவாறு தன்னை அவனது பிடியில் இருந்து விலக்கிக் கொண்டவள் வீதியை வெறித்தாள்.

“நான் முழுசா குணமாகிட்டா நீ என்னைக் கல்யாணம் பண்ணிப்பியா....?” மீண்டும் கேட்டான் கவின்.

“அதுஉஉ.... க.... கவின் நா....”

“ம்ம்ச் நீ இதுக்கு ஓகே சொன்னா நான் ட்ரீட்மெண்ட்டுக்கு வர்றேன்.” என அழுத்தமான குரலில் கூறினான் கவின்.

தன்மயாவோ வேறு வழியின்றி அவன் விழிகளை பார்த்தவள் “நீ முழுசா குணமாகினா நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன். ஆனா....” என இடையில் நிறுத்தியவள் தன் உதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டாள்.

“ஆனா....? ஆனா என்னடி சொல்லு....?” என்றவனுடைய பார்வை அவளுடைய உதடுகளில் படிந்து வருடி ரசித்து அதில் மூழ்கியது.

“கல்யாணம் பண்ணிக்கிறேன். ஆனா என்னால உன்கூட எந்தவிதமான பிஸிக்கல் ரிலேஷன்ஷிப்பும் வெச்சுக்க முடியாது.”

“ஊஊஃப்ப் இதுதானா....? நான் கூட என்னவோ ஏதோன்னு

பயந்துட்டேன். எனக்கு நீ மட்டும் போதும் மயா.

உன்னோட உடம்பு எனக்கு தேவலை. காலம் முழுக்க உன்னோட கையை பிடிச்சுக்கிட்டே உன்னோட மடில படுத்துக்கிட்டே செத்துரணும்." என்றவனுடைய வார்த்தைகள் அவளுடைய மனதை வெகுவாக தாக்கின.

"இந்தளவு காதலை யாராலையும் காட்ட முடியுமா கவின்....? நான் உன்னோட காதலுக்கு தகுதியானவளா....? என் மேல இந்தளவுக்கு அன்பு காட்டாத கவின்."

"எனக்கு உன்னைத் தவிர வேற யார்டி இருக்கா....?" எனக் கேட்டவனது குரலும் கரகரப்பாக ஒலித்தது.

காருக்குள் நிலவிய அழுத்தமான சூழ்நிலையை மாற்றுவதற்காக காரில் இருந்த மியூசிக் சிஸ்டத்தை ஆன் செய்தாள் தன்மயா.

“காலையில் தினமும் கண் விழித்தால் நான் கை தொழும் தேவதை அம்மா.....” என்ற பாடல் பிளேயரில் ஒலிக்கத் தொடங்க, அந்த இசையில் தன்னை மறந்து விழிகளை மூடினாள் தன்மயா.

“ஹேஏஏஏஏ ஜாலி.... ஜாலி.... எனக்கு ரொம்ப பிடிச்ச பாட்டு போகுதேஏஏஏ....”என்ற குதூகலமான குரலில் விழிகளை மூடி இருந்தவளின் இதயம் தாளம் தப்பித் துடிக்கத் தொடங்கியது.

வெடுக்கென தன் விழிகளைத் திறந்து அவனைப் பார்த்தவள் “சி.... சித்தூ....?” என கேள்வியாக அழைத்தாள்.

“எஸ் மாம். இட்ஸ் மீ. ஹேய் ம்மா என்னை வெளியே கூட்டி வந்திருக்கீங்களா....? செம செம ஜாலி....” என குதூகலித்தான் சித்தார்த்.

“ஹி.... ஹி.... ஆமாப்பா....” என்றவளுக்கு பெருமூச்சு வெளிப்பட்டது.

வெளியே இருந்த பீட்ஸா கடையைப் பார்த்த சித்துவோ “ம்மாஆ எனக்கு பீட்ஸா வாங்கி தர்றியாம்மா ப்ளீஸ்....?” எனக் கேட்டான்.

அவனது கேள்வியில் புன்னகைத்தவள் “அச்சச்சோ பணம் எடுத்து வரலையே....” என்றவள் “ஹாங் சித்து உன்னோட பேண்ட் பாக்கெட்ல ஒரு பர்ஸ் இருக்கும் பாரு அதை என்கிட்ட கொடு.” என்றாள்.

“என்கிட்ட பர்ஸ் இல்லை மாம்...” என்றவாறு பின் பாக்கெட்டில் கை வைத்தவன் “மாம் இருக்கு இருக்கு....” என்றவாறு வியப்போடு அதனை எடுத்துக் கொடுத்தான்.

“நீ இங்கேயே இரு. நான் வாங்கிட்டு வர்றேன்.” என்றவள் கடைக்குச் சென்று அவன் கேட்ட பீட்ஸாவை வாங்கி வந்தாள்.

“வாவ் யம்மீஈஈஈஈஈ....” என்றவாறு உதடுகளில் அப்பிய வண்ணம் உண்டு கொண்டிருந்தவனை பார்த்தவள்

“சித்து சீக்கிரமா காரை ஸ்டார்ட் பண்ணு வீட்டுக்குப் போகணும். ரொம்ப இருட்டிருச்சு....” என்றாள்.

“ம்மாஆஆஆ என்கிட்ட லைசன்ஸ் இல்ல. பதின்மூணு வயசு பையன்கிட்ட காரை ஓட்டச் சொல்லுறீங்களே. எனக்கு ட்ரைவிங்கே தெரியாது.” என்றான் சித்தார்த்.

“ஓ மை காட்.... எனக்கும் ட்ரைவிங் தெரியாது.” என்றவாறு திகைத்தாள் தன்மயா.

“இட்ஸ் ஓக்கேமா. நான் வேணும்னா கவின் அண்ணாவை வரச் சொல்லட்டுமா....? அவர் நல்லாவே கார் ஓட்டுவாரு.”

“வாட்....? வாட் டிட் யு செய்ட்....? கவினா....? ஓ மை காட். உனக்கு கவினைத் தெரியுமா....? ஆ.... ஆதி தெரியுமா....?”

“ம்ம் ரெண்டு பேரையுமே தெரியுமே....”

“ஓ....???” என்றவள் சித்துவின் கரங்களைப் பிடித்தவாறு “உ.... உன்கூட யார் பேசுவாங்க....? ஆ.... ஆதி தானே....? கவினுக்கு உன்னைத் தெரிஞ்சிருக்காதே....” என்றவளை புரியாமல் பார்த்தவன் “நோ மாம் நானும் கவின் அண்ணாவும் பேசுவோமே. ஆதி அண்ணாக்குத்தான் எங்களைத் தெரியாது. நான் அவர்கூட பேசினதே இல்லைம்மா....” என்றவன் பீட்ஸாவை சுவைக்கத் தொடங்கினான்.

“அ.... அப்போ.... அப்போ ஒரிஜினல் பர்சனால்டி ஆதியாஆஆஆ....? ஆதியோட ஆல்ட்டர்தான் கவினா....?” என்றவள் விக்கித்துப் போனாள்.

உண்மைகள் அவளை திகைக்க வைத்தன.

மோகம் – 17

சித்தார்த்தின் மூலம் உண்மையை உணர்ந்து கொண்டவளுக்கு அதனை புரிந்து கொள்ளவே நெடு நேரமாகியது.

‘கவின் தான்தான் நிஜம் என்றெல்லவா கூறினான். எல்லா உண்மையும் தெரிஞ்சிருந்தும் இப்படி என்னை ஏமாத்திட்டானே.’ என எண்ணியவள் சோர்ந்து போனாள்.

‘ஆதி ஏன் இவ்ளோ மோசமா இருக்கான்.? அவன் இப்படி இருக்கிறதுக்கான காரணம் என்னவா இருக்கும்....? அவன்கிட்டப் போய் உனக்கு டி.ஐ.டி இருக்குன்னு சொன்னா என் கழுத்துல கத்தியை வெச்சாலும் வைப்பான்.’

அதை நினைத்ததும் அவளுடைய உடலோ அச்சத்தில் சிலிர்த்தது.

‘நோ வே. நான் கவினுக்குத்தான் ஹெல்ப் பண்ணனும்னு நினைச்சேன். ஆதிக்கு இல்ல. இந்த அரக்கனை குணப்படுத்தினா பலரோட வாழ்க்கை பலியா போயிரும். எனக்கு ஏன் தேவை இல்லாத வேலை.?

அந்நியனோ ரெமோவோ ஆளை வ்விட்ருங்கடா.

இன்னும் கொஞ்ச நாள் உங்ககூட இருந்தேன்னா எனக்கும் டி.ஐ.டி வந்துரும். நான் என் பையனோட எங்கேயாவது போயிடுறேன்.' என எண்ணிக் கொண்டவள் இனி இந்த பிரச்சனைக்குள் தான் நுழையக் கூடாதென முடிவெடுத்தாள்.

அதே நேரம் கவினுடைய அலைபேசிக்கு அழைப்பு வர அதனை ஏற்ற சித்துவோ "ம்மா ராமு அங்கிள் கால் பண்ணுறாங்க..." என்றவன் அவளிடம் அலைபேசியைக் கொடுத்துவிட்டு அவளுடைய தோள்களில் சாய்ந்து கொண்டான்.

யஷ்விந்த் குட்டியைப் பற்றி சிந்தித்து கொண்டிருந்தவள் ராமு கால் பண்ணவும் நிம்மதியுடன் அழைப்பை ஏற்றவள் தன் தோளில் சாய்ந்த சித்துவினைப் பார்த்து நெஞ்சம் நெகிழ்ந்தாள்.

“ஹலோ அங்கிள்.”

“அம்மாடி இந்த குட்டிப்பையன் உன்னை ரொம்ப தேடுறான்மா. சீக்கிரமா வாம்மா....” என்றதும் பதறித்தான் போனாள் தன்மயா.

“அங்கிள் அவனை கொஞ்சம் பார்த்துக்கோங்க அங்கிள். நான் சீக்கிரமா வர ட்ரை பண்றேன்.”

என்றவள் அழைப்பைத் துண்டித்தாள்.

தன் தோளில் வாகாக சாய்ந்து பாடல் கேட்டுக் கொண்டிருந்த சித்துவின் காதின் அருகே குனிந்தவள் “ஆதீஈஈ.... எக்ஸ்க்யூஸ் மீ கொஞ்சம் வெளியே வர முடியுமா ப்ளீஸ்....?” என கூறிப் பார்த்தாள்.

சித்துவோ அவளுடைய முகம் பார்த்து கிளுக்கி நகைத்து விட்டு மீண்டும் அவள் தோள் மீது படுத்துக் கொள்ள அவளுக்கோ ஐயோவென்றானது.

‘தேவை இல்லாத நேரத்தில எல்லாம் கூப்பிடாமலே வந்து நின்னு பயம் காட்டுவான். இப்போ வர்றான் இல்லையே....’ என மனதுக்குள் புலம்பியவள்,

“மிஸ்டர் ஆதித்யன்....????”

“ ஹலோஓஓஓஓ???”

“ஆதீஈஈஈஈ....?”

“மிஸ்டர் அந்நியன் கமான். வெளியே வாங்க. காரை ட்ரைவ் பண்ண ஆளில்லை. ஹெல்ப் மீ.”

“யோவ்....”

“டேய்....”

“அடேய் வெளியே வாடாஆஆஆ....”

(அம்மாடி ஈரோயின் நீ இப்படி பாசமா கூப்பிடுறது மட்டும் ஆதிக்கு கேட்டிச்சு. உன்னை காருக்குள்ளேயே குழி தோண்டி புதைச்சிருவான்.)

சித்துவோ அவளுடைய தோள்களில் தூங்கியே போனான்.

‘ஐயோ இந்த அந்நியன் வேற வர மாட்டான் போல இருக்கே. பேசாம கவினை கூப்பிட்டு பார்க்கலாமா....? வேற வழி இல்ல. டைம் வேற போய்கிட்டே இருக்கு. கவின்கிட்ட ஹெல்ப் கேட்போம்.’ என நினைத்தவாறு,

“கவின்....?”

“கவீஈஈஈஈஈஈன்....?” என உரத்த குரலில் அழைத்தாள் தன்மயா.

“வாட்....? இப்போ என்ன சொல்லி கூப்பிட்ட....?” என்றவாறு அவளுடைய தோள்களில் இருந்து எழுந்தான் ஆதி.

‘அம்மாடியோ வந்துட்டான். ஆனா வந்திருக்கிறது யாருன்னு தெரியலையே. பதட்டத்துல குரலைக்

கவனிக்கலையே.' என எண்ணியவாறு அவனைப் பார்த்து சிரித்து வைத்தாள் தன்மயா.

அவளுடைய சிரிப்பைப் பார்த்து தன் ஒற்றை புருவத்தை உயர்த்தி தன் சிகையை அழுந்தக் கோதியவன் அவளைப் பார்த்தவாறே நெட்டி முறிக்க, வந்திருக்கிறது நம்ம டெரர் பீஸ் என்பதை புரிந்து கொண்டவள் "ஹி.... ஹி.... ஆதி சார்னு கூப்பிட்டேன்." என சமாளித்தாள்.

"ஓ...." என்றவனுடைய பார்வை அவளை கூர்மையாக அளவிட்டது.

'இப்போ எதுக்கு இவன் நம்மளை இப்படி பார்க்கிறான்' அவளுக்கோ அவனுடைய பார்வையை சந்திக்க முடியாது போக,

தன் பார்வையை விலக்கிக் கொண்டாள்.

அடுத்த நொடியே கார் ஸ்டேரிங்கில் தன் கரத்தை ஓங்கித் தட்டினான் ஆதி.

அந்த சத்தத்தில் பதறியவள் 'இவனுக்குள்ளே இருக்கிற ஆல்ட்டர்ஸ்ஸை கூட நான் சமாளிச்சிருவேன். ஆனா இவனை பார்த்தா மட்டும் இப்படி பதறுதே.' என எண்ணியவள்,

"எ.... என்னாச்சு....?" எனக் கேட்டாள்.

"முதல்ல நான் எதுக்கு உன்கூட ஹாஸ்பிட்டல் வந்தேன்.? அப்புறம் நாம கிஸ் பண்ணோம்.. அப்புறம் என்னாச்சு....? எனக்கு ஏன் எதுவுமே

ஞாபகம் இல்ல....?" என்றவன் தன் தலையை அழுந்தப் பற்றிக் கொண்டான்.

"அதுஉஉ.... அதுஉ வந்துஉ.... எனக்கு உடம்பு சரியில்லைன்னு டாக்டர்கிட்ட வந்தோம்."

"உனக்கு உடம்பு சரியில்லைன்னா நீ மட்டும் வர வேண்டியதுதானே. என்னை எதுக்குடி கூட்டிட்டு வந்த.?"

"இல்ல நீங்களேதான் என்கூட வந்தீங்க." என்றவளுக்கு உடல் உதறத் தொடங்கியது.

"எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லையே. என்னோட லென்ஸ் எங்கே குயின்....?"

"தெ.... தெரியலைங்க...."

“ஷிட்....” என்றவன் தான் அணிந்திருந்த ஷர்ட்டை பார்த்து முகம் சுளித்தான்.

சட்டென ஷர்ட்டின் பட்டன்கள் அத்தனையையும் கழற்றியவன் அந்த ஷர்ட்டை கழற்றி காருக்கு வெளியே வீசினான்.

“ஐ ஹேட் ஷர்ட்ஸ் டாமிட்.” என்றவனைக் கண்டு எச்சில் விழுங்கியவள் அவனுடைய வயிற்றில் இருந்த சூட்டுத் தழும்பைக் கண்டு பதறிப் போனாள்.

எத்தனையோ தடவை அவனை டீஷர்ட் இன்றி பார்த்தவள் இந்தத் தழும்பை எப்படி கவனிக்காது விட்டாள்....?

அவன் அருகே நெருங்கினால் பீதியில் அனைத்தும் அவளுக்கு குருடாகி விடும் போல.

மிக பெரிதாக இருந்த தழும்பைக் கண்டு வருந்தியவள் தன்னை அறியாமலேயே அவனது வயிற்றில் கரம் பதித்தாள்.

“ம்ப்ச்....” என அவளுடைய கையை தட்டி விட்டான் ஆதி.

“இ.... இது எப்படி வந்திச்சு....? ஏதாவது ஃபயர் ஆக்ஸிடன்ட்டா ஆதி சார்....?”

எனக் கேட்டவளை அலட்சியமாக பார்த்தவன்,

“இது என்னோட பர்த்டே கிஃப்ட்.” என்றான்.

“வாட்....? இ.... இதுவா....? எனக்கு புரியலை ஆதி....? என்ன கி:ப்ட்....?” என நம்ப முடியாது மீண்டும் கேட்டாள் தன்மயா.

“இந்தத் தழும்பு என்னோட பர்த்டேக்கு கிடைச்ச கி:ப்ட்.” என்றதும் அவளுடைய உடல் தூக்கி வாரிப்போட்டது.

“ஏ....? ஏன்....?”

“எனக்கு எங்க அம்மான்னா ரொம்ப பிடிக்கும். அப்போ எனக்கு பதின்மூணு வயசு. எல்லா அம்மாவும் தன்னோட பையன் பர்த்டேக்கு பரிசு கொடுத்து முத்தம் கொடுப்பாங்கதானே ட்ராமா குயின்.? எங்க அம்மா எனக்கு எதுவுமே தரலை. அதனால நானே அவங்ககிட்ட போய் கி:ப்ட்

கேட்டேன்." என்றவன் சற்று நேரம் நடுங்கிய தன் கரத்தை தன் தொடையில் வைத்து அழுத்திக் கொண்டான்.

அவன் வலியை தாங்க முயற்சி செய்கிறான் என்பது புரிய, சட்டென அவனுடைய கரத்தை தன் மென்மையான கரங்களால் பிடித்துக் கொண்டாள் தனு.

"நானே கி:ப்ட் கேட்டேன்ல அப்போ அவங்க எனக்காக கொடுத்த ஸ்பெஷல் கி:ப்ட்தான் இது." என்றவனுடைய குரல் விரக்தியாக ஒலித்தது.

தன்மயாவோ துடித்துப் போனாள்.

“என்னை தர தரன்னு இழுத்துட்டு போய் கிட்சன்ல வெச்சு என்னோட ஷர்ட்ட் பட்டன்களை பிச்சு வயித்துல சூடு வெச்சாங்க. அன்னைல இருந்து நான் ஷர்ட் போட்டுக்கவே மாட்டேன்.” என கூறிக் கொண்டிருந்தவனை பாய்ந்து அணைத்துக் கொண்டாள் தனு.

அவள் உடலோ அழுகையில் குலுங்கத் தொடங்கியது.

“பதின்மூணு வயசு பையனுக்கு என்ன தெரியும்....? ஐயோ ஏன் ஏன் ஏன் இப்படி பண்ணினாங்க.... கடவுளே.... ரொம்ப வலிச்சுதா ஆதி....? எ.... எப்படி தாங்கிகிட்டீங்க....? இந்த உலகத்துல இப்படியும் பொண்ணுங்க இருக்காங்களா....?’ என ஏதேதோ

புலம்பியவாறு அவனை அணைத்துக் கொண்டு கதறியது பெண் மான்.

“ட்ராமா குயின்....?” என மெல்ல அழைத்தான் ஆதி.

“எனக்கு ரொம்ப.... ரொம்ப கஷ்டமா இருக்கு ஆதி.... என்னால தாங்க முடியலை.” என அழுதவளை விசித்திரமாகப் பார்த்தான் அவன்.

“எனக்காக ஏன் நீ அழுற....?”

“தெ.... தெரியலைங்க....”

“என்னோட வலி உனக்கு புரியுதா குயின்....?”

“எ... எஸ் ஐ ஃபீல் யுவர் பெயின் ஆதி. இட்ஸ் ஹர்ட் மீ எலாட். இங்க வலிக்குது....” என தன் மார்பை சுட்டிக் காட்டி அழுதவளை முதல் முறையாக

மோகம் இன்றி அணைத்துக் கொண்டான் ஆதி.

“எனக்காக முதல் முறை ஒருத்தர் அழுறாங்க.... வாவ் அமேஸிங் ஃபீல்....” என சிரித்தவனின் மார்பில் இன்னும் தன் முகத்தைப் புதைத்தவள் ஏங்கி ஏங்கி அழலானாள்.

“இதெல்லாம் எதுக்கு என்கிட்ட சொன்னீங்க....? எதுக்கு என்னை ஹர்ட் பண்றீங்க ஆதி.?” என அவன் முகம் பார்த்து கேட்டவளின் கன்னத்தை பற்றியவன் சிரிக்கத் தொடங்கினான்.

“ஹா.... ஹா....”

“ஏன் சிரிக்கிறீங்க....?”

“எல்லாத்தையும் சொல்ல சொல்லி நல்லா கதை கேட்டுட்டு இப்போ ஏன் என்கிட்ட சொன்னீங்கன்னு கேட்டா சிரிக்காம என்னடி செய்றது.?” என்றான் அவன்.

“உங்களுக்கு சிரிக்கக் கூடத் தெரியுமாப்பா....?” என வியந்தவளின் கன்னத்தில் முத்தம் இட்டவன், அவளுடைய மூக்கிலும் தன் அதரங்களைப் பதித்தான்.

அவனது முத்தத்தில் தன் முட்டைக் கண்களை விழித்துப் பார்த்ததாள் தன்மயா.

“ஓ மை காட். அகைன் அன்ட் அகைன் உன்னோட கண்ணு என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுதுடி.” என்றான்.

“அதுக்காக நான் கண்ணை கழட்டியாப்பா வைக்க முடியும்....?” எனக் கேட்டவள் அப்போதுதான் அவனுடைய வெற்று மார்பில் ஒய்யாரமாக சாய்ந்திருப்பதைக் கண்டு பதறி விலகினாள்.

அவளது எலுமிச்சை வர்ண முகமோ சட்டென செந்தாமரையாக மாறிச் சிவந்து போனது.

“ஹேய் இதென்ன கன்னம்லாம் இப்படி சிவக்குது.? என்னாச்சு ட்ராமா குயின்.?” என்றவன் அவளை விலக விடாமற் தடுத்துப் பிடித்தான்.

“தெ... தெ... தெரியலைங்க.”

“இப்போல்லாம் நீ ரொம்ப திக்கித் திக்கிப் பேசுற....?” என்றவன் அவளை விடுவித்தான்.

பெருமூச்சோடு விலகி சீட்டில் சாய்ந்தவள் தன் பதற்றத்தை தணிக்க விழிகளை மூடிக் கொண்டாள்.

அவள் விழி மூடிய அடுத்த நொடி அவள் மீது படர்ந்தவன் அவளது கழுத்தில் முகம் நுழைத்து தேடல் புரிய, பதறியவள் "சார்.... வீட்டுக்கு போகலாம் ப்ளீஸ்...." என்றாள்.

"ஓ.... ஆனா எனக்கு வீட்டுக்குப் போகத் தோணலையே...."

"ஐயோ யஷ்விந்த்துக்கு சாப்பாடு ஊட்டணும். ப்ளீஸ் அவன் நான் இல்லாம இருக்க மாட்டான். வீட்டுக்கு போகலாமே ப்ளீஸ்." என்றவளின் கழுத்தை இறுகப் பற்றியவன்

“இன்னைக்கு முழுக்க நாம இங்கேதான் இந்தக் காருக்குள்ளேயே ஸ்டே பண்ண போறோம்...” என அழுத்தமான குரலில் கூறினான்.

அவளோ அவனுடைய வார்த்தைகளின் அழுத்தத்தில் பதறியவளாக தன் மகனை எண்ணி துடிக்கத் தொடங்கினாள்.

“ஆதி ப்ளீஸ்....”

“ஜஸ்ட் ஷட் அப் ப்ளடி இடியட்....” என்றவன் அவளுடைய மடியில் சரிந்து படுத்தான்.

அவளுடைய கரங்களை எடுத்து சிகையில் வைத்தவன் “ம்ம் மசாஜ் பண்ணி விடு....” என்றவாறு உறங்குவதற்கு ஆயத்தமாக,

அவளுக்கோ விழி நீர் சொட்டத் தொடங்கியது.

“நீ ஒரு டெவில் ஆதி.” என்றவளைப் பார்த்தவன் இமை சிமிட்டிச் சிரித்தான்.

மோகம் – 18

“நீ ஒரு டெவில் ஆதி....” என்றவளின் முகத்தை நிமிர்ந்து பார்த்தவன் “எஸ் ஐ அம்....” என்றவாறு இமை சிமிட்டிச் சிரித்தான்.

அவளுக்கோ எரிச்சலாக இருந்தது. அவனுடைய பிடிவாதம் அவளுக்கு வெறுப்பையே உண்டாக்கியது.

“ஆதி சார் ப்ளீஸ்.... வீட்டுக்கு போங்க....”

“.....”

“ஏன் இவ்ளோ மோசமா பிஹேவ் பண்றீங்க....?”

“.....”

அவனோ எந்த பதிலும் இன்றி அமைதியாக அவளது மடியில் படுத்திருக்க, அவளுக்கோ தன் மகனை எண்ணி கவலை கூடிப் போனது.

நேரம் செல்லச் செல்ல அவளுக்கோ விழிகள் கசியத் தொடங்கின. அதற்கு மேல் பொறுக்க முடியாதவள் தன் மடியில் கிடந்தவனைத் தள்ளி விட்டாள்.

“ம்ப்ச் என்னடி..?”

“நான் என்னோட பையனை பார்க்கணும்.”

“பாரு....”

“வீட்டுக்குப் போகணும் ஆதி சார்.” என்றவளின் மடியில் இருந்து எழுந்தவன் அவளது கலங்கிய விழிகளைப் பார்த்தவாறு “போ....” என்றான்.

சட்டென கார்க் கதவைத் திறந்தவள் அந்தக் காரில் இருந்து இறங்கி இருளுக்குள் நடக்கத் தொடங்கினாள்.

அவளுக்கு வீடு எந்தப் பக்கம் உள்ளதென்றோ இன்னும் எவ்வளவு தூரம் நடக்க வேண்டுமென்றோ எதுவுமே தெரியாது போக, ஏதோ கால் போன போக்கில் நடக்கத் தொடங்கியவளின் முன்னே வந்து வழியை மறித்தான் ஆதி.

அவளோ அவனை நிமிர்ந்து பார்க்க, அவளுடைய விழிகளை பார்க்காது அவளது உதடுகளை பார்த்தவன், “திமிராடி....?” என உறுமினான்.

அவளோ அவனைத் தாண்டிச் செல்ல முற்பட, சட்டென அவளது கரத்தை பிடித்து சுண்டி இழுத்தவன் அவள் தன் உடலோடு மோதி நிற்கவும் அவளது முகத்தில் தன் விரலால் கோடிடத் தொடங்கினான்.

அவனது செயலில் பொங்கிய கோபத்தை மறைத்துக் கொண்டவளுக்கு அவனுடைய விரலை உடைக்க வேண்டும் போல இருந்தது.

அந்த வழியே போவோர் வருவோர் யாவரும் இவர்களையே

பார்த்தபடி செல்ல, அவளுக்கோ அவமானத்தில் உடல் இறுகியது.

அவனோ அதை பற்றி கிஞ்சித்தும் கவலை கொள்ளாது அவளை காரினுள் ஏறப் பணித்தவன் அமைதியாக காரை செலுத்தத் தொடங்கினான்.

தன் தாயின் செயல்களால் பெண்களை வெறுத்தவனுக்கு தன்மயா மாத்திரம் விதிவிலக்காக மாறிப் போனாள்.

ஒரு மணி நேரத்தின் பின் வீட்டை வந்தடைந்தவன் காரை நிறுத்திய அடுத்த நொடியே அம்பெனப் பாய்ந்து வீட்டிற்குள் ஓட முயன்றாள் தன்மயா. அந்த நொடியே தன் மகனை பார்க்க வேண்டும் என்ற ஏக்கம் அவளை ஆக்கிரமித்தது.

சட்டென அவளைப் பிடித்து நிறுத்தியவன் அவளுடைய தோள் மீது கரம் பதித்து தன்னோடு அழைத்துச் செல்லத் தொடங்கினான்.

“என்கூடவே வாடி.”

தன்னை தடுத்து நிறுத்திய கரத்தை காய்கறியை வெட்டி துண்டாக்குவதைப் போல துண்டாக்க நினைத்தவள் எரிச்சலோடு உள்ளே நுழைந்தாள்.

நினைக்கும் அனைத்தையும் செயற்படுத்தும் வல்லமை அவளுக்கு இருந்திருந்தால் இவ்வளவு இழி நிலைக்கு அவள் ஆளாகியிருக்க மாட்டாளே.

அதே நேரம் ஹால் சோபாவில் காத்திருந்த ராமுவைக் கண்டதும் தன்

பையனை பற்றி விசாரிக்கத் தொடங்கினாள் தன்மயா.

“அங்கிள் யஷ்விந்த் எங்கே....?”

“அவன் தூங்கிட்டான்மா.”

“ஏதாவது சாப்பிட்டானா அங்கிள்....?” என்றவளுக்கு குரல் அழுகையோடு ஒலித்தது.

“பால் கலந்து கொடுத்தேன்....”

“தேங்க்ஸ் அங்கிள்.” என மனம் நெகிழக் கூறியவள் நேரே கவினுடைய அறைக்குள் நுழைந்து தூங்கும் தன் மகனை வருடிக் கொடுக்கலானாள்.

அவளின் பின்னேயே வந்த ஆதியோ கவினுடைய அறையைக் கண்டு முகம் சுளித்தான்.

“ச்சே ரூமுக்கெல்லாம் எதுக்கு இவன் பெர்பியூம் அடிக்கிறான்....?” என சினந்தவன் “நம்ம ரூமுக்கு போகலாம் குயின் கம்....” என அழைத்தான்.

அவனது பேச்சில் அதிர்ந்தவள் “இது யார் ரும்னு உங்களுக்கு தெரியுமா....?’ எனக் கேட்டாள்.

“எஸ் இது கவினோட ரூம்.” என்றதும் அவளுக்கோ தலை சுற்றுவதைப் போல இருக்க சட்டென தன் அருகே இருந்த கட்டிலை இறுகப் பற்றிக் கொண்டு நின்றாள் தன்மயா.

“உ... உங்களுக்கு க.... கவினை எப்படித் தெரியும்....?” என திகைத்தவாறு கேட்டவளைப் பார்த்தவன் கேள்வியாக புருவம் உயர்த்தினான்.

பொறுமையின்றி மீண்டும் மீண்டும் கேட்டவளை அழுத்தமாக பார்த்தான் அவன்.

“உனக்கு எதுக்கு அது....?” என்றவனுடைய பார்வை யஷ்விந்தை வருடிக் கொண்டிருக்கும் அவளுடைய வெண்டைப் பிஞ்சு விரல்களில் படிந்தது.

அவளோ தன் மகனை விரல்களால் வருடி தன் கரங்களில் ஏந்திக் கொண்டவள் தூக்கித் தோள்களில் போட்டுக் கொண்டு அந்த அறையினுள்ளேயே நடக்கத் தொடங்கினாள்.

தன் அன்னையை உணர்ந்த யஷ்விந்தின் சிணுங்கலில் நெஞ்சம் நெகிழ குனிந்து முத்தம் பதித்தவள்

தன் முத்தத்தை தன் மகனுக்கு தொடர் பரிசாக வழங்கினாள்.

“ஏய் காது கேட்கலையாடி....?” என ஆதியின் கர்ஜனையில் சட்டென நெருங்கி அவன் வாயில் தன் கரம் கொண்டு மூடியவள் “ஷ்ஷ் பையன் தூங்குறான். சத்தம் போடாதீங்க ஆதி சார்” என்றாள்.

அவனது விழிகளோ சிவந்து போயின. அடக்க முடியாத சினத்தில் அவள் கையில் இருந்த யஷ்விந்த் குட்டியை அவளிடம் இருந்து பிடுங்கியவன் அவளைத் திரும்பியும் பாராது தன் அறைக்குள் செல்லத் தொடங்கினான்.

அவளோ பதறியவாறே அவனின் பின்னே சென்றவள் அவன்

கரங்களில் இருந்த குழந்தையை தன் கரங்களில் வாங்கிக் கொண்டாள்.

"உங்களுக்கு எ.... எப்படி கவினை தெரியும்....?" மீண்டும் அதே கேள்வியில் அவனுக்கோ சலித்துப் போனது.

"ம்ப்ச் அவன் ஒரு வருஷமா இந்த வீட்லதான் இருக்கான். ராமுவோட அண்ணன் பையனாம். பிஸ்னஸ் விஷயமா இங்க இருக்கான். அடிக்கடி என்னோட ரூமை க்ளீன் பண்ணி வைப்பான். பட் ஐ ஹேட் இட்...."

அவனது அறியாமை அவளை வலிக்கச் செய்தது. அவனுக்குள் இருக்கும் ஆல்ட்டரை தனி ஒரு மனிதன் என நம்ப வைத்துள்ளனர் என்பதை புரிந்து கொண்டவள்

அவனுக்கு உண்மை தெரிய வேண்டுமென எண்ணினாள்.

“இதெல்லாம் உங்களுக்கு யார் சொன்னது ஆதி சார்.?”

“ராமு.... அப்புறம் கவினும் சொன்னான்.”

“வாட்....? இம்பாஸிபிள்.... கவின்கூட பேசினீங்களா....?’

“எஸ் அவன் ரொம்ப பிஸி. அவன் ஃப்ரீயா இருக்கிற டைம்ல நான் பிஸி. நேர்ல நாங்க மீட் பண்ணதே இல்ல. அவன் என்கிட்ட ஏதும் சொல்லணும்னா மெயில் பண்ணுவான்.” என்றவன் கண்களால் அவளை அழைத்தான்.

அவள் எங்கே அவனுடைய அழைப்பைக் கண்டாள்....? அவள்தான்

அவன் பேசிய வார்த்தைகளில் உறைந்து போய் நின்று விட்டாளே.

ஆதிக்கும் கவினுக்கும் இடையேயான உரையாடல் மின்னஞ்சல் மூலம் இடம்பெறுகின்றது என்பது அவளை அதிர வைத்தது.

உண்மை ஏதும் அறியாத ஆதியின் நிலை அவளை வேதனை கொள்ள வைத்தது.

தனக்குள்ளேயே வசித்துக் கொண்டிருக்கும் நபரை தன் வீட்டினுள் வசிக்கும் நபராக எண்ணிக் கொண்டிருந்த ஆதிக்கு எப்படி உண்மையை புரிய வைப்பது எனத் தெரியாது குழம்பிப் போனாள் மாது.

“அப்போ உங்களுக்கு சி.... சித்துவை தெரியுமா....?”

“சித்துவா....? எவன் அவன்....?” என அலட்சியமாக கேட்டான் ஆதி.

அவனது கேள்வியிலேயே அவனுக்கு சித்துவை பற்றி எதுவும் தெரியாது என்பதை புரிந்து கொண்டவள் அத்தோடு தன் கேள்விகளை நிறுத்திக் கொண்டாள்.

யஷ்விந்த் குட்டி மீண்டும் உறங்கி விட, அவனை படுக்கையில் கிடத்தி விட்டு திரும்பியவள் ஆதியின் வலிமையான மார்பின் மீது மோதி திகைத்து நின்றாள்.

“எ.... என்ன....?” எனத் திணறியவளை இழுத்து அணைத்தவன் அதிரடியாக அவளைத்

தன் கை வளைவிற்குள் கொண்டு வந்தான்.

“என்ன எதுவுமே தெரியாத மாதிரி கேட்குற....? உன்னை எதுக்காக இங்க அழைச்சுட்டு வந்தேன்னு மறந்திருச்சா ட்ராமா குயின்.?” என்றவன் அவளுடைய கழுத்தடியில் தன் முகத்தை நுழைக்க, அவளுக்கோ உள்ளம் பதறியது.

‘இந்த வேதனை எல்லாம் நான் நிச்சயம் அனுபவிக்கத்தான் வேண்டுமா....?’ என எண்ணிக் கொண்டவள் தன் மன உணர்வுகளோடு போராடத் தொடங்கினாள்.

அவனோ அவளில் அத்து மீற, “பை... பையன் இருக்கான்.” என தடுமாறி விலகியவளை மீண்டும் தன்

நெருக்கத்தில் கொண்டு வந்தவன் அவளை தன் அறைக்குள் இருந்த இன்னொரு அறைக்குள் அழைத்துச் சென்றான்.

அவள் உடலோ தன் நடுக்கத்தோடு கூடிய நர்த்தனத்தை இனிதே ஆரம்பித்தது.

அவளது புடவை முந்தானையை களைந்தவன் அவளை பார்வையால் மேலும் துகில் உரிக்க, மனதின் ரணமோ அவளுக்கு கண்ணீராக வெளிப்பட்டது.

அவளது விழிகளில் சுரந்த நீர் அவனை பாதிக்கவே இல்லை.

“இதெல்லாம் தப்பு ஆதி சார்.” எனக் கூறியவளின் இதழ்களை

அவன் அடுத்த கணமே சற்றும் தாமதியாமல் சிறைப் பிடித்திருந்தான்.

அவனுடைய வன்மையான கரம் அவளுடைய மென்மையான பட்டுப் போன்ற இடையை வளைத்து இறுகப் பிடித்திருந்தது.

ஒரு கட்டத்தில் அவனைத் தள்ளி விட்டவள் அழுகையோடு அந்த அறையை விட்டு வெளியேற முயல, அவளது கரத்தை அழுந்தப் பற்றினான் ஆதி.

“எதுக்குடி இப்போ ட்ராமா பண்ணிகிட்டு இருக்க....? நீதானே என்னை முதல்ல தேடி வந்த....” என்றவன் அதிகரித்த சினத்தில் “ஓஹோ பணம் வேணுமோ....? அஞ்சு லட்சம் கொடுத்தாத்தான் அன்னைக்கு மாதிரியே அட்ஜஸ் பண்ணுவியா

குயின்....?" என்றவன் தன் லாக்கரை திறந்து சில பணக் கட்டுக்களை கொண்டு வந்து அவள் மீது விட்டெறிந்தான்.

"எல்லாத்தையும் எடுத்துக்கோ. இப்போ என்னை டென்ஷன் மட்டும் பண்ணாத குயின்." என இறுக்கமான குரலில் கூறியவன் அவளை படுக்கையில் தள்ளி தன் மோக வேட்டையை தொடர்ந்தான்.

அவளுக்கோ மன அழுத்தம் ஏகத்துக்கும் கூடிக் கொண்டே போனது.

அவள் ஒன்றும் நிஜமாகவே திருமணம் முடித்து உடல் உறவுக்கு பழக்கப்பட்டு குழந்தையை ஈன்றெடுக்கவில்லை அல்லவா....?

காதலால் உறவால் கணவனால் மென்மையாக மலர வைக்க வேண்டிய தாம்பத்தியம் அவளுக்கோ வற்புறுத்தலினால் தொடங்கப்பட்டது.

முதல் தடவை அவன் அவளை எடுத்துக் கொண்ட போதே கதறித் துடித்தவள் இப்போதோ பயந்தே போனாள்.

அவனுக்கு இது போன்ற கவலைகள் ஏதும் இல்லை போலும்.

அவளது வதனத்தை ஆழ்ந்து ரசித்தவன் அணு அணுவாக ஓரிடம் தவறாமல் தன் முத்தத்தை அவளுக்கு சமர்ப்பித்துக் கொண்டே வந்தான்.

“ஆ.... ஆதி வ்வேணாம்... ப்ளீஸ்.” என்றவளின் கரு நதி போன்ற கூந்தலில் முகம் புதைத்தவன்

அதிலேயே மெய் மறந்து தன் முகத்தை புரட்டினான்.

அவனது கரங்களோ அவளது குண்டுக் கன்னங்களை அழுந்தப் பற்றி அவளது இதழ்களில் தன் அதரங்களைப் பதிக்க, அவளது விழிகள் இறுக மூடிக் கொண்டன.

அவளது உடல் நடுக்கத்தை உணர்ந்து கொண்டவன் அவளுக்கு சற்று இடைவெளி கொடுத்தான்.

“நீ ரொம்ப வித்தியாசமான பொண்ணுடி....” என்றவன் அவளது கழுத்தில் அரும்பிய வியர்வைத் துளிகளை தன் கரம் கொண்டு துடைத்தான்.

“உன் பையன் மேல ரொம்ப பாசம் வெச்சிருக்கல்ல....?”

என்றவனின் குரலில் சற்றே ஏக்கமும் கலந்து ஒலித்தது.

அவனுக்கு கீழே படுத்திருந்த பெண் மயிலின் விழிகள் உவர் நீரை சுரந்தன.

அவளுடைய கலங்கிய விழிகளில் குனிந்து முத்தம் வைத்தவன்,

“வற்றாத நீர்ச் சுனை இவ் வையகத்தில் உண்டெனில், அது என்னவளின் கரு விழிகளே...” என முணுமுணுத்தவன் மீண்டும் அவளுடைய இதழ்களில் புதைந்து போனான்.

மோகம் – 19

பெண்கள் என்ன வெறும் சதையை மாத்திரம் கொண்ட போகப் பொருளா....?

தன் இஷ்டத்துக்கு அவர்களை பயன்படுத்திக் கொள்ள அவர்கள் என்ன உயிரற்ற சடப் பொருளா....?

உணர்வும் உயிரும் நிரம்பிய மெல்லிய மனம் கொண்டவர்களே பெண்கள்.

இதையெல்லாம் இந்த ஆதி அறியவே இல்லையா....?

ஆதித்யனைப் பொறுத்த வரையில் பெண்கள் வஞ்சம் கொண்ட மனம் படைத்தவர்கள்...!!

இரக்கம் இல்லாத கயவர்கள்....!!

தன் குழந்தையைக் கூட கொல்லத் துணிந்தவர்கள்....!!

தங்களுடைய இன்பத்துக்காக எந்த அளவிற்கும் செல்பவர்கள்....!!

பணம் என்றால் அத்தனைக்கும் அடிபணிபவர்கள்....!!

மொத்தத்தில் கல் மனம் கொண்டவர்கள்....!!

அவனது சிறுவயதில் பதிந்து போன விடயங்களை அவனால் மாற்றியமைக்க முடியாதல்லவா....?

விளைவு பல பெண்களுடன் மோகம் எனும் சாகரத்தில் மூழ்கினான் ஆதித்யன். அச்சாகரத்தின் சிப்பிக்குள் இருக்கும் முத்தென வெளிப்பட்டாள் தன்மயா.

அவனோ வெகு நேரம் அவளுடைய இதழ்களில் புதையுண்டவன் அவளுடைய கண்ணீரைக் கண்டு மேலும் திருப்தியே அடைந்தான்.

அவளுக்கோ ஒவ்வொரு நொடியும் அச்சத்திலேயே கழிந்து கொண்டிருந்தது.

இந்த அந்தரங்க நேரத்தில் இடையில் கவின் வந்து விடுவானோ....?

அல்லது தன் மகனைப் போன்ற சித்து வந்து விடுவானோ என ஒவ்வொரு நொடியும் அவளுக்கு உள்ளம் பதறியது.

நரக வேதனையை நிஜத்தில் அனுபவித்துக் கொண்டிருந்தாள் மாது.

எங்கே வேற எந்த ஆல்ட்டராவது வந்து விடுமோ என அஞ்சியவள் “ஆதி..... ஆதீஈஈஈ.... ஆதீஈஈ.... ஆதீஈஈஈஈஈ....” என அவன் பெயரை மீண்டும் மீண்டும் அவனுடைய செவிகளுக்குள் உச்சரித்துக் கொண்டே இருந்தாள்.

ஆதியோ அவளது கன்னக் குழியில் முத்தம் வைத்தவன் மீண்டும் அவளது செவ் இதழ்களை மையமிட்டான்.

அவனது கரங்களோ அவளுடைய வெற்று மேனியில் அத்து மீறி இசை மீட்டத் தொடங்கின.

இமைகள் படபடக்க....

இருதயம் துடிதுடிக்க....

சரீரம் வெட வெடக்க....

வெண்டைப் பிஞ்சு விரல்கள் அச்சத்தில் நடுநடுங்க....

கோழிக் குஞ்சினைப் போல அவனது திடகாத்திரமான உடலுக்குள் பதுங்கிக் கிடந்தாள் மாது.

அப்போதும் கூட அவள் அவனுடைய பெயரை உச்சரிப்பதை நிறுத்தவே இல்லை. அவனுக்கோ அவளுடைய அழைப்பு கிறக்கத்தை கூட்டியது.

அவனுடைய ஒவ்வொரு தூண்டலுக்கும் அவள் காட்டிய உணர்வும் துடிப்பும் துலங்கலும் அவனை பெரிதும் இம்சித்தன.

“ட்ராமாஆ குயின்.... யு ஆர் சோ சா:ப்ட்....” என அவளுடைய மென்மையை சிலாகித்தான் அவன்.

ஆடைகள் துறக்கப்பட்டு அவளுடைய ஆசைகள் மறுக்கப்பட்டு அவன் அவளை ஆட்சி செய்து கொண்டிருந்த நேரம் அது.

அவனது அழுத்தமான பிடியோ திடீரென மென்மையாக மாற சடாரென விழிகளைத் திறந்தாள் தன்மயா.

அவளது உடலோ அதிர்ச்சியில் தூக்கி வாரிப் போட்டது. 'இ.... இப்போ என்னை தொ.... தொட்டது யாரு....?' என எண்ணியவளுக்கு பைத்தியம் பிடிப்பதைப் போல இருந்தது.

அதிர்ந்து விழித்தவள் அந்த மென்மையான வருடலில் ஆடித்தான் போனாள்.

உடல் முழுவதும் பற்றி எரிவதைப் போல இருக்க, சட்டென அவனது மார்பில் கரம் வைத்து தள்ளி விட்டவள் போர்வையால் தன் உடலை மறைத்துக் கொண்டு கதறி அழத் தொடங்கினாள்.

“போ இங்க இருந்து போயிரு ப்ளீஸ்.... நீ ஆதி இல்ல.... நீ ஆதி இல்ல.... நீ ஆதி இல்ல....” என விம்மி வெடித்து அழுதவளோ பதற்றத்தில் படுக்கையில் இருந்து கீழே விழுந்து பின் தடுமாறி பின்னால் நகர்ந்தவள் அந்த அறையின் சுவற்றோடு ஒன்றிக் கொண்டாள்.

அவள் உடலோ நடுக்கத்தில் தூக்கித் தூக்கிப் போட்டது. வார்த்தைகள் வராமல் தடுமாறியவள் கூனி குறுகி துடித்துப் போனாள்.

அவனோ நிதானமாக அவளை நெருங்கியவன் அவள் முன்னே குத்த வைத்து அமர்ந்தான்.

“ப்போ.... ப்போஓ ப்ளீஸ். கிட்ட வராத. நீ ஆதி இல்ல.... இங்க இருந்து போயிரு....” என தன் முகத்தை முழங்கால்களில் புதைத்தவள் கதறினாள்.

“ஹேய் ட்ராமா குயின் என்னடி....? நான் ஆதிதான். உன்னோட டெவில்தான்.

ஓபன் யுவர் ஐஸ்....” என தன் கம்பீரமான குரலில் ஆதி கூறிய அடுத்த நொடி அவனைப் பாய்ந்து இறுக அணைத்துக் கொண்டாள் தன்மயா.

ஆதியே அவளது செயலில் ஓர் நொடி ஸ்தம்பித்துப் போனான்.

அவளது கதறலும் அச்சமும் நடுக்கமும் பொய் அல்ல என்பதை உணர்ந்து கொண்டவனின் புருவங்கள் சுளித்தன.

அவன் கரங்களுக்குள் இத்தனை நேரமும் அடங்கி இருந்தவள், அவனுடைய இதழ் முத்தத்தில் விழி மூடி அமைதியாக அவனை அனுமதித்தவள், அவன் ஆடை துறந்த போது கூட அழுதாலே தவிர அவனை ஒதுக்கித் தள்ளவில்லையே.

இப்போது திடீரென வெறி கொண்டாற் போல அவனைத் தள்ளி விட்டதும் இல்லாமல் 'நீ ஆதி இல்ல.... நீ ஆதி இல்ல....' என்ற அவளுடைய

கதறல் அவனை ஓர் நிமிடம் உறைய வைத்தது.

தன் உடலை அவள் அவசர அவசரமாக மறைத்ததும், அவனது கை படாத தூரம் ஓடிச் சென்று சுவற்றோடு ஒன்றியதும், முகத்தை மறைத்த வண்ணம் அவள் விம்மி வெடித்து அழுததும் அவனை சிந்திக்கச் செய்தன.

அஞ்சி நடுங்கும் அவளின் அருகே சென்று நான்தான் ஆதி என்றதும் அவளுடைய விழிகளில் தெரிந்த அந்த நிம்மதி....!!! அதை வர்ணிக்க தமிழில் வார்த்தைகள் போதாது.

தன்னைத் தீண்டியது கவின் அல்ல ஆதிதான் என்றதும் அவள் அவனை பாய்ந்து அணைத்துக்

கொண்ட விதம் அவனை ஸ்தம்பிக்கச் செய்தது.

அவளது துடிப்பில் அவன் இதயமும் சுள்ளென்ற வலியை உணர்ந்து கொண்டது.

தன்னை அணைத்துக் கொண்டு கதறும் மங்கையின் முதுகில் வருடியவன் எழுந்து சென்று அவனுடைய டீஷர்ட்டை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

அதனை வாங்கி அணிந்து கொண்டாள் தன்மயா. அந்த டீஷர்ட்டோ அவளுடைய தொடைக்கு கீழ் வரை ஒரு டாப் போல இருந்தது.

மீண்டும் சென்றவன் ஒரு கிளாஸ் தண்ணீரை எடுத்து வந்து அவளுக்கு பருகக் கொடுத்தான்.

அவளுக்கும் அந்தக் கணம் அது தேவையாக இருக்க, மறுக்காமல் அதனை வாங்கி அருந்தினாள் மாது.

அவளது அழுகையோ அடங்கி விசும்பல் மாத்திரம் அந்த அறையில் ஒலித்துக் கொண்டிருக்க, அவளது கரத்தைப் பற்றி அழைத்துச் சென்றவன் படுக்கையில் படுத்து அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டான்.

“என்னாச்சு குயின்....? என்னோட முகத்துல ஏதாவது மாற்றம் தெரியுதா....?”

“இ.... இல்ல.... இல்லையே....” என விசும்பியவளின் கூந்தலுக்குள் கரம் நுழைத்து அவளது கற்றைக் கூந்தலை வருடியவன் “அப்போ

எதுக்கு நான் ஆதி இல்லைன்னு சொன்ன....? ம்ம்....?”

“.....”

“சொல்லு குயின்.... திடீர்னு ரொம்ப வித்தியாசமா பிஹேவ் பண்ணதுக்கான ரீசன் என்ன....?”

“எ.... எனக்கு ப.... பயமா இ.... இருக்கு....”

“ஏன்டி....?”

“நீங்க தொட்ட ஒவ்வொரு நிமிஷமும் அது நீ.... நீங்கதானா....? இ.... இல்ல வேற யாருமான்னு நினைச்சு நினைச்சு செத்துகிட்டு இருக்கேன் ஆதி. ரொம்ப பயமா இருக்கு. இந்த நிலமைல என்னை யாரும் பார்த்துருவாங்களோன்னு பயம்ம்ம்மாஆ இருக்கு. இந்த

நிலமைல என்னை வேற யாரும் தொட்டுருவாங்களோன்னு பயம்மா இருக்கு. ஒவ்வொரு நிமிஷமும் நான் செத்துப் பிழைச்சுகிட்டு இருக்கேன் ஆதி." என்றவள் அவன் மார்பிலேயே முகத்தைப் புதைத்து கதறி அழத் தொடங்கினாள்.

அவளுடைய வார்த்தைகளில் அவன்தான் முற்றிலும் குழம்பிப் போனான்.

"ம்ப்ச் என்னடி பேசுற....? எனக்கு எதுவுமே புரியலைடி."

"கற்பைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்கன்னு எனக்கு தெரியலை ஆதி. ஆனா நான் ஒருத்தனுக்கு ஒருத்தின்னு வாழ்றவ. உ.... உங்களைத் தவிர வே.... வேற யாரும் எ.... என்னை தப்பா தொட்டா

சத்தியமா நான் செத்துருவேன்....” என விசும்பியவளை தன்னோடு இறுக அணைத்துக் கொண்டான் ஆதி.

“யஷ்விந்த் யாரோட குழந்தை குயின்....?”

“எ.... என்னோட பையன்தான்.”

என்றவளை அழுத்தமாகப் பார்த்தவன் “நான் ஒன்னும் முட்டாள் இல்லைடி. எப்போ நான் உன்னை முதன் முதலா உன்கூட இருந்தேனோ அன்னைக்கே நீ கல்யாணம் ஆகாதவன்னு புரிஞ்சுகிட்டேன். அதுக்கப்புறம் நீ உன் குழந்தைன்னு சொன்னப்போ கூட நான் பெருசா எடுக்கலை. ஏன்னா எனக்குதான் உன்னைப் பத்தி தெரியுமே.” என்றவன் அவள் ஒரு கன்னி என்பதை தான்

அன்றே அறிந்து கொண்டதை அவளிடம் கூறினான்.

அவளது கன்னித்தன்மையை அவள் இழந்தது ஆதியிடம் அல்லவா. அப்படி இருக்கையில் அவனுக்கு தெரியாது போகுமா என்ன.?

அவன் கூறிய வார்த்தைகளில் விரக்தியாக புன்னகைத்தவள் "யஷ்விந்த் என்.... என்னோட அக்கா பையன்." என மெல்லிய குரலில் கூறினாள்.

"ஓ.... அக்கா பையன் மேலையே உனக்கு அவ்ளோ பாசமா குயின்....?"

"அவன் எனக்கும் பையன்தான். நான் இன்னும் உயிரோட இருக்கேன்னா அதுக்கு காரணமே அவன்தான். அவனுக்காக மட்டும்தான்

நான் இன்னும் வாழ்ந்துகிட்டு இருக்கேன்.” என்றவளின் கூந்தலை மெல்ல வருடினான் ஆதி.

“உன்னை மாதிரி ஒரு பொண்ணு எனக்கு அம்மாவா வந்திருந்தா நல்லா இருக்கும்னு தோணுது குயின்.” என்றவன் பெருமூச்சோடு அவளை அணைத்தான்.

தன் விழிகளை துடைத்துக் கொண்டவள் அவனுடைய பரந்த மார்பில் தன் முகத்தை புரட்டினாள்.

அதே நேரம் வெளி அறையில் யஷ்விந்த் அழும் சத்தம் கேட்க, பதறி எழுந்தவள் ஓட முயல, அவளது கரம் பற்றித் தடுத்தவன் “ஐ நீட் யு குயின். அவனைத் தூக்கிட்டு இங்க வா.... இல்லைன்னா நான் அங்கே

வருவேன்.” என்றவாறு தன் பிடியை தளர்த்தினான்.

அவன் கரத்தை விடுவித்ததும் ஓடிச் சென்று யஷ்விந்தை தன் கரங்களில் ஏந்திக் கொண்டவள் அவனைத் தூக்கிக் கொண்டு அந்த அறையினுள் மீண்டும் வந்தாள்.

ஆதித்யனின் எண்ணங்களோ அவள் யாரை எண்ணி பயப்படுகிறாள் என்பதிலேயே இருந்தது.

“ம்மாஆஆ....”

“என்னடா கண்ணா....?”

“பி.... பிக்கா வ்வேணு.... ம்....” என்ற தன் மகனின் கன்னத்தில் முத்தம் பதித்தவள் “அம்மா எடுத்து தர்றேன்டா தங்கம்....” என்றவாறு

மீண்டும் பிள்ளையைத் தூக்கிக் கொள்ள முயல,

“ஹேய் குயின் அவன் இங்கேயே இருக்கட்டும். நீ போய் எடுத்துட்டு வா.” என்றதும் ஓர் நொடி தயங்கியவள் பின் தன் மகனை படுக்கையில் விட்டு விட்டு வெளியேற முயல, மீண்டும் அவளை தடுத்தான் ஆதி.

“ஹேய் வெயிட் வெயிட். இப்போ மணி பத்தாகுது. இப்போ சம்டைம் கவின் வந்திருப்பான். நீ இந்த ட்ரெஸ்ஸோட கீழ போக வ்வேணாம் குயின்.” என அழுத்தமான குரலில் கூறினான் ஆதி.

அவளுக்கோ ‘டேய் கவின் வெளியே இல்ல. உனக்குள்ளேயே

இருக்கான்....' எனக் கத்த வேண்டும் போல இருந்தது.

"நீ இங்கேயே இரு. நான் போய் எடுத்துட்டு வர்றேன்."

"ம்ம்...." என்றவளுக்கு அவன் திரும்ப வரும் போது ஆதியாக வருவானா? இல்லை வேறு கேரக்டராக வருவானா? என்ற எண்ணம் தோன்றி வதைக்கத் தொடங்கியது.

அறையின் வாயில் வரை சென்றவன் திரும்பி வேகமாக வந்து அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

"ஹேய் குயின்...."

"ம்ம்....?"

"நீ இந்த கிங்கோட ராணி...."

“ம்ம்ம்....”

“நான் உயிரோட இருக்கும் வரைக்கும் இன்னொருத்தனை உன்னை பார்க்கவோ தொடவோ அனுமதிக்க மாட்டேன் குயின். எவனா இருந்தாலும் என்னைத் தாண்டித்தான் உன்னை நெருங்கணும்.” என்றவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு விலகிச் சென்றான்.

அவனுடைய வார்த்தைகளில் மொத்தமாக உடைந்து போனாள் தன்மயா.

‘வெளியே இருந்து வர்றவனை உங்களால தடுக்க முடியும் ஆதி. ஆனா.... ஆனா உங்களுக்குள்ளேயே இருக்கிறவனை உங்களால எப்படி தடுக்க முடியும்....?’ என எண்ணியவள் மௌனமாக கண்ணீர் சிந்தினாள்.

மோகம் – 20

அவன் கூறிவிட்டுச் சென்ற வார்த்தைகள் அவளுக்கு யானை பலத்தைக் கொடுத்தன. அவன் கூறிய வார்த்தைகளை அவனால் காப்பாற்ற முடியுமா என்பது ஐயமே. அப்படி இருந்தும் அவனுடைய வார்த்தைகளில் தன் நம்பிக்கையை பலப்படுத்தியவள் தன் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினாள்.

என்ன அவளுடைய எதிர்காலமா....? அப்படி ஒன்று இனி இருக்கிறதா என்ன....? என எண்ணி விரக்தியான புன்னகையை உதிர்த்தாள் அவள்.

இன்னும் முப்பது நாட்களில் அவனுடைய தேவை முடிந்ததும்

அவளை அனுப்பி விடப் போகிறான். அதன் பின் அவளுடைய நிலைதான் என்ன.?

அவள் விரும்பிய விடுதலை கிடைத்து விடும்தான். ஆனால் அதன் பிறகு....?

இந்த முப்பது நாட்களில் ஆதி சரியாகி விடுவானா....?

அவனைக் குணப்படுத்தாமல் எப்படி விட்டுச் செல்வது....?

பொய் கூறும் கவின் எனும் ஆல்ட்டரை வெளியே வராமல் எப்படி தடுப்பது....?

'ஓ காட் ப்ளீஸ் ஹெல்ப் மீ. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை.' என இறுதியில்

இறைவனிடம் மன்றாடியவள் தன் மகனை நெருங்கினாள்.

யஷ்விந்த் குட்டியோ பிஸ்கட் வேண்டுமென கேட்டுவிட்டு அதை உண்ணாமலேயே ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்று விட, அவளுடைய சிறிய செவ் இதழ்கள் சின்னதாய் மலர்ந்தன.

அவளைப் போலவே குண்டுக் கன்னங்களும் சிறிய உதடுகளையும் சிவந்த நிறத்தையும் கொண்ட யஷ்விந்தோ உறக்கத்தில் "ம்மாஆ...." என முனக, சட்டென அவனை நெருங்கியவள் படுக்கையில் அவன் அருகே படுத்து தன் மகனை அணைத்துக் கொண்டாள்.

அவள் அணைத்ததும் அவள் மார்பிலே முகம் புதைத்தவாறு அவன்

மீண்டும் உறங்க, தன்மயாவும் தன்னை அறியாமலேயே உறக்கத்தை தழுவிக் கொண்டாள்.

இன்றைய நாள் முழுவதும் அவள் அனுபவித்த பதற்றம், வலி , பயம் போன்ற உணர்வுகள் அவளை உறக்கத்திற்கு அழைத்துச் சென்றன போலும்.

சற்று நேரத்தில் கரத்தில் பிஸ்கட் , பால் மற்றும் தண்ணீர் போத்தலோடு உள்ளே நுழைந்தான் ஆதி.

அங்கே தன் படுக்கையில் படுத்திருந்த இருவரையும் கண்டதும் அவனது உள்ளம் புதிதாக ஏதோ ஒரு வித்தியாசமான உணர்வை உணரத் தொடங்கியது.

இருவரும் தூங்கும் காட்சியைப் பார்த்தவனுக்கு இரண்டு குழந்தைகள் ஒன்றை ஒன்று அணைத்துக் கொண்டு உறங்குவதைப் போல இருந்தது.

யஷ்விந்த் குட்டியோ அவளது மார்பில் முகம் புதைத்திருக்க, அவளோ அவனுடைய கறுப்பு நிற டீஷர்ட்டில் சுருண்டு படுத்திருந்த விதம் அவனுடைய மன உணர்வுகளை தட்டி எழுப்பத் தொடங்கியது.

அந்த அறையில் இருந்த சோபாவை இழுத்து கட்டிலுக்கு அருகே அவளைப் பார்க்கும் வண்ணம் போட்டவன் அதில் வசதியாக அமர்ந்து அவளை

பார்வையிட இல்லை இல்லை ரசிக்கத் தொடங்கினான்.

இத்தனை நாட்களில் அவளை அவன் பார்த்தானா எனக் கேட்டால் சந்தேகமே.

இன்று அவன் மனமோ அவளை அணு அணுவாக ரசிக்கத் தூண்ட, அந்த தூண்டலை மறுக்க முடியாது தன் கால் மேல் கால் போட்டு தன் சிகையை வருடிய வண்ணம் அமர்ந்திருந்தவன் அவளுடைய பரந்து விரிந்த கூந்தலில் தன் பார்வையை பதித்தான்.

அவளுடைய கார்கூந்தல் படுக்கையில் விரிந்து கிடந்த தோற்றமோ அவனுக்கு கறுப்பு நைல் நதி ஒன்று தன் படுக்கையில்

வளைந்து நெளிந்து ஓடுவதைப் போல இருந்தது.

அந்த கறுப்பு நைல் நதியை தன் கரங்களில் ஏந்தி அதில் தன் முகத்தைப் புதைத்து அதன் நறுமணத்தை முகர வேண்டுமென அடம் பிடித்தது அவனுடைய இதயம்.

எம்பிக் குதித்து துடித்த இதயத்தில் தன் கரத்தை வைத்து அழுத்தியவன் அவளது கருங் கூந்தலில் நின்றும் தன் விலக மறுத்த பார்வையை விலக்கி அவளுடைய வெண் பிறை நெற்றியில் பதித்தான்.

முழு வெண் நிலவை அரை வடிவமாக உடைத்து அவளுடைய நெற்றியை சீராக செதுக்கிய

பிரம்மனை ஒரு கணம் நினைவு கூர்ந்து மெச்சினான் அவன்.

அந்த வெண் பிறை நெற்றியில் அடர்ந்த வில் போன்ற புருவங்களின் மத்தியில் அவள் வைத்திருந்த கருநீல நிற பொட்டு அவனைப் பெரிதும் கவர்ந்தது.

அங்கிருந்து தன் பார்வையை சற்றே கீழிறக்கியவன் அவளது மூடிய விழிகளைக் கண்டு மூச்சடைத்துப் போனான்.

'தேங்க் காட். நல்ல வேளை இவ கண்ணைத் திறந்து பார்க்கலை. இவளோட கண்ணு என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுமே....' என முணுமுணுத்தவன் அவளுடைய அடர்ந்த விழி இமைகளில் தடுமாறி தடம் மாறிப் போனான்.

அவளது பட்டுப் போன்ற சிவந்த இதழ்கள் அவனுக்கு செம் மாதுளையை நினைவு படுத்தின. எத்தனை முறை அவற்றை அவன் சுவைத்திருந்த போதும் மீண்டும் மீண்டும் வேண்டுமென ஏங்கியது அவனுள்ளம்.

அந்த மென்மையான இதழ்களுக்கு பாதுகாப்பு அரணாக இருந்த அவளுடைய இரண்டு சிவந்த கன்னங்களும் அவனை பித்தம் கொள்ளச் செய்தன.

அவளது வெண் சங்குக் கழுத்து அதில் அவள் அணிந்திருந்த மெல்லிய தங்கச் சங்கிலி, அதன் கீழே பிரம்மன் கொடை வள்ளலாக மாறி படைத்திருந்த அவளது பெருந் தனங்கள் , அதில் தானும் முகம்

புதைத்து உறங்க வேண்டுமென்ற எண்ணத்தை அடக்க முடியாது அந்த இருக்கையை விட்டு எழுந்து நின்றான் ஆதித்யன்.

நீண்ட நெடும் பெருமூச்சு அவனிடம் இருந்து வெளிப்பட்டது.

அவன் எழுந்ததும் அவனுடைய டீஷர்ட்டினை மாத்திரம் அணிந்து உறங்கிக் கொண்டிருந்த அந்த அழகியின் வெண்ணிறத் தொடைகள் அவனது உள்ளத்தை மொத்தமாக கொள்ளையடித்தன.

இக்கணமே அவள் வேண்டுமென துடிதுடித்த தன் இதயத்திற்கு வேலியிட்டு பழக்கமற்றவன் வேகமாக அவளை நெருங்கினான்.

ஆனால் குழந்தையோடு குழந்தையாக தூங்கும் அந்த ஸ்லீப்பிங் ப்யூட்டியை தொந்தரவு செய்ய விருப்பமற்றவன் அமைதியாக குழந்தையின் அருகே தானும் சென்று படுத்துக் கொண்டான்.

அவன் பெண்களிடம் அறிந்ததெல்லாம் மோகம் மட்டும்தான்.

ஆனால் மோகத்தையும் மிஞ்சி அவளிடம் மட்டும் ஏதோ ஒன்றிற்காக தன் உள்ளம் தடுமாறுவதைக் கண்டு அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

அவன் படுத்த சிறிது நேரத்திலேயே யஷ்விந்த் குட்டியோ தவழ்ந்து ஆதித்யனின் மார்பில் ஏறிப் படுத்துக் கொள்ள, அவனின் உடலோ சட்டென விறைத்து இறுகியது.

சினத்தோடு குனிந்து யஷ்விந்த் குட்டியைப் பார்த்தவன் அவனுடைய புன் சிரிப்பில் உருகியே போனான்.

அவனுடைய ஒற்றைக் கரமோ தானாக உயர்ந்து தன்மயாவின் மகனை அணைத்துக் கொள்ள, மற்றைய கரமோ அவளுடைய கூந்தல் காட்டினுள் நுழைந்து வருடத் தொடங்கியது.

மோக வலை எனும் சங்கிலியை மாத்திரம் கொண்டு அவளோடு தன் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டவன் தற்போதோ அவளுடைய வதனத்தை மாத்திரம் பார்த்தபடியே உறங்கிப் போனான்.

சிவந்த அடி வானத்தில் உதித்து பூமியெனும் மங்கையை தன் ஆயிரம் பொற் கரங்களால் வருடித் தழுவி

அணைத்துக் கொண்டிருந்தான் ஆதவன்.

ஆதவனின் தீண்டலில் சிவந்து போன பூமித்தாயோ சிணுங்கலுடன் இருளெனும் போர்வையை விலக்கி தன் காதலனான ஆதவனின் ஒளிக் கரங்களை இனிதே பற்றிக் கொண்டாள்.

ஆதவனும் பூமி மங்கையும் தழுவி கூடல்தனை புரிந்த கணம் தன் துயில் கலைந்து எழுந்தாள் தன்மயா.

தான் படுத்திருந்த பஞ்சு போன்ற தலையணை திடீரென கல் போன்று இருக்க, மூடிய தன் விழிகளைத் திறந்தவள் அதிர்ந்துதான் போனாள்.

அவள் தலை வைத்துப் படுத்திருந்த பஞ்சுத் தலையணை

அந்தப் படுக்கையின் ஓரத்தில் அணைப்பார் இன்றி கிடக்க, அவளோ யாரை இதுவரை அரக்கன் என எண்ணியிருந்தாளோ அவனுடைய மார்பில் அல்லவா உறங்கிக் கொண்டிருந்தாள்.

பதறியடித்து எழுந்தவள் தன் மகனும் அவன் மீது படுத்திருப்பதைக் கண்டு ஒரு கணம் உறைந்தே போனாள்.

அவனது தூக்கம் கலையாதவாறு யஷ்விந்தை தூக்கியவள் மற்றைய அறையில் அவனை படுக்க வைத்துவிட்டு மளமளவென குளித்து தன் ஆடையை மாற்றிக் கொண்டாள்.

கீழே ஹாலிற்கு சென்றவள் ராமுவை நெருங்கினாள்.

“வாங்கம்மா....”

“அங்கிள் எனக்கு மயக்க மருந்து வேணும்.... வாங்கித் தர முடியுமா....?”

மயக்க மருந்து என்றதும் அதிர்ந்தவர் அவளை கேள்வியாகப் பார்த்தார்.

“அங்கிள் இன்னைக்கு என்னோட ப்ரண்ட் தாரதியை பார்க்க வர்றேன்னு சொல்லிருக்கேன். அவ டாக்டர்தான்.

அவளோட வீட்டுக்கு நான் அவரை கூட்டிட்டுப் போகணும் அங்கிள். இதுல உங்க ஹெல்ப்பும் எனக்கு தேவைப்படுது. ப்ளீஸ் முடியாதுன்னு சொல்லிராதீங்க.” என்றவள் அவரைக் கெஞ்சலாகப் பார்த்தாள்.

“இல்லைம்மா.... டாக்டரைப் பார்க்கிறதுதான் நல்லது. நான் வாங்கிட்டு வர்றேன்.”

“தேங்க் யு அங்கிள். நம்மளால முடிஞ்ச வரைக்கும் போராடிப் பார்த்துரலாம்.” என்றாள் அவள்.

ராமுவோ அவள் கூறிய மருந்தை வாங்குவதற்காக சென்று விட, அவளோ மீண்டும் ஆதி தூங்கிய அறையை நோக்கிச் சென்றாள்.

அசந்து உறங்கிக் கொண்டிருந்தவன் சட்டென தலையைப் பற்றிக் கொண்டு எழுந்தமர்ந்தான்.

‘அச்சோ இப்போ யாரு வந்திருக்கான்னு தெரியலையே....’

என எண்ணியவாறு தன் கரங்களை பிசைந்து கொண்டு நின்றாள் தன்மயா.

“மயா பேபி.... குட் மார்னிங்....” என்றவாறு சோம்பல் முறித்தான் கவின்.

“கு.... குட்.... குட் மார்னிங் கவின்.”

“அட பரவால்லையே இப்போ எல்லாம் குரலை வெச்சே நீ யார்னு ஈசியா கண்டு பிடிக்கிற போல.”

“ஆ... ஆமா கவின் பழகிருச்சு.”

“ம்ம் ஓகே பேபி.... ஐ ரியலி மிஸ் யு.... நேற்று நைட் முழுக்க நான் உன்னை பார்க்கவே இல்லை.” என்றவாறு எழுந்தவன் ஆதியின் அறையை பார்த்து முகம் சுளித்தான்.

“ஓ மை காட் ஷிட். இந்த ரூம்லையா படுத்திருந்தேன்.” என கூறியவன் சட்டென தன்மயாவின் கையைப் பிடித்துக் கொண்டு அந்த அறையை விட்டே வெளியே வந்தான்.

“க்கையை வ்விடு கவின்.” சீறினாள் தன்மயா.

“ஹேய் பேபிமா எதுக்குடா என்மேல கோபமா இருக்க....?” என தவிப்பாக கேட்டான் கவின்.

“நீ என்கிட்ட எதுக்காக கவின் பொய் சொன்ன....?”

“வாட்....? நானா....? நான் எப்போ பேபி உன்கிட்ட பொய் சொன்னேன்....?” என கேட்டான் கவின்.

“கவின் போதும் ப்ளீஸ். இதுக்கு மேலையும் என்கிட்ட நடிக்காத.” எனக்

கத்தியவள் அவனது கரத்தில் இருந்து தன் கரத்தை உதறி விடுவித்துக் கொண்டாள்.

“என்ன சொல்ற பேபிமா. எனக்கு புரியலை.” என்றவனின் குரல் சோர்ந்து ஒலித்தது.

“நீ நிஜம்னு சொன்னது பொய்தானே கவின். நீ நிஜம் கிடையாது. நீ ஆதியோட ஆல்ட்டர். சித்து எப்படியோ அப்படித்தான் நீயும்....” என்றவள் பொங்கி வந்த கண்ணீரை துடைத்தவாறு “எதுக்கு என்னை ஏமாத்தின....? உன்னை எவ்வளவு நம்பினேன். என்கிட்டயே பொய் சொல்லிட்டல்ல.” என அழுதவளை சட்டென இழுத்து அணைத்துக் கொண்டான் கவின்.

“ஹேய் பேபிமா. சாரிடி.... சாரிடி. ஆமா நான் ஆதியோட ஆல்ட்டர்தான். பட் எனக்கும் ஒரு வாழ்க்கை மனசு இருக்கிறதுல தப்பில்லையே பேபி.” என்றவனை தள்ளி விட்டாள் தன்மயா.

“நோஓஓ.... இது தப்புத்தான் கவின். ஆதியோட வாழ்க்கையை அவன்தான் வாழணும். நீங்க வாழக் கூடாது.”

“முட்டாள் மாதிரி பேசாத பேபி.

ஆதியோட கஷ்டங்களை நாங்கதான் பங்கு போட்டுக்கிறோம்.”

“அதைத்தான் நான் தேவலைன்னு சொல்றேன். கஷ்டமோ நஷ்டமோ ஆதியே அனுபவிக்கட்டும். நீங்க யாரும் நிஜம் இல்லை.

உங்களுக்குன்னு தனியா லைஃப் இல்லை. ப்ளீஸ் போயிருங்க....”

“வாட் த ஹெல் பேபி....? எனக்குன்னு தனியா லைஃப் இல்லையா....? யார் சொன்னா....? எனக்கு இருபத்தாறு வயசு. ஆதியை விட எனக்கு ஒரு வயசு கம்மி. நான் எந்த கெட்டப் பழக்கமும் இல்லாத அக்மார்க் நல்ல பையன். ஆதி இதுவரைக்கும் பல பொண்ணுங்க கூட இருந்திருக்கான். நான் உன்னைத் தவிர வேற யாரையும் மனசால கூட நினைச்சது இல்லைடி. நான் உனக்கு வேணாமா பேபி....?”

“ஐயோ உனக்கு ஏன் கவின் புரியுது இல்ல. உன்கூடவும் ஆதிகூடவும் சேர்ந்து என்னை வாழ சொல்றியா....? என்னைப் பார்த்தா

உங்களுக்கு எப்படித் தெரியுது....?" என்றவளின் தோள்களைப் பற்றியவன்,

"நான் நினைச்சா ஆதிங்கிற ஒருத்தனை வெளியே வர முடியாமலே பண்ண முடியும் பேபி. அப்போ நீயும் நானும் சித்துவும் மட்டும்தானே. இது உனக்கு ஓகேதானே." என கண்கள் மின்ன கேட்டவனைக் கண்டு விக்கித்துப் போனாள் மாது.

மோகம் – 21

கவின் கூறிய வார்த்தைகள் அவளை அதிர்ச்சியின் உச்சத்திற்கே அழைத்துச் சென்றன.

ஒரு ஆல்ட்டர் நினைத்தால் நிஜமான கேரக்டரை வெளியே வராது தடுக்க முடியுமா....?

ஆம் ஒருவரினுள்ளே உள்ள ஆல்ட்டர் அந்த நபரை விட அதீத மன பலத்தை கொண்டிருந்தால் நிஜமான நபரை விட அந்த ஆல்ட்டரே வெளியே அடிக்கடி வெளிப்படும்.

ஆதி சற்று பலவீனமாக இருந்தாலும் அவனை கவினால் இலகுவாக கட்டுப்படுத்த முடியும்.

தன்மயாவால் அதனை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. "நீ.... நீ இப்படி பண்ணக் கூடாது கவின்...." என கண் கலங்கினாள் மாது.

"பேபி ப்ளீஸ் அழாத.... இந்தக் கவின் வர்றதே உனக்காகத்தான்.

உனக்காக மட்டும்தான்." என்றவனிடம் தன் கரங்களை நீட்டினாள் தனு.

"என்ன பேபி....?"

"எனக்கொரு ப்ராமிஸ் பண்ணிக் கொடு கவின்."

"என்ன ப்ராமிஸ் பேபி....?"

"ஆதியை நீ எப்பவுமே கன்ட்ரோல் பண்ணக் கூடாது."

"ம்ப்ச் பேபிமா. ஆதி ஒன்னும் அவ்ளோ பலவீனமானவன் இல்ல. அவனோட மைன்ட் உன்கூட இருக்கும் போது ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்குன்னு நினைக்கிறேன்." என்றவன் "ஹேய் பசிக்குது மயா ஏதாவது செஞ்சு கொடேன் ப்ளீஸ்." என்றான் கவின்.

“ம்ம் சரி.” என்றவள் கவினுடைய அறையினுள் ஒரு ஒயிட் போர்ட்டை மாற்றினாள்.

“என்ன பேபி இதெல்லாம் இதை எதுக்கு என் ரூம்ல மாட்டுற....?”

“ஆஆஆஆ அட்டென்டன்ஸ் எடுக்க போறேன்.”

“வாட்....?”

“நீ எப்போ வெளியே வர்றியோ அப்போல்லாம் இந்த போர்ட்ல நீ வர்ற டைமை எழுதி சைன் பண்ணணும்.” என்றதும் அவனது உடலோ சிரிப்பில் குலுங்கத் தொடங்கியது.

“ஹா.... ஹா.....”

“ஏய் இப்போ எதுக்குடா சிரிக்கிற....?”

“ஒரு கிரேட் பிஸ்னஸ் மேனை நீ ஸ்கூல் பையன் மாதிரி அட்டென்டன்ஸ் எல்லாம் எடுக்கிறியே. அதை நினைச்சு சிரிச்சேன்.”

“ஓ.... நீ பிஸ்னஸ்லாம் பண்றியா கவின்....?”

“அடிப்பாவி. ஆதி எங்கடி பிஸ்னஸ் பத்திலாம் திங் பண்றான்....? அவனோட பிஸ்னஸ் மனி மெயின்டெய்ன் பண்றதெல்லாமே நான்தான் பண்றேன். நான் இல்லைன்னா அவனோட பிஸ்னஸ்ஸே ஊத்திக்கும். அவன் டிப்ரஷன்ல இருக்கும் போதுலாம் நான்தான் அவனோட பிஸ்னஸ்ஸை ரன் பண்ணுவேன்” என்றவன் சட்டென தன் பேச்சை நிறுத்தினான்.

தன்னுடைய ஆல்ட்டர் உருவாகியதற்கான நிஜ காரணம் தெரிந்தால் கவினை கட்டுப்படுத்த முடிந்துவிடும் அல்லவா.? சட்டென தன் பேச்சை நிறுத்தியவன் அவள் மாட்டி வைத்த போர்ட்டை நெருங்கினான்.

அதில் அன்றைய திகதியிட்டு அவன் வந்த நேரத்தையும் குறிப்பிட்டு அவள் கூறியதைப் போலவே தன்னுடைய கையொப்பத்தையும் வைத்தான்.

“ஹேய் கவின் உன்னோட ஹேன்ட் ரைட்டிங் ரொம்ப கேவலமா இருக்குடா. ஹா.... ஹா... கோழி குப்பையை கிளறிவிட்ட மாதிரி இருக்கு....”

“ஹா.... ஹா.... கொஞ்சம் வளைஞ்சு நெளிஞ்சு இருக்கு அவ்ளோதானே” என சமாளித்தான் கவின்.

“ஹா.... ஹா.... நல்லாவே சமாளிக்கிறடா நீ.”

“ஹேய் பேபி உன்னோட சைனை என் பேரு பக்கத்துல வை. உன்னோட ஹேன்ட் ரைட்டிங் எப்படி இருக்குன்னு பார்க்கலாம்.” என்றான் கவின்.

அவனுடைய கரத்தில் இருந்த மார்க்கரை வாங்கியவள் தன்னுடைய கையொப்பத்தை அவனுடைய பெயரின் கீழே வைத்தாள்.

“ஹேய் மயா பேபி. ரொம்ப அழகான ஹேன்ட் ரைட்டிங்டி.”

“தேங்க் யு மிஸ்டர் கவின்.” என புன்னகைத்தவளின் கரத்தில் இருந்த மார்க்கரை மீண்டும் வாங்கியவன் இரண்டு பேரின் பெயருக்கும் நடுவே இருந்த இடைவெளியில் ஒரு இதயம் வரைந்து அதில் அம்பும் வரைய இப்போது சிரிப்பது தன்மயாவின் முறையாகிப் போனது.

“ஹேய் நீ நைன்டீஸ் கிட்டா....? ஹாங் இருபத்தாறு வயசுன்னு சொன்னேல்ல. நைன்டீஸ் கிட்டேதான். ஹா.... ஹா.... இந்த ஹார்ட்டு விடுறது அதுல அம்பு வரையுறது எல்லாம் என்கிட்ட வ்வேணாம்.” என சிரித்தபடியே எச்சரித்தாள் அவள்.

“சரிங்க பேபி மேடம்.”

“தேங்க்ஸ் கவின். நான் சொன்னதும் சைன் பண்ணதுக்கு. இனி நீ எப்போ வந்தாலும் ஸ்ட்ரைட்டா இங்க வந்து சைன் பண்ணிரு ப்ளீஸ்.”

“சரிங்க மேடம்.” என்றவன் அருகே இருந்த இன்னுமொரு ஒயிட் போர்ட்டை பார்த்து அவளை கேள்வியாக ஏறிட்டான்.

“இந்த போர்ட் சித்துக்கு. இனி உங்க ரெண்டு பேர்ல யார் வந்தாலும் எனக்கு உடனே அப்டேட் பண்ணணும்.”

“ஹேய் எங்களை உன்னோட கன்ட்ரோல்ல வெச்சுக்க நினைக்கிறியா பேபி....?”

“ம்ஹூம் இல்ல கவின். உங்க எல்லாரைப் பத்தியும் நல்லா புரிஞ்சிக்கணும்னு நினைக்கிறேன்.”

“ஸ்மார்ட் ஆன்ஸ்ஸர் மயா.” என்றவனைப் பார்த்து புன்னகைத்தவள் “உனக்கு என்ன டிஷ் வேணும் கவின்.? சிக்கன் ஃப்ரை பண்ணித் தரவா....?” எனக் கேட்டாள்.

“ஓ. காட் நோஓ.... நோ.... சிக்கனா உவ்வே.... ஐ அம் அ ப்யூர் வெஜிடேரியன் பேபி.” என முகத்தை சுளித்தவாறு கூறினான் அவன்.

“அடப்பாவி இது வேறையா....?” தன் தலையில் கை வைத்தாள் தன்மயா.

“எஸ். எனக்கு நான்வெஜ்னாலே அலர்ஜி.”

“ஓ.... ஓகே ஓகே.”

“ஏதாவது வெஜ் சமைச்சு கொடு மயா.” என்றவனை பார்க்க அவளுடைய மனம் பிசையத் தொடங்கியது.

“சரி.... சரி.... நீ ஃப்ரெஷ் ஆகிட்டு வா கவின்.” என்றவாறு சமையல் அறைக்குள் நுழைந்து கொண்டாள் தன்மயா.

அவனுக்கு சுடச் சுட தோசை வார்த்து சட்னி செய்தவள் தட்டில் வைத்து அவனிடம் கொடுக்க, அவனோ ப்ரிட்ஜினுள் இருந்த கேரட் மற்றும் தக்காளியை எடுத்து மென்று கொண்டிருந்தான்.

“ஆடு மாடே உன்கிட்ட தோத்துப் போயிரும்டா கவின்.”

“ஹா.... ஹா.... கொடு பேபி.” என்றவாறு அவள் கொடுத்த தோசையை வாங்கியவன் அதனை ரசித்து உண்ணத் தொடங்கினான்.

“ஹேய் சூப்பர் பேபி.”

“சட்னி வைக்கவா....?”

“ம்ம் வை.”

அவனுக்கு சட்னியை வைத்தவள் ராமுவின் வருகைக்காக காத்திருக்கத் தொடங்கினாள்.

இன்று எப்படியாவது ஆதியை தாரதியிடம் அழைத்துச் செல்ல வேண்டுமென அவளுள்ளம் எண்ணித் தவித்தது.

சாப்பிட்டுக் கொண்டிருந்த கவினோ சட்டென தன் கையில் இருந்த தட்டை தள்ளி வைத்தான்.

“என்னாச்சு கவின் பிடிக்கலையா....?”

“குட் மார்னிங் ம்மா....” என்ற மழலை குரலில் வந்திருப்பது சித்து என்பது புரிய அவளுடைய இமைகள் ஒரு கணம் மூடித் திறந்தன.

அவனை சமாளிப்பதற்கு ஏற்றவாறு தன்னை தயார் படுத்திக் கொண்டவள் “ஹாய் சித்து கண்ணா குட் மார்னிங். எதுக்குப்பா பிளேட்டை தள்ளி விட்ட....?” எனக் கேட்டாள்.

“எனக்கு தோசையே பிடிக்காதுமா.”

“ஓ.... ஓகேடா உனக்கு என்ன டிஷ் பிடிக்கும்.”

“பீட்ஸா, பர்கர், சான்விட்ச், இட்லி , பரோட்டா” என அடுக்கிக்

கொண்டே போனவனைப் பார்த்து மலைத்தவள் “சான்விட்ச் பண்ணித் தரட்டுமா....?” எனக் கேட்டாள்.

“ஹேஏஏஏஏ ஜாலிஇஇஇ ஓகே மாம். ஐ அம் வெயிட்டிங்.”

தன்மயாவோ யஷ்விந்த் குட்டிக்கு பாலை எடுத்துக் கொண்டு சித்துவையும் அழைத்துக் கொண்டு மேலே சென்றாள்.

யஷ்விந்தை எழுப்பி அவனுக்கு பாலை கொடுக்க, அவனைத் தன் கரங்களில் வாங்கிக் கொண்டான் சித்தார்த்.

“ம்மா நானே தம்பிக்கு பாலை கொடுக்கட்டுமா.”

“சரிப்பா....”

அவனோ யஷ்விந்தை தூக்கி கொஞ்சியவாறு அவனுக்கு பால் போத்தலில் பாலைப் புகட்டத் தொடங்கினான்.

“சித்து கண்ணா அம்மா சொல்றதை கேட்பியா....?”

“எஸ்மா. நீங்க என்ன சொன்னாலும் கேட்பேன்.” என்றதும் அவனுடைய சிகையை வருடியவள் அவனை கவினுடைய அறைக்குள் அழைத்துச் சென்றாள்.

அங்கே அவனுக்கென மாட்டப் பட்டிருந்த ஒயிட் போர்ட்டை காட்டி அவன் செய்ய வேண்டியவற்றைக் கூற சமத்தாக ஒத்துக் கொண்டான் சித்து.

அவனும் அதில் குண்டு குண்டு எழுத்துக்களில் தன் பெயரை எழுதி கையொப்பத்தை வைத்துவிட்டு தன்மயாவைப் பார்த்து கிளுக்கிச் சிரித்தான்.

“குட் பாய். ஓகே கண்ணா வா. நான் உனக்கு சான்விட்ச் செஞ்சு தர்றேன்.” என்றவாறு மீண்டும் சமையல் அறைக்குச் சென்று சித்து கேட்டதை செய்யத் தொடங்கினாள் அவள்.

யஷ்விந்தும் சித்துவும் ஒருவரோடு ஒருவர் விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து இவள் உள்ளம் கசியத் தொடங்கியது.

உண்மையில் இரண்டு பேருமே சிறு பிள்ளைகள் தானே. என எண்ணியவள் சான்விட்சை

சித்துவிற்கு ஊட்டி விடத் தொடங்கினாள்.

“வாவ் யம்மீஈஈஈ....”

“ம்ம் சாப்பிடு....” என்றவாறு ஊட்டி முடித்தவள் பிளேட்டை கழுவத் தொடங்க,

அவளுடைய பின்புறமாக நெருங்கி அவளின் மெல்லிய இடையினூடாக தன் கரத்தை நுழைத்து அவளை இழுத்து தன் உடலோடு அணைத்து பிடித்தவன் அவளுடைய கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.

“ஆ.... ஆ.... ஆதீஈஈஈ....?” என்றவளுக்கு உடல் நடுங்கத் தொடங்கியது.

அவளை அவளுடைய அனுமதி இன்றி அவனைத் தவிர வேறு எவரால் இப்படி அத்து மீறித் தொட முடியும்....?

“எஸ் ட்ராமா குயின்.” என்றவன் அ

வளது முதுகில் படர்ந்திருந்த கருங் கூந்தலை விலக்கி அவளுடைய பின்னந் தலையில் அழுத்தமாக இதழ் பதித்தான்.

“ஸ்ஸ்.... வ்விடுங்க ஆதி. பிளேட் கழுவிட்டு இருக்கேன்....” என்றவளின் பின்னங் கழுத்தில் மீண்டும் அழுத்தமாக முத்தம் பதித்தவன் அவள் கழுவிக் கொண்டிருந்த மார்பிள் பிளேட்டை பறித்து தொப்பென தரையில் போட்டு உடைத்தான்.

“படார்....” என விழுந்து நொறுங்கிய பிளேட்டின் சத்தத்தில் உடல் தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு.

“ஜஸ்ட் இந்த பிளேட்டுக்காகவா என்னை விடச் சொன்ன....? ம்ம்....? ஹௌ டேர் யு ட்ராமா குயின்....?” என்றவன் ஒரு கையால் அவளை அணைத்தவாறு மறு கையால் அவள் கழுவி வைத்திருந்த அத்தனை பிளேட்டையும் தரையில் போட்டு உடைக்கத் தொடங்கினான்.

அவை நொறுங்கும் சத்தத்தில் அதிர்ந்து நடுங்கி விலக முயன்றவளை தன்னோடு இன்னும் இன்னும் இறுக அணைத்தவன் “எனக்கு யார் ரூல்ஸ் போட்டாலும் பிடிக்காது குயின்.” என்றான்.

அந்தக் குரலில் மொத்த உடலும் சில்லிட்டுப் போனது அவளுக்கு.

“சா.... சா... சாரி சார்.” என தடுமாறி அழுகையோடு கூறியவளின் கழுத்தில் மீண்டும் முத்தம் வைத்தான் அவன்.

முத்தத்தையும் சினத்தையும் ஒரே நேரத்தில் காட்ட முடியும் என்று அப்போதுதான் அவள் அறிந்து கொண்டாள்.

பிளேட் நொறுங்கிய சத்தத்தில் வீறிட்டு அழத் தொடங்கினான் யஷ்விந்த்.

மகனின் அழுகையில் உள்ளம் துடிக்க அவனிடம் இருந்து விலக முடியாது பரிதவித்துப் போனாள் தனு.

மீண்டும் விலக முயன்றால் அவன் ஏதும் செய்து விடுவானோ என்ற அச்சம் அவளை ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

அவனோ கழுத்தில் தொடங்கி அவளது வெற்று முதுகிலும் தன் முத்த ஊர்வலத்தை தொடர, சடாரென அவன் முகம் பார்த்தவாறு திரும்பி நின்றாள் அவள்.

“ம்மாஆஆ.... ம்மாஆஆஆஆ....” என யஷ்விந்தின் அழுகையில் அவளது விழிகளும் உவர் நீரை வடிக்கத் தொடங்கின.

அழுகையில் துடித்த இதழ்களை நெருங்கியவன் பின் அவளை விட்டு விலகி நின்றான்.

“போய் அவனைத் தூக்கு. இன்னும் அஞ்சு மினிட்ல நீ திரும்ப இதே இடத்துக்கு வரணும்.” என்றதும் ஓடிச் சென்று தன் மகனைத் தூக்கி சமாதானம் செய்தவள் அவனுக்கு பந்து ஒன்றை எடுத்துக் கொடுத்து விட்டு மீண்டும் சமையல் அறைக்குள் நுழைந்தாள்.

“ஹேய் ட்ராமா குயின். பசிக்குதுடி சாப்பிட என்ன இருக்கு....?” எனக் கேட்டான் அவன்.

‘அடப்பாவிகளா இது வயிறா இல்ல வேற ஏதுமா....?’ என எண்ணிக் கொண்டவள் “தோசை , சான்விட்ச் இருக்கு..” என்றாள்.

“ஷிட் இதை மனுஷன் சாப்பிடுவானா....? நீ சூப் வெச்சு கொடு

குயின்.” என்றதும் அவளுக்கோ விழிகள் பிதுங்கத் தொடங்கின.

“வெஜ் சூப்பா....?”

“ச்சீஈஈஈ.... நோ நோ நான்வெஜ்தான் வ்வேணும். சிக்கன் சூப் ஓக்கேடி.” என்றவனை மலங்க மலங்க விழித்துப் பார்த்தபடி நின்றாள் தன்மயா.

‘மூணும் முணு விதம் போல.’ என எண்ணி சலித்தவள் ஆதியைப் பார்த்து “உங்க ஹேண்ட் ரைட்டிங் எப்படி இருக்கும்னு பார்க்க ஆசையா இருக்கு சார். உங்க சைன் ப்ளீஸ்.” என பயந்தபடியே கேட்டாள் அவள்.

அருகே இருந்த பேனாவை எட்டி எடுத்தவன் அவள் கொடுத்த காகிதத்தை கசக்கி எறிந்து விட்டு

அவளுடைய புடவையை ஒதுக்கி அவள் முன்னே மண்டியிட்டு அமர்ந்து அவளுடைய வெண்ணிற இடையில் தன்னுடைய கையொப்பத்தை வைக்க அவள் பேச்சு மூச்சற்று உறைந்தே போனாள்.

அவளது உதடுகள் மாத்திரம் “நீ ஒரு டெவில் ஆதி....” என முணுமுணுத்தன..

மோகம் – 22

அவனுடைய கையெழுத்தை பார்க்க ஆசைப்பட்டது தவறோ என எண்ணும் வகையில் இருந்தது அவனுடைய செயல்.

காகிதத்தில் எழுதும்படி கொடுத்தால் இளையவளின் இடையில் அல்லவா எழுதி விட்டான்.

அவள் கேட்டதும் போர்ட்டில் எழுதி விட அவன் ஒன்றும் சித்துவோ கவினோ அல்லவே.

அவன் ஆதித்யன்....!!

அனைவரிலும் மாறுபட்ட மனம் கொண்டவன்....!!

அவனுடைய செயல்களும் மாறுபட்டவையாக இருப்பதில் ஐயமேதும் இல்லையல்லவா.?

அவனது செயலில் உறைந்து நின்றவளைப் பார்த்தவன் அவளது கன்னத்தில் தட்டிச் சிரித்தான்.

“திஸ் இஸ் மை ஹேண்ட் ரைட்டிங். குயின் ஹவ் இஸ் இட்....?” என்றவனைப் பார்த்து திகைத்து விழித்தவள் அவனுடைய கையெழுத்தை பார்த்து பிரம்மித்தாள்.

அவ்வளவு அழகாகவும் நேர்த்தியாகவும் இருந்தன அவனுடைய முத்துப் போன்ற எழுத்துக்கள்.

சட்டென தன் புடவையை இழுத்து இடையை மறைத்துக் கொண்டாள் தன்மயா.

அவன் தொட்ட இடங்கள் யாவும் அவளுக்கோ கூசிச் சிலிர்த்தன.

“எ.... என்ன வே.... வேணும்னு கேட்டீங்க சார்....?”

“அதுக்குள்ளேயே மறந்துட்டியா....?” எனக் கேட்டான் அவன்.

‘அடப்பாவி உங்க மூணு பேருக்கும் பிடிச்சதை நினைவு வெச்சுக்கணும்னா இனி நான் டெய்லி

டயரிதான் எழுதணும் போல. ஒருத்தன் வெஜ்ங்கிறான் இன்னொருத்தன் நான்வெஜ்ங்கிறான் மற்றவன் ஃபாஸ்ட் ஃபுட்னு சொல்றான் சத்தியமா முடியலடா. தெரியாத்தனமா கிட்சன் பக்கம் வந்துட்டேன். உங்க மூணு பேருக்கும் மூணு விதமா சமைச்சு போட என்னால முடியாதுப்பா.' என எண்ணியவள் சமையற் கட்டோடு சாய்ந்து நின்று மூச்சு வாங்கினாள்.

"ஹேய் ஹேய் ரிலாக்ஸ். இப்போ என்ன கேட்டுட்டேன்னு இப்படி மூச்சு வாங்குற.? சிக்கன் சூப்தானே கேட்டேன்."

என்றவனைப் பார்த்து ஆம் எனும் விதமாக தலை அசைத்தவள்

அவன் கேட்டதை செய்யத் தொடங்கினாள்.

“உனக்கு என்ன டிஷ் பிடிக்கும்....?”

“எனக்கு சாப்பாடுன்னாலே பிடிக்கும் சார்.”

“ஹா.... ஹா.... சோ நைஸ்.”

‘இதுல என்ன நைஸ்....? ஒரு நேரத்துல நல்லா இருக்கான். ஒரு நேரத்துல டெவில் மாதிரி பண்றான். இவனை புரிஞ்சிக்கவே முடியலையே.’ என எண்ணியவள் அவன் கூறிய அனைத்திற்கும் தலை அசைத்தவாறு சிக்கன் சூப்பை செய்து முடித்தாள்.

சூப்பை அவனிடம் கொடுத்து விட்டு சான்விட்ச்சை எடுத்து மெல்லத் தொடங்கியவள் ஆதியின்

கைத் தசைகளை ஓரக் கண்ணால் பார்வையிடத் தொடங்கினாள்.

“ஜிம்முக்கு போவீங்களா சார்....?”

“ம்ம். ரொம்ப ஸ்ட்ரெஸ்ஸா இருந்தா போவேன்.”

“ஓ....”

“ம்ம்.... ஏன் நீயும் வரப் போறியா....?”

“அச்சச்சோ நான் அங்கெல்லாம் வர மாட்டேன்.”

“ம்ம்....”

“ஆதி சார்....?”

“வாட் குயின்....?”

“உங்க பிஸ்னஸ் எப்படிப் போகுது.?”

“ஐ டோன்ட் க்நோ.”

“ஏன் எதுலையும் இன்ட்ரஸ்ட் இல்லாம இருக்கீங்க ஆதி சார்....?”

“இந்த வாழ்க்கை வெறுத்துருச்சுடி. சுய நல உலகம். உண்மையை சொல்லணும்னா எனக்கு வாழவே பிடிக்கலை.”

“அச்சோ....” என பதறியவளைப் பார்த்தவன் “நான் செத்தா உனக்கு விடுதலை தானே குயின்.” எனக் கேட்டான்.

“நான் எல்லாருமே நல்லா இருக்கணும்னுதான் நினைப்பேன்.”

“ப்ச் இந்த டாபிக்கை வ்விடு. நான் எந்த பொண்ணுங்களையும் நம்புறது இல்லை.”

“ஓ....??” என்றவளின் முகம் வாடிப் போனது.

அதே நேரம் ராமு வீட்டினுள் நுழைந்தார். அவரைக் கண்டதும் வாடிய முகம் மீண்டும் புத்துணர்ச்சி பெற, அவரைப் பார்த்து புன்னகைத்தாள் தன்மயா.

ஒரு தட்டில் தோசையை வைத்து எடுத்துக் கொண்டு ராமுவை நெருங்கியவள் "சாப்பிடுங்க அங்கிள்...." என்றாள்.

"ரொம்ப நன்றிடா. நிறைய நாளைக்கு அப்புறம் வீட்டு சாப்பாடு." என புன்னகைத்தவர் ஆதியை ஒரு முறை பார்த்து விட்டு சட்டென அவளுடைய கையில் அந்த மயக்க மருந்து ஊசியைக் கொடுத்தார்.

அவளும் அதனை ஆதி அறியாது தன் புடவை முந்தானையால் மறைத்துக்

கொண்டவள் யஷ்விந்த் குட்டியைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டாள்.

அவள் தூக்கியதும் கிளுக்கிச் சிரித்த மகனைக் கண்டு அவளுடைய உதடுகளும் புன்னகையைச் சூடிக் கொண்டன.

ஆதியோ மேலே அறைக்குச் சென்றவன் "குயின்.... மேலே வா." என அழைத்தான்.

அவளோ ராமுவிடம் குழந்தையைக் கொடுத்தவள் அந்த மயக்க மருந்து ஊசியை அவன் காணாதவாறு பத்திரப் படுத்திக் கொண்டாள்.

"அங்கிள் நான் கூப்பிட்ட உடனே மேல வந்துருங்க." என்றவள் பதறிய

மனதோடு அவன் அறைக்குள் நுழைந்தாள்.

அவள் அறைக்குள் நுழைந்த அடுத்த நொடியே அந்த அறைக் கதவை பூட்டி சாவியை எடுத்தவன் அதனை சோபாவின் மேல் போட்டான்.

“அச்சோ எதுக்கு கீயை எறியிறீங்க....?” என அதனை எடுக்க முயன்றவளின் கரத்தை இறுகப் பற்றியவன் “ஸ்டே ஹியர் குயின்.” என்றான்.

வழக்கம் போல அவனுடைய குரலில் அவளுக்கோ அவளுடைய முதுகுத் தண்டு சில்லிட்டுப் போனது.

“ஏ.... ஏன்.?” என்றவளினை இழுத்து தன் கை வளைவிற்குள்

கொண்டு வந்தவன் "ஐ நீட் யு குயின்...." என்க, அவளுக்கோ போராட்டம் தொடங்கப் போவது புரிந்தது.

"இ.... இப்போ.... வ்வேணாமே...."

"எனக்கு இப்போவே வேணுமே...."

"ஆதி ப்ளீஸ்...."

"கால் மீ சார்." என அவன் கூறியதும் தன் விழிகளை இறுக மூடிக் கொண்டவள் மீண்டும் திறந்து அவனைப் பார்த்தாள்.

"உன்னை நான் எதுக்காக இங்கே வர வெச்சிருக்கேன்னு உனக்கு நல்லாவே தெரியும். சோ ரெடியாகு. ஐ கான்ட் வெயிட் ஃபார் இட்." என்றவன் மதுபான போத்தலை

கரத்தில் எடுக்க, அவளுக்கோ உடல் உதறத் தொடங்கியது.

‘சும்மாவே இவன் ரொம்ப மோசமா பிஹேவ் பண்ணுவான். குடிச்சா அவனை கன்ட்ரோல் பண்ணவே முடியாது’ என எண்ணியவள் சட்டென அவனுடைய கரத்தை பிடித்து நிறுத்தினாள்.

“வாட்....?” என சீறியவனின் கரத்தினுள் தன் கரத்தை நுழைத்தவள் விழி மூடி அமைதியாக நிற்க, மதுபானத்தை மறந்து மீண்டும் அவளை நெருங்கி வந்தான் ஆதி.

“யு லுக் சோ ப்யூட்டிஃபுல்.” என்றவன் அவளுடைய காதோரம் இருந்த முடிக் கற்றைகளை ஒதுக்கி விட, அவள் உடலோ தடுமாறியது.

“என்னாச்சுடி....?”

“ப.... பயம்மா இருக்கு....” எனக் கூறியவளின் விழிகள் கசியத் தொடங்கின.

“நீ அழுதா ரொம்ப நல்லா இருக்கும் குயின்.” என சிலாகித்தான் அவன்.

“ஏன் ஆதி இப்படி பிஹேவ் பண்றீங்க....? என்னோட கண்ணீர்ல உங்களுக்கு பெயின் தெரியலையா....? என்னோட வேதனை புரியலையா....?” எனக் கேட்டாள் தனு.

“மத்தவங்களைப் பத்தி யோசிச்சு கவலைப்பட்டா நம்ம வாழ்க்கையை வாழ முடியாது குயின்.” என இலகுவாக கூறினான் அவன்.

“மத்தவங்களுக்கும் மனசு இருக்கு ஆதி....” என்றவளின் குரல் உடைந்தது.

அவள் இதழ்களோ அழுகையில் துடிக்க ஆரம்பித்தன. அழுகையில் பிதுங்கிய இதழ்களை ரசித்துப் பார்த்தவன் அவளுடைய கன்னங்களை தன் கரங்களினால் ஏந்தினான்.

“ரொம்ப க்யூட்டா இருக்கடி....” என்றவன் அவளது இதழ்களை நோக்கி மெல்ல குனிந்தான்.

அவளது வயிற்றுக்குள்ளே படபடவென ஏதோ அசைவதைப் போல இருந்தது.

உள்ளங் காலில் தொடங்கி உச்சி முடி முதல் சிலிர்த்து நிற்க,

அவளுடைய கரங்களோ அவளுடைய கப்டுப்பாட்டை மீறி நடுங்கத் தொடங்கின.

“குழந்தை மாதிரி பயப்படாத குயின்....” என்றவனின் உதடுகள் அவளுடைய இதழ்களில் பட்டும் படாமலும் உரசத் தொடங்கியது.

அவளோ பயந்து பின்னால் நகர, அவனோ அவளுடைய அசைவுக்கேற்ப முன்னால் நகர, அவள் விலக, அவன் நெருங்க என அவர்களுக்கிடையே மெல்லிய பனிப் போர் போல மோக யுத்தம் ஆரம்பிக்க தொடங்கியது.

அவளோ சுவற்றோடு முட்டி இனி பின்னால் நகர முடியாதென அறிந்து திகைத்து நிற்க, அவளின்

அவஸ்தை கண்டு புன்னகைத்தான் அவன்.

அவனுடைய கரங்களின் விரல்களோ அவளுடைய கன்னக் குழியை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தன.

அதற்கு மேலும் பொறுமை காக்க முடியாதவன் குனிந்து அவளுடைய செவ் அதர மாதுளையை தன் இதழ்களால் கவ்விக் கொண்டான்.

அவனது அதிரடி முத்தத்தில் அதிர்ந்து விழிகளை விரித்தவள் பின் தன்னை மறந்து அவனுடைய முத்தத்தில் விழிகளை மெதுவாக மூடினாள்.

அவனுடைய கரங்களோ அவளுடைய கன்னத்தில் இருந்து கீழே இறங்கி அவளுடைய கழுத்து வளைவில் தஞ்சம் புகுந்து அவளுடைய இடையான மியாந்தர் வளைவை நோக்கி பயணிக்க ஆரம்பித்தன.

பெண்ணின் உடல்தான் எத்தனை எத்தனை ரகசியக்களையும் பொக்கிஷங்களையும் தன்னுள் புதைத்து வைத்திருக்கின்றது என எண்ணி வியந்தவன் அவளுடைய இதழ்களை விடுவிக்கும் எண்ணம் சிறிதும் இன்றி தன் இதழ் முத்தத்தை தொடர்ந்து கொண்டே போனான்.

உணர்வுகள் அவளைப் பிழியச் செய்ய, சட்டென அவனுடைய

சிகையை இறுகப் பற்றிக் கொண்டாள் தன்மயா.

அவளது செயலில் கிறங்கியவன் அவளுடைய இதழ்களை விடுவித்து விட்டு “குயின்ன்....” என அழைக்க, சட்டென விழிகளைத் திறந்தவள் அவனைத் தள்ளி விட்டாள்.

அவனது பார்வை அவளை அணு அணுவாக தீண்ட அவளுக்கோ உடல் கூசத் தொடங்கியது.

அவளை விட்டு விலகிச் சென்றவன் மீண்டும் அவளை நெருங்கும் போது அவனுடைய கரத்தில் வீற்றிருந்தது ஒரு மெல்லிய சிவப்பு நிற ஆடை.

அந்த சிவப்பு நிற ஆடையைப் பார்த்ததும் அவனைச் சந்தித்த முதல் நாள் அவளுக்கு நினைவில் வந்தது.

“இந்த ரெட் ட்ரெஸ்ஸை போட்டுகிட்டு வா.” என்றவாறு அவளுடைய கையில் அந்த அரைகுறை ஆடையை வைத்தான் ஆதி.

எத்தகைய கொடிய நாள் அது. அதனை எங்கணம் அவளால் மறக்க முடியும்....?

அந்த கசந்த நினைவில் அவன் கொடுத்த ஆடையை சற்றும் யோசிக்காது விசிறி எறிந்தாள் மாது.

அவளுடைய செயலில் அவனுக்கு அவள் மீது இருந்த கொஞ்ச நஞ்ச இரக்கமும் துணி

கொண்டு துடைத்தாற் போல காணாமற் போனது.

அடுத்த நொடி ஓங்கி அவளுடைய கன்னத்தில் அறைந்தான் ஆதி.

அவனுடைய கரத்தின் பலத்தில் பொத்தென தரையில் விழுந்தாள் தன்மயா.

அவனது ஒற்றை அடியில் காதுகள் அடைத்து கண்கள் இருண்டு போகத் தொடங்கின.

“வாட் த ஹெல்....” என சீறியவன் அவளுடைய முடியைப் பற்றி அவளைத் தூக்கி நிறுத்தினான்.

“ம்மாஆஆஆ வ்வலிக்குது வ்விடுங்க....” என அலறியவளின் கழுத்தை இறுகப் பற்றியவன்

“உன்னைப் போய் பாவம்னு நினைச்சது என்னோட தப்புத்தான் டி.” என்றவன் அவள் திமிறத் திமிற அவளைத் தூக்கி படுக்கையில் போட்டான்.

“ஆதீஈஈஈ ப்ளீஸ் வ்விடுங்க. இப்படி வ்வேணாம் ப்ளீஸ்.” எனக் கதறியவளின் மீது வலுக்கட்டாயமாக படர்ந்து அவளுடைய உடலை சுகிக்கத் தொடங்க, அவளுடைய கரமோ மறைத்து வைத்த மயக்க மருந்து ஊசியை எடுக்க முயற்சி செய்தது.

அவனோ அவளுடைய மார்பில் முகம் புதைத்து அத்து மீறிய கணம் சட்டென அந்த ஊசியை வெளியே எடுத்தவள் அவனுடைய கரத்தில் குத்தி மருந்தை உள்ளே இறக்கினாள்.

அவனோ அதிர்ந்து விலகி தன் உடலில் ஏற்றப்பட்ட ஊசியையும் அவளையும் மாறி மாறிப் பார்த்தவன் அவளை அடிபட்ட பார்வை பார்த்தான்.

தன் கரத்தில் ஏறிய ஊசியை பிடுங்கி வெளியே எறிந்தவனது உதடுகளோ "துரோகி.... ஐ... ஐ.... வில் கில் யு...." என முணுமுணுத்தன.

அடுத்த நொடி பொத்தென படுக்கையில் மயங்கி விழுந்தான் ஆதித்யன்.

அவனுடைய துரோகி என்ற வார்த்தையில் முகத்தை மூடிக் கொண்டு கதறி அழுதாள் தன்மயா.

"சாரி ஆதிம்மா. எனக்கு வேற வழி தெரியலை. சாரி...." என்றவளின்

கரம் மயங்கிக் கிடந்த ஆதியின் கம்பீரமான முகத்தை வருடியது.

மோகம் – 23

படுக்கையில் மயங்கிக் கிடந்தவனைக் கண்டு அவள் உள்ளம் பிசையத் தொடங்கியது. தன் மனதின் உள்ளே எழுந்த வலியை தட்டி உள்ளேயே அனுப்பி வைத்தவள் சோர்ந்துதான் போனாள்.

கவின் சித்துவைக் கூட சமாளிக்க முடிந்த அவளால் ஆதியை சமாளிப்பது மிக கடினமாக இருந்தது.

எவர் சொல்லுக்கும் கட்டுப்படாத தனிக் காட்டில் வாழும் சிங்கம் போலல்லவா ஆதித்யனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

எதிர்த்து ஒரு வார்த்தை பேசினாலே எரிமலை போல பொங்கி எரிக்க வரும் அவனை சாதாரண பெண்ணவளால் எங்கணம் தடுக்க முடியும்....?

என்னை நெருங்கி வருகிறான் , தன் மனைவி போல என் அனுமதியின்றியே என் அங்கங்களில் முத்தம் வைக்கிறான், ஏதாவது கூறினால் டெவில் அவதாரம் எடுக்கிறான். இவனை எங்கணம் என்னால் சமாளிக்க முடியும்....?

எப்படியாவது இன்று மனநல வைத்தியரிடம் அவனை அழைத்துச் சென்றுவிட வேண்டுமென எண்ணியவள் ராமுவை அழைத்தாள்.

“ராமூஊஊ அங்கிள்....”

“.....”

“அங்கிள்.... அங்கிள்....” என உரத்து அழைத்தவள் ராமு வராமற் போக, கீழே சென்று அழைக்கலாம் என படுக்கையை விட்டு எழுந்தவள் அதிர்ந்தாள்.

அவளது கரத்தை இறுகப் பற்றிக் கொண்டிருந்தது ஆதியின் இரும்பை ஒத்த கரம்.

மயங்கிச் சரிந்தவனால் எப்படி அவளுடைய கையை பிடிக்க முடியும்....?

நொடி நேரத்தில் உள்ளம் பதறி உடல் உதறி வியர்த்துக் கொட்டத் தொடங்கியது அவளுக்கு.

தொண்டைக்குள் வந்து துடித்த இதயத்தை தன் கரம் கொண்டு

அழுத்தியவள் அவனுடைய பிடிக்குள் இருந்த மற்றைய கரத்தை நடுக்கத்தோடு திரும்பிப் பார்த்தாள்.

“நான் வேணும்னா ராமுவை கூப்பிடட்டுமா ட்ராமா குயின்....?” எனக் கேட்டான் ஆதி.

அந்த ஒற்றைக் கேள்வியில் உடல் உறைந்து போனது அந்த மெல்லிய மனம் கொண்ட இளையவளுக்கு.

‘இது எப்படி சாத்தியம்....?’ என நம்ப முடியாது திகைத்தவள் மிதமிஞ்சிய அச்சத்தில் சட்டென தன் கையை உருவிக் கொண்டு வெளியே ஓட முயன்றாள்.

அவனுடைய கோபம் பற்றி அறிந்தவளுக்கு இன்னும் கொஞ்ச

நேரம் அவன் முன் நின்றாலும் தன் நிலை மோசமாகி விடும் என்பதை உணர்ந்தவள் ஓடிச் சென்று கதவைத் திறக்க முயன்றாள்.

அதுவோ சாவியின்றி இருக்க பதறிப் போனவள் சட்டென சோபாவில் கிடந்த கீயை எடுத்து கதவைத் திறந்து வேகமாக படிகளில் இறங்கி கீழே ஓடினாள்.

கையும் களவுமாக அவனிடம் மாட்டிக் கொண்டதை எண்ணி அவளுக்கோ சர்வநாடியும் அடங்கி ஒடுங்கிப் போனது.

கீழே ராமு தன் கைகளை பிசைந்தவாறு நிற்பதைக் கண்டவள் கலங்கிய விழிகளோடு அவரை நெருங்கினாள்.

“அ.... அங்கிள் அந்த மருந்து வேலை செ....ய்யலை ஏ.... ஏன்னு தெரியலை அங்கிள்.” என பதறியவாறு கூறியவளை தடுமாற்றத்தோடு பார்த்தவர் “சாரிம்மா மருந்து மாறிடுச்சு.... மயக்க மருந்துக்கு பதிலா ஆன்டிபயோடிக் கொடுத்திட்டேன்.” என தடுமாற்றத்தோடு கூறியவரை இயலாமையுடன் பார்த்தவள் தன் தலையில் கை வைத்தபடி உறைந்து நின்றாள்.

“சாரிம்ம்மா....”

“ப்ச் ஐயோ என்ன அங்கிள் இப்படி பண்ணிட்டீங்களே. நான் நீங்க கொடுத்த ஊசியை அடிச்சிட்டேன். ஆதியும் மயங்கின மாதிரி நடிச்சிருக்கார்.

இன்னையோட என் கதை முடிஞ்சுது. அவன் என்னை கொன்னே போட்ருவான் அங்கிள்." என்றவள் அழத் தொடங்கினாள்.

ராமுவோ பதற்றத்தோடு நிற்க, அவருக்கு அருகே விளையாடிக் கொண்டிருந்த தன் மகனை தூக்கியவள் "நான் போறேன்...." என்றவாறு மளமளவென வாயிலை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

ஆதியின் கரங்களில் சிக்கி நரக வதையை அனுபவிப்பதை விட இங்கிருந்து எங்காவது தப்பிச் சென்று விடலாமென எண்ணியவள் வாயிலை நெருங்கிய கணம் "டும்...." என்ற சத்தத்தோடு பாய்ந்து சென்று அந்த கதவைத் துளைத்தது ஒரு தோட்டா.

துப்பாக்கிச் சூட்டின் சத்தத்தில் யஷ்விந்தோ கை தட்டிச் சிரிக்கத் தொடங்க, அவளோ ஒரு அடி கூட அசையாது அப்படியே விறைத்துப் போய் நின்றாள்.

“என்ன ட்ராமா குயின். எதுக்காக நின்னுட்ட....? ஓடு.... கமான் ஓடு ஓடு.... ஓஹ்ஹ கதவு சாத்திருக்கேன்னு பார்க்கிறியா.? ராமு மெயின் டோரை ஓபன் பண்ணு. என்னோட குயின் வெளியே போகணுமாம்.” என சிரிப்போடு கூறினான்.

ராமுவோ மறு பேச்சு பேசாது கதவைத் திறந்து விட, வாயிலை நோக்கி இன்னொரு அடி எடுத்து வைத்தவள் அடுத்த தோட்டா

அவளுடைய காலின் அருகே பாயவும் விதிர் விதிர்த்துப் போனாள்.

“நோஓஓஓ.... வ்வேணாம் ஆதி சார் ப்ளீஸ் ஷூட் பண்ணாதீங்க. ப்ளீஸ்...” என அழுதவாறு மன்றாடியவளை அழுத்தமாக பார்த்தவன் “என் பக்கத்துல வா குயின்.” என அழைத்தான்.

உடலின் அத்தனை அணுக்களும் அவனை எண்ணி அஞ்சி நடுநடுங்க அவன் அருகே செல்ல அவளால் முடியுமா என்ன....?

அவளுடைய இரண்டு கால்களிலும் இரும்புக் குண்டை கட்டி வைத்ததைப் போல நகர மறுத்தன.

“உனக்கென்ன காது செவிடா குயின்.? நான் சொன்னது

கேட்கலையா....?” என்ற அதட்டலில் அவள் உடல் உதறத் தொடங்கியது.

யஷ்விந்த்தோ அவளுடைய கரங்களில் இருந்து துள்ளிக் குதித்து கீழே இறங்கியவன் ஆதியை நோக்கி ஓடத் தொடங்கினான்.

“ய.... யஷ்விந்த் நில்லு....” என்ற அவளுடைய நடுக்கமான குரல் அந்தச் சிறுவனை எட்டவில்லை போலும்.

“அ... அங்கிள் துப்பாக்கி கொதுங்க விள்ளாடுவோம்.” என துப்பாக்கியை தருமாறு தன் கையை நீட்டியபடி நின்றான் தன்மயாவின் மகன்.

“ஹா.... ஹா.... கமான்டா நாம ஷூட் பண்ணி விளையாடலாம்.”

என்றவாறு யஷ்விந்த்தை தூக்கிக் கொண்டு தன்னுடைய அறைக்குள் நுழைந்தான் ஆதி.

அடுத்த நொடி நகர மறுத்த கால்களை கடினப்பட்டு இழுத்து தன்னிலைக்கு கொண்டு வந்தவள் உச்ச கட்ட பயத்தில் ஆதியின் அறை நோக்கி ஓடத் தொடங்கினாள்.

அவளுடைய மனமோ அவளை ஒரு நிலையில் இருக்க விடாமற் தடுத்தது.

சில நேரம் வலியிலும் சில நேரம் அழுகையிலும் சில நேரம் கோபத்திலும் சில நேரம் தவிப்பிலும் சில நேரம் விரக்தியிலும் அவளை வைத்திருந்தான் ஆதித்யன்.

தன் மகனுக்காக மீண்டும் அந்த அரக்கனின் அறைக்குள் நுழைந்தாள் அவள்.

“ஹான் வெல்கம் மை டியர் ட்ராமா குயின்.” என தன் கைகளைத் தட்டி வர வேற்றவன் அவளை நெருங்கி அவளுடைய இடையில் தன் கரம் போட்டவாறு அவளை அழைத்துக் கொண்டு வந்தான்.

“சா.... சாரி சார். என்னை ஒன்னும் பண்ணிராதீங்க ப்ளீஸ். ப்ளீஸ் வ்விட்ருங்க.” என்றவளின் கண்களில் இருந்தும் வழிந்தது ஒரு துளிக் கண்ணீர்.

கண்ணீர் வழிந்த கன்னத்தில் குனிந்து முத்தம் வைத்தான் அந்த ராட்சசன்.

“ஓகே குயின். உன்னோட ப்ளான் பத்தி சொல்லு. எதுக்கு அப்படி பண்ணின....?” என நிதானமாகக் கேட்டவன் தான் சோபாவில் அமர்ந்து அவளைத் தன் மடி மீது அமர்த்திக் கொண்டான்.

பருந்தின் மடியில் நடுங்கிய வண்ணம் அமர்ந்திருந்தது ஒரு சிறிய கோழிக்குஞ்சு.

“உ.... உங்களை டா.... டாக்டர்கிட்ட கூட்டிப் போ.... போறதுக்காகத்தான் இப்படி பண்ணேன். உ.... உங்க நல்லதுக்காகத்தான் ஆதி ப்ளீஸ் புரிஞ்சிக்கோங்க.” என்றவளின் கூந்தலை விலக்கி விட்டவன் “நான் எப்படி இருந்தா உனக்கென்ன....?” என அலட்சியமாக கேட்டான் அவன்.

“உ... உங்களோட சின்ன வயசுல நடந்தது எல்லாம் தெ.... தெரிஞ்சிக்கணும்.”

“தெரிஞ்சு என்ன பண்ண போற....? ஹாங்....?” என்றவளின் இடையை உடைக்கும் வண்ணம் அழுந்திப் பிடித்தான் ஆதி.

“ஆஆஆஆ ஐயோ.... வ்வலிக்....குது விடுங்க.” என அலறியவளை விடுவித்தவன் “சரி கீழே போய் பாப்கார்ன் எடுத்துட்டு வா. என்னோட கதையை நானே உனக்கு சொல்றேன் போ.” என அவளைத் தள்ளி விட்டான்.

தடுமாறி கீழே விழுந்து திகைத்து விழித்தபடி நின்றவளை பார்த்தவன் “ஏய் போய் பாப்கார்ன் எடுத்துட்டு வான்னு சொன்னேன்.” என

கர்ஜிக்க, பேய் துரத்துவதைப் போல ஓடிச் சென்றவள் கிட்சன் நோக்கி சென்றாள்.

நடுங்கிய தன் உடலை சமாதானம் செய்து நிலைப் படுத்திக் கொண்டவள் தன் முகத்தை நன்கு கழுவிக் கொண்டு தன் பதற்றத்தை போக்க முயன்றாள்.

குளிர்ந்த நீர் முகத்தில் பட்டதும் சற்றே தெளிவு பிறக்க, அவன் கேட்ட பாப்கார்னை தயார் செய்தவள் அதனை எடுத்துக் கொண்டு மீண்டும் அந்த அறைக்குள் நுழைந்தாள்.

“வெல்கம் பேக் குயின்.” என்றவன் அவளை அழைத்துச் சென்று சோபாவில் அமர்த்தி விட்டு அவளுக்கு முன்னே தரையில் அமர்ந்தவன் “நான் என்னோட

கதையை சொல்லப் போறேன். நீ என்ன பண்ணணும்னா இந்தப் பாப்கார்னை நிறுத்தாம சாப்பிட்டுக் கிட்டே இருக்கணும். என்னை பாதில நிறுத்த சொல்லக் கூடாது. நீயும் இந்த இடத்தை விட்டு நகரக் கூடாது புரிஞ்சுதா....?" என அவள் முகம் பார்த்தான்.

அவளோ அவனுடைய விழிகளைப் பார்த்தவாறு ஆம் என்றாள்.

அவளுடைய கரங்களோ அவன் கூறியதைப் போல பாப்கார்னை ஒவ்வொன்றாக எடுத்து உண்ணத் தொடங்கின.

"குட்." என அவளை மெச்சிக் கொண்டவன் ஒரு கணம் தன் விழிகளை மூடித் திறந்தான்.

“எங்க மம்மியும் டாடியும் லவ் மேரேஜ்தான் பண்ணிகிட்டாங்க. என்னோட அப்பாக்கு அம்மா மேல அவ்ளோ காதல். அவங்க மேரேஜ் முடிச்சு ஒரு வருஷத்துல எங்க அண்ணன் பிறந்தான்.” என்றவனின் குரல் சற்றே நெகிழ்ந்தது.

“உ.... உங்களுக்கு அண்ணா இருக்காரா....?” என அதிர்ந்தவாறு கேட்டவளை பார்த்தவன் தன் வாயில் விரலை வைத்து “உஷ்ஷ்....” என்றதும் தன் வாயை இறுக மூடிக் கொண்டாள் தன்மயா.

“எங்க அண்ணாவோட பேரு ராணா ரகுபதி. அவன் பிறந்து ரெண்டு வருஷத்துக்கு அப்புறமா பிறந்தவன்தான் இந்த ஆதி. என்னோட பதின் மூணு வயசு

வரைக்கும் எல்லாமே நல்லாத்தான் போய்கிட்டு இருந்திச்சு.” என்றவனின் குரல் இறுகி ஒலித்தது.

“அப்பா அவரோட ஆபிஸ்ல நடந்த ஃபயர் ஆக்ஸிடன்ல எங்க எல்லாரையும் விட்டுட்டு போயிட்டாரு.” என்றவனின் விழகள் பிறர் அறியாமல் ஒரு துளி கண்ணீரை சிந்தியது.

“அப்பா இறந்ததுக்கு அப்புறம்தான் பிரச்சனையே ஆரம்பிச்சுது. அம்மா எங்க கூட பேசுறதையே நிறுத்தினாங்க. எங்க ரெண்டு பேரையும் பார்த்தாலே திட்டுவாங்க. எங்களுக்கு எதுவுமே புரியலை. ஒரு நாள் ராணா அண்ணா என்னை வீட்ல இருக்க வேணாம்னு பார்க் கூட்டிட்டுப் போயிட்டான்.

அப்புறம் என்னை அங்கே விட்டுட்டு அவன் மட்டும் வீட்டுக்கு போயிட்டு வருவான்.

எனக்கு எதுவுமே புரியலை. ஏன் என்னை தனியா விட்டுட்டுப் போறான்னும் தெரியலை. ஆனா அவன் திரும்பி வரும்போதெல்லாம் அவன் கண்ணெல்லாம் சிவந்து போயிருக்கும். நைட் டைம்தான் நான் வீட்டுக்கே போவேன். இப்படியே நாலைஞ்சு மாசம் போயிருச்சு." என்றவனின் விழிகள் கலங்கின.

"ஏதோ தப்பா இருக்குன்னு மட்டும் புரிஞ்சுது. ஆனா என்னன்னு எனக்கு அப்போ புரியலை. அண்ணா மட்டும் தனியா இருக்க ஆரம்பிச்சான். அடிக்கடி அழுதுகிட்டே இருப்பான்.

யார்கூடவும் பேச மாட்டான்." என்றவன் தன் பேச்சை நிறுத்தினான்.

"ப்ச் இப்போ அண்ணா பத்தி நமக்கு தேவலை." என்றவன் தன்னுடைய பிறந்த நாள் அன்று நடந்த சம்பவங்களைக் கூறத் தொடங்கினான்.

அன்றைய தினம்தான் அவனுடைய வாழ்க்கையையே புரட்டிப் போட்டது.

மோகம் – 24

2008 ஆம் ஆண்டு மார்ச் பதினைந்தாம் திகதி.

அன்று ஆதித்யனின் பதின் மூன்றாவது பிறந்தநாள்.

மிகப் பெரிய பிரம்மாண்டமான படுக்கை அறையில் தன்னந்தனியாக படுத்திருந்த ஆதியோ கடிகாரத்தின் ஒலியில் காலையில் எழுந்தவன் தன் பிறந்த நாள் ஆடையான மாடர்ன் ஷர்ட் ஒன்றும் டெனிம் ஷார்ட்ஸ்ஸையும் அணிந்து கொண்டான்.

சில மாதங்களாகவே அன்னையின் அரவணைப்போ தந்தையின் பாசமோ சகோதரனின் தோழமையோ இன்றி தவித்துப் போயிருந்தவனுக்கு அன்றைய பிறந்தநாள் சற்று மகிழ்ச்சியை ஊட்டுவதாக அமைந்தது.

வழமையாக தன்னைத் தேடி வந்து வாழ்த்தும் சகோதரன் இன்று வராமற் போகவும் சோர்ந்து

போனவன் தன் மனதை தானே தேற்றிக் கொண்டான்.

தன் தாய் மாலினியைத் தேடிச் சென்றவன் அவரைக் கண்டதும் இத்தனை நாள் இருந்த தயக்கத்தை உதறிவிட்டு ஓடிச் சென்று அவரை இறுக அணைத்துக் கொண்டான்.

“ம்மாஆ.... இன்னைக்கு என்னோட பர்த்டே. மறந்துட்டீங்களா....?” எனக் கேட்டான் ஆதி.

“ப்ச். எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு ஆதி டிஸ்டர்ப் பண்ணாத.” என்றவாறு அங்கிருந்து நகர, அவனுக்கோ கண்கள் கலங்கிப் போனது.

“மம்மீஈ ஸ்டாப்.” என்றான் ஆதி

“ப்ச் இடியட் மாதிரி பிஹேவ் பண்ணாத ஆதி.” என்றவாறு அவர் கிட்சனுக்குள் நுழைய, மீண்டும் அவரின் பின்னேயே சென்றவன் “மம்மீஈ எனக்கு பர்த்டே கி:ப்ட்டும் உங்க கிஸ்ஸும் வேணும்.” என புன்னகையோடும் அன்போடும் அவருடைய வழியை மறித்தான் அவன்.

அவன் வழியை மறித்ததும் சட்டென தன் புடவையின் மீது அவர் கையில் வைத்திருந்த டீ கொட்டி விட, பல லட்சங்களை விழுங்கிய அந்தப் புடவை ஆதியால் பாழாகிப் போனதைக் கண்டு அவருடைய கோபம் பன் மடங்காக மாறி எல்லையைக் கடந்தது.

அடுத்த கணமே எதைப் பற்றியும் சிந்திக்காது சினத்தோடு அவனை இழுத்துச் சென்று சூடான கரண்டியால் வயிற்றில் சூடு வைக்க அலறித் துடித்தான் ஆதி.

“ஆஆஆஆஆ ஐயோஒஒ வ்விடு..... வ்விடுங்க.... மம்மீஈஈஈஈ எரியுது.... ஐயோஒஒ அண்ணாஆஆ அண்ணாஆஆ” என அலறி துடித்தான் ஆதி.

அவனது அலறல் சத்தத்தில் தன் அறையில் இருந்து வெளியே ஓடி வந்தான் ராணா.

அங்கே ராணா கண்ட காட்சி அவன் மனதை உலுக்கியது. ஆதியை விட ரெண்டு வயதே பெரியவனான அவனுக்கு உள்ளம் உடைந்தே போனது.

தரையில் மடிந்து தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்தான் அவனுடைய தம்பி ஆதி.

இத்தனை நாட்களாக பொறுத்துக் கொண்டிருந்தவன் இன்று சினத்தை கட்டுப்படுத்த முடியாது தன் அன்னையை எதிர்த்து பேசத் தொடங்கினான்.

“அம்மா உக்களுக்கு என்ன பைத்தியமா....? எதுக்கு ஆதிக்கு சூடு வெச்சீங்க....?” என சீறிய ராணாவின் முடியை பற்றி வலிக்கும் படி ஆட்டியவர் “உன்னோட வேலை எதுவோ அதை மட்டும் பாரு. கெட் லாஸ்ட்” என்றார்.

“ஏன்மா இப்படி பண்றீங்க....? ரொம்ப தப்பு பண்றீங்கம்மா.

அப்பாக்கு துரோகம் பண்ணீங்க. பொறுத்துக்கிட்டேன். ஆனா ஆதி என்னம்மா தப்பு பண்ணினான்.? அவனுக்கு எதுவுமே தெரியாது.

அவனைப் போய் எதுக்கு காயப்படுத்துறீங்க.?"

"நீங்க ஏன்டா என்னோட உயிரை வாங்குறீங்க....? உங்க அப்பா போய் தொலைஞ்ச மாதிரி நீங்களும் எங்கேயாவது போய்த் தொலைங்க. ச்சை இந்த வீட்ல எனக்கு நிம்மதியே இல்ல." எனக் கத்தினாள் மாலினி.

அவருடைய கூற்றில் இரண்டு சிறுவர்களுமே ஆடித்தான் போயினர்.

அதே நேரம் "ஹாய் மாலு பேபி." என்றவாறு உள்ளே நுழைந்தார்

ராஜமாணிக்கம். இந்தியாவின் மிகப் பெரிய தொழில் அதிபர்.

“ஹாய் டார்லிங். வந்துட்டீங்களா....?” என்றவாறு தன் மகன்களின் முன்பே அவரை அணைத்தார் மாலினி.

ராஜமாணிக்கமோ பதிலுக்கு அவரை அணைத்து முத்தம் வைத்தார்.

“ச்சை....” என்ற ராணாவோ வலியில் துடித்துக் கொண்டிருந்த ஆதியை பார்க்க, ஆதியோ வலியை மறந்து தன் தாயை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“ஆதி வா போகலாம்.” என்றவாறு ராணா அவனை அழைத்துச் செல்ல பதின் மூன்று

வயதேயான ஆதியின் மனதில் அந்த தகாத உறவின் காட்சி அப்படியே பதிந்து போனது.

“இதுலாம் நீ பார்க்க வேணாம் ஆதி. இந்த கொடுமையை உன்னால தாங்க முடியாது.” என்ற ராணாவை அணைத்துக் கொண்டு கதறித் தீர்த்தான் ஆதி.

அந்த சிறுவர்களை சற்றும் கணக்கில் எடுக்காத அவர்களுடைய தாயோ “ராணா இவனைக் கொண்டு போய் பார்க்ல விட்டுட்டு நீ எங்க ரெண்டு பேருக்கும் காவலா இந்த ரூமுக்கு வெளியவே இரு.” என்றதும் ஆதியின் பார்வை தற்போது தன் சகோதரனை வெறிக்கத் தொடங்கியது.

அவனது பார்வையை கணக்கில் கொள்ளாது அவனை இழுத்துக் கொண்டு தன் வீட்டிற்கு முன்னே இருந்த பார்க் நோக்கி சென்றான் ராணா.

“அப்போ டெய்லி அம்மா இப்படித்தான் தப்பு பண்றாங்களா அண்ணா....? நீயும் இதுக்கு உடந்தையா....?” என்ற ஆதியின் கேள்வியில் மறுப்பாக தலை அசைத்தவன் வேறெங்கோ வெறித்துப் பார்த்தான்.

“அவங்க முதல் மாதிரி இல்ல ஆதி. நான் அவங்க சொன்னதை கேட்கலைன்னா உன்னைக் கொன்னுருவேன்னு சொன்னாங்க. நம்ம பேர்ல இருக்கிற சொத்துக்காகத்தான்டா நம்மள

உயிரோட விட்ருக்காங்க.” என்ற ராணா தன் கண்களை துடைத்துக் கொண்டான்.

“நாம இங்க இருக்க வேணாம்னா. நாம வேற எங்கேயாவது போயிரலாம்.” என்ற ஆதியை சமாதானம் செய்தவன் ஆதி கூறியதை கேட்க மறுத்தான்.

அன்றே அவன் கூறியதை கேட்டிருந்தால் இனி நடக்கப் போகும் கொடுமைகளை அன்றே தவிர்த்திருக்கக் கூடும்.

அதன் பின்னர் ஆதியும் ராணாவும் தன் படிப்பில் மாத்திரம் கவனம் செலுத்தி தன் தாயிடம் இருந்து மொத்தமாக விலகத் தொடங்கினர்.

அடுத்த ஒரு வருடத்திலேயே ராஜமாணிக்கம் மாலினியின் தொடர்பு வெளி உலகத்திற்கு தெரிய வரத் தொடங்கியது.

பத்திரிகைகளில் நம்பர் ஒன் தொழிலதிபர் ராஜமாணிக்கத்திற்கும் ஏ.கே குரூப் ஆஃப் கம்பனி முதலாளியின் மனைவியான மாலினிக்கும் இடையேயான கள்ளத் தொடர்பு என செய்திகள் வரத் தொடங்க, ராஜமாணிக்கமோ தன் மனைவிக்கு பயந்து மாலினியை ஒதுக்கினார்.

இதனால் மனம் உடைந்த மாலினியின் செயல்கள் இன்னும் இன்னும் மோசமாக மாறின.

குடித்துக் கொண்டு வீட்டிற்குள் வருவது. அரை குறை ஆடையோடு

நடு வீட்டில் விழுந்து கிடப்பது, ராணாவோ அனைத்தையும் வெறித்துப் பார்த்துவிட்டு அகன்றுவிட ஆதியோ தன் தாயை எதிர்த்து நின்று கண்டிக்க ஆரம்பித்தான்.

அதன் விளைவு ஆதி பலவிதமான கொடுமைகளை தன் தாயின் மூலம் அனுபவிக்க நேரிட்டது.

ராணாவோ அடிக்கடி தன் அறைக்குள்ளேயே முடங்கிப் போக, ஆதியோ அடி வாங்கி வாங்கி இரும்பாக இறுகிப் போனான்.

இப்படியே அவர்களுடைய நாட்கள் நரகமாய் கழியத் தொடங்கின.

ஒரு நாள் டியூஷன் க்ளாஸ் சென்ற இருவரும் அன்று பெய்த

மழையின் காரணமாக வகுப்பிற்குச் செல்லாமல் மீண்டும் தங்களுடைய வீட்டிற்கே மீண்டும் சென்றனர்.

நனைந்த தங்களுடைய தலையை துடைத்தவாறு உள்ளே வந்தவர்கள் அங்கே ஹாலில் நடந்த அசிங்கத்தைக் கண்டு ஸ்தம்பித்துப் போயினர்.

அவர்களுடைய அன்னை மாலினியோ இன்னொரு ஆடவருடன் சோபாவில் பாதி ஆடையின்றி கிடக்க, அதைக் கண்டு அதிர்ந்த ராணாவோ சட்டென வெளியேறி வீட்டுக்கு வெளியே மழையில் வந்து நிற்கத் தொடங்கினான்.

ஆதியோ அந்த இடத்தை விட்டு சற்றும் அசைந்தானில்லை. அதிக அழுத்தம் காரணமாக அவனுடைய

மூக்கில் இருந்து உதிரம் சிந்தத் தொடங்க, அதனைத் தன் புறங்கையால் துடைத்தவன் அருகே கிடந்த பழம் வெட்டும் கத்தியை தன் கரங்களில் ஏந்திக் கொண்டு வேகமாக அவர்களை நெருங்கினான்.

அடுத்த நொடி வெறி கொண்ட வேங்கையாக அவர்கள் மீது பாய்ந்தவன் அந்த ஆடவன் மீதும் தன் தாயின் மீதும் கண் மண் தெரியாத அளவுக்கு மிகக் கொடூரமான முறையில் கத்தியால் தாக்கத் தொடங்கினான்.

திடீரென நடந்த தாக்குதலை கிரகிக்க முதலே அவர்களது உடல் பல காயங்களை ஆதியால் பெற்றுக் கொண்டது.

அந்த இடமே இரத்தத்தால் நிறைந்து போனது.

“ஐயோஓஓ போதும் ஆதீஈஈஈ ப்ளீஸ் நிறுத்துங்க போதும்.....” என அலறினாள் தன்மயா.

இளகிய மனம் கொண்ட அவளால் ஆதியின் கடந்த காலத்தை காது கொடுத்து கேட்க முடியவில்லை.

அவன் ஒவ்வொரு விடயமாக கூறக் கூற விம்மி வெடித்து கதறிக் கொண்டே இருத்தவள் இறுதியில் அவனை நிறுத்தச் சொல்லி அலறியே விட்டாள்.

எந்த ஒரு சிறுவனும் அனுபவிக்க கூடாத கொடுமை அல்லவா இது.

“என்ன குயின்.? பாதியிலயே நிறுத்திட்ட....? நீதானே என்னைப் பத்தி கேட்கணும்னு சொன்ன....?” என்றவனை அவள் நிமிர்ந்தும் பார்க்கவில்லை.

அவனுடைய சிறுவயது காலம் மிக மிகப் பயங்கரமானது என்பதை உணர்ந்து கொண்டவள் அந்த சோபாவிலேயே முடங்கிப் போனாள்.

“எல்லாருக்கும் அவங்க ஆசைப் பட்டது மாதிரி வாழ்க்கை அமைஞ்சிராது குயின். நான்லாம் நரகத்துலேயே வாழ்ந்துட்டு இருக்கேன். நான் இது வரைக்கும் எந்தவித மனுஷனையும் நம்பினதே இல்ல. இனி நம்பப் போறதும் இல்ல.”

அவளோ தன் கண்களை துடைத்துக் கொண்டவள் “உ.... உங்க

அண்ணாக்கு என்.... என்னாச்சு....?" எனக் கேட்டாள்.

"அவன் தற்கொலை பண்ணிகிட்டான்." என்றவனது விழிகள் சடுதியில் கலங்கி தாரை தாரையாக கண்ணீரை சிந்தத் தொடங்கின.

"இந்த உலகத்துல எனக்குன்னு யார் இருக்கா தெரியுமா....?"

"யா.... யாரு....?"

"நான் மட்டும்தான். எனக்காக நான் மட்டும்தான் இருக்கேன். ஆனா கொஞ்ச நாளா உன் மேல கொஞ்சம் நம்பிக்கை இருந்திச்சு. இப்போ அதுவும் போயிருச்சுடி." என்றவன் தனக்கு அருகே கிடந்த கண்ணாடி

மேஜையை தன் கரத்தால் அடித்து நொறுக்கினான்.

அந்தக் கண்ணாடியுடன் அவள் மனதும் அக்கணம் நொறுங்கிப் போனது.

மோகம் – 25

சிறு சிறு துண்டுகளாக உடைந்து நொறுங்கிக் கிடந்த கண்ணாடித் துண்டுகளையே வெறித்துக் கொண்டிருந்தாள் தன்மயா.

இருபத்தொரு வயதே நிரம்பிய அந்த காரிகைக்கு இத்தனை கொடுமையான கதையைக் கேட்டதும் அதில் இருந்து மீள முடியாது மனம் தவித்துக் கொண்டே இருந்தது.

யாரையாவது அணைத்து அவர்களுடைய தோளில் சாய்ந்து தன் பாரம் முழுவதையும் அழுது இறக்கி வைக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்ற தன் மகனைப் பார்த்தாள் தன்மயா.

அவனோ உறக்கத்தின் பிடியில் நன்கே உறங்கிக் கொண்டிருக்க மெல்ல அந்த சோபாவில் இருந்து எழுந்தவள் அந்த அறையின் பால்கனி நோக்கிச் சென்றாள்.

அவளுடைய கால்கள் எப்படி நடக்க வேண்டுமென்பதை மறந்து விட்டது போலும். திணறி தடுமாறி தன் சுவடுகளை பதிக்க சுவற்றை பிடித்துக் கொண்டு கணத்த இதயத்தோடு பால்கனி சென்றவள் அப்படியே தரையில் அமர்ந்து தன்

முழங்கால்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

ஆதி அனுபவித்த வலியை அவளும் அக்கணம் உணரத் தொடங்க, அவளுடைய விழிகள் இடை நிறுத்தாது உணர்வுகளின் உவர் நீர்த் துளிகளை மழை போல பொழியத் தொடங்கின.

ஆதி கூறிய விடயங்களை தன் மனக் கண் முன் கொண்டு வந்தவள் அந்த சம்பவங்கள் யாவும் தனக்கே நிகழ்ந்ததைப் போல துடிதுடித்துப் போனாள்.

உடல் வியர்வையில் குளித்தது. அவளுடைய விழிகளின் வழியே கண்ணீரோடு அவள் பூசிய கரு அஞ்சனமும் கரைந்து கன்னத்தோடு ஒட்டிக் கொண்டது. கூந்தல்

கலைந்து உதடுகள் துடிக்க அமர்ந்திருந்தவளை அறையின் உள்ளேயே இருந்து வெறித்துக் கொண்டிருந்தான் ஆதி.

அவள் தனக்குள் மருகித் துடிக்கின்றாள் என்பதை உணர்ந்தவன் விரக்தியான புன்னகையை வெளிப்படுத்தினான்.

அவனுக்கோ தலை வெடிப்பதைப் போல இருந்தது.

அவனுடைய உணர்வுகள் இன்று அடங்காது பேயாட்டம் போடத் துடிக்க, தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டவன் யஷ்விந்தின் அருகே தானும் சென்று படுத்துக் கொண்டான்.

‘அவன் எப்போதும் தன் வலிகளில் இருந்து தப்பித்துக்

கொள்ள தூக்கத்தையே ஆயுதமாக சூடிக்கொள்வான். அவன் உறங்கும் நேரங்களில் அவனுடைய கடந்த காலமோ நிகழ் காலமோ தோன்றி அவனை வதைக்காதல்லவா.

படுக்கையில் படுத்தவாறு தன் விழிகளை மூடி உறங்கிப் போனான் ஆதி. சில மணித் துளிகள் உறங்கி விழித்தவனோ தன் மார்பில் படுத்திருந்த யஷ்விந்த்தை கரங்கள் நடுங்க அணைத்துக் கொண்டான்.

கிட்டத்தட்ட நான்கு மணி நேரம் தூக்கத்திலேயே கழித்தவன் தன்மயாவை தன் விழிகளால் தேடினான்.

அவளோ அவன் தூங்குவதற்கு முன்பு எப்படி பால்கனியில் அமர்ந்திருந்தாளோ அதே போலவே

அப்படியே அமர்ந்திருக்க அவனுடைய புருவங்கள் உயர்ந்தன.

தன் மேல் படுத்திருந்த யஷ்விந்தை மெத்தையில் கிடத்தியவன் அவள் அருகே சென்றான்.

அவன் வந்து நிற்பதைக் கூட அறியாது அசையாது அப்படியே இருந்தாள் தன்மயா.

“குயின்....?”

“.....”

அவள் எந்த அசைவும் இன்றி இருக்க, பெரு மூச்சோடு அவளை விட்டு விலகியவன் யஷ்விந்தை தூக்கிக் கொண்டு அந்த அறையை விட்டு வெளியேறினான்.

குழந்தையை ராமுவிடம் ஒப்படைத்து விட்டு உள்ளுக்குள் கடல் அலை போல ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த தன் மனதை அடக்க, அவனுடைய தோட்டத்திற்குள் நுழைந்தான்.

பல வர்ணங்களில் பூத்துக் குலுங்கிய ரோஜாப் பூக்களை தன் விரல்களால் வருடியவன் அந்த ரோஜா இதழ்களின் மென்மையில் தன்மயாவின் உதடுகளை தீண்டியது போல உணர்ந்தான். இரண்டு இதழ்களுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை என்றே தோன்றியது அவனுக்கு.

சற்று நேரம் அந்த தோட்டத்தில் நடை பயின்றவன் அங்கிருந்த கல் பெஞ்சில் அமர்ந்து கொண்டான்.

அவனுடைய சிந்தனைகள் கடந்த காலம் தாண்டி மீண்டும் பயணிக்கத் தொடங்கியது.

காலத்தைக் கடந்து செல்ல டைம் மிஷின் தேவையா என்ன....? நம் மனதே போதுமே. 2022ஆம் ஆண்டில் இருந்து அவனுடைய சிறுபிராயத்திற்கு மீண்டும் அவனுடைய மனம் பயணிக்கத் தொடங்கியது.

காலம் கடந்தும் ஆறாத மாறாத வலி அவனுடையது. அவன் வலியின் உச்சத்தை உணர்ந்து இறுகிப் போனவன் அல்லவா.? அவனுடைய மனமும் இறுகித்தான் போயிருந்தது.

தன்மயா அறிந்தது அவனுடைய பாதி வாழ்க்கையே. மீதி நடந்தவை பற்றி அவள் அறிய நேர்ந்தால் அவள்

இதயம் அதிர்ச்சியில் நிச்சயம் வெடித்தே விடும்.

எத்தனை நேரம் தன்னை மறந்து தோட்டத்தில் இருந்தானோ அவன் அறியான். அந்த இடம் முழுவதும் இருளால் சூழ திகைத்தவன் மீண்டும் எழுந்து வீட்டிற்குள் நுழைந்தான்.

ராமுவின் மடியில் இருந்து சமத்தாக பால் குடித்துக் கொண்டிருந்தான் யஷ்விந்த்.

அவனைத் தூக்கத் துடித்த கரங்களை கட்டுப் படுத்திக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தவன் அங்கே தன்மயாவைக் காணாது போக,

சிந்தனையில் புருவம் சுளித்தவன் பின் ஏதோ தோன்ற

சட்டென பால்கனி நோக்கிச் சென்றான்.

காலையில் எப்படி இருந்தாளோ அதே போலவே இப்போதும் அதே இடத்தில் அப்படியே இருந்தவளைக் கண்டு அவனுள்ளம் அதிர்ந்து போனது.

கிட்டத்தட்ட பத்து மணி நேரமாக இதே இடத்தில் இருக்கும் தன்மயாவின் அருகே அமர்ந்தவன் அவளுடைய கரத்தை பற்றிக் கொண்டான்.

“உனக்கு என்னாச்சு ட்ராமா குயின்....?” என்றவனுடைய கரத்தின் அழுத்தத்தில் நிமிர்ந்து அவனுடைய முகம் பார்த்தாள் அந்த மென்மையான மனம் கொண்ட பூங்காரிகை.

அவளது விழிகளோ இரத்த நிறத்தை சூடிக் கொண்டன போலும். அழகிய கரு விழியைச் சூழ இருந்த வெண் படலம் செந்நிறமாக மாறிப் போயிருந்தது.

மூக்கு நுனி சிவந்து முகம் வீங்கி, கன்னங்களில் கரு நிற அஞ்சனம் வழிய குழந்தை போல இருந்தவளைப் பார்த்தவன் தடுமாறிப் போனான்.

அவளோ அவன் முகம் பார்த்து விசும்பத் தொடங்கினாள்.

“நா.... நா.... நான் இப்படிலாம் கே... கேட்டதே இல்ல. ரொம்ப ரொ.... ரொம்ப க.... கஷ்டமா இ.... இருக்கு ஆதி. எ.... என்னால தா.... தாங்க முடி....யலை.” என விசும்பியவாறே

சிரமப்பட்டு வார்த்தைகளை உச்சரித்தாள் மாது.

அவளுடைய முகத்தில் விழுந்த கூந்தலை ஒதுக்கி காதோரம் தள்ளியவன் அவளுடைய கன்னத்தில் தன் ஒற்றை விரலால் வருடி கோடிழுத்தான்.

அவளுடைய கண்ணீர் வருடிக் கொண்டிருந்த அவனுடைய விரலையும் நனைத்தது.

“ம்ப்ச் போதும்டி வா....” என்றவன் எழுந்து கொண்டான்.

அவளோ எழ முயன்று தோற்றவளாய் வலியில் முகத்தை சுருக்கியவாறு “எ.... என்னால அ.... அசைய....” என தடுமாறிக் கொண்டிருந்தவளின் முன் தன்

கரத்தை நீட்டி நிறுத்து என்பதைப் போல சைகை காட்டியவன்,

“என்ன அசைய முடியலையா....?” எனக் கேட்டான்.

ஆம் எனத் தலை அசைத்தாள் தன்மயா.

“ஓ.... உன்னோட லெக்ஸ் மரத்துப் போயிருக்கும். ஒரே இடத்துல இப்படியேவா அசையாம இருக்கிறது இடியட்.” என அவளைத் திட்டியவன் குனிந்து அவளைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டான்.

அவள் விழிகளோ ஆதியின் முகத்தையே பார்த்த வண்ணம் இருந்தன.

“ரொம்ப க.... கஷ்டமா இருந்திச்சா ஆதி....?” என

அழுகையோடு கேட்டவளை படுக்கையில் கிடத்தியவன் “ஆஆஆ ரொம்ப சுகம்மா இருந்திச்சு. மூடிட்டு தூங்குடி.” என்றான்.

“ய.... யஷ்விந்த் எங்க....?”

“அவன் ராமுகூட இருக்கான்.”

“ஓ.... அவனுக்கு சா.... சாப்பாடு ஊட்டணும்.” என்றவாறு எழ முயன்றவளை மீண்டும் படுக்கையில் அழுத்தியவன் “இப்போ டைம் என்ன தெரியுமா....? எட்டாகிருச்சு. அவன் ஆல்ரெடி சாப்பிட்டு பால் குடிச்சிகிட்டு இருக்கான். நீ கொஞ்ச நேரம் படுத்துக்கோ.” என்றான் ஆதி.

அவனது அக்கறையில் அவளுக்கோ மீண்டும் விழிகள் கசியத் தொடங்கின.

சட்டென போர்வையை இழுத்து தலை வரை போர்த்திக் கொண்டவள் விட்ட அழுகையை தொடரத் தொடங்கினாள்.

ஆதிக்கோ பொறுமை பறந்து விட சினத்தோடு அவளுடைய போர்வையை விலக்கியவன் அவள் மீது அழுத்தமாக படர்ந்து அவளுடைய கழுத்தை இறுகப் பற்றியவன் “உஷ்ஷ்.... இனி உன்கிட்ட இருந்து மூச்சு விடுற சத்தம் கூட வரக் கூடாது.” என அழுத்தமான குரலில் மிரட்டினான்.

அவளோ அவனுடைய விழிகளையே இமை சிமிட்டாது பார்த்துக் கொண்டிருந்தவள் சட்டென அவனுடைய கழுத்தில் தன் கரங்களைக் கோர்த்து அவனைத்

தன்னை நோக்கி இழுக்க, அதிர்ச்சியில் அவனுடைய கரங்கள் அவள் கழுத்தில் இருந்து விலகின.

“ஹேய்....” என தடுமாறியவாறு அவளுடைய அணைப்பிற்குள் வந்தவன் அதிர்ந்து அவளுடைய அழுது சிவந்த முகத்தைப் பார்த்தான்.

அவளோ அவனை அணைத்தவள் அவனுடைய நெற்றியில் இதழ் ஒற்ற, அந்த இதழ்களின் உராய்வில் இருவருடைய உடலுமே அதிர்ந்து அடங்கியது.

‘உனக்கு நான் இருக்கேன் ஆதி.’ எனக் கூறுவதைப் போல அவனை தன் மார்போடு அணைத்தவள் அமைதியாக படுத்துக் கொண்டாள்.

அவளுடைய அணைப்பில் ஆதியின் உடலில் பலவித மாற்றங்கள் நொடி நேரத்தில் உண்டாயின.

சிலிர்ப்பு....!!

மகிழ்ச்சி....!!

தவிப்பு....!!

ரசிப்பு....!!

அழுகை....!!

ஆம் அவன் விழிகள் சற்றே கசிந்தன.

அவன் சகோதரன் ராணாவிற்கு அடுத்து அவன் பெற்ற அன்பான அணைப்பு.

தன்னை விட ஆறு வயது சிறிய பெண்ணிடம் அடைக்கலம்

புகுந்ததைப் போல அவளுடைய மார்பில் தன்னை மறந்து முகத்தைப் புதைத்தவன் அவளுடைய முதுகினூடே தன் இரு கரங்களையும் நுழைத்து தன்னோடு அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அவனை மார்பில் ஏந்திய கணம் அவன் பட்ட துயரங்களை தான் பட்டதாக எண்ணி துடித்தவள் அவனுடைய சிகையினுள் தன் கரம் நுழைத்து வருடினாள்.

“உங்களுக்காக யாரும் இல்லைன்னு நினைக்காதீங்க ஆதி. கடவுள் யாரையுமே தனியா படைக்க மாட்டார். நமக்குன்னு ஒருத்தங்க கண்டிப்பா இருப்பாங்க. உங்க கூடவே கடைசி வரைக்கும் வருவாங்க. உங்களோட கசப்பான கடந்த

காலத்தை வசந்த காலமா கண்டிப்பா மாத்துவாங்க. இங்கே யாரும் தனியா இல்லை ஆதி. நமக்கான துணையை நாம இன்னும் சந்திக்காம இருந்திருப்போம். ஒரு வேளை அவங்களை சந்திச்சிருந்தாலும் அவங்க நமக்கானவங்கன்னு தெரியாம இருப்போம்." என்றவளை இன்னும் இன்னும் இறுக அணைத்தான் அவன்.

"மறந்துருங்க ஆதி. எல்லாத்தையும் மறந்துருங்க. நடந்து முடிஞ்சதை மறந்து உங்களோட வாழ்க்கையை புதுசா ஆரம்பிங்க."

"ம்ம்...."

"முடிஞ்சா டாக்டர்கிட்ட ட்ரீட்மெண்ட் எடுத்துக்கோங்க ஆதி...."

“ஹா.... ஹா.... எனக்கே ட்ரீட்மெண்ட்டா....?”

“ஆமா உங்களுக்குத்தான் ஏன்....?”

“நான் யாருன்னு தெரிஞ்சா நீ இப்படி சொல்லிருக்க மாட்ட.” என்றவன் அவள் ஏதோ கேட்க வருவதை உணர்ந்து அந்தப் பேச்சை சட்டென மாற்றினான்.

“அது சரி நீ எதுக்கு இப்போ பாட்டி மாதிரி அட்வைஸ் பண்ணிகிட்டு இருக்க....?”

“ஹாங் பாட்டி மாதிரியா....?” என விழித்தவளின் விழிகளில் முத்தம் வைத்தான் ஆதித்யன்.

“எதுக்குடி என்னை ஹக் பண்ணின....?” எனக் கேட்டவாறு

அவளுடைய இதழ்களை முத்தமிட நெருங்கினான்.

“பிடிச்சிருக்கு....” என அவன் விழிகளை பார்த்து கூறினாள் தன்மயா.

“வாட் வாட் இப்போ நீ என்ன சொன்ன....?”

“அதுஉஉ... வந்துஉ....” என தடுமாறியவளின் இதழ்களில் அழுந்த முத்தம் பதித்தான் ஆதி.

அவளோ விலகாமல் அவனுடைய கழுத்தை வளைக்க மேலும் அதிர்ந்தான் ஆதி.

உயிர்களின் அணுக்கள் கூட இன்பம் துய்க்கும் வகையில் இருந்தது அந்த ஆழ்ந்த முத்தம்.

இருவரும் ஒருவரை ஒருவர் மறந்து தம்மை மற்றவரிடம் இழந்து இதழ் வழியே இதயப் பாதையில் நுழைந்து முத்தத்தில் மூழ்கி முக்குளித்து மூச்சடக்கி முகத்தோடு முகம் இழைத்து இளைப்பாற,

அந்த சிறு இடை வெளியில் விழி மூடிக் கிடந்தவளை தன் முகம் பார்க்கச் செய்தவன் "பிடிச்சிருக்குன்னா....?" என இழுத்தான்.

அவளோ புரியாது பார்க்க, "நீதானே பிடிச்சிருக்குன்னு சொன்ன. அதான் என்ன பிடிச்சிருக்குன்னு கேட்டேன்." என்றான்.

அவளுடைய விரலோ நடுக்கத்தோடு உயர்ந்து அவனுடைய மார்பை சுட்டிக் காட்ட, அவளுடைய

செம் மாதுளை நிற இதழ்களோ “ஐ லவ் யு டெவில்.” என அவன் காதோரம் முணுமுணுத்து அவளுடைய காதலை வெளிப்படுத்தின.

மோகம் – 26

“ஐ லவ் யூ டெவில்....” என முணுமுணுத்த உதடுகளின் சொந்தக்காரியோ அச்சத்தில் தன் விழிகளை மூடிக் கொண்டாள்.

ஆதித்யன் என்பவன் எந் நேரம் எப்படி செயல்படக் கூடும் என அறிந்தவர் இந்த அவனியில் இல்லையே.

அவளுடைய வார்த்தைகளைக் கேட்டதும் அவனுடைய கண்களே முதலில் நகைத்தன. அந்த

நயனங்களின் புன்னகையில் அத்தனை எள்ளல் விஞ்சி வெளிப்பட்டது.

அடுத்த கணம் அவளை விட்டு விலகி படுக்கையில் சரிந்தவன் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினான்.

“ஹா.... ஹா.... ஹா.... ஹா....”

அவனுடைய தொடர் நகைப்பில் அவள் மனம் அடிபட்டுப் போனது. நெகிழ்ந்த மனம் இறுகிப் போய் ஏமாற்றத்தை தழுவிக் கொண்டது.

“ஆதீஈஈ ப்ளீஸ்....” அவளது குரல் அவமானத்தில் நைந்து ஒலித்தது.

“காதல்னாலே குப்பை.” என்றவாறு எழுந்தவன் சோபாவில் சென்று அமர்ந்து கொண்டான். சிகரெட் ஒன்றை எடுத்து புகைக்கத்

தொடங்கியவனின் முகத்தில் இருந்த உணர்வுகளை அவளால் படிக்க முடியாது போனது.

“எல்லா காதலும் குப்பை இல்லை ஆதி.”

“பச்.... காதல்னாலே குப்பைதான். நான் பார்த்த முதல் காதல் எங்க அப்பா அம்மாவோடது. அப்பா போனப்புறம் அந்தக் காதல் எந்தத் திசைப் பக்கமா போச்சுன்னே தெரியலை. அதுக்கப்புறம் எங்க அம்மாக்கு பார்க்கிறவன் எல்லார் மேலையும் காதல். இவ்ளோ கேவலமான காதல் நமக்கு தேவையா....? நீ இல்லைன்னா இன்னொருத்தி உன் இடத்துக்கு வரப் போறா. நான் இல்லைன்னா என்னோட இடத்துக்கு

இன்னொருத்தன் உனக்கு வரப் போறான். பிறகென்ன டேஷுக்கு லவ் கத்தரிக்கான்னு உளர்ற....?”

“ஐயோ போதும் ஆதி. உங்களுக்கு லவ் பிடிக்கலைன்னா விட்ருங்க. அதை இப்படி கேவலப் படுத்தாதீங்க.”

“ஏய் முட்டாள் இங்க நிறைய பேரு காமத்துக்காகத்தான் காதலை தேடுறாங்க. இங்க மோகம்தான் இம்ப்பார்ட்டன்ட்.”

“காமம் இல்லாத காதலும் இருக்கு ஆதி.”

“ஹா... ஹா.... இன் யுவர் ட்ரீம்ஸ்.”

அவனது பதிலில் அவனை வெறித்துப் பார்த்தவள் தன் வாயை

இறுக மூடிக் கொண்டாள். அவனிடம் போராடுவதும் சுவற்றோடு தன் தலையை மோதிக் கொள்வதும் ஒன்றெனப் புரிந்த பின் எதற்காக பதில் பேச வேண்டும்.?

“என்னடி அமைதியாகிட்ட.? நீ சொன்னதுல ஒன்னு மட்டும் உண்மைதான்.”

“என்னது....?”

“ஐ லவ் யு டெவில்னு சொன்னியே. இதுல இந்த டெவில் மட்டும் ட்ரூ. இன்னொரு தடவை லவ் தக்காளி கத்தரிக்காய்ன்னு உளறினா உன்னை போட்டுத் தள்ளிட்டு போய்ட்டே இருப்பேன்.” என கர்ஜித்தவன் மீண்டும் புகைக்கத் தொடங்கினான்.

அவனுடைய வார்த்தைகளில் சினந்தவள் பின் அவனுடைய நிலையை எண்ணி தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டாள்.

‘வாழ்க்கைல ரொம்ப அடிபட்டு வந்திருக்கான். அவனால எப்படி உடனே என்னை நம்ப முடியும்....? அவனைப் பொறுத்த வரைக்கும் காதல் என்கிற உறவு கசப்பை மட்டும் தான் கொடுத்திருக்கும். காதல்னா என்னன்னு கூடிய சீக்கிரமா அவனே புரிஞ்சிப்பான்.

நாமதான் நம்மளை புரிய வைக்கணும். ஆதியை முழுசா குணப்படுத்தணும்.

அவனோட மன அழுத்தங்களை குறைக்கணும்.’ என தனக்குள்

எண்ணிக் கொண்டவள் படுக்கையை விட்டு எழுந்து கொண்டாள்.

“எங்க போற குயின்.?”

“யஷ்விந்த்தை தூக்கிட்டு வர்றேன்.”

“நீ இங்கேயே இரு. நான் போய் தூக்கிட்டு வர்றேன்.” என்றவாறு ஆதி எழுந்து அறைக்கு வெளியே சென்றான்.

உடைந்து கிடந்த கண்ணாடித் துண்டுகளை பொறுக்கி எடுத்தவள் அவற்றை குப்பைத் தொட்டியில் போட்டாள்.

சற்று நேரத்தில் வெளியே சென்றவன் மீண்டும் யஷ்விந்தோடு உள்ளே நுழைந்தான்.

“ஹாய் மயா பேபி.”

‘இது கவின்தானே....?’ என மனதினுள் எண்ணிக் கொண்டவள் “கவீன்....?” எனக் கேள்வியாகப் பார்த்தாள்.

“எஸ் பேபி இட்ஸ் மீ.” என்றவாறு புன்னகைத்தான் கவின்.

“ஹா.... ஹாய் கவின்.?” என்றவளின் குரல் சோர்ந்து போய் ஒலித்தது.

“என்னாச்சு மயா. எதுக்கு இவ்ளோ டல்லா இருக்க.?”

“நத்திங் கவின். கொஞ்சம் ஸ்ட்ரெஸ்ஸா இருக்கு. பட் இட்ஸ் ஓக்கே. நீ யஷ்விந்தை என்கிட்ட கொடு.”

“அவன் தூங்கிட்டான் மயா பேபி.”

என்றவாறு யஷ்விந்த்தை படுக்கையில் கிடத்தினான் கவின்.

“இந்த நைட் டைம்ல எங்கேயாவது வெளியே போனா நல்லா இருக்கும் மயா.” என்றவன் எதிர்ப்பார்ப்போடு அவளுடைய முகம் பார்த்தான்.

“இ.... இல்ல கவின் எனக்கு தூக்கம் வருது.” என்றவள் நாசூக்காக அவனுடைய அழைப்பை மறுத்தாள்.

“இன்னைக்கு நானும் உன்கூடவே இந்த ரூம்லையே தூங்கலாம்னு இருக்கேன் மயா.” என்றதும் அவளுக்கோ தூக்கிவாரிப் போட்டது.

தூங்கவா என அனுமதி கேட்டால் மறுக்கலாம். நானும்

தூங்குறேன் எனக் கூறுபவனிடம் என்ன பதிலைச் சொல்வது என தடுமாறியவள் காது கேளாதவள் போல படுக்கை விரிப்பை சரி செய்யத் தொடங்கினாள்.

கவினோ அந்த அறையின் கதவை பூட்டித் தாழிட அவளுடைய மென் இதயமோ எகிறி குதித்து துடிக்கத் தொடங்கியது.

“ஏ.... ஏன் கவின் கதவை பூட்டுற....?” என படபடப்புடன் கேட்டவளை நெருங்கியவன் “ஐ நீட் யு மயா பேபி.” என்றான்.

“பைத்தியம் மாதிரி உளறாத கவின். நான் உன்னை லவ் பண்ணலைன்னு எப்பவோ சொல்லிட்டேன்.” என்றவளின் குரல் சீறலாக வெளிப்பட்டது.

“பட் ஐ ஸ்டில் லவ் யு மயா.” என்றவன் அவளை இழுத்து மென்மையாக அணைத்துக் கொண்டான்.

கவினுடைய செயலில் தூக்கி வாரிப்போட்டது அவளுக்கு.

சட்டென அவன் பிடியில் இருந்து விடுபட்டவள் அந்த அறையில் இருந்து வெளியேற சித்தம் கொண்டாள்.

“மயா நில்லு ப்ளீஸ்.”

“நீ இப்படி பிஹேவ் பண்றது கொஞ்சம் கூட நல்லா இல்ல.” என விலகி யஷ்விந்தை தூக்கச் சென்றவளின் கரத்தை மறுபடியும் பிடித்து அவளை நகர விடாது தடுத்தான் கவின்.

“வ்விடு கவின்.”

அவனோ அவளை நெருங்கியவன் அவளது கன்னங்களை அழுந்தப் பற்றிக் கொண்டு அவளுடைய இதழ் நோக்கிக் குனிய, தன்மயாவின் உடலோ நடுங்கத் தொடங்கியது.

தன் பலம் மொத்தத்தையும் திரட்டி அவனிடம் இருந்து விடுபட போராடியவளின் இதழ்களில் குனிந்து தன் இதழ்களை பதித்தான் அவன்.

“ச்சீஈஈஈ.... வ்விடு கவின்.” என அலறியவளது வார்த்தைகள் யாவும் கவினுடைய அதரங்களுக்குள்ளேயே சிக்கிக் கொண்டன.

அவன் இளகிய நேரம் வெடுக்கென அவனைத் தள்ளி

விட்டவள் அவன் காயப்படுத்திய தன் இதழ்களைத் தொட்டவாறு ஓர் நொடி அதிர்ந்து நின்றாள்.

அடுத்த நொடியே அடக்க முடியாத சினத்துடன் கவினின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள் மாது.

அவளுக்கோ அருவருப்பில் உடல் கூசியது.

தன் கன்னத்தை பிடித்தவாறு அதிர்ந்து நின்றவனின் பார்வை திடீரென ஆக்ரோஷமாக மாறியது.

“ஏய் இப்போ நீ என்ன பண்ண....? என்னை அடிச்சியா....?” என நிமிர்ந்து நின்றவன் ஆதி என்பது புரிந்தாலும் சந்தேகமாக அவனைப் பார்த்தவாறு விழி நீர் வழிய நின்றாள் தன்மயா.

“நான் கேள்வி கேட்டா அதுக்கு பதில் சொல்லணும்னு உனக்குத் தெரியாதா ட்ராமா குயின்.?” என்றவனின் குரல் அழுத்தத்தில் ஏனோ இம்முறை அவளுக்குள் அச்சம் பிறக்கவே இல்லை.

வந்திருப்பது தன்னவன் என்ற உணர்வு தோண்ற, அடுத்த கணம் அமைதியாக அவன் மார்பில் சாய்ந்து தன் கரங்களால் அவனை அணைத்துக் கொண்டாள்.

வழமையாக தான் திட்டினால் அதிர்ந்து விழிகள் கசிய நிற்பவள் இம்முறை அச்சமின்றி அவளாகவே வந்து அணைக்கவும் அவனோ அதிர்ந்து போனான்.

“என்னடி பயம் விட்டுப் போச்சா....?” எனக் கடுமையாகக்

கேட்டவனுடைய கரங்களோ அவனுக்கு எதிராக மாறி அவளை தன்னோடு அணைத்துக் கொண்டன.

மேலும் அவனது மார்பில் புதைந்தவள் “பயமா இருக்கு ஆதி....” என கலங்கிய குரலில் கூறினாள்.

“ஏன்....?”

“க.... கவின் எ... என்கிட்ட த... த.. தப்பா....”

“வாட்....? கவினா....? அவன் என்ன பண்ணினான்....? ப்ச் தெளிவா சொல்லு குயின்.” அதட்டினான் அவன்.

“ம்ஹூம் ஒ.... ஒன்னும் இல்ல.”

என்றவளது விழிகள் கண்ணீரால் நிறைந்தன.

“ப்ச் உனக்கு இப்போ என்னடி வ்வேணும்.?”

“ஹா.... ஹாஸ்பிடல் போகணும் ஆதி. ப்ளீஸ் என்கூட வாங்க ஆதி.” என அவனுடைய கன்னம் பற்றியவள் கெஞ்சலாகக் கேட்டாள்.

“நான் எதுக்கு ஹாஸ்பிட்டல் வரணும்.?” உறுமினான் அவன்.

“ப்ளீஸ் ஆதி.” என பார்வையால் கெஞ்சிய அவளை அப்படியே தன் கரங்களில் ஏந்திக் கொண்டு நடக்கத் தொடங்கினான் அவன்.

“அச்சோ என்ன பண்றீங்க. வ்விடுங்க.” என அவன் கரங்களில் இருந்து கீழே இறங்க முயன்றவளை இறுகப் பற்றிக் கொண்டவன் அறைக்கு வெளியே வந்து மாடிக்குச் செல்லும் படிகளில் ஏறத் தொடங்கினான்.

“இறக்கி விடுங்க ஆதி. நானே நடந்து வர்றேன்.”

“ஷட் அப்.” என்ற சீறலில் தன் வாயை மூடிக் கொண்டவள் அவனுடைய தோளில் முகம் புதைத்தாள்.

மாடிக்கு வந்தவன் அங்கே அமைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய நீச்சல் தடாகத்தில் அமர்ந்து அவளையும் நீரினுள் இறக்கி விட்டான்.

இரவு நேரத்தில் ஏகாந்த தனிமையில் ஜில்லென்ற நீரில் தன்னை இறக்கி விட்ட ஆதியின் செயலில் அவனை முறைக்க முயன்றவள் அவனுடைய பார்வையில் தடுமாறிப் போனாள்.

அவளை பின்னால் இருந்து அணைத்தவன் அவளுடைய கழுத்து வளைவில் முத்தம் பதிக்க, அவளுக்கோ உடல் சிலிர்த்தது.

வயிற்றுக்குள் பட்டாம் பூச்சி பறக்க, விழி மூடி நின்றவளை தன்னை நோக்கித் திருப்பியவன் அவளை தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டான்.

ஆதியை நேசிக்கத் தொடங்கியவளுக்கு அவனுடைய அணைப்பு இனிப்பு மிட்டாயைப் போல தித்தித்தது.

தன்னை மறந்து அவனுடைய கழுத்தில் கரங்களை கோர்த்தவள் அவனது கன்னத்தோடு தன் கன்னம் பதித்தாள்.

“ட்ராமா குயின் உன்கிட்ட ஏதோ இருக்குடி....” என்றவாறு அவளுடைய கன்னத்தை தன் இதழ்களால் தீண்டினான்.

“ம்ம்....”

“உன்கூட இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு பிடிச்சிருக்குடி.” என்றவன் அவளுடைய கழுத்தில் மெல்ல கடித்தான்.

“ஸ்ஸ்.... ஆதீஈஈஈ....” என்றவளுடைய விழிகள் அவனை காதலாய் தீண்டியது.

“கண்ணை மூடு குயின். உன்னோட கண்ணு என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுது.” என்றவன் அவளை விட்டு விலகி நீந்தத் தொடங்கினான்.

“அச்சச்சோ எனக்கு நீச்சல் தெரியாது.” என அலறினாள் தன்மயா.

அவளுடைய அலறலில் ஆதி மறைந்து கவினுடைய ஆல்ட்டர் வெளிப்பட்டது.

நீரினுள் மூழ்கியவளை சட்டென வந்து தாங்கிப் பிடித்த கவினோ அவளை இழுத்துக் கொண்டு மேலே ஏறினான்.

“ஆர் யு ஓக்கே மயா பேபி....?” என்ற கவினுடைய குரல் முகத்தருகே கேட்க, எங்கே கவின் மீண்டும் தன்னிடம் அத்துமீறப் போகின்றானோ என எண்ணி பயந்தவள் சட்டென அவனை வேகமாக தள்ளிவிட்டாள்.

அந்த நீச்சல் குளத்தில் பிடித்து ஏறுவதற்காக அமைக்கப்பட்டிருந்த

இரும்புக் கம்பியில் அவனுடைய தலை பலமாக மோதி இரத்தம் பீறிட்டது.

கவினோ “ஆஆஆ....” என்ற அலறலோடு தண்ணீருக்குள் மயங்கிச் சரிய உறைந்து போனாள் அவள்.

அடுத்த நொடியே ஓடிச் சென்று ராமுவை அழைத்து வந்தவள் அவருடைய உதவியோடு ஆதியை காரில் கொண்டு வந்து கிடத்தியவள் மருத்துவமனை நோக்கி வேகமாக புறப்பட்டாள்.

இந்த மருத்துவமனைப் பயணம் பல விடயங்களை அவளுடைய வாழ்க்கையில் மாற்றி அமைக்கப் போவதை அவள் அப்போது அறியவே இல்லை.

மோகம் – 27

அந்த இரவு நேரத்தில் காற்றைக் கிழித்துக் கொண்டு வேக வேகமாக சென்று கொண்டிருந்தது ஆதித்யனின் கார்.

தன்மயாவின் மடியில் ஆதியின் தலை பதிந்திருக்க, அவளின் மறு பக்கம் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் யஷ்விந்த்.

அவளுடைய மடி உணர்ந்த உதிரத் துளிகளில் அவள் மனம் பலமாக காயப்பட்டுப் போனது.

கவினை விலக்க வேண்டுமென எண்ணித்தான் தள்ளி விட்டாள்.

ஆனால் அவனுக்கு இப்படி விபத்து நேர்ந்து விடுமென அவள் கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை.

அஞ்சனம் பூசிய விழிகள் மருண்டு அஞ்சின.

தான் ஏற்படுத்திய காயம் ஆதி , சித்து , கவின் என மூன்று பேரையும் வலிக்கச் செய்யுமோ....?

“நீ ஏன் கவின் இப்படி மாறின.? நீ எவ்ளோ நல்லவன் நீயே இப்படி பண்ணலாமா....? நான் உன்னோட வாழ்க்கைல வந்ததனாலதான் நீ இப்படி மாறிட்டியா....? சாரி கவின். ஐ அம் சாரி.” என வாய்விட்டு சிறு குரலில் முணுமுணுப்பாக புலம்பினாள்.

‘அச்சோ சித்து மட்டும் வெளியே வந்துறக் கூடாது. அவன் சின்னப் பையன் அவனால இந்த வலியைத் தாங்க முடியாது.’ என எண்ணி

வேதனை கொண்டவள் சித்துவிற்காக கண்ணீர் வடித்தாள்.

‘ஆதி பாவம். எவ்வளவோ கஷ்டத்தை அனுபவிச்சு மனசால நொந்து போய் இருக்கிறவனை நானே காயப்படுத்திட்டனே.’ என தன்னவனை எண்ணியும் சில நொடிகள் விழிகள் கசிந்தாள்.

“அங்கிள் சீக்கிரமா போங்க அங்கிள்.” என்றவள் சட்டென “நான் சொல்ற ஹாஸ்பிடல் போங்க ப்ளீஸ்.” என்றாள்.

“ஏன்மா பக்கத்துல இருக்கிற ஹாஸ்பிட்டலுக்கே போகலாமே.” தயங்கினார் ராமு. “இல்ல அங்கிள். அது தெரிஞ்ச ஹாஸ்பிட்டல். ப்ளீஸ் அங்கேயே போங்க.”

“சரிம்மா.” என்றவாறு அவர் அவளுடைய தோழியின் மருத்துவமனைக்கே காரை செலுத்தினார்.

அவள் குறிப்பிட்ட மருத்துமனை வந்ததும் ராமுவின் உதவியோடு ஆதியை மருத்துவமனையில் அனுமதித்தனர்.

ஆதிக்கோ உடனடியாக சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு அவனுடைய காயத்திற்கு மருந்து போடப்பட்டது.

தன்மயாவோ அதே மருத்துவமனையில் இருந்த தன் தோழி தாரதியை சந்திப்பதற்காகச் சென்றாள்.

“ஹேய் என்ன தனு இந்த டைம்ல வந்திருக்க....? என்னாச்சு....?” எனக் கேட்டாள் தாரதி.

“ஆதியை அழைச்சுட்டு வந்திருக்கேன் தாரதி. சின்ன ஆக்ஸிடென்ட் ஒன்னு. தலைல அடிபட்டிருக்கு. இப்போதான் கட்டு போட்டு விட்டாங்க.”

“ஓ....?”

“ஆமா. இப்போ நீ ஃப்ரீன்னா ஆதியை கொஞ்சம் செக் பண்ண முடியுமா ப்ளீஸ்.”

“ஹேய் எதுக்கு ப்ளீஸ் பண்ற? பேஷன்ட்டை பார்க்கிறது என்னோட கடமைடி.”

“ம்ம்”

“இப்போ வந்திருக்கிறது யாரு.? ஆதியா கவினா சித்துவா....?”

“சத்தியமா எனக்கே தெரியலைடி.” என பரிதவிப்போடு கூறினாள் தன்மயா.

“சரி ஹிப்னாடிசம் பண்ணி பார்த்துரலாம். நீயும் என்கூட வா.” என்றாள் அந்த மன நல வைத்தியர்.

“ம்ம்.... இதனால ஆதிக்கு ஒன்னும் ஆகாதுல்ல....?”

“டோன்ட் வர்றி தனு. இதனால எந்த ஆபத்தும் இல்ல. இட்ஸ் ஜஸ்ட் அ ட்ரீட்மெண்ட். அவரோட மனசுல என்ன இருக்குன்னு புரிஞ்சிக்கலாம்.” என்றவள் ஆதி இருந்த அறையினுள் நுழைந்தாள்.

ஆதியோ படுக்கையில் கண் விழித்தவாறு இருந்தவன் உள்ளே நுழைந்த வைத்தியரையும் தன்மயாவையும் பார்த்தான்.

“ஹாய் மிஸ்டர்.....???” என இழுத்த வைத்தியரினை அழுத்தமாக பார்த்தவன் “ஐ அம் ஆதித்யன்.” என்றான்.

“இப்போ உங்களுக்கு வலி எப்படி இருக்கு ஆதித்யன்....?”

“நவ் பெட்டர். தேங்க் யு டாக்டர்" என அழுத்தமான குரலில் கூறியவன் தன்மயாவைப் பார்த்து “ஐ ஹேவ் டு கோ. குயின் வா நாம போகலாம்.” என்றவாறு எழுந்தான்.

“இ... இல்ல ஆதி. உங்களுக்கு இன்னும் ட்ரீட்மெண்ட் முடியலை.”

“ஓஹோ ட்ராமா குயின் எப்போ டாக்டரா மாறினீங்க....?” என்றவனின் குரல் கடினமாக ஒலித்தது.

தாரதியோ இருவருக்கும் இடையில் புகுந்தவர் “மிஸ்டர் ஆதித்யன் ப்ளீஸ் காம் டவுன்.” என்க,

அவரைத் திரும்பிப் பார்த்தவன் “ஃபார் வாட்.?” என அலட்சியமாக வினவினான்.

“நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசணும். ப்ளீஸ் சிட் பண்ணுங்க.”

“ஓ.... ஓகே பேசுங்க.” என்றவாறு அவர் கூறிய இருக்கையில் அமர்ந்தவன் அவரை கேள்வியாக பார்த்தான்.

“ரிலாக்ஸ்.... ரிலாக்ஸ் ஆகுங்க ஆதி.... நீங்க இப்போ சேஃப்பா

இருக்கீங்க.” என்றவாறு அவனுடைய கரத்தைப் பற்றி மெல்ல வருடினார் தாரதி.

“இந்த டிஸ்கீயை உத்து பாருங்க ஆதி.” என்றவர் அவனுடைய தலைக்கு மேலே இருந்த மினி லைட்டை ஒளிர விட்டார்.

“குட். அப்படித்தான் அப்படியே தொடர்ந்து பார்த்துகிட்டே இருங்க. உங்களோட இமைகள் கணக்குற மாதிரி இருக்கும். தூக்கம் வர்ற மாதிரி இருக்கும்.” என்றவாறு அவனுடைய கண்களை பார்க்க, அவனோ நிமிர்ந்து கால் மேல் கால் போட்டு அமர்ந்தவன் “என்ன டாக்டர் ஹிப்னாடிசமா....?” எனக் கேட்டான்.

தாரதியோ அதிர்ந்து போனார். சாதாரணமாக ஒருவரை இலகுவாக

அவரால் ஹிப்னாடிஸ் பண்ண முடியும். அப்படி இருக்கையில் ஆதியோ அவருடைய முயற்சியை முறியடித்தது அவரை அதிர வைத்தது.

"நீங்க என்னதான் ஹிப்னாடிஸ் பண்ணினாலும் ஒருத்தரோட ஒத்துழைப்பு இல்லாம அவரோட மைன்டை உங்களால கன்ட்ரோல் பண்ண முடியாதுன்னு தெரியாத மிஸ்.....?" என கேள்வியாக அவரைப் பார்த்தான் ஆதி.

"ஐ அம் தாரதி. யு ஆர் ரைட். உங்களுக்கு மென்டல் ஹெல்த் பத்தி நிறைய விஷயம் தெரியும் போலவே.? அம் ஐ கரெக்ட்....?"

"எஸ். ஐ அம் அ சைக்காட்ரிஸ்ட்." என ஆதி கூறியதும்

மற்றைய இரு பெண்களுக்கும் தூக்கி வாரிப் போட்டது.

தன்மயாவோ பயந்தே போனாள். “எ.... என்ன சொல்றீங்க ஆதி.? நி.... நிஜமாவா.? நீங்க டாக்டரா.?” எனக் கேட்டவளுக்கோ விழிகள் அதிர்ச்சியில் விரிந்தன.

“எஸ்.... உண்மை தெரிஞ்சிருச்சுதானே போகலாம் வா.”

தாரதியோ “ஓ மை காட் சார் நீங்க சைக்காட்ரிஸ்ட்டா இருந்தா கண்டிப்பா உங்களுக்குள்ள இருக்கிற டிசோடர் பத்தி உங்களுக்கு தெரிஞ்சிருக்குமே.?” என வியப்பாக கேட்டாள்.

“ப்ச். ஐ க்நோ எவ்ரிதிங். டி.ஐ.டி பத்தி உங்களை விட எனக்கு

நல்லாவே தெரியும். அன்ட் நான் ஸ்பிலிட் பர்சனால்டி பேஷன்ட்டுக்கு ட்ரீட்மெண்ட்டும் கொடுத்திருக்கேன். சோ ப்ளீஸ் மூவ்.” என்க, வாயடைத்துப் போனார் அந்த வைத்தியர்.

தன்மயாவோ விழிகள் கலங்க திகைத்தபடி உறைந்து நின்றாள்.

அவளுடைய கரத்தை பற்றியவன் அவளை இழுத்துக் கொண்டு தன் காரை நோக்கிச் சென்றான்.

காரினுள் ராமுவுடன் யஷ்விந்தும் இருக்க, தன்மயாவை உள்ளே தள்ளியவன் காரில் ஏறி அமர்ந்து கொண்டான்.

அவன் தள்ளி விட்டதும் காரின் பின் சீட்டில் விழுந்தவள் வெடுக்கென எழுந்து அந்தக் காரின் கதவோடு ஒன்றிக் கொண்டாள்.

அவனோ அவளை ஒரு முறை பார்த்தவன் அடுத்த நொடி அலட்சியமாக தன் பார்வையை விலக்கிக் கொண்டான்.

அவனுடைய கரங்கள் உயர்ந்து சோம்பல் முறித்தன. பின் சீட்டில் நன்கு சாய்ந்து அமர்ந்தவன் தன் விரல்களால் தன் தலைக் கேசத்தை அழுத்தமாக கோதத் தொடங்கினான்.

“ராமு ஏசியை ஆன் பண்ணு.”

“ஓகே சார்.”

“யஷ்விந்த்தை என்கிட்ட கொடு ராமு.” என்றவன், அடுத்த நொடியே

ராமுவிடம் இருந்து யஷ்விந்த்தை தன் மடிக்கு மாற்றிக் கொண்டான்.

யஷ்விந்த்தை இறுக அணைத்தவாறு தன் விழிகளை மூடிக் கொள்ள, நடப்பது எதுவும் புரியாத அதிர்ச்சியில் சிலையாக சமைந்து போனாள் மாது.

ஒரு மணி நேரத்தில் கார் அவர்களுடைய இல்லத்தை வந்தடைய, தன் ஒரு கையில் யஷ்விந்த்தையும் மற்றைய கையில் தன்மயாவின் கரத்தையும் பிடித்தவன் மளமளவென வீட்டினுள் நுழைந்து கொண்டான்.

தன் கரங்களில் தூங்கி விழுந்த யஷ்விந்த்தின் நெற்றியில் இதழ் பதித்தவன் அவனை படுக்கையில் படுக்க வைக்க, அனைத்தையும்

ஓரமாக நின்று வெறித்துக் கொண்டிருந்தவளுக்கு என்ன நடக்கிறது என்றே புரியாது போனது.

மெல்ல ஆதியை நெருங்கியவள் "நீ.... நீங்க சொன்னதெல்லாம் உ.... உண்மையா ஆதி.? நீங்க டாக்டரா.?"

"எஸ்." என்றவன் தான் அணிந்திருந்த டீஷர்ட்டை கழற்றினான்.

அவன் ஆம் எனக் கூறிய கணம் தன் தலையைப் பற்றிக் கொண்டாள் அவள்.

'கடவுளே அப்போ அவன் தாரதி கிட்ட சொன்னதெல்லாம் உண்மைதானா....? இவன் டாக்டரா....? ஏன் ஏன் என்கிட்ட சொல்லாம மறைச்சுட்டான்.? இங்கே என்னதான்

நடக்குது.' என எண்ணியவளுக்கோ குழப்பத்தில் தன் தலையே வெடிப்பதைப் போல இருந்தது.

அவனுடைய கரங்களைப் பற்றிக் கொண்டவள் "என....க்கு எதுவும்ம்மே புரியல ஆதி. டெ.... டென்ஷனா இருக்குப்பா." என்றவள் மெல்லிய விசும்பலோடு அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

"இங்க என்ன நடக்குது ஆதி.? எனக்கு பயம்மா இருக்கு. பைத்தியம் பிடிச்சிரும் போல இருக்கு." என்றவளை இழுத்து சோபாவில் தள்ளியவன் அவள் மீது படரத் தொடங்கினான்.

“ப்ச் வ்விடுங்க. வ்விடுங்க ஆதி. இப்போ இது வ்வேணாம். நான் உங்க கூட பேசணும் ப்ளீஸ்.”

“ப்ச் என்னடி.?”

“நான் உங்க கூட பேசணும்பா. ப்ளீஸ்.”

“சரி பேசு.” என்றவன் அவள் கேள்வி கேட்பதற்கு முதலே அவளுடைய இதழ்களை தன் தடித்த அதரங்களால் மூடிக் கொண்டான்.

அவளோ அவனைத் தன்னில் இருந்தும் தள்ளிவிட முயல, அவனுடைய பிடியோ அழுத்தமாக அவளுடைய உடலில் பதியத் தொடங்கியது.

“ஸ்ஸ்.... ம்மாஆஆ வ்வலிக்குது.” என அலறியவளின் புடவையை

உருவியவன் அவளுடைய மீதி ஆடைகளையும் களையத் தொடங்கினான்.

“ஐயோஓஓ வ்விடுங்க ஆதி. இப்படி பண்ணாதீங்க ப்ளீஸ்.” என மறுக்க மறுக்க அவளுடைய மொத்த ஆடைகளையும் களைந்தவன் அவளுடைய இதழ்களை மீண்டும் சிறை பிடித்தான்.

ஒரு கட்டத்தில் அவனுடைய செயலை வெறுத்தவள் தன் பலம் மொத்தத்தையும் திரட்டி அவனைத் தன்னில் இருந்தும் தள்ளி விட்டாள்.

“ஏய்ய்.” என சீறியவனை கண்டு இம்முறை அவள் பயம் கொள்ளவில்லை.

அழுகையில் கண் இமைகள் துடித்த போதும், அவனுடைய அத்து மீறலில் அவளுடைய உடல் நடுங்கிய போதும், வஸ்திரம் இன்றி அவன் கண்களுக்கு அவள் விருந்தாகிய போதும் தன் தைரியத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டவள் உண்மை அறியும் பொருட்டு அவனை விட்டு விலகினாள்.

அவளது விலகலை வெறுத்தவன் "நீ என்னை லவ் பண்றேன்னு சொன்னியே குயின்.?" என சந்தேகமாக கேட்டான்.

"ஐயோ நான் இப்போ கூட உங்களை லவ் பண்றேன் ஆதி. ஏன் புரிஞ்சிக்க மாட்டேங்குறீங்க.?"

"நோ நீ என்னை லவ் பண்ணலை."

“இல்ல ஆதி. ஐ ஸ்டில் லவ் யு.” என அழுதாள் அவள்.

தன்னை விட்டு விலகி நின்றவளின் விழிகளை நோக்கி தன் கரங்களை விரித்தவன் “அப்போ உன் காதலை என்கிட்ட நிரூபிச்சு காட்டு குயின்.” என்றான்.

அவன் இப்படி தன் காதலை பணயம் வைத்ததில் அதிர்ந்தவள் ஓர் நொடி ஸ்தம்பித்து நின்றாள். பின் அழுகையில் உடல் குலுங்க விரித்த அவனுடைய கரங்களுக்குள் புறா போல தஞ்சம் புகுந்தவள் அவன் மீதுதான் கொண்ட காதலுக்காக தன்னை இழக்கத் தொடங்கினாள்.

அவளே தன்னிடம் வந்ததும் ஒரு கணம் நெகிழ்ந்தவன் அடுத்த கணம் கோழிக் குஞ்சை தூக்கி

எடுக்கும் பொல்லாத பருந்தினைப் போல அக் காரிகையை தன் கரங்களில் ஏந்தி தரையில் கிடத்தினான்.

உணர்வுகள் அடங்கிய சிலை போல கிடந்தவளின் மீது படர்ந்தவனது உடலும் ஏனோ இம்முறை நடுக்கம் கொண்டது.

அவளது விழிகளோ அட்சய பாத்திரத்தைப் போல குறையா உவர் நீர் துளிகளை கொட்டிக் கொண்டே இருக்க, அவனோ அவளுடைய அங்கம் ஒவ்வொன்றிலும் மூழ்கி உணர்வுகளின் சுவையை துய்த்துணர்ந்து மோக கீதம் இசைக்கத் தொடங்கினான்.

“நீ.... நீ ஒரு டெவில் ஆதி.” என அழுகையோடு கூறியவளின்

இதழ்களை வன்மையாக தண்டித்தவன் நிஜத்திலும் தான் ஒரு டெவில் என்பதை அவளுக்கு அக்கணம் நிரூபித்தான்.

அவள் அனுமதி இன்றியே மீண்டும் அவளோடு கூடி களித்தவனது மூக்கில் இருந்து மீண்டும் வடிந்தது உதிரம்.

இத்தனை நேரமும் அவனுடைய தொடுகையில் தவித்து இறுகிப் போய் இருந்தவள் அவன் உதிரம் சிந்தவும் பதறிப் போனாள்.

“ஐயோஓஓ ஆதிம்மா. ர.... ரத்தம் வருது.” என பதறி எழுந்தவள் அவனுடைய முகத்தை பற்றிக் கொண்டு அழத் தொடங்கினாள்.

“ஹாஸ்பிடல் போகலாம் ஆதி. ப்ளீஸ் வாங்க.” என தடுமாறி எழுந்தவளுடன் தானும் எழுந்தவன் கீழே சிதறிக் கிடந்த ஆடைகளைப் பொறுக்கி அவளிடம் கொடுத்தான்.

“போட்டுக்கோ....”

“ம்ம்....” என அந்த ஆடைகளை மளமளவென அணிந்து அழுகையோடு அவனுடைய கரத்தை பிடித்தவள் “வாங்க ஆதி ஹாஸ்பிடல் போகலாம். இ... இல்லைன்னா நீ... நீங்களும் டாக்டர்தானே என்னாச்சு உங்களுக்கு....? ஏன் ப்ளட் வருது.? என்கூட வாங்க ஆதி.” என வேதனையில் துடித்துக் கதறியவளின் கன்னத்தில் அழுந்த முத்தம் இட்டவன் “யஷ்விந்த்தை இங்கேயே விட்டுட்டு நீ மட்டும் இங்க இருந்து

போயிரு ட்ராமா குயின். இனி நான் உன் முகத்தை இங்க பார்க்கக் கூடாது." என நிதானமாக கூறினான்.

அவனுடைய வார்த்தைகளில் விக்கித்துப் போனாள் தன்மயா.

"நான் போகணுமா....? ஏ....ன்? ஏன்....? யஷ்விந்தும் நீங்களும்தானே என்னோட உலகமே. உங்க ரெண்டு பேரையும் விட்டுட்டு நா.... நான் ஏன் போகணும்.? உங்களை விட்டுட்டு நான் மட்டும் எங்கே போவேன் ஆதீஈஈ....?" என துடிதுடித்த குரலில் கேட்டவளின் காதருகே குனிந்தவன் "மூடிட்டு கிளம்புடி." என்றான்.

அவ்வளவுதான் அவ்வளவேதான் தன்மயாவின் மொத்த உலகமும் அக்கணம் அசைவற்றுப் போனது.

மோகம் – 28

அவள் என்ன கனவு ஏதேனும் காண்கிறாளோ....? ஆம் அப்படித்தான் இருக்க வேண்டும்.

அவனைக் கண்டாலே அஞ்சி ஓடி ஒளிந்தவளை கண்டு பிடித்து அவனோடு கூடவே வைத்திருந்தவன் அவளை எப்படி போகும்படிச் சொல்லுவான்.?

அவளே போகிறேன் என்றால் கூட ஆதி அனுமதிக்க மாட்டான் அல்லவா.?

‘அப்போ இது கனவு தானே....?’ என நினைத்தவாறு அசையாது நின்றவளின் தோள்களைப் பற்றி உலுக்கியவன் “உன்னை வெளியே போன்னு சொன்னேன். நான்

சொன்னது உனக்கு புரியுதா இல்லையா....?" எனக் கர்ஜித்தான் அவன்.

அவனது கர்ஜனைக் குரலில் நடக்கும் அத்தனையும் நிஜம் எனப் புரிய, ஆடித்தான் போனாள் மங்கை.

"ஏ....? ஏன் ஆதி." என்றவளுக்கு பேச்சு வெளியே வராமல் காற்று மாத்திரமே வெளிப்பட்டது.

தொண்டை அடைத்ததைப் போல வலிக்கத் தொடங்க, "த.... தண்ணீஈஈ தண்ணீ வ்வேணும்." என்றவள் கால்கள் பலம் இழந்து தடுமாறி விழப் போனாள்.

சட்டென அவளைத் தாங்கிப் பிடித்தவன் "ஹேய் பாத்துடி."

என்றவாறு அவளை அந்த சோபாவில் அமர்த்தினான்.

“இப்போ எதுக்கு குயின் இவ்ளோ ஷாக் ஆகுற.? உனக்குதான் இங்கே இருக்கவே பிடிக்காதுல்ல. அதான் உன்னை ரிலீஸ் பண்ணிட்டேன். நீ தாராளமா போகலாம்.”

“த.... தண்ணீஈஈ....” என தவித்தவளை பெருமூச்சோடு பார்த்தவன் எழுந்து சென்று தண்ணீர் எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான்.

அதனை வாங்கி அருந்தியவள் சற்று நேரம் தன் விழிகளை மூடியபடி அந்த சோபாவிலேயே சுருண்டு கொண்டாள்.

அவளுக்கோ மிகுந்த சோர்வாக இருந்தது.

“உன்னைப் போகச் சொன்னேன்.” என்றவனின் குரலில் தூக்கிவாரிப் போட எழுந்தவள் “என்னால யஷ்வியையும் உங்களையும் விட்டுட்டு போக முடியாது ஆதி.” என்றாள்.

“உனக்கும் எனக்கும் இனி எந்த உறவும் கிடையாது.”

“அப்போ எதுக்காக என்னை தொட்டீங்க.? ஏன் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்கூட அவ்ளோ நெருக்கமா இருந்தீங்க....?”

”இவ்ளோ அழகா ஒரு பொண்ணு பக்கத்துலேயே இருந்தா அவளை எப்படி தொடாம இருக்க

முடியும்.? அதான் தொட்டேன்." என்றவனின் பதிலில் மொத்தமாக உடைந்து போனாள் அவள்.

"அவ்ளோதானா ஆதி....? என் மேல துளி அளவு அன்பு கூட உங்களுக்கு இல்லையா.?"

"ரப்பிஷ். எனக்கு உன்னோட பேரு கூட என்னன்னு தெரியாது. அன்பா ப்ச் அதெல்லாம் வேஸ்ட் குயின்."

"சே....!" என்றவள் அவனுடைய முகத்தைப் பார்க்காது திரும்பி நின்று கொண்டாள்.

தகுதி இல்லாத இடத்தில் அன்பு வைத்தது தன் பிழை என அவளுக்கு தாமதமாகவே புரிந்தது.

பொங்கி வந்த அழுகையை கட்டுப்படுத்த முடியாது தடுமாறி தன் முகத்தை அழுந்தத் துடைத்தவள் உறங்கிக் கொண்டிருந்த தன் மகனை நெருங்கிச் சென்றாள்.

அழுகையோடு யஷ்வியை தன் கரங்களில் தூக்கிக் கொண்டவள் அங்கிருந்து வெளியேற முயல,

அவளுடைய வழியை மறித்தவன் "அவனை எதுக்கு தூக்குற....? அவனை என்கிட்ட கொடு." என்றான்.

"நான் எதுக்கு இவனை உங்ககிட்ட கொடுக்கணும்....? இவன் என்னோட பையன். இவனை நான் யாருக்கும் கொடுக்க மாட்டேன்."

“ஹா.... ஹா.... ஓஹோ நல்லாவே பேசுற குயின். பட் இவன் ஒன்னும் உன் குழந்தை இல்ல. சோ இவனை எனக்கே கொடுத்திரு. யஷ் என்கூடவே இருக்கட்டும்.”

“வாட்....?” அதிர்ந்து விழித்தாள் அவள்.

“என்ன விளையாடிப் பார்க்கிறீங்களா ஆதி....?” அவள் குரல் நடுக்கத்தோடு ஒலித்தது.

“நான் எதுக்கு விளையாடணும்....? எனக்கு யஷ்வி வேணும். அவனைக் கொடுத்திட்டு நீ இங்கே இருந்து போகலாம்.”

“நான் செத்தா கூட என் மகனை உங்ககிட்ட கொடுக்க மாட்டேன்.” என்றவள் யஷ்விந்த்தை தூக்கிக்

கொண்டு அறையை விட்டு வெளியேற முயன்றாள்.

அதே நேரம் "ம்மாஆஆ என்னை விட்டு எங்கம்மா போற....?" எனக் கேட்டான் சித்து.

சித்தார்த்தின் மெல்லிய குரலைக் கேட்டதும் அவளுடைய பாதங்கள் நகர மறுத்தன.

"ம்மாஆ...." மீண்டும் அழைத்தான் சித்தார்த்.

"சொல்லு கண்ணா...." என்றவாறு அழுகையோடு திரும்பினாள் தன்மயா.

"பசிக்குதும்மா சான்விட்ச் பண்ணிக் கொடேன்."

"ம்ம்...." என்றவளுக்கு கண்ணீர் பெருக்கெடுத்தது.

“ம்மா நீ சொன்ன மாதிரி அந்த ஒயிட் போர்ட்ல சைன் பண்ணிட்டு வரவா....?”

“இல்லப்பா வ்வேணாம்.”

“ம்மாஆ நாளைக்கு நான் ஸ்கூல் போகலாம்னு இருக்கேன்.”

“ம்ம்....”

“ஏன்மா தம்பிப் பாப்பாவை மட்டும் தூக்கி வெச்சிருக்க.? என்னையும் தூக்கி உன் இடுப்புல வெச்சுக்கோ....” என்றவாறு அவளை நெருங்கியவன்,

தீடீரென தலையைப் பற்றிக் கொண்டு அசையாது நின்றான்.

“சி.... சித்து....? ஆர் யு ஓக்கே.?” என பதற்றத்தோடு கேட்டாள் அவள்.

“ஹேய் இட்ஸ் மீ. ஐ அம் கவின் மயா பேபி. என்னாச்சும்மா எதுக்காக அழுற.?” என பதறிய குரலில் கேட்டான் கவின்.

இப்போது தன் தலையைப் பற்றிக் கொண்டாள் தன்மயா.

“நத்திங் கவின். நான் இங்க இருந்து போறேன்.”

“ஓ காட் ஏன் மயா.? ப்ளீஸ் என்னை விட்டு போகாத பேபி. ஐ கான்ட் லிவ் வித் அவுட் யு.” என்றவனுடைய குரல் கரகரப்பாக ஒலித்தது.

“அவங்க அவங்க அவங்களோட இடத்துல இருக்கிறதுதான் நல்லது கவின்.”

“எனக்கு புரியலை பேபி.”

“வ்விடு கவின்.” என விரக்தியாக புன்னகைத்தாள் தன்மயா.

“ஏய் நீ இன்னும் இங்க இருந்து போகலையா ட்ராமா குயின்.” என மீண்டும் ஆதி வந்தான்.

“ஹேய் ப்ளீஸ் மயா பேபி போகாதடி.” என்றான் கவின்.

“ம்மா என்னையும் தூக்கு.” என்றான் சித்தார்த்.

“ட்ராமா குயின்....?”

“மயா பேபீஈஈ....?”

“ம்மாஆஆ....?”

நொடிக்கு நொடி மூவரும் மாறி மாறி வந்து போக, அவளுடைய மூளையோ கிரகிக்கும் திறனை அடியோடு இழந்து போனது.

தாங்க முடியாத அழுத்தத்தில் “ஐயோஓஓஓஓஓஓஓ.... போதும் நிறுத்துங்க ப்ளீஈஈஈஈஸ்” என அலறினாள் தன்மயா.

அவள் கரங்களில் இருந்த யஸ்விந்தோ தூக்கம் கலைந்து அழத் தொடங்கினான்.

அவனை படுக்கையில் விட்டவள் தன் தலையை இறுகப் பற்றிய வண்ணம் தரையிலே அமர்ந்து கொண்டாள்.

அவளின் முன் மண்டியிட்டு அமர்ந்தான் ஆதி.

“என்ன பயம்மா இருக்கா குயின்.?”

“.....”

“ஏன் அமைதியா இருக்க பேசு.”

“ஐயோ ஆதி என்னால முடியலை. உங்களுக்குள்ள இன்னும் ரெண்டு பேர் இருக்காங்க. என்னால உங்க எல்லாரையும் சமாளிக்க முடியல ஆதி.” என்றவள் வாய் விட்டு அழத் தொடங்கினாள்.

“நெஞ்செல்லாம் பதறுது. எப்போ யார் வருவாங்கன்னே தெரியலை. எனக்கு எதுவுமே புரியல ஆதி.” என அழுதவளின் தாடையை இறுகப் பற்றினான் ஆதி.

“டி.ஐ.டி டிசோடர் வந்தா அவங்க அவங்களாவே இருக்க மாட்டாங்கன்னு இப்போவாவது உனக்கு புரியுதா....?” என கர்ஜித்தான் ஆதித்யன்.

திகைத்து விழித்தவாறு அவனுடைய முகம் பார்த்தவள் “நீ....

நீங்க என்ன... சொல்றீங்கன்னே எனக்குப் புரியலை.” என்றாள்.

“உனக்கு எப்படிடி அதெல்லாம் புரியும்.? உனக்கு அடுத்தவங்க மனசை கொன்னு புதைக்கத்தானே தெரியும்.” என சீறினான் அவன்.

அவனுடைய கரத்தின் அழுத்தத்தில் கதறியவள் “ஆஆஆ க்கையை எடுங்க வலிக்குது. நான் எதுவுமே பண்ணலை விட்ருங்க.” என அழுது கரையத் தொடங்கினாள்.

“அநியாயமா எங்க அண்ணாவை கொன்னுட்டியேடி. அவன் இந்த நோயால எவ்வளவு கஷ்டப்பட்டான்னு உனக்கு தெரியுமா....?” என்றவன் தரையில் தன் வலது கரத்தை மடித்து ஓங்கிக் குத்தினான்.

“எ... என்ன....? ஐயோ நான் ஒன்னுமே பண்ணலைங்க.” விதிர்விதிர்த்தவாறு கூறினாள் தன்மயா.

“இந்த நோயால பாதிக்கப்பட்டவங்க எப்படி இருப்பாங்கன்னு உனக்கு தெரியாதுல்ல. அதான் இப்போ தெரிய வெச்சிட்டேன். என்னோட டெமோ க்ளாஸ் உனக்கு நல்லா புரிஞ்சுதாடி.?” என்றான் ஆதி.

அவனது வார்த்தைகளில் அவளுக்கோ தலை சுற்றிப் போனது.

“என்ன சொல்றீங்க ஆதி.? இதெல்லாம் நடிப்பா....? அப்போ கவின் சித்து எல்லாருமே பொய்யா....?” எனக் கேட்டவளுக்கோ

உச்ச கட்ட அதிர்ச்சியில் உடல் அதிர்ந்து அடங்கியது.

“எஸ்.... எஸ்.... எஸ்.... எல்லாமே பொய்தான். கவினும் நானே, சித்துவும் நானே.” என்றவன் அவளுடைய பேயறைந்த வதனம் பார்த்து நகைக்கத் தொடங்கினான்.

“உன்னை நான்தான் என்கிட்ட வர வெச்சேன். ஆதியா இருந்து காமத்தையும் கவினா இருந்து காதலையும் விதைச்சேன். ஒவ்வொரு நாளும் உன்னை ஃபாலோ பண்றதுதான் என்னோட வேலையே. அன்னைக்கு ரோட்ல ஹாஸ்பிடலுக்கு கிட்ட ஒருத்தனை அடிச்சது, லவ்வர்ஸ் டே அன்னைக்கு கவினா பாட்டுப் பாடியது, சித்துவா உனக்காக ஏங்கினது ,சூசைட் பண்ண ட்ரை

பண்ணது எல்லாமே நான்தான். நான் மட்டுமேதான்.

“உனக்காக மிமிக்ரி பண்ணக் கூடக் கத்துக்கிட்டேன்டி. என்னோட நடை, உடை, பாவனை, சாப்பாடு, செல்ஃபோன், பெட் ரூம், பர்ஸ், வாய்ஸ், ஹேண்ட் ரைட்டிங்னு எல்லாத்தையும் மூணு விதமா மாத்திகிட்டேன். கிட்டத்தட்ட ஒரு வருஷமா உன்னை பழிவாங்குறதுக்காக டி.ஐ.டி வந்தவன் மாதிரியே வாழ்ந்துகிட்டு இருக்கேன். உனக்கு இதோட மொத்த வலியும் புரியணும்டி. இப்போ புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்.” என்றவாறு அவளுடைய முகம் பார்க்க அவளோ மூச்சுப் பேச்சின்றி அதிர்ந்து உறைந்து போனாள்.

‘எல்லாமே பொய்யா....? அத்தனையும் நடிப்பா....? கவினா உருகி உருகி காதலிச்சதும் நடிப்புத்தானா....? ஐயோஓ எ.... என்னைத் தொடும் போது கூட நான் வித்தியாசத்தை உணர்ந்தேனே அது கூட பொய்தானா....? எத்தனை தடவை இது கவினா ஆதியான்னு பதறி துடிச்சிருப்பேன்.” என எண்ணியவளுக்கு இன்னும் எதையும் நம்ப முடியாது போனது.

“என்ன மேடம் திங் பண்றீங்களா....? நீங்க வெளியே போய் கூட திங் பண்ணலாம். ஹாங் அப்புறம் யஷ்வி உன் அக்காவோட பையன்னு சொன்னல்ல. அவன் எங்க அண்ணா ராணாவோட பையன்டி. இந்த ஆதி குடும்பத்தோட தல வாரிசு.

அவன் எங்க வீட்டு பையன். என்னோட பையன்டி. அவனை என்கிட்ட விட்டுட்டு மரியாதையா இடத்தை காலி பண்ணு.” என உறுமலாக கூறினான் அவன்.

அவன் பேசி முடித்த அடுத்த நொடியே வேரற்ற மரம் போல தரையில் மயங்கிச் சரிந்தாள் தன்மயா.

மோகம் – 29

உண்மை தெரிந்த கணம் மயங்கிச் சரிந்த காரிகையின் வதனத்தையே இமை சிமிட்ட மறந்து பார்த்துக் கொண்டிருந்தான் ஆதி.

மயக்கத்தை தழுவித் தரையில் கிடந்தவள் ஏன் அந்தத் தவறினை செய்தாள் என பல்லாயிரமாவது

தடவையாக எண்ணி வேதனை கொண்டான் ஆதி.

அவனுக்கென்று இருந்த ஒரே ஒரு உண்மையான உறவையும் இல்லாமல் செய்து விட்டாளே பாதகி. என அவளை வெறுப்பாக நோக்கின அவனுடைய கூர் விழிகள்.

அவனுடைய சிந்தனைகள் நிகழ் காலத்தில் இருந்து கடந்த காலத்திற்கு டைம் மிஷின் இல்லாமலேயே அதி வேகத்தில் பயணிக்கத் தொடங்கியது.

சிறு வயதில் இருந்தே பல கொடுமைகளை அனுபவித்து வளர்ந்து வந்தவன் தன்னுடைய சுதந்திரத்தை கத்தி மூலம் தானே கையில் எடுத்துக் கொண்டான்.

அவனுடைய ஆக்ரோஷத்தை தாங்க முடியாது அவனுடைய அன்னை ஆதியை தள்ளி விழுத்தி விட்டு உதிரத்தோடும் அந்த ஆடவனோடும் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட அன்று முதல் அவனுக்கான சுதந்திரம் உதயமானது.

சில நாட்களிலேயே ஆதியும் அவனுடைய சகோதரன் ராணாவும் ஒருவருக்கு ஒருவர் அன்பாகவும் ஆறுதலாகவும் வாழ ஆரம்பித்தனர்.

அவர்களின் பெயரில் இருந்த சொத்து அவர்களுடைய படிப்புக்கும் உயர்தரமான வாழ்க்கை முறைக்கும் உதவியது. ராணாவோ தொழிலை தன் கையில் எடுத்துக் கொண்டு ஆதியை படிக்க வைத்தான்.

வைத்தியத் துறையில் தனக்கு இருந்த தனி ஆர்வத்தை புரிந்து கொண்ட ஆதியும் வைத்தியத் துறையில் இணைந்து தன் மருத்துவக் கல்வியை கற்கத் தொடங்கினான்.

ஒரு சில வருடங்களிலேயே தன் திறமையை வளர்த்துக் கொண்ட ஆதித்யன் சிறந்த மனநல வைத்தியராகினான். தன்னுடைய படிப்பு முடிந்ததும் அமெரிக்காவில் இருந்து மீண்டும் இந்தியா வந்து சேர்ந்த ஆதிக்கு பல அதிர்ச்சிகள் அவனுடைய இல்லத்தில் காத்திருந்தன.

ராணாவை பார்க்கும் ஆவலில் அவனிடம் தன் வருகையைப் பற்றிக் கூறாது தங்கள் வீட்டிற்கு வந்தவன் தன்னுடைய சகோதரன் ஒரு

பெண்ணோடு நெருக்கமாக இருப்பதைக் கண்டு அதிர்ந்தான்.

ஆதியைக் கண்டதும் இன்பமாக அதிர்ந்த ராணாவோ அவனை அணைத்து தன் மகிழ்வை வெளிப்படுத்தியவன் தன்னுடைய காதலியான அபிமயாவை ஆதிக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

புதிதாக அண்ணனின் காதலி என அறிமுகமாகிய அபிமயாவை ஆதிக்கும் பிடித்துக் கொண்டது. அவர்களுடைய காதல் மொட்டில் இருந்து மலர்ந்து அடுத்த கட்டத்திற்கும் பரவியது.

இப்படியே சில காலம் இனிமையாகக் கழிய, ராணாவோ அடிக்கடி வித்தியாசமாக செயற்படத் தொடங்கினான்.

ராணாவின் செயல்களில் இருந்த வித்தியாசத்தைக் கண்டு அதிர்ந்து போனான் ஆதி.

சில நேங்களில் அமைதியாக இருக்கும் தன் சகோதரன் திடீரென ஆக்ரோஷமாக மாறுவதும் பின் தேம்பித் தேம்பி அழுவதும் பெண்கள் போல தன்னை அலங்கரித்து வீட்டை சுத்தப்படுத்தி மகிழ்வதும் என அவனுடைய செயல்களில் மாற்றம் கண்டு அவனுக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது.

ராணாவின் உள்ளே வேறு பல நபர்கள் வந்து போவதை முதலில் கண்டு பிடித்தவன் ஸ்தம்பித்துப் போனான்.

அவனை பல மருத்துவ பரிசோதனைகளில் ஈடுபடுத்திய

பின்னரே அவன் டி.ஐ.டி எனும் கொடிய நோயின் பிடியில் சிக்கியுள்ளான் என்பது அவனுக்குத் தெரிய வந்தது.

சிறு வயதில் தன் தாயின் கொடுமைகளை அனுபவித்து மனதிற்குள் இறுகிப் போன ராணாவிற்கு மன அழுத்தம் தாங்காது இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்தவன் மனதால் உடைந்து போனான்.

விளைவு....?

தாய்மையை வெறுத்தான்....!!

பெண்களை புறக்கணித்தான்....!!

காதல் என்றாலே காமம் என தன் மனதினுள் பதித்துக் கொண்டான்.

****

தன்னுடைய பழைய நினைவுகளை எண்ணிக் கொண்டிருந்தவனை யஷ்விந்தின் அழுகுரல் திசை திருப்பியது.

மயங்கிக் கிடந்தவளின் முகத்தில் இருந்து தன் பார்வையை விலக்கியவன் பெருமூச்சோடு எழுந்து சென்று யஷ்வியைத் தூக்கிக் கொண்டான்.

“ம்மாஆ ம்மா....” என தன் தாயை தேடி அழுதவனை சமாதானம் செய்தவன் அவனைத் தன் தோளில் போட்டு தட்டிக் கொடுக்க, சில நொடிகளில் மீண்டும் உறக்கத்தை தழுவினான் யஷ்விந்த்.

தன் சகோதரனின் உதிரம் அல்லவா.? உடல் சிலிர்த்தது அவனுக்கு. யஷ்வியை இறுக

அணைத்து இதழ் பதித்தவன் அவனை படுக்கையில் கிடத்தி விட்டு மீண்டும் அவள் அருகே வந்து அவளை வெறிக்கத் தொடங்கினான்.

எத்தனை நிமிடங்களோ எத்தனை மணித்துளிகளோ அவன் அறியான்.

ஆனால் அவன் பார்வை மட்டும் அவளை விட்டு இம்மியும் விலகவே இல்லை.

சற்று நேரத்தில் மயக்கம் தெளிந்து தானே விழிகளைத் திறந்தவளுக்கு தனக்கு மிக அருகே அமர்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருந்தவனைக் கண்டு தூக்கி வாரிப்போட்டது.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தவள் கட்டிலின் விளிம்போடு ஒன்றிக் கொண்டாள்.

அவளுக்கு நடந்த அத்தனையும் உண்மையா என்ற சந்தேகமே ஏற்பட்டு விட, தன் விழிகளை இறுக மூடித் திறந்தவள் எந்தக் காட்சியும் மாறாது இருப்பதைக் கண்டு தான் நடந்த அனைத்தும் கசப்பான உண்மை என்பதை புரிந்து கொண்டாள்.

கிட்டத்தட்ட ஒரு மாத காலம் அவள் அனுபவித்த அத்தனை மன உளைச்சல்களும் ஒவ்வொன்றாக அவளுடைய நினைவில் வந்து அவளைச் சிதற வைத்தன.

எத்தனை பரிதவிப்பு....!!

எத்தனை துடிதுடிப்பு....!!

எத்தனை பதறல்....!!

எத்தனை திணறல்....!!

எத்தனை ஏக்கம்....!!

எத்தனை துக்கம்....!!

எத்தனை காதல்....!!

எத்தனை கதறல்....!!

எத்தனை தடுமாற்றம்....!!

இறுதியில் எத்தனை ஏமாற்றம்....!!

ஆம் எண்ணித்தீரா ஏமாற்றத்தையும் எண்ணில் அடங்கா வலிகளையும் அல்லவா அவன் அவளுக்கு கொடுத்து விட்டான்.

அவனால் அவள் பெற்றுக் கொண்டவை ஏராளம். அந்த மன

ரீதியான அழுத்தங்கள் மேலும் அவளை நிலை குலையச் செய்தன.

தலை பாரமாகி தரையோடு மோதிவிடும் போல இருக்க, தன் கரங்களால் தலையை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

தன் முன் ஒய்யாரமாக அமர்ந்து தன்னை வெறிப்பவனைக் காணப் பிடிக்காது விழிகளை சிமிட்டி அவனுடைய உருவத்தை அழிக்க முயன்றாள் பாவை.

அவள் இமைகளைச் சிமிட்டியதும் கரைந்து காணாமற் செல்வதற்கு அவன் ஒன்றும் போலியான கற்பனை விம்பம் அல்லவே. அவள் வெறுத்தாலும் நம்ப மறுத்தாலும் அவன் நிஜம் அல்லவா.?

அவள் எத்தனை முயற்சி செய்த பின்பும் அவளையே வெறித்துக் கொண்டு அதே இடத்திலேயே நின்றான் அந்த அரக்கன்.

தன் விழிகளை அகலத் திறந்து அவனுடைய விழிகளை உற்றுப் பார்த்தாள் தன்மயா.

தன் மேல் கொஞ்சமே கொஞ்சம் அன்பு கொண்ட ஆதி தென்படுகின்றானா என அவளுடைய விழிகள் அவனை அலசின.

'ம்ஹூம் இல்லையே.'

தன் மேல் உயிர் காதல் கொண்ட கவின் எங்கே போய்விட்டான். அவனாது அவளைக் காக்க வருவானா....?

‘ம்ஹூம் அவனையும் காணவில்லையே.’

என்னை அம்மாவென எண்ணி என் பாசத்துக்காக ஏங்கும் என்னுடைய ரெண்டாவது மகன் சித்து எங்கே.? என் வலியைக் கண்டால் அவன் தாங்க மாட்டானே. அவன் எங்கே போனான்.? என எண்ணி கலங்கியவளுக்கு நிதர்சனம் முகத்தில் அறைந்தது.

‘இ.... இதெல்லாம் பொய். கவின் சித்து ஆதி எல்லாமே பொய். நா.... நான்தான் முட்டாள்தனமா நம்பி ஏமாந்துட்டேன்.’ என எண்ணி பொல பொலவென கண்ணீர் வடித்தாள் அவள்.

எத்தனை முறை அவனுடைய நன்மைக்காக பரிதவித்துப் போயிருப்பாள்....?

அவன் தன்னிடம் நடிக்கின்றான் எனத் தெரியாது எப்படியெல்லாம் துடிதுடித்துப் போனாள்.?

மென்மையான தீண்டலை உணரும் போதெல்லாம் கவின் எனும் வேற்றாடவன்தான் தன்னைத் தீண்டி விட்டானோ என எப்படி மருகித் தவித்திருப்பாள்....?

இதையெல்லாம் அவன் திட்டமிட்டு செய்தானா....? எப்படி அவனால் முடிந்தது.?

எப்படி மனம் வந்தது.? அப்படி என்ன பாவத்தை நான் அவனுக்கு செய்து விட்டேன்.? என எண்ணி

தனக்குள் மருகியவள் அவனை அருவருப்போடு நோக்கினாள்.

“உன்னை மாதிரி கேவலமான ஒருத்தனை நான் பார்த்ததே இல்லை.” என சீறியவளுக்கு தொண்டை அடைத்தது.

“தேங்க் யு குயின்.” என்றான் அவன்.

“ச்சீஈ என்னை அப்படி கூப்பிடாத. பாவி பாவி நான் உனக்கு என்னடா பாவம் பண்ணினேன்.? என்னை இப்படி ஏமாத்திட்டியே. ஒரு பொண்ணோட மனசு என்ன பாடு படும்னு உனக்கு தோணலையா ஆதி.? ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் என்கிட்ட ஆதியா கவினா சித்துவா நடிச்சு நம்ப வெச்சிருக்கியே.

இது உனக்கே அசிங்கமா இல்லையா....?”

அழுகையோடும் பெருங் கேவலோடும் வெளிப்பட்டது அவளுடைய குரல்.

“ஓ காட் ப்ளீஸ் ஸ்டாப் யுவர் சில்லி ட்ராமா.” என்றவன் ஏளனமாக இதழ் சுளித்தான்.

“யாரு ட்ராமா பண்றாங்க.? நானா....? நானா....? இத்தனை நாளும் ட்ராமா பண்ணது நீதான் ஆதி. நான் இல்லை. நீ எல்லாம் மனுஷனா ச்சை. என்னோட உடம்பை ஆதியா இருந்து காயப்படுத்தின. என்னோட மனசை கவினா நடிச்சு கஷ்டப்படுத்தின.

எப்படியெல்லாம் உன்கிட்ட கெஞ்சினேன். கொஞ்சமாவது

மனசுன்னு ஒன்னு உனக்கு இருக்கா....? என்னை ஏன் ஏன் ஆதி இப்படி டார்ச்சர் பண்ணின.?" என்றவள் அவனை நெருங்கி அவனுடைய மார்பில் தன் நகங்களால் கீறத் தொடங்கினாள்.

அளவற்ற ஏமாற்றமும் அளவற்ற சீற்றமும் அவளை வெறி கொண்டவள் போல மாற்றியது.

தன்னை காயப்படுத்தியவளை இழுத்து தன் கைகளுக்குள் கொண்டு வந்தவன் அவளுடைய கன்னத்தில் அழுத்தமாக முத்தம் பதித்தான்.

"ச்சீஈஈ வ்விடுடா ராஸ்கல். வ்விடு. டோன்ட் டச் மீ." என சீறியவளின் தாடையை இறுகப் பற்றி அவளுடைய இதழ்களை தன் அதரங்களுக்குள் அடைத்து

அவளுடைய கூச்சலை இடை நிறுத்தினான் அவன்.

அவனது பிடியில் அகப்பட்டவள் அந்த கழுகுப் பிடியில் இருந்து விடுபடத் துடித்தாள்.

“ஹெள டேர் யு ஆதி. வ்விடு.” என புழுவாக நெளிந்தவளை சடாரென கீழே தள்ளியவன் “ஒரு கொலைகாரியை என்னால இப்படித்தான் ட்ரீட் பண்ண முடியும்.” என திமிராகக் கூறினான் அவன்.

அவனை சோர்ந்து போய் பார்த்தாள் தன்மயா.

தான் நடக்கும் பாதையில் சிறு எறும்பு கடந்து சென்றால் கூட அதனை மிதிக்காது தாண்டிச் செல்லும் மெல்லிய மனம் உடைய

இளையவளை கொலைகாரி என்று தூற்றினால் அவளால் எங்கணம் அதனை பொறுத்துக் கொள்ள முடியும்.

அவன் முன் நின்று பேசுவதற்கு அவள் உடல் அஞ்சிய போதும் அவள் மனம் தளறாது மீண்டும் அவன் முன்னே வந்து நின்றாள்.

“உன்னோட அண்ணா யாருன்னே எனக்குத் தெரியாது. நான் யாரையும் கொலை பண்ணலை. நான் யாரையும்மே க்கொலை பண்ண்ணலைஜஜஜஜ புரிஞ்சுதா.? நான் கொலைகாரி இல்லை.” எனக் கதறியவளை பார்த்து தன் கைகளை விரித்தான் ஆதி.

“ட்ராமா முடிஞ்சுதுன்னா நீ இங்க இருந்து போகலாம் ட்ராமா

குயின்.” என்றவனை கன்னம் கன்னமாக அறைந்தே கொல்ல வேண்டும் போல இருந்தது அவளுக்கு.

“இந்த பாவம் உன்னை சும்மா விடாது ஆதி”

“ஷட் அப் இடியட். பாவ புண்ணியத்தை பத்தி நீ பேசாத.” கர்ஜித்தான் அவன்.

“என் குழந்தையை கொடுத்திரு. நான் இங்க இருந்து போகணும். உனக்கு பக்கத்துல நிற்குறதே நெருப்புல நிற்குற மாதிரி இருக்கு.”

“யஷ்வி என் மகன். என்னோட உசிருடி அவன். என் கட்டை வேகும் வரைக்கும் அவனை எங்கேயும் நான் விடுறதா இல்லை.”

அவன் யஷ்வி மீது கொண்ட அன்பை எண்ணி ஒரு கணம் அவளது புருவங்கள் உயர்ந்தன.

அடுத்த நிமிடமே அவளது இதயம் அமைதியாக துடிக்கத் தொடங்கியது.

நெஞ்சை அழுத்திய பாரம் அவளை விட்டு விலகியதைப் போல இருந்தது..

“ஓஹோ.... உன்னோட அண்ணன் பையன்னு சொன்னல்ல. சந்தோஷம். இத்தனை நாளும் அவனுக்காகத்தான் தான் வாழ்ந்தேன். அவனுக்காகத்தான் நான் என்னோட கற்பை இழந்தேன். பல கஷ்டங்களை அனுபவிச்சு இப்போ வரைக்கும் உயிரோட நான் இருக்கிறதுக்கு காரணமே அவன் மட்டும்தான்.

இப்போ நான் அவனுக்கு தேவையே இல்ல. ஏன்னா நீயே அவனை நல்லா பாத்துப்ப. நல்லது ஆதி. இந்த போலியான உலகத்துல வாழ எனக்கு இஷ்டமே இல்ல. இத்தனை வருஷமா நான் ஆசைப்பட்ட விடுதலை எனக்கு இப்போதான் கிடைச்சிருக்கு. அவன் உன்னோட உயிர்னு சொன்னல்ல. அவனை நல்லா பார்த்துக்கோ." என்றவள் யஷ்வியின் முகத்தை தூரத்தில் இருந்தே இமைக்காது பார்த்தாள்.

மனதின் பாரம் முற்றிலும் கரைந்து கண்ணீராய் வெளியே வந்தது.

துடிதுடித்த உடல் சற்றே அமைதி அடைந்தது.

நிம்மதியில் அவள் இதழ்கள் சற்றே மலரக் கூடச் செய்தது.

ஆதியோ அவளுடைய வார்த்தைகளில் அதிர்ந்து போனான்.

“வாட் ரப்பிஷ் குயின்.? தற்கொலை எதுக்குமே முடிவு கிடையாது.” என்றவனை நிர்மலமான முகத்துடன் பார்த்தவள் “போடா.” என்றவாறு திரும்பி நடங்கத் தொடங்கினாள்.

அந்த பார்வையில் அவனுடைய இதயமே ஆட்டம் கண்டது.

என்ன பார்வை இது.? “ஓ காட்.” என எண்ணி பதறியவாறு அவளை நெருங்க முயல, அவளோ சட்டென குனிந்து தரையில் கடகடவென வாந்தி எடுக்கத் தொடங்கினாள்.

மிகுந்த சோர்வில் மீண்டும் மயங்கி தரையில் சரிந்தாள் மாது.

“ஷிட்....” என்றவாறு ஓடிச் சென்று அவளைக் கையில் ஏந்தியவன் உடல் விறைத்தான்.

சந்தேகத்தோடு அவளுடைய கரத்தைப் பிடித்து நாடியைப் பரிசோதித்தவனது விழிகள் திகைப்பில் விரிந்தன.

கம்பீரமான ஆண் மகனின் உடலும் ஒரு முறை அதிர்ந்து அடங்கியது.

முதல் நாள் அஞ்சு லட்சம் கொடுத்து அவளோடு தன் கட்டுப்பாட்டை மீறி முழுதாக கலந்ததன் விளைவு அவனுடைய

உயிர் அவளுடைய கருவறையில் உண்டாகியது.

ஆம் ஆதியின் குழந்தை அவனுடைய ட்ராமா குயினின் வயிற்றில்....!!

அவன் ஒரு சதுரங்க ஆட்டத்தை ஆடி முடிக்க, இறைவனோ தன்பக்க ஆட்டத்தை இனிதே ஆரம்பித்து வைத்தான்.

அண்ணனின் குழந்தையையே தன் உயிர் என்பவன் அவனுடைய குழந்தையை விட்டு விலகுவானா என்ன.?

ஒட்டு மொத்த உச்ச கட்ட வெறுப்பையும் அவன் மீது வைத்திருப்பவள் உண்மை அறிந்தால்

அவனுடைய குழந்தையைத்தான் சுமப்பாளா.?

அவளுடைய வலி ஆழமானது. மிக மிக ஆழமானது.

இருவரது வெறுப்பும் உச்சத்தை தொடும். அதனிடையில் சிறு பனித்துளி போல காதல் தோன்றுமா....?

விடை இரண்டாம் பாகத்தில்....!!

முதல் பாகம் முற்றும்.

நன்றி.

மோகத்தை வென்றவளே....!!

பாகம் – இரண்டு

ஐந்து மாதங்களுக்குப் பிறகு....

வானமங்கை தன் எழில் விழிகளுக்கு கரிய நிறமாகிய இருளெனும் அஞ்சனத்தை தீட்டிக் கொண்ட இருள் சூழ்ந்த நேரமது.

அடங்காத கண்ணீர் எனும் நீர்வீழ்ச்சியோ அவளுடைய வெண்ணிற கன்னம் எனும் மலையை மேவி அவளது பள்ளத்தாக்காகிய கழுத்தடியில் சங்கமித்துக் கொண்டிருந்தது.

தன் விழிகளில் வழிந்த கண்ணீரை புறங்கையால் துடைத்துக் கொண்டவள் ஜன்னலின் இடைவெளியினூடாக தெரிந்த கரிய வானத்தை வெறித்தாள்.

அவள் வாழ்வும் அந்தக் கரிய வானத்தைப் போலல்லவா மாறிவிட்டது.

நடந்தவை எல்லாம் நினைவில் தோன்ற அவளுடைய மெல்லிய மனமோ சுக்கல் சுக்கலாக உடைந்து போனது.

மெல்ல தன் மேடிட்ட வயிற்றை பிடித்தவாறு எழுந்தவள் விரக்தியான

நடையோடு சோபாவில் சென்று அமர்ந்து கொண்டாள்.

நான்கு சுவர்களால் சூழப்பட்ட தனித் தீவில் நிற்பதைப் போல உணர்ந்தவள் தன் மேடிட்ட வயிற்றை மெல்ல வருடினாள். அவளுடைய உதடுகளோ ‘இன்னும் அஞ்சு மாசம்’ என சலிப்போடு முணுமுணுத்தன.

தன்னை அன்பாக அணைத்துக் கொள்ளும் தந்தையின்

வருடலுக்காக அவளது அடி மனம் ஏங்கியது.

தன்னை குழந்தையாகப் பாவித்து கொஞ்சி மகிழும் தன் அன்னையின் அன்புக்காக அவள் இதயம் விம்மியது.

பதினெட்டு வயதில் பெற்றோரை இழந்தாள்.
இருபத்தொரு வயதில் வாழ்க்கையை இழந்தாள்.
கடந்த ஐந்து மாதத்தில் தன்னுடைய இயல்பையே

மறந்து தனக்குள் உணர்வற்ற ஜடமாக இறுகிப் போனாள்.

தன்னந்தனியாக அமர்ந்திருந்து ஏதேதோ எண்ணி தனக்குள்ளேயே மருகிக் கொண்டிருந்தாள் அவள்.

அவள் தன்மயா....!!

ஆதியினால் வஞ்சிக்கப்பட்ட அதே தன்மயா.!!

இந்த ஐந்து மாதங்களில் அவளது தோற்றமே

மொத்தமாக மாறிப் போயிருந்தது. இருபத்தொரு வயதே நிரம்பிய அவளுடைய தோற்றமோ இருபத்தைந்து வயதைத் தாண்டியதைப் போலக் காட்சி அளித்தது.

அவளுடைய குழி விழும் குண்டுக் கன்னங்களோ வற்றிப் போய் இருந்தன

.

ஆயிரம் கதை பேசும் அவளுடைய விழிகள்

தற்போது கண்ணீரை மாத்திரமே வடித்தன.

அவளுடைய விழிகளுக்கு கீழே இருந்த கருவளையமோ அவளுடைய தூங்கா இரவுகளின் எண்ணிக்கையினை பறைசாற்றியது.

இயற்கையாகவே மெல்லிய தோற்றத்தைக் கொண்ட அவளது உடலோ இன்னும் மெலிந்து போய் இருக்க,

அவளுடைய வயிறு மாத்திரம் “நான் வளர்கிறேனே மம்மி” எனச் சொல்வதைப் போல வளர்ந்து கொண்டே இருந்தது.

தாலியுமின்றி கணவனுமின்றி தாய்மை மாத்திரம் பெற்றுக் கொண்டது வரமா....? சாபமா....?

கசப்பான புன்னகையை சிந்தியவள் “தாலியற்ற தாய்மை நரகத்திற்கு சமம்.” என முணுமுணுத்தாள்.

****

கோல்டன் பேர்ள் என்ற ஹோட்டலின் உள்ளே இருந்த பிரம்மாண்டமான மதுக்கூடத்தில் அமர்ந்திருந்தான் ஆதி.

அவனுடைய ஒற்றைக் கரமோ செந்நிற மதுவை தாங்கிய கண்ணாடி கிளாஸினை உயர்த்தி காட்ட, அவனுடைய

உதடுகளோ “சியர்ஸ்....” என உரத்த குரலில் கூறின.

இந்த ஐந்து மாதங்களில் அவனிடமும் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன.

அவனுடைய கம்பீரமான உடலோ இன்னும் இறுகிப் போயிருந்தது.

அவனுடைய ஆண்மையின் அழகோ இன்னும் இன்னும் கூடிப் போயிருந்தது.

அவனுடைய கரத்தில் இருந்த மதுபானம் அவனுடைய

தொண்டையை எரித்துக் கொண்டு உள்ளிறங்க, அடுத்த கணம் தன் கண்களை மூடி அந்தச் சுவையை முழுதாக ரசித்து லயித்து அனுபவித்தான்.

“பேரர் ஒன்ஸ் மோர்.” என இன்னொரு கிளாஸையும் வரவழைத்தவன் அதனை சிப் சிப்பாக உள்ளே இழுத்து அருந்திவிட்டு அந்த இருக்கையில் தன் கண்களை மூடிச் சாய்ந்து அமர்ந்தான்.

பின் இருக்கையில் இருந்து சடாரென நிமிர்ந்து அமர்ந்தவன் பதற்றத்தோடு நேரத்தைப் பார்த்தான். “ஓ காட் ஷிட்.” என தன் நெற்றியில் அறைந்தவாறு அவசர அவசரமாக எழுந்தவன் தன் பர்சினுள் இருந்து கற்றைப் பணத்தை எடுத்து அந்த அழகிய மேஜை மீது வைத்துவிட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினான்.

நேரம் செல்லச் செல்ல அவனுடைய நெற்றியின் ஓரம்

வியர்த்து வழியத் தொடங்கியது.

தன்னுடைய கார் சாவியை எடுத்துக் கொண்டு காரில் ஏறியவன் தன் காரினை ஸ்டார்ட் செய்தான்.

அந்த இரவுப் பொழுதில் மழையும் சோவென கொட்டத் தொடங்கியது.

சாலையில் வேகமாக தன் காரினை ஓட்டிச் சென்றவன்

சடாரென தன் வண்டியை நடு வீதியில் நிறுத்தினான்.

அடித்துப் பெய்து கொண்டிருந்த மழையின் காரணத்தால் அந்தப் பாதையோ வெள்ளத்தால் மூடப்பட்டிருக்க, ஆதியின் இதயமோ தாளம் தப்பித் துடிக்கத் தொடங்கியது.

அதற்கு மேல் காரைச் செலுத்த முடியாது என்பதை உணர்ந்து கொண்டவன் ஆளரவமற்ற வீதியில் வண்டியை நிறுத்திவிட்டு கொட்டும் மழைக்குள் இறங்கி நின்றான்.

அவனுடைய விழிகள் நேரத்தை வெறித்துப் பார்த்தன.

அவன் ஆதியல்லவா? ஒன்று வேண்டும் என எண்ணி விட்டால் அதனை அடையும் வரை அவன் தன் இலக்கை மாற்றிக் கொள்ளவே மாட்டான். விளைவு அடுத்த நொடியே அந்தக் கொட்டும் மழையைப் பற்றி சற்றும் சிந்திக்காது வேக வேகமாக வீதியில் நடக்கத் தொடங்கினான்.

அவனுடைய அசுரகதியான வேகத்தில் மழையும் கூட திணறித்தான் போனது. ஒரு மணி நேரத்தில் உச்சகட்ட பதற்றத்தோடு வீட்டினுள் நுழைந்தவன் தன்னுடைய நனைந்த டீஷர்ட்டை கழற்றி எறிந்தவாறே கிட்சனுக்குள் நுழைந்தான்.

அவனுடைய தலை முடியில் இருந்து சொட்டுச் சொட்டாக நீர்த் துளிகள் முகத்திலே வழிந்து கொண்டிருந்தன.

அவனோ அவற்றை எல்லாம் கிஞ்சித்தும் பொருட்படுத்தாது அடுப்பில் பாலை கொதிக்க வைத்தவன், பாலை ஆற்றி ஒரு கப்பில் எடுத்துக் கொண்டான்.

சாப்பாட்டு மேஜையில் மூடி வைக்கப்பட்டிருந்த உணவை பெருமூச்சோடு பார்த்தவன் அதனை ஒரு தட்டில் போட்டு எடுத்துக் கொண்டு அந்த அறையை நோக்கி நடந்தான்.

அந்த அறையை நெருங்க நெருங்க அவனுடைய இதயத்துடிப்பு சீராக மாறியது.

கதவைத் திறந்து அந்த அறைக்குள் நுழைந்தவன் அங்கே சோபாவில் அமர்ந்தவாறு எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தன்மயாவை நெருங்கினான்.

அவன் அந்த அறையினுள் நுழைந்த கணமே அவளுடைய ஐம்புலன்களும் சட்டென விழித்துக் கொண்டன.

அவனுடைய பெர்பியூமின் நறுமணம் அவன் தன் அருகே நெருங்கி வருவதை அவளுக்கு உணர்த்தியது.

அவன் அவளை நெருங்க நெருங்க அவளோ மென்மையை தொலைத்து உடல் இறுகிப் போனாள். அமர்ந்திருந்த சோபாவின் உள்ளேயே புதைந்து காணாமற்

போக வேண்டும் போல இருந்தது அவளுக்கு.

அவனோ அவளுடைய சிறு அசைவையும் கணக்கெடுத்தவாறு அவளின் முன்னே வந்து நின்றவன் தன் கரத்தில் இருந்த பாலை அவளுடைய கையில் திணித்தான்.

“ம்ம் குடி.” என்ற கர்ஜனையில் அவளுடைய கரங்கள் கிடுகிடுவென நடுங்கத்

தொடங்கின. அவளுடைய விழிகளோ அவனைத் தவிர அந்த அறையில் இருந்த அத்தனை பொருட்களையும் பார்த்தது.

மழையில் நனைந்து ஈர உடலோடு அவள் முன் நின்றவன் அவளுடைய முகத்தை அழுத்தமாகப் பார்த்தபடி கால் மாற்றி நின்றான்.

அவளுக்கோ அவன் அருகாமை மூச்சு முட்டுவதைப் போல இருந்தது.

“த.... தள்ளிப் போ ஆ.... ஆதி. லீவ் மீ அலோன்.” என குரல் நடுங்கக் கூறியவளின் அருகே தொப்பென அமர்ந்தான் அவன்.

“முடியாதுடி....” என அழுத்தமாகக் கூறியது அவனுடைய குரல்.

அவன் அவள் அமர்ந்திருந்த சோபாவிலேயே அமர்ந்ததும்

பதறி விலக முயன்றவளின் ஒற்றைக் கரத்தை பிடித்தவன் “ப்ச். பாலைக் குடிடி.” என அதட்டினான்.

“முடியாது க்கையை வ்விடு.” என சீறியவளின் தாடையை இறுகப் பற்றியவன் அவளுடைய இதழ்களை வலுக்கட்டாயமாக திறந்தான்.

அவளுடைய கரத்தில் திணித்த கிளாஸை வாங்கி ஒவ்வொரு மிடறாக அவள் வாயினுள்

புகட்ட, அவளுக்கோ அவனது முரட்டுப் பிடியில் தாடை வலிக்கத் தொடங்கியது.

அவனுடைய கரத்தால் பருக்கப்பட்ட பாலோ அவளுக்கு கொடிய விஷத்தைப் போல இருந்தது.

அடுத்து அவன் கொண்டு வந்திருந்த தட்டில் இருந்த உணவை உண்ணும்படி கூற, அவளுக்கோ எரிச்சலாக இருந்தது.

“எனக்கு வ்வேணாம்.”

“உனக்கு வேணுமா வேணாமான்னு இங்க யாருமே கேட்கலை. என் குழந்தைக்காக நீ இது எல்லாத்தையும் சாப்பிட்டுத்தான் ஆகணும்.” என்றவாறு அவன் கொண்டு வந்திருந்த உணவை அவளை உண்ண வைத்தவன் தான் கையோடு கொண்டு வந்திருந்த மாத்திரைகளையும் போடும்படி அவளிடம் கொடுத்தான்.

அவளோ தன் கரத்தில் இருந்த மாத்திரைகளை விசிறி எறிய அவனுடைய பார்வையோ கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியது.

அந்த மாத்திரைகளை அவளுக்குக் கொடுப்பதற்காக பதறியடித்துக் கொண்டு கொட்டும் மழையில் பாதி தூரம் நடந்தே வந்தவனுக்கு அவள் மாத்திரைகளை எறிந்ததும் பொறுமை பறந்து போனது.

அவளை அறையத் துடித்த கரங்களை இறுகப் பொத்தியவன் வேறு மாத்திரைகளை எடுத்துக் கொண்டு மீண்டும் அவளை நெருங்கினான்.

“என்னை வாண்டட்டா சீண்டாத ட்ராமா குயின்.” என எச்சரித்தவன், “இந்த டேப்ளட்ஸ் உனக்காக கொடுக்கலை. என் குழந்தையோட ஹெல்த்காக கொடுத்தது. சோ போட்டுக்கோ” என்றான்.

வேறுவழியின்றி அத்தனை மாத்திரைகளையும் போட்டுக் கொண்டவள் மீண்டும் சோபாவில் அமர்ந்து தன் முழங்கால்களில் கைகளைக் கோர்த்தவாறு ஜன்னலின் வழியே தெரிந்த மழையை வெறிக்கத் தொடங்கினாள்.

சற்று நேரம் கலங்கிய விழிகளோடு
அமர்ந்திருந்தவளைப்
பார்த்தவன் அறையை விட்டு வெளியே வந்து பக்கத்து அறையில் தூக்கத்தில் இருந்த

யஷ்வியின் நெற்றியில் முத்தம் பதித்தவன் அவனுக்கு போர்வையால் போர்த்தி விட்டு தன்னுடைய அறைக்குள் நுழைந்தான்.

அதன் பின்னரே துவாலையை எடுத்து தன் தலையை துவட்டத் தொடங்கினான் அவன். நெடு நேரம் மழையில் நனைந்ததன் விளைவு அவனுடைய உடல் சில்லிட்டுப் போனது.

அவனுடைய அறையில் வந்து படுத்தவனை தனிமை எனும்

நோய் பிடித்துக் கொண்டது போலும். கண்களை மூடி தூங்க முயன்றவனின் மனக் கண்ணில் அன்றைய நாள் நடந்த சம்பவங்கள் நினைவுக்கு வரத் தொடங்கின.

“என்னோட குழந்தையை பெத்துக் கொடுத்துட்டு நீ எங்க வேணும்னாலும் போ.” என்ற வார்த்தைகளைக் கூறி கடந்த ஐந்து மாதங்களாக அவளை சிறைப்பிடித்து வைத்துள்ளதை எண்ணி தன் தலையை அழுந்தக் கோதினான்.

“ஐ ஹேட் யு டி. இன்னும் அஞ்சு மாசத்துல உனக்கும் எனக்கும் இடையிலான எல்லா தொடர்பும் மொத்தமா முடிஞ்சிரும்.” என முணுமுணுத்தவன் உறங்க முயன்று பரிதாபமாக தோற்றான்.

தலைவனைப் பிரிந்த தலைவிக்குத்தான் பசலை நோய் வருமா என்ன.? தன்மயாவை விட்டு விலகி வந்த ஆதிக்கும் கூட பசலை

நோய் வந்தது போலும். படுக்கையில் கிடந்து உருண்டவன் அடுத்த நொடியே அவளுடைய அறைக்குள் மீண்டும் நுழைந்து கொண்டான்.

அங்கே சோபாவில் பதுமை போலக் கிடந்தவளை நெருங்கியவன் அவள் சுதாரிக்கும் முன்னரே அவளைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டான்.

அவளோ அதிர்ந்து நடுங்கிப் போனாள். அவனுடைய வெற்று மார்பில் இருந்து வெளிப்பட்ட சில்லென்ற குளிர்மை கூட அவளது உடலை தீயாய் தகிக்கச் செய்தது.

ஐந்து மாதங்களின் பின்னரான அவனுடைய தொடுகை அவளை உறைய வைத்தது. அவனது நெருக்கம் பழைய ரணங்களை கிளறிவிட அச்சத்தில் திமிறத் தொடங்கியவளை

மென்மையான படுக்கையில் கிடத்தியவன் அவளை பின்னால் இருந்து அணைத்து அவளுடைய முதுகில் முகம் புதைத்து உறங்கத் தொடங்கினான்.

அவனுடைய கரங்களில் ஒன்று அவளுடைய மேடிட்ட வயிற்றை வருடிக் கொண்டே இருந்தது. அவளின் மணி வயிற்றை வருடியவாறு அவன் தன்னுடைய குழந்தையோடு உரையாட ஆரம்பிக்க, அவளுடைய

உடலோ அழுகையில் குலுங்கியது.

அவளை பொம்மலாட்ட பொம்மையாக மாற்றி அவளை ஆட வைக்கும் கயிற்றை தன் கரத்தில் வைத்திருந்தான் ஆதி.

அவளை மேலும் மேலும் வதைக்கின்றோம் என்ற எண்ணமின்றி அவளை ஆட்டி வைத்தான் அவன்.

காலம் மாறும் போது ஆதியின் நிலை.?

உப்பைத் தின்றவன் தண்ணீர் குடித்துத்தானே ஆக வேண்டும்.

பெண்ணவளை பின்னிருந்து அணைத்தவன் அவள் வயிற்றை வருடி குழந்தையோடு பல கதை பேச, தன்மயாவின் உடலோ வெறுப்பில் மூழ்கியது.

அவள் எஞ்ஞான்றும் வெறுக்கும் ஒருவனின் கரம்

அவள் உடலில் எங்கோவெல்லாம் படர, அவனுடைய கரங்களை பிய்த்து எறிய வேண்டுமென்ற வெறியே அவளுக்குள் சடுதியில் தோன்றியது.

ஆனால் அவனுக்கு அப்படி ஒரு வெறுப்பும் இல்லை போலும். அவனுடைய இரும்பை ஒத்த கரங்களோ தாராளமாக அவளுடலை வருடி கதை பேசின.

அவளை இன்னும் இன்னும் தன்னோடு இறுக அணைத்துக் கொண்டவன் அவனுடைய குழந்தையை கொஞ்சத் தொடங்கினான்.

“சீக்கிரமா டாடிகிட்ட வந்துருங்க ஏஞ்சல்.” என்ற அவனுடைய கொஞ்சலில் அவளுடைய இதயத் துடிப்பு ஏகத்துக்கும் எகிறியது.

அதற்கு மேல் சகிப்புத் தன்மை அற்ற தன்மயாவோ

அவனுடைய கரத்தை வலுக்கட்டாயமாக எடுத்து விலக்கி விட்டவள் அவனுடைய அணைப்பில் இருந்து விலகிப் படுத்தாள்.

“ப்ச் என்னாச்சுடி.?”

“பி.... பிடிக்கலை.”

“பரவால்ல அட்ஜஸ்ட் பண்ணிக்கோ.”

“முடியாது.” என்றவளின் தோளில் அழுத்தமாக கரம் பதித்தான் அவன்.

“டோன்ட் டச் மீ ஆதி.” சீறினாள் அவள்.

“ஹலோ மேடம் நான் ஒன்னும் உங்களைத் தொடலை. என் குழந்தையைத்தான் ஹக் பண்ணினேன்.”

“உங்க குழந்தையை ஹக் பண்ணனும்னா அது வெளியே வந்ததும் என்ன வேணும்னாலும் பண்ணிக்கோங்க. ப்ளீஸ் இப்போ இதெல்லாம் வ்வேணாம்.”

“பேசி முடிச்சிட்டியா ட்ராமா குயின்.? நாட் பேட் நல்லாதான் பேசுற. நாளைக்கு அவார்ட் தர்றேன்.” என்றவன் மீண்டும் அவளது உடலைத் தீண்டினான்.

“ என்னைத் தொட உனக்கு எந்த உரிமையும் இல்ல ஆதி. இந்த குழந்தைக்காக மட்டும்தான் நான் இன்னும் இந்த வீட்ல இருக்கேன். என்கூட சேர்ந்து இன்னொரு உயிர் அழியிறதுல எனக்கு இஷ்டம் இல்ல. இன்னும் அஞ்சு மாசத்துல குழந்தையை உன்கிட்ட கொடுத்துட்டு நான் எங்கேயாவது போயிடுறேன். ப்ளீஸ் அதுவரைக்கும் என்னை நிம்மதியா இருக்க வ்விடு.” என்றவளின் குரல் சோர்ந்து ஒலித்தது.

“சாரி டு சே திஸ். என்னோட அண்ணாவைக் கொலை பண்ண உன்னை நான் கடைசி வரைக்கும் சந்தோஷமா வாழ விடமாட்டேன்.” என அழுத்தமான குரலில் பதில் கொடுத்தான் ஆதித்யன்.

அவனுடைய வார்த்தைகளில் அவளுக்கு சிரிக்கத்தான் தோன்றியது.
அவள் சந்தோஷமாக வாழ்ந்தால் தானே அந்த சந்தோஷத்தை அழிக்க

முடியும்.? மகிழ்ச்சிக்கும் எனக்கும் எட்டாம் பொருத்தம் போலும். என எண்ணிக் கொண்டவள், “சந்தோஷமா....? நான் எப்போ ஆதி சந்தோஷமா இருந்திருக்கேன்.? எனக்கு எந்த சந்தோஷமும் தேவலை ஆதி. ஆனா கொஞ்சமாவது நிம்மதி வ்வேணும் ப்ளீஸ்.” என அவனிடம் மன்றாடினாள் அவள்.

அவன் நெருங்கி வரும் போதெல்லாம் அவளுடைய பழைய எண்ணங்கள்

அவளைப் பாடாய்ப் படுத்தின. தீப் படுக்கையில் படுப்பதைப் போல உணர்ந்தவள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு அவனை விட்டு விலகியே இருக்க முயன்றாள்.

ஆனால் அதற்கு அவனும் சம்மதிக்க வேண்டுமே. அவளுடைய விலகல் அவனுக்கு உச்சகட்ட சினத்தையும் அவளைச் சீண்டிப் பார்க்கும் எண்ணத்தையும் தோற்றுவித்தது.

மீண்டும் அவனுடைய கரம் அவள் உடலைத் தீண்ட, “சே....! வெறுப்பா இருக்கு ஆதி.” என வீறிட்டாள் அவள்.

“ஓ....? நான் தொட்டா வெறுப்பா இருக்கா.? நம்புற மாதிரி இல்லையே. ஹாங் நீ இந்த ஆதியை காதலிச்சவ தானே.? இப்போ என்ன புதுசா வெறுப்பா இருக்கு.? என்கூட படுக்கைல எத்தனையோ எல்லையைத் தாண்டி வந்தவதானே நீ. அப்போ

அமைதியாதானே இருந்த. இப்போ மட்டும் ஏன்டி வெறுப்பா இருக்குன்னு நடிக்கிற.?” விசமத்துடன் வார்த்தைகளைக் கொட்டினான் ஆதி.

சட்டென தன் காதுகளைப் பொத்திக் கொண்டாள் அவள். அவளுடைய அழகிய அஞ்சன விழிகள் உவர் நீரால் நிறைந்து போயின. அவனுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் தேள் கொட்டியதைப் போல வலிக்கச் செய்ய, விட்டத்தை

வெறிக்கத் தொடங்கினாள் மாது.

அவள் உடலோ அவனுடைய தொடுகைக்கு எந்த துலங்கலையும் காட்டாது இறுகிப் போனது.

அவளது அமைதியைக் கண்டு புருவம் உயர்த்தியவன், அவளை வேண்டுமென்றே சீண்ட எண்ணினான்.

அவளுடைய காதோரம் நெருங்கி “ஹாய் மயா பேபி. ஐ லவ் யு. நாம லவ் மேக் பண்ணலாமா....? ம்ம்....?” என தன் குரலை மாற்றி கவின் போலவே நடித்துக் காட்ட பதறிப்போனாள் தன்மயா.

அவன் அவ்வாறு பேசியதும் இடையில் நடந்த அத்தனையும் அதிர்ச்சியில் மறந்து தான் போனது அவளுக்கு.

ஒரு மாத காலம் கவின் எனும் நபரோடு பழகியவளுக்கு அதே குரல் கேட்டதும் கவின்தான் வந்துவிட்டான் என நம்பினாள் அவள். இது அத்தனையும் ஆதியின் நடிப்பு என்பது அக்கணம் மிகுந்த பதற்றத்தில் அவளுக்கு மறந்தே போனது.

“ப்ச்.... கிட்ட வா மயா பேபி” என அவளை இழுத்து தன் கை வளைவிற்குள் கொண்டு வர, அவளோ அந்த அழைப்பில் தன்னை மறந்து “கவின்.... நோ..... தொ.... தொடாத.... நோ....

வ்விடு….” என சத்தமாக அலறியவள் படுக்கையை விட்டு எழுந்து ஓட ஆதியோ ஸ்தம்பித்துப் போனான்.

“ஏய் பாத்துடி…. ஓடாத. இட்ஸ் மீ ஆதி.” என அவனும் சட்டென படுக்கையை விட்டு எழுந்தான்.

அந்த சில நொடிகளுக்குள்ளேயே அவள் ஆதியா கவினா என்ற குழப்பத்தில் தலையைப்

பிடித்துக் கொண்டு தரையில் அமர்ந்து விட, அப்போதுதான் அவளுடைய மனக் குழப்பத்தை கவனித்தான் ஆதி.

“ஓ மை காட்.” என தன் தலையில் தட்டிக் கொண்டவன் அவள் அருகே சென்று மண்டியிட்டு அமர்ந்தான்.

அவளது கலங்கிய விழிகள் அவனை சந்தேகத்தோடு நோக்கின.

“குயின் ரிலாக்ஸ். கவின்னு யாருமே இல்லை. மறந்துட்டியா.? ஆதி மட்டும்தான் உண்மை. ரிலாக்ஸ் ஆகு.” என நிதானமாக அவன் புரிய வைக்கத் தொடங்கிய பின்னரே விடுபட்ட நினைவுகள் அவளை வந்தடைந்தன.

அந்த மயா பேபி என்ற அழைப்பும் மென்மையான தொடுகையும் ஐ லவ் யு என்ற வார்த்தைகளும்

அவளுடைய மூளையின்
செயல்திறனை மழுங்கடித்து
விட்டன போலும். ஓர் நொடி
கவினுடைய
அணைப்பிற்குள்தான்
இருக்கிறோம் என எண்ணி
விதிர்விதிர்த்துப் போனாள்
பேதை.

அவளுடைய தவிப்பையும்
தடுமாற்றத்தையும் கண்டு
அவளுடைய நடுங்கிய
வெண்டைப் பிஞ்சு
விரல்களை தன்
கரங்களுக்குள் பொத்தி

வைத்தவன், அவளுடைய விழிகளையே இமைக்காது பார்த்தான்.

“நத்திங் டு வெரி. நீ நினைக்கிற மாதிரி எதுவும் இல்ல தன்மயா. லுக் அட் மீ.” என்றவன் அவளுடைய முகத்திற்கு நேரே சொடக்கிட்டான்.

அவள் அதீதமான கற்பனைச் சுழலுக்குள் சிக்கிக் கொண்டாள் என்பதனை

உணர்ந்த அந்த மனநல மருத்துவன் மீண்டும் அவள் மனதில் பதியும் படி அழுத்தமான குரலில் அவளை அழைத்தான்.

“தன்மயா.”

“.....”

“தன்மயாஆஆஆ.” என்ற உரத்த அழைப்பில் சட்டென விழிகளை சிமிட்டியவள் “ஹாங்....?” என அதிர்ந்து

விழிக்க, அவனுக்குள்ளே ஏதோ ஒன்று உடையும் உணர்வு.

“லுக் அட் மை ஐஸ். என்னோட கண்ணைப் பாரு. கூல். டென்ஷன் ஆகாத.” என மீண்டும் மீண்டும் கூற சற்றே இயல்புக்கு வந்த தன்மயாவிற்கு உடலின் நடுக்கம் குறைந்து உண்மை புரிந்தது.

அவள் அதிர்ச்சியில் இருந்து வெளிவந்து விட்டாள் என்பதனை உணர்ந்தவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

அவளுடைய இத்தகைய உணர்வு வெளிப்பாடும் உச்சகட்ட அதிர்ச்சியும் அவள் வயிற்றினுள் வளரும் குழந்தைக்கு நல்லதல்லவே.

தன்னைத் தானே கடிந்து கொண்டவன் அவளை இனி மனரீதியாக துன்புறுத்தக்

கூடாது என்ற முடிவினை எடுத்தான்.

அவளுடைய வெறித்த பார்வையை பார்த்து புன்னகைத்தவன் “என்னை முறைச்சது போதும். வந்து தூங்கு வா.” என மென்மையான குரலில் அழைத்தான்.

அடுத்த நொடி அடங்காத சீற்றத்தில் ஆதியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள் தன்மயா. ஏமாற்றம் தாளாது தன் கூரிய

நகங்களால் அவனுடைய கன்னத்தில் கீறி காயப்படுத்தி மீண்டும் மீண்டும் அவனைத் தாக்க, அதிர்ச்சியில் உறைந்தவன் சட்டென அவளைத் தடுத்துப் பிடித்தான்.

அவளோ அடங்காது அலறியவாறு அவனைக் காயப்படுத்த முன்னேற அவளை இறுக அணைத்துக் கொண்டான் அவன்.

அவனுடைய கரங்களுக்குள்
ஆக்ரோஷமாகத்
திமிறியவளின் உடல்
கொஞ்சம் கொஞ்சமாக
சமாதானம் அடைய, விம்மி
வெடித்த அழுகையோடு
அவன் மார்போடு ஒன்றிக்
கொண்டாள் பேதை.

ஏங்கி ஏங்கி அழுதவளின்
முகம் அவனுடைய வெற்று
மார்பில் புதைந்து போனது.

“எ.... எதுக்கு என்.... என்னை ஏமாத்தினீங்க....? ஏ.... ஏன் இப்படி பண்ணீங்க ஆது.? நான் கொ.... கொலை பண்ணலை. நான் எந்தத் தப்பும் பண்ணலை. ச.... சத்தியமா நான் தப்பு பண்ணலை. என்னை எதுக்கு இந்த மாதிரி கஷ்டப்படுத்துறீங்க....? ஏன் ஏன் என்கிட்ட நடிச்சீங்க.? என்.... என்னால தாங்க முடியலையை ஆதி. ஒரு மாசமா உ.... உங்களால எப்படி நடிக்க முடிஞ்சுது. என்னோட நிம்மதி சந்தோஷம்

எல்லாத்தையும் எதுக்காக கொன்னு புதைச்சீங்க....? என.... எனக்கு எதுவுமே புரியலை. எதையுமே நம்ப முடியலை. எது நிஜம்.? எது பொய்னு சத்தியமா புரியலை. இப்போ இருக்கிற நீங்கதான் நிஜமா.? இல்லை இது கூட நடிப்பா? ப.... ப.... பயம்மா இருக்கு ஆதி. இப்படி மென்டல் டார்ச்சர் பண்றதுக்குப் பதிலா நீங்க என்னைக் கொன்னுருக்கலாம்.” என்றவள் கேவிக் கேவி அழுதாள்.

அவளுடைய விழி நீர்த்
துளிகள் அவனுடைய மார்பு
உரோமத்தை நனைய
வைத்தன.

“உஷ்ஷ் போதும் குயின்.
இப்படி அழுகுறது
குழந்தைக்கு நல்லது இல்ல.”
என்றதும் அவளுடைய உடல்
விறைத்துப் போனது.

பொங்கிப் பெருகிய
அழுகையை சட்டென
துடைத்துக் கொண்டவள்

அவனிடம் இருந்து விலகி நடக்கத் தொடங்கினாள்.

மேஜை மீது இருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்து பருகியவள் அந்த அறையின் பால்கனி நோக்கிச் சென்றாள்.

அந்த பால்கனியில் தொங்க விடப்பட்டிருந்தது ஒரு பெரிய ஊஞ்சல். மெல்ல மெல்ல கனத்த மனதோடு ஊஞ்சல் அருகே சென்றவள் அதில் ஏறி அமர்ந்து அப்படியே சுருண்டு படுத்துக் கொண்டாள்.

இரவு நேரத்தில் வீசிய தென்றல் காற்றோ மங்கையவளுக்கு அந்நொடி அன்னையாகிப் போனது போலும். மென்மையாக அவளுடைய உடலை தீண்டி தழுவி சமாதானப்படுத்தத் தொடங்கியது.

அவளுடைய விழிகள் சிந்திய நீர்த் துளிகள் யாவும் அந்தக் கண்ணாடி ஊஞ்சலில் பட்டு தெறிக்கத் தொடங்கின.

உணர்வுகள் மரத்துப் போக
வேதனையோடு விழிகளை
மூடிக் கொண்டவள் தென்றல்
காற்றின் வருடலில் ஆழ்ந்த
உறக்கத்திற்குச் சென்றாள்.

ஆதியின் மனமோ
தன்மயாவின்
செயற்பாடுகளில் படபடத்துப்
போனது. அவள் பால்கனி
நோக்கி சென்றதை தூரத்தில்
இருந்தே பார்த்தவன் அவளை
நெருங்காது விலகியே
நின்றான்.

உடல் மெலிந்த உருவத்தோடு அவள் ஊஞ்சலில் சுருண்டு படுத்திருக்கும் காட்சி அவனுக்கோ பூங்கொடி ஒன்று ஊஞ்சலில் படர்ந்திருப்பதைப் போலவே இருந்தது.

ஒரு மணி நேரம் அசையாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் பின் அவள் தூங்கி விட்டாள் என்பதை உணர்ந்ததும் தடித்த போர்வையை எடுத்து வந்து அவளுக்குப் போர்த்தி விட்டான்.

மழை பெய்து ஓய்ந்திருந்த
வானத்தைப் பார்த்தவன்
தன்னுடைய சகோதரனையும்
தன்மயாவையும் எண்ணி
வேதனை கொண்டான்.

அவனால் ஒரு போதும்
தன்மயாவின் தவறை
மறக்கவோ மன்னிக்கவோ
முடியாதென்றே தோன்றியது.

அவளுடைய பதினெட்டு
வயதில் அவள் செய்த சிறு

தவறு ராணாவின் வாழ்வை அழித்ததோடு மட்டுமல்லாமல் ஆதியின் வாழ்க்கையில் இருந்த நிம்மதியையும் அல்லவா வேரோடு சாய்த்து விட்டது.

காலங்கள் கடந்தும் மாறாத வலி அவனுடையது.

யுகங்கள் பல கடந்தாலும் மாறாத வெறுப்பு அவளுடையது.

மன்னவனின் வலியும்
மங்கையின் வெறுப்பும் ஓங்கி
நிற்கும் போது மனதில்
இருந்த மெல்லிய காதல் கூட
மாண்டுதான் போனது
போலும்.

அதிகாலை வேளையில்
இருள் விலகும் முன்னரே
துயில் கலைந்து எழுந்த
ஆதியோ சமையல் அறையில்
நின்று யஷ்விந்திற்காக பால்
கலக்கத் தொடங்கினான்.

ராமுவோ தன் சொந்த
ஊரிற்கு சென்றிருக்க,
அதிகமான வேலைகள்
ஆதியின் வசமாகின. தன்மயா
இருக்கும் நிலையில் அவளை
வேலை செய்விக்க
விரும்பாதவன் தானே
அனைத்து வேலைகளையும்
கையில் எடுத்துக்
கொண்டான்.

மளமளவென பால் கலந்து
காலை உணவையும் செய்து
முடித்தவன் யஷ்விந்த்தை
எழுப்பினான்.

“யஷ்வி மை லயன் வேக்கப்டா....” என அவனை எழுப்பி அவனுக்கு பாலை புகட்டி விட்டான். பால் குடித்து முடித்தவனோ “ப்பாஆஆ ம்மாஆ எங்க.?” என தன்மயாவைத் தேடினான்.

“உன்னோட மம்மி தூங்கிட்டு இருக்காடா.”

“ம்மாஆ....” என மீண்டும் அழைத்தவாறு அவன்

இதழ்களை பிதுக்க, ஆதியோ
“சரி சரி மம்மிகிட்ட
போகலாம் வா.”
என அவனைத் தன்
கரங்களில் தூக்கிக் கொண்டு
தன்மயா படுத்திருந்த
அறைக்குள் நுழைந்தான்.

“ப்பாஆ….”

“என்னடா கண்ணா.?”

“அது என்ன.?”

“எது.?” என்றவாறு அவன் கை காட்டிய இடத்தைப் பார்த்தான் ஆதி. அங்கே அவனுடைய டீஷர்ட் ஒன்று கிடந்தது.

“அது ட்ரெஸ்டா எல்லாரும் போட்டுப்பாங்க.”

“அப்போ ம்மா ஏன் போதலை.?”

“டேய் உன்னோட அம்மா பொண்ணுதானே அதனாலதான் டீஷர்ட்

போடலை” என சிரித்தவாறு அவனுடைய கன்னத்தில் முத்தம் பதித்தான்.

“ப்பாஆ அப்போ நானும் போதலையே.?” என இதழ் பிதுக்கி அழத் தொடங்கியவனை “அடப்பாவி இருடா அப்பா உனக்கு டீஷர்ட் போட்டு விடுறேன்.” என சமாளித்தான்.

அவனுடைய டீஷர்ட்டை எடுத்து வந்து போட்டு விட

அதனைத் தட்டி விட்டவன்
தரையில் பிடிவாதமாக
அமர்ந்தே விட்டான்.

“என்னடா கண்ணா இந்த
டீஷர்ட் வேணாமா.?”

“வ்வேணாம்.”

“வேற டீஷர்ட் எடுத்துட்டு
வரட்டுமா.?”

“ப்பாஆ உங்க டீ வ்வேணும்.”

“எதே என்னோட டீஷர்ட் வேணுமா? ஹா ஹா அது நீ பெரியவனானப்புறம் போடலாம்.”

“நா எப்போ பெதியவனா....வ... வ... வளருவ.?”

“சீக்கிரமே வளர்ந்திருவடா.”

“அப்போ இன்னைக்கு நைட்டு பெதியவனாகிருவேன்.” என கை தட்டி குதூகலித்தவனை பார்த்து அவனுடைய

இதழ்களிலும் புன்னகை பூத்தது.

“சரி வாடா மம்மி பால்கனில இருப்பாங்க.”

“ப்பாஆ அது என்ன.?”

‘ஆஹாஆஆ மறுபடியும் முதல்ல இருந்து ஆரம்பிக்கிறானே.’ என அவனுடைய கேள்விக் கனைகளை எண்ணி சிரித்துக் கொண்டான் ஆதி.

“ப்பாஆ இது என்ன.?”

“ஹி.... ஹி....”

“ப்பாஆ இது என்ன....?” என துருவி துருவி கேட்டவனை அப்படியே தூக்கித் தோளில் போட்டவன் பால்கனி நோக்கி ஓடத் தொடங்கினான்.

யஷ்வியோ அவனுடைய தோள்களில் கிடந்து கிளுக்கி நகைத்துக் கொண்டிருந்தான்.

புன்னகையோடு பால்கனி
வந்தவன் அங்கே கேட்ட
விசும்பல் சத்தத்தில் தன்
புன்னகையை இழந்தான்.

‘இரவு பகலா அழுதுகிட்டே
இருக்காளா.?’ என தன்
மனதினுள் எண்ணிக்
கொண்டவன் யஷ்வியுடன்
அவளை நெருங்கினான்.

தன் மகனைக் கண்டதும்
தன்மயாவின் முகம்

பளிச்சிட்டது. கார் மேகங்களுக்கு இடையே தோன்றிய மின்னல் கீற்றைப் போல அவளுடைய முகம் ஓர்நொடி பிரகாசத்தை வெளிப்படுத்தியது.

“ம்மாஆ.... ம்மாஆ....” என அழைத்தவாறு அவளை நெருங்கியவனை தூக்கி இறுக அணைத்துக் கொண்டாள் தன்மயா.

“ஏய் பாத்துடி. வயித்துல அடி பட்டுறபோது. அவனை என்கிட்ட கொடு குயின். நான் தூக்கி வெச்சிருக்கேன்.”

என்றான் ஆதி. அவனுக்கோ எங்கே தன்மயாவிற்கு அடி ஏதும் பட்டு விடுமோ எனப் பயமாக இருந்தது.

அவளோ அவனுடைய பேச்சை பொருட்படுத்தாது யஷ்வியின் கன்னங்களில் மாறி மாறி தொடர் முத்தங்களைப் பதித்துக் கொண்டிருக்க, அதனைப்

பார்த்துக்
கொண்டிருந்தவனுடைய
இதயமோ தாளம் தப்பித்
துடிக்கத் தொடங்கியது.

அவர்கள் இருவருடைய
நெருக்கமும் தன்னைத்
தனிமைப் படுத்துவதைப்
போல இருக்க, அவனுடைய
மனதை அக்கணம் வெறுமை
சூழ்ந்து கொண்டது.

சட்டென அவர்கள்
இருவரையும் நெருங்கியவன்

யஷ்வியின் கன்னத்தில் மென் முத்தத்தையும் தன்மயாவின் கன்னத்தில் அழுத்தமான முத்தத்தையும் பதித்துவிட்டு விலகி நிற்க, தன்மயாதான் அதிர்ந்து போனாள்.

“குயின் ரெடியாகு. இன்னைக்கு உனக்கு செக்கப் இருக்கு. ஹாஸ்பிடல் போகணும்.”

“ம்ம்....”

“நான் ஃபிரஷ் ஆகிட்டு வர்றேன். நீயும் சீக்கிரமா ரெடி ஆகு. ஹாஸ்பிடல் போய்ட்டு வந்தப்புறம் நான் ஒரு வேலை விஷயமா வெளியே கிளம்பணும்.”

“சரி.” என்றவாறு யஷ்வியை கீழே இறக்கி விட்டவள் குளியல் அறை நோக்கிச் செல்லத் தொடங்க, “ஹேய் வெயிட்.” என்றவாறு அவளுடைய நடையை நிறுத்தியவன் தான் வாங்கி வைத்திருந்த ஆடையை

எடுத்து வந்து அவளுக்குக் கொடுத்தான்.

“இது ப்ரக்ணன்ட் டைம்ல போடுற ட்ரெஸ். உனக்கு ஈஸியா இருக்கும்னு வாங்கினேன். இதையே போட்டுக்கோ.”

ஆகாய வண்ண நீல நிறத்தில் சிறிய வெள்ளைப் பூக்கள் தூவிய மென்மையான துணியில் செய்யப்பட்டிருந்தது அந்த ஆடை. அதன் நிறத்தை பார்த்தவள் புருவங்களை உயர்த்தினாள்.

“என்ன குயின்.?”

“நீங்க எப்பவுமே பொண்ணுங்களுக்கு ரெட் கலர் ட்ரெஸ்தானே எடுத்துக் கொடுப்பீங்க. இன்னைக்கு வேற கலர்ல எடுத்திருக்கீங்க.” என குத்தலாகக் கூறினாள் அவள்.

“இந்த ட்ரெஸ் விபச்சாரிக்கு எடுக்கலை. என் குழந்தையோட அம்மாக்கு

எடுத்தது.” என இறுகிய குரலில் பதிலடி கொடுத்தான் அவன்.

அவனுடைய விபச்சாரி என்ற வார்த்தையில் சட்டென அவளுடைய உள்ளம் உடைந்து போனது.

“ம்ம்....” என கலங்கிய விழிகளோடு அவனைக் கடந்து சென்றாள் தன்மயா.

அவளுடைய கரத்தைப்
பிடித்தவன் “என்னை சீண்டிப்
பார்க்காத ட்ராமா குயின்.
சீக்கிரமாக ரெடியாகு.”
என்றவாறு அவளது கரத்தை
வருட, சட்டென தன் கரத்தை
அவனிடம் இருந்து உருவிக்
கொண்டவள் விறுவிறுவென
குளியல் அறைக்குள்
நுழைந்து கொண்டாள்..

அவன் மீது அத்தனை
வெறுப்பும் கோபமும்
இருந்தும் எதுவும் செய்ய
இயலாது போனது அவளுக்கு.

‘முருகா நீ இருக்கிறது உண்மையா இருந்தா இந்த டெவிலை வதைக்கிறதுக்கான சக்தியை எனக்கு கொடு. எனக்கு நடந்த அநியாயத்துக்கு அவன் தண்டனை அனுபவிச்சே ஆகணும்’ என இறைவனிடம் வேண்டுதல் வைத்தவள் வேண்டுமென்றே இரண்டு மணி நேரத்திற்குப் பின் தாமதமாக ரெடியாகி வெளியே வர, அவளை

அழுத்தமாகப் பார்த்தான் அவன்.

அவன் கொடுத்த ஆடையை அணிந்து தாய்மை மெருகேற நடந்து வந்தவளைக் கண்டதும் அவள் தாமதமாக வந்ததைக் கூட மறந்து போனான் அவன்.

அவள் யஷ்வின்தை தூக்க முயல அவளைத் தடுத்தவன் தானே யஷ்வியை தூக்கிக் கொண்டான். அவளையும்

அழைத்துக் கொண்டு ஹாஸ்பிடல் நோக்கி காரில் செல்லத் தொடங்கினான்.

மருத்துவமனை வந்ததும் அவளை பார்த்தவன் “குயின் நீ உள்ளே போய் இரு. நான் காரை பார்க் பண்ணிட்டு வர்றேன்.” என்க, அவளும் காரில் இருந்து இறங்கி நடக்கத் தொடங்கினாள்.

அதே நேரம் அவளுக்கு நேராக பதற்றத்தோடு வந்த

பெண் தன்மயாவோடு மோத,
சட்டென தன் வயிற்றில்
அடிபடாதவாறு ஒரு கையை
வயிற்றின் மீது வைத்தவள்
மற்றைய கரத்தால் அருகே
இருந்த இருக்கையைப்
பிடித்து தன்னை நிலைப்
படுத்திக் கொண்டவளுக்கு
பயத்தில் வியர்த்துப் போனது.

“அச்சோ சாரிங்க.” என
மன்னிப்புக் கேட்ட பெண் கீழே
விழுந்த தன்னுடைய
ரிப்போர்ட்டை எடுத்துக்
கொண்டு தன்மயாவின்

ரிப்போர்ட்டையும் எடுத்துக் கொடுத்து விட்டுச் சென்றாள்.

முகத்தில் அரும்பிய வியர்வையை துடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தவளை ஏளனமாகப் பார்த்தாள் நர்ஸ்.

தாலியோ குங்குமமோ இன்றி மேடிட்ட வயிறோடு தன்னந்தனியாக வந்து நின்ற தன்மயாவின் முகத்தை வெறுப்போடு பார்த்தவர்

அவளுடைய கரத்தில் இருந்த ரிப்போர்ட்டை வாங்கினார்.

ரிப்போர்ட்டை பார்த்த அடுத்த நொடியே அந்த நர்ஸின் முகம் சினத்தை குத்தகைக்கு எடுத்துக் கொண்டது.

“நீ படிச்ச பொண்ணுதானே அறிவில்லையா.? ஒரு உயிரைக் கொல்றது எவ்ளோ பாவம்னு உனக்கு தெரியாதா.? இப்போ போய் அபார்ஷன் பண்ணனும்னு வந்திருக்க. கல்யாணம் பண்ணாம கண்டவன்கூடயும்

சுகத்துக்காக போக
வேண்டியது.

அப்புறம் பிள்ளை தங்கினா
அபார்ஷன் பண்ண வந்துர்றது.
ச்சை என்ன பொண்ணும்மா
நீ.” என அவர் திட்டி முடிக்க
முதலே மளமளவென திரும்பி
நடக்கத் தொடங்கினாள்
தன்மயா.

அவருடைய வார்த்தைகள்
யாவும் அவள் உடல் எங்கும்
கூசிப் போகச் செய்தது.

“ஏய் பொண்ணு நில்லு. உன் ரிப்போர்ட்டை கொண்டு போ.” எனக் கத்தினார் அந்தத் தாதி.

தன்மயாவோ திரும்பியும் பாராது பார்க்கிங் ஏரியா சென்றவள் அங்கே நின்ற தங்களுடைய காரைக் கண்டதும் ஏறி அமர்ந்து கொண்டாள்.

“ஹேய் என்னடி திரும்பி வந்துட்ட….?”

என புருவம் உயர்த்தினான் ஆதி.

“.....”

“உன்னைத்தான் கேட்குறேன் ட்ராமா குயின். என்னாச்சு.? ஏன் திரும்பி வந்துட்ட.?”

“.....”

“ஏய் என்னன்னு கேட்டுட்டே இருக்கேன் காது

கேட்கலையாடி....?” உறுமினான் அவன்.

“வ்வீ.... வீட்டுக்குப் போகணும்.” என கலங்கிய குரலில் கூறியவள் விழிகளை மூடி காரின் கதவோடு சாய்ந்து கொண்டாள்.

அவளருகே நெருங்கி அவளுடைய நெற்றியில் தன் கரம் வைத்துப் பார்த்தவன் அவளுடைய தலை மீது கரம் வைத்து வருட, வெடுக்கென

அவனுடைய கரத்தை தட்டி
விட்டவள் பொல பொலவென
கண்ணீர் சிந்தத்
தொடங்கினாள்.

“ப்ளீஸ் ஸ்டாப் திஸ்.
எரிச்சலா இருக்கு குயின்.
எதுக்கு அழுகிறன்னு
சொல்லிட்டாவது அழு.
எப்போ பார்த்தாலும்
அழுதுகிட்டே இருக்க
வேண்டியது ச்சை.” என
எரிந்து விழுந்தான் அவன்.

அவனுடைய சீற்றத்தில் உள்ளே நடந்த அனைத்தையும் அழுதவாறே கூறி முடித்தாள் தன்மயா.

“க... கண்டவங்க கூ... கூட சு... சுகத்துக்காக படு.... படுக்.” என திணறியவளின் கரத்தைப் பிடித்துக் கொண்டவன் அவளுடைய பேச்சை தடுத்து நிறுத்தினான்.

“உன் ரிப்போர்ட் எங்க.?” என இறுகிய குரலில் கேட்டான் ஆதி.

அவளோ அவனிடம் அதைக் கொடுக்க அப்போதுதான் ரிப்போர்ட் மாறியுள்ளதைப் பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

“இது எ... என்னோட ரிப்போர்ட் இல்ல.” என்றவளுக்கு தன்னோடு மோதிய பெண்ணின் ரிப்போர்ட்டாக

இருக்குமோ என்ற சந்தேகம் வந்தது.

“சரி வா.”

“நா.... நான் வரலை. நான் வீட்டுக்குப் போகணும்....”

“யாரோ என்னவோ பேசினாங்கன்னு நீ ஏன் அப்செட் ஆகுற.? என்கூட வா.”

“ம்ஹூம் ப்ளீஸ் ஆதி”
என்றவளின்
விழிகள் கண்ணீரில்
நனைந்தன.

“ப்ச் வாடி.” என்றவன்
யஷ்விந்தை காரினுள் விட்டு
கார்க் கதவை லாக் செய்து
கார் கீயை எடுத்தவன்
அவளை அழைத்துக் கொண்டு
மீண்டும் அந்த
மருத்துவமனைக்குள்
நுழைந்தான்.

அவர்கள் உள்ளே நுழைந்த அடுத்த நொடியே ஒரு பெண் தன்மயாவை நோக்கி ஓடி வந்தாள்.

“சாரி சிஸ்டர் ரிப்போர்ட் மாறிடிச்சு.” என்றவாறு தன் ரிப்போர்ட்டை எடுத்துக் கொண்டு தன்மயாவின் ரிப்போர்ட்டைக் கொடுத்தவள் மீண்டும் ஒரு முறை மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அங்கிருந்து சென்று விட, பெருமூச்சோடு தன் கையில்

இருந்த ரிப்போர்ட்டை வெறித்தாள் அவள்.

“உன்னைத் திட்டிய நர்ஸ் யாரு.?”

“எதுக்கு....?”

“ப்ச்.... நான் கேட்டதுக்கு இது பதில் இல்ல.”

“நீங்க கேட்டதுக்கு நான் ஏன் பதில் சொல்லணும்.? உங்க கோபத்தை அவங்ககிட்ட

காமிக்காதீங்க.” என மெல்லிய குரலில் சீறினாள் அவள்.

அவனோ அவளுடைய தோளில் தன் கரத்தைப் போட்டு அணைத்துக் கொண்டவன் தன் ஃபோனை எடுத்து யாரோ ஒருவருக்கு அழைக்க, அடுத்த நொடி அந்த மருத்துவமனையின் தலைமை வைத்தியர் ஆதியின் முன்னே வந்து நின்றார்.

“வாங்க ஆதி சார்.” என வரவேற்றவரை அலட்சியப்படுத்தியவன் “உங்க ஹாஸ்பிடல்ல இருக்கிற அத்தனை நர்ஸ்ஸும் இப்போ என் முன்னாடி வந்தாகணும்.” என கட்டளை இட்டான்.

“இப்போவே வர சொல்றேன் சார்.” என்ற தலைமை அதிகாரி அடுத்த நொடியே அங்கிருந்த அத்தனை தாதியரையும் அந்த இடத்திற்கு வரவழைத்தார்.

தன்மயாவோ பிரச்சனை பெரிதாகப் போவதை உணர்ந்தவள் நடுங்கிப் போனாள்.

“ஆதி ப்ளீஸ். பிரச்சனை வேணாம். வாங்க போகலாம்.” எனப் பதறினாள் அவள்.

“இதுல யாரு உன்னைத் திட்டியது. அவங்க யாருன்னு இப்போ நான் பார்த்தாகணுமே.” என்றவனின் உரத்த குரலில் அந்த

தாதியின் முகமோ பதற்றத்தையும் பயத்தையும் ஒருங்கே சூடிக் கொண்டது.

“ஐயோ ஆதி வாங்க போகலாம்.” என்றவளை தன்னோடு இறுக அணைத்தவன் “ஷீ இஸ் மை வைஃவ்.

இவ கண்டவன் கூட போனான்னு சொன்ன அந்த உயர்ந்த உள்ளம் இங்க இருக்குற நர்ஸ்ல யாருன்னு தெரிஞ்சிக்கலாமா.?” என அடிக் குரலில் கேட்டான் ஆதி.

“சா.... சாரி சார்.” என்ற குரலில் முன்னே வந்தார் அந்தத் தாதி.

அடுத்த நொடி அளவற்ற சினத்துடன் “ஹௌ டேர் யு ஸ்டுப்பிட்.” என உறுமியவாறு அந்தத் தாதியை அவன் நெருங்க, எங்கே அடித்து விடுவானோ என எண்ணி பயந்து போனாள் தன்மயா.

தலைமை மருத்துவரோ கைகளைப் பிசைந்து கொண்டு நிற்க, ஆதியோ அந்தத் தாதியின் கழுத்தை இறுகப் பற்றியே விட்டான்.

“அவ என்னோட மனைவி. என்ன தைரியம் இருந்தா அவளைப் பார்த்து அப்படிச் சொல்லிருப்ப இடியட்.” எனக் கர்ஜித்தவனின் கரத்தை ஓடி வந்து பிடித்துக் கொண்டாள் தன்மயா.

“ஆதி ப்ளீஸ் ஸ்டாப்.
அவங்களை விடுங்க ஆதி.
ஐயோ வ்விடுங்க.” என
அவனுடைய கரத்தை
சிரமப்பட்டு விலக்கியவள்
அவனுடைய கரத்தைப் பற்றி
இழுத்தாள்.

மலை போன்று இருந்தவனோ
சற்றும் அசையாது அப்படியே
நிற்க, அவளுக்குத்தான் தலை
சுற்றிப் போனது.

கால்கள் துவள அப்படியே
சரிந்தவளை சட்டென தன்

கரங்களில் தாங்கிக் கொண்டான் ஆதி.

“ஹேய்.... நீ எதுக்குடி டென்ஷன் ஆகுற.?” என தன் கையில் கிடந்தவளை திட்டினான் அவன்.

“வீட்டுக்கு கூட்டிப் போங்க ப்ளீஸ்.” என மெல்லிய குரலில் முனகியவளை நேரே வைத்தியரிடம் அழைத்துச் சென்று அவளுக்குரிய பரிசோதனைகளை முடித்த

பின்னரே அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அவனுடைய செயல்கள் யாவும் அவளை மலைக்கச் செய்தன. தினம் தினம் அவனோடு போராடியே களைத்துப் போனாள் மாது.

“நம்ம மேலதான் தப்பு. இந்த வயசுல தாலி இல்லாம கர்ப்பமா இருந்தா எல்லாரும் அப்படித்தான் நினைப்பாங்க.”

“ஷட் அப் குயின்.”

“சே ஏன் நீங்க இப்படி
அரக்கன் மாதிரி
நடந்துக்கிறீங்க.?”

“நீ ஏன்டி இவ்ளோ சா◌ஃப்டா
இருக்க.?”

“பேச்சை மாத்தாதீங்க ஆதி.”
சீறினாள் அவள்.

“ஓவரா பேசினா உன்னோட வாயை கடிச்சு துப்பிருவேன். வாயை மூடிட்டு இரு.”

“ஐ ஹேட் யு.”

“ஐ ஹேட் யு டூ குயின்.”

“சே....! நீ ஒரு டெவில் ஆதி.” என சீற்றத்தில் கத்தியவளின் கழுத்தை வளைத்து அவள் இதழ்களை தன் அதரங்கள் கொண்டு மூடினான்.

“சே....! நீ ஒரு டெவில் ஆதி.” என சீற்றத்தில் கத்தியவளின் கழுத்தை வளைத்து அவள் இதழ்களை தன் அதரங்கள் கொண்டு மூடினான் ஆதித்யன்.

அவனை எதிர்த்து வாதம் புரியும் அவளுடைய இதழ்களை அடக்க எண்ணி முத்தமிட்டவன் அவளுடைய இதழ்களின் மென்மையில் தன் செயலின் அடிப்படைக் காரணத்தையே மறந்து போனான்.

அவனது கரங்களில் ஒன்று
அவளது கூந்தலினுள்
நுழைந்து அவளது
பின்னந்தலையை இறுகப்
பற்றிக் கொள்ள, அவனுடைய
மற்றைய கரமோ
அவளுடைய கழுத்து
வளைவை வருடத்
தொடங்கியது.

பெண்ணவளின் இதழ்களில்
மூழ்கி சுகவதை அடையலாம்
என்பதை அக்கணம்
உணர்ந்தான் அந்த ஆண்மகன்.

முதலில் திகைத்தவள் அடுத்த கணமே அவனுடைய பிடியில் இருந்து விடுபட முயன்றாள்.

அவளுடைய திணறலை
அடக்கி அவளுடைய செவ்
இதழ்களை விழுங்கி,
அவளுள் கரைந்து கொண்டே
போனவனின் தலை முடியை
பிடித்து இழுத்தான் யஷ்விந்த்.

“ப்பாஆ எனக்கும் கிஸ்
வ்வேணும்.” என்ற யஷ்வியின்

குரலில் இருவருக்கும்
தூக்கிவாரிப் போட்டது.

சட்டென அவளை விட்டு
விலகி நேராக அமர்ந்தவன்
கட்டுப்பாடின்றி அலைபாய்ந்த
உணர்வுகளை அடக்கத்
தெரியாது தன் தலைக்
கேசத்தை அழுந்தக்
கோதினான்.

“ப்பாஆ....”

“ம்மாஆ....” என இருவரையும் மாறி மாறி அழைத்தவன் பின் பக்கத்தில் இருந்து முன் பக்கத்திற்கு வந்து தன்மயாவின் மடியில் அமர, சட்டென அவனைத் தூக்கி தன் மடியில் அமர்த்திக் கொண்டான் ஆதி.

“நோ கண்ணா. அம்மாவோட வயித்துக்குள்ள குட்டி பாப்பா இருக்கு. அம்மாக்கு வலிக்கும். நீ என்கூட இரு.”

“அதெல்லாம் எனக்கு வலிக்காது. நீ அம்மாகிட்ட வா யஷ்வி” என அழைத்தாள் தன்மயா.

“நீ அப்பா கூடவே இருடா. நாம கார் ட்ரைவ் பண்ணுவோம்.” என ஆசை காட்டி அவனைத் தன் மடியிலேயே அமர்த்தியவன் காரை ஸ்டார்ட் செய்தான்.

“குயின்.”

“என்ன.?”

“ஏய் என்கிட்ட அதட்டிப் பேசாதடி.” அவன் குரல் சடுதியில் மாறியது.

“என்னன்னுதானே கேட்டேன். அதுவும் குத்தமா.?” சலித்துக் கொண்டாள் அவள்.

“திமிர்.” என பல்லைக் கடித்தவன் ஒரு பிரம்மாண்டமான நகைக்

கடையின் முன்னே
வண்டியை நிறுத்தினான்.

“உள்ளே வர்றியா.? உனக்கு
என்ன ஜ்வல் பிடிக்கும்.”

“எனக்கு இதெல்லாம்
வ்வேணாம்.” என்றவள்
யஷ்வியுடன் பேசத்
தொடங்கினாள்.

அவனோ காரை விட்டு
இறங்கியவன் நேரே நகைக்
கடையினுள் நுழைந்து
தனக்கு தேவையானவற்றை

வாங்கிக் கொண்டு மீண்டும்
காருக்கு வந்தான்.

இறுக்கமான முகத்துடன்
வந்தவன் காரினுள் இருந்த
இருவரையும் கண்டதும் தன்
இறுக்கத்தை தொலைத்தான்.
யஷ்விந்தின் சேட்டையில்
அவன் இதழ்கள்
புன்னகையைக் கூட
வெளிப்படுத்தின.

சற்று நேரத்தில் வீடு வந்ததும்
அவர்களை உள்ளே

அனுப்பியவன் தன் காரை
எடுத்துக் கொண்டு மீண்டும்
வெளியே கிளம்ப
எத்தணித்தான்.

காருக்கு வெளியே
யஷ்விந்தோடு நின்றவளோ
“ஆதீஈஈஈஈ.” என அவசரமாக
அழைத்தாள்.

“சொல்லு.”

“அந்த நர்ஸ்ஸை ஒன்னும்
பண்ணிராதீங்க ப்ளீஸ்.”

“சரி. நீ உள்ள போ.”
என்றவனின் அழுத்தமான
குரலில் யஷ்வியை
அழைத்துக் கொண்டு உள்ளே
சென்றாள் அவள்.

தன்னுடைய அறைக்குள்
நுழைந்தவளுக்கு
வாழ்க்கையே வெறுமையாகிப்
போனதைப் போல இருந்தது.

சற்று நேரம் விளையாடிக்
கொண்டிருந்த யஷ்விந்தோ

அப்படியே தரையில் உறங்கி விட, அவனைத் தூக்கி படுக்கையில் கிடத்தியவள் சோபாவில் அமர்ந்தாள்.

கிட்டத்தட்ட ஆறு மாதங்களுக்கு மேலாக இந்த வீட்டில் இருப்பவளுக்கோ சீக்கிரமே இந்த இடத்தை விட்டு செல்ல வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது.

தன் ஆடையை மாற்றி விட்டு வந்தவள் அருகே இருந்த

கவினுடைய அறையைப்
பார்த்து அப்படியே நின்றாள்.
முன்பு அடிக்கடி
திறந்திருக்கும் அறை
இப்போதெல்லாம் பூட்டியே
இருந்தது.

தன்னைத் திடப்படுத்திக்
கொண்டு அந்த அறையினுள்
நுழைந்தவள் அங்கே அடுக்கி
வைக்கப்பட்டிருந்த வித
விதமான ஷர்ட்களைப்
பார்த்து கசப்பாய்
புன்னகைத்தாள்.

“ஆதிக்கு ஷர்ட் பிடிக்காது. கவினுக்கு டீஷர்ட் பிடிக்காது.” என அவளுடைய இதழ்கள் மெல்ல முணுமுணுத்தன.

அங்கிருந்த ஓயிட் போர்ட்டை பார்த்தவள் அதில் இருந்த சித்துவின் கையெழுத்து மற்றும் கவினுடைய கையெழுத்தைப் பார்த்தாள். அன்று ஆதி தன் இடையில் கையெழுத்திட்டதை எண்ணி இன்றும் அவள் உடல் சிலிர்த்தது.

‘எல்லாரையும் விட என் ஆதியோட ஹேன்ட் ரைட்டிங் ரொம்ப அழகு.’ என மனதினுள் நினைத்தவள் திடுக்கிட்டாள்.

‘ஐயோ நான் என்ன பண்ணிகிட்டு இருக்கேன்.? என் ஆதின்னா சொன்னேன். சே....! இது எல்லாமே அவனோட நடிப்பு. என்னைத் திட்டம் போட்டு ஏமாத்திருக்கான். நம்ப வெச்சு கழுத்தறுத்திருக்கான். இப்படிப்பட்டவன் எப்படி

என்னோட ஆதியா இருக்க முடியும்....?' என எண்ணியவளுக்கு அழுகையே மிஞ்சியது.

கன்னத்தில் வழிந்த கண்ணீரைக் கூட துடைக்காது அந்த அறையினுள்ளே நின்றவளின் தோளில் கரம் பதித்தான் ஆதி.

அந்த அழுத்தமான தொடுகையில் ஆதியை உணர்ந்தவள் அவனைத்

திரும்பியும் பாராது ஒயிட் போர்ட்டை வெறித்தபடியே நின்றாள்.

அவனுடைய கரத்தை தட்டி விட்டவள் விலகி நின்றாள்.

“என்ன குயின் இந்த ரூம்குள்ள வந்திருக்க.? மலரும் நினைவுகளா.?” என கிண்டலாகக் கேட்டான் ஆதி.

“இந்த வீட்ல இருக்கிற எல்லா நினைவுகளுமே நரகம்

மாதிரிதான் இருக்கு ஆதி.
நினைச்சாலே கசக்குது.”

“பட் கவினுடைய நினைவுகள்
நினைத்தாலே இனிக்குமே.
அம் ஐ ரைட்.?”

“ஷட் அப் ஆதி.” எனச்
சீறியவள் அங்கிருந்து
வெளியேற முயல, அவளை
வெளியே செல்ல விடாமற்
தடுத்தவன் அவளைச் சுற்றி
வந்து அந்த ஓயிட் போர்ட்டில்
தன் கையெழுத்தை

அவளுடைய பெயருக்கு
அருகில் வைத்தான்.

“திஸ் இஸ் மை ஒரிஜினல்
ஹேன்ட் ரைட்டிங்.” என்றான்.

“இது மட்டும் உண்மையா
இருக்கும்னு எப்படி நம்புறது.?
எனக்கு உன் மேல கொஞ்சம்
கூட நம்பிக்கையே இல்ல
ஆதி. நீ எப்போ
வேணும்னாலும் எப்படி
வேணும்னாலும் மாறுவ. ஐ
டோன்ட் ட்ரஸ்ட் யு.”

“இஸ் இட்....?” என்றவாறு சிரித்தவன் தன் இரு தோள்களையும் அலட்சியமாக குலுக்கி “ஐ டோன்ட் கெயார் அபௌட் தட்.” என்றான்.

தன் முகத்தை திருப்பிக் கொண்டாள் தன்மயா.

“ஹேய் நான் நினைச்சது ஒன்னு. ஆனா நடந்தது ஒன்னுடி.”

“என்னது.? எனக்குப் புரியலை.”

“என்னோட ஒரிஜினல் கேரக்டர் ஆதிதான். கவினை நான் நல்லவனா கிரியேட் பண்ணினேன். என்னை மாதிரி இல்லாம ரொம்ப ரொம்ப நல்லவனா உருகி உருகி காதலிக்கிறவனா அவனை படைச்சேன். நீ கண்டிப்பா கவினைத்தான் லவ் பண்ணுன்னு நினைச்சேன். ப்ச் பட் இந்த டெரர் ஆதியை லவ் பண்ணுவன்னு நான்

நினைச்சுக் கூடப் பார்க்கலை.” என்றான் ஆதி.

“.....”

“பொண்ணுங்களுக்கு நல்லவனா இருந்தா பிடிக்காதாமே அப்படியா.?”

“ரப்பிஷ்.” சிடுசிடுத்தாள் தன்மயா. அவள் குரலோ கலங்கிப் போனது.

“அப்போ ஏன் உனக்கு கவினை பிடிக்கலை.?”

“யார் சொன்னா எனக்கு கவினைப் பிடிக்காதுன்னு.?”

“ஐ க்நோ குயின். உனக்கு ஆதியைத்தான் பிடிக்கும். உனக்கு என்னை மட்டும்தான் பிடிக்கும்.”

“நோஓஓஓ.... ஐ ஹேட் யு. ஐ ஹேட் யு ஆதி. எனக்கு கவினைத்தான் பிடிக்கும். எனக்கு கவினை மட்டும்தான் பிடிக்கும்” என

வேண்டுமென்றே பொய் கூறினாள் அவள்.

“வாட்....? அப்போ எதுக்கு என்னை லவ் பண்ணின.?”

“நான் ஒன்னும் உன்னை லவ் பண்ணலை ஆதி.”

“அப்போ... அந்த நிஜம் இல்லாத கவினையா லவ் பண்ணின.?” அவனது குரல் பொறுமை இழந்து ஓங்கி ஒலித்தது.

“எஸ்.... எஸ்.... எஸ்.... ஐ லைக் கவின். ஐ லவ் கவின். ஐ லவ் ஹிம். ஐ லவ் ஹிம் சோ மச்.” என அவனுடைய கண்களைப் பார்த்துக் கொண்டே கூறியவளின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான் ஆதி.

அவன் உடலோ தாங்க முடியாத சினத்தில் நடுங்கத் தொடங்கியது.

“அம்மாஆஆ....” என அலறியவள் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நிற்க முடியாமல் தடுமாற, அவளது

இரு தோள்களையும் வலிக்கும்படி இறுகப் பற்றி அவளை நிலைப் படுத்தியவன் “நீ என்னைத் தவிர வேற எவனையும் லவ் பண்ண கூடாது.” என எச்சரித்தான்.

முதல் முறையாக ஆதியின் உடல் நடுக்கத்தையும் விழிகள் நிலையின்றி அலைபாய்வதையும் அவதானித்தவளது கன்னத்து வலி கூட மறைந்து போனது.

அவனது குரலோ சற்றே நடுக்கத்தோடு வெளிவர, தன்மயாவின் இதழ்களோ இகழ்ச்சியாக வளைந்தன.

அவன் அடித்த கன்னம் தீப் பிடித்தாற் போல எரிந்து கொண்டிருந்தது. அதனை சற்றும் பொருட்படுத்தாது மேலும் அவனை நெருங்கி வந்தவள் “ஐ லவ் கவின்.” என மீண்டும் கூறினாள்.

“ஏய்ய்ய்....” எனக் கர்ஜித்தவாறு அவளது முகத்தை இறுகப் பற்றி தன் முகம் நோக்கி உயர்த்தியவன் “உன்னைக் கொன்னு புதைச்சிருவேன்டி.” என உறுமினான்.

“நீங்க என்ன பண்ணினாலும் உண்மையை மறைக்க முடியாது ஆதி. நான் கவினைத்தான் காதலிக்கிறேன். அவன் நிஜம் இல்லைன்னாலும் கூட என்னோட காதல் அவனுக்கு மட்டும்தான்.” என்றவளை

சட்டென கீழே தள்ளிவிட்டான் ஆதி.

“ஐயோஓஓ....” எனப் பதறியவள் கீழே விழும் முன்னரே அவளைத் தாங்கியவன் அவளுடைய வெண்ணிற கழுத்தில் தன் இரும்புக் கரத்தை அழுத்தமாக பதித்து இறுக்கினான்.

அவனது அழுத்தமான பிடியில் அவளுடைய கழுத்து

எலும்புகள் ஒவ்வொன்றாக உடைவதைப் போல இருந்தது.

தாங்க முடியாத வலியில் அவள் கண்களின் நின்றும் கண்ணீர் கொட்டியது. வலியில் துடித்தவள் அவன் மார்பிலே தன் மெல்லிய கரங்களால் அடிக்கத் தொடங்கினாள்.

அத்தனை வலியிலும் அவனைக் காயப்படுத்த எண்ணியவள் திக்கித் திணறி “ஐ.... ஐ.... ல....வ் கவின்....”

என்றவாறு கண்ணீர் வழிந்த கண்களோடு அவள் கூறி முடிக்க, ஆதியின் கண்கள் சிவந்து போயின.

அவனுடைய மூக்கில் இருந்து உதிரம் வழியத் தொடங்க, அவளை விடுவித்தான் ஆதி.

அவனது பிடியில் இருந்து விடுபட்டவள் தொப்பென தரையில் அமர்ந்து தொடர்ந்து இருமத் தொடங்கினாள். நா

உலர்ந்து தொண்டை வரண்டு போனது அவளுக்கு.

கண்களில் நீர் நிறைந்து ஆறு போல் நிற்காமல் ஓட, அவளின் முன் மண்டியிட்டு அமர்ந்தவன் அவளுக்கு பருகுவதற்கு தண்ணீரைக் கொடுத்தான்.

சட்டென வாங்கி அந்த கிளாஸில் இருந்த தண்ணீர் முழுவதையும் குடித்து

முடித்தவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

பார்த்த கணம் ஆடித்தான் போனாள். அவன் மூக்கில் இருந்து வழிந்த உதிரம் அவளை விதிர்விதிர்க்கச் செய்தது.

உள்ளம் நடுங்கிப் போக, தன் கரத்தில் இருந்த கிளாஸை தவற விட்டாள் தன்மயா.

அவன் உதிரத்தை துடைக்க உயர்ந்த கரத்தை சிரமப்பட்டு அடக்கியவள் தன் பார்வையை தழைத்துக் கொண்டாள்.

‘என்னை எப்படிக் கதற விட்டான்.

உடலாலையும் மனசாலையும் எவ்வளவு டார்ச்சர் பண்ணிருப்பான்.

கொஞ்சமாவது என் மேல இரக்கப்பட்டானா.? எத்தனை நாள் நான் துடிச்சிருப்பேன்.?’

என எண்ணி தன் பார்வையை திருப்பிக் கொண்டாள் அவள்.

அவளது வதனத்தை இறுகப் பற்றி தன் முகத்தைப் பார்க்கச் செய்தவன் “வ்வேணாம் குயின். நான் ரொம்ப ரொம்ப கெட்டவன். என்னை கோபப் படுத்திப் பார்க்கிறது உனக்கு நல்லது இல்ல.” என்றவன் தன் புறங்கையால் வழிந்த உதிரத்தை அழுத்தி துடைத்துக் கொண்டான்.

“எ.... என்....ன பண்ணுவீங்க.?” எனத் திணறியவளின் முகத்தருகே நெருங்கியவன் “சத்தியமா கொன்னுருவேன்டி.” என அழுத்தமான குரலில் கூற, அவள் உடலோ சில்லிட்டுப் போனது.

அதிர்ந்து நடுங்கிப் போய் நின்றவளின் கரத்தைப் பிடித்து எழுப்பியவன் “இன்னைக்கு நைட் பன்னிரண்டு மணிக்கு நமக்கு கல்யாணம். தாலி வாங்கிட்டேன். தூங்கிராத. இன்னைக்கு நைட் உனக்கு

நிறைய சர்ப்ரைஸ் இருக்கு.” என்றவாறு அவளுடைய கன்னத்தில் தட்டியவன் எழுந்து சென்றுவிட, அவளோ உறைந்துபோய் அசையாது அவ்விடத்திலேயே சிலையாகச் சமைந்து போனாள்.

நள்ளிரவில் கூட திருமணம் நடக்குமா....?

ஆதித்யன் எனும் டெவிலுக்கு சர்வ நிச்சயமாக நடக்கும்.

ஆதித்யன் கூறிய வார்த்தைகளில் அவளுக்கோ உடல் தூக்கிவாரிப் போட்டது.

ஆதிக்கும் தனக்கும் திருமணம் என்பதை நினைத்து திகைப்பதா.?

இல்லை நள்ளிரவில் நடக்கும் திருமணம் என்பதை நினைத்து திகைப்பதா....?

மொத்தத்தில் குழம்பிப் போய் நின்றாள் தன்மயா.

அவளுடைய அதிர்ந்த தோற்றத்தை சற்றும் பொருட்படுத்தாது அந்த அறையின் மேஜை மீது இருந்த டிஷ்யூவை எடுத்தவன் அவன் மூக்கில் வழிந்து காய்ந்து போயிருந்த உதிரத்தை கண்ணாடியின் முன்பு நின்று துடைக்கத் தொடங்கினான்.

அவனோ மிக நிதானமாக நிற்பதைப் போலத் தெரிந்தாலும் அவனுடைய கரத்தின் நடுக்கமோ அவன்

இயல்பாக இல்லை என்பதை அவளுக்கு புலப்படுத்தியது.

தன் தடுமாற்றத்தை மறைத்து முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றவன் கண்ணாடியில் தெரிந்த அவளுடைய விம்பத்தை இமை சிமிட்டாது வெறித்தான்.

அவன் தன்னைத்தான் கண்ணாடியினூடாக வெறிக்கின்றான் என்பதனை உணர்ந்து கொண்டவளுக்கு

இதயம் தொண்டைக் குழிக்குள் வந்து துடிக்கத் தொடங்கியது.

சட்டென தன் பார்வையைத் திருப்பிக் கொண்டவள் அந்த அறையை விட்டு வேகமாக வெளியேறினாள்.

அவனோ அவளை விட வேகமாக அவளைப் பின் தொடர்ந்து வந்தவன் அவளுடைய மெல்லிய கரத்தை இறுகப் பற்றி இழுத்துக் கொண்டு மீண்டும்

அதே அறையினுள் அவளைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

“எ.... எ....ன்....ன? என்ன....?” என வார்த்தைகள் தந்தியடிக்க திணறியவாறு விழித்தவளின் வதனத்தை ஆழ்ந்து நோக்கினான் ஆதி.

அந்தப் பார்வையை எதிர் கொண்டவளுக்கு உள்ளம் பதறித் துடித்தது. அவளது வெண்டைப் பிஞ்சு விரல்கள் நடுங்கத் தொடங்கின.

‘ஐயோ இது என்ன மாதிரியான பார்வை.?’

அந்தப் பார்வையில் என்னதான் வெளிப்பட்டது.?

காதலா….?

மோகமா….?

விருப்பா….?

வெறுப்பா....?

சீற்றமா....?

அவனுடைய விசித்திரமான பார்வையில் அவள் உடலின் செல்கள் யாவும் செயல் இழந்து போக, அச்சத்தில் அவனைத் தள்ளி விட்டவள் தன் கரங்களால் தன் முகத்தை மூடிக் கொண்டு கதறத் தொடங்கினாள்.

“ப்ளீஸ் இங்க இருந்து போ.... போங்க.... போயிருங்க.... ஏன் இப்படி பார்க்கிறீங்க ஆதி.? எ.... எனக்கு பயம்மா இருக்கு. இங்க இருந்து போயிருங்க ப்ளீஸ்....” என அலறியவள் கண்களைத் திறந்து பார்க்கும் போது அந்த இடமே வெறுமையாக இருந்தது.

சட்டென திரும்பி வாயிலைப் பார்த்தவள் அவன் நடந்து சென்று கொண்டிருப்பதைக் கண்டு நிம்மதி பெருமூச்சு விட்டாள்.

தன் கரங்களால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டவளின் உடலோ சோர்ந்து போனது. மெல்ல தரையில் அமர்ந்து சுவற்றோடு சாய்ந்து கொண்டாள் மாது

பெரிய பெரிய மூச்சுக்களை விட்டு தன்னை சமப் படுத்திக் கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டிருந்தாள் அவள்.

சற்று நேரம் கழித்து மீண்டும் ஆதியின் அழுத்தமான காலடி

ஓசை அவளுடைய செவிப் பறையைத் தீண்ட, அவளுக்கோ மீண்டும் அச்சத்தில் உடல் உறையத் தொடங்கியது.

அவனைப் பார்க்காது தன் முழங்கால்களில் முகத்தை புதைத்துக் கொண்டவள் அப்படியே அசையாது இருந்தாள்.

சற்றுமுன் அவன் ஆடிய ருத்ர தாண்டவத்தை நேரில் கண்டு

அனுபவித்தவளுக்கு மீண்டும் அந்தக் கொடூரத்தை கண்டால் இதயம் அதிர்ச்சியில் தன் துடிப்பை நிறுத்தி விடும் என்பது புரிந்தே இருந்தது.

அவனோ அவளுக்கு அருகே தரையில் அமர்ந்தவன் “ஹேய் ட்ராமா குயின் ஆர் யு ஓக்கே.?” என சாதாரணமாக கேட்க, அவளுக்கோ தலை வெடித்து விடும் போல இருந்தது.

“லுக் அட் மீ குயின்.”

“ ”
.....

“ஏய்ய்ய்....” என அவன் கர்ஜிக்கவும் சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள் அவள்.

“லஞ்ச் டைம் ஆகிருச்சு குயின். யஷ்விக்கு சாப்பாடு ஊட்டி விட்டுட்டேன். நீயும் சாப்பிடு. டேப்ளட்ஸ் போடணும்.” என நிதானமாக கூறினான் ஆதி.

“நா…. நான் அப்புறமா சாப்பிடுறேன். பசிக்கலை.”

“நோ. டேப்ளட்ஸ் போடணும். சோ டைம்கு சாப்பிடு.” என்றவன் தட்டை அவளிடம் நீட்ட வேறு வழியின்றி அதனை வாங்கியவள் உண்ணத் தொடங்க, “ஹேய் வெயிட் ஹேண்ட் வாஷ் பண்ணுடி.” என்றதும் தட்டை வைத்துவிட்டு தன் கரங்களைக் கழுவியதோடு தன் முகத்தையும்

கழுவிவிட்டு வந்தாள் தன்மயா.

தண்ணீர் முகத்தில் பட்டதும் சற்றே தெளிவு பிறக்க, மீண்டும் அவனருகே வந்து அமர்ந்தவள் அமைதியாக அவன் கொடுத்த உணவை உண்ணத் தொடங்கினாள்.

அவள் உண்டு முடிக்கும் மட்டும் அவன் அவளை விடப் போவதில்லை என்பதை

அறிந்தவள் அமைதியாக அந்த உணவை உண்டு முடித்தாள்.

அவள் உண்டு முடித்த தட்டை வாங்கி அவளது கரங்களை கழுவி அவளுடைய இதழ்களைத் துடைத்து விட்டவன் தட்டோடு எழுந்து செல்ல, அவளோ அப்படியே தரையில் படுத்தே விட்டாள்.

“சத்தியமா என்னால முடியலை முருகா.” என

முணுமுணுத்தவள் அப்படியே கண்களை மூடிக் கொண்டாள்.

“குயின் தூங்கிட்டியா.? இந்த டேப்ளட்ஸைப் போடுடி.”

“ப்ச்.... வ்வேணாம் ஆதி. எனக்கு தூக்கம் தூக்கமா வருது.” என கொட்டாவி விட்டவளின் தலையில் தட்டி எழுப்பியவன் அவள் எழுந்து முறைக்கவும் அதனை அலட்சியப்படுத்தி விட்டு அவள் போட வேண்டிய

மாத்திரைகளை அவளுக்குக் கொடுத்து போட வைத்தான்.

மாத்திரைகளைப் போட்டு விட்டு மீண்டும் சோர்வாக கண்களை மூடியவளை பார்த்தவன் அவள் வயிற்றினுள் இருந்த தன் குழந்தையை பார்க்க நேயம் கொண்டான்.

அவளுடைய ஆடை விலக்கி அவளுடைய வெற்று வெண்ணிற வயிற்றில் முத்தம்

பதிக்கச் சொல்லி அவனுடைய அதரங்கள் ஏங்கித் தவித்தன.

சோர்வாக படுத்திருப்பவளை தொல்லை செய்ய வேண்டாம் என எண்ணியவன் அவளைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டான்.

அவளோ அதிர்ந்து கண்களைத் திறக்க, அவனோ அவளை படுக்கையில் கிடத்தி விட்டு அந்த அறையை விட்டே வெளியேறினான்.

அவன் அறையை விட்டு வெளியேறியதும் சுதந்திரக் காற்றை ஆழ்ந்து சுவாசித்தவள் எழுந்து சென்று யஷ்விந்தின் அறையில் அவனுக்கு அருகே துயில் கொள்ளத் தொடங்கினாள்.

ஆனால் தூக்கம் வராமல் சதி செய்ய, அவளுடைய எண்ணங்களை ஆதியே களவாடிக் கொண்டான்.

‘ஆதி நல்லவனா....? கெட்டவனா....?’ குழம்பித்தான் போனாள் அவள்.

‘ஏன் ஆதிக்கு அடிக்கடி நோஸ்ல ப்ளட் வருது.? அது உண்மையாவே ப்ளட்தானா.? இல்லைன்னா அதுவும் அவனோட நடிப்பா.?’ என தனக்குள் கேட்டுக் கொண்டவள் எழுந்து தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தாள்.

ஆதி ஓங்கி அறைந்ததன் விளைவாக அவளுடைய ஒரு பக்க கன்னம் வீங்கிப் போயிருந்தது.

“டெவில். என் பாவம் உன்னை சும்மா விடாதுடா.” என அவனைத் திட்டியவள் குனிந்து தன் மேடிட்ட வயிற்றைப் பார்த்தாள்.

ஆதியின் வாரிசு தனக்குள் என்ற உணர்வு அவளை ஆட்டிப் படைத்தது.

குழந்தை பிறந்ததும் அவனுடைய கரத்தில் கொடுத்து விட்டுச் செல்வது அவ்வளவு சுலபமான காரியமல்லவே.

அனைத்தையும் இழந்து விட்டு யாருமற்ற அநாதை போல என்னை அலைய வைப்பதுதான் அவனுடைய எண்ணமோ.?

‘நான் என்ன தப்பு பண்ணினேன்.? ஏன் எனக்கு

மட்டும் இவ்ளோ துன்பம்.?’ என எண்ணி வருந்தியவள் கதை புத்தகம் ஒன்றை எடுத்து படிக்கத் தொடங்கினாள்.

அந்த நாவலை படிக்க படிக்க அவளுடைய வலிகள் மறந்து போயின.

அந்த பெரிய நாவலை நீண்ட நேரமாக வாசித்துக் கொண்டிருந்தவள் யஷ்விந்த் அழைக்கவும் புத்தகத்தை வைத்து விட்டு அவனோடு

சற்று நேரம் விளையாடத் தொடங்கினாள்.

“ம்மாஆஆ.”

“என்னடா கண்ணா....?”

“ப்பாஆ எங்க....?”

“அதுஉஉ தெ... தெரியலையே.”

“ப்பாஆ வ்வேணும்.” என இதழ்களை பிதுக்கி அழத்

தொடங்கியவனை தன்னோடு அணைத்துக் கொண்டவள் “அப்போ உனக்கு அம்மா வேணாமா கண்ணா....?” என கலங்கிய குரலில் கேட்டாள்.

“ம்மாஆ , ப்பாஆஆ வ்வேணும்.” என இருவர் மீதும் தான் கொண்டுள்ள அன்பை தன் மழலை மொழியில் மிழற்றினான் சிறுவன்.

அவனைத் தூக்கிக் கொஞ்சி விளையாடியவள் ஆதி

கொடுத்து அனுப்பிய உணவை தானும் உண்டு யஷ்விக்கும் ஊட்டி விட்டாள்.

இரவு எட்டு மணிக்கே டான் என்று வந்து நிற்கும் ஆதி இன்னும் வீட்டிற்கு வராததை எண்ணி குழம்பியவள் ஒரு சிறு தோள் குலுக்கலோடு படுக்கையில் படுத்துக் கொண்டாள். ஆதி திருமணம் என்று கூறியதை அவள் பொருட்படுத்தவே இல்லை.

நேரம் 11.00pm.

பட்டு வேட்டி சட்டை அணிந்து கரத்தில் பியர் டின்னுடன் உள்ளே நுழைந்தான் ஆதி.

அவன் ஆட்டி வைக்கும் பொம்மையோ பஞ்சை ஒத்த மெத்தையில் ஆழ்ந்த நித்திரையின் வசத்தில் இருந்தது.

பியர் டின்னை சிந்தாமல் சிதறாமல் மேஜை ஒன்றின்

மீது வைத்தவன் தன்மயாவின் அருகே சென்று அவளுடைய கன்னத்தில் மென்மையாக தட்டினான்.

“ஹேய் குயின் கமான். எழுந்திரு.” என்றவனின் குரல் காதருகே ஒலிக்க திடுக்கிட்டு படுக்கையில் இருந்து எழுந்தமர்ந்தாள் தன்மயா.

“இப்போ எதுக்கு என்னை எழுப்பினீங்க.?”

“கல்யாணம் பண்ணிக்கலாம் வா.”

“வாட்.?” எனக் கத்தியவள் அதிர்ச்சியாக அவனைப் பார்த்தாள்.

“ப்ச்.... வாடி.” என்றவன் அவளுடைய கரத்தைப் பற்றி எழுப்ப, அவளுக்கோ அவனது செயலில் பைத்தியம் பிடிப்பதைப் போல இருந்தது.

“என்ன ஆதி விளையாடுறீங்களா.? பேசாம போய்த் தூங்குங்க.” எனச் சீறியவளின் கன்னத்தை வருடியவன் “கமான் குயின் டைம் ஆகுது பார்.” என்றான்.

தலையில் கை வைத்தபடி படுக்கையில் தொப்பென அமர்ந்தாள் மாது.

பின்னே நள்ளிரவில் வந்து துயின்று
கொண்டிருந்தவளினை தட்டி

எழுப்பி ‘வா கல்யாணம் பண்ணிக்கலாம்னு’ அழைத்தால் அந்தப் பெண்ணின் மனநிலை எப்படி இருக்கும்.?

தன்மயாவிற்கோ அவனைக் கன்னம் கன்னமாக அறைந்து தள்ள வேண்டும் போல இருந்தது. ஐயோ என்று அலற வேண்டும் போல இருந்தது.

பைத்தியமாடா நீ எனக் கத்த வேண்டும் போல இருந்தது. சிரமப்பட்டு தன்னை அடக்கிக்

கொண்டவள் அவனுடைய முகத்தைப் பார்த்தாள்.

அவனோ வெண்ணிற பட்டு வேட்டி அணிந்து மாப்பிள்ளை போல தயாராகி நிற்க, அவளுக்கோ பொறுமை பறந்தது.

“டேய் லூசாடா நீ...? சைக்கோவா நீ.? எவனாவது மிட் நைட்ல வெடிங் பண்ணுவானா.? எதுக்குடா பாவி இப்படி என்னை டார்ச்சர்

பண்ற.? ச்சை.” என தன் தலையில் அடித்துக் கொண்டவாறு கத்தினாள் அவள்.

அவனோ அவள் காதருகே குனிந்தவன் “வார்த்தையை அளந்து பேசு குயின். இல்லைன்னா இந்தப் பக்கம் இருக்கிற காது வெடிக்கும். செவிடு திரும்பிரும். முகம் வீங்கிப் போயிரும்.” என எச்சரிக்கை செய்தான் அவன்.

ஐயொவென்றானது அவளுக்கு. என்ன மனிதன் இவன்.? இவன்

நிஜத்தில் மனிதன்தானா என்ற சந்தேகமே வந்துவிட்டது அவளுக்கு.

“ஏய் உனக்கு ஒரு தடவை சொன்னா புரியாதா.? வா.” என உறுமியவன் அவளுடைய கரத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு இன்னொரு அறைக்குள் நுழைந்தான்.

“ஆஆஆஆ வ்விடுடாஆ விடு சே... வ்விடு.” என கையை உதறியவளை இழுத்து வந்து

நிறுத்தியவன் ஊதா வண்ண பட்டுப் புடவையை அவளுடைய கரத்தில் திணித்தான்.

“போய் கட்டிட்டு வா.”

“ஆ.... ஆதி....!!????”

“நீ கட்டுறியா இல்லை நானே கட்டி விடட்டுமா.?” என்றவனை தள்ளி விட்டாள் தன்மயா.

“நாம எதுக்கு கல்யாணம் பண்ணிக்கணும்.? நாமதான் இன்னும் அஞ்சு மாசத்துல பிரியப் போறோம்ல பிறகு என்ன மன்னாங்கட்டிக்கு இந்த கல்யாணம்.?” என வெடித்தாள் அவள்.

“என் குழந்தையோட அம்மாவை கண்டவளும் தப்பா பேசக் கூடாது. இன்னைக்கு அந்த நர்ஸ் பேசிய மாதிரி இனி எவளும் வார்த்தையை விடக் கூடாது.” என்றான் அவன்.

“ஐயோ ராமா தேவையே இல்லை. என்னைத் தானே தப்பாப் பேசுறாங்க. பேசட்டும். என்னால உன்னை மாதிரி ஒரு சைக்கோவை கல்யாணம் பண்ணிக்கவே முடியாது. ப்ளீஸ் லீவ் மீ அலோன்.” எனச் சீறியவளை இழுத்து வந்தவன் மளமளவென அவளுடைய ஆடைகளை களையத் தொடங்கினான்.

“ஆதீஈஈஈஈஈ.....” என அலறியவள் அவனது

அத்துமீறலில் விக்கித்துப் போனாள்.

எல்லை மீறிய அவனுடைய கரங்களை வெறுப்போடு தட்டி விட்டவள் அவனுடைய கரங்களில் இருந்த புடவையை பறித்து எடுத்தாள்.

அழுகையோடு தன் அங்கம் மூடியவாறு வேறு ஒரு அறைக்குள் புகுந்தவள் தன் ஆடையைக் களைந்து அந்தப் புடவையை ஏனோ தானோ என்று தன் உடலில் சுற்றிக் கொண்டாள்.

அழகான ஊதா வண்ண சேலையோ எந்த மடிப்புக்களும் இன்றி கந்தல் துணியைப் போல அவள் உடலில் சுற்றப்பட்டது. சேலையை உடுத்தாது போர்வை போல சுற்றிக் கொண்டவள் தலை விரி கோலமாக வெளியே வந்தாள்.

“வாவ் ட்ராமா குயின். ரொம்ப க்யூட்டா இருக்க.” என்றவாறு அவளுடைய கரத்தைப் பற்றி கண்ணாடி மேசையின் முன்

அவளை அமர வைத்தவன் அவளுக்கு வாங்கிய ஆபரணங்களை அணிவிக்கத் தொடங்கினான்.

அவளுக்கோ மூச்சு முட்டுவதைப் போல இருந்தது.

அவளுடைய அழுது சிவந்த முகத்தை அழுந்தத் துடைத்து அவளுடைய இதழ்களுக்கு உதட்டுச் சாயம் பூசி விட்டவன் அவளுடைய கன்னத்தில்

திருஷ்டிப் பொட்டும் வைத்து விட்டான்.

கலைந்த கூந்தலை ஒழுங்கு படுத்தியவன் அவளை எழுப்பி அவளது கரத்தைப் பற்றியவாறு அவளை மொட்டை மாடி நோக்கி நடத்திச் சென்றான்.

உயிரற்ற பொம்மையாய் அவனது பிடியில் இழுத்துச் செல்லப்பட்டாள் அந்த பூமரப் பாவை.

“பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் மிகப் பீழை இருக்குதடி தங்கமே தங்கம்” என்ற பாரதியின் வரிகள் அழையாத விருந்தாளியாக தன்மயாவின் மனதினுள் அந்நொடி புகுந்து கொண்டன.

இருபத்தொரு வயதே நிரம்பிய இக் காரிகைக்கு திருமணம் எனும் பந்தம் மிகப் புனிதமான ஒன்றாக இருக்கையில் அவ் எண்ணத்தை தகர்த்தி விட்டு ஏனோ தானோ என திருமண

ஏற்பாடுகளை செய்து வைத்திருந்தான் ஆதி.

திருமணம் என்பது ஆயிரக்காலத்துப் பயிர் அல்லவா?

பந்தல்கால் நடுதல், பெண், மாப்பிள்ளை அழைப்பு, நிச்சயதார்த்தம், பொன் உருக்குதல், பத்திரிகை வாசித்தல், கன்னிகா தானம் செய்தல், சுபமுகூர்த்தம் பார்த்தல், அம்மி மிதித்தல்,

அருந்ததி பார்த்தல், ஏழடி வலம் வருதல் என எத்தனை எத்தனை சடங்குகள். எத்தனை எத்தனை சம்பிரதாயங்கள் திருமணத்தில் உள்ளன.

இவை ஏதும் இன்றி நள்ளிரவில் அதுவும் அவள் எஞ்ஞான்றும் வெறுத்து ஒதுக்கும் ஆண் மகனுடன் திருமணம் எனும் போது அவளுடைய மன நிலை எப்படி இருக்கும்.?

அந்த நொடியே இந்த இடத்தை விட்டு கண் காணாத இடம் நோக்கி ஓட வேண்டும் போல இருந்தது அவளுக்கு.

அவளுடைய எண்ணங்கள் பற்றி எதுவும் அறியாதவன் அவளுடைய கரத்தைப் பற்றி இழுத்துக் கொண்டு படிகளில் ஏறினான்.

புயலில் இழுபட்டுச் செல்லும் சிறு பூங்கொடி போல தள்ளாடியவாறு அவன்

பின்னே சென்றாள் அந்த அழகி.

அந்த மொட்டை மாடியில் ஏறியதும் அவளுடைய விழிகள் விரிந்தன.

அந்த மொட்டைமாடி எங்கும் விஸ்டேரியா எனும் அடுக்கடுக்கான அழகான மலர்க் கொடிகள், வெளிர் ஊதா நிறத்திலும் வெண்ணிற நிறத்திலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அந்த அழகிய விஸ்டேரியா மலர்க் கொடிகளை இன்னும் அழகு படுத்தும் வகையில் அடர் ஊதா நிற ஃபோகஸ் லைட்கள் அந்த கொடிகளின் பின்னே பொருத்தப்பட்டு அந்த இடமே ஏதோ ஓர் பூ வனத்திற்குள் நுழைந்ததைப் போல அவளை உணர வைத்தது.

“வெல்கம் மை டியர் ட்ராமா குயின்.” என இடை வரை குனிந்து அவளை

வரவேற்றவன் மீண்டும் அவளது கரத்தைப் பற்றி அழைத்துக் கொண்டு நடக்கத் தொடங்க, சடசடவென்ற சத்தத்தோடு சிறிய சிறிய அலங்கார விளக்குகள் அந்த இடம் முழுதும் பிரகாசமாகவும் பல வண்ண நிறங்களிலும் ஜொலிக்கத் தொடங்கின.

அவளுடைய பாதங்கள் மென்மையான தரையை உணர தன் பார்வையை

தரையை நோக்கித் திருப்பினாள்.

கீழே சிவப்பு நிற ரோஜாக்களின் இதழ்கள் அவள் நடந்து வரும் பாதைக்கு சிவப்பு கம்பளமாக மாறிப் போயிருந்தது.

“அச்சச்சோ....” என துள்ளி அந்த இதழ்களை மிதிக்காது தரையில் கால் பதித்து நின்றவளை கேள்வியாக பார்த்தான் ஆதி.

“இந்த ரோஜா இதழ் எல்லாம் பாவம் இ.... இல்லையா.? இதை மிதிச்சு நடக்க எனக்கு பி.... பிடிக்கலை. என்னை கஷ்டப்படுத்தியது போதாதுன்னு இந்தப் பூவையும் எதுக்கு ஹர்ட் பண்றீங்க.?” என அழுகுரலில் கேட்டாள் அந்த மெல்லிய மனம் கொண்ட கொடியிடையாள்.

“ட்ராமா பண்ண ஆரம்பிச்சிட்டியா குயின்.? என்

மூடை மாத்தாம வா.” என்றவாறு மீண்டும் அவளுடைய கரத்தைப் பற்றி அழைத்துச் சென்றான்.

இல்லை இல்லை இழுத்துச் சென்றான்.

அழகிய இயற்கை தாவரங்களினால் அழகுற அமைக்கப்பட்டிருந்த மண மேடையில் அவளை அமர்த்தியவன் அவளுக்கு அருகே தானும் அமர்ந்து கொண்டான்.

அந்த நள்ளிரவு நேர திருமணத்திற்கு சாட்சியாக குளிர்மையை பரப்பி தீயாய் தகித்துக் கொண்டிருந்த அவளுடைய உள்ளத்தை சாந்தப் படுத்த முயன்று தோற்றுக் கொண்டிருந்தது பால் நிலா.

அவளுக்கு முன்னே ஓம குண்டம் அமைக்கப்பட்டிருக்க, அதனை பார்த்த கணம் சரேலென வழிந்தது கண்ணீர்.

“வ்வேணாம் ஆதி. ப்ளீஸ்.... இப்படி வேணாம். இது கல்யாணமே இல்ல.” என அழுதவளை அலட்சியமாக பார்த்தவன் “எனக்கு இதுதான் கல்யாணம்.” என்றான்.

அவனோ தனக்குப் பின் பக்கமாக இருந்த ரிமோட்டை எடுத்து எதையோ அழுத்த அடுத்த நொடியே மேள, தாள இசை அங்கே சங்கீதமாக முழங்கத் தொடங்கின.

அந்தனரின் மந்திரம் கூட மியூசிக் பிளேயரில் துல்லியமாக ஒலிக்க தன்மயாவோ ஆடித்தான் போனாள்.

இப்படி ஒரு திருமணத்தை அவள் திரைப் படங்களில் கூட கண்டது இல்லையே.

நள்ளிரவு நேர கூதல் காற்று உடலைத் துளைக்க, தன் கரங்களை தன் உடலுக்கு குறுக்காக சுற்றிப் போட்டவள் முழங்கால்களில் முகத்தைப்

புதைத்துக் கொண்டு கதறி அழத் தொடங்கினாள்.

எந்தப் பெண்ணால்தான் பிடிக்காத ஒருவனை கணவனாக ஏற்க முடியும்.? வேத காலத்தில் இருந்த எட்டு வகையான திருமண முறைகளை பற்றி தெரிந்து வைத்திருந்தவளுக்கு ஆதியின் திருமண முறையோ மூச்சடைக்க வைத்தது.

தோளில் இருந்து வழிந்த பட்டுப் புடவையை சட்டென கரத்தால் பிடித்துக் கொண்டவள் மீண்டும் தன் மேல் அதனை போர்த்திக் கொண்டாள்.

“புடவையை கட்டச் சொல்லித்தானே கொடுத்தேன். பெட்சீட் மாதிரி போர்த்திகிட்டு வந்திருக்க.?” என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் “என்னை விட்ரு ஆதி ப்ளீஸ்.” என்றாள்.

அவனோ அவளை நெருங்கியவன் அவளுடைய கன்னத்தில் தன் பெரு விரலால் வருடினான்.

அவளோ அவனுடைய கரத்தை தட்டி விட்டாள்.

“கல்யாணம்னா என்னன்னு தெரியுமா ஆதி.?”

“நல்லாவே தெரியுமே குயின்.”

“கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிர்.”

“மன்னாங்கட்டி. எங்க அம்மா அப்பாவோட கல்யாணம் இருபது வருஷம் கூட நிலைக்கலை.”

“ஐயோஓஓ சரி. சரி. கல்யாணத்தை விடுங்க. பிடிக்காத ஒருத்தரை எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்.? முதல்ல நாம எதுக்காக கல்யாணம்

பண்ணிக்கணும்.? நாம இப்போ வரைக்கும் ஒன்னா இருக்கிறதுக்கு காரணமே என் வயித்துல வளர்ற உன்னோட குழந்தைக்காக மட்டும்தான்.

இதை உன் கைல கொடுத்திட்டு நான் எங்கேயாவது போய்த் தொலைஞ்சிருவேன் ஆதி.” என அழுகுரலில் கூறி முடித்தாள்.

“உன்னை கழுத்தை பிடிச்சு வெளியே தள்ளணும்னு ஆசை பட்டேன் குயின். பட் அதுக்கு

சான்ஸ் கிடைக்காது போலயே.” என சிரித்தவனை அடியோடு வெறுத்தாள் தன்மயா.

“சே நீ மனுஷனே கிடையாது. இரக்கமே இல்லாத மிருகம். டெவில்.” என திட்டியவளுக்கு தலை சுற்றுவதைப் போல இருந்தது.

“ப்ச்.... டைம் டுவெல் ஆகப் போகுது. கல்யாணம் பண்ணி முடிச்சப் பிறகு சண்டை போட்டுக்கலாம் குயின்.” என்றவன் விஸ்டேரியா

மலர்களால் கட்டப்பட்ட அழகிய மாலையை அவளுடைய கழுத்தில் அணிவித்தான்.

அவனது விரல்கள் அவளுடைய கழுத்தை தீண்டி விட்டு மாலையை அணிவிக்க, அவளுக்கோ உள்ளுக்குள் நடுங்கத் தொடங்கியது.

“இந்த மாலையை என் கழுத்துல போடு குயின். என்கூட தாலி கட்டாம

வாழுறதுதை விட இருக்கும் வரைக்கும் என்னோட மனைவியா இருந்துட்டுப் போ.” என்றவனின் குரலில் சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

‘எல்லாம் முடிந்த பின்பு இந்த வெளி வேஷம் தேவைதானா.?’ அவள் மனம் முரண்டியது.

எந்த முடிவும் எடுக்க முடியாது தடுமாறியவள் இறுதியில் நடுங்கிய கரங்களுடன் அவனுடைய

கழுத்தில் அந்த மாலையை அணிவித்தாள்.

“நாட் பேட்.” என்றவனின் முகத்தில் வெற்றிக் களிப்பு மிகையாக வெளிப்பட்டது.

திருமணமே வேண்டாம் என அழுது கரைந்தவள் இறுதியில் மனம் மாறியதை எண்ணி களிப்படைந்தவன் அவள் சூடிய மாலையை ஏற்றுக் கொண்டான்.

மியூசிக் பிளேயரில் தொடர்ந்து மந்திரங்கள் ஒலிக்கத் தொடங்க, அவன் வாங்கிய தங்கத் தாலியை எடுத்து அவளுடைய கழுத்தருகே கொண்டு வந்தவன் “ரெடியா குயின்.?” எனக் கேட்டான்.

“ம்ம்....” என விழிகள் கலங்க கூறியவள் கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

அவனோ தங்கத் தாலி கோர்த்திருந்த மஞ்சள் கயிற்றை அவளுடைய கழுத்திலே மீண்டும்

வைத்தவன் மூன்று முடிச்சுக்களில் ஒரு முடிச்சைக் கூடப் போடாது அப்படியே அந்த தரையில் சரிந்து படுத்தான்.

அவளுடைய கழுத்தில் அவன் வைத்த தாலியோ சரிந்து அவளுடைய மடி மீது விழுந்தது.

தன் மடி மீது விழுந்த தாலியைக் கண்டு பதறியவள் அதனைத் தன் கரங்களில்

எடுத்துக் கொண்டு அவனைப் பார்க்க, அவனோ படுத்திருந்தவாறு தான் போட்டிருந்த பட்டால் ஆன சட்டையை கழற்றினான்.

“எ.... என்ன பண்றீங்க ஆதி.? ஏ....? ஏன் இப்படி? தா.... தாலியை கட்டுங்க.” என்றாள் அவள்.

“அட ஆமால்ல. கல்யாணம் இன்னும் முடியலை. சோ நீயே

அந்தத் தாலியை எடுத்து உன் கழுத்துல கட்டிரு குயின்.

எனக்கு கொஞ்சம் டயர்டா இருக்கு. ஐ வான்ட் டு ல்லீப் நவ்.” என்றவன் அந்த மியூசிக் பிளேயரை ஆ்ப் செய்து விட்டு எழுந்து வந்து அந்த ரோஜா இதழ்கள் தூவிய இடத்தில் காலுக்கு மேல் மற்றைய காலைப் போட்டவாறு படுத்தே விட்டான்.

தன்மயாவுக்கோ தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது

என்பதே புரியாத நிலை. சில நொடிகளில் சுய நினைவை அடைந்தவள் விக்கித்துப் போனாள்.

அவள் கனவு ஏதேனும் காண்கிறாளா....? இல்லை கண் முன் நடந்த அத்தனையும் பொய்யா....?

‘கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய். என்று சொல்வார்களே. அப்போ நான் கண்ணால் பார்த்துட்டு இருக்கிறதும் பொய்தானா....?’

அவன்தானே திருமணம் என்றான். அவன்தானே வற்புறுத்தினான். அவன்தானே இத்தனை அலங்காரங்களையும் செய்தான். அவன்தான் இந்த தாலி தொடக்கம் புடவை வரை வாங்கி வந்தான்.

இத்தனை ஏற்பாடுகளைச் செய்தது மட்டும் அல்லாமல் திருமணம் வேண்டாம் என்ற முடிவோடு இருந்த என்னுடைய மனதை மாற்றி சம்மதிக்கவும் வைத்தானே.

இத்தனையையும்
செய்துவிட்டு கழுத்து வரை
தாலியையும் கொண்டு வந்து
வைத்துவிட்டு இப்போது
தனக்கும் இந்த
திருமணத்திற்கும் யாதொரு
சம்பந்தமும் இல்லை என
நிம்மதியாக
படுத்திருப்பவனைப் பார்த்து
அவளுள்ளம் துடித்துப்
போனது.

மண மேடையில் பைத்தியம்
போல அசையாது

அமர்ந்திருந்தாள் தன்மயா. எத்தனை நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ அவளே அறியாள்.

ஒருவரை உச்ச கட்ட அதிர்ச்சி தாக்கும் போது அவருடைய மனோநிலை எப்படி இருக்கும்.?

நிஜத்திற்கும் நிழலுக்கும் இடையே சிக்கித் தவித்து நொறுங்கிப் போனதைப் போல

உள்ளம் சிதறுண்டு போயிருக்கும் அல்லவா.?

அதே நிலையில்தான் தன்மயாவும் தற்போது காணப்பட்டாள். அவளுக்கோ உடலும் உள்ளமும் ஒரு சேர மரத்துப் போனதைப் போல இருந்தது.

கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து அவளுடைய சங்குக் கழுத்தை நனைக்க, அவனை

நோக்கி அவளுடைய மீன் விழிகள் அம்பெனப் பாய்ந்தன.

“ஆ.... ஆதி.????”

“வாட்....?”

“இ.... இங்க என்ன நடக்குது. எ.... எனக்கு சத்தியமா பு.... பு.... புரியலை.” என திணறியவாறே கேட்டாள் மாது.

“ஏன் தமிழ்ல தானே சொன்னேன். ஒரு தடவை

சொன்னா உனக்கு புரியாதா.? ஓகே லீவ் இட். எனக்கு டயர்டா இருக்கு. சோ நீயே அந்த தாலியை உன்னோட கழுத்துல கட்டிரு.” என்றதும் விதிர்விதிர்த்துப் போனாள் மாது.

“நா…. நானா….?” என அதிர்ச்சியில் இருந்து வெளி வர முடியாது கேட்டவளை திரும்பி அழுத்தமாகப் பார்த்தவன் “எஸ் நீயேதான்.” என உறுதியான குரலில் கூறினான்.

அவளுடைய கரங்களோ தளர்ந்து தரையோடு மோதின.

“ஹேய் இப்போ எதுக்கு நீ இவ்ளோ டென்ஷன் ஆகுற.? தாலி இல்லாம குழந்தையை சுமந்தா இந்த உலகம் தப்பா பேசும்னு நீதானே சொன்ன. சோ உன்னோட கழுத்துல தாலி இருந்தா சரிதானே. அந்தத் தாலியை நான் கட்டினா என்ன.? நீ கட்டினா என்ன.?” என சாதாரணமாகக்

கூறியவன் அவளைப் பார்த்து இமை சிமிட்டிச் சிரித்தான்.

அவளுக்கோ மீண்டும் ஆதி எனும் அரக்கன் தன்னை ஏமாற்றி விட்டான் என்பது புரிந்து போக, தன் கழுத்தில் இருந்த மலர் மாலையை பிய்த்து எறிந்தவள் தன் கரத்தில் இருந்த தாலியை வெறித்துப் பார்த்தாள்.

இதை விட ஒரு பெண்ணை யாராலும் அவமானப் படுத்த முடியுமா என்ன.?

அவளுடைய துயர் வழிந்த முகத்தைக் கண்டு தானும் துயர் கொண்ட பால் நிலவு கூட மேகம் எனும் தலையணையில் தன் முகத்தைப் புதைத்து கண்ணீர் வடித்தது.

இயற்கை கூட இரக்கப்படும் வேளையில் அவளுடைய வதனத்தில் வெளிப்படும்

உணர்வுகளை ரசித்துக் கொண்டிருந்தான் ஆதித்யன்.

அவனுடைய ரசனைப் பார்வை அவளுடைய மொத்த உடலையும் தீப்பற்ற வைத்தது.

அடுத்த நொடி எதைப் பற்றியும் சிந்திக்காது தன் கரத்தோடு சேர்த்து தாலியையும் ஓம குண்டத்தின் தீயினுள் நுழைக்க, அந்த மஞ்சள் கயிற்றோடு சேர்த்து அவளது

வெண்ணிற வளைக் கரமும் கருகத் தொடங்க,

“தனூஉளஉளஉளஉளஉளஉள
நோஓஓஓ.” என அலறினான் ஆதி.

ட்ராமா குயின் என்ற அழைப்பு தனுவாக மாறிப் போனதை அவனும் அறியவில்லை.

அந்த அழகியும் அவனுடைய அழைப்பை
செவிமடுக்கவில்லை.

மனித மனம் விசித்திரமானது என்றால் மிகையல்ல. சில நொடிகளில் தடுமாறி தடம் மாறிப் போவதற்கும் மனிதனின் மனோநிலையே முக்கிய காரணமாக இருக்கும்.

இப்படிப்பட்ட விசித்திரமான மனம்தனில் காதல் என்ற உணர்வும் கலந்து விட்டால் எந்த மனிதனும் உணர்வுக் குவியலுக்குள் சிக்குண்டுதான் போவான்.

அப்பப்பா எத்தனை எத்தனை உணர்வுகள்.? அவற்றை சமாளிக்க முடியாது பிரிந்து போன உறவுகள் கூட ஏராளம். அப்படியொரு மன நிலையில்தான் ஆதித்யனும் இருந்தான்.

தனக்கு அனைத்துமாகி நின்ற சகோதரனை இழந்து அவன் பட்ட துயர் அவனுக்குள் இருந்த மிருகத்தை வெளியே கொண்டு வந்திருந்தது.

தன்மயாவின் உடலில் சிறு காயம் ஏற்படுவதைக் கூடத் தாங்க முடியாதவன் அவளை மன ரீதியாக துன்புறுத்தத் தொடங்கினான்.

தன்மயாவின் மனமோ ஆதியின் செயல்களினால் காயப்பட்டு பலவீனமாகிப் போனது. உடல் காயங்கள் கூட ஒரு நாள் ஆறிவிடும். ஆனால் உடைந்த மனதை மீண்டும் ஒட்டுவது என்பது சுலபமற்றதல்லவா....?

ஆதியின் கீழ்த்தரமான செயலில் விக்கித்துப் போய் அமர்ந்திருந்தவள் தன் கையில் இருந்த தாலியை வெறித்துப் பார்த்தாள்.

தனக்குத் தானே தாலியைக் கட்டிக் கொண்டு வாழும் அவலநிலைக்கு அவன் தன்னை கொண்டு வந்து நிறுத்தியிருப்பது புரிய அவனை வெறுப்போடு பார்த்தவள் தன் கையோடு சேர்த்து அந்தத் தாலியையும்

பற்றி எரிந்து கொண்டிருந்த ஓமத் தீயினுள் நுழைத்தாள்.

ஆதியோ ஒரு வித ரசனைப் பார்வையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் அவள் தீயினுள் தன் கரத்தை வைக்கவும் பதறித்தான் போனான்.

அடுத்த கணமே தன்னை மறந்து
“தனூஉளஉளஉளஉளஉளஉளஉளஉள நோஓஓஓஓ.” என அலறியவன்

அடித்துப் பிடித்து எழுந்து அவள் அருகே ஓடினான்.

அதற்குள் தீயின் அகோர நாக்குகள் தங்கத் தாலி கோர்த்திருந்த மஞ்சள் கயிற்றை எரித்து சாம்பலாக்கியதுடன் அவளுடைய பட்டுப் போன்ற உள்ளங்கையினையும் பொசுக்கியிருந்தது.

அவனோ சட்டென அவளது கரத்தை வெளியே எடுத்துவிட,

அவளோ எரிச்சல் தாங்க முடியாது வாய் விட்டு கதறியழத் தொடங்கினாள்.

அவளது வலியை தனதாய் உணர்ந்தவனுக்கோ ஓர் கணம் உலகமே உறைந்தாற் போலானது.

அவனுக்கோ அவளது கதறலை செவி கொண்டு கேட்க முடியாது போக தவித்துப் போனான் மன்னவன்.

அவளது தீக் காயம் பட்ட கரத்தை தன் கரங்களில் மென்மையாக ஏந்தியவன் காயத்தின் தீவிரத்தை நொடியில் உள்வாங்கிக் கொண்டான்.

தீயின் நாக்குகளினால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள திசுக்கள் அதிக வெப்பத்தினை வெகு நேரம் தாங்கிக் கொள்ளக் கூடியவை. எனவே இது அவளுக்கு அதிக வலியை ஏற்படுத்தும் எனப் புரிந்து

கொண்டவன் முதலில் அவளுடைய கரம் உணரும் வெப்பத்தை முடிந்த அளவு போக்குவதற்கான முதலுதவிகளை மளமளவென செய்யத் தொடங்கினான்.

வெப்பத்தினை குறைப்பதற்கான முதலுதவிகளை செய்த அடுத்த கணமே வலியில் அழுது கொண்டிருந்தவளை சட்டென தன் கரங்களில் ஏந்தியவன் அவளை கீழே தன்

அறைக்கு கொண்டு சென்று படுக்கையில் கிடத்தினான்.

அவள் அணிந்திருந்த மோதிரம், வளையல் போன்ற ஆபரணங்களை மிக மிக மெதுவாக கழற்றியவன் அவளுடைய கரத்தின் வலி நீங்கும் வரை அந்தக் காயத்தை குளிர்ந்த நீரில் அமிழ்த்தி அமிழ்த்தி எடுத்தான்.

“ம்மாஆ முடியலை.... எரியுது.... எரியுது....” என வலியில்

முனகியவளைக் காணக் காண அவனுள் ஏதோ உடையும் உணர்வு.

“குயின் கொஞ்ச நேரம் பொறுத்துக்கோடி ப்ளீஸ்.” என்றவன் சற்று நேரத்தின் பின் அவளுடைய காயத்தை பரிசோதித்து அதனை உலர வைத்தவன் அவளுக்கு தேவையான ஆன்ட்டிபயாட்டிக் ஆயின்மென்ட் மற்றும் கூல் கம்ப்ரஸர் எனப்படும் குளிர் களிம்பையும் அந்த நள்ளிரவில் எங்கெங்கோ தேடி அலைந்து வாங்கி வந்தான்.

அவளோ வலித்த கரத்தை அவனது வசம் விட்டுவிட்டு படுக்கையில் சுருண்டு கிடந்தாள்.

பார்த்துப் பார்த்து அவன் செய்த சிறு சிறு செயல்களும் அவளுடைய வலியை கொஞ்சம் கொஞ்சமாக போக்கின.

அவளோ வலி மறந்து ஆழ்ந்த உறக்கத்தை தழுவ, அவனோ

தூக்கம் தொலைத்து விடிய விடிய அவளுடைய கரத்தை தன் கரங்களில் ஏந்திய வண்ணமே இருந்தான்.

தூக்கத்தில் அவள் கையை எங்காவது உரசி விடுவாளோ என எண்ணிப் பயந்தவன் தன் தூக்கம் மறந்தான்.

விடியற்காலை மூன்று மணி போல விழித்தவள் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ஆதியைக் கண்டு திகைத்தாள்.

கரத்தின் வலி நன்கு குறைந்திருப்பதை உணர்ந்தவள் அவன் வசம் இருந்த தன் கரத்தை மெல்ல இழுத்துக் கொண்டாள்.

“ஆர் யு ஓக்கே குயின்.? இப்போ பெயின் எப்படி இருக்கு.?”

“ப.... பரவால்ல.” என்றவள் அவனைக் காணப் பிடிக்காது

தன் விழிகளை மீண்டும் மூடிக் கொண்டாள்.

அவனோ அவளை விட்டு எழுந்தவன் மீண்டும் மொட்டை மாடிக்குச் சென்றான். அங்கே இருந்த ஓம குண்டத்தின் தீயோ அணைந்து போயிருந்தது.

அதனுள் தன் கரத்தை விட்டவன் சில விநாடிகளின் பின் அந்தப் பொன் தாலியை கண்டு எடுத்துக் கொண்டான்.

மஞ்சள் கயிறோ நெருப்பில் எரிந்து போயிருக்க, பொன் தாலி மட்டும் கரி படிந்து போனாற் போல இருந்தது.

அதனை நன்கு துடைத்து எடுத்தவன் மீண்டும் அவளை நோக்கிச் சென்றான்.

அவள் படுத்திருந்த அறையை அவன் நெருங்கும் போது அவளுடைய விசும்பல் ஒலி அவனது காதில் விழுந்தது.

ஒரு கணம் அப்படியே அந்த அறையின் வாயிலில் நின்றவன் பின் பெருமூச்சோடு அந்த அறைக்குள் நுழைந்தான்.

அவன் மீண்டும் வந்து விட்டான் என்பதை உணர்ந்தவள் சட்டென தன் விழிகளை இறுக மூடிக் கொண்டு அசையாது கிடந்தாள்.

அவளுடைய வலியை அவனிடம் வெளிப்படுத்தி

விடக் கூடாது என்பதில் தீவிரமாக இருந்தவள் தன் உதட்டை அழுந்தக் கடித்தவாறு அசையாது படுத்திருந்தாள்.

அவளது முகத்தில் இருந்தே அவளுடைய அகத்தைப் படித்தவன் “நீ தூங்கலைன்னு எனக்கு தெரியும். சோ ஓபன் யுவர் ஐஸ்.” என்றான்.

பெருமூச்சோடு விழிகளைத் திறந்து அவனைப் பார்த்தாள் தன்மயா.

“எதுக்குடி இப்படி பண்ணின….?” அவனது குரலில் சீற்றத்தை விட வலியே அதிகம் வெளிப்பட்டது.

“எனக்கு நானே தாலி கட்டிக்கிற அளவுக்கு எனக்கு தைரியம் இல்ல ஆதி.” கீச்சிட்டது அவளுடைய குரல்.

“ப்ச்.... முடியாதுன்னு சொல்லிட்டு எழுந்து போக வேண்டியது தானே. அறிவில்லையாடி உனக்கு.?”

“முடியாதுன்னு சொல்றதா....? அதுவும் மிஸ்டர் ஆதித்யன் கிட்டயா.? நடக்குற காரியமா சார் அது. என்னோட மறுப்புக்கு நீங்க மயி..... அளவுக்குக் கூட மரியாதை கொடுத்தது இல்ல.” என்றவளின் குரல் உச்சகட்ட சினத்தில் நடுங்கியது.

அவனோ அவள் முகத்தருகே குனிந்து “உஷ்ஷ்....” என்றவன் “கத்தாம பேசு. பக்கத்துல தானே இருக்கேன்.” என்றான்.

“சே....!” என முகம் திருப்பியவளுக்கு அவனைப் பார்ப்பதற்குக் கூட விருப்பமின்றிப் போனது.

“சோ. உனக்கு நீயே தாலி கட்டிக்க மாட்ட. அப்படித்தானே.?” எனக் கேட்டவன் அந்த பொன்

தாலியை எடுத்து அவள் முன்னே காட்டினான்.

“இது மட்டும்தான் இப்போ மிச்சம் இருக்கு.” என்றவன் தன் கழுத்தில் இருந்த சங்கிலியைக் கழற்றி அதில் அந்தத் தாலியைக் கோர்த்தான்.

“எ.... என்ன பண்ணப் போறீங்க....?” எனக் கேட்டவள் பதறி படுக்கையில் இருந்து எழுந்தமர்ந்தாள்.

“தாலி கட்டப் போறேன் குயின். இந்த நொடி உன்னைக் கல்யாணம் பண்ணிக்கனும் போல இருக்கு.” என்றவனின் கரகரத்த குரல் அவளை அதிர வைத்தது.

“ஹாங்.?” என அதிர்ந்து விழித்தவளின் கழுத்தில் தாலி கோர்த்த அந்தச் சங்கிலியை போட்டு விட்டான் ஆதித்யன்.

அவளோ விக்கித்துப் போனவளாக குனிந்து தன்

மார்பில் மோதிய அந்தத் தாலியை இமை சிமிட்டாது பார்க்க, அவனோ அவளுடைய கன்னங்களை தன் கரங்களால் தாங்கிக் கொண்டான்.

“இந்தக் கல்யாணத்துக்கு அக்கினி சாட்சி தேவை இல்லை. சுப முகூர்த்த நேரமும் தேவலை. மேள தாளமோ நாதஸ்வர கச்சேரியோ தேவையே இல்லை. நீயும் நானும் இந்தத் தாலியும் மட்டும் போதும்.

இந்த நிமிஷம் நான் உன்னை என்னோட மனைவியாத்தான் பார்க்கிறேன் குயின்.” என்றதும் அவளுடைய பார்வை திகைப்பு மாறாமல் அந்த அறையின் கடிகாரத்தில் பதிந்தது.

அந்தக் கடிகாரமோ நேரம் அதிகாலை மூன்று முப்பது (3.30am) எனக் காட்டியது.

“இன்னும் அஞ்சு மாசத்துக்கு உங்களோட மனைவியா இருந்து நீங்க பண்ற

கொடுமைகளை
தாங்கிக்கணும்
அப்படித்தானே.?” எனக்
கேட்டவாறு அவனுடைய
கரங்களை தட்டி விட்டாள்
தன்மயா.

“அப்படியும் சொல்லலாம்
குயின்.” என்றவன் எழுந்து
வந்து அவளருகே படுத்துக்
கொண்டான்.

அவனுடைய கரமோ அவளது
மேடிட்ட வயிற்றுக்கும்

அவளுடைய மார்பெனும் தாமரை மொட்டுகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் படர்ந்து அவளை அணைத்துக் கொண்டது.

விலக முயன்று நகர்ந்தவளை இறுக அணைத்தவன் அவளுடைய காயம்பட்ட கரத்தை மென்மையாக படுக்கையில் வைத்தான்.

“தள்ளிப் போ ஆதி.... எரிச்சலா இருக்கு.”

“அட்ஜஸ் பண்ணிக்கோ குயின்.” என்றவனுடைய மார்பில் தன் முழங்கையால் குத்தியவள் அவனை விட்டு நகர்ந்தாள்.

“நீ எனக்கு பண்ணது எல்லாமே நம்பிக்கை துரோகம் ஆதி. உனக்கு டி.ஐ.டி இருக்குன்னு என்னை நம்ப வெச்சு ஏமாத்தின. இந்த நிமிஷம் வரைக்கும் என்னை அணு அணுவா கொடுமைப் படுத்தி

ரசிச்சுகிட்டு இருக்க. என்னோட வாழ்க்கைல வந்த டெவில் நீ.”

“ஹா.... ஹா.... நீ ஒரு கொலைகாரின்னு மறந்துட்டு பேசாத குயின். நீ ஒன்னும் தப்பே செய்யாத உத்தமி கிடையாது. நீ செஞ்ச தப்புக்கு நான் உனக்கு தண்டனை கொடுத்தேன்.” என சாதாரணமாக கூறியவனை கொல்ல வேண்டும் என்ற வெறியே தோன்றியது அவளுக்கு.

“ஐயோஓ நான் கொலையே பண்ணலை. உனக்கென்ன பைத்தியமா ஆதி. உங்க அண்ணா யாருன்னே எனக்குத் தெரியாது.” என உரத்த குரலில் கிட்டத்தட்ட கத்தியவளை இழுத்து எழுப்பியவன் “என்கூட வாடி.” எனக் கர்ஜித்தவாறு அவளை இதுவரை காலமும் பூட்டி இருந்த ஒரு அறைக்குள் அழைத்துச் சென்றான்.

“வ்விடு ஆதி. நான் எங்கேயும் வரலை. என்னை வ்விடு.”

எனத் திமிறியவளை தன்னுடைய அழுத்தமான ஒற்றைப் பார்வையில் அடக்கியவன் அந்த அறையின் மின் விளக்கை ஒளிர விட்டான்.

அந்த அறையோ தூசி படிந்து போய் இருந்தது. நீண்ட நாட்களாக பராமரிக்காமல் இருந்த அறையை திகைப்பாக பார்த்தாள் தன்மயா.

“ஓ காட். இதென்ன இப்படி இருக்கு.?” என தூசியைப் பார்த்து முகத்தைச் சுருக்கி தன் மூக்கை மூடியவளை அலட்சியப் படுத்தியவாறு அவளைத் தாண்டிச் சென்றவன் அங்கிருந்த ஒரு புகைப்படத்தை நெருங்கினான்.

அந்த புகைப்படம் முழுவதும் தூசி படிந்திருக்க அதனைத் தன் கரங்களால் துடைத்தவனுடைய விழிகளில் இருந்து ஒரு துளிக்

கண்ணீர் வழிந்து அந்தப் புகைப்படத்தில் விழுந்தது.

“அன்னைக்கு நான் உன்கிட்ட எவ்வளவோ சொன்னேன். எத்தனையோ தடவை கெஞ்சினேன். ஒரு தடவை நான் சொல்றதை நீ கேட்டிருந்தா இன்னைக்கு என்னோட அண்ண உயிரோட இருந்திருப்பான்டி.” என்றவன் அந்தப் புகைப்படத்தை தன் மார்போடு அணைத்துக் கொண்டான்

“என்ன சொல்றீங்க ஆதி.? எ.... என்னை உங்களுக்கு முதலே தெ.... தெரியுமா.? என்னைப் பார்த்திருக்கீங்களா....? என்கூட பேசிருக்கீங்களா....?” என அதிர்வோடு கேட்டவளை இமைக்காது பார்த்தவன் ஆம் எனத் தலை அசைத்தான்.

“உன்னோட பதினெட்டு வயசுல அதாவது மூணு வருஷத்துக்கு முன்னாடியே நாம சந்திச்சிருக்கோம்.” என்றவனின் குரல் இறுகிப்போய் ஒலித்தது.

“வாட்....?” என அதிர்ந்தாள் மாது. அவளுக்கு ஆதியை சந்தித்த நினைவு துளி கூட இல்லையே.

“எஸ் நான் மூணு வருஷத்துக்கு முன்னாடியே உன்னை பார்த்துட்டேன். நான் அடியோடு வெறுக்குற நாளும் அதுதான்.” என்றான் ஆதி.

“எ.... எனக்குப் புரியலை.” என்ற தன்மயாவின் தோளை அழுத்தமாகப் பற்றியவன்,

“உன்னோட அக்கா அபிமயாவோட புருஷன் கார் ஆக்ஸிடன்ட்ல இறந்துட்டான்னு சொன்னியே.”

“ஆ.... ஆமா.... அவர்தான் உங்க அண்ணா ராணாவா.? ஆனா அவரோட பேரு விக்ரம்.” எனக் குழம்பியவளின் சிந்தனையை தடுத்தவன் “நோ. அவன்

என்னோட அண்ணா இல்ல.” என்றான்.

“அப்போ யஷ்விந்த் உங்க அண்ணாவோட குழந்தைன்னு சொன்னீங்களே. யஷ்வியோட அப்பா விக்ரம் மாமாதானே.”

“உங்க அக்கா விக்ரமை கல்யாணம் பண்ணும் போதே மூணு மாசம் கர்ப்பமா இருந்தா. யஷ்விந்த் என்னோட அண்ணா ராணாவுக்கும் உன்னோட அக்கா

அபிமயாவுக்கும் பிறந்த குழந்தை. அவங்க காதலுக்கு பரிசா கிடைச்சவன்தான் யஷ்வி.”

“என்னது....????” என அதிர்ந்து நின்றவளுக்கு தலையே வெடித்து விடும் போல இருந்தது.

“எஸ். உன் அக்காவோட கர்ப்பத்தை அஸ் அ டாக்டரான்பார்ம் பண்ணதே நான்தான்.” என மேலும் அவளுடைய

தலையில் இடியை இறக்கினான் ஆதி.

“இவ்ளோ நடந்ததுக்கு பிறகு ஏன் உங்க அண்ணாவும் எங்க அக்காவும் கல்யாணம் பண்ணிக்கலை.? அக்கா ஏன் கர்ப்பமா இருக்கிறது தெரிஞ்சும் விக்ரம் மாமாவை கல்யாணம் பண்ணிக்கிட்டா.? என்னதான் நடந்துச்சு.?” என்றவள் தன் தலையைப் பற்றிக் கொண்டாள்.

அவளுக்கோ தன் சகோதரியின் வாழ்க்கையில் நடந்த உண்மைகள் பற்றி அறிய மனம் துடித்தது.

“எல்லாத்துக்கும் நீ தான்டி காரணம். அவங்களோட காதல் பிரிஞ்சதுக்கு காரணமும் நீதான். எங்க அண்ணா சூசைட் பண்ணதுக்கு காரணமும் நீதான்” என கர்ஜித்தவன் அவளுடைய கழுத்தை இறுகப் பற்றிப் பிடித்தான்.

அவனுடைய கண்கள் வேட்டையாடும் சிங்கத்தின் கண்களைப் போல பளிச்சிட்டன

அவளுடைய கண்களோ புள்ளி மானின் கண்களைப் போல மருண்டு விழித்தன.

அவனுடைய வேட்டைப் பார்வையின் வீச்சில் அவளுடைய பார்வை மருண்டு போனது. அவளது அச்சத்தை உணர்ந்தவன் அவளுடைய கழுத்தில் இருந்த தன் பிடியை மெல்ல தளர்த்தினான்.

அவன் கரத்தை விலக்கிய கணம் சட்டென அவனிடம் இருந்து விலகி நின்றாள் தன்மயா.

மூன்று வருடங்களுக்கு முன்பு சந்தித்ததாக ஆதி கூறினாலும் அவளுக்கு ஆதியை பார்த்த நினைவு சற்றும் இல்லையே.

“மூணு வருஷத்துக்கு முதல் பார்த்த என்னையும் எங்க அண்ணாவையும் நீ

மறந்திருக்கலாம். ஆனா அன்னைக்கு அந்த பர்பிள் ஸ்டார் மாலில் நடந்த சம்பவம் உனக்கு கண்டிப்பா மறந்திருக்காது.” என்றவன் அன்று நடந்த விடயங்களைக் கூறத் தொடங்கினான்.

பர்பிள் ஸ்டார் மால் என்றதும் அவளுடைய உடலும் அக்கணம் விறைத்துப் போனது.

****

மூன்று வருடங்களுக்கு முன்பு....

ஆதியும் ராணாவும் பர்பிள் ஸ்டார் மாலிற்கு அபிமயாவைச் சந்திப்பதற்காக வந்திருந்தனர்.

ஆதியோ ராணாவின் தோளில் தன் கையைப் போட்டவன் “டேய் அண்ணா கல்யாணத்துக்கு முதலே அப்பா ஆகிட்ட. மரியாதையா

எனக்கு ட்ரீட் வைடா.” என்றான்.

“ஹா.... ஹா.... அடிங்க. நாங்களே இந்த விஷயத்தை எப்படி அபியோட வீட்ல சொல்லலாம்னு தெரியாம முழிச்சிகிட்டு இருக்கோம். இதுல உனக்கு ட்ரீட் வேற கேக்குதா....?”

“ஹேய் நான் சித்தப்பா ஆக போறேன்டா. ஸ்வீட் எடு கொண்டாடு மூட்ல

இருக்கேன்.” என்றான் இருபத்து மூன்று வயதான ஆதி.

“டேய் அடங்குடா ஆதி. அபி இன்னைக்கு அவளோட தங்கச்சி தன்மயாவையும் கூட்டி வர்றேன்னு சொன்னா. அவளுக்கு நாங்க லவ் பண்றதே தெரியாது. ஜஸ்ட் ப்ரண்ட்ஸ்னு மட்டும்தான் தெரியும். சோ கொஞ்சம் அடக்கி வாசிடா தம்பி.” என்றான் ராணா.

“பார்ராஆ ரொம்ப பண்ணாதடா அண்ணா.”

“ஹா…. ஹா…. ஓகே நீ இங்கேயே இரு நான் என்னோட பேபிக்காக ஏதாவது கிப்ட் வாங்கிட்டு வர்றேன்.” என்வாறு சென்ற ராணாவின் ஷர்ட்டை பற்றி நிறுத்திய ஆதியோ “டேய் எப்பவாச்சும் எனக்கொரு ஜட்டியாவது வாங்கிக் கொடுத்திருப்பியாடா…. துரோகி.” என்றான்.

“ஹி.... ஹி.... இன்னைக்கு டசின் கணக்குல வாங்கித் தர்றேன்டா தம்பி” என்றவாறு ராணா கிப்ட் வாங்க சென்றுவிட, ஆதிக்கோ தன் சகோதரனுடைய காதலைக் கண்டு வியப்பாக இருந்தது.

அபியும் ராணாவும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட அன்பைக் கண்டு அவன் நெஞ்சம் நெகிழ்ந்தது.

எப்பேர்பட்ட காதல் அவர்களுடையது என எண்ணி வியந்தவன் விட்டால் காதலை

போற்றி கோயிலே கட்டி விடுவான். அந்த அளவுக்கு காதல் எனும் உணர்வை நேசித்தான் ஆதி.

சிறு வயதில் இருந்தே தாய் அன்பை அனுபவிக்காதவன் தன்னை காதல் செய்பவள் ஒரு தாயைப் போல இருக்க வேண்டும் என்ற ஆசையை மலை அளவு கொண்டிருந்தான்.

தன் எண்ணங்களின் போக்கைக் கண்டு சிரித்த ஆதியோ “பால் போலே

பதினாறில் எனக்கொரு கேர்ள் ப்ரண்ட் வேணும்.” எனப் பாடியவாறு நடக்க,

அதே நேரம் அவனை நோக்கி புன்னகைத்தவாறு வந்தாள் தன் சகோதரனின் காதலியான அபிமயா.

“ஹேய் ஆதி என்ன ரொம்ப ஜாலியா இருக்கிற மாதிரி தெரியுதே.” என சிரித்துக் கொண்டே வந்தவள் ஆதியின் தோளில் செல்லமாக தட்டினாள்.

தன் வருங்கால அண்ணியின் குரலைக் கேட்ட கணமே அவனுடைய உள்ளமோ மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது.

“ஹாய் அபி அண்....” எனக் கூற வந்தவனின் காலில் மிதித்து அவனுடைய பேச்சை நிறுத்தியவள் “ஹி.... ஹி.... ஆதி திஸ் இஸ் மை சிஸ்டர் தன்மயா. தனு இவன் என்னோட ப்ரண்ட் ராணாவோட தம்பி.” என

இருவருக்கும் அறிமுகம் செய்து வைத்தாள்.

அபியின் தங்கையின் முன்னே உளறப் போனதை எண்ணி தன் நாக்கை கடித்தவன் “ஹாய் மயா பேபி.” என்றவாறு தன்மயாவைப் பார்த்தான்.

பார்த்த கணமே அவனுடைய மனதில் பசை போட்டு ஒட்டிக் கொண்டது அவளுடைய பால் வண்ண வதனம்.

அழகான கறுப்பு நிற கட்டைக் கவுன் அணிந்து தன் கூந்தலை முதுகில் படரவிட்டவாறு முட்டைக் கண்களோடும் குண்டுக் கன்னங்களோடும் தன் கண் முன்னே சிரித்துக் கொண்டிருந்த பதினெட்டு வயதுப் பாவையைக் கண்டு அவனுடைய அத்தனை ஹார்மோன்களும் சுரந்து தள்ளின.

மயா பேபி என்ற அழைப்பில் அவளுடைய சிவந்த உதடுகளோ நன்கே விரிய

அவளும் ஆதியைப் பார்த்து “ஹாய் அண்ணா.” என்றாள்.

“எதே அண்ணாவாஆஆஆ.?” சுரந்த ஹார்மோன்கள் அத்தனையும் பாலைவனத்து கானல் நீராகிப் போக, அவனுடைய இதயமோ எம்பி குதித்து வெளியே தரையில் விழுந்து தற்கொலை செய்து கொண்டது.

“ஹேய் ஆதி என்னாச்சுடா.? எதையாவது

தொலைச்சிட்டியா....?” என கீழே எதையோ தேடிக் கொண்டிருந்த ஆதியைப் பார்த்து கேட்டாள் அபி.

“ஆமா அபி. என்னோட ஹார்ட் இங்கே எங்கேயோதான் விழுந்திருச்சு அதைத்தான் தேடிகிட்டு இருக்கேன்.”

“வாட்.?”

“பின்னே இப்படி அழகான பொண்ணுங்க எல்லாம் என்னை அண்ணான்னு

கூப்பிட்டா என்னோட ஹார்ட் பாய்ஞ்சு குதிச்சு ஓடத்தானே செய்யும்.” என சிரிப்போடு கூறிய ஆதியை முறைக்க முயன்று கலகலவென நகைத்தாள் அபிமயா.

“சரியான சேட்டைடா உனக்கு. ராணா எங்கே.?” எனக் கேட்டவளின் பார்வையோ சடுதியில் தன்னவனைத் தேடி கனிந்து போனது.

“ஏதோ வாங்கணும்னு போயிருக்கான் அண்.... அபி. இப்போ வந்திருவான்.”

“அபிக்கா அங்கே பாரன் ஏதோ காம்படிஷன் நடக்குது.” என கண்கள் மின்னக் கூறினாள் தன்மயா.

“எஸ் மயா பேபி. அது பெண்களுக்கான போட்டி. அதில் வின் பண்றவங்கதான் இன்னைக்கு இந்த மாலோட குயின். வின் பண்ணும்

குயினுக்கு அழகான பிரின்ஸஸ் ட்ரெஸ்ஸும் கிப்டா கொடுப்பாங்க.” என்றதும் தன்மயா அடுத்த நொடியே அந்தப் போட்டி நடக்கும் இடத்திற்கு ஓடி விட, ஆதியின் இதழ்களோ அழகாக புன்னகைத்தன.

“மயா பேபி ரொம்ப அழகாக இருக்கால்ல.” என்றவனின் காதை பிடித்து திருகிய அபியோ “வழியுது துடைச்சுக்கோ.” என்றாள்.

“ஹா.... ஹா....”

“ஆதி இங்கேயே வெயிட் பண்ணு. நான் தனுவை கூட்டிட்டு வர்றேன்.” என்றவள் தன்மயா ஓடிய திசைப் பக்கம் சென்றாள்.

அபியும் தனுவும் அந்தப் போட்டி நடக்கும் இடத்திற்குச் சென்றதும் தனித்து நின்ற ஆதியோ அங்கே பெண்ணின் உடை அணிந்து நடந்து சென்ற தன் சகோதரனைக் கண்டு அதிர்ந்து போனான்.

ஓடிச் சென்று ராணாவின் வழியை மறித்தவன் “அண்ணா.” என அதட்டினான்.

“ஓவ்வ் வாட் த ஹெல் ஆதி. ஐ அம் நாட் ராணா. ஐ ஆம் விக்டோரியா.” என சிறு சிணுங்கலோடு பெண் குரலில் கூற, ஆதிக்கோ வியர்த்துப் போனது.

ராணா டிசோஸியேட்டிவ் ஐடென்டிட்டி டிசோடர்

(மல்டிபிள் பர்சனால்டி டிசோடர்) எனும் விசித்திரமான மன நோயைக் கொண்டவன் என்பதை ஆதி அறிவானே. கடந்த ஆறு மாத காலமாக ராணாவினுள் வந்து போகும் அத்தனை ஆல்ட்டர்கள் பற்றியும் தெள்ளத் தெளிவாக அறிந்து வைத்திருந்தான் ஆதி.

மனநல வைத்தியரான அவனுக்கு ராணாவின் நிலை உள்ளங் கை நெல்லிக் கனி போல தெளிவாக புரிந்திருந்தது.

வீட்டில் வைத்தே ராணாவிற்கான ட்ரீட்மென்ட்களை அவன் நடத்தி வருவது பற்றி ராணாவுக்குக் கூடத் தெரியாது.

அவன் உடலில் வேறு ஆல்ட்டர்கள் வரும் வேளையில் அவனை ஹிப்னாடிஸம் மூலம் தன்வசப் படுத்தி விடுவான் ஆதி.

முன்பெல்லாம் மணிக்கு ஒரு தடவை பல ஆல்ட்டர்களாக மாறி வரும் ராணா

இப்போதெல்லாம் அதிக மாற்றத்திற்கு உட்படாமல் இருப்பதற்கு ஆதியின் மருத்துவமே காரணமாகும்.

அப்படி அனைத்தையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த ஆதிக்கு இன்று திடீரென விக்டோரியா கேரக்டர் வெளியே வந்ததும் அதிர்ச்சியே மேலிட்டது.

தன் அதிர்ச்சியை மறைத்தவன் அடுத்த நொடியே கை தேர்ந்த

மருத்துவனாக மாறிப் போனான்.

“ஹாய் விக்டோரியா. யு லுக் சோ பியூட்டி◌ுபுல்.” என்றான் ஆதி.

ராணாவின் உடலில் வெளிப்பட்ட விக்டோரியாவின் ஆல்ட்டரோ பெண்கள் அணியும் டாப் ஒன்றை அணிந்திருக்க, ஆதிக்கோ வியர்த்து வழிந்தது. இந்த நிலமையில் அபி அண்ணி

அண்ணாவைப் பார்த்தால் தாங்கிக் கொள்ள மாட்டாளே என்ற கவலை அவனை புழுவாக அரிக்கத் தொடங்கியது.

ராணாவிற்கே அவனுடைய மன நோய் பற்றித் தெரியாத போது அபிமயாவிடம் எங்கணம் அவனால் உண்மையைக் கூற முடியும்.?

இது ஒன்றும் சாதாரன நோய் அல்லவே. ஆயிரத்தில்

ஒருவருக்கு தோன்றும் விசித்திர நோய் அல்லவா. இது பற்றிய புரிந்துணர்வு கேடபவர்களுக்கு இருக்குமா என்ற ஐயம் அவனை மிரட்டியது.

“ஹேய் ஆதி ஹேண்ட்ஸம். எதுக்கு இப்படி ப்ரீஸ் ஆகி நிற்கிற.?” எனக் கேட்டாள் விக்டோரியா.

“ந.... நத்திங். நான் உன்கிட்ட என்ன சொல்லிருக்கேன்.?

பப்ளிக் ப்ளேஸ்ல வெளியே வராதேன்னு சொல்லிருக்கேன்ல. இப்போ எதுக்கு நீ வந்திருக்க.?” என ஆதி கேட்டதும் விக்டோரியாவின் விழிகள் கலங்கின.

“யு ஹர்ட்டிங் மீ ஆதி. ரெண்டு நாளா நான் வரவே இல்லை. அந்த டென்வர், சுலக்ஸ், ரிஷி எல்லாம் அடிக்கடி வந்து போறாங்க. என்னை மட்டும் எதுக்கு திட்டுற.?”

“ப்ச்.... என்னோட பர்மிஷன் இல்லாம நீங்க வெளியே வரக் கூடாது. இது ராணாவுக்கான நேரம். அவனோட பெர்சனல் ஸ்பேஸ் அவனுக்கே கொடுத்திரு விக்டோரியா.”

“சரி.... சரி.... போறேன். பட் அங்கே கேர்ள்ஸ்கான குயின் காம்படிஷன் நடக்குது. அதுல நான்தான் வின் பண்ணி குயினாகணும். அந்த குயின் ட்ரெஸ்ஸ போட்டுப் பார்க்கணும்னு எனக்கு ரொம்ப ரொம்ப ஆசையா இருக்கு

ஆதி. ப்ளீஸ் அதை மட்டும் போட்டுப் பார்த்துட்டு போயிடுறேனே.” என கெஞ்சினாள் விக்டோரியா.

“சரி. உனக்கு அந்த ட்ரெஸ்தானே வேணும்.? இங்கேயே மறைவா இரு. அந்த ட்ரெஸ் எவ்வளவா இருந்தாலும் உனக்காக வாங்கிட்டு வர்றேன்.” என்ற ஆதியோ விக்டோரியாவை ஒரு ஓரமாக இருக்கையில் அமர்த்திவிட்டு பதற்றத்தோடு

அந்தப் போட்டி நடக்கும் இடத்திற்குச் சென்றான்.

அவன் அங்கே சென்று அந்த ஆடையை பற்றி விசாரிக்க, அந்த ஆடையை ஒரு பெண் போட்டியில் வெற்றி பெற்று எடுத்துச் சென்றதாக கூறிவிட,

ஆதிக்கோ அந்த நொடி தன் வாழ்க்கையே வெறுத்துப் போனதைப் போல இருந்தது.

தன் அண்ணனின் நிலையை எண்ணி வருந்தியவனின்

விழிகளில் சில துளி உவர் நீர் தேங்கி நின்று அவனுடைய கன்னத்தை நனைத்தன. தன் தலையை அழுந்தக் கோதியவன் விக்டோரியாவைத் தேடிச் சென்றான்.

தன்மயாவோ பல சுட்டித் தனங்களைச் செய்து அந்தப் போட்டியில் வெற்றி பெற்றவள் மகிழ்ச்சியோடு அந்த ஆடையை போட்டுப் பார்ப்பதற்காக அங்கிருந்த ஆடை மாற்றும் அறையினுள் நுழைந்தாள்.

தனு அந்த ஆடையோடு செல்வதைக் கண்ட விக்டோரியாவோ எப்படியாவது அந்த ஆடையை ஒரு முறையாவது போட்டுப் பார்த்து விட வேண்டும் என்ற ஆசையில் உள்ளம் துள்ள தனு நுழைந்த ஆடை மாற்றும் அறையினுள் விக்டோரியாவும் நுழைந்து கொண்டாள்.

உள்ளே ஆடை மாற்றிக் கொண்டிருந்த தன்மயாவும் ஒரு பெண்.

அதனுள் எவ்வித அனுமதியும் இன்றி நுழைந்த விக்டோரியாவும் ஒரு பெண்.

ஆனால் விக்டோரியா எனும் ஆல்ட்டர் இருப்பது ராணா எனும் திடகாத்திரமான ஆணின் உடலில் அல்லவா.?

பார்ப்போருக்கு ஆடவன் ஒருவன் ஒரு பெண்ணின் உடை மாற்றும் அறையில்

புகுந்தது போலத்தானே இருக்கும்.

பெண்களின் உடை மாற்றும் அறையினுள் விக்டோரியா நுழைவதைப் பார்த்த ஆதிக்கோ ஐம்புலன்களும் செயலற்று அடங்கிப் போனது. “ஓ மை காட்.” என்றவன் வேக வேகமாக அந்த ஆடை மாற்றும் அறையை நோக்கி ஓடத் தொடங்கினான்.

தன்மயாவோ தான் அணிந்திருந்த கவுனைக் கழற்றி விட்டு மற்றைய ஆடையை அணிய முயலும் சமயம் சட்டென அந்த அறைக்குள் நுழைந்த ஓர் ஆடவனைக் கண்டு விதிர்விதிர்த்துப் போனாள்.

சட்டென பதறி தன் முன் அழகை அவ் ஆடை கொண்டு மறைத்தவள் அடுத்த நொடியே வீல் என அலறத் தொடங்கினாள்.

தன் மேனி யாரோ ஒரு கயவனின் கண்களுக்கு விருந்தாகியதை எண்ணி அவளுடைய மனமோ வேதனையில் துடித்துப் போனது.

“ச்சீ பொறுக்கி நாயே வெளியே போஓஓஓ....” எனக் கதறியவளின் கரங்களை பற்றிக் கொண்ட விக்டோரியாவோ “ஹேய் ஹேய் ஐ அம் அ கேர்ள். நானும் பொண்ணுதான்.

ப்ளீஸ் இந்த ட்ரெஸ்ஸ ஒரே ஒரு தடவை போட்டுப் பார்த்துட்டு கொடுத்திர்றேனே ப்ளீஸ்.” என கெஞ்சலாக கேட்டாள் விக்டோரியா.

தன்மயாவுக்கோ அந்த ஆடவன் தன்னை பெண் எனக் கூறி இப்படி கேவலமான செயல்களைப் புரிகின்றான் என எண்ணியவள் அழுது கதறத் தொடங்கினாள்.

அதே நேரம் சட்டென அந்த அறையினுள் நுழைந்தான் ஆதி.

ஆதியைக் கண்டதும் தன்மயாவோ “அண்ணா....” என்ற கதறலோடு ஆதியின் கரத்தை பிடித்துக் கொண்டவள் “இ.... இ.... இவன் என்னை ட்ரெஸ் இ... இல்லாம பார்.... பார்த்து....” என கூறி முடிக்க முடியாது அழுது கரைந்தாள் தன்மயா.

“மயா ப்ளீஸ்.... ப்ளீஸ்.... கத்தாதே மயா. ஐ வில் எக்ஸ்ப்ளைன் யு” என்றவன் அவள் நின்ற கோலத்தைக் கண்டு திகைத்துப் போனான்.

ஒரு ஆண் பார்க்க கூடாத தோற்றத்தில் தன் மேனியை ஆடையால் மூடி நின்ற தன்மயாவைக் கண்டு அவனுக்கு உடல் உறைந்து போனது.

சட்டென தன் டீஷர்ட்டை கழற்றி அவளுக்கு அணிவித்தவன் “ப்ளீஸ் இதை அபிகிட்ட சொல்லிராத மயா. இ.... இவனுக்கு டி.ஐ.டி நோய் இருக்கு.” என அவளுடைய கரங்களைப் பற்றி மன்றாடியவனை ஓங்கி அறைந்தாள் தன்மயா.

“ச்சீஈஈஈ நீயும் இவனோட ஆளா....? உங்களுக்கெல்லாம் அக்கா தங்கச்சி அம்மான்னு யாருமே இல்லையா.?” என சீறியவள் அழுகையோடு

“ஹெல்ப்.... ஹெல்ப் மீ....” என அவள் அலற, ஆதியோ சட்டென அவளுடைய கால்களில் விழுந்தான்.

“மயா ப்ளீஸ் அவன் இப்போ அவனாவே இல்லைடி. புரிஞ்சிக்கோ. என்னை என்ன வேணும்னாலும் பண்ணு. அவனை மாட்டி விட்றாத ப்ளீஸ்.” என கண்கள் கலங்க கெஞ்சியவனிடம் இருந்து தன் கால்களை உதறியவள் தன்னுடைய கவுனை மேல மளமளவென அணிந்துவிட்டு

அந்த அறையை விட்டே வெளியே ஓடி வந்தாள்.

அவளது கதறலில் அங்கிருந்த மக்களின் கூட்டமோ ஒன்று கூடியது.

அடுத்த நொடியே தன்மயாவின் கரங்கள் விக்டோரியாவை குற்றவாளியென சுட்டிக் காட்டின.

ஆதியின் மனமோ ஒவ்வொரு விநாடியும் பதறிக் கொண்டே

இருந்தது. இந்தப் பிரச்சனையில் இருந்து எப்படியாவது வெளிவர வேண்டுமென நினைத்தவன் தன்மயாவிடம் பல முறை மன்றாடித்தான் பார்த்தான்.

ஆனால் அவனுடைய மன்றாடல்களை செவிமடுக்கும் நிலையில் தன்மயா இல்லாது போனது பரிதாபமே.

ஆடை மாற்றிக் கொண்டிருக்கும் பதின்ம வயதுப் பெண்ணின் அறைக்குள் நுழைந்தால் அந்தப் பெண்ணின் மனம் எப்படித் துடித்துப் போகும் என்பதை அறியும் நிலையில் ஆதியும் அப்போது இருக்கவில்லை.

பேசித் தீர்த்திருந்தால் பலரின் வாழ்க்கை காப்பாற்றப் பட்டிருக்கலாம். ஆனால் விதி வலியது அல்லவா.? நதியின் போக்கில் இழுபட்டுச் செல்லும்

ஒரு சிறு படகினைப் போல, அவர்களுடைய வாழ்க்கையும் விதியின் வசத்தே இழுபட்டுச் சென்றது.

தன்மயாவின் கதறலில் மொத்த கூட்டமும் அந்த ஆடை மாற்றும் அறைக்கு முன்பு கூடி விட, தன்மயாவின் விரல்களோ ராணாவை குற்றவாளியாக சுட்டிக் காட்டின.

அடுத்த நொடியே அந்தக் கூட்டத்தில் இருந்தவர்கள் தகாத வார்த்தைகளில் திட்டியதோடு ராணாவைப் பிடித்து அடிக்கத் தொடங்க, ஆதியோ துடித்துப் போனான்.

அதே நேரம் அந்த கையில் அழகான பரிசுப் பொதி ஒன்றோடு வந்த அபிமயாவோ ராணா அடி வாங்குவதைக் கண்டு உறைந்து போனாள். அவளுடைய கரங்களில் இருந்த பரிசோ தரையில் விழுந்து அவளுடைய

மனதைப் போலவே உடைந்து போனது.

“ஐயோஓ அவரை எதுக்கு அடிக்கிறீங்க.? ப்ளீஸ் ஸ்டாப். வ்விடுங்க என் ராணாவை விட்ருங்க.” என அந்தக் கூட்டத்தினுள் புகுந்து அவனைக் காக்க முயன்றாள் அபிமயா.

“இவனை எப்படி விடுறது.? ஒரு பொண்ணு ட்ரெஸ் மாத்தும் போது உள்ள போய்

தப்பா நடந்துக்க ட்ரை பண்ணிருக்கான்.” என அந்தக் கூட்டத்தில் இருந்த பெண்மணி கூற, அதனை ஆணித்தரமாக மறுத்தாள் அபி.

“ஐயோ நீங்க நினைக்கிற மாதிரி அவர் இல்லை ப்ளீஸ் அவரை அடிக்காதீங்க.” எனக் கதறியவளினை அழுகையோடு ஓடி வந்து அணைத்துக் கொண்டாள் தன்மயா.

“அ.... அக்கா இந்த ஆ... ஆளு எ.... என்னை ட்ரெஸ்.. இல்லாம.” என்றவள் கதறியழ அபியின் உடல் விதிர்விதிர்த்துப் போனது.

சட்டென துடித்துக் கதறும் தன் தங்கையை அணைத்து ஆறுதல் அளித்தவள் “அவ.... அவர் அப்படி பட்டவர் இல்ல தனு.” என அழுகையோடு முனகினாள்.

ராணாவை போட்டு அடித்து அவனுடைய ஆடையைக் கிழிக்க அவனுள் இருந்த விக்டோரியாவோ துடித்துப் போனாள்.

அவளும் ஒரு பெண் தானே. அத்தனை கூட்டத்தின் முன் அவளது ஆடை கிழிபடுவதுடன் பலருடைய கரங்கள் அவள் உடலில், அந்தரங்கம் பாராது தீண்டிச் செல்ல அந்த அவலம் தாங்க முடியாது கதறித் துடித்தாள்.

“ஆதி.... ஆதீஈஈஈ இ.... இவங்க என்னோட ட்ரெஸ்ஸை கிழி..... கிழிக்கிறாங்க. வேணாம்னு சொல்லு ஆதி ப்ளீஸ்.... எனக்கு அவமானமா இருக்கு ஆதீஈஈஈஈ. ப்ளீஸ். என்னை எப்படியாவது காப்பாத்து.” என கதறி துடித்தவளின் நிலை ஆதிக்கு மட்டுமே புரிந்தது.

“ஐயோஓஓ வலிக்குதே.... என்னை அடிக்காதீங்க. ஒரு பொண்ணைப் போட்டு இப்படி அடிக்கிறீங்களே. உங்களுக்கு மனசாட்சியே இல்லையா....?”

எனக் கதறிய விக்டோரியாவின் வார்த்தைகள் யாவும் அங்கிருந்தவர்களின் செவியை எட்டாது போனது.

ஆதியோ தன் சகோதரனைக் காப்பதற்காகச் சென்று தானும் அந்தக் கூட்டத்தினுள் அடி வாங்கத் தொடங்கினான்.

விக்டோரியாவின் அவலக் கதறல் கூடிக் கொண்டே போக, ஆதியின் பொறுமையோ

பறந்து போனது. அடுத்த நொடியே அருகே நின்ற ஓர் அலங்கார பொம்மையை தன் கரத்தில் எடுத்தவன் ராணாவை தாக்கிய அனைவரையும் கண் மண் தெரியாது ஆக்ரோஷமாகத் தாக்க, மக்களோ அடிக்கு பயத்தில் சிதறி ஓடினர்.

போலீஸ் வருவதற்கு முன் இங்கிருந்து சென்றுவிட வேண்டுமென எண்ணிய ஆதியோ ராணாவை தன் மேல் போட்டுக் கொண்டு நகர

முற்பட, அவனது வழியை மறித்தாள் அபி.

“ராணாஆஆ ஐயோஓ ரத்தம் வருதே.” என பதறி அழுதவளை கண் கலங்கப் பார்த்தான் ஆதி.

“அபி அண்ணா தப்பு பண்ணலை.” என உடைந்த குரலில் கூறினான் ஆதி.

“அக்காஆஆ நம்பாதீங்க அக்கா. அவன்தான் அவன்தான்கா உள்ளே வந்து என்னோட

ட்ரெஸ்ஸை கேட்டான்.” என அழுதாள் தன்மயா.

அவளோ துடித்துப் போனவளாக “ஏன் இப்படி பண்ணீங்க ராணா. தெ.... தெரியாம அந்த ரூம்குள்ள போய்ட்டீங்களா....?” என அப்போதும் தன் நம்பிக்கையை விடாது கேட்டாள் அபி.

விக்டோரியாவோ
“தெரிஞ்சுதான் போனேன். அந்த ட்ரெஸ்ஸை வாங்க

போனேன்.” என்றதும் அபிமயாவிற்கோ மொத்தமாக அனைத்தும் நொறுங்கிப் போனது.

“ஐயோ அபி அண்ணி நீங்க நினைக்கிற மாதிரி இல்ல. ட்ரஸ்ட் மீ. நீங்களாவது என்னை நம்புங்க.” என வேதனைக் குரலில் கூறினான் ஆதி.

“எ.... என்னை அண்ணின்னு சொல்லாத ஆதி.” எனச்

சீறியவள் விம்மி வெடித்த அழுகையோடு தன்மயாவை அழைத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

ஆதியோ இறுகிப் போனான். அடுத்த சில நொடிகளில் அங்கே வந்த போலீஸ் ராணாவோடு சேர்த்து ஆதியையும் கைது பண்ணியது.

தன்மயாவின் குடும்பத்தினரோ தன்மயாவின் மனதை

மாற்றும் பொருட்டு அவளை மேற்படிப்புக்காக வெளியூர் அனுப்பி வைத்தனர்.

அபிமயாவோ ராணாவை மறக்க முடியாது நடை பிணமாக மாறிப் போனாள். அடுத்த சில தினங்களில் ராணா தற்கொலை செய்து இறந்து விட்டான் என்பது தெரிய, கதறலோடு ராணாவை தேடி அவனுடைய இல்லம் சென்றாள் அபிமயா.

அவளுடைய காதல் ஒன்றும் பொய் அல்லவே. கதறித் துடித்தவாறு உள்ளே வந்தவளை வாசலோடு நிறுத்தினான் ஆதி.

“அங்கேயே நில்லு அபி.” என்ற கர்ஜனையில் அபியின் உடலோ தூக்கிவாரிப் போட்டது.

தன்னை அண்ணி அண்ணி என பாசமாக அழைப்பவனுடைய

வெறுத்த குரலில் அவளோ அக்கணமே மாண்டு போனாள்.

“தயவு செஞ்சு போயிருங்க. அவனை நீங்க நம்பலை. உங்க காதல் இவ்ளோ தானா அண்ணி.? சே....! அவனோட மனசு உங்களுக்கு தெரியாதா....? உங்களுக்கு எத்தனை தடவை அவன் கால் பண்ணினான். எடுத்து ஒரு வார்த்தை பேசிருக்கலாம்ல.” என்றவன் தன் கண்ணில் வழிந்த கண்ணீரை சினத்தோடு சுண்டி எறிந்தான்.

“இப்போ அவன் இங்கே இல்லை.” என்றவன் அபியை வீட்டினுள் அனுமதிக்காது திருப்பி அனுப்பினான்.

அழுது அழுது ஓய்ந்து போனவள் தன் வீட்டினுள் நுழைந்ததும் மயங்கிச் சரிந்தாள். என்னவோ ஏதோ என பதறிய அவளுடைய குடும்பத்தினருக்கு அவள் கர்ப்பம் என்ற செய்தி இடியாக தலையில் வந்து விழுந்தது.

கர்ப்பத்திற்கு காரணமானவனோ உயிருடன் இல்லை என்பதை அறிந்த அக் குடும்பத்தினர் மொத்தமாக இடிந்து போயினர். வெளியூரில் இருந்த தன்மயாவுக்கோ இது எதுவும் தெரியாமலேயே போனது.

பின் தூரத்து உறவினர் ஒருவர் அபியை பெண் கேட்டு வர அவரிடம் அனைத்து உண்மையையும் கூறி அபியை மணம் முடித்துக் கொடுத்தனர்

அவளுடைய குடும்பத்தினர். ஆனால் யஷ்விந்த் பிறந்த சில மாதங்களிலே அவளுடைய குடும்பத்தினர் அனைவரும் விபத்தில் இறந்து விட, யஷ்விந்தும் தன்மயாவும் மாத்திரமே எஞ்சினர்.

ஆதி கூறக் கூற ஒவ்வொன்றாக நடந்த அனைத்தும் அவளுடைய ஞாபக அடுக்கில் வரத் தொடங்க அவளுடைய கண்களிலும் கண்ணீர் நிறைந்து போனது.

ராணா என்பவன் தவறே செய்யாத அப்பாவி என புரிந்து கொண்டதும் அன்று நடந்த சம்பவத்தை எண்ணி துடிதுடித்துப் போனாள் தன்மயா.

தன் சகோதரியின் சோகமான முகத்திற்குப் பின்பிருந்த அவளுடைய காதல் தோல்வியை அக்கணம் உணர்ந்து கொண்டாள் தனு.

ஆதியின் கரங்களில் இருந்த ராணாவின் புகைப்படத்தை வாங்கிப் பார்த்தவள் “சா…. சாரி மாமா….” என உதடுகள் துடிக்க கூறினாள்.

சொல்லில் வடிக்க இயலாத துயரம் அவளை மூச்சடைக்க வைக்க, தன் மார்பை தன் ஒற்றைக் கரத்தால் அழுத்தியவள் ராணாவின் புகைப்படத்தை சுவற்றில் மாட்டினாள்.

அவளுடைய கரங்களோ நடுங்கத் தொடங்கின. எல்லை இல்லாத சோகம் எனும் சாகரத்தில் மூழ்கியவள் அந்த புகைப்படத்தின் முன்னே மண்டியிட்டு அமர்ந்து தன் கரங்களை கூப்பிக் கொண்டாள்.

குரல் நடுங்க புகைப்படத்தோடு பேசத் தொடங்கியவளை வெறித்துப் பார்த்தான் ஆதி.

“மாமா சா... சாரி மாமா. திடீர்னு ட்ரெஸ் மாத்துற ரூம்ல நீங்க வந்ததும் பதறிப் போய்ட்டேன். எ.... என்னை யாருமே இ.... இப்படி பார்த்தது இல்ல. எங்க அக்காக்கு முன்னாடி கூட நான் ட்ரெஸ் மாத்த மாட்டேன். எந்த பொண்ணாலையும் இதை தாங்கிக்க முடியாதுதானே.? உங்களுக்குள்ள ஒரு பொண்ணோட ஆல்ட்டர் இருக்குன்னு எனக்கு எப்படி தெரியும்.? அந்த வயசுல ஆல்ட்டர்னா என்னன்னு கூட

எனக்கு தெரியாது மாமா. தெரிஞ்சோ தெரியாமலோ நான் உங்களை ஹர்ட் பண்ணிட்டேன். உ.... உங்களோட சா.... சாவுக்கு காரணமாயிட்டேன். என்னை மன்னிச்சிருங்க மாமா.... எ.... என்னை மன்னிச்சிருங்க ப்ளீஸ்.” என மண்டியிட்டு அமர்ந்து மன்றாடி கதறினாள் அவள்.

ராணா என்பவன் எந்தத் தவறும் செய்யாதவன் அல்லவா.? அவனை எண்ணி

எண்ணி தன்மயாவின் உள்ளம் சிதறிப் போனது.

விடியலும் அவளுடைய துயரில் பங்கேற்க வந்துவிட, தூக்கத்தை தொலைத்த வண்ணம் ஆதியும் தன்மயாவும் அந்த அறையினுள்ளேயே முடங்கிப் போயினர்.

ஆதியோ இந்த அறையினுள் வந்தால் ராணாவின் நினைவுகள் அவனை வாட்டி

வதைக்கும் என்பதனால் இத்தனை நாட்கள் வராமல் இருந்தவன் இன்று தன்மயாவுடன் உள்ளே நுழைந்திருந்தான்.

ஒவ்வொரு நினைவுகளும் அவனை வாள் கொண்டு அறுப்பதைப் போல இருந்தது.

கண்களைத் துடைத்தவாறு எழுந்த தன்மயாவோ அந்த அறையை சுத்தம் செய்யத் தொடங்கினாள்.

“ப்ச்.... நோ நீட் குயின். உனக்கு கைல காயம் இருக்கு. நீ போ.” என அவளைத் தடுத்தான் ஆதி.

அவளோ அவனைத் திரும்பியும் பாராமல் தன்னால் முயன்ற அளவு அந்த அறையை சுத்தப்படுத்தி விளக்கை ஏற்றி வைத்தவள் தன்னுடைய அறைக்குச் சென்று வேறு புடவை ஒன்றை அணிந்து கொண்டாள்.

தூங்கிக் கொண்டிருந்த யஷ்விந்தை எழுப்பியவள் அவனை அழைத்துக் கொண்டு ஆதியின் முன்னே வந்து நின்றாள்.

“வாட்....?” என அவளைப் பார்த்து புருவம் உயர்த்தியவன் யஷ்விந்தை இறுக அணைத்து முத்தம் பதித்தான்.

“நான் கிளம்புறேன் ஆதி.”

“வாட்....?” அவனுடைய விழிகள் அதிர்ச்சியில் விரிந்தன.

“சாரி நாங்க கிளம்புறோம்.” என்றவள் ஆதியின் கரத்தில் இருந்த யஷ்விந்தை இழுத்து எடுத்துக் கொண்டு நடக்கத் தொடங்க அவளுடைய வழியை மறித்து நின்றான் ஆதி.

“எங்கடி போற.?” உறுமியது அவனுடைய குரல்.

“இந்த வீட்டை விட்டுப் போறேன்.” என்றவாறு அவனைக் கடந்து செல்ல சினத்தில் அவளது கன்னத்தில் ஓங்கி அறைந்தான் அவன்.

அடுத்த நொடியே அவனுடைய தாடியடர்ந்த கன்னத்தில் அவளும் குறையாத சீற்றத்தோடு அறைந்து விட, அந்த இடமே சட்டென அமைதியானதைப் போல இருந்தது.

“ஹௌ டேர் யு.” எனச் சீறியவன் அவளுடைய கூந்தலை கொத்தாகப் பிடிக்க, அவனிடம் இருந்து திமிறி விடுபட்டவள் “டோன்ட் டச் மீ ஆதி.” வெடித்தாள்.

“நீ யாரு என்னை பழிவாங்க....? உனக்கொரு தங்கச்சி இருந்து அவ ட்ரெஸ் மாத்திட்டு இருக்கும் போது ஒருத்தன் உள்ளே போனா நீ சும்மா விடுவியா....? கட்டின புருஷனா இருந்தாலும் மனைவியோட சம்மதம் இல்லாம லவ் மேக்

பண்ணுறது தப்பு. அப்படி இருக்கும் போது நான் பண்ணதுல என்ன தப்பு.?

அப்போ எனக்கு பதினெட்டு வயசு ஆதி. டி.ஐ.டி நோய்னா என்னன்னே தெரியாது. நீ ஒரு டாக்டர்தானே உனக்கு அறிவில்லையா....? அப்போ என்னோட மனநிலை எப்படி இருக்கும்னு தெரியாத நீ எல்லாம் ஒரு சைக்காட்ரிஸ்ட்டா....?" என சீறியவள் பொல பொலவென வழிந்த கண்ணீரை தன்

புடவை முந்தானையில் அழுத்தித் துடைத்தாள்.

“நான் என்னடா தப்பு பண்ணினேன்....? அத்து மீறி நுழைஞ்சதால கத்தினேன். அது எல்லா பொண்ணுங்களுக்கும் இருக்கிற உணர்வுதானே. பாதி ட்ரெஸ்ஸோட நிற்கும் போது நீ சொல்றதை பொறுமையா கேட்க முடியுமா....? என்னோட மனசு என்ன பாடு பட்டிருக்கும்னு உனக்கு தெரியுமா....? இதை மறக்க

முடியாம எத்தனை நாள் பைத்தியகாரி மாதிரி அழுதிருப்பேன் தெரியுமா....? பொண்ணுங்களுக்கு அவங்களோட மானம்தான் பெருசு. அதுல கலங்கம் வந்தா எப்படி தாங்க முடியும்.? இரண்டு தடவை சூசைட் பண்ண ட்ரை பண்ணினேன். இப்போ வரைக்கும் ட்ரெஸ் கடைக்கு நான் போறதே கிடையாது ஆதி. உங்களோட ஃபேஸ் எனக்கு நினைவு இல்ல. பட் அன்னைக்கு நடந்தது இப்போ வரைக்கும்

அழியாத வடு மாதிரிதான் இருக்கு.” என்றவள் முகத்தை மூடிக் கொண்டு தன் பக்க வேதனைகளை கொட்டத் தொடங்கினாள்.

அவள் இரண்டு முறை தற்கொலைக்கு முயன்றாள் என்றதும் ஆதியின் இதயம் அக்கணம் தன் துடிப்பை நிறுத்தியே விட்டது.

ஒருவர் செய்யும் தவறுக்கு மற்றவர் தண்டனை

கொடுப்பார் எனில் இறைவன் எனும் சர்வ வல்லமை படைத்தவன் எதற்கு இருக்கின்றான்.?

நாணயத்திற்கு இரண்டு பக்கம் உண்டல்லவா....? அதைப் போலத்தான் மனிதர்களின் வாழ்க்கையும்.

“ராணா மாமாக்கு இப்படி நடந்திருக்க கூடாதுதான். என் மனசு இன்னும் வலிச்சுகிட்டுதான் இருக்கு.

ஆனா என்னோட சூழ்நிலை பத்தியும் நீங்க நினைச்சுப் பார்த்திருக்கணும். நீங்க எதுக்கு என்னை தண்டிக்கணும்.? நீங்க யாரு சார் கடவுளா.?”

“ஏய்ய்ய்....” விரல் நீட்டி எச்சரித்தான் ஆதி.

“என்ன மிரட்டுறீங்களா....?” சீறினாள் தன்மயா. அவளால் அவனுடைய செயல்களை ஜீரணிக்கவே முடியவில்லை.

“இப்போ என்னடி சொல்ல வர்ற.? உன் மேல எந்த தப்பும் இல்லைன்னு சொல்ல வர்றியா.?”

“ஆமா.... எந்தப் பொண்ணு என் இடத்துல இருந்தாலும் இப்படித்தான் பண்ணிருப்பா.” என்றவளின் கழுத்தை இறுகப் பற்றியவன் “வாயை மூடுடி.

உள்ளே வந்த ராணா உன்கிட்ட தப்பா நடந்துகிட்டானா சொல்லு.

உன்னை தப்பா தொட்டானா.? இல்லை தப்பான பார்வை பார்த்தானா.? தப்பான எண்ணத்தோட வர்ற ஆம்பளை இப்படி பப்ளிக் பிளேஸ்ல உள்ளே வருவானாடி.? என்னைப் பார்த்து அறிவிருக்கான்னு கேட்டியே உனக்கு முதல்ல அறிவு இருக்கா.? தப்பான எண்ணத்துல உள்ளே வந்திருந்தா உன்னை ஒரே அடில அடிச்சு விழுத்திட்டு ரேப் பண்ணிட்டு போயிருப்பமே.” என்றவன் தன்

கரத்தை அவளுடைய முகத்தில் குத்துவதைப் போல ஓங்கியவன் அப்படியே தன் கரத்தை சுவற்றில் குத்தினான்.

“ஏய். அன்னைக்கு நான் உள்ளே வந்ததும் என்னடி பண்ணினேன்.? என்னோட டீஷர்ட்டை கழற்றி உனக்கு போட்டுத்தானே விட்டேன். என்னோட கண்ணுல ஒரு துளி காமம் தெரிஞ்சிருக்குமாடி.? நான் உன்னை தேவதைன்னு நினைச்சேன்டி. உன்னை குழந்தைன்னு நினைச்சுத்தான்

மயா பேபின்னே கூப்பிட்டேன். கால்ல விழுந்து கெஞ்சினனேடி பாவி. ஒரே ஒரு தடவை நான் சொல்றதை கேட்டுருந்தா இப்போ நாலு பேருமே சந்தோஷமா வாழ்ந்திருக்கலாமே” என கரகரப்பான குரலில் கூறியவன் “ச்சை....” என்றவாறு தன் பிடியை அகற்றினான்.

“நாலு பேருமா....?” என அதிர்ந்தாள் தன்மயா.

“ஆமாடி. அண்ணனும் அபி அண்ணியும் ஒன்னா இருந்திருப்பாங்க. நானும் நீயும் ஒன்னா சந்தோஷமா வாழ்ந்திருப்போம்.” என்றவன் அவளுடைய திகைத்த முகத்தை வெறித்துப் பார்த்தான்.

“நீ சொன்னியே அஞ்சு மாசத்துக்கு முதல் ஐ லவ் யூன்னு. நான் உன்னை எப்போ பார்த்தேனோ அப்போ இருந்தே லவ் பண்றேன்டி. சாரி பண்ணினேன்.

இப்போ உன் மேல எந்த லவ்வும் இல்ல. எனக்கு என்னோட அண்ணாதான்டி முக்கியம். எப்போ அவன் உன்னால இல்லாம போனானோ அன்னைக்கே என்னோட காதலுக்கு சமாதி கட்டிட்டேன். நான் உலகத்துல வெறுக்கிற முதல் பொண்ணே நீதான்டி.” என்றவன் வெறுப்போடு முகத்தை சுருக்கினான்.

“கோடி கொட்டிக் கொடுத்தாக் கூட உங்களோட காதல்

எனக்கு தேவையே இல்ல. இந்த உலகத்துல நான் ரொம்ப ரொம்ப ரொம்ப ரொம்ப ரொம்ப ரொம்ப ரொம்ப ரொம்ப ரொம்ப வெறுக்கிற ஒருத்தர்னா அது நீங்க மட்டும்தான்.” என்றாள் தன்மயா.

“தப்பு பண்ணினது நீ. அதுக்கான தண்டனையை நான் கொடுத்தேன்.”

“நீ இப்போ பண்ற எல்லாத்துக்கும் யார்

தண்டனை கொடுப்பாங்க ஆதி.?”

“ப்ச்....” தோள்களை குலுக்கினான் அவன்.

“யஷ்வியோட மருந்து செலவுக்கு நான் லோன் கேட்டும் கிடைக்கலை. உதவி பண்றேன்னு சொன்னவங்களும் பண்ணலை. இதெல்லாம் உன்னோட வேலை தானே ஆதி.”

“ஆமா. உனக்கு ஹெல்ப் கிடைக்க இருந்த எல்லா வழியையும் அடைச்சு உன்னைக் கார்னர் பண்ணி என்கிட்ட விபச்சாரி மாதிரி வர வைச்சது நானேதான். ட்ரெஸ் மாத்துறதைப் பார்த்ததுனாலதானே நீ என் அண்ணாவை அசிங்கப்படுத்தின.

அதுக்காகத்தான் உன்னையே என்னைத் தேடி வர வெச்சேன். என் கண்ணு முன்னாடியே உன்னை ட்ரெஸ் மாத்த

வெச்சேன். உன்னோட மொத்த உடம்பையும் நீ துடிக்க துடிக்க பார்த்து ரசிச்சேன். எல்லாத்தையும் பிளான் பண்ணிதான் பண்ணினேன்.” என்றதும் அவளுக்கோ அவமானத்தில் உடல் சிவந்து இறுகியது.

“டி.ஐ.டி நோய் இருந்தா எவ்வளவு வேதனையா இருக்கும்னு உனக்கும் புரியணும்ல அதான் ஸ்பிலிட் பர்சனால்டியா நடிச்சேன். எங்க அண்ணாவோட வேதனை

நான் அனுபவிச்ச வலி எல்லாத்தையும் உனக்கு புரிய வெச்சேன்.”

அவளோ முகம் சிவக்க அவனை நெருங்கியவள் “அப்போ எதுக்குடா என்னை ரேப் பண்ணின.? எவ்வளவு அழுதேன். எனக்கு விருப்பமே இல்லாம என்னைத் தொட்டு.... ச்சை. பொறுக்கி. என்னை உன்னோட தேவைக்கு யூஸ் பண்ணிகிட்ட ஆதி.” என்றவள் அவனுக்கு சரமாரியாக அடிக்கத் தொடங்கினாள்.

அவளுடைய கரங்களை தடுத்துப் பிடித்தவன், “அதுக்குத்தான் அஞ்சு லட்சம் கொடுத்தனே.” என சாதாரணமாகக் கூறினான்.

சட்டென தன் கரங்களால் காதுகளை இறுக மூடிக் கொண்டாள் தன்மயா.

அவளுடைய உடலோ நடுங்கிக் கொண்டு இருந்தது.

“எனக்கு எப்படி வலிச்சுதுன்னு உனக்கு தெரியுமா ஆதி. ரெண்டு நாள் கஷ்டப்பட்டுதான் நடந்தேன். எத்தனை இடத்துல உன்னோட பற்தடம் இருந்திச்சு தெரியுமா.? ரேப் கூட அவ்ளோ மோசமா இருக்காது. நீ பண்ணின கொடுமையை அஞ்சு லட்சத்துக்காக நான் தாங்கிக்கலை. என்னோட யஷ்விந்துக்காக தாங்கிகிட்டேன்.” என்றவள் அவனைத் தாண்டி நடக்கத் தொடங்கினாள்.

அவனோ அவளோடு இணைந்து நடந்தவன் “சோ மேடம் வீட்டை விட்டுப் போகப் போறீங்க.?” எனக் கேட்டான்.

“ஆமா நான் எதுக்கு இங்கே இருக்கணும்.? நான் போறேன்.” என்றவளின் கரத்தைப் பற்றி சுண்டி இழுத்தவன் அவளைத் தன் கரத்தில் ஏந்திக் கொண்டான்.

“வ்விடு வ்விடு ஆதி. லீவ் மீ. விடு.” என துடித்தவளை தூக்கிச் சென்று அவனுடைய அறையில் விட்டவன் அந்த அறைக் கதவை பூட்டிக் கொண்டு அவளை நெருங்கினான்.

“வ்வேணாம் ஆதி. என்னைப் போக விடு. என்கிட்ட வராத.” என்றவளை மேலும் மேலும் நெருங்கியவன் அவளை அழுத்தமாகப் பார்த்தான்.

அவளுக்கோ உடல் சோர்வடைந்து போனது. வாந்தி வருவதைப் போல இருக்க, சட்டென தன் கரங்களால் தன் வாயை பொத்தியவள் வெளியே ஓடிச் செல்ல முயன்று கதவு பூட்டியிருப்பதைக் கண்டு திகைத்து நின்றாள்.

“ஹேய் குயின் பார்த்துடி.” என்றவன் கதவைத் திறக்க முதலே அவள் கடகடவென வாந்தி எடுத்துவிட அவனோ திகைத்துப் போனான்.

அவளோ தொப்பென தரையில் அமர்ந்து விட, “ஹேய் ரிலாக்ஸ்... ரிலாக்ஸ்டி.” என்றவாறு அவளுடைய நெற்றியைப் பிடித்து விட்டான் ஆதி.

மீண்டும் அவள் ஓங்காரிக்க சட்டென அவளுடைய வாந்தியை தன் கரங்களில் ஏந்திக் கொண்டவன் அவளுடைய உடல் நிலையை எண்ணி வேதனை கொண்டான்.

“அச்சோ சாரி.... சாரி....” என பதறியவளை அப்படியே அமரச் செய்தவன் எழுந்து சென்று வாந்தியைக் கொட்டிவிட்டு மீண்டும் அவள் அருகே வந்தான்.

அப்படியே தரையில் சரிந்து கண் மூடிக் கிடந்தவளைப் பார்க்க அவன் உள்ளம் பிசையத் தொடங்கியது.

“குயின் எழுந்திரு.” என்றவனைப் பார்த்தவள் முகம் திருப்பினாள்.

“ஏய்.... முதல்ல எழுந்திருடி அப்புறமா சண்டை போட்டுக்கலாம்.”

“ம்ஹூம் முடியலை. ரொம்ப சோர்வா இருக்கு. தலை சுத்துற மாதிரி இருக்கு.” என்றவள் மீண்டும் கண்களை மூடிக் கொண்டாள்.

அவளுடைய புடவையிலும் வாந்தி பட்டிருப்பதைக் கண்டவன் ஒரு ஈரத் துணியை எடுத்து வந்து அவளுடைய முகத்தை துடைத்து விட்டான். பின் கரங்களை தண்ணீர் கொண்டு வந்து கழுவி விட்டவன் அவள் உடுத்தியிருந்த புடவை முந்தானையை அவிழ்க்க, வெடுக்கென தன் விழிகளைத் திறந்து அவனை மிரண்டு போய் பார்த்தாள் மாது.

“ப்ச். ட்ரெஸ் அழுக்கா இருக்குடி.”

“வ்வேணாம்....” என பலவீனமாக முனகியவளை இயலாமையுடன் பார்த்தவன் எழுந்து சென்று ஒரு போர்வையை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

“இதை போர்த்துக்கிட்டு உன்னோட புடவையை கொடு குயின்.” என்றவன் மறுபக்கம் பார்த்தபடி நின்றான்.

அவளோ தான் கட்டியிருப்பதை அவிழ்த்து விட்டு போர்வையால் தன்னை மூடிக் கொண்டவள் “இது இருக்கட்டும் ஆதி நானே வாஷ் பண்றேன்.” என்றாள்.

அவனோ மீண்டும் அவளை தூக்கி படுக்கையில் கிடத்தியவன் “தூங்கு....” என்றான்.

“ம்ம்....”

அவள் விழிகளை மூடிக் கொண்டதும் அவளுடைய புடவையை எடுத்துச் சென்று வாஷிங் மெஷினில் போட்டவன் அவள் வாந்தி எடுத்த இடத்தை சுத்தம் செய்யத் தொடங்கினான்.

எந்தவித வெறுப்பும் இன்றி அனைத்தையும் சுத்தம் செய்தவன் தன்னுடைய ஆடையை மாற்றி விட்டு யஷ்விந்தை சென்று பார்த்தவன் அவன் விளையாடுவதை உறுதி

செய்து விட்டு மீண்டும் அவள் அருகே வந்தான்.

அவளோ ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதைக் கண்டவன் அமைதியாக அவள் அருகே அமர்ந்தான்.

“ரெண்டு தடவை சூசைட் பண்ண ட்ரை பண்ணினேன்.” என்ற அவளுடைய அழுகுரல் மீண்டும் அவனுடைய காதில் ஒலித்தன.

சட்டென படுக்கையை இறுகப் பற்றிக் கொண்டான் ஆதி. அவனுடைய கரங்களோ நடுங்கத் தொடங்கின.

தற்கொலை என்ற ஒற்றை வார்த்தை அவனை நிலைகுலையச் செய்தது.

ராணாவைப் போல இவளும் தற்கொலை பண்ணியிருந்தால்....? அந்த நினைப்பே இவனுடைய இதயத்தை வேரோடு பிடுங்கி எடுப்பதைப் போல வலிக்கச் செய்தது.

படுக்கையில் சோர்ந்து தூங்குபவளை இமை சிமிட்டாது பார்த்தான் அவன்.

மூன்று வருடங்களுக்கு முதல் பார்த்த தன்மயாவிற்கும் இப்போது இருக்கும் தன்மயாவிற்கும் ஆயிரம் வித்தியாசங்களைக் கூறி விடலாம் போல இருந்தது.

அவளோ சற்றே அசைந்து படுக்க, அவளுடைய போர்வை விலகியது. சட்டென தன்

பார்வையைத் திருப்பிக் கொண்டான் ஆதி.

ஆனால் அடுத்த நொடியே அவனுடைய சம்மதம் இன்றி அவனுடைய தலை அவள் படுத்திருந்த திசைப் பக்கம் திரும்பியது.

போர்வை அவளுடைய இடை வரை நழுவி இருக்க, முந்தானை மறைக்காத அவளுடைய தனங்களின் அழகில் அவனுடைய சுவாசம்

எக்குத் தப்பாக எகிறத் தொடங்கியது.

முழு உடலையும் காட்டினால் கூட ஏறாத போதை இலை மறை காய் போல வெளிப்படும் அங்கங்களின் வடிவில் உச்சத்தை தொடும் அல்லவா.? அந்த நிலையை அக்கணம் நன்கு உணர்ந்து கொண்டான் ஆதி.

அவன் போட்டு விட்ட தாலியோ அவளுடைய மலை

முகடுகளுக்கு நடுவே பாதுகாப்பாக கிடப்பதைக் கண்டவன் பெரு மூச்சு விட்டான்.

அவளுடைய எழில் மலர்களில் இருந்து பார்வையை கீழே இறக்கியவன் அவளுடைய மேடிட்ட வயிற்றைக் கண்டு புன்னகைத்தான்.

தன் குழந்தை அவளுடைய வயிற்றினுள் வளர்ந்து

வருகின்றது என்ற உணர்வே அவனை சிலிர்க்க வைத்தது.

மெல்ல எழுந்து அவளுடைய வெற்று வயிற்றில் தன் கரத்தை வைத்து வருடியவனது மயிர்க்கால்கள் அத்தனையும் சிலிர்த்து நின்றன.

“சீக்கிரமா வெளியே வந்திரு பேபி. எனக்குன்னு இந்த உலகத்துல யஷ்வியையும் உன்னையும் தவிர யாருமே

இல்லை. அப்பாகிட்ட வந்துரு. நாம அமெரிக்கா போயிரலாம்.” என்றவன் குனிந்து அவளுடைய வயிற்றில் மென்மையாக முத்தம் பதிக்க முயல, இடையில் தன் கரத்தை வைத்து தடுத்தாள் தன்மயா.

அவனோ அதிர்ந்து அவளுடைய முகம் பார்க்க, விலகிக் கிடந்த போர்வையை எடுத்து தன்னை மூடிக் கொண்டவள் “இந்தக் குழந்தை

மேல அவ்ளோ பாசமா ஆதி.?” எனக் கேட்டாள்.

அவளுடைய முகத்தைப் பார்த்தவன் “இது என்னோட குழந்தைடி. பாசம் இல்லாம போகுமா.?” எனக் கேட்டவன் போர்வைக்கு மேலே அவளுடைய வயிற்றில் கரம் வைத்து வருடினான்.

“ஓ.... அப்போ நான் குழந்தையை பெத்து உன்கிட்ட

கொடுத்துட்டு போகணுமா ஆதி.?”

“எஸ். ஐ நீட் மை பேபி.” என்றவனைப் பார்த்து அவளுடைய இதழ்கள் இகழ்ச்சியாக வளைந்தன.

“நான் குழந்தையை கொடுக்கலைன்னா என்ன பண்ணுவீங்க.?”

“உன்கிட்ட இருந்து எப்படி வாங்கிக்கணும்னு எனக்கு நல்லாவே தெரியும்.”

“பட்.... எனக்கு இப்போ குழந்தை வேணாம். நான் அபார்ஷன் பண்ணிக்கலாம்னு இருக்கேன்.” என சாதாரணமாக கூறியவளை கொல்லும் வெறியோடு பார்த்தான் ஆதி.

ஆதியின் பலவீனத்தை அறிந்து கொண்டவள் இனி

அவனை வதைக்காது விடுவாளா....?

தன் குழந்தையை தன்னுடைய கரங்களில் ஏந்தும் தருணத்திற்காக காத்துக் கொண்டிருந்தவனிடம் குழந்தை வேண்டாம் அழித்து விடுவோம் எனக் கூறியவளின் குரல் வளையை நெறித்துக் கொல்ல வேண்டும் என்ற வெறியே அவனுள் கிளர்ந்தது.

ஏற்கனவே சோர்ந்து கிடப்பவளிடம் தன் கடுமையை காட்ட விரும்பாதவன் தன்னை மிகுந்த சிரமத்தின் மத்தியில் அடக்கிக் கொண்டான்.

அவனுடைய கை முஷ்டிகளோ இறுகிப் போயின.

“இதோ பார் குயின். என்னைக் கோபப்படுத்தணும்னு எதையாவது உளறிகிட்டு

இருக்காத. இந்தக் கையால என்னை கொலை பண்ண வெச்சுராத.”

“கொன்னுருங்க ஆதி. அது கூட நிம்மதிதான்.” என்றவளின் பதிலில் தன்னையே கடிந்து கொண்டவன் அவளுடைய கரத்தை பற்றி மென்மையாக வருடியவாறு “கொலையோ தற்கொலையோ இது எதுக்கும் முடிவே கிடையாதுடி.” என்றவன் அவளுடைய அழகிய விழிகளைப் பார்த்து

“எனக்கு என்னோட பேபி வேணும் குயின்.” என்றான்.

“பட் எனக்கு வ்வேணாம் ஆதி.” என பிடிவாதமாக கூறியவளின் கூந்தலை ஒதுக்கி விட்டவன் “என்னடி ரிவெஞ்ச் எடுக்கப் போறியா....?” எனக் கேட்டான்.

அவனுடைய நேரடிக் கேள்வியில் அதிர்ந்தவள் தன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

“உன்னைப் பொறுத்த வரைக்கும் இந்த ஆதியை பழிவாங்கணும். ரைட்....? அதுக்காக நீ என்ன வேணும்னாலும் பண்ண ரெடியா இருக்க.” என்றவனை அதிர்ந்து பார்த்தாள் அவள்.

“வ்வேணாம் குயின் ட்ரை பண்ணாத. உன்னோட டைம்தான் வேஸ்ட் ஆகும். அஞ்சு மாசம் முடிய போகுது. இனி அபார்ஷன்லாம் பண்ண முடியாது. அன்ட் கீழ போட்ட

ரோஜா இதழ்களையே மிதிக்க தயங்கின உன்னால கண்டிப்பா நம்ம குழந்தையை கொல்லவே முடியாது. சோ இப்படி
பைத்தியக்காரத்தனமான ஐடியாவை தூக்கிப் போட்டுட்டு நல்லதை மட்டுமே யோசி.” என்றான் ஆதி.

“குழந்தை ஊனமா இருந்தா இருபது வாரம் ஆனாக் கூட சட்டப்படி அபார்ஷன் பண்ணிக்கலாம் ஆதி.

இந்தக் குழந்தை ஊன….” என அவள் சொல்லி முடிக்கும் முன்பே தன் கரத்தை ஓங்கி அந்தக் கட்டிலின் விளிம்பில் அடித்தான் ஆதித்யன்.

அவன் விழிகளில் தெரிந்த ரௌத்திரத்தில் ஆடித்தான் போனாள் தன்மயா.

அவன் அடித்த அடியில் அவள் படுத்திருந்த படுக்கை ஒரு கணம் அதிர்ந்து அடங்கியது. அவனுடைய கரமோ வீங்கிப்

போக, அதனை மூடித் திறந்தவன் அவளை உறுத்து விழித்தான்.

அந்தப் பார்வையில் அவளுக்கோ உள்ளம் படபடத்துப் போனது. விழிகள் கலங்க அச்சத்தில் விழிகளை இறுக மூடிக் கொண்டவளுக்கோ வதனம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் வியர்த்து வழியத் தொடங்கியது.

“இவ்ளோ பயம் இருக்குற நீ வாயை மூடிகிட்டு இருக்கணும்.” என்றான் ஆதி.

எரிச்சலோடு கூடிய இயலாமையுடன் அவளை வெறித்துப் பார்த்தாள் தன்மயா.

அவளுடைய விழிகளின் ஓரத்தில் தேங்கி நின்ற உவர் நீர்த் துளிகளை துடைத்து விட்டவன் “இன்னைக்கு உனக்கு ஸ்கேன் பண்ணிப் பார்க்கனும் குயின். டாக்டர் சொன்ன டைம்கு போய்

பார்த்துட்டு வந்துர்லாம்.” என்றான்.

“ஐ ஹேட் யு ஆதி. நீ ஒரு செல்ஃபிஷ்”

“தேங்க் யு ட்ராமா குயின். நீ என்னை வெறுக்கிறதை விட நான் உன்னை அதிகமாக ஹேட் பண்றேன்.” என தன் வெறுப்பையும் சிரித்துக் கொண்டே கூறினான் ஆதி.

“நீ ஒரு டெவில் ஆதி.”

“ப்ச்.... போதும்டி. கொஞ்ச நேரம் தூங்கு. டயர்டா இருக்குன்னு சொன்னல்ல.”

“ம்ம்... நைட் முழுக்க தூங்கவே இல்லை.”

“நம்ம மிட் நைட் வெடிங் எப்படி இருந்திச்சு.?

“உன்னை மாதிரியே சைக்கோத்தனமா இருந்திச்சு.”

“நாட் பேட் ட்ராமா குயின். ஹேய் இனி புடவை கட்டாத.”

“ஏன்.?”

“இந்த டைம்ல உடம்பை இறுக்காத மாதிரி பெரிய ட்ரெஸ்ஸா போட்டுக்கோ. அதுதான் உடம்புக்கு நல்லது. என்னோட பேபிக்கும் அதுதான் நல்லது.”

அவளோ அவன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தவள்

திடுமென அதிர்வோடு எழுந்து அமர்ந்தாள்.

“ஹேய் என்னாச்சுடி.?”

“வ.... வயித்துக்குள்ள பா.... பாப்பா....” என தடுமாறியவள் தன் இரண்டு கரங்களையும் தன் வயிற்றில் வைத்துக் கொண்டு விழிகளை மூடிக் கொண்டாள்.

“ஏய் மயா. பாப்பாக்கு என்னடி.? என்னாச்சு....? மயா பேபி ப்ளீஸ்

என்னன்னு சொல்லு.” என்றவன் சட்டென தன் விழிகளை விரித்தான்.

“ஹேய் குழந்தை அசையுதாடி....?” என கரகரப்பான குரலில் கேட்டான் ஆதித்யன்.

அவனுடைய விழிகளோ அவளுடைய பதிலுக்காக ஏக்கத்தோடு காத்திருந்தன.

தன் விழிகளை மெல்லத் திறந்தவள் கண்ணீர் வழிய ஆம் எனத் தலை அசைத்தாள்.

சட்டென எழுந்து அவளருகே இன்னும் இன்னும் நெருங்கியவன் “இப்போ அசையுதா மயா....? இப்போ என் குழந்தை அசையுதா....?” என விநாடிக்கு ஒரு தடவை கேட்டவாறு அவளுடைய முகத்தையும் வயிற்றையும் மாறி மாறிப் பார்த்தான் அவன்.

அவளோ அமைதியாக இருக்க, அவனுக்கோ பதற்றம் கூடியது. அதற்கு மேல் காத்திருக்க முடியாது அவளுடைய விழிகளைப் பார்த்தவாறே அவளுடைய போர்வையை விலக்கினான்.

அவளோ பதறி தன்னை மறைக்க முயல, அவனோ அவளை பொருள் பொதியப் பார்த்தவன் அவளுடைய கரங்களை விலக்கி அந்த மணி வயிற்றைப் பார்த்தான்.

ஏனோ அவனுடைய கரங்கள் அந்த நொடி நடுங்குறத் தொடங்கின. அனந்த பதற்றத்தில் தன் இமைகளை மூடித் திறந்தவன் அவளுடைய வயிற்றின் மீது கரம் பதித்தான்.

அவன் கரம் பதித்த நொடி எந்த அசைவும் தெரியாது போக, ஏமாற்றத்தோடு அவளுடைய வதனத்தைப் பார்த்தான் ஆதி.

அவனுடைய மலர்ந்த வதனமோ சடுதியில் வாடிப் போனது.

“எந்த அசைவும் தெ.... தெரியலையேடி.” என சோர்ந்து போனான் அவன்.

“பேபி.... அப்பா வந்துருக்கேன்டா....” என்றவாறு அவன் குனிந்து கூற, சட்டென அசைந்து குழந்தை. அந்த அசைவை அவனுடைய

உள்ளங்கையில் உணர்ந்தவன் அசைவற்றுப் போனான்.

சடுதியில் அவன் உடல் எங்கும் பூப் பூத்ததைப் போல சிலிர்த்துப் போனான் அவன். அவனுடைய கரம் உணர்ந்த அசைவில் அவனுடைய உடலின் அத்தனை செல்களும் புத்துணர்ச்சி பெற்றது போலும்.

அவள் வயிற்றில் இருந்த ஆதியின் கரமோ தொடர்ந்து நடுங்கிக் கொண்டிருப்பதை

கண்டவள் அவனுடைய முகத்தை திகைப்பாகப் பார்த்தாள்.

அவனுடைய கண்களோ கலங்கிப் போக, கண்ணீர் எனும் நைல் நதியோ அவனுடைய கன்னத்தை நனைத்துக் கொண்டிருந்தது.

எங்கே தன் ஸ்பரிஸம் தன்னுடைய குழந்தையை நோகச் செய்து விடுமோ எனப் பதறியவன் மிக மிக

மென்மையாக அவளுடைய வயிற்றை வருடி விட்டான்.

குழந்தையின் அசைவை முதன் முதலாக உணர்ந்து கொண்டவனது முகமோ அத்தனை மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது.

தன் மயாவின் தீக்காயம் படாத கரத்தை மெல்லப் பற்றியவன் தன் கையோடு சேர்த்து அவளது கரத்தையும் வயிற்றிலே வைத்தவன்

அவளோடு இணைந்து அந்த அசைவை உணர்ந்து களிப்படைந்தான்.

அவனுடைய விழிகள் உலகத்தின் ஒட்டு மொத்த சந்தோஷத்தையும் அவன் ஒருவன் மாத்திரம் பெற்றுக் கொண்டதைப் போல இன்ப லாகிரியில் மூடிக் கொண்டன.

தன்மயாவோ தன்னைச் சுற்றி நடந்த அத்தனையையும் மறந்து போய் ஆதியின்

முகத்தையோ இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆதியின் மறுபக்கம் இத்தனை மென்மையானதா....?

குழந்தையின் சிறு அசைவு அவனை இந்தளவிற்கு பலவீனமாக்கக் கூடுமா....?

என்னை வதைக்கும் இந்த விழிகளுக்கு கண்ணீர் உகுக்கவும் தெரியுமா....?

நடுங்கும் அவனுடைய கரங்களை உணர்ந்தவள் அவனுடைய பதற்றத்தை இரசித்தாள்.

இந்தக் கரங்கள் எத்தனை முறை என்னை அத்து மீறி தொட்டிருக்கும்....?

எத்தனை தடவை என் கன்னத்தில் மோதி என்னை காயப்படுத்தியிருக்கும்....?

எத்தனை முறை என் அனுமதி இன்றி என் துகில் உரித்திருக்கும்....?

இப்போது இப்படி நடுங்குகின்றதே என எண்ணியவளுக்கு ஆதியின் உணர்வுகள் விநோதமாகிப் போயின.

கம்பீரமான அவனுடைய கொல்லும் பார்வை கூட மிருதுவாக மாறிப் போய் விட்டதே.

திடகாத்திரமாக இறுகிப் போயிருக்கும் அவனுடைய உடல் இப்போது மென்மையை குழைத்து செய்தாற் போல மாறி விட்டதே.

“அதிசயம் தான்.” என அவளுடைய சிவந்த அதரங்கள் மெல்ல முணுமுணுத்தன.

அவனோ அந்த ஆனந்தத்தில் இருந்து வெளியே வர

முடியாது திக்குமுக்காடிப் போனான்.

“நம்ம குழந்தை வளர்ந்திருச்சுடி. “ எனக் கூறியவன் தொட்டுத் தொட்டுக் களிப்புற்றான்.

தன்னைக் கட்டுப் படுத்த முடியாது குனிந்தவன் அவளுடைய வெற்று வயிற்றில் தன் இதழ்களைப் புதைத்தான்.

“ஆஆஆதீஈஈஈஈ நோஓஓ....” என அவனை தடுக்க முயன்று அவனுடைய தலையைப் பிடித்துக் கொண்டாள் தன்மயா.

இருந்தும் அவனுடைய இதழ்கள் மென்மையாக அவளுடைய வயிற்றிலே புதைந்து போயின. கூச்சம் தாங்க முடியாது அவனுடைய சிகையை அழுந்தப் பற்றிக் கொண்டவள் தன் விழிகளை இறுக மூடிக் கொண்டாள்.

அவளுடைய உடல் முழுவதும் அவனுடைய செயலில் கூசிச் சிலிர்த்துப் போயின.

அவளுடைய இதயத் துடிப்பு ஏகத்துக்கும் எகிறியது. ஆதியின் மென்மையான முத்தத்தை உணர்ந்தவளின் மனநிலை சடுதியில் மாற, அவனை விலக்க முயன்று தோற்றுப் போனாள் அந்த மென் காரிகை.

அவனோ தன் இதழ்களை விலக்கியவன் மீண்டும் மறுபக்க வயிற்றில் தன் அதரங்களைப் பதித்து முத்தம் வைக்க, அவளுடைய கரங்கள் அவனுடைய தலை முடியினை பிய்த்து எறிவதற்கு தயாராகின.

முதல் இரண்டு முத்தங்களையும் குழந்தைக்கு வைத்தவன் அடுத்த முத்தத்தை தன்னை மறந்து குழந்தையின் அன்னைக்கு கொடுத்தான்.

அந்த முத்தமோ அவளுடைய இடையில் அழுத்தமாக பதிந்து விட, அவளுக்கோ அவஸ்தையாகிப் போனது.

சட்டென அவனுடைய தலையை தன்னில் இருந்தும் விலக்கியவள் போர்வையை இழுத்து தன்னை மூடிக் கொண்டாள்.

“எ... என்ன பண்றீங்க.... ஆதி....??? எ.... என்னை தொ....” என

தடுமாறியவாறு பேசிக் கொண்டிருந்தவளை இமைக்காது பார்த்தவன் அவளுடைய இரண்டு ஆப்பிள் கன்னங்களையும் இறுகப் பற்றிக் கொண்டான்.

“வ்விடுங்க....” என அதிர்ந்து திணறியவளுடைய முகம் நோக்கிக் குனிந்தவன் அவளுடைய இதழ்களை மென்மையாக தன் இதழ்களால் தீண்ட, அவளுக்கோ தூக்கி வாரிப் போட்டது.

அவனைத் தள்ளி விட முயன்றவளின் கன்னத்தில் அழுத்தமாக இதழ் பதித்தவன் மீண்டும் அவளுடைய இதழ்களில் தன் அதரங்களைப் புதைத்து சுவைக்கத் தொடங்கினான்.

இடைவெளி விடாமல் இதழ் தேன் பருகியவனின் விழிகளோ இன்பத்தில் சொருகித்தான் போயின.

அவளுடைய கன்னங்கள் சிவந்து இதழ்கள் சிவக்கும் வரையில் முத்தம் பதித்து விட்டு அவளை விட்டு விலகியவன் “இது என் குழந்தையோட அம்மாவுக்கு.” என மீண்டும் குனிந்து முத்தம் வைத்து விட்டு எதுவும் நடக்காதது போல அறையை விட்டு வெளியேற, அவள்தான் தவித்துப் போனாள்.

அவன் தீண்டிச் சென்ற கன்னமும் இதழ்களும் வயிறும் குறுகுறுத்தன.

அவன் தீண்டியதும் நொடியில் குழைந்து போன தன் உடலை எண்ணி வேதனை கொண்டவள் அவன் மீதிருந்த கோபத்தை இன்னும் அதிகமாக்கிக் கொண்டாள்.

அவனுடைய பலம் எது பலவீனம் எது என்பதை தெளிவாக புரிந்து கொண்டவள் குழந்தையை பெற்றெடுக்க முழு மூச்சோடு தயாராகத் தொடங்கினாள்.

அறையை விட்டு வெளியே வந்த ஆதியின் இதயமோ படபடவென துடித்துக் கொண்டிருந்தது.

‘ஓ காட் என்ன பண்ணி வெச்சிருக்கேன்.? அவளுக்கு எதுக்கு நான் கிஸ் பண்ணனும்.? வாட் த ஹெல் இஸ் கோயிங் ஆன் ஹியர்.’ என மாடிப் படிகளின் வளைவில் அப்படியே தலையை பற்றிக் கொண்டு அமர்ந்தான் ஆதி.

எத்தனையோ முறை அவன் அவளை
முத்தமிட்டிருக்கின்றான்தான்.
ஆனால் இன்று அவன் கொடுத்த முத்தம் முன்பு போல் இல்லையல்லவா. தன் உணர்வுகளைக் கூட்டி உயிரைக் கரைத்து அவளது இதழ்களில் கலந்ததை எண்ணி அவனுடைய உடல் இறுகிப் போனது.

தன் இதழ்கள் இன்னும் தித்திப்பதை உணர்ந்தவன்

வெறுப்போடு சமையல் அறைக்குள் நுழைந்து அங்கே இருந்த பச்சை மிளகாய்கள் சிலதை எடுத்து மெல்லத் தொடங்கினான்.

அந்தக் காரம் நிச்சயம் அவளுடைய இதழ்களின் தித்திப்பை மறக்கச் செய்யும் என எண்ணினான் அவன்.

அவனுடைய இதழ்களோ எரிந்து காந்தத் தொடங்கின. நிம்மதியுற்றவனாய் நீர் கூட

அருந்தாது அப்படியே மாடி ஏறியவன் தன் முன்னே நடந்து வந்து கொண்டிருந்த தன்மயாவை பார்த்த்தான்.

அவனுடைய விழிகள் அவளுடைய அனுமதியின்றியே அவளுடைய இதழ்களைப் பார்த்து விட, அந்த நொடி பச்சை மிளகாய்களின் காரம் கூட காணாமற் போனது. மீண்டும் அவனுடைய அதரங்கள் அவளுடைய ரோஜா இதழ்களின்

மென்மையையும் அந்த தேன் இதழ்களின் தித்திப்பையும் உணரத் தொடங்கின.

“நோஓஓஓஓஓஓஓஓ ஐ ஹேட் திஸ் ஃபீலிங்க்ஸ்....” எனக் கர்ஜித்தான் அவன்.

அவளோ அவனருகே வந்தவள் சப்பென அவனுடைய கன்னத்திலே அறைந்தாள்.

“என்னை இனி கிஸ் பண்ணினா கொன்னுருவேன்.”

என விரல் நீட்டி கீச்சுக் குரலில் அவனைத் திட்டியவள் தன் இதழ்களை அழுந்தத் துடைத்தவாறு அவனைத் தாண்டிச் சென்றுவிட,

அவனுடைய இதழ்களில் புன்னகை பூத்தது.

தன்மயாவுக்கோ ஆதியின் செயல்கள் யாவும் கோபத்தையும் எரிச்சலையும் ஒருங்கே ஏற்படுத்தின. இன்னும் தன்னை கைப்பாவை போல ஆட்டுவிக்கும் அவனை

முற்றிலும் வெறுத்தாள் மங்கை.

பெண்ணின் மனமோ பல நுண்ணிய உணர்வுகளால் பிண்ணப்பட்டதாகும். அன்பு, காதல், இரக்கம், சீற்றம், வெறுப்பு என எந்த வகையான உணர்வுகளாக இருப்பினும் அவை மிகுதியாகவே அவர்களிடம் வெளிப்படும்.

தன்மயாவோ சில மாதங்களின் முன்பு ஆதியை

எந்தளவிற்கு ஆழமாக காதலித்தாளோ அதை விட அதிகமாக தற்போது வெறுக்கவும் செய்தாள்.

தன்னிடம் அரக்கனை விட மோசமாக நடந்து கொண்டவன் திடீரென குழந்தை என்றதும் உருகி வழிந்ததைக் கண்டு அவளுக்கோ பேரதிர்ச்சியாக இருந்தது.

ஒரு வேளை இதுவும் அவனுடைய தேர்ந்த நடிப்பாக இருக்குமோ என எண்ணியவளுக்கோ அவன் மீது சந்தேகம் எனும் விதை விழத் தொடங்கியது.

மீண்டும் தன்னை துடிக்க வைப்பதற்காக அவன் எதுவும் செய்வான் என்பதை உணர்ந்தவள் அவனிடம் இனி ஏமாந்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள்.

அவனுடைய முத்தம் கூட நடிப்பின் ஓர் அங்கமாக இருக்குமோ என எண்ணியவளுக்கு சட்டென கண்கள் கலங்கிப் போயின.

தன் உள்ளமும் உணர்வுகளும் அவனுக்கு விளையாட்டுப் பொருளாக இருப்பதை புரிந்து கொண்டவள் பெண்ணாக பிறந்ததை எண்ணி வேதனை கொண்டாள்.

‘நான் அனுபவிச்ச வலியை கண்டிப்பா அவனுக்குத் திருப்பிக் கொடுப்பேன்.’ என தனக்குள் உறுதி எடுத்துக் கொண்டவளுக்கு தன் சகோதரியின் நினைவு வந்து நெஞ்சை வாட்டியது.

வீட்டின் வற்புறுத்தலில்தான் திருமணம் செய்திருக்கின்றாள் என்பது புரிய அவளுடைய மனமோ வேதனை கொண்டது.

எந்தத் தவறும் செய்யாத ராணாவின் நிலை அவளை மேலும் வாட்டியது.

தன்னை அடக்கிக் கொண்டவள் எதைப் பற்றியும் சிந்திக்காது இருக்க முயன்றாள்.

ஆதியோ மருத்துவமனை செல்வதற்காக தயாராகி வந்தவன் தன்மயாவைத் தேடி வந்தான். அவள் இன்னும் தயாராகாமல் எங்கோ வெறித்தபடி நிற்பதைக் கண்டதும் அவனுக்கோ சீற்றம் அதிகரித்தது.

“ஹேய் நீ இன்னும் ரெடியாகலையா.?”

“ .....”

“உன்கிட்டதான் பேசிகிட்டு இருக்கேன் குயின்.”

“இப்போ எதுக்கு கத்துறீங்க.?”

“வாட்....? கத்துறேனா.? இடியட் மாதிரி பேசாத. இன்னும் டென்

மினிட்ஸ்குள்ள நீ ரெடியாகி என் முன்னாடி நிற்கணும்.”

“எனக்கு ஆர்டர் போட நீங்க யாரு.?”

“இப்போ உனக்கு என்னடி பிரச்சனை.?” அவனது முகமோ சீற்றத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியது.

“என்னால எங்கேயும் வர முடியாது.”

“ஓஹோ....?” என்ற அவனுடைய குரலில் அவளுக்கோ சற்றே அச்சம் பிறந்தது. அவளுடைய மருண்ட முகத்தைப் பார்த்தவன் மீண்டும் தன்னை கட்டுக்குள் கொண்டு வந்தான்.

“ப்ச்....”

அவளுடைய விழிகளோ சட்டென கலங்கின. அதிக நேரம் அசையாது நின்றதால் அவளுடைய கால்களின்

வீக்கம் அதிகரித்ததைப் போல உணர்ந்தவள் சோர்ந்து போனாள்.

அவளது இயலாமையை அவளுடைய முகத்தில் படித்தவன் அவளை நெருங்கி அவளுடைய தோள்களின் மீது கரம் பதித்தவன் “ஆர் யு ஆல்ரைட் குயின்.?” எனக் கேட்டான்.

“ரொம்ப நேரம் நின்னுகிட்டே இருந்ததால பாதம்

கழுத்துலாம் வலிக்குது. ஆதி.” என்றவள் தன் கழுத்தையும் பிடித்துக் கொண்டாள்.

“ஓ.... சரி வா.” என்றவன் அவளைத் தோளோடு அணைத்துச் சென்று சோபாவில் அமர்த்தினான்.

அவளுக்குப் பின்புறமாக வந்து நின்றவன் அவளுடைய கழுத்தை மென்மையாக வருடி விட்டு மெல்ல பிடித்து விட்டான். அவனுடைய

சேவையில் கண்களை மூடிக் கொண்டவாறு சோபாவில் சாய்ந்தாள் தன்மயா.

“இப்போ கழுத்து வலி ஓகேவா குயின்.?”

“ம்ம் நல்லாருக்கு ஆதி. இன்னும் கொஞ்ச நேரம் அப்படியே பண்ணி விடுங்களேன் ப்ளீஸ்.”

“ம்ம் ஓகேடி....” என்றவன் அவளுடைய கூந்தலை

விலக்கி பின் கழுத்தில் இருந்து முன்பக்கம் வரை தன் விரல்களால் சற்றே அழுத்தி பிடித்து விட அவளுக்கோ வலி மறைந்து போனது.

அவளுடைய வெண்ணிற பின் கழுத்து வளைவில் இருந்த சிறு சிறு பூனை முடிகளை தன் பெருவிரல் கொண்டு வருடியவன் அவளின் மென்மையில் தன் நிலை இழக்கத் தொடங்கினான்.

அவனுடைய கரங்கள் மெல்ல கீழிறங்கி அவளுடைய தோள்களை அழுந்தப் பற்றி வருடத் தொடங்க, அந்த அழுத்தத்தில் அவளை சுகமான தூக்கம் தழுவத் தொடங்கியது.

அவள் தூங்கி விழுவதைப் பார்த்தவன் தலையணை ஒன்றை எடுத்து வந்து அவளுடைய முதுகுக்கு அணைவாக வைத்தான்.

அவளோ வாகாக சாய்ந்து கொள்ள, அவளுடைய கழுத்து முதல் தோள்கள் வரை மசாஜ் போல பிடித்து விட்டவன் தன்னுடைய கரங்கள் வலிப்பதை உணர்ந்து பிடிப்பதை நிறுத்தினான்.

ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாக அவன் தனக்கு பணிவிடை செய்வதை உணர்ந்தவளுக்கு புது உற்சாகம் பிறந்தது.

தன்னை விட்டு விலகிச் சென்றவனை பார்த்தவள் “ம்மாஆஆ முடியலை.” என முனகினாள்.

“என்னடி.? என்னாச்சு.?” என்றவாறு மீண்டும் அவள் அருகே வந்தான் அவன்.

“பாதம் வலிக்குது....” என்றவள் ஓரக் கண்ணால் அவனைப் பார்க்க, அவனோ எந்த தயக்கமும் இன்றி அவளின் முன்னே தரையில்

அமர்ந்தவன் அவளுடைய பாதத்தை பற்றிக் கொண்டான்.

அவனுடைய கரங்கள் தற்போது அவளுடைய பாதங்களை பிடித்து விடத் தொடங்கின.

அரை மணி நேரத்தின் பின் அவளுடைய காலை விடுவிக்க, அவளோ தன்னுடைய மற்றைய பாதத்தை தூக்கி அவனுடைய

மடியில் வைத்தவள் “இந்தப் பாதமும் வலிக்குது.” என்றாள்.

அவளுடைய மற்றைய பாதத்தையும் பிடித்து விட்டவனுக்கோ தன்னுடைய கரங்கள் வெகுவாக வலிக்கத் தொடங்கின.

தன்னுடைய கரத்தை உதறி நெட்டி முறித்தவன் அவளுடைய பாதங்களை நன்கு பிடித்து விட்ட பின்னரே அவளை விட்டு விலகினான்.

அவளோ மூச்செடுக்க சிரமப்படுவதைக் கண்டவன் அவளுடைய ஆடையைப் பார்த்து முகம் சுளித்தான்.

“ஏன்டி நான் சொல்றதைக் கேட்கவே கூடாதுன்னு இருக்கியா....?”

“எதுக்கு எப்போ பார்த்தாலும் என்னைத் திட்டிகிட்டே இருக்கீங்க....?”

“பின்ன நீ பண்ற வேலைக்கு திட்டாம உன்னை கொஞ்சவா செய்வாங்க.?”

“ஹாங்....? என்னை யாரும் கொஞ்சத் தேவலை.” என்றவள் மீண்டும் கழுத்தை வருடி இமைகளைச் சுருக்கினாள். அவளுடைய ஒவ்வொரு அசைவுகளும் அவனுடைய பார்வையில் இருந்து மனப் பெட்டகத்துக்கு கடத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

“இதுதான் கடைசி தடவை குயின். இனி நீ புடவை கட்டினதா பார்த்தா நடக்குறதே வேற.”

“யோவ் நான் என்ன ஆசைப்பட்டா கட்டினேன்.? நான் வீட்டை விட்டு போறதுக்காக கட்டினேன்.” என்றவளுக்கு மூச்சு எடுக்கவும் சிரமமாக இருந்தது.

அவனோ எழுந்து சென்று இலகுவான ஆடை ஒன்றை

எடுத்துக் கொடுத்தவன் “ட்ரெஸ்ஸை ரிமூவ் பண்ணிட்டு இந்தக் கவுனை போடுடி.” என்றான்.

“ஏன் ஆதி எனக்கு அடிக்கடி வேலை சொல்லிட்டே இருக்க.?”

“அடிப்பாவி ட்ரெஸ் மாத்துறதெல்லாம் ஒரு வேலையா.? இந்த வீட்ல சமையல்ல இருந்து க்ளீனிங்

வரைக்கும் நான்தான் பண்ணிட்டு இருக்கேன்.”

“ம்ம்.... ம்ம்.... ம்ம்....” அவளுடைய விழிகள் மீண்டும் சோர்வோடு மூடிக் கொண்டன.

“நான் வேணும்னா ட்ரெஸ் சேன்ஞ் பண்ணி விடவா.?”

சடாரென விழிகளைத் திறந்தவள் அவனை முறைத்துப் பார்த்தாள்.

அவனுடைய விழிகளோ குறும்பாக நகைத்தன.

“உனக்கு டூ மினிட்ஸ் டைம் தர்றேன். அதுக்குள்ள ட்ரெஸ் மாத்திரு.” என்றவன் அறைக் கதவை வெளியே பூட்டிவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

வெளியே வந்த ஆதிக்கோ அவளை சமாளிப்பது கடினமாகவே இருந்தது. “நான் என்ன சொன்னாலும்

கேட்கவே மாட்டேங்குறாளே.” என எண்ணியவன் சலித்துக் கொண்டான்.

தன்மயாவின் வைத்தியரை தன் அலைபேசியில் அழைத்தவன் இன்று வர முடியாது எனக் கூறி நாளை வருவதாகக் கூறினான்.

அவன் வெளியே வந்து பத்து நிமிடங்கள் கடந்து விட, மீண்டும் அறைக்குள்

நுழைந்தவனுக்கு அவளைப் பார்த்து சீற்றமே வெடித்தது.

“தன்மயாஆஆஆஆ.” அதட்டி அழைத்தான் அவன்.

“ஹாங்....?” என விழித்தாள் அவள்.

அவன் அணியும்படி கொடுத்த ஆடையை சுருட்டி பந்து போல செய்தவள் தன் தலைக்கு தலையணையாக்கி அந்த சோபாவிலேயே படுத்து விட

அவனுக்கோ பொறுமை பறந்து போனது.

“உனக்கு நான் சொல்றது புரியுதா இல்லையா குயின்.? உன்னோட புடவையோட ஜாக்கெட் எவ்ளோ இறுக்கமாக இருக்கு. இப்படி போடுறது உனக்குத்தான் சிரமம். ஆல்ரெடி உனக்கு மூச்செடுக்க கஷ்டமா இருக்கு. இதுல இப்படி ட்ரெஸ் உனக்கு தேவைதானா.? எத்தனை தடவைதான் உனக்கு சொல்றது.? நான் சொல்றதைக்

கேட்கக் கூடாதுங்கிற முடிவோட இருக்கியாடி.....? எனக்கு வர்ற கோபத்துக்கு இருக்கிற அத்தனை புடவையையும் பிச்சு எறிஞ்சிருவேன்.” என கோபத்தில் கொந்தளித்தான் அவன்.

அவளோ அவனை எழுந்து பார்த்து கொட்டாவி விட்டவள் மீண்டும் சோபாவில் சரிந்து கொள்ள அவனுடைய புருவங்கள் ஒரு கணம் சீற்றம்

கலந்த வியப்போடு உணர்ந்தன.

அடுத்த நொடி சீற்றத்தை அடக்க முடியாது அவளை நெருங்கியவன் அவள் படுத்திருந்த சோபாவிற்கு முன்னே இருந்த கண்ணாடி மேஜையில் தன் கரத்தால் ஓங்கி அடிக்க, அந்த தடிப்பான கண்ணாடி கூட உடைந்து நொறுங்கிப் போனது.

கண்ணாடித் துண்டுகளோடு சேர்ந்து அவனுடைய உதிரத் துளிகளும் தரையில் சிதறி விழ, பதறி எழுந்தாள் தன்மயா.

“ஏய்ய் உனக்கு அறிவில்லையாடி....? இப்படியா எழுந்திருப்ப..? இப்போ நீ மட்டும் தனியா இல்லை. உனக்குள்ள இன்னொரு உயிர் இருக்குன்னு யோசிக்க மாட்டியா....?” என கர்ஜித்தவன் அவளை அதே சோபாவில் அமர்த்தி விட்டு குறையாத

கோபத்தோடு அங்கிருந்த பெரிய தொலைக்காட்சியை தூக்கி தரையில் போட்டு உடைத்தான்.

அவனுடைய அடக்க முடியாத கோபத்திற்கான காரணம் தான் இன்னும் ஆடை மாற்றாததுதான் என்பது அவளுக்கு நன்கு புரிந்தே இருந்தது.

அவனுடைய பதற்றத்தைப் பார்த்தவளுக்கு உள்ளுக்குள்

மகிழ்ச்சியாக இருக்க, அதனை வெளியே காட்டாது பயந்தவள் போல முகத்தை வைத்துக் கொண்டு சோபாவில் சாய்ந்து அமர்ந்தாள் தன்மயா.

அவனுடைய நிம்மதி இழந்த தோற்றம் அவளுக்குள் சிறு திருப்தியை ஏற்படுத்த அவளுடைய விழிகளோ அவன் படும் பாட்டை இரசிக்கத் தொடங்கின.

ஆதியோ சினம் தாளாமல் அங்கிருந்த அத்தனை பொருட்களையும் அடித்து நொறுக்கத் தொடங்கினான். எங்கே அவள் அருகே நெருங்கினால் அவளை ஏதேனும் செய்து விடுவோமோ என எண்ணி அச்சம் கொண்டவன் அவள் மீது இருந்த அத்தனை கோபத்தையும் அந்த அறையில் இருந்த பொருட்கள் மீது காட்டினான்.

கிட்டத்தட்ட அரை மணி நேரமாக வெறி கொண்டவன் போல இருந்தவளை மெல்ல அழைத்தாள் தன்மயா.

“எ.... என்னாச்சு ஆதீஈஈ.?” என எதுவும் புரியாதவள் போல கேட்டவளை அழுத்தமாக பார்த்தவன் “யு ப்ளடி ××××××××××...” என கெட்ட வார்த்தைகளில் திட்டியே விட தன் காதுகளை பொத்திக் கொண்டாள் அவள்.

“ஏன் இப்போ டென்ஷன் ஆகுறீங்க.?” என சாதாரணமாக கேட்டவள் அவன் கொடுத்த ஆடையோடு பாத்ரூமிற்குள் நுழைந்து கொள்ள, அவனோ வெறுப்பில் முகம் திருப்பினான்.

ஒரு வாறாக ஆடை மாற்றிக் கொண்டு வந்தவள் சுவற்றோடு சாய்ந்து உடல் இறுக நின்றவனின் தோற்றத்தை ஒரு கணம் ரசித்தாள்.

கீழே நொறுங்கிக் கிடந்த கண்ணாடித் துண்டுகளைப் பார்த்தவள் “ப்ச் இப்போ இதல்லாம் யாரு க்ளீன் பண்ணுவாங்க.? நீங்களே பண்ணிருங்க.” என விசமத்துடன் கூறினாள்.

“இப்போ ராமு வந்திருவார். எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நான் வெளியே போயிட்டு வர்றேன். நீ ஜாக்கிரதையா இரு.” என இறுகிய குரலில் கூறி விட்டு அவன் வெளியே செல்ல,

வேண்டுமென்றே உடைந்த கண்ணாடித் துண்டு ஒன்றின் மீது தன் காலை வைத்து அழுத்தியவள், “ம்மாஆஆ.” என அலறினாள்.

அறையின் வெளியே சென்ற ஆதியின் செவிகளில் தன்மயாவின் அலறல் சத்தம் கேட்க, அவனுடைய நடையோ சட்டென நின்றது.

“மயாஆஆஆ....????” என உரத்த குரலில் அழைத்தவன் அடுத்த நொடியே பதறிய மனதோடு வேகமாக அந்த அறைக்குள் நுழைந்தான்.

அவளோ கண்களில் கண்ணீரோடு இதழ்களை கடித்து தன் வலியை அடக்கிய வண்ணம் நிற்பதைக் கண்டவன் என்னவோ ஏதோவென பதறித்தான் போனான்.

“ஹேய் என்னடி.? என்னாச்சு....?” என குரல் நடுங்க கேட்டான் ஆதி.

அவளோ “நான் அப்போவே சொன்னேன் இதெல்லாத்தையும் க்ளீன் பண்ணுங்கன்னு. இப்போ என்னாச்சுன்னு பாருங்க.” என அழுகையோடு கூறியவள் தன் காலை அவனிடம் காட்ட ஓர் நொடி அவனும் பதறித்தான் போனான்.

அவளுடைய வெண்ணிற அழகுப் பாதங்களில் இருந்து சிந்திய இரத்தமோ அந்த இடம் முழுவதும் வடிந்து இருக்க, அதைப் பார்த்தவனுடைய இதயம் ஒரு கணம் நின்று துடித்தது.

“ஓ ஷிட்.” என தன் தலையில் தானே அடித்துக் கொண்டவன் சட்டென அவளை நெருங்கி அவளுடைய பாதங்களைப் பற்றிப் பார்த்தவன் அவளைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டான்.

“வ்விடு ஆதி. நான் என்ன உன்னோட பொம்மையா.? சட் சட்டுன்னு என்னை தூக்குற.?” அவனுடைய கரங்களில் இருந்து திமிறினாள் தன்மயா.

“ஏய் பேசாம இருடி. இப்படி ஆகும்னு நான் நினைச்சுக் கூடப் பார்க்கலை. உன்னோட கண்ணு எங்க பிறடிலையா இருக்கு இடியட்.? ஒழுங்கா பார்த்து நடக்கத் தெரியாதா....? கையை கொண்டு போய் நெருப்புல வைக்கிற. காலைக்

கொண்டு போய் கண்ணாடித் துண்டுல வெட்டிக்கிற.? யஷ்வி கூட உன்னை விட பத்திரமா இருப்பான்டி.” என்றவன் அவளை இருக்கையில் அமர்த்தி விட்டு அவளுடைய காயம்பட்ட காலை பரிசோதித்தான்.

அவளுக்குமே வலியில் உயிர் போனதைப் போல இருந்தது. அந்தக் கண்ணாடித் துண்டோ ஆழமாக அவள் காலில் ஏறியிருக்க, அழத் தொடங்கினாள் தன்மயா.

அவளது அழுகை அவனது சீற்றத்தை குறைய வைத்தது. அவள் வலியில் தன் இதழ்களை கடிப்பதைப் பார்த்தவன் அவளது ஒற்றைக் கரத்தை அழுத்தமாகப் பிடித்தான்.

அவளோ தன் விழிகளை மூடி சாய்ந்து கொண்டாள்.

“வலிக்குதா குயின்.?”

“ ”
.....

அவளுடைய அமைதி அவனுடைய பதற்றத்தை அதிகரித்தது. கரங்கள் நடுங்க அவளுடைய காலில் இருந்த கண்ணாடித் துண்டை இழுத்து எடுத்தவன் அவளது துடிப்பில் மனம் நைந்தான்.

“ம்மாஆஆ ஸ்ஸ்.... வ்வலிக்குது.” என்றவளை ஓர் நொடி இறுக அணைத்துக் கொண்டான் ஆதித்யன்.

அவனுடைய கரங்களுக்குள் அடங்க விடாமல் தடுத்தது அவளுடைய மேடிட்ட வயிறு.

அவளைப் பின் பக்கமாக இருந்து அணைத்துக் கொண்டவன் அவளுடைய காதோரம் நெருங்கினான்.

“கொஞ்சம் பொறுத்துக்கோ மயா பேபி.”

“பொறுத்துக்கிறதா.? எப்படி வலிக்குது தெரியுமா.?”

“இந்த வலியையே உன்னால தாங்க முடியலைன்னா நம்ம குழந்தை பிறக்கும் போது எப்படி தாங்கிப்ப.? ஸ்ட்ரோங்கா இரு குயின்.” என்றவன் அவளை விட்டு விலகி மீண்டும் தரையில் அமர்ந்தவன் மளமளவென அவளுடைய காயத்தை சுத்தப்படுத்தி அவளுக்கு காலில் கட்டுப் போட்டு விட்டான்.

கண்களில் நீரோடு இருந்தவளை பார்த்ததும் அவன் மனம் சற்றே இரங்கியது.

தன்னுடைய வேலைகளை புறந் தள்ளியவன் அந்த அறையில் இருந்த கண்ணாடித் துண்டுகளை பொறுக்கி எடுத்தான்.

எங்கே அவள் மீண்டும் தெரியாமல் தன்னைக் காயப்படுத்திக் கொள்வாளோ

என அச்சம் கொண்டவன் அறை முழுவதையும் சுத்தப் படுத்திய பின்னரே வெளியே வந்தான்.

தன்மயாவோ ஆதியின் படுக்கை அறையினுள் கெந்திக் கெந்தி நுழைந்தவள் படுக்கையில் அமைதியாக படுத்துக் கொண்டாள்.

அவனை வேலை வாங்க வைப்பதாக நினைத்துக் கொண்டு தன்னைத் தானே

காயப்படுத்தியதை எண்ணி அவளுக்கே வியப்பாக இருந்தது.

அவனோ அனைத்தையும் சுத்தம் செய்துவிட்டு அவனுடைய அறைக்குள் நுழைந்தான். இலகுவான ஆடையில் தாய்மை மிளிர படுத்திருந்தவளைக் கண்டவன் அவளுடைய பார்வை தன்னைத் தொடர்வதை கண்டும் காணாததும் போல தன் ஆடையை மாற்றினான்.

விளையாடிக் கொண்டிருந்த யஷ்வியைத் தூக்கியவன் அவளின் அருகே நெருங்கி அவளுக்கு அருகே யஷ்வியை படுக்க வைத்துவிட்டு அவனுக்கு அருகே தானும் படுத்துக் கொண்டான்.

அவனுடைய மனதில் பல எண்ணங்கள் சூழ்ந்து அவனை வதைக்கத் தொடங்கின.

தன்மயாவோ சரிந்து படுத்து யஷ்வியின் தலையை வருடி முத்தமிட, ஆதியின் விழிகள் அவர்களை வெறித்துப் பார்த்தன.

யஷ்வியோ சற்று நேரத்தில் தூங்கிவிட, தன்மயாவின் பார்வையோ ஆதியை எதிர் கொண்டது.

“எனக்கு எப்போ இங்க இருந்து விடுதலை கிடைக்கும் ஆதி.?”

அவளின் வதனத்தை பார்த்தவாறு திரும்பிப் படுத்தவன் “ஏன் இந்த வீடு உனக்கு ஜெயில் மாதிரியா இருக்கு.?” எனக் கேட்டான்.

“இந்த வீடு ஜெயில் இல்ல. என்னைப் பொறுத்த வரைக்கும் இது ஒரு நரகம்.” என கசப்பான குரலில் கூறினாள் தன்மயா.

“ஓ.... வெல். மூணு வருஷத்துக்கு முதல் நீ பண்ணுன தப்புக்கான

தண்டனையை அனுபவிப்பதற்கான நரகம்னும் சொல்லலாம்.” என்றான் ஆதி.

“உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புரியாதா ஆதி.? அதுல என் தப்பு எதுவும் இல்லை.” அழுத்தமாக வார்த்தைகளை உச்சரித்தாள் மாது.

“ஒருத்தன் கால்ல விழுந்து கெஞ்சிறானேன்னு ஒரு நிமிஷம் நீ நினைச்சுப்

பார்த்தியாடீஈ....?" அவளை விட அழுத்தமாகக் கேட்டான் ஆடவன்.

"போதும் ஆதி. உன்னோட நியாயமே இல்லாத தண்டனையும் பழிவாங்கு படலமும் போதும். இதோட நிறுத்திக்கோ. கடவுள் நீ பண்ற எல்லாத்தையும் பார்த்துகிட்டுதான் இருக்காரு. கண்டிப்பா உனக்கான தண்டனையை கொடுத்தே தீருவாரு."

“ஹா.... ஹா.... ஹா.... ஹா.... கடவுளா....? அவர் இருக்காரா என்ன? எங்க அப்பாவை என்கிட்ட இருந்து பறிச்சாரு. பதின் மூணு வயசுல நான் அனுபவிக்காத கஷ்டமா.? அப்போ எங்க போனாரு உன்னோட கடவுள்.? எங்க அம்மாகிட்ட இருந்து என்னைக் காப்பாத்த உன்னோட கடவுள் ஏன் வரலை.? நானும் அண்ணாவும் அவ்ளோ மன அழுத்தத்துல இருந்தோம். அப்போ ஏன் எங்களுக்கு உதவி

பண்ணலை.? என் ராணாவுக்கு எதுக்கு கொடூரமான நோயைக் கொடுத்தாரு.? எந்த தப்பும் பண்ணாத அவனோட காதலை எதுக்கு பிரிச்சாரு.? நானும் அவனும் எதுக்கு உன்னை சந்திக்கணும்.? நீ எதுக்கு அவனை மாட்டி விடணும்.? என்னோட வாழ்க்கை முழுக்க கஷ்டத்தை மட்டும்தான் கொடுத்திருக்காரு.

அப்படிப்பட்ட கடவுள் இனி வருவார்னு எனக்கு தோணலை." என்றான் ஆதி.

அவனுடைய வார்த்தைகளில் வாயடைத்துப் போனாள் தன்மயா.

அவன் அனுபவித்த வலிகள் அவளுடைய மனதையும் அசைத்தன.

“நான் சிரிச்ச நாட்களை விரல் விட்டு எண்ணலாம் குயின். எனக்குன்னு என்னோட அண்ணன் மட்டும்தான் இருந்தான். எங்க அப்பாவோட அன்பை நான் அவன்கிட்ட உணர்ந்தேன்டி. ஆனாஆ... ஆ...

அவனும் எ.... என்....னை வ்விட்டுப் போய்ட்டான்.” என்றவன் தன்னுடைய விழிகளை மூடிக் கொள்ள, அவனுடைய விழியோரம் கண்ணீர்த் துளி ஒன்று வழிந்து படுக்கையை முத்தமிட்டது.

அவனுடைய விழி நீரைக் கண்டதும் தன்மயாவின் உள்ளமோ பிசையத் தொடங்கியது.

அவளுடைய விழிகளும் அவளுடைய அனுமதியின்றியே கண்ணீரை பொழியத் தொடங்கின.

“என்னால உங்களோட வலியை புரிஞ்சிக்க முடியுது ஆதி. நம்ம கூட இருந்தவங்க திடீர்னு இல்லாமப் போனா அந்த வலியை நம்மளால தாங்கிக்கவே முடியாது. உங்களுக்கு எப்படி ராணா மாமா இல்லாதது வேதனையா இருக்கோ அதே மாதிரிதான் எனக்கு என்னோட குடும்பம்

இல்லாதது ரொம்ப ரொம்ப கஷ்டமா இருக்கு.” என்றவள் பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டாள்.

“எங்க அம்மா தேவதை ஆதி. எங்களுக்காக உயிரையே கொடுப்பாங்க. எங்க அப்பா ஸ்ரிக்டா இருப்பாரு. ஆனா என் மேல கொள்ளைப் பாசம் வச்சிருக்காரு. என்னோட அக்கா எனக்காக எல்லாத்தையுமே விட்டுக் கொடுத்துருவா.”

“சின்ன வயசுல நான் ரொம்ப சுட்டிப் பொண்ணாம். எல்லார் கூடவும் சண்டை போட்டுக்கிட்டே இருப்பேன்னு சொல்லுவாங்க. ‘நீ இப்படியே சண்டை போட்டுக்கிட்டு இருந்தீன்னா நாங்க எல்லாரும் உன்னை வி.... விட்டுடுட்டுப் போயிருவோம்னு’ அபி அக்கா கூட சொல்லுவா. அதனால தான் இப்போ யாருமே இல்லாம அநாதையா நிற்கிற நிலை வந்திருச்சோன்னு தோணுது

ஆதி.” என்றவள் வாய்விட்டே அழத் தொடங்கினாள்.

ஆதியோ நடுவில் தூங்கிக் கொண்டிருந்த யஷ்விந்தை தூக்கி தனக்கு அருகே கிடத்தியவன் தன்மயாவின் கரத்தை ஆதரவாக பற்றிக் கொண்டான்.

அவனது முகத்தை பார்த்தவள் “எ.... எனக்கு அப்போ பத்தொன்பது வயசு. யஷ்விந்த் கைக் குழந்தை. அவனை எப்படி

பார்த்துக்கிறதுன்னு கூட எனக்கு தெரியாது. ரொம்ப கஷ்டப்பட்டேன் ஆதி.

நான் எங்க அம்மாவை அணைச்சுட்டுதான் தூங்குவேன். எனக்கு இருட்டுன்னா ரொ.... ரொம்ம்ம்....ப பயம். த.... தனியா தூங்கவே மாட்டேன். அம்மா போனப்புறம் நைட் எல்லாம் தூங்காம புத்தகம் படிச்சிட்டே இருப்பேன். லைட் கூட ஆ◌ஃப் பண்ண மாட்டேன்." எனத் தேம்பித் தேம்பி அழுத தன்மயா

அவனுக்கோ சிறு குழந்தை போல தோன்றலானாள்.

“அழாத பேபி....” என்றவனுடைய மனமும் கனத்துப் போனது.

“ஒ.... ஒரு தடவை எ.... எங்க ப.... பக்கத்து வ்வீஈஈட்டு அங்.... அங்கிள்.... நான் த... தனியா இருக்கேன்னு தெரிஞ்சுகிட்டு எங்க வீட்.... வீட்டுக்குள்ள வந்து எ.... என்கிட்ட த.... தப்பாஆஆ த.... தொ... தொட்டுஉஉ....”

“தனுஉஉஉஉ ஸ்டாப். வ்வேணாம் சொல்லாதடி.” என்றவன் விம்மி வெடித்து அழும் அவளைத் தூக்கி தன் மார்பில் கிடத்தினான்.

மேடிட்ட வயிறு படுக்கையில் அழுந்தாது ஒருக்களித்து படுத்திருந்தவளது கண்ணீர் நிறைந்த வதனமோ ஆதியின் வெற்று மார்பில் பதிந்தது.

அவனுடைய இரும்பொத்த கரங்களோ அவளை சுற்றி பாதுகாப்பாக அணைத்துக் கொண்டன.

“நா... நான் க.... கத்தி எடுத்து மி.... மிரட்டினதால அவ.... அவரு போ... போய்ட்டாரு. இ.. இப்படி எ... எத்தனை கொடுமைகள் தெரியுமா.? ஒரு பொண்ணால இந்த உ.... உலகத்துல தனியா வா.... வாழ முடியாது.” என்றவள் இன்னும் அழுத்தமாக தன்னுடைய முகத்தை

அவனுடைய மார்பில் புதைத்துக் கொண்டாள்.

ஒரு பெண்ணாய் அவள் அனுபவித்த வலிகள் அவனை ஊசியாகக் குத்தச் செய்தன. மனதளவில் வளராத சிறு குழந்தை போன்றவளை ரொம்பவும் காயப்படுத்தி விட்டோமோ என அவனுடைய மனம் உறுத்தத் தொடங்கியது.

பழைய நினைவுகளில் இருந்து விடுபட முடியாமல் கோழிக்

குஞ்சு போல தன் கரங்களுக்குள் நடுங்கும் பெண் மானின் உச்சந் தலையில் முத்தம் பதித்தான் ஆதித்யன்.

உச்சி முத்தம் உணர்வுகளைக் கடத்துமா என்ன.?

ஆம் அவர்களுக்குள் அந்த ஒற்றை உச்சி முத்தம் பல உணர்வுக் குவியல்களையே கடத்தியது.

உடலின் அத்தனை மயிர்கால்களையும் குத்திட்டு நிற்கச் செய்தது.

நடுங்கும் அவளுடைய தேகத்திற்கு ஓர் பாதுகாப்பு அணையை வழங்கியது.

அப்படி அந்த ஒற்றை உச்சி முத்தத்தில் என்னதான் இருந்தது.?

காதலா....?

காமமா....?

மோதலா...?

மோகமா....?

தகிப்பா....?

தவிப்பா....?

அது அவர்களுக்கே வெளிச்சம்.

அந்த நொடி இருவரும் மற்றவரில் தன் பாரத்தை இறக்கி வைத்து ஆதரவை தேடிக் கொண்டனர். இருவருக்குமே அந்த அணைப்பு தேவையாக இருந்தது.

உச்சியில் பதிந்த அவனுடைய உதடுகள் சற்றே கீழிறங்கி அவளுடைய கண்ணீர்த் தடம் படர்ந்த கன்னத்தில் முத்தம் வைத்தன.

அடுத்த நொடி இருவரும் தம்மை மறந்து ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர்.

ஆதியின் உதடுகளோ அவளுடைய காதோரம் தீண்டி பாரதியின் வரிகளை முணுமுணுத்தன.

“கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான் கள்வெறி கொள்ளுதடி.

உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா உன்மத்தமாகுதடி.”

துயரங்களில் மூழ்கிப் போன இரண்டு உள்ளங்கள் தம்மை மற்றவரிடம் ஒப்படைத்து விட்டு விழிகளை மூடி நிஜ உலக வாழ்க்கையை வெறுத்து கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருத்தனர்.

அருகே துயிலின் பிடியில் திரும்பிப் படுத்த யஷ்வியை தூக்கி அவனுடைய

படுக்கையில் உறங்க வைத்தவன் அவனைச் சுற்றி தலையணைகளை அடுக்கி விட்டு மீண்டும் தன்மயாவின் அருகே வந்து படுத்துக் கொண்டான்.

ஆதியின் கரங்கள் எந்த வெறுப்பும் இன்றி அவளை அணைத்துக் கொள்ள, தன்மயாவோ அந்த அணைப்பினுள் அடங்கிப் போனாள்.

ஆதி பட்ட துயரங்களை எண்ணி அவளும் தன்மயா அனுபவித்த வேதனையை எண்ணி அவனும் துயர் உற்றனர்.

அவளது கண்ணீர்த் துளிகள் அவனுடைய வெற்று மார்பை நனைக்க, அவளுடைய வதனத்தை உயர்த்தியவன் மீண்டும் அவளுடைய கன்னத்தில் இதழ் பதித்தான்.

முதலில் அதிர்ந்தவள் பின் அவனுடைய முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அடுத்த நொடி அவளுடைய உடல் தூக்கி வாரிப்போட்டது.

ஆதியின் மூக்கில் இருந்து இரத்தம் கசிவதைப் பார்த்தவள் பதறிப் போனாள்.

அவன் மேல் எத்தனை வன்மம் இருந்தும் அவனுடைய உதிரத்தை பார்த்த கணம் அவளுடைய காதல் கொண்ட மனம் துடித்துத்தான் போனது.

“ஆதீஈஈ....” என அழைத்தவள் தன் ஆட்காட்டி விரலால் அவனுடைய மூக்கில் இருந்து வழிந்த உதிரத்தை தொட்டுக் காட்டினாள்.

“ப்ளட்.... ப்ளட் வ... வருது.” என்றவளின் குரல் சற்றே நடுங்கியது.

சிறு வயதில் அவன் அனுபவித்த துயரங்களை சற்று முன் கேட்டவளுக்கு

தனக்கு கிடைத்தைப் போல ஒரு நல்ல அன்னை கிடைத்திருந்தால் ஆதியின் வாழ்வும் நன்றாக அமைந்திருக்கும் என்றே தோன்றியது.

“ப்ச்.... இது அடிக்கடி வரும் குயின். ஓவர் டிப்ரஷன்ல இருந்தா வரும்.” என்றவன் எழ முயல, அவனைத் தடுத்தவள் அருகே கிடந்த போர்வையை எடுத்து அவனுடைய உதிரத்தை துடைத்து விட்டாள்.

“எ.... எனக்கு உன்னை கஷ்டப்படுத்தி பார்க்கணும்னு தோணுது ஆதி. நீ எனக்கு துரோகம் பண்ணிய மாதிரி நானும் உனக்கு துரோகம் பண்ணணும்னு தோணுது. உன்னை ஹர்ட் பண்ணனும், உன்னை டார்ச்சர் பண்ணனும்னுலாம் என்னோட மூளை சொல்லிகிட்டே இருக்கு. உன்னை அழக்க வைக்கணும்னு தோணும். உன்னை ஏங்க வைக்கணும்னு தோணும். ஆனா இதெல்லாம்

பண்ணினா ஏ... ஏன் எனக்கு வலிக்குதுன்னு தெ தெரியலை ஆதி. நீ... நீ சிரிச்சாலும் பிடிக்கலை. நீ அழுதாலும் பிடிக்கலை. நீ ஹேப்பியா இருந்தாலும் பிடிக்கலை. நீ கஷ்டப்பட்டாலும் பிடிக்கலை. என்னோட அறிவுக்கும் மனசுக்கும் இடையில இருந்து நான்தான் தவிச்சுப் போறேன் ஆதி. நீங்க ஏன் நல்லவரா எனக்கு அறிமுகமாகலை.?” என்றவள் அவனுடைய மார்பில் மீண்டும் புதைந்தாள்.

ஆதியின் நிலையோ தலைகீழாக மாறிப் போனது. அவளுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவனை அசைத்துப் பார்த்தன. அவளுடைய வார்த்தைகளில் அவள் அவன் மீது கொண்டுள்ள காதல் உள் பொருள் உவமையாக மறைந்திருப்பதைக் கண்டவன் திணறிப்போனான்.

‘நானும் அவளைக் காதலிக்கிறேனா.?’ என தன் மனதில் கேள்வியை

எழுப்பியவன் விடை தெரியாது குழம்பிப் போனான்.

அவள் துடித்தால் அவளை விட இவன் துடித்துப் போகின்றானே.

அவளுக்கு காயம் பட்டால் அவனுடலில் பட்டதைப் போல அதே வலியை அவனும் உணர்கின்றானே.

அவள் மூச்சு விட சிரமப்பட்டால் அவனுக்கோ

மூச்சே நின்றல்லவா போகிறது. அதனால் தானே அவளை இலகுவான ஆடை அணியும்படி வற்புறுத்தினான்.

‘இது காதல் தானோ....?’ என எண்ணியவனுக்கு பதில் பூச்சியமே கிடைத்தது.

அவளோ அவனுடைய கழுத்தில் தன் கரத்தைக் கோர்த்து வளைத்துக் கொண்டாள்.

அவளுடைய செயலில் ஆதியின் முகமோ தன்மயாவின் முகத்தை வெகுவாக நெருங்கியது.

அவனுடைய மூச்சுக் காற்றின் வெப்பம் அவளை வெகுவாகத் தீண்ட, கண்ணீர் கசிந்த விழிகளை மூடிக் கொண்டாள் மங்கை.

அவளுடைய அழுகையைக் காணச் சகியாது அவளை அணைத்து ஆறுதல்

படுத்தியவன் அவள் திடீரென தன் கழுத்தை வளைத்து அணைக்கவும் தடுமாறிப் போனான்.

மிக அருகே விரிந்திருத்த செம்பவள மாதுளை இதழ்கள் அவனை அழைப்பது போல இருக்க, தன் இதழ்களை தன் நாவின் மூலம் ஈரப்படுத்திக் கொண்டான் ஆதி.

“மயா. ஐ கான்ட் கன்ட்ரோல் மை செல்ப்.” என்றவன் மிக

அருகே இருந்த அவளுடைய திராட்சை இதழ்களை கவ்விக் கொள்ள, தன்மயாவின் உடலும் அவனுடைய கரங்களில் களி மண்ணைப் போல உருகிக் குழையத் தொடங்கியது.

“எ.... எனக்கும்.” என ஏதோ கூற வந்தவளது வார்த்தைகள் ஆதியின் இதழ்களுக்குள்ளேயே புதைந்து போயின.

முதல் முறையாக அவனுடைய முத்தத்திற்கு நெகிழ்ந்து அவளும் அவனை முத்தமிடத் தொடங்கினாள்.

பெண்ணவளின் கரங்கள் அவனுடைய சிகைக்குள் புகுந்து அவனுடைய முடியினை இறுகப் பிடித்த வண்ணம் அவனுடைய இதழ்களில் தன் இதழ்களைப் பதிக்க, ஆதியின் கட்டுப்பாடுகள் யாவும் சல்லி சல்லியாய் நொறுங்கிப் போயின.

அடுத்த கணம் அவளுடைய கன்னத்தை அழுந்தப் பற்றியவன் அவளுடைய நெற்றி, கன்னம், மூக்கு, இதழ்கள், நாடி என அனைத்து இடங்களிலும் அசுர வேகத்தில் முத்தம் பதித்தான்.

தன் மார்பில் ஒரு பக்கமாக சரிந்து கிடந்தவளை நிமிர்த்தியவன் அவள் மீது அவளுடைய வயிற்றை அழுத்தாமல் படரத் தொடங்கினான்.

அவளுடைய வெண்ணிற சங்குக் கழுத்தில் தன் மீசை முடிகள் உரச தன் முகம் புதைத்தவன் தன்னவளை அணுஅணுவாக ஆக்கிரமிக்கத் தொடங்கினான்.

அவள் அணிந்திருந்த இலகுவான ஆடை கூட அவனுடைய கரங்களின் இம்சை தாங்க முடியாமல் கழன்று தரையில் வீழ்ந்து தற்கொலை செய்து கொண்டன.

அவனுடைய கரங்கள் அவளுடைய உடலின் மேடு பள்ளங்களை ஆடையின்றி அளவெடுக்கத் தொடங்க, அவளுக்கோ முகம் அந்தி வானமாக சிவந்து போனது.

“மயாஆஆ பேபீஈஈ....” என தன்னை மறந்து அழைத்தவன் அவளோடு மேலும் ஒன்றிப் போக, அவளுக்கு அந்த அழைப்பில் உடல் விறைத்துப் போனது.

கவினுடைய நினைவுகள் அவள் மனதில் புகுந்து விட சட்டென அவனைத் தன்னில் இருந்தும் தள்ளி விட்டாள் தன்மயா.

“நோஓஓஓ….. நோஓஓஓ… க… கவின் நோஓஓ.” என திடீரென அவள் கதறத் தொடங்க சட்டென அவளை விட்டு விலகியவன் அவளை வெறித்துப் பார்த்தான்.

உணர்வுகளோ அடங்காது சாட்டையாய் அவனைத் தாக்க, அவள் கவின் என எண்ணி தன்னை விலக்கியது அவனுக்கு பேரதிர்ச்சியாக இருந்தது.

அவள் இன்னும் அந்த பாதிப்பில் இருந்து வெளி வரவில்லை என்பதை உணர்ந்து கொண்டவன் தன் தலை முடியை அழுந்தக் கோதினான்.

அந்த நொடி மூவர் போல நடித்து ஏமாற்றி தவறிழைத்து விட்டோமோ என எண்ணி முதன் முறையாக வருந்தினான் ஆதி.

ஆதியோ அவளை சமாதானம் செய்ய நெருங்க, அவளோ மீண்டும் அவனைக் கண்டு நடுங்கத் தொடங்கினாள்.

“கவின் நோஓஓ... நோஓ.”

“நான் ஆதி. லிசின் ஏய் இங்க பாருடி.”

“கிட்டே வராத.... நோஓஓ...” என அரற்றியவளை “ட்ராஆமா குயின்.” என உரத்த குரலில் அழுத்தமாக அழைக்க, சட்டென அவளுடைய துடிப்பு நின்றது.

அவனையே இமை சிமிட்டாது சந்தேகமாக பார்த்தவளை கண்டு அதிர்ந்தான் அவன். அவள் கற்பனையில் சிக்கித்

தவிக்கிறாள் என்பது புரிய அருகே இருந்த மேஜையில் ஓங்கி தட்டினான் ஆதி. அந்த சத்தத்திலும் அதிர்விலும் சட்டென சுய நினைவை அடைந்தாள் தன்மயா.

அவளுடைய கரங்களோ தளர்ந்து சரிந்து படுக்கையில் விழ அவளும் சோர்ந்துதான் போனாள்.

“மயா.. சே கு.... குயின் ஆர் யு ஓகே.?” என்றவன் அவள் அழத்

தொடங்கவும் போர்வையை எடுத்து அவளை போர்த்தி விட்டான்.

தன்னுடைய ஷார்ட்ஸை எடுத்து அணிந்தவன் வேகமாக படிகளில் இருந்து வேகமாக இறங்கி சமையல் அறை நோக்கிச் சென்றான்.

ப்ரிட்ஜினுள் இருந்த பாலை எடுத்து சூடாக்கியவன் அவளுக்கு மிதமான சூட்டில் பாலை கப்பினுள் ஊற்றி

எடுத்துக் கொண்டு மீண்டும் அவளை நாடிச் சென்றான்.

படுக்கையில் சோர்ந்து போய் படுத்திருந்தவளை
நெருங்கியவன் அவளை தன் மீது சாய்த்து தான் கொண்டு வந்திருந்த பாலை புகட்டத் தொடங்கினான்.

சாதாரண நேரங்களில் மயா என்று அழைத்தால் அமைதியாக இருப்பவள் நெருக்கமான நேரங்களில்

அவன் மயா பேபி என அழைக்கும் போது உச்ச கட்ட மன அழுத்தத்தினால் அவள் பாதிக்கப் படுவதை உணர்ந்து கொண்டான்.

அவள் உடல் வியர்த்துப் போய் இருந்ததைக் கண்டவன் ஒரு முடிவோடு எழுந்தான்.

“குயின். ஆர் யு ஓக்கே நவ்.?”

“ம்ம்....”

“ஏதாவது சாப்பிடுறியா.? தோசை எடுத்து வரவா.?”

“ம்ஹூம்....”

“ஓகே என் கூட வா குயின்.” என்றவன் அவள் இருந்த நிலமை கண்டு திகைத்தவன் திரும்பி நின்று தன் தலையை அழுந்தக் கோதிக் கொண்டான்.

அவன் அணிவித்த தாலி மட்டும் அவளது உடலில் இருக்க, தன் பார்வையை

சிரமப்பட்டு விலக்கியவன் “ட்ரெஸ் பண்ணிட்டு வெளியே வா குயின். நான் ரூம்கு வெளியே வெயிட் பண்றேன்.” என்றான்.

“ம்ம் சரி.”

அவனோ அந்த அறையை விட்டு வெளியேறியவன் தன்னுடைய தனிப்பட்ட அறை ஒன்றினுள் நுழைந்து கொண்டான்.

ராணாவிற்கு சிகிச்சை அளிக்கப்பட்ட அறையே அது. அதனுள் இருந்த சில மருத்துவ கருவிகளை வெளியே எடுத்து வந்தவன் ஒரு மருத்துவ படுக்கையை மளமளவென தயார் செய்யத் தொடங்கினான்.

அதன் மேல் பகுதிகளில் சில மாற்றங்களைச் செய்தவன் பல வருடங்களின் பின்பு ஒருவரை ஹிப்னாடிஸம் செய்யத் தயாராகினான்.

தன்மயாவின் அடி மனதில் எவ்வாறான அழுத்தங்கள் உள்ளன.?

கவினுடைய அழைப்பு ஏன் அவளை அதிகம் பாதிக்கின்றது.?

அவள் மனதால் பலவீனமானவளா....?

இல்லை பாதிக்கப்பட்டதைப் போல நடிக்கின்றாளா.? போன்ற கேள்விகளுக்கான பதில் அவளுடைய ஆழ்

மனதில் இருந்து கிடைக்கும் என நம்பியவன் அதுக்கான முயற்சியை செய்தான்.

தன்னுடைய லேப்டாப்பை மல்டி மீடியாவுடன் இணைத்தவன் ஒரு வெண்ணிற திரையை பெரிய ஸ்கீரினாக மாற்றி ஒரு ஆப்டிக்கல் இல்யூஷன் வீடியோவை ஒளிபரப்பினான்.

அதே நேரம் தன் வயிற்றில் கரம் வைத்தவாறு மெல்ல

மெல்ல நடந்து வந்தாள் தன்மயா.

சட்டென அவளை நெருங்கி தோளோடு அணைத்தவன் அவளை மெல்ல அழைத்து வந்து அவன் தயார் செய்திருந்த சாய்வுப் படுக்கையில் அவளை அமர வைத்தான்.

தன்னைச் சுற்றி இருந்தவற்றை வியப்பாக

பார்த்தவள் “இதெல்லாம் என்ன ஆதி.?” எனக் கேட்டாள்.

“சின்ன ட்ரீட்மென்ட்தான் குயின்.” என்றான் அவன்.

திரையில் தெரிந்த இல்யூஷன் வீடியோவை பார்த்தவள் “ஓஓஓஓ.... என்னை ஹிப்னாடிஸ் பண்ணப் போறீயா.?” எனக் கேட்டாள்.

“எஸ்....” என தலை அசைத்தான் ஆதி.

“ஏன் ஆதி எனக்கு ஏதாவது மன நோயா.?” அவளுடைய இதழ்கள் சாதுவாக பிதுங்கின.

“ஏய் சே.... அப்படிலாம் இல்லைடி.” என்றவனுக்கோ இதயம் வேகமாகது துடித்தது.

“உனக்கு டி.ஐ.டி இருக்குன்னு உன்னை ஹிப்னாடிஸ் பண்ண அழைச்சுட்டுப் போனேன். கடைசில அந்த இடத்துல இப்போ நான் இருக்கேன்ல.”

என கசப்பான புன்னகையோடு கூறியவளின் கூந்தலை வருடியவன் “அப்படிலாம் ஒன்னும் இல்லைடி. சும்மா ஒரு டெஸ்ட்தான் குயின். நீ கோப்ரேட் பண்ணினா போதும்.” என்றவன் அவளுடைய இரத்த அழுத்தத்தை பரிசோதித்தான்.

“கூட திங் பண்ணாதே ஓகேவா. ரிலாக்ஸா இரு.”

“பயமா இருக்க ஆதி. ஹிப்னாடிஸ்னா மூளையை வசியப்படுத்துறதுதானே. எ... என்னை வசியப்படுத்தி ஏ... ஏதாவது பண்ணிருவியா ஆதி.?” என அச்சமாக கேட்டாள் அவள்.

“ஏதாவதுன்னா....?”

“எ.... என்னைப் பழிவாங்குறேன்னு எ... என்னைக் கொன்னுற மாட்டியே.” எனக்

கேட்டவளைப் பார்த்து அவனுடைய உடல் இறுகி விறைத்தது.

அவளுடைய ஆழ் மனதில் ரணங்களையும் அவள் அவன் மீது கொண்ட காதலையும் ஹிப்னாடிஸம் மூலம் ஆதி அறிய நேர்ந்தால் என்னவாகும்.?

காதலுக்கும் பழிவெறிக்கும் இடையே வெந்து தணிந்தான் அவன்.

“என்னை பழிவாங்குறேன்னு கொ…. கொன்னுற மாட்டியே ஆதி.?” என அவள் கேட்ட கேள்வியில் அவனுடைய உடல் இறுகி விறைத்தது.

அச்சமாக வெளிப்பட்ட அவளுடைய வார்த்தைகளில் அவனுடைய மனம் சற்றே வேதனை கொண்டது.

அவளுடைய முகத்தருகே குனிந்தவன் “உன்னைக் கொல்லணும்னு நினைச்சிருந்தா எப்பவோ கொன்னுருப்பேன்டி.” என்றான்.

“அது கூட நல்லது தான் ஆதி.”

“வாட்.? என்னடி சொல்ற?”

“கொஞ்சம் கொஞ்சமாக சாகுறதுக்கு ஒரேடியா சாகுறது நல்லதுதானே. பல துன்பங்கள்ல இருந்து விலகியிருக்கலாம்.” என்றாள் தன்மயா.

“ஷட் அப் குயின்.” என அதட்டியவனின் விழிகள் சிவந்து போயின. அவனுடைய அதட்டலில் அவளுடைய முகமோ நொடியில் மாறிப் போனது.

“ப்ளீஸ்டி கொஞ்ச நேரம் அமைதியா இரு. இப்போ உன்னோட மைன்ட் ரிலாக்ஸ்ஸா இருக்கணும் குயின்.”

“ம்ம்….”

“ட்ரஸ்ட் மீ குயின். ஹிப்னாடிஸ்னா தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட நிலைதான். நீ பயப்படுற மாதிரி எதுவுமே நடக்காது. ஹிப்னாடிஸ்னால உனக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. உன்னோட மன அழுத்தங்களை வெளியே கொண்டு வர முடியும். அதை சரிப் படுத்த முடியும்.” என்றவன் அவளை அந்த சாய்வுப் படுக்கையில் மெல்ல படுக்க வைத்தான்.

அவனுடைய கரங்கள் அவளுடைய கூந்தலை மெல்ல அவிழ்த்து விரித்து விட்டன. அந்தக் கூந்தல் காட்டினுள் தன் விரல் நுழைத்து வருடி விட்டவனைப் பார்த்தவள் “ஹிப்னாடிஸ்னா இப்படிலாம் பண்ணனுமா.?” எனக் கேட்டாள்.

“நோ குயின். இதுலாம் உனக்காக நான் பண்றது..” என்றவன் அவளுடைய இமைகளை நீவி விட்டான். அவனுடைய செயல்களில் அவளுடைய உடல் நெகிழத் தொடங்கியது. அவளுடைய சுளித்த புருவங்கள் நேராகின.

அவளுடைய கண்களுக்கு முன் தன் விரல்களை அசைத்து அவளுடைய கவனத்தை ஈர்த்தவன் “வெல் குயின் இந்த ஸ்கீரினையே உத்துப் பாரு. அந்த சுழலோட சென்டர் பாய்ன்ட் உனக்கு தெரியுதா.?” என அவளை அந்த இல்யூஷன் வீடியோவை பார்க்கச் செய்தவன் சில நொடிகளிலேயை அவளை தன்வசப் படுத்தினான்.

அவளுடைய உடலோ தளர்ந்து இமைகள் மெது மெதுவாக மூடிக் கொண்டன.

“ஐ அம் யுவர் டாக்டர். டர்ஸ்ட் மீ மிஸ் தன்மயா.” என அவளோடு உரையாடத் தயாராகினான் ஆதித்யன்.

“மிஸ் இல்லை டாக்டர் மிஸஸ் ஆதித்யன்.” என திருத்தினாள் தன்மயா. அவனுடைய புருவங்கள் ஓர் நொடி உச்சி மேட்டைத் தொட்டன. நள்ளிரவில் பல பிரச்சனைகளுக்கு மத்தியில் நடந்த திருமணம் கூட அவளுடைய மனதில் பதிந்து போயிருப்பதைப் புரிந்து கொண்டவன் மெல்ல புன்னகைத்தான்.

மிஸஸ் ஆதித்யன் என உரைத்த அவளுடைய உதடுகளை தீண்டி முத்தமிட வேண்டுமென்ற எண்ணம் அவனுள் தோன்றியது. தன்னை அறியாமல் அவளை நோக்கி நீண்ட தன்னுடைய கரங்களை அடக்கியவன் தன் உரையாடலைத் தொடர்ந்தான்.

“ஓ எஸ்…. எஸ்…. மிஸஸ் ஆதி. இப்போ உங்களுக்கு இருபத்தொரு வயசு. அப்படியே மூணு வருஷத்துக்கு முன்னாடி போகலாம்.”

“ம்ம்….”

“இப்போ உங்களுக்கு பதினெட்டு வயசு….”

“ம்ம்… . என்னோட அப்பா எனக்கு பிடிச்ச டெடியை என்னோட பதினெட்டாவது பர்த்டேக்கு வாங்கிக் கொடுத்தாங்க.” அவளுடைய முகம் மகிழ்ச்சியில் விகசித்தது.

“அப்புறம் என்னாச்சு….?”

“அபிக்கா எனக்கு டெடி வாங்கித் தர்றேன்னு பர்பிள் ஸ்டார் மாலுக்கு கூட்டிட்டு போனாங்க.”

“உங்களுக்கு டெடின்னா பிடிக்குமா”

“ம்ம்… ரொம்ம்ம்பபபப பிடிக்குமே. என்னோட ரூம்ல நிறைய கலர்ஸ்ல டெடி வாங்கி வச்சிருக்கேன்.”

“ஓஓஓ… .” என்றவனுடைய இதழ்கள் புன்னகைத்தன. தன்னவள் குழந்தை மனம் கொண்டவள் என அவனுடைய மனம் அந்த நொடி எண்ணிக் கொண்டன.

“வேற என்னல்லாம் பிடிக்கும்.?”

“உயரமான மலைனா ரொம்ம்ம்பபபப பிடிக்கும். அந்த உச்சில மேகத்தோட மேகமா நானும் மிதக்கணும்.”

“இன்ட்ரெஸ்டிங்…. இந்த ஆசை நிறைவேறியிருக்கா.?”

“ம்ஹூம்… வீட்ல கேட்டதுக்கு அடி பின்னிட்டாங்க. மொட்டை மாடி தவிர வேற உயரமான இடத்துக்கே நான் போனதில்லை.” என இதழ்களை பிதுக்கினாள் அவள்.

“ஓ…. ம்ம்.. அன்னைக்கு அந்த மால்ல என்ன நடந்திச்சு.?”

“நான் ஒரு காம்படிஷன்ல வின் பண்ணினேன்.” சிரித்தன அவளுடைய உதடுகள்.

“குட்…. அப்புறம் என்னாச்சு.?” தெரிந்து கொண்டே அவளிடம் அந்தக் கேள்வியைக் கேட்டான் ஆதி.

“அ…. அன்னைக்கு ஒரு…. ஒருத்தன்…” என திணறியவளது கண்கள் கண்ணீரைப் பொழியத் தொடங்கின.

அவளது முகத்தில் இருந்த மகிழ்ச்சி துணி கொண்டு துடைத்தாற் போல மறைந்தே போனது.

பதற்றம் நொடியில் அதிகரித்துப் போக, தவிக்கத் தொடங்கினாள் தன்மயா. படுக்கையில் தன் உடலை அசைத்தவாறு சிரமப்பட்டாள் அவள்.

“இட்ஸ் ஓகே…. இட்ஸ் ஓகே தன்மயா. ரிலாக்ஸ்.” என்றான் ஆதி. அவளுடைய துடிப்பும் தவிப்பும் அவனுக்கு மெல்ல மெல்ல புரியத் தொடங்கியது.

“நா…. நா…. நான் ட்ரெஸ் மாத்து…..ம் போது யா… யாரோ….” என்றவள் பதறத் தொடங்கினாள்.

சட்டென தன் கரங்களை தன் மார்பின் மீது வைத்து மூடிக் கொண்டவள் விம்மி வெடித்து அழத் தொடங்க, ஆதியின் விழிகளோ ஒரு பெண்ணின் மெல்லிய உணர்வுகளைக் கண்டு வியந்து விரிந்தன.

“ரிலாக்ஸ்…. ரிலாக்ஸ்….”

“முடியலை. எ… என்னை யா… யாருமே அப்… அப்படி பார்த்தது இல்ல. என்…. என்னால அதை தா… தாங்கிக்கவே மு… முடியலை. என்… என்னோட கற்பு அன்னைக்கே போ… போயிருச்சு.” என்றவளுடைய குரல் விம்மலோடு ஒலித்தது.

“அது தெரியாம நடந்துருக்கலாம் இல்லையா.? அவங்க உங்ககிட்ட மன்னிப்பு கேட்டாங்க தானே.? உங்களுக்கு மன்னிக்க தோணலையா.?” எனக் கேட்டான் ஆதி.

“அ… அப்போ எ… எனக்கு நெஞ்செல்லாம் வலிக்குற மாதிரி இருந்திச்சு. எ… என்னை த… தப்பா ஏதும் ப.. பண்ணிருவாங்களோன்னு ப… பயம்மா இருந்துச்சு. என்னால எதையுமே யோசிக்க முடியலை. அங்க இருந்து பா… பாதுகாப்பா எங்க அக்காகிட்ட போகணும் போல இருந்திச்சு.” என்றவளுக்கோ உடல் சட்டென வியர்த்தது. கரங்கள் நடுங்க படுக்கையை இறுகப் பிடித்துக் கொண்டாள் தன்மயா.

அவனுடைய விழிகளோ அந்த நொடி சிவந்து போயின. படுக்கையில் துடிப்பவளைக் கண்டு அவனுள்ளம் வேதனை கொண்டாலும் தன் அண்ணனை எண்ணியும் அவனுள்ளம் துடித்துப் போனது.

மனைவியின் வலியையும் அவன் உணர்ந்தான். சகோதரனின் வேதனையையும் அவன் உணர்ந்தான்.

“அப்புறம்….?” கரகரப்பாக ஒலித்தது அவனுடைய குரல்.

“வீட்டுக்குப் போய் நடந்ததெல்லாம் சொல்லி அழுதேன். என்னால அதுல இருந்து ஈசியா வெளியே வர முடியலை. ரொம்ப ரொம்ப கஷ்டமா இருந்திச்சு. க… கண்ணாடி முன்னாடி நின்னு என்னை நானே பார்க்கும்

போது கூட உடம்பு கூசிப் போயிரும்." என்றவள் பேசுவதற்கு சிரமப்பட்டாள். அவளுக்கோ மூச்சடைப்பதைப் போல இருந்தது.

"அதுக்கப்புறம் நான் ட்ரெஸ் மாத்தும் போது வீட்ல யாரும் வந்தாலே பயந்து கத்த ஆரம்பிச்சேன். தூங்கும் போது சாப்பிடும் போது கூட இந்த நினைவு என்னை நிம்மதியா இருக்க விடலை." என்றவளுடைய கன்னங்களைத் தீண்டியது அவளுடைய உவர் நீர்த் துளிகள்.

"நான் ரொம்ப டிப்ரஷன்ல இருக்கேன்னு எங்க வீட்ல எல்லாருமே என்னை நினைச்சு ரொம்ப கஷ்டப்பட்டாங்க. அப்போதான் என்னை வெளியூருக்கு என் ப்ரண்ட் கூட தங்கி படிக்கிறதுக்காக அனுப்பினாங்க. அந்த மாற்றம் என்னைக் கண்டிப்பா மாத்தும்னு நினைச்சாங்க போல." என்றவள் தன் புருவங்களைச் சுருக்கினாள்.

"நான் எதை மறக்கணும்னு நினைச்சேனோ அது மட்டும்தான் என்னோட மனசுல திரும்ப திரும்ப வந்துட்டே இருந்திச்சு. ஒரு நாள் அந்த நினைவு தந்த வலி தாங்க முடியாம கையை அறுத்துகிட்டேன்." என்றாள் அவள்.

ஆதித்யனின் உடலோ அவ் வார்த்தைகளைக் கேட்ட கணம் உறைந்தே போனது. சட்டென அவனுடைய பார்வை அவளுடைய கரங்களை பதற்றத்தோடு பரிசோதித்தன.

அவளுடைய வலது கையில் இருந்த தழும்பைக் கண்டவனது உள்ளம் குமுறத் தொடங்கியது.

'முட்டாள் எந்த பிரச்சனைக்கும் தற்கொலை தீர்வல்ல.' என கத்த வேண்டும் போல இருந்தது. அவள் உணர்ந்த வலியை அக்கணம் அவனும் உணர அவனுடைய விழிகளும் ஈரத்தை உணர்ந்தன.

அவள் மட்டும் அன்றே இறந்திருந்தால்… .? அவனுடைய ட்ராமா குயினும் இல்லாமலேயே போயிருப்பாளே.

அந்த எண்ணமே அவனை சிதற வைத்தது. அவளோ தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

“இன்னொரு தடவை தூக்கு போட போனேன். ஆனா ரெண்டு தடவையும் என்னோட ப்ரண்ட் என்னைக் காப்பாத்திட்டா. அவளோட உதவியால கொஞ்சம் கொஞ்சமாக என்னோட மனசை தேத்திகிட்டு அதுல இருந்து வெளியே வந்தேன்.” என்றாள்.

“தற்கொலை எதுக்குமே முடிவைத் தராது. அன்ட் உங்களுக்கு நடந்தது ஒரு விபத்து. அதை நீங்க கடந்து வந்தாகணும். நம்மளை மீறி ஒன்னு நடந்திருச்சுன்னா அதுல நம்ம தப்பு எதுவுமே இல்லை தன்மயா. நாம அதை கண்டிப்பா கடந்துதான் ஆகணும். என்ன பிரச்சனை வந்தாலும் அதை நாம ஃபேஸ் பண்ண ரெடியா இருக்கணும்.”

“ம்ம்….”

“நான் சொல்றது புரியுதா.?”

“ம்ம்….”

“உங்களை வாட்டும் நினைவுகளை டெலீட் பண்ணிருங்க. உங்களால முடியும்.”

“ம்ம்….” என்றவளுடைய முகம் சற்றே தெளிவடைந்தது.

“மயா பேபின்னா உங்களுக்கு என்ன தோணுது.?” புருவம் சுருங்க கேட்டான் ஆதி.

முகம் எங்கும் மகிழ்வில் மிளிர “கவின்.” என்றாள் தன்மயா.

“கவினா.? அவர் உங்களுக்கு யாரு?”

“என்னோட க்ளோஸ் ப்ரண்ட். ரொம்ப ரொம்ப நல்லவன். எனக்கு அவனை ரொம்ப பிடிக்கும். ஆனா… ஆனா….”

“ஆனா என்ன.? சொல்லுங்க.”

“கவின் என்னை லவ் பண்ணினான்.”

“நீங்க லவ் பண்ணலையா.?”

“இல்லையே.”

“ஏன் கவினை பிடிக்கலையா.?”

“பிடிக்கும்.

“அப்போ ஏன் லவ் பண்ணலை.?”

“ஏன்னா எனக்கு ஆதியைத்தானே ரொம்ப பிடிக்கும்.” என சிறு வெட்கத்தோடு கூறியவளின் வதனத்தில் அவனுடைய பார்வை அப்படியே அசைவற்று நிலைத்து நின்றது.

தன்னை எண்ணி ஒரு பெண் வெட்கம் கொள்வது அவனது மனநிலையை சடுதியில் மாற்றியது.

“பிடிக்கும்னா எப்படி.? எந்தளவு பிடிக்கும்.?” என ஆர்வமாக கேட்டான் அவன்.

“ஆரம்பத்துல பெருசா பிடிக்காது. திமிர் பிடிச்சவன், ரூடா பிஹேவ் பண்ணுவான். அரக்கன் மாதிரி அடிப்பான். எல்லா கொடுமையையும் எனக்கே பண்ணுவான். சரியான இடியட். மலைக் குரங்கு, அரக்கன், ராட்சசன், என்னை அவ்ளோ திட்டிட்டு வெட்கமே இல்லாம என்னை தொடுவான், கிஸ் பண்ணுவான் டெவில்.” என பொரிந்து தள்ளினாள் அவள்.

ஆதியின் முகமோ விளக்கெண்ணையை குடித்தாற் போல அஷ்ட கோணலாக மாறிப் போனது.

‘பிடிக்கும்னு சொல்லிட்டு இந்தத் திட்டு திட்டுறாளே.’ என மனதினுள் எண்ணினான் அவன்.

“அவன் டெவில்தான் ஆனா….”

“ஆனா.?”

“எனக்கொன்னுன்னா துடிச்சுப் போயிருவான். கொஞ்சமே கொஞ்சம் நல்ல டெவில்தான். அவன் என்னை லவ் பண்றானான்னு எனக்குத் தெரியாது. பட் நான் அவனை ரொம்ப லவ் பண்றேன். அவனுக்காக எது வேணாலும் பண்ணலாம் போல தோணும். காலம் முழுக்க அவன் மார்புலையே புதைஞ்சிருக்கணும் போல இருக்கும்.”

பேச்சற்றவனாக அவளுடைய காதலில் கரைந்து போனான் அவன்.

“என்னோட ஆதி சின்ன வயசுல ரொம்ப கஷ்டத்தை அனுபவிச்சுட்டான். இனி மேலாவது அவன் சந்தோஷமா இருக்கணும். அவனுக்கு நல்ல அம்மாவா நான் மாறணும்.” என குரல் குழைய விழிகள் கலங்க கூறியவளின் பேச்சில் ஆதியின் மனம் நொறுங்கிப் போனது.

தான் எத்தனை துயர்களைக் கொடுத்தும் அவள் தன் மீது கொண்ட காதலை எண்ணி அவனுள்ளம் வியப்டைந்தது

இதுதான் காதலோ….?

நேசித்த ஒருவருக்காக எதையும் செய்யத் தூண்டும் போதை மருந்துதான் காதலா….?

வியந்து போனான் ஆதித்யன்.

“ஆதி கூட இருக்கும் போது மயா பேபின்னு ஆதி உங்களை கூப்பிட்டா உங்களுக்கு என்ன தோணும்.?”

“க… க… கவின் வந்துட்டானோன்னு பயம்மா இருக்கும். நான் ஆதியை விரும்புறேன். என்னை ஆதி மட்டும்தான் தொடலாம். என்னை

ஆதி மட்டும்தான் அப்படிப் பா… பார்க்கலாம். ஆதியும் நானும் நெ… நெருக்கமா இருக்கும் போது க… கவின் வரக் கூடாது தானே." என்றவள் தனக்குத் தானே மறுப்பாக தலை அசைத்தாள்.

" எ… என்னை கவின் த… த…. தப்பா தொட்டுருவானோ….. அந்த மால்ல என்னை ஒருத்தர் பாதி ட்ரெஸ் இ…. இல்லாம பா… பார்த்த மாதிரி அவனும் எ… என்னை பார்த்துருவானோன்னு பயமா இருக்கும். ஆதியோட குரல் மாறினாளோ, அவனோட தொடுகைல மென்மை தெரிஞ்சாலோ, மயா பேபின்னு அவன் கூப்பிட்டாளோ எனக்கு மூச்சே நின்னு போயிரும். படபடப்பா இருக்கும். தா…. தாங்கிக்க முடியாத அளவுக்கு நெஞ்சுக்குள்ள வலிக்கும்." என திணறியவளைக் கண்டு அவனுக்கோ வேதனையாகிப் போனது.

"லிசின் தன்மயா. ஆதிக்குள்ள எந்த ஆல்ட்டரும் இல்லை. அது எல்லாமே நடிப்பு. அது உங்களுக்கே தெரியும். உங்க மனசும் அதை முழுசா நம்பணும்."

"அ… அப்போ கவின்….?"

"கவின்னு யாருமே கிடையாது. உங்களை ட்ராமா குயின், மயா பேபின்னு கூப்பிடுறது எல்லாமே ஆதிங்கிற ஒருத்தர் மட்டும்தான். உங்களை யாருமே தப்பா பார்க்கவோ , தப்பா தொடவோ மாட்டாங்க." என மீண்டும் மீண்டும் அவளிடம் கூறி அவளுடைய மனதை தெளிய வைத்தான் ஆதி.

"உங்களுக்கு ஏதாவது ஆசை இருக்கா தன்மயா.?"

“ம்ம்…. எங்க ஊருக்கு போகணும். என்னோட அம்மா அப்பா கடைசியா இறந்த இடத்தைப் பார்க்கணும்.” என்றாள் அவள்.

அவளுடைய தாய் தந்தையின் விபத்தை பற்றி கேட்க நினைத்தவன் அவளை மேலும் துன்பத்தில் ஆழ்த்த வேண்டாம் என்ற எண்ணத்தில் அந்த முயற்சியை கை விட்டான்.

அவன் கேட்காது விட்ட ஒற்றைக் கேள்வியில் பல ரகசியங்கள் மறைந்துள்ளதை பாவம் அவன் அறியவே இல்லை.

தன்மயாவிடம் சில மணி நேரம் மருத்துவனாக மாறி பல கேள்விகளைக் கேட்டவனுடைய மனமோ முற்றிலும் மாறிப் போயிருந்தது.

அவளுடைய மனதில் பதிந்து போயிருந்த கவின் பற்றிய அச்சத்தை முழுதாக நீக்கினான் ஆதி.

இறுதியில் அவளை ஆழ்ந்த உறக்கத்திற்குப் போக வைத்தவன் அவளுக்கு முன்பு மாட்டப்பட்டிருந்த சில மருத்துவ உபகரணங்களை கனத்த மனதோடு கழற்றி வைத்தான்.

அவனுடைய அனைத்து கேள்விகளுக்கும் பதில் அளித்து விட்டு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் தன் தேவதைப் பெண்ணைப் பார்த்தவனுடைய மனமோ அவள் குற்றமற்றவள், குழந்தை மனம் கொண்டவள் என்பது மாத்திரம் புரிந்து போனது.

அந்த சாய்வுப் படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்தவளை அலுங்காமல் தன் கரங்களில் அள்ளிக் கொண்டவன் தன்னுடைய படுக்கை அறையின் பஞ்சு மெத்தையில் அவளைக் கிடத்தினான்.

அடுத்த நொடி அவனுடைய முகம் அவளுடைய மார்புப் பகுதியில் புதைந்து போனது. அவளால் தான் காதலிக்கப் படுகின்றோம் என்ற உணர்வே அவனை சிலிர்க்கச் செய்தது.

அவள் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தைகளையும் மீண்டும் மீண்டும் தன் மனதினுள் ஓட்டிப் பார்த்தவன் சில இடங்களில் புன்னகைத்தான். சில இடங்களில் கண்ணீர் வடித்தான். சில இடங்களில் தடுமாறிப் போனான். சில இடங்களில் அவளுடைய மெய்க் காதலில் கரைந்தே போனான்.

“சாரி மிஸஸ் ஆதித்யன்.” அவனுடைய உதடுகள் அவளுடைய காதோரம் மெல்ல முணுமுணுத்து இனிய இதழ் ஒற்றல் ஒன்றைப் பதித்தன.

அவளுடைய கரங்களோ தூக்கத்தில் உயர்ந்து ஆதியை அணைத்துக் கொள்ள, அவனோ தன் தூக்கத்தை தொலைத்து அவளுடைய கரங்களில் குழைந்து நெகிழும் களி மண்ணாகிப் போனான்.

அவனுக்கோ ஆயுள் தோறும் இந்தக் கரங்களுக்குள் இப்படியே இருந்து விடலாம் போலத் தோன்றியது.

இது தான் காதலா….?

நான் ட்ராமா குயினை காதலிக்கிறேனா….?

அவனுக்கு கிடைத்த பதில் என்னவோ பூச்சியமே.

தன்மேல் உயிரே வைத்திருக்கும் பெண்ணின் மேல் எந்தத் தவறும் இல்லை என்பதை உணர்ந்து அவளை ஏற்றுக் கொண்டானே தவிர, அவள் மீது காதல் கொண்டு அவன் ஏற்றுக் கொள்ளவில்லையே.

காதலிப்பதை விட காதலிக்கப்படுவது பரம சுகம் என்பதை உணர்ந்து கொண்டவன் அவளுடைய காதலில் மொத்தமாக விழுந்தான்.

அவளுடைய மார்புக்கும் வயிற்றுக்கும் இடையே தன் கரத்தை மெல்ல படர விட்டவன் அவளுடைய கழுத்தோரம் தன் முகத்தைப் புதைத்தான்.

"குயின் ஐ வான்ட் டு டாக் வித் யு பேபி." அவனுடைய உதடுகள் அவளுடைய கன்னத்தில் உரச, சற்றே சிணுங்கியவள் மீண்டும் உறங்கிப் போனாள்.

"குழந்தையாடி நீ.? ஒரு குழந்தைக்கு அம்மா ஆகப் போற. பட் இப்போவும் டெடி வெச்சு விளையாட ஆசை படுறியே." என தனக்குள் கூறியவன் அவளைப் பற்றி எண்ணிக் கொண்டே தானும் உறங்கிப் போனான்.

ஆதவனின் பொற் கரங்களின் தழுவலில் பூமிப் பெண்ணும் சிவந்து ஒளியோடு மிளிர, அந்த அழகிய காலைப் பொழுதில் படுக்கையில் ஏறி சத்தம் இட்டவாறு நின்றான் யஷ்விந்த் குட்டி.

"ப்பாஆஆ விள்ளாட வா."

"கண்ணா உங்க மம்மிக்கு சமைக்கணுமேடா. டூ மினிட்ஸ்ல வந்துர்றேன்."

“நோ இப்போ வா.” அடம் பிடித்தான் குழந்தை.

“கண்ணா சமத்தா சொல் பேச்சு கேட்டு இருந்தீண்ணா அப்பா உன்னை சினிமா பார்க்க அழைச்சுட்டு போவேன்.” ஆசை காட்டினான் ஆதி.

“வாவ். ப்பாஆ ப்பாஆ வா போலாம்.”

“உங்க அம்மாகிட்ட கேளு. அவ ஓகே சொன்னா நாம போகலாம்.” என தூண்டி விட்டான் ஆதி.

யஷ்விந்த்தோ குடுகுடுவென ஓடியவன் “மம்மீஈ சினிமா போலாமா.?” என அவளுடைய கரங்களில் தொங்கியவாறு கேட்டான்.

“எதே சினிமாவா.?” என விழிகளை விரித்தவாறு நின்றாள் தன்மயா.

அதே நேரம் ஆதியோ கையில் உணவுத் தட்டோடு வந்தவன் “மார்னிங் ஷோ போகலாம். யஷ்வி ஆசைப் படுறான்.” என்றான்.

அவளோ ஆதியோடு உரையாடுவதை தவிர்த்தவள் “ஓகே கண்ணா நாம போகலாம்.” என்றாள்.

அவள் சம்மதித்த அடுத்த நொடியே மனதினுள் உற்சாகமாக உணர்ந்தவன் அவளுக்காக அந்தத் தியேட்டரின் மொத்த டிக்கட்டுகளையும் தானே வாங்கிக் கொண்டான்.

கூட்டம் அதிகமாக இருக்குமோ என சற்றே பயந்தவாறு காரில் இருந்து இறங்கியவளுக்கு அமைதியாக ஆர்ப்பாட்டம் இல்லாது இருந்த சினிமா தியேட்டரைக் கண்டு சற்றே நிம்மதியாக இருந்தது.

யஷ்விந்தை தன் ஒரு கரத்தால் தூக்கிக் கொண்டவன் மற்றைய கரத்தால் அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டான்.

அவளோ அதிர்ந்து அவனைப் பார்க்க, அவளை பார்த்து இமை சிமிட்டியவன் "கம் குயின்." என்றவாறு உள்ளே அழைத்துச் சென்றான்.

அந்த பிரமாண்டமான சினிமா தியேட்டரோ வெறிச்சோடிப் போயிருக்க, தன் மகனோடும் மனைவியோடும் கம்பீரமாக உள்ளே நுழைந்தவன் அவர்கள் இருவரையும் வசதியான இருக்கையில் அமர வைத்து விட்டு தானும் அவர்கள் அருகே அமர்ந்து கொண்டான்.

யஷ்விந்தோ ஒவ்வொரு இருக்கையிலும் ஏறி விளையாடிக் கொண்டிருந்தான்.

"ஹேய் குயின்." என ஹஸ்கி குரலில் அவளை அழைத்தான் ஆதித்யன்.

"எ…. என்ன சொல்லுங்க." நிதானமாக கேட்டாள் அவள்.

"பிடிச்சிருக்காடி.?" ஆர்வமாக வந்து விழுந்தன அவனுடைய வார்த்தைகள்.

“எது பிடிச்சிருக்கா….?” என கேட்டவள் அவனை விசித்திரமாக பார்த்தாள்.

‘இந்த டெவிலுக்கு என்னாச்சு.? விசித்திரமா நடந்துக்கிறானே.’ என மனதினுள் எண்ணிக் கொண்டாள்.

“நம்ம ஏற்பாடுதான்.” என்றவாறு பார்வையால் திரையில் போன படத்தை சுட்டிக் காட்டினான் அவன்.

“ப்ச் எனக்கு சினிமாவே பிடிக்காது ஆதி. நான் யஷ்விக்காக வந்தேன்.” என்றவள் தன் விழிகளை மூடிக் கொண்டு இருக்கையில் நன்றாக சாய்ந்து கொண்டாள்.

சட்டென ஏமாற்றத்தில் வாடிப் போனது அவனுடைய முகம்.

“ஓ…. இட்ஸ் ஓகே. மூவியை பார்டி.” என்றான் அவன்.

அவனுடைய வற்புறுத்தலில் படத்தை பார்க்க ஆரம்பித்தவள் சில காட்சிகளிலேயே படத்தோடு ஒன்றிப் போனாள்.

தளபதி விஜய்யின் மெர்சல் திரைப்படம் திரையில் ஒளி பரப்பாகிக் கொண்டிருக்க, முதலில் சாதாரணமாக பார்த்து கொண்டிருந்தவள் நித்யா மேனனின் காதல் காட்சிகள் வரத் தொடங்க, மனம் கலங்கிப் போனாள்.

அவர்களுடைய இனிமையான குடும்ப வாழ்வைப் பார்த்தவளது இமைகள் கனக்கத் தொடங்கின.

“ஹேய் நல்ல லவ் சீன்தானே போகுது. இதைப் பார்த்து எதுக்குடி அழுகுற.?” எனக் கேட்டான் ஆதி.

“எனக்கும் எங்க அப்பா அம்மா இருந்திருந்தா நல்ல வாழ்க்கையை அமைச்சு கொடுத்திருப்பாங்க. அவங்க இருந்திருந்தா என் வாழ்க்கை இப்படி சீரழிஞ்சு போயிருக்காதுல்ல. நானும் சந்தோஷமா வாழ்ந்திருப்பேன்ல.” என தொண்டை அடைக்கக் கூறியவள் சட்டென அமைதியாகிப் போனாள்.

அவளுடைய விழிகள் கலங்கி கண்ணீரோ கன்னத்தில் வழிந்து விட, உடல் இறுகிப் போனான் ஆதித்யன்.

“எல்லாரோட வாழ்க்கையும் மலர்கள் தூவிய பாதை மாதிரி இருக்காது குயின். அதுல சில முட்களும் இருக்கத்தான் செய்யும். நாமதான் அதை கடந்து வாழப் பழகணும்.”

“சில முட்களா….? என்னோட வாழ்க்கை முழுக்க முட்களாத்தானே இருக்கு. பதினெட்டு வயசுலையே என்னோட சந்தோஷம் தொலைஞ்சு போயிருச்சு ஆதி. எப்போ உங்ககிட்ட வந்தேனோ அப்போல இருந்து நரகத்தை மட்டும்தான் நான் அனுபவிச்சுகிட்டு இருக்கேன்.” என்றவள் தன் விழிகளை துடைத்துக் கொண்டாள்.

அவள் அழுகின்றாள் என்பதை உணர்ந்து கொண்டவன் அவளுடைய கரத்தை மெல்ல பற்றிக் கொண்டான்.

அவளுடைய கரத்தில் சற்றே அழுத்தம் கொடுத்து அவளை சமாதானப் படுத்த முயன்றவன் அவள் அறியாது அவளுடைய தோள்களில் தன் கரத்தை அணைத்தாற் போல வைத்துக் கொண்டான்.

அடுத்தடுத்த சில திரைப்படக் காட்சிகளில் இருவரது முகமும் புன்னகையை தத்து எடுத்துக் கொண்டன.

இறுதியில் பிரசவ அறையில் நாயகி துடிக்கும் துடிப்பைப் பார்த்தவனுக்கு வியர்க்கத் தொடங்கியது. பிரசவம் ஒன்றும் எளிதல்லவே. அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவன் தன்னை அறியாது தன்மயாவை அந்த பிரசவ அறையில் வைத்து கற்பனை செய்யத் தொடங்கியிருந்தான்.

ஆனால் அந்த திரைப் படத்திலோ குழந்தையை பெற்றெடுத்து விட்டு நாயகி இறந்துவிட அந்த இடத்தில் தன் மனைவியை கற்பனையில் வைத்தவனுக்கு உள்ளம் பதறித் துடித்துப் போனது.

கண்கள் கண்ணீரால் நிறைந்து போக, "நோஓஓஓஓ." என அலறியவன் சட்டென இருக்கையில் இருந்து எழுந்தான்.

பார்ப்கானை ருசித்துக் கொண்டு படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவள் ஆதியின் அலறலில் கரத்தில் இருந்த பார்ப்கானை தவற விட்டாள்.

"என்னாச்சு ஆதி.?" திகைத்தாள் அவள்.

"ந··· நத்திங் நத்திங்." வியர்த்து வழிந்தது அவனுக்கு. எப்போதும் நிதானமாக அழுத்தமாக வெளிவரும் அவனுடைய வார்த்தைகளோ தற்போது பதற்றமாக வெளி வந்தது.

"ஏன் இப்படி உங்களுக்கு வியர்த்துக் கொட்டுது.? ஏசி ஆன்ல தானே இருக்கு.?" வியப்பாய் கேட்டாள் தன்மயா.

“நத்திங் குயின். கிளம்பு நாம போகலாம்.” என்றான் அவன். அவனுடைய விரல்கள் அழுத்தமாக தன் தலைக் கேசத்தைக் கோதிக் கொண்டன.

“யோவ் சும்மா இருத்தவளை படம் பார்க்க கூட்டிட்டு வந்துட்டு இப்போ பாதிலையே கிளம்புன்னு சொன்னா என்ன அர்த்தம்.? யஷ்வி அழுவான் நான் வர மாட்டேன்.” என்றவள் தனக்கு முன்னே எழுந்து நின்றவனை சற்று தள்ளி விட்டு படத்தை பார்க்கத் தொடங்கினாள்.

“ப்ச்…. யஷ்வி படம் போட்டதுமே தூங்கிட்டான் குயின். கிளம்பு நாம போகலாம்.”

“ஆதி…. நான் வரலை. படம் முடிஞ்சதும் போகலாம்.” என்றாள் அவள்.

அவளுடைய உதடுகள் அவனோடு பேசினாலும் அவளுடைய விழிகள் திரையையே பார்த்துக் கொண்டிருந்தன.

“ஹேய் புரிஞ்சிக்கோ குயின். ஐ நீட் யு டாக் வித் யு டி.” என்றான் கரகரப்பான குரலில்.

“ஹாங்….?”

“உன்கூட பேசணும்டி இடியட். கிளம்பு.” அவனுடைய குரலிலோ சட்டென கோபம் எட்டிப் பார்த்தது.

“எதுவா இருந்தாலும் இங்கேயே பேசுங்க.” என்றவள் தன் நாடியில் கரம் பதித்து படத்தை பார்க்கத் தொடங்கினாள்.

“ஆர் யு சீரியஸ் குயின்.?”

“எஸ். ஐ அம் சீரியஸ்.”

“அப்போ இங்கேயே பேசிரட்டுமா.?”

“எஸ்பா. எதுவா இருந்தாலும் இங்கேயே சொல்லுங்க.” என்றவாறு தன் விழிகளை திரையில் படர விட்டாள்.

அவனோ அடுத்த நொடியே அவளின் இருக்கைக்கு முன் வந்து குத்திட்டு அமர்ந்தவன் அவளுடைய மேடிட்ட வயிற்றில் திடீர் முத்தம் பதித்தான்.

அவளோ திகைத்து விழிக்க, அவளுடைய கழுத்தில் தன் கரம் கொடுத்து அவளை சற்றே முன்னால் குனியச் செய்தவன் அவளுடைய முகத்தை நெருங்கினான்.

அவள் திகைப்பில் இருந்து விலகும் முன்னரே அவளுடைய தேன் குழல் இதழ்கள் அவனுடைய தடித்த அதரங்களால் ஆட்கொள்ளப்பட்டது.

ஓர் நொடி விழிகள் விரிய அதிர்ச்சியில் அசையாது இருந்தவள் அடுத்த கணம் அவனுடைய மார்பில் தன் கரம் பதித்து தன்னில் இருந்தும் விலக்கித் தள்ள முயன்றாள்.

அவனோ அவள் எந்த ஆபத்தும் இன்றி பாதுகாப்பாக தன் கரங்களுக்குள் இருக்கின்றாள் என்ற நிம்மதியை உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருந்தான்.

சிறு பிள்ளை போன்ற குணம் கொண்ட மெல்லியவளுக்கு பிரசவத்தை தாங்க முடியுமா என்ற பேரச்சம் அவனை ஆட்கொள்ளத் தொடங்கியது.

தன்னவளும் தன் குழந்தையும் தன் கரங்களுக்குள் இன்று போல என்றும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென எண்ணியவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

தன்மயாவின் மனநிலையோ முற்றிலும் வேறாகிப் போனது. பொது இடத்தில் அவனுடைய அத்துமீறல் அவளுக்கு எரிச்சலை மூட்டியது.

அவனை சிரமப்பட்டு தள்ளி தன்னில் இருந்து விலக்கியவள் அவனுடைய கன்னத்திலே ஓங்கி அறைந்தாள்.

“ச்சீ… . பப்ளிக் ப்ளேஸ்ல இப்படியா பண்ணுவீங்க.? அறிவில்லையா உங்களுக்கு.?” சீறி வெடித்தாள் தன்மயா.

அவள் தன்னை அறைந்த அடுத்த நொடி மித மிஞ்சிய சீற்றத்தில் அவளுடைய கழுத்தை சட்டென இறுகப் பற்றி பிடித்தான் ஆதி.

“ஏய்ய்… .” என்ற அவனுடைய கர்ஜனையில் அவளுடைய சரீரமோ நடுநடுங்கிப் போனது.

“என்னை அடிக்கிற அளவுக்கு உனக்கு தைரியம் வந்திருச்சாடி.?” உறுமினான் அவன்.

அவனுடைய உறுமலில் அவள் உடலோ உதறத் தொடங்கியது. தன் கரங்கள் கொண்டு அவனை விலக்கி விட முயன்றவள் அவனுடைய வலிமையின் முன் தோற்றுப் போனாள்.

“வ்விடுஉஉஉ வ்விடுங்க ஆதீஈஈஈ.” என கண் கலங்க திணறலாக கூறியவளை சட்டென விடுவித்தான் அவன்.

அவளோ தன் உடலின் மொத்த சக்தியும் வடிந்தாற் போல இருக்கையில் இருமியவாறு அழத் தொடங்க, அவளுடைய அழுகை அவனை வாட்டி வதைக்கும் ஆயுதமாகிப் போனது.

‘ஓ காட். என்ன காரியம் பண்ணிட்டேன். ஐயோ அவளோட கழுத்தையா பிடிச்சேன்.?’ என தன் கரங்களை வெறித்துப் பார்த்தவன் அடுத்த கணம் தன் கரத்தை அந்த இருக்கையில் ஓங்கி அடிக்க, அந்த இருக்கையின் பிடியோ இரண்டாக உடைந்து போனது.

அவனுடைய இயல்பான கோபம் வெளியே வர, தன்னை மறந்து தன்மயாவைக் காயப்படுத்தியவன் அடுத்த நொடியே அவளை அழ வைத்ததற்காக தன் கரத்தை ஓங்கி அங்கிருந்த இருக்கையில் அடித்தான்.

“ஆதீஈஈஈஈஈ நிறுத்து.” அலறினாள் தன்மயா. இரண்டாக உடைந்து போன இருக்கையின் பிடியைப் பார்த்தவள் சட்டென அவனுடைய கையை பிடித்து பதற்றத்தோடு பரிசோதித்தாள்.

“ஆதீஈஈ ஆர் யு ஓக்கே.?” அவளுடைய பதறலில் அவனுடைய மனமோ மீண்டும் கரைந்து போனது.

“சாரி குயின். ஐ அம் ரியலி சாரி.” என்றவன் அவளுடைய கழுத்தை மென்மையாக வருடி விட்டான். முதன் முறையாக அவனுடைய மென்மையை உணர்ந்தவளுக்கு பேரதிர்ச்சியாக இருந்தது.

“வலிக்குதா டி.?” கரகரப்பாக ஒலித்த அவனுடைய குரலில் தடுமாறியவள் “இ…. இல்லை” என்றாள்.

“ம்ம் நீ மூவி பாரு. நான் வெளியே வெயிட் பண்றேன்” என்றவன் திரும்பி நடக்கத் தொடங்க,

“ஆதி. நானும் வர்றேன்.” என்றவள் அவன் பின்னேயே நடக்கத் தொடங்கினாள்.

தூங்கிக் கொண்டிருந்த யஷ்வியைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டு காரை நோக்கிச் சென்றான் அவன்.

அவளும் அமைதியாக காரில் ஏறி அமர்ந்து கொண்டாள். சிறிது நேரத்திலேயே தன்னை சமப் படுத்திக் கொண்டு காரை ஸ்டார்ட் செய்தவன் நேரே மருத்துவமனைக்குச் சென்றான்.

“எங்க போறீங்க ஆதி.?”

“ஹாஸ்பிடல்.”

“ஏன்….?”

“டாக்டர்கிட்ட செக்கப் போகணும்ல. போய் பார்த்துட்டு வந்துரலாம்.”

“ப்ச்…. நான் என்னோட ரிப்போர்ட்டை எடுத்து வரலை.”

“நான் ஆல்ரெடி எடுத்து வெச்சிட்டேன்.” என்றவன் காரை மருத்துவமனை வாயிலில் நிறுத்தி விட்டு யஷ்விந்திற்கு அளவான ஏசியை ஆன் செய்து காரை லாக் செய்தவன் தன்மயாவை அழைத்துக் கொண்டு மருத்துவமனையின் உள்ளே சென்றான்.

அவளுக்கு ஸ்கேன் செய்து பார்ப்பதென முடிவு செய்யப்பட்டது.

“ஹாய் ஆதி எப்படி இருக்க.?” எனக் கேட்டாள் டாக்டர் திவ்யா.

“ஹாய் திவ்யா. ஐ அம் குட். வாட் அபௌட் யு.?” என தன் தோழியை நலம் விசாரித்தான் அவன்.

“நான் நல்லா இருக்கேன்டா. எப்படி இருக்கீங்க தன்மயா.? இந்த டெரர் ஆதி உங்களை எப்படி பார்த்துக்கிறான்.?”

“அவன்…. அவர்ர்…. அதுஉ வந்து ம்ம் நல்லா பார்த்துக்கிறார். நான் நல்லா இருக்கேன்.” என சொல்லி முடிப்பதற்குள்ளேயே அவளுடைய முகம் வெகுவாக மாறிப் போனது.

கடமைக்காக பொய் உரைத்து விட்டு ஆதியை அழுத்தமாக பார்த்தவள் பின்பு டாக்டரை பார்த்து புன்னகைத்தாள்.

“தட்ஸ் குட் தன்மயா. குழந்தையோட மூவ்மென்ட்ஸ்லாம் தெரியுதா.?”

“எஸ் டாக்டர் நல்லாவே அசைவு தெரியுது.”

“குட்…. உங்க ட்ரெஸ்ஸை அட்ஜஸ்ட் பண்ணுங்க. ஸ்கேன் பண்ணி பார்த்துருவோம்.” என்றாள் திவ்யா.

“அச்சச்சோ நான் இன்னைக்கு புடவை வேற கட்டலையே. இந்த கவுன்ல எப்படி அட்ஜஸ் பண்ணுறது.?” திகைத்தாள் அவள்.

“இட்ஸ் ஓகே. அதுக்கு ஏன் டென்ஷன் ஆகுறீங்க.? உங்க கவுனை மேல தூக்குங்க.” என்றாள் திவ்யா.

“சா… சாரி டாக்டர் அதுஉ என்… என்னால முடியா….” என சொல்லி முடிப்பதற்கு முன்னர் அவளுடைய பேச்சில் இடை புகுந்தவன் “திவ்யா அவளுக்கு கொஞ்சம் கூச்சம் அதிகம். நீ கொஞ்சம் வெளியே வெயிட் பண்றியா.?” எனக் கேட்டான்.

“ஹா…. ஹா…. திஸ் இஸ் டூ மச் ஆதி. நான்தான் பிரசவமே பார்க்க போறேன்.” என சிரித்தவள் தலை அசைத்து விட்டு வெளியே சென்றாள்.

“நாளைக்கு வரலாம் ஆதி. வாங்க போவோம்.” என எழ முயன்றவளை அழுத்தி படுக்கையில் படுக்க வைத்தவன் ஒரு போர்வையை எடுத்து அவளுடைய கால்களை போர்த்தினான்.

அவளோ அவனை திகைப்பாக பார்க்க, “க்ளோஸ் யுவர் ஐஸ்.” என்றான்.

“ஹாங்.? ஒன்னும் தேவலை. நீங்களும் வெளியே போங்க.” பதறினாள் அவள்.

எங்கே தான் அணிந்திருக்கும் கவுனைத் தூக்கி விடுவானோ என்ற அச்சம் அவளை பிடித்துக் கொண்டது.

“நான் எதுக்குடி வெளியே போகணும்.?”

“ஆதி ப்ளீஸ்….”

“நோ வே.” என்றவன் போர்வையை அவளுடைய இடை வரை போர்த்தி விட்டு அவளுடைய கவுனை மெல்ல மெல்ல வயிற்றுக்கு மேலே ஏற்றி விட்டான்.

“அச்சோ விடுங்க.” என படபடத்தவளை பார்த்து இமை சிமிட்டியவன் “அவ்ளோதான்டி முடிஞ்சுது” என்றான்.

அவளுடைய கவுனை இன்னும் மேலே தூக்கி அவளது வயிற்றை பார்த்தவன் தன் விரல்களால் அதனை வருடி விட்டான்.

“ஐயோஓ கொஞ்ச நேரம் சும்மா இருங்களேன்.”

“ஏன்டி.?”

“கூசுது….”

“ஹா…. ஹா….” என சிரித்தவன் திவ்யாவை உள்ளே அழைத்தான்.

உள்ளே நுழைந்த திவ்யாவோ அவர்களைப் பார்த்து திருப்தியாக புன்னகைத்தாள்.

சற்று நேரத்தில் அவளுக்கு ஸ்கேன் செய்யப்பட, அவளுடைய கரத்தை மெல்ல பற்றி தன் கரங்களுக்குள் வைத்துக் கொண்டான் ஆதி.

அவளுடைய வயிற்றையும் கணினித் திரையையும் மாறி மாறிப் பார்த்தவனுக்கு விழிகள் ஆனந்த களிப்பில் நனையத் தொடங்கின.

தன் குழந்தை என்றதும் அவனுடைய அத்தனை செல்களும் சிலிர்த்துத்தான் போனது.

அந்த நொடியே அவனுடைய செல்வத்தை தன் கரங்களில் மென்மையாக ஏந்தி முத்தத்தில் முக்குளிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணமும் அவனுள் முகிழ்த்தது.

இமைகளைச் சிமிட்டினால் குழந்தையை காணும் நேரம் குறைந்து விடுமோ என எண்ணியவன் இமை சிமிட்டாது விழி அசைக்காது அந்த திரையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

தன்மயாவும் தன்னை மறந்து மிக மிக சிறிதாக தெரிந்த தன் குழந்தையை இமை சிமிட்டாது பார்த்தாள். அவளுள்ளமோ நெகிழ்ந்து போனது. அவளது விரல்களோ அவளை அறியாது ஆதியின் விரல்களோடு பிண்ணிப் பிணைந்தன.

“ஹாங்கிராட்ஸ் ஆதி உன்னோட பொண்ணு நல்லா இருக்கா..” என்றாள் திவ்யா.

“தேங்க்ஸ் திவ்யா.” என தன் தோழிக்கு நன்றி உரைத்தவன் தன்னவளை ஆசையுடன் பார்வையால் வருடினான்.

அவளுடைய விழிகளும் தன் காதலனை ஆதுரமாகப் பார்த்தன.

திவ்யா ஸ்கேன் செய்து முடித்து விட, ஆதியோ தன்னவளின் தலைப் பக்கம் வந்து அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டான்.

குழந்தையைக் கண்ட களிப்பில் இருந்த தன்மயாவும் தன்னை மறந்து ஆதியின் மார்போடு ஒன்றினாள். அவளது உச்சந் தலையில் குனிந்து மென் முத்தம் பதித்தவன்,

“ஆர் யு ஓக்கே குயின்.?” எனக் கேட்டான்.

“எ… . எஸ் ஆதி.” என மெல்ல பதில் அளித்தாள் தன்மயா. சற்று நேரத்திலேயே சுற்றம் புரிய அவனிடம் இருந்து விலகியவள் தன் வயிற்றில் இருந்த ஜெல்லை துடைத்துக் கொண்டு தன் ஆடையை ஒழுங்கு படுத்திக் கொண்டாள்.

ஆதியோ திவ்யாவைப் பார்த்தவன் “எல்லாம் ஓகே தானே திவ்யா.? டெலிவரி டைம்ல எந்த பிரச்சனையும் வந்திராதே.?” என சற்றே கலக்கமான குரலில் கேட்டான்.

“இப்போ வரைக்கும் எல்லாம் ஓகேதான். பட் தன்மயாவோட உடம்புதான் ரொம்ப வீக்கா இருக்கு. ப்ரஷர் அதிகமா இருக்கு. ஓவர் திங்கிங் அவங்களுக்கு கூடாது ஆதி.” எச்சரித்தாள் திவ்யா.

ஒரு கணம் அதிர்ந்தவன் “ஓ…. நான் பார்த்துக்கிறேன்.” என்றான்.

“ஹேய் திவ்யா, தன்மயா இந்த டைம்ல ட்ராவல் பண்ணலாமா.?”

“எஸ் இனி பயப்படத் தேவலை. பட் ஸ்லோவா வண்டியை ஓட்டு.” என எச்சரித்தாள் திவ்யா.

“ஓகே…. ஓகே….”

திவ்யாவோ சில மாத்திரைகளை வாங்கும்படி எழுதிக் கொடுத்தவள் தன்மயா அதிகம் உண்ண வேண்டிய உணவு வகைகளையும் பரிந்துரைத்தாள்.

“தேங்க்ஸ் டாக்டர்.”

“தேங்க் யு திவ்யா.” என்றவாறு இருவரும் அங்கிருந்து கிளம்பினர்.

காரின் உள்ளே தூங்கிக் கொண்டிருந்த யஷ்விந்த்தோ கண் விழித்தவாறு படுத்திருக்க, உள்ளே நுழைந்து அவனைத் தூக்கி தன் மடியில் அமர்த்திக் கொண்டவன் “கண்ணா உங்க தாத்தா பாட்டி வீட்டுக்கு போகலாமா.?” என ஓரக் கண்ணால் தன்மயாவைப் பார்த்தவாறு கேட்டான்.

சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தவள் "யா…. யாரோட வீ…. வீட்டுக்கு போறோம் ஆதீஈஈ.?" என கேட்டாள்.

"அதெல்லாம் உனக்கு எதுக்கு.?"

"ஆ…. ஆதி ப்ளீஸ்.?"

"என்னடி.?"

"நாம இப்போ எங்கே போறோம்.?"

"நீ எங்கேன்னு நினைக்கிற.?"

"எ…. எங்க வீட்டுக்கா.?" என தன் கண்களில் ஏக்கத்தை தேக்கி கேட்டாள் தன்மயா.

அவளுடைய தவிப்பும் ஏக்கமும் புரிய, ஆம் என தலை அசைத்தான் ஆதித்யன்.

அடுத்த கணம் மகிழ்ச்சியில் அவளுடைய வதனமோ தாமரை மலர் போல மலர்ந்து விரிந்தது.

"நிஜமாவா… .?" என கேட்டவளின் கன்னம் தொட்ட கூந்தலை அவளுடைய காதோரம் ஒதுக்கி விட்டவன் ஆம் என தலை அசைத்தான்.

அவளுடைய முகமோ மீண்டும் மலர்ந்து போனது.

“ஐயோ சிரிக்காதடி.”

“ஏன்….”

“பயமா இருக்கு….”

“ஹா….? என்னோட சிரிப்பு பயமா இருக்கா.?” என அவனைப் பார்த்து முறைத்தவள் தனக்குள் “போடா டெவில்.” என அவனைத் திட்டிக் கொண்டாள்.

“ஹேய் குயின் உங்க ஏரியா தெரியும். பட் வீடு எதுன்னு மறந்துட்டேன். அட்ரெஸ் சொல்லு.”

“ம்ம் போங்க நானே வழிகாட்டுறேன்.” என்றவள் சீட்டில் சாய்ந்து கொண்டாள்.

அவள் இருக்கையில் சாய்ந்ததும் யஷ்வியை தன் மடியில் இருந்து எழுப்பியவன் கீழே இறங்கி காரின் டிக்கியைத் திறந்து அதனுள் இருந்த சில தலையணைகளை எடுத்து வந்தான்.

மீண்டும் காரில் ஏறி அவளுடைய முதுகுக்கு அணைவாக தலையணை வைத்தவன் அவளுடைய பாதங்களுக்கு அடியிலும் தலையணையை வைத்தான்.

“ரெண்டு மணி நேரத்துல போயிரலாம் தானே. இதெல்லாம் எதுக்கு.?” என கேட்டாள்.

“நான் ஸ்லோவாதான் போவேன். உனக்கு தூங்குறதுக்கு இது ரொம்ப வசதியா இருக்கும். நீ தூங்கு.” என்றவன் காரை செலுத்தத் தொடங்கினான்.

தன்மயாவும் யஷ்விந்தும் பேசிக் கொண்டே வர ஆதியின் முகத்திலோ புன்னகை நிலைத்தது.

இத்தனை நாட்களாக இது தான் காதலா.? என எண்ணி குழம்பித் தவித்தவனுக்கு சரியான பதில் கிடைத்திருந்தது.

இன்று திரைப் படத்தில் வந்த பிரசவ காட்சியைப் பார்த்து தன்மயாவிற்கு ஏதேனும் ஆகி விடுமோ என அஞ்சி நடுங்கும் போதுதான் அவனுடைய மனம் அவனுக்கே புரிந்தது.

தன்மயா இந்த உலகில் இல்லை எனில், தானும் ஓர் நொடி கூட உயிர் வாழ மாட்டோம் என்கிற நிதர்சனம் அவனுடைய காதலை உணர வைத்தது.

தன் ட்ராமா குயினின் கரங்களிலும் காதலிலும் உருகிக் கரைய அவன் ஆவி துடிப்பதை உணர்ந்தவன் அவள் மேல் தான் கொண்ட காதலையும் உணர்ந்து கொண்டான்.

அவள் எனக்காக படைக்கப்பட்டவள்.

இந்த ஆதித்யனுக்காக படைக்கப்பட்ட தேவதை. என எண்ணிக் கொண்டு வந்தவனது சிந்தனையை தடுத்து நிறுத்தினாள் தன்மயா. மூன்று மணி நேரம் தாண்டி விட்டதை உணர்ந்தவன்,

“என்னடி.? இதுவா உங்க வீடு.?” எனக் கேட்டான்

“இல்லப்பா அது மூர்த்தி அங்கிள். வண்டியை ஸ்டாப் பண்ணுங்க ஆதி. நான் அவரைப் பார்த்தே மூணு வருஷம் ஆகுது. பேசிட்டு வந்துர்றேன் ப்ளீஸ்.” என்றாள்.

“வா. நானும் வர்றேன்.” என்றவன் அவளுடைய கரத்தைப் பற்றி அழைத்துச் சென்றான்.

“மூர்த்தி அங்கிள்…. மூர்த்தீஈஈஈ அங்கிள்.” என தனக்கு முன்னால் சென்றவரை அழைத்து நிறுத்தியவள் “என்னை யார்னு தெரியுதா.?” என சிரிப்போடு கேட்டாள்.

தன் சொந்த ஊருக்கு வந்ததன் விளைவு அவளுடைய வதனமோ புன்னகையில் மலர்ந்தது.

“அம்மாடி தனு. இது நீயாம்மா. எப்படி வளர்ந்துட்ட. என் கண்ணையே என்னால நம்ப முடியலை.” என்றார் அவர்.

அவரின் முன்னே நின்று மகிழ்ச்சி பொங்க சிரித்தவள் “நானேதான் அங்கிள். இவர் என்னோட கணவர் ஆதித்யன்.” என அவனை அறிமுகப் படுத்தி வைக்க, அவளுடைய வார்த்தைகளில் ஆதியின் மனமோ பூரித்தது.

அதே,நேரம் ஆதியை உற்று பார்த்த மூர்த்தியோ “தம்பீஈஈஈஈஈஈ நீங்களாஆஆஆ.? நீங்க இன்னும் உயிரோடுதான் இருக்கீங்களா.?” என அதிர்ச்சியோடு கேட்டார் மூர்த்தி.

ஆதியோ புருவம் உயர, “வாட்.? யார் நீங்க.?” எனக் கேட்டான்.

“என்னாச்சு மூர்த்தி அங்கிள்.? இவரை உங்களுக்குத் தெரியுமா.?” என திகைப்பாய் கேட்டாள் தன்மயா.

“இவரை எப்படிம்மா என்னால மறக்க முடியும்.? உன்னோட குடும்பம் இறந்ததே இவரோட வண்டில மோதிதான்.

இவருக்கு கூட ரொம்ப பெரிய அடி. இவரை ஹாஸ்பிடல் சேர்க்க ஆம்புலன்ஸ் வர வைச்சதே நான்தான். இவரைக் கொண்டு போகும் போதே தப்புறதுக்கு வாய்ப்பில்லைன்னு சொல்லிட்டுத்தான் போனாங்க.” என அதிர்ச்சியோடு கூறி முடித்தார் மூர்த்தி.

தன்மயாவோ தன் மீது இடி விழுந்ததைப் போல தடுமாறிப் போனாள். தலை சுற்றுவதைப் போல இருக்க, தன் தலையைப் பற்றிக் கொண்டவள் மறு கையால் ஆதியின் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டாள்.

“எ…. என்னோட ஆ… ஆதி க்…. கொ…. கொலைகாரன் இ…. இல்ல அங்கிள்.” என்றவள் “வ்வாஆ ஆதி இந்த ஊர் வ்வேணாம். நாம நம்ம வீட்டுக்கு போவோம்.” என்றவாறு அவனுடைய கரத்தை பிடித்துக் கொண்டு சீற்றத்தோடு திரும்பி நடந்தாள்.

ஆனால் அவளின் இழுப்புக்கு அசையாது உடல் இறுக நின்றான் ஆதி.

“எ…. என்… என்ன? ஆதீஈஈ வ்வா.”

“அம்மாடி தனு. எனக்கு நல்லாவே தெரியும் அது இவர்தான்.” என அடித்துக் கூறினார் மூர்த்தி.

“ஆதீஈஈஈ சொல்லு ஆதி. அது நீ இல்…. இல்லைன்னு சொல்..லு ஆதி.” என அசையாது நின்றவனை உலுக்கினாள் தன்மயா.

“சா… . சாரிமா அவர் சொ… .ல்றது சரிதான். அந்த ஆக்ஸிடென்ட் பண்ணது நான்தான்.” என வேதனைக் குரலில் கூறினான் ஆதி.

அவனைப் பிடித்திருந்த கரத்தை சட்டென தீச் சுட்டாற் போல விலக்கியவள் “பாவீஈஈஈஈ ச்சீஈஈஈ என் கண் முன்னாடி வராத…” என வீறிட்டு அலறியவள் அவனைத் திரும்பியும் பார்க்காது அவனுக்கு எதிர்த் திசையில் நடக்கத் தொடங்கினாள்.

அவள் உடலோ தள்ளாடத் தொடங்கியது.

“குயின். ப்ளீஸ் நில்லு நான் சொல்றதை கேளுடி ப்ளீஸ்.” என்றவன் அவள் பின்னே விரைந்தான்.

அவளுடைய நடையோ அவனுக்காக நிற்காது போக, சட்டென அவளுடைய கரத்தைப் பற்றியவன் “ப்ளீஸ் லிசின் டு மீ குயின். போகாதடி நில்லு.” என்க,

அவளோ அவன் கையை உதறிவிட்டு பொங்கி வெடித்த அழுகையோடு தொடர்ந்து நடந்தாள்.

“மயாஆஆஆ ஐ லவ் யு ப்ளீஸ். என்னை விட்டு போகாத. நான் சொல்றதைக் கேளுடி ப்ளீஸ். ஐ லவ் யு டி.” என்றதும் அவளுடைய பாதங்கள் அசைவற்று நின்றன.

திரும்பி அவனுடைய முகத்தை ஏறிட்டவள் “உன் லவ்வைத் தூக்கி குப்பைல போடுடா.” என்றவாறு நடக்கத் தொடங்கினாள்.

தன்மயாவின் கால்களோ தள்ளாடத் தொடங்கின. முடிவிலியாக வழிந்து கொண்டிருந்த கண்ணீரை துடைக்கக் கூடத் திராணியற்றவளாக நிற்காது நடந்து கொண்டிருந்தவளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் ஆதித்யன்.

அவள் எப்படி என்னை விட்டுப் போகலாம்.? நான் இல்லாமல் அவளால் இருந்து விட முடியுமா.? என தனக்குள் கேள்வி எழுப்பியவன் தன் உயிரை கயிறாகத் திரித்து எடுத்துச் செல்பவளை தடுத்து நிறுத்தும் நோக்கில் மீண்டும் அழைத்தான்.

“மயாஆஆஆ…. ஸ்டாப்.” அவன் குரல் சற்றே கலக்கமாக ஒலித்தது.

அவனுடைய குரல் அவளுடைய செவிகளில் மோதிச் செல்ல, அவனுடைய வார்த்தைகளை செவிமடுக்காத தூரம் செல்ல விரும்பினாள் மாது.

அவளுடைய உதடுகள் கூட அவளின் உடலுக்கு போட்டியாக நடுங்கிக் கொண்டிருந்தது.

எப்படிப்பட்ட குடும்பம் அவளுடையது. அதை அவனுடைய பழிவெறிக்காக சிதைத்து விட்டானே பாவீஈஈ!

எத்தனை பாதுகாப்பாய் எத்தனை அன்பாய் எத்தனை அரவணைப்பாய் பிண்ணப்பட்ட என் குடும்பம் ஒரு சிறிய தவறால் சிதைந்து போனதா.?

அவளால் அதனை நம்பத்தான் முடியவில்லை.

‘அப்பா சாரிப்பா…. அம்மா சாரிம்மா… அக்கா என்னை மன்னிச்சிருக்கா. இதுக்கெல்லாம் நான்தான் காரணம். என்னை பழிவாங்குறேன்னு அந்த பாவி உங்களை எல்லாம் கொன்னுட்டானே.’ என எண்ணி அழுதவாறே தொடர்ந்து நடந்தாள் அவள்.

“மயாஆஆஆ நில்லுடி.”

மீண்டும் அந்த அரக்கனின் குரல் அவளது செவிப் பறையில் மோத சட்டென வீதியில் அமர்ந்தவள் தன் காதுகளை இறுக மூடிக் கொண்டாள்.

அவள் நடு வீதியில் மண்டியிட்டு சட்டென அமரவும் ஆதித்யனின் இரும்பு இதயம் கூட ஒரு கணம் ஆடித்தான் போனது.

“ஹேய்ய்ய்…..” என அவளை குரல் நடுங்க அழைத்தவன் அடுத்த நொடி அவள் அருகே ஓடிச் சென்றான்.

விழிகளை இறுக மூடி உடல் இறுக வேதனை எனும் நட்டாற்றில் தத்தளிப்பதைப் போல கிடந்தவளின் தோள்களை சட்டென பற்றியவன் “எ… . என்னாச்சு குயின்.? வலிக்குதா.?” என்றவாறு அவளையும் அவளுடைய மணி வயிற்றையும் தன் பார்வையால் வருடினான்.

வெடுக்கென தன் உடலில் இருந்த அவனுடைய கரத்தை உதறியவள் அவனை வெறுப்போடு பார்த்தாள்.

“இங்கே இருந்து போயிருங்க ஆதித்யன். உ…. உங்களை பார்க்க… பார்க்க எனக்கு வெறியா வருது. ப்ளீஸ் தயவு செஞ்சு போயிருங்க. இனி நான் உங்க முகத்தை கூட பார்க்க விரும்பலை.”

“ப்ச்…. முதல்ல எழுத்திருடி. வீட்ல போய் பேசலாம் வா.”

“வீட்டுக்கா.? கொலைகாரனோட வீட்டுக்கு நான் எதுக்காக வரணும்.? சே உ.. உன்னால எப்படி முடிஞ்சுது ஆதி.? இவ்ளோ கெட்டவனா நீ.?” விம்மி வெடித்த அழுகைக்கு இடையே அவனுடைய முகத்தை பார்த்து வேதனை குரலில் கேள்வி எழுப்பினாள் தன்மயா.

“முட்டாள் மாதிரி பேசாத குயின். அது ஒரு விபத்துடி. அது என்னை மீறி நடந்தது மயா. நீ நினைக்கிற மாதிரி நான் வேணும்னு எதுவும் பண்ணலை. எனக்குமே ரொம்ப அடி பட்…..” என அவன் கூறி முடிக்கும் முன்னரே “போதும்ம்ம்ம்….” என உரத்த குரலில் கத்தினாள் அவள்.

அவனுடைய கூர் விழிகளோ அவளை நிதானமாக அளவிட்டன.

அதே நேரம் அவர்களுக்கு அருகே வந்த மூர்த்தியோ “என்னாச்சுப்பா….?” என பதறியவாறு கேட்டார்.

“நத்திங் அங்கிள். என்னோட உயிரைக் காப்பாத்தினதுக்கு தேங்க்ஸ். அன்ட் நான் கண்ணை மூடி கண்ணைத் திறக்கிறதுக்குள்ள இந்த இடத்தை விட்டு போயிருங்க. மீறி இருந்தீங்கன்னா அப்புறம் நடக்கிற சேதாரத்துக்கு நான் பொறுப்பில்ல.” என இறுகிய குரலில் கூற, மூர்த்தியோ அடுத்த கணமே அந்த இடத்தைக் காலி செய்தார்.

அவர் சென்றதும் அவளுடைய முகத்தைப் பார்த்தவன்,

“முதல்ல எழுந்திருடி.” என்றான்.

“நான் உங்ககூட எங்கேயும் வரலை. ப்ளீஸ் உங்களால நான் இழந்ததே போதும் ஆதி. இதோட என்னை விட்ருங்க ப்ளீஸ்.” எனக் கையெடுத்துக் கும்பிட்டவள் மெல்ல எழுந்து நின்றாள்.

“ப்ச்…. இப்போ உனக்கு என்னடி வேணும்.?”

“……..”

“ஏய் பேசுடி.”

“……”

“சே….! நான் சொல்றதை கொஞ்சமாவது கேளு மயா.”

“……..”

அவளுடைய தொடர் அமைதியில் சினம் பொங்கியது அவனுக்கு.

அவளோ அவனை விட்டு விலகி நடந்தவள் காரினுள் இருந்த யஷ்விந்த்தை வெளியே இறங்கும்படி அழைத்தாள்.

ஆதியோ அவளுக்கும் காருக்கும் இடையே நுழைந்தவன் காரின் கதவை அடித்துச் சாற்றினான். அவளோ அவனை வெறித்துப் பார்க்க,

அவளுடைய பார்வையை ஒதுக்கியவன் அவளுடைய கரத்தை வலுக்கட்டாயமாக பற்றி இழுத்து காரின் முன் இருக்கையில் அமர்த்தினான்.

அடுத்த கணம் காரினுள் தானும் ஏறி கார்க் கதவை லாக் செய்தவன் தன் சினத்தை அடக்கிக் கொண்டு காரை மிதமான வேகத்தில் செலுத்தத் தொடங்கினான்.

அவனது வற்புறுத்தலில் மொத்தமாக உடைந்து போனாள் தன்மயா.

மீண்டும் அவன் தன்னை சிறைப் படுத்தி விட்டான் என்பதை உணர்ந்து கொண்டவளுக்கு வாழும் ஆசையே விட்டுப் போனது.

செய்யாத தவறுக்கு தலைக்கு மேல் துன்பத்தை அனுபவித்தாயிற்று. இனி அவன் செய்த தவறுக்கும் நான்தான் துன்பத்தை அனுபவிக்க வேண்டுமா.?

அவளுடைய மனமோ பல கேள்விகளை அவளிடம் முன்வைக்க, அந்தக் கேள்விகள் ஒவ்வொன்றும் கூரிய வாளாக மாறி அவளை கூரிடத் தொடங்கின.

இவனையா காதலித்து தொலைத்தோம் என எண்ணி எண்ணி மருகியவள் இறுதியில் காரின் கதவில் சாய்ந்து கொண்டாள்.

விழிகள் அவை பாட்டுக்கு கண்ணீரைச் சொரிய, அவளுடைய மனமோ தான் இழந்த பெருஞ் செல்வமான தன் குடும்பத்தை எண்ணி சோர்வுற்றன.

“கொ…. கொஞ்சம் கார் கதவை அன்லாக் பண்ணுங்க ப்…. ப்ளீஸ்.” என்றவளை கேள்வியாக பார்த்தவன் “எதுக்கு.?” எனக் கேட்டான்.

கார்க் கதவை திறந்தால் எங்கே அவள் தன்னை விட்டு போய்விடுவாளோ என்ற அச்சம் அவன் மனதினுள் புகுந்துவிட அவளை ஐயத்தோடு பார்த்தான்.

“வா…. வாமிட் வர்…. ற மாதிரி இருக்கு.” என்றதும் சட்டென காரை நிறுத்தியவன் தான் கீழே இறங்கி அவள் இருந்த பக்கம் நடந்து வர, அவளோ அவன் இறங்கிய அடுத்த நொடி ட்ரைவர் சீட்டில் அமர்ந்து காரின் கதவுகளை லாக் செய்தாள்.

அவளுடைய செயலில் திகைத்து நின்றவன் அடுத்த கணமே அவள் இருந்த காரின் கதவுப் பக்கத்தில் உள்ள கண்ணாடியை கீழே இறக்குமாறு சைகை செய்தவன் கார் கதவை திறக்க முயன்று தோற்றான்.

“ஏய் முட்டாள். கதவை ஓபன் பண்ணு.” என காரின் வெளியே நின்று கத்தினான் ஆதி.

அவன் வெளியே நின்று சத்தமிடுவதைப் பார்த்தவள் தன் சோகம் தீர ஒரு மூச்சு அழுது தீர்த்தாள்.

அந்தக் காரின் கண்ணாடியூடாக அவள் அழுவதைக் கண்டவன் சில நொடிகளில் அமைதியாகி அந்தக் காரின் மீது சாய்ந்து நின்று கொண்டான்.

அவளுடைய அழுகை கண்டு அவனுடைய உடல் முழுவதும் ஊசியால் ஏற்றியதைப் போன்ற வலி அவனை வாட்டியது.

“ப்ளீஸ்டி அழாத.” என முணுமுணுத்தவனின் குரல் அவளைச் சென்று அடையவே இல்லை.

அவளுக்கு கார் ஓட்டத் தெரியாது என்பதால் அதிகம் பதற்றம் ஆகாமல் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு காரின் வெளியே நின்றான் ஆதி.

அவளுடைய மனம் படும் வேதனை அவனுக்குப் புரியத்தான் செய்தது. அவளோ கார் ஸ்டேரிங்கில் கவிழ்ந்து படுத்தவள் முதுகு குலுங்க அழுது தீர்த்தாள்.

அவள் அழுது முடிக்கும் வரைக்கும் காத்திருந்தவன் மீண்டும் கார்க் கதவை தட்டினான். அவன் தட்டும் கண்ணாடி மீதே தன் கன்னத்தை பதித்து சாய்ந்து கொண்டாள் பாவை.

அவள் சாய்ந்ததும் தட்டிக் கொண்டிருந்த அவனுடைய கரங்கள் அசைவற்று நின்றன.

“ஓபன் த டோர் மயா.” மெல்ல உதடுகளை அசைத்தான் அவன்.

அவனுடைய உதட்டசைவில் அவன் கூறிய வார்த்தைகள் புரிய, தன் விழிகளை அழுந்தித் துடைத்துக் கொண்டவள் கார்க் கீயை திருப்பி காரை ஸ்டார்ட் செய்தாள்.

அவள் காரை ஸ்டார்ட் செய்த கணம் அவனுடைய உடலோ தூக்கி வாரிப் போட்டது.

“ஷிட்…. கதவைத் திறடி.”

“…….”

“டாமிட்…. தன்மயா ஓபன் பண்ணு.” என்றவன்,

அடுத்த கணம் மீண்டும் கார்க் கண்ணாடியில் படபடவென தட்டி “ஏய் காரை நிறுத்துடி. உனக்கு டிரைவிங் தெரியாதுல்ல. அப்புறம் என்ன டேஷுக்கு காரை ஸ்டார்ட் பண்ற இடியட். நிறுத்துடி.” என உறுமினான்.

அவளது நிதானமற்ற செயலில் அவன் உடல் வியர்த்துப் போனது.

அவளோ ஸ்டேரிங்கில் தன் கரங்களை அழுத்தி வைத்தவள் தடுமாற்றத்தோடு வீதியைப் பார்த்தாள்.

“குயின் நோஓஓஓ. டோன்ட் ஸ்டார்ட் த கார் ப்ளீஸ்.” என கத்தியபடி கார்க் கதவை பலமாக தட்டியவனுக்கு உடல் இறுகி விறைத்தது.

காரினுள் இருக்கும் மூவரும் அவனுடைய உயிர் அல்லவா. மூவரில் ஒருவரை இழந்தாலும் அவன் மூச்சடைத்து மாண்டு போவானே.

கார் சற்றே நகரத் தொடங்க, சட்டென பாய்ந்து காரின் முன்னே வந்து நின்றான் ஆதி.

‘முடிஞ்சா என் மேல வண்டியை ஏத்திட்டு போடி….’ என்பதைப் போல இருந்தது அவனுடைய செயல்.

திகைத்துப் போனாள் தன்மயா.

அவளுடைய கரங்கள் தானாக ஸ்டேரிங்கில் இருந்து நழுவி வீழ்ந்தன.

அவளுடைய மூளையோ அவனை இடித்து தள்ளு என கட்டளை இட்டாலும் அவளுடைய மனமோ இதற்கு மேல் ஓர் அடி கூட அசையாதே என வலியுறுத்தியது.

வேறு வழியின்றி காரை நிறுத்தியவள் வெளியே நின்ற ஆதியைக் கண்டு மிகுந்த சினம் அடைந்தாள்.

“எ… . என்னைப் போக விடு ஆதி.” என அழுதவளின் கன்னத்தை வருடினான் யஷ்விந்த்.

“ம்மாஆஆ… க்ரையிங்.?” என கேட்டவனை அணைத்துக் கொண்டவள் கார் கதவை மட்டும் திறக்கவே இல்லை.

மாலை நேரமும் வந்துவிட, அந்த வீதியில் போவோர் வருவோர் யாவரும் வீதியில் நிற்கும் ஆதியை பார்த்தவாறே சென்றனர்.

ஆதியோ தான் சற்று நகர்ந்தாலும் அவள் உயிருக்கே ஆபத்து என்பதை உணர்ந்து கொண்டவன் காரின் முன்னே தன் இரு கரங்களையும் ஊன்றியவாறு அப்படியே நின்றான்.

நன்கு ட்ரைவிங் தெரிந்தவர்களே திடீரென விபத்துக்குள்ளாகும் போது தன்னவள் மட்டும் எம்மாத்திரம் என எண்ணியவன் அந்த இடத்தை விட்டு அசையவே இல்லை.

தன்மயாவோ எப்படியாவது அவனை விட்டு தூரம் செல்ல எண்ணியவள் அதற்கும் தடையாக வந்து காரின் முன்னே வழி விடாது நிற்பவனைக் கண்டு சீற்றம் கொண்டாள்.

தெளிந்த வானமோ திடீரென கரு மேகங்களால் சூழ்ந்து கொள்ள, வானமோ இருட்டி மழைதனைப் மொழிய ஆயத்தமாகின.

காரின் முன்னே நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன் இதற்கு மேல் அவளிடம் கெஞ்ச முடியாது என்ற ஈகோவில் அழுத்தமான பார்வையுடன் அசையாது நின்றான்.

சில நிமிடங்களிலேயே மழை பொழியத் தொடங்க, அதில் மொத்தமாக நனைந்தான் ஆதித்யன்.

அவள் கதவைத் திறக்கவும் இல்லை.

அவன் அவளிடம் கார்க் கதவை திறக்கச் சொல்லி கேட்கவும் இல்லை.

கொட்டும் மழையில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நனைந்தவாறு நின்றவன் பொறுமை இழந்து தான் கையூன்றி இருந்த காரின் முன் பகுதியில் ஓங்கி குத்தினான்.

“ஆஆஆஆஆஆ….” என வெறிபிடித்தாற் போல கத்தியவனது மூக்கில் இருந்து இரத்தம் வழிய, அந்த உதிரமோ மழை நீரோடு கலந்து அவனது கழுத்தெங்கும் பரவியது.

அவனுடைய உதிரத்தை பார்வையுற்றவளோ உடல் விதிர்விதிர்த்துப் போனாள். உதிரத்தை துடைக்காது தன்னையே வெறித்துக் கொண்டு மழையில் நிற்பவனை பார்த்தவள் அதற்கு மேல் அவனோடு போராட முடியாது சோர்ந்து போனாள்.

மீண்டும் அழுகை பொங்கியது அவளுக்கு.

ஒவ்வொரு முறையும் அவனிடம் தோற்றுப் போவதாக எண்ணியவள் விழிகள் கலங்க, கரங்கள் நடுங்க காரின் கதவை அன்லாக் செய்தவாறு மெல்ல காரில் இருந்து இறங்க முயன்றாள்.

சட்டென அவளை நெருங்கி அவளை மழைக்குள் நனைய விடாது உள்ளேயே அமர்த்தியவன் அவளை அடுத்த இருக்கையில் அமர வைத்து விட்டு ட்ரைவர் சீட்டில்தான் அமர்ந்து கொண்டான்.

அவனுடைய கரங்கள் மிக மிக அழுத்தமாக ஸ்டேரிங்கை பற்றிக் கொண்டன. எங்கே கோபத்தில் அவளை அடித்து விடுவோமோ என எண்ணியவன் இம்மியளவு கூட அவளுடைய வதனத்தைப் பார்க்காது காரை ஸ்டார்ட் செய்தான்.

மழையில் தொப்பலாக நனைந்தும் கூட, அவன் உடலோ எரிமலையில் குளித்ததைப் போல கனன்று கொண்டே இருந்தது.

“எ…. என்னை வி….ட்ரு ஆதி.”

“ஓவர் மை டெட் பாடி.” என உறுமியவன் அருகே இருந்த ஹோட்டல் ஒன்றிற்கு வண்டியை செலுத்தினான்.

விலகத் துடிக்கும் அவள்….!!

பிரிய மறுக்கும் அவன்….!!

இருவரையும் பார்த்து ஏளனமாய் நகைக்கும் விதி….!!

விதியையே ஏமாற்றும் ரைட்டரின் சதி….!! (ஹி…. ஹி….)

சதுரங்க ஆட்டத்தில் கட்டம் கட்டமாக தாவத் தொடங்கியது நம் நாயகர்களின் வாழ்க்கை.

வெளியே விடாது பெய்து கொண்டிருந்த மழையை ரசித்து கை தட்டியவாறு காரினுள் அமர்ந்திருந்தான் யஷ்விந்த்.

ஆதியோ காரை மிதமான வேகத்தில் செலுத்திக் கொண்டு வர, தன்மயாவின் பார்வையோ எங்கோ தொலை தூரத்தை வெறித்துக் கொண்டிருந்தது.

இனி இல்லம் செல்ல தாமதமாகிவிடும் என எண்ணியவன் அருகே உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு அவளை அழைத்துச் சென்றான்.

“குயின்…. வா.” என அவளுடைய கரத்தை பற்றி அழைத்து வந்தவன் யஷ்விந்தை தன் கரங்களில் தூக்கிக் கொண்டு அவளை உள்ளே அழைத்துச் சென்றான்.

வரவேற்பறையில் தங்களுக்கென ஓர் அறையை தெரிவு செய்து எடுத்தவன் மீண்டும் அவளது கரத்தைப் பற்றிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

திருவிழாக் கடைகளில் தொலைந்து போன சிறுமி போலானது அவளுடைய நிலை.

தனக்கென யாருமற்ற நெடுந்தீவில் தனித்திருப்பதைப் போல இருந்தது அவளுக்கு.

தன்னை மறந்து ஏதோ சிந்தனையில் படிகளில் ஏறியவளை “மயா நீ படி ஏற வேணாம். லிப்ட்ல போகலாம் வா.” என அவளை மின்னுயர்த்தியின் அருகே அழைத்துச் சென்றான்.

மின்னுயர்த்தியோ செயற்படவில்லை என்ற எழுத்துக்களுடன் இருக்க, “ஷிட்.” என முணுமுணுத்தவன் “ஸ்டே ஹியர் குயின். நான் போய் ரூம் சேன்ஞ்ச் பண்ணிட்டு வர்றேன்.” என்றான்.

“நோ…. ஆதி. எனக்கு டயர்டா இருக்கு. ஃபர்ஸ்ட் ஃப்ளோர்தானே படில ஏறலாம். நோ ப்ராப்ளம்.” என்றாள் அவள்.

அவளுடைய முகத்தில் தெரிந்த சோர்வில் அவனுடைய மனமும் சோர்ந்து போனது.

“நோ மயா. ரூம் சேன்ஞ்ச் பண்ணலாம். இன்னைக்கு ட்ராவல் வேற பண்ணிருக்கோம்.” என மறுத்தான் அவன்.

“ஐயோஓஓஓ இதுல கூட எனக்கு சுதந்திரம் தர மாட்டியா.? நீ சொல்ற எல்லாத்தையும் என்னால கேட்டுகிட்டே இருக்க முடியாது ஆதி.” என அந்த பொது இடத்தில் அனைவரின் முன்பும் சீறினாள் தன்மயா.

அவளுடைய வார்த்தைகளில் வெளிப்பட்ட விரக்தியை உணர்ந்தவன் அவளுக்கு இப்போது ஓய்வு கட்டாயம் தேவை என்பதை புரிந்து கொண்டான்.

“சரி வா.” என்றவன் அவளை அழைத்துக் கொண்டு மெல்ல மெல்ல படி ஏறி அந்த முதலாம் தளத்தில் அவன் தேர்வு செய்த அறையின் உள்ளே நுழைந்தான்.

அவளோ அப்படியே அங்கிருந்த சோபாவில் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

அவனோ இருவருக்கும் வேறு இலகுவான ஆடைகளை தன் அறைக்கே வர வைத்தவன் அவளுக்கான உணவையும் வர வைத்திருந்தான்.

“மயா எழுந்து சாப்பிடு. டேப்ளட்ஸ் போடணும்.” என அசையாது படுத்திருந்தவளின் தலைக் கேசத்தை வருடியவனுடைய விழிகளும் வெகுவாக கலங்கிப் போயிருந்தன.

“உன்னை ரொம்ப கஷ்டப்படுத்துறனா மயா.? சத்தியமா உன்னை ஹர்ட் பண்ணனும்னு நான் நினைக்கவே இல்லைடி. உன் மேல அவ்ளோ கோபம் இருந்தப்பவே உன்னை விட்டு ஒரு நாள் கூட நான் பிரிஞ்சது இல்ல. இப்போ மனசு முழுக்க உன் மேல காதலை வெச்சுகிட்டு எப்படிடி என்னால உன்னை விட்டு பிரிஞ்சு இருக்க முடியும்.? ட்ரஸ்ட் மீ குயின். நமக்கு இடையில இருக்கிற எல்லா பிரச்சனைகளையும் நான் சீக்கிரமாவே சரி பண்ணிடுறேன்.” என்றவனுடைய கரங்கள் அவளுடைய கூந்தலின் பின்னலை தொட்டுத் தடவின.

அவளிடம் இருந்து எந்த அசைவும் இல்லாது போக, அவள் உறங்கிவிட்டாள் என்பதனை உணர்ந்தவன் அவளை அலுங்காமல் தன் கரங்களில் ஏந்திக் கொண்டான்.

அவன் அவளை ஏந்திய அடுத்த கணமே அவளுடைய தலை சரிந்து அவன் மார்போடு மோதியது.

அவளை சுமந்து கொண்டிருந்தவனுடைய கரங்கள் சற்றே ஈரத்தை உணர, நெற்றிப் புருவங்கள் புருவ மத்தியினை நோக்கி வளைந்தன.

சட்டென பதற்றத்தோடு அவள் படுத்திருந்த சோபாவைப் பார்த்தவன் அதில் இருந்த உதிரத்தைக் கண்டு ஆடித்தான் போனான்.

உடல் சடுதியில் பலம் இழந்து நடு நடுங்கிப் போய்விட, அவளை படுக்கையில் கிடத்தியவன் தன் கரத்தை உயர்த்திப் பார்க்க அதிலும் அவளுடைய இரத்தமே பூசப்பட்டிருந்தது.

அடுத்த கணம் அந்த அறையே அதிரும் வண்ணம் "மயாஆஆஆஆஆஆ." என அலறினான் ஆதி. அவள் மயக்கத்தில் இருக்கிறாள் என்பதை அப்போது தான் அவனுடைய மூளை உணர்ந்து கொண்டது.

அடுத்த கணமே பதறியடித்து அவளை மீண்டும் தன் கரங்களில் ஏந்திக் கொண்டவன் தன் காரை நோக்கி விரைந்தான். யஷ்விந்த்தை அந்த ஹோட்டலின் வரவேற்பு பெண்ணிடம் ஒப்படைத்தவன் அந்த பெண்ணின் இலக்கத்தை பெற்றுக் கொண்டான்.

தன் எதிரே வந்தவர்களைப் பார்த்து "மூவ்…. மூவ் எமர்ஜென்சி." என உரத்த குரலில் கூறியவன் அவளைத் தூக்கிக் கொண்டு தன் கார் அருகே விரைந்தான்.

அந்த ஹோட்டல் ஊழியன் ஒருவனோ ஆதியின் இக்கட்டான நிலை புரிய, சட்டென அவர்களை நெருங்கியவன் "சார் நீங்க மேடம் கூட பின் சீட்ல இருங்க. நான் ட்ரைவ் பண்றேன்." என்றான்.

"தே…. தேங்க்ஸ். கொ…. கொஞ்சம் சீக்கிரமா போங்க." என்றவன் அவனுடைய கார் சாவியை கொடுத்து விட்டு பின் இருக்கையில் அமர்ந்து தன்னவளைத் தன் மடியில் கிடத்திக் கொண்டான்.

அவளுடைய உதிரம் பட்ட தன் கரத்தை தன்னுடைய டீஷர்ட்டில் துடைத்தவன் விழி நீர் வழிய மயங்கிக் கிடந்த பாவையை பார்த்தான்.

“வேக்கப் மயா. ப்ளீஸ். டோன்ட் டூ திஸ் டு மீ. நம்…. நம்ம குழந்தைக்கு ஒன்னும் ஆகாதுல்ல. ப்ளீஸ்டி ஏதாவது பேசு.” என்றவன் தானும் ஒரு வைத்தியன்தான் என்பதை அக்கணம் மறந்தே போனான்.

அவன் மனமோ நொடிக்கு ஒரு தடவை பல சிந்தனைகளில் மூழ்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருந்தது.

‘ஐயோ நான் என்ன வேலை பார்த்திருக்கேன்…. இந்த நேரத்துல நான் அவளை அவங்க ஊருக்கு அழைச்சுட்டுப் போயிருக்கக் கூடாது.

தப்பு பண்ணிட்டேன். அவ அப்போவே டயர்டா இருக்குன்னு சொன்னாலே. நான் அப்போவே ஹாஸ்பிடல் கொண்டு வந்திருக்கணுமோ.? அப்போவே வந்திருந்தா என்னோட மயாக்கு இப்படி ஆகிருக்காதுல்ல….?” என தனக்குள் புலம்பியவன் தன் தலையில் ஓங்கி அறைந்தான்.

காரை ஓட்டிக் கொண்டிருந்தவனோ “சார் என்னாச்சு.?” எனக் கேட்டான்.

“ந…. நத்திங் நத்தி….ங் கொஞ்சம் சீக்கிரமா போங்க. ப்ளீஸ்.” என்றான்.

‘கடவுளே நான் உன்கிட்ட எதையுமே கேட்டதில்ல. என் குழந்தைக்கும் என் மயாக்கும் எதுவும் ஆகாம பார்த்துக்கோ ப்ளீஸ்.’ என மனதில் அவசர வேண்டுதலை வைத்தவன் தன்னவளை இறுக அணைத்துக் கொண்டான்.

எந்த அசைவும் இன்றி மயங்கிக் கிடக்கும் தன்னவளைக் கண்டு அவன் அக்கணமே உயிரோடு மாண்டு போனான்.

அவனுடைய விழி நீர் வழிந்து அவனுடைய தாடியடர்ந்த கன்னத்தை நனைத்துக் கொண்டிருந்தது.

அவனுடைய இரும்பை ஒத்த கரங்களும் அவனுடைய கட்டுப்பாட்டை மீறி நடுங்கிக் கொண்டிருந்தன.

அடுத்த சில நிமிடங்களில் மருத்துமனை வந்து விட, அவளைக் கரங்களில் ஏந்தியவன் அவளைத் தூக்கிக் கொண்டு மருத்துவமனையினுள் நுழைந்தான்.

சில நிமிடங்களிலேயே அவளுக்கான பரிசோதனைகளும் சிகிச்சைகளும் ஆரம்பமாகி விட, அந்த அறையின் வெளியே நின்றவனுக்கு தன்னை விட்டு ஜீவனே நீங்கிப் போனதோர் உணர்வு.

தன்னை மறந்து….!!

தன் கர்வம் துறந்து….!!

தன் சிந்தை தொலைத்து….!!

தன் செயல்கள் இழந்து….!!

உயிர் அற்ற வெறுங் கூடாகிய உடலை சுமந்தவனாக நின்றான் ஆதித்யன்.

‘எ… என்னாலதான் அவளுக்கு இந்த நிலமை. சாரி…. சாரி மயா. குழந்தையோட பத்திரமா என்கிட்ட திரும்பி வந்துரு பேபி ப்ளீஸ். நீ என்ன சொன்னாலும் அதை நான் கேட்குறேன்.’ என தனக்குள் மருகியவன் வெளியே வந்த டாக்டரைக் கண்டு பதறியவாறு அவர் அருகே சென்றான்.

“எ…. என்னாச்சு டாக்டர்.? என் மனைவி எப்படி இ… இருக்கா.? பே… பேபி எப்படி இருக்கு.?” என கேட்டவன் டாக்டர் பதில் சொல்லும் முன்னரே ஆயிரம் தடவை செத்துப் பிழைத்தான்.

அவன் உடலோ வியர்வையில் குளித்தது.

“டோன்ட் வர்ரி. மதர் அன்ட் சைல்ட் ரெண்டு பேருமே இப்போ நல்லா இருக்காங்க.” என்றார் வைத்தியர்.

வைத்தியரின் வார்த்தைகளில்தான் நின்று போன மூச்சு மீண்டும் அவனை வந்தடைந்தது.

“என்ன ரீசனுக்காக டாக்டர் இந்த ப்ளீடிங்.?” அவன் குரலோ கரகரத்தது.

“அதிகமா வேலை செய்தாலோ, ட்ராவல் பண்ணினாலோ, ஸ்ட்ரெஸ்ஸா இருந்தாலோ இப்படி ஆகும். அன்ட் உங்க மனைவியோட உடம்பு ரொம்ப வீக்கா இருக்கு. இப்படியே இருந்திச்சுன்னா டெலிவரி டைம்ல அவங்களுக்குத்தான் ஆபத்து.”

“வாட்….?” திகைத்தான் ஆதி.

“எஸ்., அவங்களோட இரத்த அழுத்தம் ரொம்ப ரொம்ப அதிகமா இருக்கு. இந்த டேப்ளட்ஸ்ஸை கொடுங்க. அன்ட் அவங்களோட மனதை கொஞ்சம் பீஸ்புல்லா வெச்சிருக்க ட்ரை பண்ணுங்க.”

“ஓ…. ஓகே டாக்டர்.”

“அவங்களுக்கு ரெஸ்ட் முக்கியம். இன்னைக்கு இங்கேயே ரெஸ்ட் எடுக்கட்டும். நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணி கூட்டிட்டு போங்க.” என்றவாறு வைத்தியர் சென்றுவிட, தொப்பென அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தவன் ஆழ்ந்து சுவாசித்தான்.

மெல்ல மெல்ல தன் மூச்சை உள்ளிழுத்து வெளி விட்டவன் தன்னை சீர் படுத்திக் கொள்ள அவனுக்கோ வெகு நேரம் எடுத்துக் கொண்டது.

சற்று நேரம் கழித்து ஆதி உள்ளே செல்ல அங்கிருந்த தாதியோ அவனை தடுத்து நிறுத்தினார்.

“சார் அவங்க தூங்குறாங்க. டிஷ்டர்ப் பண்ணாதீங்க.”

“நோ சிஸ்டர். நான் அவளோட தூக்கத்தை தொந்தரவு பண்ண மாட்டேன். பட் ஐ வான்ட் டு சீ ஹெர் நவ்.” என்றவாறு தாதியைக் கடந்து அந்த அறைக்குள் நுழைந்தே விட்டான்.

அவன் பின்னே கோபமாக வந்த தாதியோ “நாம சொல்றதை எங்கே கேட்குறாங்க.?” என முணுமுணுத்தவாறு ட்ரிப்ஸ் ஏத்துவதற்காக தன்மயாவின் கரத்தைப் பற்றினாள்.

“ஹேய் வெயிட்…. வெயிட்…. என்ன பண்ண போறீங்க.?”

“ப்ச்…. ட்ரிப்ஸ் ஏத்த போறேன் சார்.”

என்றவள் தன்மயாவின் கரத்தை பிடித்து இழுத்து எடுக்க, தாதியின் கரத்தை அதை விட வேகமாக பிடித்து இழுத்தான் ஆதி.

“இடியட் உனக்கு அறிவில்லையா.? அவ மட்டும் இப்போ எழுந்திருந்தா …” என அவளைத் திட்டத் தொடங்கியவன் பின் தன் சினத்தை கட்டுப் படுத்திக் கொண்டு தாதியின் கரத்தில் இருந்த ட்ரிப்ஸை வாங்கி தன்மயாவிற்கு வலிக்காது அவனே போட்டு விட்டான்.

அவனுடைய செயல்களை வாய் பிளந்து பார்த்துக் கொண்டிருந்த தாதியோ திகைத்தவாறு நிற்க, “நவ் வாட்.?” என சீறலாக வெளிவந்தது அவனுடைய குரல்.

ஒன்றும் இல்லை எனும் விதமாக தலை அசைத்த தாதியோ அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து விட, ஆதியோ இன்னொரு இருக்கையை எடுத்து வந்து அவள் படுத்திருந்த கட்டிலின் அருகே போட்டு அமர்ந்து கொண்டான்.

வாடிப் போன பூங்கொடி போல கிடந்தவளின் ட்ரிப்ஸ் ஏற்றப்படாத கரத்தை மெதுவாக பற்றிக் கொண்டவன் அவளுடைய உள்ளங்கையை விரித்து அதில் இதழ் பதித்தான்.

ஓரக் கண்ணால் அவனை பார்த்துக் கொண்டிருந்த தாதிக்கோ பக்கென்றானது.

ஆதியின் பார்வை சிந்தனை முழுவதும் தன்மயாவின் மீதே இருக்க, தன் விழிகளில் வழிந்த கண்ணீரோடு அவளை பார்த்தவன் “கொஞ்ச

நேரத்துல என்னை உயிரோட கொன்னுட்டடி." என அவளுடைய காதோரம் மெல்ல கூறினான்.

அவளுடைய மூடிய விழிகளும் ஒரு சொட்டு கண்ணீரை வடித்திருக்க, அதனைத் தன் விரலால் துடைத்தவன் அவளுடைய கன்னத்திலும் தன்னை மறந்து இதழ் பதித்தான்.

தாதியின் முகமோ வெட்கத்தில் சிவந்து போனது.

"சார் நானும் இங்கேதான் இருக்கேன்." என்ற தாதியின் குரல் அவனுடைய செவிகளில் விழவேயில்லை.

அவனோ இழந்த தன் பொக்கிஷத்தை நேரில் கண்டாற் போல அவளுடைய மலர் முகத்தை வருடி நெற்றியில் முத்தம் வைத்தான்.

"சாரி மயா பேபி." என்றவனுடைய விரல்கள் ஈரப்பதம் அற்று காய்ந்து போயிருந்த அவளுடைய இதழ்களை வருடி விட்டன. அதற்கு மேல் தாங்காதவன் விழி நீர் வடிய, அளவற்ற காதலோடு அவளுடைய இதழ்களை மெல்ல தன் அதரங்களால் மூடிக் கொண்டான்.

"வீல்…." என அலறினாள் அந்த திருமணமே ஆகாத தாதிப் பெண்.

அவளுடைய அலறலில் சுற்றம் புரிய சட்டென விலகியவன் தாதியைப் பார்த்து "கெட் அவுட் இடியட்." என கர்ஜிக்க, தாதியின் அலறலில் தன் கண்களை திறந்தாள் தன்மயா.

அவளுடைய விழிகளோ அலைபாயத் தொடங்கின.

தாதியின் அலறலில் கண் விழித்துக் கொண்டாள் தன்மயா. அவளுடைய பார்வையோ அந்த அறையை சோர்வோடு மேய்ந்தது.

தன்னவளின் தூக்கத்தை கெடுத்த தாதியின் மேல் சினம் பொங்க அவளை நோக்கி சீற்றத்தோடு திரும்பியவன் அந்த இடமே வெறுமையாக இருப்பதைக் கண்டு பெருமூச்சு விட்டான்.

பின் மீண்டும் தன்மயாவின் அருகே வந்து அவளுடைய கரத்தை பற்றிக் கொண்டவன் அவளுடைய உணர்வுகளற்ற பார்வையை தாங்க முடியாது விழிகளை மூடிக் கொண்டான்.

அடுத்த நொடியே அவசர கதியில் அவனுடைய விழிகள் தன்னவளின் வதனம் காண ஆவலாக திறந்து கொண்டன.

மீண்டும் அவளுடைய உணர்வற்ற பார்வையில் துயர் உற்றவன் "ஐ அம் சாரி மயா." என்றான்.

"கு…. குழந்தைக்கு ஒன்னும் ஆ…. ஆகலையே….?" பரிதவிப்பாய் வெளி வந்தது அவளுடைய குரல்.

"ம்ஹூம் இல்லைடி." என்றான் அவன்.

நீண்ட நெடிய நிம்மதிப் பெருமூச்சை வெளியேற்றினாள் தன்மயா.

அவளுடைய ஒற்றைக் கரமோ வயிற்றின் மீது மென்மையாக படிந்து வருடியது.

"உனக்கு என்ன வேணும் மயா.?"

“விடுதலை.” என ஒற்றை வார்த்தையில் சற்றும் சிந்திக்காது பதில் அளித்தாள் அவள்.

“விடுதலைன்னா….?” கூர் விழிகளால் அவளை அளந்தவாறு கேட்டான் ஆதி.

“உங்ககிட்ட இருந்து முழுசா விடுதலை வ்வேணும்.” என சற்றும் தயங்காது கூறி முடித்தாள் அவள்.

“சரி தர்றேன். உனக்கு அதுலதான் சந்தோஷம்னா கண்டிப்பா நீ கேட்டதை நான் தர்றேன். பட்….”

“பட்….?”

“மூணு நாளைக்கு ஒரு தடவை நான் உன்னையும் நம்ம குழந்தையையும் வந்து பார்த்துட்டு போவேன்.”

“முடியாது ஆதி. நான் உங்க வீட்ல இருக்க மாட்டேன். நான் இந்த ஊரை விட்டே போகணும். சிட்டியே பிடிக்கலை. ஏதாவது ஒரு கிராமத்துல உன்னோட நினைவே இல்லாம ஒரு சின்ன வீட்ல நிம்மதியா வாழணும்.” என உறுதியாக கூறினாள் தன்மயா.

“நீ எங்கே வேணும்னாலும் போ குயின். ஐ டோன்ட் கெயார். நீ நாசாக்கு கூட போ. ஆனா அங்கேயும் நான் உன்னை மூணு நாளைக்கு ஒரு தடவை வந்து பார்ப்பேன். இதுல எந்த மாற்றமும் இல்ல.” என்றான் அவன்.

தன்மயாவின் மனமோ ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கியது.

ஒவ்வொரு நாளும் அவனருகே இருந்து வதைபடுவதை விட இது மேல் என எண்ணியவள் அவன் கூறியதற்கு சம்மதம் கூறினாள்.

“நீ எதைப் பத்தியும் நினைச்சு கவலைப்பட்டு உன்னோட உடம்பை கெடுத்துக்காத. நீ ஆசைப்பட்ட மாதிரியே உனக்கு பிடிச்ச மாதிரி ஒரு இடத்துல உன்னைக் கொண்டு போய் விடுறேன்.

“சரி….”

“உன்னோட செலவுகள் எல்லாமே நானே பார்த்துக்கிறேன்.”

“எனக்கு உங்களோட பணம் தேவையே இல்லை.” என மறுத்தாள் அவள்.

“உன் வயித்துல வளர்றது என்னோட குழந்தைடி. குழந்தை பிறக்கும் வரைக்கும் எல்லாமே நானே செய்றேன்.” என அழுத்தமான குரலில் கூறி முடித்தான்.

அவனோடு போராடி வெல்வது இயலாத ஒன்று என தன் அனுபவத்தில் கண்டு கொண்டவள் அவன் கூறியதெற்கெல்லாம் சரி எனும் விதமாக தலை அசைத்தாள்.

“உன்னோட மனசு ஒரு நாள் கண்டிப்பா மாறும் குயின். அது வரைக்கும் நான் வெயிட் பண்ணுவேன்.” என்றவன் அவளுடைய நெற்றியில் மீண்டும் இதழ் பதித்தான்.

அவளோ அவனிடம் இருந்து கிடைக்கப் போகும் விடுதலையை எண்ணி பூரித்துப் போனாள். அவளுடைய முகத்திலும் அந்த மலர்ச்சி தெரிய நொறுங்கிப் போனான் ஆதி.

‘இந்தப் பிரிவு மடிந்து போன உன்னோட காதலை மீண்டும் கொண்டு வரும் மயா பேபி.’ என எண்ணிக் கொண்டவன் அவள் படுத்திருந்த படுக்கையின் ஓரத்தில் அமர்ந்தவாறே தலை சாய்த்து படுத்துக் கொண்டான்.

அவளோ அவனை விட்டு விலகிச் செல்வதின் ஆர்வத்தில் தூக்கத்தை தொலைக்க, ஆதியோ அவளை விட்டு பிரியப் போகும் துயரில் தன் தூக்கத்தை தொலைத்திருந்தான்.

ஆக மொத்தம் இருவருக்கும் அது தூங்கா இரவாகிப் போனது.

அடுத்த நாள் காலை விடிந்தும் தன் விழிகளை திறந்து பார்த்தவள் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த ஆதியைக் கண்டு திகைத்தாள்.

அவளது திகைப்பைக் கண்டவன் “என்ன மயா.?” எனக் கேட்டான்.

“ம்ஹூம் நத்திங்.” என்றவள் அதே அறையில் கேட்ட யஷ்விந்தின் குரலில் முகம் மலர்ந்தாள். மெல்ல எழுந்து அமர்ந்து தன் மகனை அணைத்துக் கொண்டவள் அவனுடைய மழலை மொழியில் தன்னை மறந்து அவனோடு உரையாடத் தொடங்கினாள்.

அவர்கள் இருவரையும் ஒரு கணம் இமைக்காது பார்த்தவன் அடுத்த நொடியே அவர்களுக்கு தேவையான உணவை கொடுத்து விட்டு அங்கிருந்து வெளியேறினான்.

காலையில் சென்றவன் திரும்பி வராமலே போக, தன்மயாவின் மனமோ அவன் போய் விட்டானோ என்ற கேள்வியை முன் வைத்தது.

அவளுடைய நினைப்பை பொய்யாக்கும் வகையில் மதிய உணவு வேளையில் அவர்களைத் தேடி வந்தவன் இருவருக்கும் தேவையான உணவை கொடுத்து விட்டு யஷ்வியை தூக்கி அணைத்து முத்தம் பதித்து விட்டு வெளியேறி சென்றிருந்தான்.

தன்மயாவின் உடல் நிலையோ கொஞ்சம் தேறியிருந்தது. அவளுடைய பொழுதோ யஷ்வியோடு இனிமையாக கழிந்து போக, மீண்டும் மாலை நேரத்தில் அவர்களைத் தேடி வந்தான் ஆதித்யன்.

நேற்றைய தினம் அணிந்திருந்த அதே ஆடையில் இருக்கும் ஆதியைக் கண்டு அவளுடைய புருவங்களோ வியப்பில் உச்சி மேட்டைத் தொட்டன.

ஒரு நாளில் கிட்டத்தட்ட நான்கைந்து ஆடைகளை மாற்றும் அவன் இன்னும் நேற்று அணிந்திருந்த ஆடையைக் கூட மாற்றாது இருப்பதைக் கண்டு வியந்தவள் அவனுடைய இறுகிய முகத்தைப் பார்த்தாள்.

“கிளம்பு குயின். உன்னை டிஸ்சார்ஜ் பண்ணிட்டாங்க.” என்றவன் அனைத்து ஃபார்மாலிட்டிஸையும் முடித்துக் கொண்டு அவளை அங்கிருந்து அழைத்துச் சென்றான்.

யஷ்விந்தோ ஆதியைக் கண்டதும் சட்டென ஆதியுடன் ஒட்டிக் கொண்டான்.

காரில் யஷ்விந்தின் குரல் மாத்திரம் ஒலித்துக் கொண்டே இருந்தது. ஆதியும் மயாவும் மௌனத்தை குத்தகைக்கு எடுத்தாற் போல அமைதியாகவே வந்தனர்.

சற்று நேரத்தில் அசதியில் தன்மயா உறங்கி விட, அவள் அறியாமல் அவளுடைய கன்னத்தை தன் விரல் கொண்டு தீண்டினான் ஆதி.

விரல் உணர்ந்த மென்மையை அவனுடைய இதழ்களும் உணர ஏங்கின.

அவளது தூக்கத்தை தொந்தரவு செய்ய விரும்பாதவன் தான் செல்ல வேண்டிய இடத்திற்கு காரை செலுத்தினான்.

சற்று நேரத்தில் தன் காரை நிறுத்தியவன் "குயின்…. ஹேய் எழுந்திரு." என்றான்.

அவனுடைய குரல் தன் செவியோரம் ஒலிக்க சட்டென விழித்தவள் அவனை பார்த்து முகம் திருப்பிக் கொண்டாள்.

"என்கூட வா." என்றவன் காரில் இருந்து இறங்கி நிற்க, அவளும் கீழே இறங்கியவள் அந்த இடத்தைப் பார்த்ததும் பிரம்மித்துப் போனாள்.

"வாவ்…." என அவளுடைய உதடுகள் அவளுடைய அனுமதியின்றியே விரிந்தன.

அந்த இடம் முழுவதும் தென்னை மரங்களாலும் மாமரங்களாலும் கொய்யா மரங்களாலும் நிறைந்திருக்க, அந்த தோப்பின் நடுவே அமைந்திருந்தது ஓர் சிறிய வீடு.

அந்த இடத்தின் வனப்பை ரசித்தவள் அவனைக் கேள்வியாகப் பார்த்தாள்.

“இந்த டைம்ல உன்னை கிராமத்துல எல்லாம் கொண்டு போய் விட முடியாது. அதனால நீ எதிர்பார்த்த மாதிரியே தேடி அலைஞ்சு இந்த வீட்டை வாங்கியிருக்கேன். நீ இங்கேயே தங்கிக்கோ மயா.” என்றான்.

அவன் இன்று முழுவதும் இந்த வீட்டை வாங்குவதற்காகத்தான் ஆடை கூட மாற்றாது அவனுடைய நேரத்தை செலவிட்டுள்ளான் என்பது அவளுக்குப் புரிய,

“ம்ம்…. தேங்க்ஸ் ஆதி.” என்றாள்.

“பார்க்க சின்ன வீடு மாதிரிதான் தெரியும். பட் உள்ளே மூணு ரும் கிட்சன், பாத்ரூம், குட்டி பால்கனி கூட இருக்கு.”

“ம்ம்….”

“இந்த வீட்ல இருந்து ஹாஸ்பிடல் கூட பக்கம்தான். சோ உனக்கு எல்லாமே ஈசியா இருக்கும்.”

“ம்ம்….”

“இங்கே உனக்கு துணைக்காக ராமு அண்ணாவை வர வெச்சிருக்கேன். ராமு அண்ணாவோட மனைவியும் உனக்கு உதவியா இங்கே இருப்பாங்க.”

“தேங்க்ஸ் ஆதி….”

“ம்ம்…. உனக்கு தேவையான எல்லாத்தையுமே நான் பண்ணிட்டேன். ஆனா எனக்கு தேவையான உன்னை இழந்துட்டு நிற்கிறேன்டி.” என்றவன் அவளுக்கு முதுகு காட்டியவாறு திரும்பி நின்றான்.

அவனுடைய விழிகள் கலங்கிப் போயின.

“மூணு நாள் கழிச்சு உன்னைப் பார்க்க வருவேன். அது வரைக்கும் நான் நானா இருக்க மாட்டேன் மயா பேபி. உன்னோட ஹெல்த்தான் எனக்கு முக்கியம். உடம்பை பார்த்துக்கோ. எப்போ வேணும்னாலும் எனக்கு கால் பண்ணு. கரெக்ட் டைமுக்கு சாப்பிடு. டேப்ளட்ஸ் போடு. புடவை கட்டாத.” என்றவன் அடுத்த நொடி தன் காரை நெருங்கினான்.

காரினுள் இருந்த யஷ்விந்த்தை தூக்கி வெளியே விட்டவன் அவன் முன் மண்டியிட்டு அவனை இறுக அணைத்துக் கொண்டான்.

“குட் பாய்யா இருக்கணும் யஷ்வி.” என்றவன் அவனுடைய கன்னத்தில் தன் இதழ் பதித்தான்.

மீண்டும் காரை நெருங்கி கார்க் கதவில் தன் கரத்தை பதித்தவன் உடல் இறுகிப் போய் ஓர் நொடி தயங்கி நின்றான்.

அவளை விட்டு விலகிச் செல்வதை அவன் மனமோ ஏற்க மறுத்தது.

காரில் சாய்ந்தவன் அவளை நிதானமாக திரும்பிப் பார்த்தான்.

அவனுடைய கரங்களோ அவளை நோக்கி யாசமாக நீண்டு உயர்ந்தன.

“உன்னை இனி கஷ்டப்படுத்தாம கண் கலங்காம என் கூடவே வெச்சுப் பார்த்துக்கிறேன். என் கூடவே வர்றியா மயா பேபி.?” என கேட்டவனுடைய பார்வை கூட அவளை யாசித்தது.

அவளோ விருட்டென தன் பார்வையை திருப்பியவள் யஷ்வியின் கரத்தை பிடித்தவாறு அந்த புது வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அவளுடைய நடையிலோ எந்த வித தடுமாற்றமும் இல்லாது போக, அவனுடைய நிலைதான் தடம் மாறிப் போனது.

தன் இதயத்தை யாரோ கரம் கொண்டு பிடுங்கி எடுத்ததைப் போல வலி எடுக்க, தாங்க முடியாத வேதனையோடு அந்த வீட்டினுள் நடந்து செல்லும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவள் தொலை தூரம் செல்லச் செல்ல அவனுடைய காதலோ அதிகரித்துக் கொண்டே போனது.

தன்னைத் திரும்பியும் பாராது வீட்டின் உள்ளே தன் மகனோடு நடந்து செல்லும் மனைவியை உணர்வுகள் துடைத்த பார்வை பார்த்தவன் அதே இடத்தில் அசையாது அப்படியே நின்றான்.

‘தெரியாம நடந்த விபத்துக்கு நான் என்னடி பண்ணுவேன்.?’ என தனக்குள் எண்ணி மருகியவன் தன்னை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த ராமுவைக் கண்டு இதழ் பிரியாது புன்னகைத்தான்.

ராமுவோடு வந்த அவனுடைய மனைவிக்கு வணக்கம் கூறியவன், “உங்க ரெண்டு பேரையும் நம்பித்தான் மயாவை இங்கே விட்டுட்டுப் போறேன். அவளை பத்திரமா பார்த்துக்கோங்க. ஏதாவது தேவைன்னா என்கிட்ட கேளுங்க. முக்கியமா அவளை எந்த வேலையும் செய்ய விடாதீங்க. அதிகமா திங் பண்ணிகிட்டு இருப்பா. அவ கூடவே இருங்க. பெரியவங்க நீங்க சொன்னா கேட்பா. ஜாக்கிரதை.” என கூறினான்.

“சரி சார். நீங்க எதைப் பத்தியும் கவலைப் படாதீங்க நாங்க பார்த்துக்கிறோம்.”

“ம்ம்…. ஹான் அவளுக்கு காரம் அதிகம் பிடிக்காது. சமைக்கும் போது அதிக காரம் சேர்க்காதீங்க.”

“சரிங்க….”

“ம்ம் என்னோட பையன் ஜாக்கிரதை ராமு.. அவன் என்னைத் தேடினா வீடியோ கால் பண்ணுங்க.”

“சரிப்பா பண்றேன்.”

“மூணு நாளைக்கு ஒரு தடவை நான் அவளைப் பார்க்க வருவேன்.” என்றவனுடைய பார்வை வீட்டினுள் சென்ற தன்மயாவை தேடி அலசின.

பெருமூச்சோடு அவர்களைப் பார்த்து தலை அசைத்தவன் விருட்டென தன் காரில் ஏறி அமர்ந்து கொண்டான்.

அடுத்த நொடியே அந்த தோப்பில் இருந்து விரைந்து மறைந்தது நம் ஆதியின் கார்.

தன் வீட்டிற்குள் நுழைந்தவன் ஒரு விதமான வெறுமையை உணர்ந்து கொண்டான். அலைபாயும் தன் மனதை அடக்கியவன் குளித்து விட்டு ஓய்வாக படுக்கையில் சரிந்தான்.

பஞ்சை ஒத்த படுக்கையும் பாறாங் கல்லைப் போன்ற உணர்வை அவனுக்கு கொடுத்தது.

அந்த படுக்கை விரிப்பில் அவளுடைய நறுமணம் அவனைத் தாக்க, அவனுடைய கரங்களோ படுக்கை விரிப்பை இறுகப் பற்றி தன்னோடு சுருட்டிக் கொண்டன.

“ஏன்டி என்னை விட்டுப் போன.?” தனக்குத் தானே பேசிக் கொண்டவன் அவள் மீது எழுந்த சினத்தில் சட்டென அவளுடைய நறுமணம் வீசிய போர்வையை தூக்கி தூர எறிந்தான்.

“சரிதான் போடாஆஆஆஆஆஆஆ…. ரொம்ம்ம்பபபப ஓவராத்தான் பண்ணுற. நீ இல்லாம நான் இருக்க மாட்டேன்னு யாரு சொன்னா.? ஐ கேன். என்னால முடியும்டி. நல்லா சாப்பிட்டு படுத்து தூங்கினா எந்த நினைப்பும் வராது.” என்றவன் தலையணையில் தன் முகத்தை புதைத்து புரண்டு படுத்தான்.

“நான் இனி உன்னைப் பத்தி நினைக்க மாட்டேன்டி.” உறுதி எடுத்தவன் தூங்க ஆயத்தம் ஆகினான்.

‘சே….! இந்த தலையணை ஏன் இப்படி இருக்கு.? சா◌ஃப்டாவே இல்லையே. அவளோட மார்புல முகம் புதைச்சு தூங்கும் போது எவ்ளோ இதமா பஞ்சு மேல படுக்குற மாதிரி இருக்கும். ட்ராமா குயின் ரொம்ம்ம்பபபப சா◌ஃப்ட்.’ என்றவன் சட்டென அந்த தலையணையையும் தூக்கி எறிந்தான்.

‘சே… .! என்ன இது? அவளைப் பத்தி நினைக்கவே மாட்டேன்னு சொல்லிட்டு இப்போ எதுக்கு அவளைப் பத்தி திங் பண்ணிட்டு இருக்கேன்.’ என எண்ணி தன்னைத் தானே கடிந்து கொண்டவன் தன் விழிகளை இறுக மூடிக் கொண்டான்.

‘நான் இனி அவளைப் பத்தி நினைக்க மாட்டேன். ஆனா அவ இப்போ தூங்கிருப்பாளா….? இல்லையா….?’

‘சாப்பிட்டாளா….?’

‘என்னோட நினைவு வந்திருக்குமா.?’

‘என்னை மிஸ் பண்ணிருப்பாளோ.?’

‘யஷ்வி என்னை கண்டிப்பா தேடியிருப்பான். பட் இந்த ட்ராமா குயின் என்னை தேடினாளான்னு தெரியலையே.’ என பல கேள்விகளின் மத்தியில் தன் தூக்கத்தை தொலைத்தான்.

“டாமிட்….” என சத்தமாக கர்ஜித்தான் அவன்.

இப்போதே அவள் இருக்குமிடம் சென்று இராவணனைப் போல தன்னவளை கவர்ந்து வர அவன் உள்ளம் ஏங்கியது.

அவளைப் பத்தி நினையாதே மனமே. என எண்ணியவனின் சிந்தனை முழுவதும் நீக்கமற நிறைந்து போனாள் தன்மயா.

****

தன்மயாவுக்கோ ஆதியை விட்டு விலகி வந்தது மகிழ்ச்சியைக் கொடுத்தது. தன்னால் அவனுடன் நிச்சயமாக இணைந்து வாழ முடியாது என அறிந்தவளுக்கு இந்தத் தனிமையோ சக்கரைக் கட்டி போல இனிக்கத் தொடங்கியது.

“ம்மாஆ ப்பா எங்க.?” என்ற யஷ்வியின் கேள்விக்கு மாத்திரம் என்ன சொல்லி சமாளிப்பது என அறியாமல் குழம்பித் தவித்துப் போனாள்.

“ம்மாஆ, ப்பா வ்வேணும்.”

“அப்பா வருவார் கண்ணா. இன்னும் மூணு நாள்ல வந்துருவார்.” என கூறி சமாதானம் செய்தவள் யஷ்வியை குளிப்பாட்டத் தொடங்கினாள்.

அவனைக் குளிப்பாட்டி விட்டு தானும் நனைந்து ஈர ஆடையோடு வெளியே வந்தவள் ராமுவின் மனைவியிடம் யஷ்வியை ஒப்படைத்து விட்டு அந்த சிறிய பால்கனியில் வந்து நின்றாள்.

கருமை அடர்ந்த கார் கூந்தலில் அலங்கரிக்கப்பட்ட வெள்ளை மல்லிகை மொட்டுக்களைப் போல இருண்ட வானில் வெண்ணிற நட்சத்திரங்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன.

இமைக்காது அவற்றையே பார்த்துக் கொண்டிருந்தவளின் மனமோ தன் குடும்பத்தை எண்ணி மீண்டும் வாடியது.

கடந்த கால இனிப்பான நிகழ்வுகளை எண்ணியவளின் உதடுகளோ விரக்தியான புன்னகையை மொட்டவிழ்த்தன.

தான் மாத்திரம் இப்பூவுலகில் தனித்திருப்பதைப் போன்ற மாயை அவளை ஆட்டுவிக்க, அதன் சுழலில் அகப்பட்டவள் மீள முடியாத பெருந் துயரில் ஆழ்ந்து போனாள்.

அறையின் மின் விளக்குகளைக் கூட போடாது பால்கனி கம்பியில் சாய்ந்து நின்றவளுடைய விழிகளில் இருந்து வழிந்தது குருதியை ஒத்த கண்ணீர்.

இருள் அவள் துயரை இன்னும் அதிகரிக்க, மின் விளக்குகளை ஒளிரச் செய்தாள். மின் விளக்குகளை ஒளிரச் செய்ததும் விலகிய இருளைப் போல தன் துயரும் விலகாதா என்ற ஆசை அக்கணம் அவளுள் எழுந்தது.

ஒரு துளிக் கண்ணீர் பெரு வெள்ளமாக மாற, விம்மி வெடித்து அழத் தொடங்கியவளை தடுத்து நிறுத்தியது அந்தக் கம்பீரக் குரல்.

“ஏய் ட்ராமா குயின். ஓ நோஓஓஓ…. மறுபடியும் அழுகையா.? அகெய்ன் உன்னோட ட்ராமாவ ஆரம்பிச்சுட்டியா.?” என சற்று அதட்டலாக கேட்ட அவனுடைய குரலில் திகைத்து திரும்பியவள் மனம் படபடக்க “ஆதீஈஈஈ….?” என்றாள்.

திரும்பி பார்த்தவள் அந்த இடம் வெறுமையாக இருப்பதைக் கண்டு குழம்பிப் போனாள்.

“ஐயோ என்ன யாரையுமே காணோம்….? இப்போ அந்த டெவிலோட குரல் கேட்டிச்சே.” என்றவாறு அவளுடைய அறையை பார்வையால் அலசினாள்.

அந்த இடமோ வெறுமையாகவே இருத்தது. பெருமூச்சோடு தன் தலையில் தட்டிக் கொண்டவள் மீண்டும் பால்கனியில் நின்று தென்னந் தோப்புகளை பார்க்கத் தொடங்கினாள்.

‘ஒரு நாள் முழுக்க அலைஞ்சு திரிஞ்சு நான் ஆசைப் பட்டதைப் போலவே வீடு வாங்கியிருக்கான்.’ அவளுடைய பார்வை இன்னும் ஆழமாக அந்த இடத்தின் அழகை ரசிக்க ஆரம்பித்தது.

“ஹேய் குயின். எதுக்கு இப்போ ஈரமான ட்ரெஸ் போட்டுருக்க.? லூசாடி நீ.? முதல்ல போய் ட்ரெஸ்ஸ மாத்து இடியட்.” என்ற ஆதியின் கர்ஜனைக் குரலில் பால்கனியில் இருந்து நடு அறைக்கு ஓடி வத்தவள் “ஆ…. ஆதீஈ….? நீ இங்க தானே இருக்கு.? என்னை நிம்மதியா இருக்க விட மாட்டீயா… .? எங்க மறைஞ்சிருக்க.?” என திட்டியவள் அந்த அறையின் ஒவ்வொரு இடமும் ஒன்று விடாது தேடி சோர்ந்து போனாள்.

இறுதியாக கட்டிலின் அருகே அமர்ந்து குனிந்து பார்த்தவள் அங்கும் அவன் இல்லாது போக அதிர்ந்தே போனாள்.

“அச்சோ அந்த கிறுக்கனோட குரல் மட்டும் கேட்குதே. நான் அவனை மிஸ் பண்றேனா.? சே…. சே…. நெவர்.” என்றவள் பால்கனி கதவு மூலை, பாத்ரூம் என அனைத்து இடமும் தேடி களைத்து அடப் போங்கடா என்றவாறு குளிக்கச் சென்று விட்டாள்.

தன்னுடைய ஈர ஆடையைக் களைந்து விட்டு இதமான நீரில் குளித்து முடித்தவள் பெரிய பூந்துவாலை ஒன்றை தன் மார்போடு கட்டிக் கொண்டு வெளியே வந்தாள்.

ஆதி வாங்கிக் கொடுத்த இலகுவான ஆடைகளைக் கண்டவள் அதில் ஒரு கவுனை எடுத்துக் கொண்டாள்.

துவாலையைக் களைந்து கூந்தலைத் துவட்டியவள் மெல்லிய கவுன் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டாள்.

அவள் அணிந்து வந்திருந்த துவாலையை படுக்கையில் போட்டவள் கூந்தலை விரித்து விட்டாள்.

கண்ணாடியின் முன்னே வந்து நின்றவள் தன் மார்பின் மீது கிடந்த தாலியை இமைக்காது பார்த்தாள்.

ஆதியின் தங்கச் சங்கிலியோடு கோர்க்கப்பட்டு நள்ளிரவுதனில் கழுத்தில் ஏறிய தாலி அல்லவா.? அதனைத் தன் கரங்களில் ஏந்தியவளுக்கு விழி நீர் பொங்கியது.

வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டு தாலியில் குங்குமத்தை வைத்தவள் தன் நெற்றியிலும் திலகம் இட்டுக் கொண்டாள்.

“ம்மாஆஆஆ…. ம்மாஆஆ…” என்ற யஷ்விந்தின் அழைப்பு வெளியே கேட்க, புன்னகையோடு தன் அறையை விட்டு வெளியேறினாள் தன்மயா.

யஷ்விந்தின் மழலை கேட்டாலே அவள் வதனம் புன்னகையை தத்தெடுத்துக் கொள்ளும்.

அவள் அந்த அறையை விட்டு வெளியே செல்லும் வரை அந்த வீட்டின் கூரையில் சற்றும் அசையாது அமர்ந்திருந்தான் ஆதித்யன்.

தன்னவளை நினைக்கவே கூடாது என உறுதி எடுத்தவன் அவள் பற்றிய சிந்தனையில் சிதைந்து சின்னாபின்னமாகி இறுதியில் அவளை பார்த்தே ஆக வேண்டுமென்ற வெறியில் தன் வீட்டில் இருந்து புறப்பட்டவன் நேரே தன்மயாவுக்காக வாங்கிய தோப்பு வீட்டிற்கு வந்திருந்தான்.

அங்கிருந்த மாமரம் ஒன்றில் ஏறியவன் அதில் இருந்து அந்த வீட்டின் கூரையில் ஏறி தன்மயாவின் அறையின் கூரைக்கு வந்திருந்தவன் அங்கிருந்த ஓடுகளைக் கழற்றி வைத்து விட்டு அதன் மூலம் தன் மனைவியை ரசிக்கத் தொடங்கினான்.

அவள் ஈர ஆடையோடு வந்து நிற்பதைக் கண்டதும் பதறியவன் ஆடையை மாற்றும்படி கூறி விட, அவளுடைய விழிகள் திகைத்து விரிந்ததை எண்ணி சத்தமின்றி சிரித்தான் அவன்.

சற்று அசைந்தாலும் அவள் தன்னை பார்த்து விடக் கூடும் என்பதை உணர்ந்தவன் அசைவின்றியே இருந்தான்.

சற்று நேரத்தில் அவள் அவனுடைய குரல் கற்பனை என எண்ணி குளியல் அறைக்குள் புகுந்து கொள்ள, குளியல் அறையின் கூரையைப் பிரித்து உள்ளே குதித்து விடுவோமா என்ற பேரவா அவனுள் எழுந்தது.

‘டேய் ஆதி அடங்குடா…. நீ அவளைப் பார்க்கிறது மட்டும் அவளுக்கு தெரிஞ்சுது கூரையோடு சேர்த்து உனக்கும் ஆணி அடிச்சிருவா.’ என தனக்குத் தானே கூறிக் கொண்டவன் அவள் குளித்து முடித்து விட்டு வெளியே வரும் வரைக் காத்திருந்தான்.

அவளும் வந்தாள்….

பூந்துவாலையுடன் நீர் சொட்டச் சொட்ட வெளியே வந்தவளைக் கண்ட கணம் அவனுடைய அத்தனை உரோமங்களும் சிலிர்த்துப் போயின.

உடல் எங்கும் புது உதிரம் பாய்ந்தாற் போல உணர்ந்தவன் அவளுடைய வெண்ணிற தோள் தொடக்கம் பாதம் வரை அணு அணுவாய் இரசிக்கத் தொடங்கினான்.

ஏனோ அவனுக்கு தன்மயாவை இன்றுதான் முதல் முறையாக பார்ப்பதைப் போல இருந்தது.

தன்மயாவோ தன் அறையின் கூரையில் இருந்து ஆதி பார்வையால் விழுங்குவதை பற்றி அறியாது கட்டியிருந்த துவாலையை அவிழ்த்து கூந்தலை துவட்ட, ஆதிக்கோ மூச்சடைத்துப் போனது.

அவளது கொள்ளை அழகில் திணறிப் போனவன் எங்கே தான் மூச்சடைத்தே இறந்து போய்விடுவோமோ என பயந்து போனான்.

சட்டென விழிகளை இறுக மூடி கூரையின் மீது மல்லாக்க படுத்துக் கொண்டவனின் விரல்கள் நடுங்கத் தொடங்கின.

அவனுக்கோ ஏன் அவளைப் பார்க்க வந்தோம் என்றாகிவிட்டது.

தன்னவள் கைக்கெட்டும் தூரம் இருந்தாலும் அவளைத் தொட முடியாதே….

பார்வை படும் இடத்தில் இருந்தாலும் கள்ளத்தனமாய் காண வேண்டிய நிலை அவனுடைய மனதை நொறுங்கச் செய்தது.

மோகம் மட்டும் இருந்த போது துணிந்து அவளைத் தொட்டவன் காதல் வந்ததும் தயங்கினான்.

அவளுடைய காந்த விழிகளில் காதலைக் காண ஏங்கினான்.

அவன் தொட்டால் அவள் அச்சம் கொள்ளாமல் வெட்கம் கொள்ள வேண்டுமென்ற ஆவல் கொண்டான்.

மோகம் தேவையில்லை உன் காதல் போதுமடி என அவள் காதோரம் கூற அவனுடைய இதழ்கள் குறுகுறுத்தன.

இனி கூறி என்ன பயன்….?

கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் எதற்கு.?

அவள் வெட்கத்தை அழித்து உடலை வன்மையாய் தீண்டி மோகம் கடைந்தெடுத்தவனுக்கு கேட்டவுடன் அவள் காதலை கொடுத்து விடுவாளா என்ன.?

உணர்வுகளைக் கொன்றவனே அவளுடைய உணர்வுகளை மீட்க வேண்டும்.

மோகத்தால் முட்டியவனே அவளைக் காதலால் முக்குளிக்க வைக்க வேண்டும்.

எல்லையற்ற வலிகளைக் கொடுத்தவனே அவளுடைய வலிகளை அன்பெனும் துணி கொண்டு துடைத்தெறிய வேண்டும்.

மோகமல்ல காதலே வேண்டுமென அவளுடைய காதலை யாசிக்க வேண்டும்.

டெவில் யாசிப்பானா….?

இல்லை காதலையும் அதிரடியாக எடுத்துக் கொள்வானா….?

காதல் வந்தால் களவும் வந்து விடும் போலும். கள்ளத்தனமாக கூரையின் மீதிருந்து தன்னவளை பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்தவன் அவள் அறையை விட்டு வெளியேறியதும் மீண்டும் அவள் வரும் நேரத்திற்காக காத்திருக்கத் தொடங்கினான்.

தன்மயாவிற்காக நெடு நேரமாக காத்திருந்து அவனுடைய பொறுமை மெல்ல மெல்ல அவனை விட்டுச் செல்லத் தொடங்க, வீட்டினுள் புகுந்து அவளை நேரடியாக பார்த்து விடுவோம் என்ற எண்ணம் அவனுக்குள் உதிக்கத் தொடங்கியது.

‘காதல்ல காத்திருப்பதும் சுகம்னு சொன்னவன் மட்டும் என் கைல கிடைச்சான்னா வச்சு செஞ்சிருவேன்.’ என எரிச்சலோடு முணுமுணுத்தவன் அறைக் கதவு திறக்கும் சத்தத்தில் முகம் மலர்ந்தான்.

‘வந்துட்டா… .’ அவனுடைய மனதின் தித்திப்பு அவனுடைய விழிகளுக்கும் கடத்தப்பட்டது.

தன்மயா யஷ்வியை அழைத்துக் கொண்டு உள்ளே வர, தன் மகனையும் ஆசையாக அணைக்க ஆவல் கொண்டவன், கரங்களால் செய்ய முடியாததை தன் கண்களால் நிகழ்த்திக் கொண்டிருந்தான்.

“யஷ்வி ப்ளே பண்ணது போதும். தூங்கு.” என்றவாறு அவனை படுக்கையில் படுக்க வைத்தவள் யஷ்விந்தின் சிகைக்குள் தன் கரத்தை நுழைத்து வருடினாள்.

யஷ்விந்தோ படுக்கையில் படுத்த கணம் தனக்கு நேரே தெரிந்த கூரையில் தன் தந்தை அமர்ந்திருப்பதைக் கண்டவன் சட்டென தன் கண்களை அகல விரித்தான்.

“ப்ச்…. கண்ணை மூடித் தூங்கு கண்ணா.” அன்பாக அதட்டினாள் அவள்.

ஆதியோ அதிர்ந்து போனான். யஷ்வி தன்னை பார்த்து விட்டான் என்பது புரிய, அவனைப் பார்த்தவன் தன் உதடுகளில் விரல் வைத்து “உஷ்….” என சைகை செய்தான்.

ஆதியின் சைகைகளை சற்றும் கவனியாத யஷ்வியோ “ப்பாஆ ப்பாஆ வா.” என சத்தமாக அழைத்தே விட, அவனுக்கோ பதற்றம் கூடிப் போனது.

‘அடப்பாவி கோர்த்து விட்ராதடா.’

“ப்பாஆஆஆ வா.” தன் கைகளை ஆட்டி ஆட்டி அவன் அழைக்க, திருடனுக்கு தேள் கொட்டியதைப் போலானது அவனுடைய நிலை.

“கண்ணா அப்பா நாளைக்கு வருவார். இப்போ நீ தூங்கு.”

“ம்மா ப்பாஆ அந்தா.” என தன் கைகளை மேலே நீட்டி ஆதியை வசமாக சிக்க வைத்தான் யஷ்விந்த்.

அவளோ புரியாத பார்வையோடு மேலே பார்த்தவள் அடுத்த நொடியே பயந்து போய் ‘வீல்….’ என அலறினாள்.

“போச்சு. இனி சாமி ஆடப் போறா.” என முணுமுணுத்தவன் “ஏய் கத்தாதடி நான்தான்.” என்றான்.

அருகே இருந்த தண்ணீர் கிளாஸை எடுத்து மடமடவென அருந்தி முடித்தவள் அவனை வெறித்துப் பார்த்தாள்.

“சாரி மயா.” என்றவன் அடுத்த நிமிடமே மேலிருந்து அந்த அறைக்குள் குதிக்க, அவளுடைய இதயமோ ஒரு கணம் உறைந்து போனது.

அவனோ “ஸ்ஸ்….” என்றவாறு அடிபட்ட தன் காலைப் பிடித்தவன் நொண்டியவாறு அவளுடைய படுக்கையில் அமர்ந்து விட, அவனை பாய்ந்து அணைத்துக் கொண்டான் யஷ்விந்த்.

தன் மகனை தானும் இறுக அணைத்துக் கொண்டவன் அவனுடைய மூக்கை கடித்து முத்தமிட்டு விளையாட, கொதித்துப் போனாள் தன்மயா.

“வெளியே போங்க ஆதி.”

“ப்ச்…. மறுபடியும் ஆரம்பிக்காத குயின். கொஞ்ச நேரத்துல நானே போயிடுறேன்.”

“இங்க எதுக்கு வந்தீங்க.? என்னை தனியா விடுறேன்னுதானே சொன்னீங்க. இப்படி நைட் டைம்ல கூரைக்கு மேல இருந்து ஒரு பொண்ணோட ரூமை எட்டிப் பார்க்ககறீங்களே ச்சை வெட்கமா இல்லையா ஆதி.? உங்களையும் உங்களோட செயலையும் நான் அடியோட வெறுக்கிறேன்.” என வெறுப்பை வார்த்தைகளில் கலந்து குழைத்து திட்டினாள்.

“ஏய் போதும் நிறுத்துடி. நான் எதுக்குடி வெட்கப்படணும்.? நான் என்ன கண்டவளோட ரூமையா எட்டிப் பார்த்தேன்.” என உறுமலாக கேட்டவன் அவளுடைய கரத்தை பற்றி சுண்டி இழுத்து, அவளைத் தன் கரங்களுக்குள் கொண்டு வந்தவன் அவளை அழுத்தமாக பார்த்தவாறு “நீ என்னோட பொண்டாட்டி. நான் தொட்டுத் தாலி கட்டிய என் பொண்டாட்டியோட ரூமை எட்டிப் பார்த்ததுக்கு நான் எதுக்குடி வெட்கப்படணும்.?” கிட்டத்தட்ட அந்த அறையே அதிரும் வண்ணம் உறுமினான் ஆதித்யன்.

அவனுடைய சினத்தில் வழக்கம் போல அச்சம் கொண்டு தன் அஞ்சன விழிகளை மூடியவள் அவனுடைய கரம் தன் இடையில் பதியவும் எரிச்சலோடு விழிகளைத் திறந்து அவனைப் பார்வையால் எரித்தாள்.

“என்ன சொன்னீங்க.? தொட்டுத் தாலி கட்டிய மனைவியா.? இது கல்யாணமா.? எந்த சாட்சியும் இல்லாம மிட் நைட்ல கட்டினதுலாம் ஒரு கல்யாணமா.? இந்த திருமணத்தை இன்னும் பதிவு கூட செய்யலை.” என சீறினாள் மங்கை.

அவளுடைய வார்த்தைகளில் பொங்கிய சினத்தை கட்டுப் படுத்த முடியாது அருகே இருந்த மேஜையில் ஓங்கி தன் கரத்தை அடிக்க “படார் ….” என்ற சத்தத்தோடு உடைந்து இரண்டாக பிளந்தது அந்த மரத்தால் செய்யப்பட்ட மேஜை.

அந்தச் சத்தத்தில் தன்மயாவோ நடுங்கிப் போய் தன் காதுகளை மூடி சுவரோடு ஒன்றிக் கொள்ள, யஷ்விந்தோ பயந்து வீறிட்டு அழத் தொடங்கினான்.

மகனின் அழுகுரலில் சுயம் அடைந்தவன் தன்னைத் தானே நொந்து கொண்டவாறு “ஹேய் மை டியர் லயன். ஒன்னும் இல்லைப்பா. அப்பா சும்மா அம்மா கூட விளையாடிகிட்டு இருந்தேன்.” என்றவாறு அவனைத் தூக்கி சமாதானம் செய்யத் தொடங்கினான்.

தந்தையின் தோளில் ஏறியதும் யஷ்விந்தின் அழுகையோ நின்றே போனது.

அதே நேரம் அந்த அறைக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு பதற்றத்தை கடன் வாங்கிய முகத்துடன் ராமுவும் அவருடைய மனைவியும் உள்ளே நுழைந்தனர்.

“என்னாச்சு சின்னம்மா.?” என பதற்றத்தோடு உள்ளே நுழைந்தவர்கள் அறையின் உள்ளே நின்ற ஆதியைக் கண்டு அதிர்ந்து போயினர்.

“சா…ர்… . நீங்க எப்போ இங்கே வந்தீங்க.?” திகைப்பாக கேள்வி கேட்டவரை தன் அக்மார்க் அழுத்தமான பார்வையால் வாயை மூட வைத்தவன் ராமுவின் மனைவியிடம் யஷ்விந்த்தை கொடுத்தான்.

“யஷ்விக்கு மில்க்ஷேக் கொடுங்க.” என்றவாறு அவர்களை நாசூக்காக அறையை விட்டு வெளியே அனுப்பியவன் அந்த அறைக் கதவை தாழ் இட்டான்.

சுவரோடு ஒட்டி நின்றவளைப் பார்த்தவன் தன் சீற்ற முகத்தை சட்டென மறைத்தான்.

“இப்போ எதுக்கு பல்லி மாதிரி சுவத்துல ஒட்டிகிட்டு இருக்க.?”

“……..”

“உன்கிட்டதான் பேசிகிட்டு இருக்கேன். காது கேட்கலையா….?”

“……..”

“ஓ… . மேடம் பேச மாட்டீங்களோ… .? இட்ஸ் ஓக்கே. நீ கேட்டதுக்கெல்லாம் பதில் சொல்றேன் நல்லா கேட்டுக்கோ.

மிட் நைட்ல நடந்தாலும் கல்யாணம் கல்யாணம்தான். தாலிக்குரிய பாரம்பரியம் எப்போதும் மாறப் போறதில்ல. ஹாங் நாம நாளைக்கே நம்ம திருமணத்தை பதிவு செய்துரலாம்.” என்றவன் அவளுடைய வதனத்தை தன் கூரிய விழிகளால் அளவிட்டான்.

“நம்ம உறவு இந்த உடைஞ்ச மேஜை மாதிரி. இனி எப்பவும் அதை ஒட்டிய வைக்க முடியாது.” என்றவள் அந்த பூட்டிய அறைக் கதவை திறக்க முயன்றாள்.

“ட்ராமா குயின் டோன்ட் ஓபன் த டோர். நான் உன்கூட பேசணும்.”

“எனக்கு உங்க கூட பேச எதுவுமே இல்லை ஆதி. ப்ளீஸ் இங்க இருந்து போயிருங்க.”

“ப்ச்…. இப்போ உனக்கு என்னதான்டி பிரச்சனை.?”

“என்னோட பிரச்சனையே நீங்கதான் ஆதி. நீங்க எப்போ என் வாழ்க்கைல வந்தீங்களோ அன்னைல இருந்து நான் தினமும் அழுதுகிட்டுத்தான் இருக்கேன்.” என்றவள் மொத்தமாக உடைந்து போனாள்.

“மயா….”

“வ்வேணாம் என்னை அப்படி கூப்பிட வேணாம்.” தன் ஒற்றைக் கரத்தை அவன் முகத்துக்கு நேரே உயர்த்தி தடுத்தவள் தன் முகத்தில் அதிருப்தியை காட்டினாள்.

“ஏய் உன்னோட ஃபேமிலி இறந்ததுல என்னோட தப்பு எதுவுமே இல்லைடி. அது ஒரு விபத்து. எங்களை மீறி நடக்குறதை நாம என்ன பண்ண முடியும்.?”

“ஓஹோ நீங்க கவனக் குறைவா வண்டியை ஓட்டியதால நடந்த விபத்துதான் இது. எல்லாத்துக்குமே நீங்கதான் காரணம் ஆதி.” என்றவளின் கரத்தை அழுத்தமாக பற்றியவன் அவளை படுக்கையில் அமர வைத்தான்.

“என்ன நடந்திச்சுன்னு நான் சொல்றதை முதல்ல கேளு. அண்ணா இறந்து கொஞ்ச மாசம் ஆயிருந்தாலும் என்னால அதுல இருந்து வெளியே வர முடியலை டி. ஒவ்வொரு மாசமும் அவன் இறந்து போன டேட் அன்னைக்கு என்னால என்னையே கன்ட்ரோல் பண்ண முடியாம போயிரும். அந்த டைம்ல வீட்ல இருக்கிறதையே அவாய்ட் பண்ணிருவேன். என்னோட வலியை மறக்குறதுக்காக காரை எடுத்துட்டு எங்கேயாவது லாங் ட்ரைவ் போவேன்.

பட் அன்னைக்கு நடந்தது நானே எதிர் பார்க்காததுடி.” என்றவன் தன் வியர்வையை துடைத்துக் கொண்டான்.

அவளோ பாவை போல படுக்கையில் அசையாது அமர்ந்திருந்தாள்.

“ட்ரைவ் பண்ணிகிட்டு இருக்கும் போது இடையில ஒரு நாய் குறுக்கா வந்துருச்சு. சடன்லி என்னோட காரை மத்த பக்கம் வெட்டித் திருப்பினேன். உங்க காரோட ட்ரைவரும் வண்டியை திருப்புறதுக்கான எந்த சிக்னலும் போடலைடி. சோ நான் அந்த பக்கம் காரை

திருப்பிட்டேன். அட் த சேம் டைம் அவங்களும் என் பக்கமே திருப்ப, ரெண்டு காருமே மோதி நொறுங்கிப் போயிருச்சு. அந்த ஆக்ஸிடன்ட்ல நான் உயிர் பிழைச்சதே மிராக்கல்தான்டி."

"இதுல என் தப்பு என்னடி இருக்கு.? அந்த கார்ல வந்தவங்க உன்னோட பேரண்ட்ஸ்னு கூட எனக்குத் தெரியாது. அந்த ஆக்ஸிடன்ட் நடந்து கிட்டத்தட்ட நாலைஞ்சு மாசம் படுத்த படுக்கையா கிடந்தேன். நீ நினைக்கிற மாதிரி பழிவாங்குறதுக்காக நான் வேணும்னே இதை பண்ணலை குயின். ஒரு உயிரோட மதிப்பு என்னன்னு எனக்கு நல்லாவே தெரியும். திட்டம் போட்டு கொலை பண்ணுற அளவுக்கு நான் கெட்டவன் இல்லைடி." என்றவனின் குரலோ இறுதியில் தழுதழுத்தது.

"ப்ளீஸ்டி புரிஞ்சிக்கோ." என்றவன் தன்னை புரிய வைத்து விடும் நோக்கில் நடந்த அத்தனையையும் அப்படியே உரைத்தான்.

தன் மேல் எந்தத் தவறும் இல்லை என்பதை தன்னவள் புரிந்து கொண்டால் நிச்சயம் தன்னுடன் காதலோடு வந்து விடுவாள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவனிடம் இருந்தது.

அவளோ அவன் கூறிய அனைத்தையும் முழுதாக கேட்டு முடித்த பின்பு, அவனை புருவம் உயர்த்தி பார்த்தவள் "சோ இப்போ நான் என்ன பண்ணனும்.?" என அழுத்தமாக கேட்டாள்.

"நீயும் யஷ்வியும் நம்ம வீட்டுக்கு வரணும். என்கூடவே இருக்கணும். உன்னோட பழைய காதல் மறுபடியும் எனக்கு வேணும்." என மென்மையான குரலில் கூறியவனைப் பார்த்து மறுப்பாக தலை அசைத்தவள் "இன் யுவர் ட்ரீம்ஸ்." என்றாள்.

"வாட்….?"

“இதெல்லாம் உன்னோட கனவுல மட்டும்தான் நடக்கும் ஆதி. கெட் லாஸ்ட்.” என்றவாறு அவனுடைய முகம் பார்க்க பிடிக்காது தன் வதனத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

அக் கணம் உடலில் உள்ள அத்தனை அணுக்களிலும் வலியை உணர்ந்து இறுகிப் போய் நின்றான் ஆதித்யன்.

“நான் உனக்கு வேணாமா ட்ராமா குயின்….?” கரகரப்பாக ஒலித்தது அவனுடைய குரல்.

“வ்வேணாம் ஆதி. ப்ளீஸ் இங்க இருந்து போயிரு.”

“நீ கோபத்துல பேசுற குயின். கொஞ்சம் நிதானமா நான் சொல்றதை புரிஞ்சிக்க ட்ரை பண்ணு. நான் இல்லாம உன்னால இருக்க முடியாதுடி.” என உறுதியாக கூறினான் ஆதி.

“மன்னாங்கட்டி….” என வெடித்தாள் மங்கை.

“ஏன் உன்கூட இருந்து இன்னும் நிறைய கொடுமையை அனுபவிக்கனும்னு சொல்றியா.?”

“மயா இனாஃப். நீ பண்ண தப்புக்குத்தான் நான் அப்படி பண்ணினேன். மத்தபடி உன்னை கொடுமைப் படுத்தணும்கிறது என்னோட நோக்கம் இல்ல. நான் உன்னை நல்லா பார்த்துப்பேன் மயா. உன்னை ஹர்ட் பண்ணினா அது எனக்கும் வலிக்கும்டி. ப்ளீஸ் ட்ரை டு அன்டர்ஸ்டான்ட் மீ.”

“வாட்….? இப்போ நீ என்ன சொன்ன ஆதி.? நான் பண்ண தப்புக்கு தண்டனை கொடுத்தியா.? ஹா…. ஹா…. குட். குட். குட். நான் அறியாத வயசுல என் மானத்துக்காக போராடினா அது தப்பா.? ராணா மாமா தற்கொலை பண்ணிட்டாரு அதுக்கு காரணம் நான்னு சொல்லி என்னை டார்ச்சர் பண்ணியே. அவர் சூசைட் பண்ணிகிட்டதுக்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்.? நான் கொலை பண்ணாமலேயே என்னை தப்பு செஞ்சவன்னு முத்திரை குத்திய நீ திறமா.? நீ நல்லவனா.? என்னோட குடும்பம் மொத்தத்தையும் கார் ஏத்தி கொன்னுட்டு ‘நான் தப்பு பண்ணலை அது தெரியாம நடந்திருச்சு. இட்ஸ் அ ஆக்ஸிடன்ட்னு’ ஈசியா சொல்லிட்டு இருக்கியே உனக்கு கொஞ்சம் கூட மனசாட்சி இல்லையா.?” என பொங்கி வெடித்தவளின் கேள்விகளில் வாயடைத்துப் போனான் ஆதி.

“நா…. நான் வேணும்னு ப…. பண்ணலைடி.”

“ஓகே ஒத்துக்கிறேன் ஆதி. நீ வேணும்னு பண்ணலை. அது ஆக்ஸ்ஸிடன்ட்தான். அப்போ நான் அன்னைக்கு வேணும்னா அப்படி பண்ணினேன்.? ஒரு பொண்ணு அவளோட அந்தரங்கத்தை எல்லாருக்கும் காமிப்பாளா.? அந்த இடத்துல யாரா இருந்தாலும் நான் பண்ணதைத்தான் பண்ணிருப்பாங்க. என் மேல தப்பு இல்லைங்கிறத நீ இன்னும் புரிச்சிக்கலைல.?”

“மயா….”

“ஸ்ஸ்…. ஸ்டாப் இட் ஆதி. நான் பேசி முடிச்சிடுறேன்.”

“அறியாத வயசுல நான் என்னை காப்பாத்திக்க நடந்துகிட்டது தப்புன்னா நீ ஆக்ஸிடன்ட் பண்ணதும் தப்புதான். உங்க அண்ணா சூசைட்

பண்ணதுக்கு நான் காரணம்னா என்னோட குடும்பம் மொத்தமா சிதைஞ்சு போனதுக்கு நீ மட்டும்தான் காரணம்.

உங்க அண்ணாவோட ஒரு உயிருக்காக என்னை அணு அணுவா சித்திரவதை பண்ணி, என்கிட்ட மனநோய்னு நடிச்சு, என்னை வே….. மாதிரி ட்ரீட் பண்ணி, கிட்டத்தட்ட என்னை ஒரு பைத்தியம் மாதிரி மாத்தி வெச்சிருந்தியே. இதுலாம் நீ எனக்கு பண்ணின கொடுமைகள் இல்ல இல்ல தண்டனை. நான் பண்ண தப்புக்கு நீ கொடுத்த கிரேட் பனிஷ்மென்ட்." என்றவள் அவனுடைய முகத்தை சீற்றத்தோடு ஏறிட்டாள்.

"என்னை பனிஷ் பண்றேன்னு சொல்லிட்டு ஒவ்வொரு நிமிஷமும் உயிரோட கொன்னு புதைச்சுட்ட ஆதி.

சரி அதை விடு. இப்போ நீ பண்ண தப்புக்கு என்ன பதில் சொல்லப் போற.? நீ பண்ண தப்புக்கு நான் உனக்கு என்னெல்லாம் பண்ணனும்.?"

"……..."

"பேசு ஆதி. என்னோட அப்பா அம்மா அக்கா மாமான்னு எத்தனையோ பேரோட உயிர் உன்னால போயிருச்சு. நானும் உன்னை மாதிரி நடிச்சு ஏமாத்தட்டுமா ஆதி.? உன்கிட்ட பணம் இருக்குன்னா என்ன வேணாலும் பண்ணுவியா.? என்னை பனிஷ் பண்ணிய நீ எந்த விதத்துல யோக்கியம்.?" என்றவள் சட்டென உடைந்து போனாள்.

பொங்கிய விழி நீரை தன் புறங்கையால் துடைத்தவாறு அந்த படுக்கையில் அமர்ந்தவள் மௌனமாக கண்ணீர் வடித்தாள்.

அவள் அவனோடு கடந்து வந்த பாதை யாவும் கற்களாலும் முட்களாலும் நிறைந்தவை அல்லவா.? அந்த ரணம் தற்போதும் அவளை குத்திக் கிழித்தது.

“எ…. எனக்கு டி.ஐ.டி நோய்னா என்னன்னு கூட தெரியாது. எப்…. எப்படிலாம் பயந்தேன் தெரியுமா.? எந்த அளவுக்கு துடிச்சேன் தெரியுமா.? நீ ஒவ்வொரு தடவையும் என்னை தொடும் போது சித்து வந்திருவானோ கவின் வந்துருவானோன்னு நரக பயத்தை அனுபவிச்சேன் ஆதி. என்னைத் தொட்டது இனி தொடப் போறது ஆதி மட்டும்தான்னு இருந்தேன். ஏன் தெ…. தெரியுமா.? ஏன்னா நான் ஆதியை காதலிச்சேன்.” என்றவள் படுக்கையை இறுக பற்றிக் கொண்டாள்.

அவள் உடலோ நடுங்கத் தொடங்கியது.

“நீ எனக்கு அவ்ளோ கெட்டது பண்ணியும் நான் உன்னை உண்மையா நேசிச்சேன் ஆதி. ஆனா…. நீ என்கிட்ட நடிச்சு என்னை ஏமாத்திட்ட.” என்றவள் உடைந்து போய் அழத் தொடங்கினாள்.

“இ…. இந்த உல…. உலகத்துல எனக்குன்னு யா… யாரும் இல்லைன்னு ரொம்ப கவலைப் பட்டேன். அப்போதான் நீ என்னோட வாழ்க்கைல வந்த. இனி எல்லாமே நீதான்னு நினைக்கும் போது என்னை மொத்தமா தூ…. தூக்கி எறிஞ்சுட்டுப் போய்ட்ட.” என அழுதவளின் கரங்களை மென்மையாக பற்றிக் கொண்டவன் தன் விழிகளை இறுக மூடி அவளுடைய பஞ்சு போன்ற கரங்களில் தன் முகத்தை புதைத்துக் கொண்டான்.

தன் கைகளை இவனிடம் இருந்து விடுவிக்க முயன்றவளை “நான் தப்பு பண்ணிட்டேன்னு புரியுது பேபி. நான் நினைச்சது மாதிரி நீ இல்ல. உன்னை நான் எவ்வளவோ ஹர்ட் பண்ணிட்டேன்தான் இல்லைன்னு சொல்லல. பட் அதை விட உன்னை ரொம்ப நல்லா பார்த்துக்கிறேன்டி.”

என்றவன் அவளுடைய கன்னங்களில் வழிந்த உவர் நீர்த் துளிகளை துடைத்து விட்டான்.

அவளோ அப்போதும் மறுப்பாக தலை அசைக்க, ஆதிக்கோ அவளை சமாளிப்பதே கடினமாகிப் போனது.

“சரி மயா. உனக்கு என்ன தண்டனை தரணும்னு தோணுதோ அதை எனக்கு கொடுத்திரு.”

“நான் யாரையும் பழி வாங்க விரும்பலை.”

“சரி. அப்போ என்கூட என்னோட மனைவியா வாழ்க்கையை வாழ ஆரம்பி.”

“வ்வேணாம் ஆதி. எனக்கு இந்த வாழ்க்கை வேணாம். என்னால எப்பவுமே உன்னை ஏத்துக்க முடியாது.”

“ஐயோஓஓஓஓ ஏன்டி இப்படி என்னை கொல்ற.? ஏன் என்னை புரிஞ்சிக்க மாட்டேங்கிற?”

“நான் நல்லாவே புரிஞ்சுகிட்டேன் ஆதி. நீ தான் என்னை புரிச்சிக்கலை.”

“எல்லாத்தையும் மறந்து நமக்காக ஒரு வாழ்க்கையை வாழலாம் மயா. ஒருத்தரை ஒருத்தர் புரிச்சிக்கலாம். ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கலாம்.”

“ம்ஹூம் எனக்கு இப்போ கூட நீ என்கிட்ட நடிச்சுகிட்டு இருக்கியோன்னுதான் சந்தேகமா இருக்கு ஆதி. என்னால உன்னை நம்ப முடியலை. இன்னொரு தடவை உன்னை நம்பி ஏமாந்து போக நான் தயாரா இல்லை.” என்றதும் சட்டென அவளை விட்டு விலகியவன் அந்த அறை பால்கனியில் சென்று நின்று கொண்டான்.

தன்மயாவோ அழுதாளே தவிர அவனைத் திரும்பியும் பார்த்தாளில்லை.

சற்று நேரம் இருளையே வெறித்துக் கொண்டிருந்தவன் பின் மீண்டும் அவளை நெருங்கினான்.

அவன் அருகே வந்ததும் அவளுடைய வயிற்றில் குழந்தை உதைத்தது.

கண்ணீரோடு அவனைப் பார்த்தவள் “நீங்க இங்க இருந்து போகலைன்னா நான் இங்க இருந்து போயிருவேன் ஆதி.” என்றாள்.

“நோ நீட் ட்ராமா குயின். நானே போயிடுறேன். என்னோட காதலையும் என்னோட மனசையும் புரிஞ்சிக்காதவங்ககிட்ட என்ன பேசினாலும் எவ்ளோ கெஞ்சினாலும் எல்லாமே வேஸ்ட்தான்.”

“ம்ம்….”

“வெல். நல்லா கேட்டுக்கோ குயின். இனி நீ எங்கேயும் போகலாம். நான் தடுக்க மாட்டேன். பட் என்னோட மகனும் இனி பிறக்க போற குழந்தையும் என்கூட தான் இருக்கணும்.” என அழுத்தமான குரலில் கூறினான்.

“எ…. என்னால என் என்…. கு… குழந்தைங்களை உங்ககிட்ட தர முடியாது.” திணறியவாறு அவனுடைய கட்டளையை மறுத்தாள் தன்மயா.

“அப்போ என்கூட இரு.”

“என்ன விளையாடுறீங்களா.? நீங்க நினைக்கிற எதுவுமே நடக்காது ஆதி.”

“அப்படியா மயா பேபி.? அதையும் பார்த்திரலாம்.” என சவாலாகக் கூறினான் ஆதி.

“வ்வேணாம் ஆதி. என்னை கன்ட்ரோல் பண்ண ட்ரை பண்ணாத.” என்றவளின் குரல் இறுகி ஒலித்தது.

“ஐ டோன்ட் கெயார் அபௌட் தட். ஐ நீட் யு. எனக்கு நீ வேணும் மயா. அதுக்காக நான் எதுவும் செய்வேன்.” என்றவன் உடல் இறுகிப் போய் நின்றவளின் கூந்தலை மென்மையாக வருடி விட்டான்.

அவனுடைய விரல்களின் ஸ்பரிஷத்தில் விழிகளை மூடிக் கொண்டவளின் இதழ்கள் அழுகையில் துடித்தன.

அடுத்த நொடியே அவளின் முதுகுப் புறம் வந்தவன் அவளைப் பின்னால் இருந்து இறுக அணைத்துக் கொண்டான்.

அவனுடைய இதழ்களோ அவளுடைய காது மடலை தீண்டி மென் முத்தம் பதித்தன.

“மயா பேபி.”

“…….”

“உன்னை முதன் முதலா பார்த்த அன்னைக்கே என மனசுல நீ பதிஞ்சு போய்ட்டடி.” என்றவன் அவளுடைய முதுகில் அழுத்தமாக இதழ் பதித்தான்.

விலக முயன்றவளின் தோள்களைப் பற்றி அவன் முகம் பார்க்கச் செய்தவன் “மயாஆஆஆ பேபீஈஈஈ.” என உயிரை உருக்கும் குரலில் அழைத்தான்.

தடுமாறி நின்றவளின் கன்னத்தை அழுந்தப் பற்றியவன் “ஐ லவ் யு மயா.” என்றவாறு மெல்ல குனிந்து அவளுடைய துடித்த இதழ்களை கவ்விக் கொள்ள, அவள் உடலோ பூங் கொடி காற்றுக்கு வளைவது போல அவனுடைய இழுப்புக்கு அசைந்தது.

நீண்ட நெடிய இதழ் யுத்தத்தில் மங்கையின் அதரங்கள் சீனிப் பாகாய் கரைந்து அவனுடைய இதழ்களுக்குள் புதைய, அழுத்தமாக இதழை பதித்து தன்னை சிறை எடுத்துக் கொண்டிருந்தவனை சட்டென தள்ளி விட்டாள் தன்மயா.

தன் இதழ்களை அழுந்தத் துடைத்தவளின் பார்வை அவனை வெறித்தது.

“நீ எப்போதும் என்கூட தான்டி இருக்கணும்.”

“முடியாது ஆதி.” என்றவள் அவனுடைய கரங்களுக்குள் சிக்காது பின்னால் நகர்ந்தாள்.

“நான் உன்னை விடப் போறது இல்லை மயா பேபி.” என உறுதியாக கூறியவனை இகழ்ச்சியாகப் பார்த்தவள் “நான் உயிரோட இருந்தா தானே உன்கூட இருக்கணும். நான் இல்லைன்னா இந்த பிரச்சனையே வராதுல்ல.” என்றவள் பால்கனி கம்பியோடு முட்டி நின்றாள்.

“ஏய் இ…. இடியட். என்ன பேச்சு பேசுற. உள்ளே வா.” என அதட்டினான் ஆதி.

“சா…. சாரி நான்…. நா…. நாங்க போயிடுறோம்.” என்றவள் பால்கனி கம்பியில் ஏற, ஆதித்யனின் உடலில் சர்வமும் அடங்கி ஒடுங்கிப் போனது.

“மயாஆஆஆஆஆ நோஓஓஓஓஓ” என அலறியவன் அவளை நோக்கிப் பாய, அவளோ கண்களை மூடிக் கொண்டு அந்த பால்கனியில் இருந்து சரியத் தொடங்கினாள்.

எந்தப் பிடிமானமும் இன்றி சரிந்தவளின் கரத்தை எட்டி பிடித்தவனுக்கு இதயம் தொண்டைக் குழிக்குள் வந்து துடிக்கத் தொடங்கியது.

பதறி நடுநடுங்கிப் போனவன் அவளை பத்திரமாக தூக்கி அறையினுள் விட்ட கணம் தொப்பென தரையில் அமர்ந்தான்.

அவள் தன்னை விட்டுப் போய் விடுவாளோ என்ற அச்சம் அவனை ஆட்டிப் படைக்க, உடல் வியர்த்து மூச்சுப் பேச்சற்று அந்த அறையின் தரையில் உயிரற்ற வெறுங் கூடு போல சரிந்தான்.

அவளுடைய விபரீத முடிவால் அவனுடைய உயிர்ப்பும் அந்நொடியே அடங்கிப் போனது.

தன்மயாவோ கீழே விழுவதைப் போல ஆதியை மிரட்டிப் பார்க்க எண்ணியவள் நிஜத்திலையே கால் பால்கனி கம்பியில் வழுக்கி விட, விதிர் விதிர்த்துப் போனாள்.

தன் உயிர் போவதைப் பற்றி அவளுக்கு சிறு கவலை கூட இல்லாவிடினும் தனக்குள் இருக்கும் உயிருக்கு ஏதேனும் ஆகி விடுமோ என நடுங்கிப் போனாள் அவள்.

ஆதியோ அவள் கீழே விழுவதற்குள் சட்டென அவளைப் பாய்ந்து பிடித்தவன் அவளை தூக்கி அறையினுள் விட்டுவிட்டு வேரற்ற மரமாய் தரையில் சரிந்தான்.

அவனுடைய நிலையோ படு மோசமாகிப் போனது.

‘என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாள்.?’ என எண்ணி எண்ணி தரையிலேயே புழுவாகத் துடித்தவனுக்கு மூச்சடைத்துப் போனது.

உடல் இரும்பாக இறுகிப் போனது.

“ஆதீஈஈஈஈ.” என பதறியவாறு அவன் அருகே வந்தவள் அவனுடைய நிலை கண்டு ஸ்தம்பித்தாள்.

“ஆதீஈஈஈ எழுந்திருங்க. என்னாச்சு.?” என பதறியவாறு கேட்டவளுக்கு எந்த பதிலையும் வழங்காது உடல் விறைத்துப் போய் அசைவற்று கிடந்தான் ஆதித்யன்.

அந்தப் பேரதிர்ச்சியில் இருந்து அவனால் அவ்வளவு எளிதாக வெளியே வர இயலவில்லை.

அவளோ தண்ணீர்ப் போத்தலை எடுத்து வந்து அவனுக்கு புகட்டிவிட சீறும் வேங்கையாய் அவளுடைய கரத்தில் இருந்த தண்ணீர்ப் போத்தலைத் தட்டி விட்டவனுடைய விழிகள் கண்ணீரால் நிறைந்தன.

உச்சகட்ட கோபம், ஏமாற்றம் தவிப்பு, துடிப்பு, பதற்றம், பயம் என அத்தனை உணர்வுகளும் அவனை பந்தாடின.

மனமும் மூளையும் நிகழ்காலத்தை விட்டு அந்த கடந்து சென்ற நொடிகளிலேயே தேங்கிவிட அவனுக்கோ சுற்றம் புரியாது போனது.

நடுங்கும் உடலை திடப்படுத்த முயன்று தோற்றவன் விழிகளை இறுக மூடிக் கொண்டான்.

அவனால் அவள் செய்த செயலை சற்றும் ஜீரணிக்கவே முடியவில்லை.

அவளுக்கு மட்டும் ஏதேனும் ஆகியிருந்தால் அடுத்த கணமே அவனும் தன் உயிரை நிச்சயம் துறந்திருப்பான்.

அவளின்றி அவன் மட்டும் வாழ்வது உயிரற்ற பிணமாய் நடமாடுவதற்கு சமம் என்பதனை உணர்ந்து கொண்டவன் அவள் மீது தான் கொண்ட காதலின் ஆழத்தை புரிந்து கொண்டான்.

சில நிமிடங்களில் தன்னை சமாளித்துக் கொண்டு எழுந்தவன் அவளுடைய வதனத்தை தன் விழிகளால் அளவிட்டான்.

கிடைத்த பொக்கிஷத்தை தானே தன் சினத்தால் தவற விட்டுவிட்டோம் என்பது புரிந்து போக பெருமூச்சு விட்டான் ஆதி.

அவனுடைய விழிகள் வேகமாக அவளுக்கு ஏதேனும் அடிபட்டிருக்கிறதா என ஆராயத் தொடங்கின.

“உனக்கு ஏதாவது அடி பட்டிருச்சா மயா.?” அவனுடைய குரலோ மெல்லிய நடுக்கத்தோடு ஒலித்தது..

“இ…. இல்ல ஐ அம் ஓகே.” என்றாள் அவள்.

“ஏன்டி இப்படி பண்ணின.? கொஞ்ச நே… . நேரத்துல நான் செத்துட்டேன்டி. உனக்கும் குழந்தைக்கும் ஏதாவது ஒன்னுன்னா நான் உயிரோட இருப்பேன்னு நினைக்கிறியா மயா.? யஷ்வியை பத்தி கொஞ்சமாவது நினைச்சுப் பார்த்தியா.? என் கையெல்லாம் நடுங்குதுடி. ஒரு நிமிஷத்துல நான் உன்னை இழந்துட்டேனோன்னு துடிச்சுப் போயிட்டேன் மயா.” என்றவன் நிதானம் இன்றி அந்த அறையில் நடை பயின்றான்.

அவனது தடுமாற்றத்திலும் பதற்றத்திலும் திகைத்தவளாய் பேச்சற்று நின்றாள் தன்மயா.

“வேணாம்டி. நீ சாக வேணாம். என்கூட இருக்குறதுக்கு சாகுறதே மேல்னு நினைச்சிட்டேல்ல. நான் இனி உன்னைப் பார்க்க வர மாட்டேன் மயா. நீ உனக்குப் பிடிச்ச மாதிரியே இரு. யஷ்வி , குழந்தை எல்லாருமே உன்கிட்டயே இருக்கட்டும். நான் உன்கூட வாழணும்னுதான் ஆசைப் பட்டேன் மயா. உன்னைக் கொன்னு நான் வாழணும்னு ஆசைப் படல.” என்றவன் அவசர அவசரமாக சென்று அந்த பால்கனியின் கதவை பூட்டினான்.

அடுத்த நிமிடமே அவள் அருகே வந்தவன் “எ…. எனக்கொரு ச… சத்தியம் பண்ணி கொடு மயா.” என தன் கரத்தை அவளை நோக்கி நீட்டினான்.

அவன் கேட்ட சத்தியத்தை கொடுப்பதற்கு தயங்கி நின்றாள் மாது.

அடுத்த கணமே அவளின் முன்பு மண்டியிட்டு அமர்ந்து அவளின் முன்னே தன் கரத்தை யாசகமாக நீட்டியவன் “மூணு வருஷத்துக்கு முதலும் நான் உன்கிட்ட கெஞ்சினேன் மயா. கால்ல விழுந்து யாசகம் கேட்டேன். இப்போவும் கேட்குறேன். இந்த சத்தியத்தை ம…. மட்டும் எனக்காக பண்ணிக் கொடுத்திரு மயா. நான் உன்னை இனி எந்த விதத்துலையும் தொந்தரவு பண்ண மாட்டேன். கஷ்டப்படுத்த மாட்டேன். பழி வாங்குறேன்னு உன்னை ஏமாத்த வர மாட்டேன். ட்ரஸ்ட் மீ. எனக்காக இந்த ஒரே ஒரு சத்தியத்தை மட்டும் பண்ணிக் கொடுடி.” என குரல் உடைய கூறியவனை கண்டு பெண்ணவளின் மனமும் கனத்துப் போனது.

“ப…. பண்றேன் ஆதி.” என திணறியவாறு அவள் கூற, தரையில் இருந்து எழுந்தவன் “இனி எந்தவொரு சூழ்நிலையிலையும் எவ்ளோ கஷ்டம் வந்தாலும் தற்கொலை பண்ணிக்க மாட்டேன்னு ப்ராமிஸ் பண்ணு மயா.” என்றவாறு அவளுடைய விழிகளை பார்த்தான் ஆதி.

“அது…. அ…. நான்.”

“மயா ப்ளீஸ்.”

“ஓகே ஐ… . ஐ ப்ராமிஸ் யு ஆதி. இ… . இனி எப்போவும் எந்த சிட்டுவேஷன்லையும் சூசைட் பண்ண ட்ரை பண்ண மாட்டேன்.” என அவள் கூறியதும் அவனுடைய இறுகிய உடல் சற்றே தளர்ந்தது.

“தேங்க்ஸ் தன்மயா. இனி உன்னோட வாழ்க்கைல இந்த ஆதியும் எப்போவும் வர மாட்டான். எங்கேயோ தூரத்துல நீ நல்லா இருக்கேங்கிற தகவல் மட்டும் எனக்கு கிடைச்சா போதும்.” என்றவன் அவளுடைய வயிற்றினுள் இருக்கும் தன் குழந்தையை ஒரு கரத்தால் வருடியவாறு கலங்கி நின்றான்.

பின் அடுத்த நொடியே சிந்தை தெளிந்து அவளுடைய வதனம் பார்த்தவன் “நான் போறேன்டி.” என்றவாறு விருட்டென அந்த அறையை விட்டே வெளியேறிவிட தவித்த மனதோடு அமைதியாக அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தாள் தன்மயா.

திகைத்த மனதோடு அசைவற்று நின்றவள் சட்டென பால்கனி கதவைத் திறந்து அவன் செல்கிறானா என பார்த்தாள்.

அங்கே ராமு அழைக்க அழைக்க காதே கேளாத செவிடன் போல எங்கோ வெறித்தவாறு நடந்து சென்று கொண்டிருந்தான் ஆதி.

‘ஆதி நிஜமாவே என் வாழ்க்கையை விட்டு போய்ட்டானா.? இனி திரும்ப வர மாட்டானா.?’ என்ற எண்ணம் தோன்றி அவளை வதைக்க, பால்கனி கதவை பூட்டியவள் அதன் மீதே சாய்ந்து கொண்டாள்.

பெருமூச்சில் அவளுடைய மார்பு விம்மித் தணிந்தது.

ஏனோ அவன் தன்னை விட்டுச் சென்றதை எண்ணி அவளால் மகிழ்ச்சி கொள்ளத்தான் இயலவில்லை.

இத்தனை நாட்களாக அவள் அவனிடம் எதிர்ப்பார்த்தது இந்த விடுதலையைத் தானே. அந்த விடுதலை கிடைத்ததை எண்ணி அவள் மகிழ்ச்சி அல்லவா அடைந்திருக்க வேண்டும். ஆனால் அவள் மனமோ ஒருவகையான வெறுமை உணர்வை நுகர தன் தலையை இறுகப் பற்றிக் கொண்டாள் அவள்.

இனி இதுதான் என் வாழ்க்கை என்ற முடிவுக்கு வந்தவள் தன்னை திடப்படுத்திக் கொண்டு ஆதித்யன் என்பவன் இல்லாத ஒரு வாழ்வை வாழ்ந்து பார்க்க ஆயத்தமாகினாள்.

அவனுடைய பிரிவு தன்னை சற்றும் பாதிக்காது என உறுதி கொண்டவள் பாத்ரூமினுள் சென்று ஃப்ரஷ் ஆகினாள்.

முகம் சற்றே தெளிவடைய அவளுடைய மனமும் சற்று தெளிந்தாற் போல இருந்தது.

சற்று நேரத்தில் கீழே சென்று யஷ்வின்தை தன்னோடு அழைத்து வந்தவள் அவனோடு உறங்குவதற்கு ஆயத்தமானாள்.

கண்களை மூடி உறங்க முயன்றவளுக்கோ உறக்கம் தொலை தூரமாகிப் போனது.

வழமையாக அவளை பாதுகாப்பாக அணைத்துக் கொள்ளும் அந்த இரும்புக் கரம் இன்றி அவளுடைய விழிகள் மூட மறுத்தன.

தூக்கம் அவளை விட்டு தூரம் போனது.

பிரிந்த காதலர்களைப் போலவே அவளுடைய விழி இமைகளும் ஒன்றோடு ஒன்று சேர மறுத்தன.

பெருமூச்சோடு மின் விளக்குகளை அணைத்தவள் யஷ்வியை பார்த்தவாறு அந்த இரவை கழிக்கத் தொடங்கினாள்.

நீண்ட நெடிய இரவும் கடந்து போக, ஆதவனின் பொற் கரங்களின் துணையோடு விடியலும் பூமிதனைத் தழுவத் தொடங்கியது.

விடியலின் இன்னிசைக் கீதமான பறவைகளின் ஒலியில் துயில் நீங்கி எழுந்தவள் தன்னருகில் அசந்து தூங்கிக் கொண்டிருக்கும் யஷ்வியின் நெற்றியில் முத்தம் பதித்தாள்.

சற்று நேரத்திலேயே நேற்று நடந்தவை அனைத்தும் நினைவு வர, சட்டென அவளுடைய பார்வை அந்த அறையின் கூரையை ஆராய்ந்தது.

“இந்த டெவிலை நம்ப முடியாது. மேலே இருந்தாலும் இருப்பான்” என தன் விழிகளால் அந்த அறை முழுவதையும் கூரையையும் அலசி ஆராய்ந்து முடித்தாள்.

அவன் இங்கே இல்லை என்ற நிதர்சனம் அவளுடைய மனதை தாக்கியது.

“சரிதான் போடா.” என முணுமுணுத்தவள் ராமுவின் மனைவியோடு இணைந்து சமையல் வேலை, அலங்கார வேலை என ஒவ்வொன்றாக செய்யத் தொடங்கினாள்.

காலை கடந்து மாலையும் வந்தது. கிழக்கே உதித்த சூரியன் மேற்கே மறையத் தொடங்க, அடிக்கடி அந்த தோப்பில் நின்றவாறு வாயிற் கதவையே பார்த்துக் கொண்டிருந்தாள் தன்மயா.

அதே நேரம் அவ் வழியால் வந்த ராமுவைக் கண்டவள் “ராமு அங்கிள்.” என அவரை அழைத்தாள்.

“சொல்லுங்கம்மா.”

“அவர்கூட பேசினீங்களா.?”

“யாரைம்மா கேட்கிறீங்க.? நம்ம ஆதி தம்பியையா.?”

“ம்ம்ம்ம்….”

“இல்லைம்மா. அவர் இங்கேயும் வரலை. என்கூட பேசவும் இல்லை. எனக்கு ஃபோன் பண்ணுவாரு ஆனா இன்னைக்கு எடுக்கவே இல்லை. ஏன்னு தெரியலை.”

“ஓ…. சரி” என்றவள் தன் சிந்தனைகளை திசை திருப்பினாள்.

மாலைப் பொழுது கழிந்து இரவும் வந்தது. அழையாத விருந்தாளியாக ஆதியின் நினைவும் வந்தது.

மீண்டும் தன் விழிகளை அந்த அறையின் கூரை நோக்கி மேய விட்டவள் ஏமாந்து போனாள்.

அவளுக்கோ ஏதோ பாதுகாப்பற்ற வனத்தில் தனியாக இருப்பதைப் போன்று இருந்தது.

சிரமப்பட்டு விழிகளை மூடி அவனுடைய எண்ணங்களை ஒதுக்கி உறங்கத் தொடங்கினாள் தன்மயா.

அடுத்த நாளும் விடிந்தது. மீண்டும் உதித்தான் ஆதவன். வந்த வேகத்தில் மாலைப் பொழுதில் மறைந்தும் போனான். இப்படியே இரண்டு நாட்கள் கழிந்து விட, தன்மயாவின் மனமோ தனிமையில் தவிக்கத் தொடங்கியது.

கால்களின் வீக்கம் வேறு அவளைப் பாடாய் படுத்த, தன் கால்களை இதமாகப் பிடித்து சேவை செய்யும் ஆதியை எண்ணி அவள் மனம் வாடியது.

யஷ்வின்தோ ஆதியைக் கேட்டு அழத் தொடங்க, அவனை சமாளிக்க முடியாது திணறினாள் தன்மயா.

அதே நேரம் ராமுவோடு அந்த தோப்பு வீட்டினுள் நுழைந்தார் ஒரு வக்கீல்.

“அம்மாடி உங்களைப் பார்க்க ஆதி சாரோட வக்கீல் வந்திருக்காரு.” என ராமுவின் மனைவி கூற, விழிகளில் கேள்வியோடு எழுந்தவள் கீழே சென்றாள்.

“குட் ஈவ்னிங். நீங்கதான் தன்மயாவா.?” எனக் கேட்டார் வக்கீல். அவரை இருக்கையில் அமரப் பணித்தவள்,

“எஸ். என்ன விஷயமா வந்திருக்கீங்க சார். ஏதாவது ப்ராப்ளமா.?” எனக் கேட்டாள்.

“ஒரு ப்ராப்ளமும் இல்லைம்மா. நான் ஆதி சாரோட வக்கீல் கிருஷ்ணா. ஆதி சார் அவரோட அசையும் சொத்து அசையாத சொத்து எல்லாத்தையும் உங்க பேருக்கு மாத்தி எழுதி வெச்சிருக்கார்.” என்றதும் அவளுக்கோ தூக்கி வாரிப் போட்டது.

“இந்தியால இருக்கிற ஆறு பங்களா, அவரோட பீச் ஹவுஸ், யுஎஸ்ல இருக்கிற அவரோட ஹாஸ்பிடல், இங்க இருக்கிற வீடு அன்ட் கம்பனீஸ் எல்லாத்தையுமே உங்க பேருக்கு மாத்திட்டாரு.”

“ஏ….? ஏன் சார்.”

“தெரியலை மேம்.”

“இ…. இப்போ ஆதி எ…. எங்கே.?”

“அவர் நேற்று காலைலயே இங்க இருந்து கிளம்பிட்டாரும்மா. “

“கி… கிம்பிட்டாரா.? எ… எங்க?” பதறியது அவளுடைய மனம்.

“அதெல்லாம் என்கிட்ட சொல்லலை மேம். இது எல்லாத்தையும் உங்ககிட்ட ஒப்படைக்க சொன்னாரு.” என சில பரிசுப் பொதிகளை அவளிடம் கொடுத்தார்.

அவளோ எதுவும் புரியாது திகைத்தவாறு நின்றாள்.

“ஓகே மேம். எல்லாத்தையும் லீகலா முடிச்சுட்டு உங்களை வந்து மீட் பண்றேன்.” என்றவாறு வக்கீல் சென்றுவிட, ஆதி கொடுத்து விட்ட பரிசுப் பொதிகளை வெறித்துப் பார்த்தாள் தன்மயா.

“உ…. உன்னால நான் இல்லாம இருக்க முடியாதுன்னு சொல்லிட்டு இப்போ எங்க போய்ட்ட ஆதி.?” அவளுடைய இதழ்கள் மெல்ல துடிப்போடு முணுமுணுத்தன.

அந்தப் பரிசு பொதிகளில் வித் லவ் யுவர் டெவில் என எழுதியிருப்பதைப் படித்தவள் மளமளவென அந்த பிரிசுப் பொதியை பிரித்துப் பார்த்தாள்.

உள்ளே அவளின் உயரத்தில் புசுபுசுவென ஒரு டெடிபியர் ஒன்று இருப்பதைக் கண்டவள் மொத்தமாக உடைந்து போனாள்.

தனக்கு மிகவும் பிடித்த பொருளை பரிசாக பெற்றுக் கொண்டவளுக்கோ அழுகையே பொங்கியது.

‘எனக்கு பிடிச்சதெல்லாம் பண்ணிட்டு சொத்தையும் எழுதிவெச்சுட்டு எங்கே போய்ட்ட ஆதி.?’ மனதினுள் புலம்பியவள் மற்றைய இரு பரிசுப் பொதிகளையும் திறந்தாள்.

ஒன்றினுள் அவளுடைய அழகான புகைப்படம் ஒன்று சட்டம் இடப்பட்டு இருந்தது. புடவை கட்டி யஷ்விந்தோடு அவள் விளையாடிக் கொண்டிருக்கும் காட்சி புகைப்படமாக்கப்பட்டிருந்தது.

“இ…. இந்த போட்டோ எப்போ எடுத்தது.?” அவளுக்கே தெரியாமல் எடுத்திருப்பான் போலும். கண் கலங்க மார்போடு அணைத்துக்

கொண்டவள் அதனுடன் இருந்த அவளுக்குப் பிடித்த சாக்லேட்டுகளை வலியுடன் பார்த்தாள்.

அவளுடைய மனம் எதை விரும்புகின்றது என அவளுக்கே தெரியாது போனது.

மற்றைய பரிசுப் பொதியில் ஒரு புகைப்பட ஆல்பம் ஒன்று இருந்தது. பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டு அந்த டெடிபியரை அணைத்துத் தூக்கியவள் அந்த புகைப்படத்தையும் புகைப்பட ஆல்பத்தையும் எடுத்துக் கொண்டு தன் அறைக்குள் விரைந்தாள்.

டெடிபியரை தன் படுக்கையில் வைத்து விட்டு அந்த ஆல்பத்தை விரல்கள் நடுங்க பிரித்துப் பார்த்தாள்.

“மை ட்ராமா குயின்.” என முதல் பக்கத்தில் எழுதப்பட்டிருந்தது. ஆதியின் அழகான கையெழுத்தை வருடியவள் புகைப்படங்களை பார்வையிடத் தொடங்கினாள்.

அவள் ஆதியோடு இருந்த வீட்டில் அவனுடைய படுக்கையில் அசந்து தூங்கும் போது எடுத்த புகைப்படம்.

பால்கனியில் நின்று முறைக்கும் போது எடுத்த புகைப்படம்.

யஷ்விந்தோடு இறுக்கி அணைத்தவாறு வாயைப் பிளந்தபடி தூங்கும் புகைப்படம்.

புடவையை தூக்கிக் கட்டியவாறு தோசை சுட்டுக் கொண்டு சமையல் அறையில் அவள் நிற்கும் புகைப்படம்.

சுவற்றோடு சாய்ந்து விழிகளில் கண்ணீர் கசிய எங்கோ வெறித்தபடி இருந்த புகைப்படம் என அந்த ஆல்பம் முழுவதும் தன்மயாவே நிறைந்திருந்தாள்.

அவளுடைய கோபம்

அவளுடைய சிரிப்பு

அவளுடைய அழுகை

அவளுடைய வெறுப்பு

அவளுடைய வெட்கம்

அவளுடைய காதல்

அவளுடைய தாய்மை

என அவளுடைய அனைத்து உணர்வுகளும் ஒவ்வொரு புகைப்படங்களிலும் வெளிப்படும் வண்ணம் அந்த ஆல்பத்தில் இருந்தது.

அனைத்தையும் பார்த்து முடித்தவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

‘இத்தனை புகைப் படங்களையும் எப்போது எப்படி எடுத்தான்.?’

அவளுடைய உணர்வுகள் ஒவ்வொன்றையும் ரசித்து ருசித்து எடுத்திருப்பதை உணர்ந்தவள் “ஏன் ஆதி.? என்ன இதெல்லாம்.? என்னை

அழ வைக்க மட்டும்தானே உனக்குத் தெரியும்.? இப்போ ஏன் இப்படிலாம் பண்ற.? என் மனசை மாத்த ட்ரை பண்றியா ஆதி.? இந்த போட்டோஸ் எல்லாம் எனக்கே தெரியாம எதுக்காக எடுத்த.? இப்படி என்னை குழம்பித் தவிக்க வெச்சுட்டு நீ எங்க போய்ட்ட ஆதி.?" என வாய்விட்டு அவன் நேரில் இருப்பதைப் போல பேசத் தொடங்கினாள்.

அதே நேரம் அந்த அறையினுள் உணவுத் தட்டோடு நுழைந்தார் ராமுவின் மனைவி.

"அம்மாடி கொஞ்சமா சாப்பிடும்மா."

"வ்வேணாம் முத்தம்மா. எனக்கு பசிக்கலை."

"குழந்தைக்காகன்னாலும் கொஞ்சமா சாப்பிடுமா." என்றவர் அவள் மறுக்க மறுக்க உணவை ஊட்டத் தொடங்கினார்.

"ம்ஹூம் வேணாம்."

"ஆதி தம்பி அப்பவே சொன்னாங்க. நீங்க டைமுக்கு ஒழுங்கா சாப்பிட மாட்டீங்கன்னு. சாப்பாடு வேணாம்னு சொன்னா ஊட்டி விட சொன்னாரு." என புன்னகையோடு கூற, அவளுக்கு புரையேறியது.

"எ…. என்னாச்சும்மா.?"

"உங்க.. உங்ககூட ஆதி பேசினாரா முத்தம்மா.?"

“ரெண்டு நாளைக்கு முதல் சொன்னாரும்மா.”

“ஓ….” என்றவளுக்கு விழிகள் ஈரமாகின.

“அ… . அவரும் எனக்கு இப்படித்தான் சாப்பாடு ஊட்டி விடுவாரு முத்தம்மா.” என மனம் கரைய கூறினாள் தன்மயா.

“நீ கொடுத்து வச்சவ கண்ணு. என் புருஷனும் இருக்காரே. சாப்டியான்னே கேட்க மாட்டாரு. ஆனா ஒன்னு எனக்கொன்னுன்னா துடிச்சுப் போய்ருவாரு.” என காதலுடன் கூறிய முத்தம்மாவைக் கண்டு அவளுடைய விழிகள் விரிந்தன.

“ஆ… ஆதியும் அப்படித்தான். எ… எனக்கு சின்ன காயம்னா கூட துடிச்சுப் போயிருவாரு.” என்றவளுக்கு அவன் அவளுக்காக பதறி துடித்த நொடிகள் ஒவ்வொன்றும் அவள் மனக் கண்ணில் தோன்றி மறைந்தன.

“அம்மாடி இதை நீ சொல்லணுமா. அவரு உன் மேல உயிரே வச்சிருக்காரும்மா. என் புருஷன் என்கிட்ட அடிக்கடி சொல்லுவாரு. ஆதி தம்பி உங்களை ரொம்ப நேசிக்கிறார்னு. அப்போ அதை நான் பெருசா எடுக்கலை. இங்கே வந்தப்புறம்தான் நேர்லையே பார்த்தேன். அவருக்கு உங்க மேல எம்புட்டுக் காதல்.” என வியந்தாள் முத்தம்மா.

“எ…. எப்படி சொல்றீங்க முத்தம்மா.?”

“உங்களை இங்கே கொண்டு வந்து விட்ட அன்னைக்கே உங்களை எப்படிலாம் பார்த்துக்கணும்னு ஒரு லிஸ்ட்டே போட்டாரு. அதுலையும் நீங்க காரம் சாப்பிட மாட்டீங்கன்னு காரத்தை சாப்பாட்டுல சேர்க்க வேணாம்னு சொல்லிட்டாரு.” என்க,

அவளுடைய பார்வை உணவுத் தட்டை வெறித்தது.

“போ… . போதும் முத்தம்மா நா… . நான் கொஞ்சம் த… . தனியா இருக்கணும்.” என அழுகுரலில் கூறியவள் எழுந்தாள்.

“முத்தம்மா ஒரு நிமிஷம் உங்ககிட்ட அவரோட ஃபோன் நம்பர் இருக்கா.?”

“யாரோட நம்பர் மா.? என் புருஷனோடதா.?”

“ம்ஹூம் ஆதியோட நம்பர்.” என்றவளை அதிர்ச்சியாக பார்த்தவர் ராமுவிடம் வாங்கி வந்து அவளிடம் கொடுத்து விட்டுச் சென்றார்.

முத்தம்மாவின் ஃபோனை வாங்கி எடுத்தவள் கதவை பூட்டி விட்டு படபடக்கும் மனதோடு அவனுடைய எண்ணை அந்த தொலைபேசியில் அழுத்தினாள்.

வெண்டைப் பிஞ்சு விரல்கள் யாவும் நடுக்கத்தில் உடைந்து விழுந்து விடும் போல இருந்தன.

அலைபேசியை இறுகப் பிடித்தவள் அவனை போ போ என துரத்தி விட்டுவிட்டு இப்போது எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவனை அழைப்பது என தடுமாறிப் போனாள்.

அவள் அழைத்தால் அவன் நிச்சயம் வருவான் என்பது புரிய, அழைப்பெடுக்காது குறுஞ் செய்தி ஒன்றை அவனுக்கு அனுப்பி வைத்தாள்.

“ஆதி. எங்க போய்ட்ட.?” என டைப் செய்து அனுப்பியவள் பொறுமையின்றி வரிசையாக ஒவ்வொரு மெசேஜாக அவனுக்கு அனுப்பத் தொடங்கினாள்.

“யஷ்வி அவனோட அப்பாவைத் தேடுறான். நான் என்ன சொல்லட்டும்.?”

“எனக்கெதுக்கு இந்த சொத்து. ஒரு மண்ணும் எனக்கு தேவலை ஆதி. நீ இப்போ எங்க இருக்க.?”

என தொடர்ச்சியாக டைப் செய்து அனுப்பியவள் பள்ளி மாணவி பரீட்சை பெறுபேற்றிற்காக காத்திருப்பதைப் போல அந்த அலைபேசியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நொடிகள் நிமிடங்களாகின.

நிமிடங்கள் மணித்துளிகளாகின.

மணித்துளிகள் பொழுதாக மாறின.

அவனுடைய பதிலுக்காக காத்திருந்தவளுக்கோ காத்திருந்த நொடிகள் ஒவ்வொன்றும் யுகமாகத் தோன்ற, அழுகையில் கரைந்தாள்.

வானம் இருள் எனும் போர்வையை சூடிக் கொண்ட இரவுதனில் தன் அவஸ்தையை தாங்க முடியாது “என்கிட்ட வந்துரு ஆதி.

நாம ஒன்னா இருந்துகிட்டே சண்டை போடலாம்.” என்ற குறுஞ் செய்தியை அனுப்பி வைத்தாள்.

பல மணித்துளிகள் கடந்தும் அந்த குறுஞ் செய்திக்கும் பதில் வராது போக, அவள் மனமோ பதறத் தொடங்கியது.

அதற்கு மேலும் பொறுமையின்றி அந்த அலைபேசியை எடுத்து அவனுக்கு அழைப்பெடுத்தாள்.

மறு பக்கமோ ஆதியின் தொலைபேசி ஸ்விட்ச் ஆஃப் என்ற தகவல் கிடைக்க விதிர்விதிர்த்துப் போனாள் மங்கை.

மீண்டும் மீண்டும் அவனுக்கு அழைப்பெடுத்து சோர்ந்து போனவள் மடிந்து அமர்ந்தாள்.

அவளுடைய மூளை மனம் என அனைத்தும் ஸ்தம்பித்துப் போனாற் போல இருந்தது.

முதன் முறையாக எங்கே அவனை இழந்து விடுவோமோ என்ற அச்சம் அவளை ஆட்டுவிக்க பதற்றத்தோடு ராமுவை நோக்கி சென்றாள் அவள்.

“என்னம்மா இந்த நேரத்துல வந்துருக்கீங்க. ஏதாவது வேணுமா?” எனக் கேட்டார் ராமு.

“ஆமா…. நான் எங்க வீட்டுக்கு போகணும். என்னை அங்கே கூட்டிப் போங்க.”

“மணி பத்தை தாண்டிருச்சுமா. இப்போ வேணாம்மா. விடிஞ்சதும் போகலாம்.” என்றவரை அழுத்தமாக பார்த்தவள் “இப்போவே போகணும்.” என பிடிவாதமாகக் கூறினாள்.

ஆதியைப் பார்த்து மூன்று நாட்களாகி விட்டது. அவன் எங்கே எப்படி இருக்கிறான் எனத் தெரியாது அவளால் எப்படி நிம்மதியாக வாழ முடியும்.?

அவளுடைய பிடிவாதத்தின் விளைவு அடுத்த அரை மணி நேரத்தில் அனைவரும் ஆதியின் இல்லம் நோக்கிச் சென்றனர்.

பூட்டியிருந்த கதவைப் பார்த்த கணம் அவளுடைய மனமோ சிறிதே ஆடிப் போனது.

இன்னொரு சாவியினால் கதவைத் திறந்து உள்ளே நுழைந்த அவளோ விறுவிறுவென ஆதியின் அறை நோக்கிச் செல்ல, அவளை அழைக்க முயன்ற முத்தம்மாவை தடுத்து நிறுத்தினார் ராமு.

“என்னாச்சுங்க ஏதாவது பிரச்சனையா.? ஆதி சார் எங்க.? சின்னம்மா ஏன் யஷ்வியை கூட மறந்துட்டு போறாங்க.?” என திகைப்பாக கேட்ட தன் மனைவியை கவலை பொங்க பார்த்தான் ராமு.

“ஏதோ பெரிய பிரச்சனை போலடி. ஆதி தம்பி ரெண்டு நாளா எங்க போனார்னே தெரியலை. என்கிட்ட இனி திரும்பி வரமாட்டார்னு சொல்லிட்டு போய்ட்டார்டி.” என்றான் ராமு.

“ஐயோ என்னங்க சொல்றீங்க. சின்னம்மா ஆதி தம்பி இல்லாம இருக்க மாட்டாங்களே.”

“தெரியலைமா. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை. இன்னைக்கு யஷ்வி நம்ம கூடவே தூங்கட்டும். நீ அமைதியா இரு. நான் ஆதி தம்பியை எப்படியாவது கண்டுபிடிக்க முயற்சி பண்றேன்.” என்றவாறு

தன் மனைவியை அழைத்துக் கொண்டு தங்களுக்கென ஒதுக்கப்பட்ட அறைக்குள் நுழைந்தார்.

தன்மயாவோ இரும்புக் குண்டென கனத்த தன் கால்களை சிரமப்பட்டு அசைத்து ஆதியின் அறைக்குள் நுழைந்தவள் அங்கே பெரிதாக மாட்டப்பட்டிருந்த அவனுடைய புகைப்படத்தின் அருகே சென்றாள்.

தன் கரத்தை உயர்த்தி புகைப்படத்தில் இருந்த ஆதியின் தாடியடர்ந்த கன்னங்களை வருடியவள் “எங்கடா போய்ட்ட டெவில்.?” என குரல் உடையக் கேட்டாள்.

‘ஒரு வேளை யு.எஸ்கே போய்ட்டானா.? என்னை விட்டு நிஜமாவே போய்ட்டானா.?” என எண்ணிப் பதறியவள் அவன் பாஸ்போர்ட் வைக்கும் இடத்துக்கு பதற்றத்தோடு சென்றாள்.

அந்த மேஜையின் லாக்கரை திறக்க முயன்றவள் முடியாது போக, அதன் சாவியைத் தேடத் தொடங்கினாள்.

அவன் சாவி வைக்கும் வழமையான இடம் நினைவடுக்கில் தோன்ற, சட்டென அங்கே சென்று அந்த லாக்கரின் சாவியை கண்டுபிடித்து எடுத்தவள் அதனைத் திறந்தாள்.

அதற்குள் அவனுடைய பாஸ்போர்ட், வீசா, ஏடிஎம் கார்ட்ஸ், பர்ஸ் என அத்தனையும் இருக்க, அவளுடைய விழிகளிலோ இன்னும் அதிர்ச்சி கூடியது.

“இது எதையுமே எடுக்காம எங்கே போய்ட்டான்.? தன்னோட தேவைக்கு பணம் எடுத்துப் போனானா இல்லையா.? திரும்பி வருவானா.?

இல்லையா.?" என தனக்குத் தானே கேட்டுக் கொண்டவளின் கரங்களில் தட்டுப்பட்டது அவனுடைய டயரி.

கண்களை மறைத்த கண்ணீரை துடைத்துக் கொண்டவள் அந்த டயரியை திறந்தாள்.

அந்த டயரியுடன் ஆதியின் மனமும் திறந்து கொண்டது.

அவனுடைய எழுத்துக்கள் நிறைந்த பொக்கிஷத்தை கரங்களில் ஏந்திக் கொண்டவள் எந்தவித தயக்கமும் இன்றி தன்னவனின் டயரியைத் திறந்தாள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பில் இருந்தே அந்த டயரி எழுதப்பட்டிருந்தது.

ராணாவின் மரணத்திற்கு பின்னரே இந்த டயரி எழுத ஆரம்பித்திருப்பான் போலும்.

"எனக்குன்னு இந்த உலகத்துல இருந்தது நீ மட்டும்தானேடா. என்ன நடந்துச்சுன்னு கூட தெரியாம இறந்து போய்ட்டியே. உனக்குள்ள இருக்கிற விக்டோரியா ஆல்ட்டர் தற்கொலை பண்ணதுக்கு மொத்த வலியையும் நீ அனுபவிச்சிட்டியே. ரொம்ப கஷ்டமா இருக்குடா அண்ணா. என்கிட்ட திரும்ப வந்துருடா." என எழுதப்பட்டிருந்த வரிகளில் மனம் தடுமாறியவள் ராணாவின் நிலையை எண்ணி வேதனை கொண்டாள்.

ராணாவின் மரணத்திற்குப் பின் தன்னவன் அனுபவித்த வலிகளில் அவளுடைம மனம் நைந்தது.

அவள் மனமோ இந்த நோய் யாருக்கும் வந்து விடக் கூடாது என எண்ணிக் கொண்டது.

கடந்த கால வலிகள் நிறைந்த பக்கங்களை படிக்க படிக்க ஆதி அனுபவித்த வலிகளை சொல்லில் வடிக்க முடியாது என புரிந்து கொண்டவள் தன்னவனுக்காக கண்ணீர் சிந்தினாள்.

அவளுடைய மனமோ பொறுமையின்றி அந்த டயரின் இறுதிப் பக்கங்களை புரட்டின.

இரண்டு நாட்களுக்கு முன்பு அவன் எழுதியிருந்தவை அவளுடைய விழிகளில் தென்பட, மனதை திடப்படுத்திக் கொண்டு அதனை படிக்க ஆரம்பித்தாள் தன்மயா.

“நான் யாருக்காக உன்னை பழிவாங்க வந்தேனோ அவனை விட அதிகமா உன்னை நேசிக்கிறேன்டி.

ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டுன்னு சொல்லுவாங்க. அது உண்மைன்னு என் அனுபவத்துல புரிஞ்சிகிட்டேன் மயா. ஒரு உறவுக்காக ஒரு உறவை வெறுத்தேன்.

ஆனா இப்போதான் தெரியுது நீ என்னோட உறவு இல்ல மயா.

நீ என்னோட உயிர்.

நீ என்னோட சுவாசம்.

நீ என்னோட மூச்சுக் காத்துடி.

என்னோட உடல், பொருள், ஆவி எல்லாமே நீ மட்டும்தான்டி.” என்ற வரிகளைப் படித்தவள் உடைந்து போனாள்.

‘என் மேல உனக்கு இவ்வளவு காதலா ஆதி.?’ அவளுடைய விரல்கள் அவனுடைய எழுத்துக்களை வருடின.

அவனுடைய காதலில் கரைந்தவாறு மேலும் படித்தாள் மங்கை.

“என்னை விட்டு தனியா இருக்கணும்னு ஏன்டி நினைக்கிற.? நான் உன்னை வந்து பார்க்க கூடாதா.? நான் இங்கே இருந்தா உன்னை பார்க்க வந்துட்டேதான் இருப்பேன். உன்னை பார்க்காம என்னால இருக்கவும் முடியாது மயா. என் பேச்சை நான் கேட்டாலும் என்னோட மனசு சுத்தமா கேட்காதுடி. அதனால உன்கிட்ட திரும்பி வர முடியாத இடத்துக்கு போறேன்.” என்ற வரிகளைப் பார்த்ததும் ஆடிப்போனாள் தன்மயா.

உடல் சடுதியில் நடுநடுங்கிப் போனது. மூச்சே நின்று விடும் போல இருக்க, தன் மார்பை அழுத்தி வருடியவள் நொறுங்கிய இதயத்தோடு மேற்கொண்டு படித்தாள்.

“பயப்படாத குயின். நான் சூசைட்லாம் பண்ணிக்க மாட்டேன். ராணா தற்கொலை பண்ணியதால நான் அனுபவிச்ச வலி என் மனசுல இன்னும் அப்படியே வலிச்சுகிட்டுதான் இருக்கு. அதே வலியை நான் தற்கொலை பண்ணிகிட்டு உனக்கு கொடுக்க விரும்பலை.” இதைப் படித்த பின்னரே நிம்மதியாக மூச்சு விட்டாள் தன்மயா.

எப்படியாவது ஆதியை கண்டு பிடித்து அவனை உடனே காண வேண்டும் என அவள் உள்ளம் பரபரத்தது.

“நீ என்னை இன்னும் காதலிச்சுகிட்டுதான் இருக்கேன்னு எனக்கு தெரியும் மயா. ஆனா என்னையோ என் காதலையோ உன்னால ஏத்துக்க முடியலை. ஹூம் பரவால்ல மயா. என்னோட காதல் உனக்கு

புரியுமான்னு தெரியலை. புரியற அளவுக்கு நான் நம்ம காதலுக்காக இதுவரைக்கும் எதுவுமே செஞ்சதும் இல்லை."

'அச்சோ புரியுது ஆதி. எனக்கு உன்னோட காதல் ரொம்ப நல்லாவே புரியுது. நீ உன்னோட காதலை எனக்கு எப்போவோ உணர்த்திட்ட ஆதி.' என தன் மனதிற்குள் அவனுக்கு பதில் அளித்தாள் அவள்.

"உன்கூட இருந்த நாட்களை வீணாக்கிட்டமோன்னு வலிக்குதுடி. ஒவ்வொரு நாளையும் ரசிச்சு வாழ்ந்திருக்கலாமோன்னு இப்போ ஏக்கமா இருக்கு. என்கிட்ட மட்டும் டைம் மிஷின் இருந்திருந்தா உன்னோட அத்தனை வலிகளையும் அழிச்சுட்டு முதல்ல இருந்து உன்னை துரத்தி துரத்தி காதலிச்சு கல்யாணம் பண்ணி பத்துப் பிள்ளை கொடுத்திருப்பேன்டி." என்றவனின் வரிகளில் அவளுடைய முகம் சிவந்தது. கண்களிலோ கண்ணீர் அணையை உடைத்து வெளியே கொட்டியது.

"நான் உன்கிட்ட நடிச்சு ஏமாத்திட்டேன்னு சொன்னல்ல. உண்மையை சொல்லணும்னா நான் அப்போதான்டி உண்மையா இருந்தேன்.

உன் மேல இருந்த கோபத்தை ஆதியா உன்கிட்ட காட்டினேன். உன் மேல இருந்த காதலையும் அன்பையும் என்னால அடக்க முடியலை மயா.

அதனாலதான் கவின்னு ஒரு ஆல்ட்டரை கிரியேட் பண்ணினேன். கவினா இருந்து என் மனசுல இருந்த காதல், உன் மேல இருந்த ஆசை அத்தனையையும் உனக்கு கொடுத்தேன். மயா பேபின்னு நான் கூப்பிடுற ஒவ்வொரு தடவையும் உன் மேல வெச்ச காதலுக்கு சாட்சிதான்டி.

அடுத்தது சித்து. எனக்கு அம்மாங்கிற உறவு நல்லதா அமையலை. இது உனக்கே நல்லா தெரியும். நான் சின்ன வயசுல இருக்கும் போது எனக்குன்னு ஆசைகள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள்னு நிறைய இருந்திச்சு. இது எதுவுமே எனக்கு கிடைக்கலை. அந்த தாய்ப் பாசத்தை

உன்கிட்ட அனுபவிக்கணும்னு ஆசைப் பட்டேன். தாய்க்கு பின் தாரம்னு சொல்ல்வாங்க. உன்னை நான் என்னோட அம்மாவா நினைச்சேன். அதனாலதான் சித்துவா உன்கிட்ட நெருங்கினேன்.

ஆதியா உன் மேல இருந்த கோபத்தை தீர்த்துகிட்டேன். கவினா உன் மேல இருந்த காதலை உணர்த்தினேன். சித்துவா உன்கிட்ட தாய்மையை அனுபவிச்சேன். இதுல எதுடி நடிப்பு.?"

"நம்ம மனசுல இருக்க அழுத்தங்கள் டி.ஐ.டி நோய்ல பல ஆல்ட்டர்களா வெளியே வரும். என்ன எனக்கு அந்த நோய் இல்லாமலேயே வெளியே வந்திருச்சு."

"ஆரம்பத்துல உன்னை காதலிக்கிறேன்னு எனக்கே புரியலைடி. கவினா உன்கிட்ட நெருங்கும் போது என் மனசு முழுக்க நெகிழ்ந்து போயிருக்கும். அதுக்கான காரணம் அப்போ புரியலை. இப்போதான் புரியுது.

உன்னை பழிவாங்கணும்னு தான் அத்து மீறி தொட்டேன். உன் மேல இருந்த விருப்பத்துக்கு காரணம் மோகம்னு நினைச்சேன். பட் அது மோகம் இல்லைடி. உன்னைத் தொட்ட கையால வேற எந்தப் பொண்ணையும் தொடப் பிடிக்கலை. யாரையும் பார்க்க பிடிக்கலை. உன் பின்னாடியே என் மனசு அலைய ஆரம்பிச்சுது. நீ என்னோட மோகத்தை அழிச்சிட்ட மயா. இது மோகம் இல்ல காதல்னு புரிய வெச்சிட்ட. உன்மேல இருந்த ஆசைக்கான காரணம் காதல்தான்னு ரொம்ப லேட்டா புரிஞ்சிக்கிட்டேன்." என்ற வரிகளின் கீழே கண்ணீர்த் துளிகள் விழுந்து எழுத்துக்கள் கரைந்து மங்கலாக இருப்பதைக் கண்டவள் துடித்துப் போனாள்.

அவளுடைய விரல்கள் அந்த உவர் நீர்த் துளிகளை வருடின. கரங்கள் நடுங்க அந்த டயரியை தூக்கியவள் அவனுடைய பொக்கிஷ வரிகளின் மீது தன் தேன் இதழ்களை பொருத்தி எடுத்தாள்.

மீண்டும் அவனுடைய வரிகளில் தன்னை தொலைக்கத் தொடங்கினாள் அவள்.

“நீ நேற்று பால்கனில இருந்து குதிச்சு சூசைட்கு ட்ரை பண்ணதை பார்த்ததும் நான் அப்போவே செத்துட்டேன்டி. என்னோட உலகமே அந்த செக்கன்ல இருண்டு போயிருச்சு. அந்த நிமிஷம் காதல்னா என்னன்னு புரிஞ்சுகிட்டேன். என்னோட உலகமே நீதான்னும் புரிஞ்சுகிட்டேன்.

என்னோட உலகத்தை கொன்னுட்டு என்னால எப்படி வாழ முடியும்? அதனாலதான் உன்னை விட்டு போறேன் மயா.”

“தெரிஞ்சோ தெரியாமலோ உன்னோட பேரண்ட்ஸ் சாகுறதுக்கு நான் காரணமாயிட்டேன். அதுக்கான தண்டனை நீ தரலைன்னாலும் நானே எனக்கான தண்டனையை கொடுத்துக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன்.”

‘நோஓஓஓ ஆதி வ்வேணாம். ப்ளீஸ். எ.... எதுவும் பண்ணிராதடா ப்ளீஸ். அது ஆக்ஸிடன்ட். அதுல உன்னோட தப்பு எதுவுமே இல்லைன்னு நான் புரிஞ்சுகிட்டேன் ஆதி. என்னை விட்டுப் போயிராதடா ப்ளீஸ்டா.’ என மனதோடு கதறினாள் அவள்.

“சட்டம் அதோட கடமையை செய்யும் மயா பேபி.”

“ஐ லவ் யு....”

“ஐ லவ் யு சோ மச்....”

“உன்னையும் நம்ம குழந்தைங்களையும் ரொம்ப ரொம்ப மிஸ் பண்ணுவேன். போறேன் பேபி. இந்த ஜென்மத்துல நம்ம காதலோட அத்தியாயம் முடிஞ்சிருக்கலாம். இன்னொரு ஜென்மம் இருந்தா உனக்கு நான் பிள்ளையா வந்து பிறக்கணும்டி. உன்னை மாதிரி பாசமான ஒரு அம்மா எனக்கு கிடைக்கணும். எனக்கு எல்லாமே உன் மூலமா கிடைச்சுது. கிடைச்ச வைரத்தை நானே வெட்டி புதைச்சிட்டேன். லவ் யூ ட்ராமா குயின். நான் போறேன்டி பை மயா பேபி.” என முடிந்திருந்தது அந்த டயரி.

அதற்குக் கீழே அவன் எழுதியிருந்த பாடல் வரிகளை படித்தவள் ஏங்கி ஏங்கி அழத் தொடங்கினாள்.

“நீ இன்றி நானும் இல்லை….!!

என் காதல் பொய்யும் இல்லை….!!

உனைக் காணும் நேரம் வருமா…??

இரு கண்கள் மோட்சம் பெறுமா….??

சட்டென அந்த டயரியை மூடியவள் அதனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு கதறி அழத் தொடங்கினாள்.

“ஆதிம்மாஆஆஆ ஐ…. ஐ அம் சாரி. சாரி ஆதி…. நா… நான்தான் உன்னை புரிஞ்சிக்கலை. சாரி ஆதிம்மா. ரொம்ப ரொம்ப ரொம்ப சாரி ஆதி. நான் இனி உன்னைப் போக சொல்ல மாட்டேன் ஆதி. சத்தியமா சொல்ல மாட்டேன். ஐ ப்ராமிஸ் யு ஆதிம்மா. ஐ ப்ராமிஸ் யு. ப்ளீஸ் திரும்ப வந்திரு ஆதி. எ…. எனக்கு உன்னை இப்போவே பார்க்கணும் போ…. போல இருக்குடா. உன்னோட கா…. காதலை நீ சொல்லிட்ட. எ…. என்னோட காதலை பத்தி நீ தெ…. தெரிஞ்சுக்க வேணாமா ஆதி.? வந்துரு ஆதி.

உன்னோட மயா பேபிகிட்ட வந்துரு ப்ளீஸ்." என ஏங்கி ஏங்கி அழுது கரைந்தாள் அவள்.

அவள் உடலின் அத்தனை செல்களும் அவனுக்காக ஏங்கித் தவித்தன.

"ஒரு தடவை என் கண் முன்னால வா ஆதிம்மா. நான் உன்னை எவ்வளவு காதலிக்குறேன்னு உனக்கு காட்டுறேன். நான் உன்னைப் பார்க்கணும் ஆதி. உன்னை இப்போவே பார்க்கணும். இறுக்கமா அணைச்சுக்கணும். எங்கடா இருக்க டெவில் ஐயோஓஓ" என்றவள் மடிந்து அமர்ந்து அந்த டயரியில் தன் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

"இல்ல.... இல்ல நான் அழக் கூடாது. நான் சோர்ந்து துவண்டு போயிரக் கூடாது. என்னோட ஆதியை நான்தான் கண்டு பிடிக்கணும். அவனை போகச் சொன்ன நான்தான் அவனைத் தேடிப் போகணும். நீ எந்த மூலைல இருந்தாலும் நான் உன்னைத் தேடி வருவேன் ஆதி. நான் உனக்காக இதுவரைக்கும் எதுவுமே பண்ணலை. இனி நான் பண்ற ஒவ்வொன்னும் உனக்காக மட்டுமாதான் இருக்கும் ஆதிம்மா." என்றவள் அவனுடைய பர்ஸ்ஸை எடுத்துக் கொண்டு அந்த நள்ளிரவு நேரத்தில் அவனைத் தேடி புறப்பட ஆயத்தமாகினாள்.

கதவருகே சென்றவள் அவனை எங்கே தேடிச் செல்வது என அறியாது ஸ்தம்பித்தாள்.

நடைபிணம் போல உணர்வற்று நின்றவளை அவனுடைய வரிகள் உயிர்ப்பித்தன.

"எனக்கான தண்டனையை நானே கொடுத்துக்கலாம்னு முடிவு பண்ணிட்டேன். சட்டம் தன் கடமையைச் செய்யும் மயா பேபி." என்ற அவனுடைய வரிகள் அவளுக்கு நினைவு வர, அவளுடைய உடலோ வியர்த்துப் போனது.

“நோஓஓ.... நோ... அப்படி மட்டும் நடந்துருக்கவே கூடாது.” என தனக்குள் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டாள் அவள்.

அவனை தேடிச் செல்ல முயன்றவள் எங்கே சென்று எப்படித் தேடுவதென தெரியாது தவித்துப் போனாள்.

அவனுடைய வரிகள் வேறு அவளை கலங்கச் செய்தன.

மணியோ விடியற்காலை மூன்றைக் காட்ட, சோர்ந்து துவண்டு போனாள் மங்கை.

இந்த நேரத்தில் அவனைத் தேடிக் கண்டு பிடிப்பது மிக கடினம் என்பது புரிய, வாயிற் கதவின் அருகிலேயே மடிந்து அமர்ந்தவள் விடிய விடிய தன் தூக்கத்தை தொலைத்து விட்டு விழிகளில் உவர் நீர்த் துளிகளை சுமந்து கொண்டு அப்படியே அமர்ந்திருந்தாள்.

சில மணி நேரங்களிலேயே விடியல் பூமியைத் தழுவி விட, உடனே தன் ஆடையை மாற்றிவிட்டு வந்தவள் ராமுவைத் தேடிச் சென்றாள்.

ராமுவை அழைத்துக் கொண்டு எப்படியாவது தன்னவனை மீண்டும் அழைத்து வர வேண்டுமென்ற அவா அவளுடைய உள்ளத்தில் நிறைந்து போனது.

முத்தம்மாவிடம் யஷ்விந்தை ஒப்படைத்து விட்டு ராமுவோடு தன்னவனைத் தேடிப் புறப்பட்டாள் அவள்.

****

ஆதித்யனோ தன்னவளை விட்டு விலகி வந்து மூன்று நாட்களாகி விட்டதை உணர்ந்தவன் வேதனையோடு தன் விழிகளை மூடிக் கொண்டான்.

தன் வாழ்க்கையில் இப்படி எல்லாம் நடக்குமென அவன் சிந்தித்துக் கூட பார்க்கவில்லை. தன்மயாவை பழி வாங்க வந்து அவளுடைய காதலை அல்லவா வாங்கி வந்து விட்டான்.

அவளுடைய முகம் சற்று சுளித்தாலும் அவனுடைய இதயம் கத்தியால் கீறல் பட்டதைப் போலல்லவா வலிக்கின்றது.

அவளுடைய நிம்மதிக்காகவும் அவளுடைய சந்தோசத்துக்காகவும் அவளை விட்டு பிரிந்து இங்கே வந்து விட்டான்.

ஆனால் அவனுடைய நிம்மதியும் மகிழ்ச்சியும் அவளின்றி அவனருகே கூட நெருங்காது போனது பரிதாபமே.

அவளைக் காணாத இந்த மூன்று நாட்களும் அவனுக்கு மூன்று யுகங்களாக நீடிக்க, சுவாசக் காற்று இல்லாத புது கிரகத்தில் அவனைக் கொண்டு வந்து தனியே விட்டாற் போல இருந்தது.

மூச்சுக்கு முன்னூறு தடவை அவளுடைய பெயரை மனதினுள் சொல்லிக் கொண்டவன் விரக்தியான புன்னகையை சிந்தினான்.

“எ.. என்னால முடியலைடி. என்னால எதையும் தாங்க முடியும் ஆனா உன்னையும் குழந்தையும் பார்க்காம என்னால இருக்கவே முடியலைடி. ச்சை வாழவும் முடியலை. சாகவும் முடியலை.

நரகம் மாதிரி இருக்கு மயா. உனக்காக உன்னோட நிம்மதிக்காகதான் உன்னை விட்டு விலகி வந்து இங்கே இருக்கேன்.

இதை விட பெரிய தண்டனை எதுவுமே இருக்காது." என்றவன் பெருமூச்சோடு அந்த இடத்தை சுற்றித் தன் பார்வையை அலைய விட்டான்.

இடைவெளிகளோ ஜன்னல்களோ அற்ற அந்த இருள் சூழ்ந்த அறை அவனுடைய மனதை இன்னும் இன்னும் நோக வைத்தது.

எந்த வெளிச்சமும் இல்லாத அந்த இருட்டு அறையில் தரையில் அமர்ந்திருந்தவன் அமைதியாக சுவற்றோடு சாய்ந்து கொண்டான்.

ஏசி அறையில் சொகுசாக இருந்து வளர்ந்தவனுக்கு அந்த அடைக்கப்பட்ட அறை மூச்சு முட்ட வைத்தது.

விரல் நுனியில் அழுக்குப் பட்டாலே ஆயிரம் தடவை அதனை சுத்தம் செய்பவன் தற்போது தூசு படிந்த தரையில் அமர்ந்திருந்தான்.

ஆம் அவன் இருப்பது சிறைச்சாலையில்தான்.

அவனை மீறி நடந்த விபத்தை தான்தான் செய்ததாக ஒப்புக் கொண்டு காவற் துறையில் கைதாகியிருந்தான் ஆதி.

அதுவும் குடித்து விட்டு வண்டி ஓட்டியதாகக் கூறியிருந்தான் அவன்.

விபத்தை பற்றி விசாரித்த காவற் துறையினரும் தவறு ஆதியின் மேல் உள்ளது என கருத்திற் கொண்டதோடு அவனுடைய லைசன்ஸை பறிமுதல் செய்து மோட்டார் வாகன வழக்கு சட்டத்தின் படி அவனால் உயிரிழப்பு நேர்ந்ததனால் அவனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தன்மயாவின் காயங்களுக்கு தன்னை மருந்தாக மாற்ற நினைத்தவன் தன் அந்தஸ்து குணாதிசயம் போன்றவற்றை ஒதுக்கி வைத்து விட்டு கைதிகளோடு கைதிகளாக வாழப் பழகினான்.

அவனுடைய சிகை அலங்காரம் தொடக்கம் அவனுடைய நடை உடை பாவனை என அனைத்தும் இந்த மூன்று நாட்களில் மாறிப் போயிருந்தது.

இவை அனைத்தையும் விட தன்மயாவை காணாத ஏக்கம் அவனை மெழுகாய் உருகச் செய்ய, மூன்று நாட்களிலேயே உருவமே மாறிப் போனவனாக காட்சியளித்தான் ஆதி.

அவனுடைய சிந்தனைகளை இடை நிறுத்தும் வகையில் "க்ரீச்...." என்ற ஓசையோடு அந்த அறைக் கதவின் கீழ்ப் பகுதியில் இருந்து உணவுத்தட்டு அவனுடைய கால் அருகே வந்தது.

உணர்வுகளற்ற பார்வை பார்த்தவன் நகர்ந்து வந்த சோற்றுத் தட்டை எடுத்து பிசைந்து உண்ணத் தொடங்கினான்.

மீண்டும் அவனுடைய மனம் தன்மயாவை நோக்கி ஓடத் தொடங்கியது.

முகம் சுளிக்காது கொடுத்த உணவை உண்டு முடித்து விட்டு அவன் அருகே இருந்த டம்ளரில் தண்ணீர் எடுத்து கை கழுவி விட்டு மீதியை அருந்தினான்.

அதே நேரம் அங்கே வந்த ஜெயிலர் "ஏய் உன்னைப் பார்க்க ஒருத்தர் வந்திருக்காரு." என்றார்.

“என்னைப் பார்க்கவா.?” என அதிர்ந்து புருவத்தை உயர்த்திக் கேட்டான் ஆதி.

“யோவ் உன் பேருதானே ஆதி. அப்போ உன்னைப் பார்க்கத்தான் ஆள் வந்திருக்கு. காலங்காத்தாலையே என் உயிரை வாங்காமா போய் பாருயா.”

என்றவரின் எரிச்சல் பேச்சில் அவரை ஆழ்ந்து நோக்கியவன் “உனக்கு டைம் சரியில்ல.” என்றவாறு எழுந்தான்.

“என்ன சொன்ன.?” எனக் கேட்டார் ஜெய்லர்.

“நத்திங் மூவ்.” என அலட்சியமாக கூறியவன் முன்னே நடந்தான்.

“ஏய் வளர்ந்து கெட்டவனே உனக்கு அஞ்சு மினிட்ஸ்தான் டைம். அதுக்குள்ள பேசி முடிச்சுட்டு வந்துரணும்.” என்க, ஆதியின் உடலோ ஏகத்துக்கும் இறுகிப் போனது.

யாருக்கும் கட்டுப்பட்டு பழக்கம் அற்றவனுக்கோ தன்னை ஏக வசனத்தில் அழைத்தவனை தூக்கி சுவற்றோடு மோத வேண்டுமென்ற வெறியே சடுதியில் தோன்றியது.

தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு நடக்கத் தொடங்கியவன், “நான் ஜெயிலுக்கு வந்தது யாருக்குமே தெரியாதே. என்னைப் பார்க்க யார் வந்திருப்பாங்க.?” என தனக்குள் முணுமுணுத்தவாறு பார்வையிடும் இடத்திற்கு வந்தவன் அங்கே விழிகள் கலங்க நின்ற தன் மனைவியைக் கண்டு அதிர்ந்து போனான்.

அவளோ விழிகளில் நீர் தேங்க, சிவந்த விழிகளோடும் சோர்ந்து வாடிய வதனத்துடனும் நின்றாள்.

அவன் எதற்காக இந்த மூன்று நாட்களும் ஏங்கித் தவித்தானோ அது அவன் கண் முன்னே நிற்க, உருகித்தான் போனான் அந்த ஸ்வீட் டெவில்.

அவளும் அவனைக் காணாது ஏங்கிப் போய் அல்லவா இருந்தாள். அவளுடைய பார்வையும் அவனை ஆசையாக காதலாக வருடத் தொடங்கியது.

முதல் இரண்டு நிமிடங்களும் அழுகையிலும் அமைதியிலும் இருவரின் பார்வை வருடல்களிலும் கடந்து சென்றன.

முதலில் சுயம் அடைந்தவன் "ஹேய் குயின் நீ எப்படி இங்க.?" எனக் கேட்டவனின் விழிகள் அவசர அவசரமாக அவளை உள்ளங்கால் முதல் உச்சி வரை மீண்டும் வருடத் தொடங்கின.

மூன்று நாட்களாக தன்னவளைக் காணாது வேதனையில் தவித்தவனுக்கு அவளுடைய திடீர் வருகை ஜாக்பாட் அடித்ததைப் போல இருந்தது.

ஆசை தீர அவளை தன் விழிகளில் நிரப்பிக் கொண்டான் அவன்.

எத்தனையோ இடர்களுக்கு மத்தியில் வக்கீலை வைத்து அவனைப் பார்த்து பேசுவதற்காக வந்தவள் அவனுடைய தோற்றம் கண்டு மொத்தமாக உடைந்து போனாள்.

எத்தனை கம்பீரமாக இருப்பவன் இப்படி சோர்ந்து விழிகள் தாண்டு போயிருப்பதைக் கண்டு அவள் ஆவி துடித்தது.

அவளை தன் விழிகளால் அவசர அவசரமாக பார்த்து களித்தவன் அவளைத் தாண்டி யஷ்வியையையம் தேடினான்.

“நீ எப்படி இருக்க.? நான் இங்கே இருக்கேன்னு எப்படி மயா தெரியும்.?” யஷ்வி வரலையா.?” என தொடர் கேள்விகளைக் கேட்டவனை பார்த்தவள் அவனருகே நெருங்கி பேச்சற்று இறுகி நின்றாள்.

இருவருக்கும் இடையில் சுவராக கண்ணாடி இருக்க, அவர்களுடைய உரையாடலுக்காக சிறு பகுதி ஜன்னல் போல திறந்திருந்தது.

விழிகள் உடைப்பெடுத்தன.

“அழாத மயா பேபி.” என்றவனை பார்த்தவள் “ஏன் இ.... இப்படி பண்ணீங்க.? இ... இதுல உங்க தப்பு இல்லைல. எ... எதுக்காக இந்த தண்டனையை அனுபவிக்குறீங்க.? உண்மையை சொல்.... சொல்லுங்க ஆதி.

எல்லா உண்மையும் சொல்லிட்டு வந்துருங்க ஆதி.” என அழுது கரைந்தாள் அவள்.

“உன்கூட இருந்து உன்னை கஷ்டப்படுத்தினதுக்கு தண்டனையா இந்த சிறை வாழ்க்கை இருக்கட்டும்.

என்னை என்னாலேயே மன்னிக்க முடியலைடி. நான் இல்லாமதான் நீ நிம்மதியா இருப்பேன்னு தெ... தெரியும். நீ இனியாவது சந்தோஷமா இரு பேபி. உன்னை நான் கஷ்டப்படுத்த விரும்பலை.”

“இ... இல்ல இல்ல ஆதி. நீ இல்.... இல்லாம என்னால முடியலை. யஷ்வி உங்களை தேடுறான் ப்ளீஸ் வந்துருங்க.” என்றவளை கண் கலங்க பார்த்தவன் ‘யஷ்வி மட்டும்தான் என்னைத் தேடுறானா.? நீ என்னைத் தேடலையாடி.?’ என மனதினுள் எண்ணி துடித்துப் போனான்.

“ ‘நீ பண்ண தப்புக்கு உனக்கு யார் தண்டனை தருவாங்கன்னு’ கேட்டேல்ல. சட்டம் எனக்கான தண்டனையை கொடுத்திருச்சு மயா. நானும் அதை ஏத்துக்கிட்டேன். இந்த சிறை வாசம் முடியட்டும் குயின். நீ நல்லா இருக்கணும். நீ எப்பவும் ஹேப்பியா இருக்கணும். நான் அதுக்காக என்ன வேணாலும் செய்வேன் குயின்.” என்றவன் அவளுடைய மேடிட்ட வயிற்றை காதலோடு பார்த்தான்.

“ஆ... ஆதி ப்ளீஸ். நான் வக்கீல் கூட பேசுறேன். உங்களை பெயில்ல வெளியே கொண்டு வர்றேன்.” என கலங்கிய குரலில் கூறியவளை அமைதியாக பார்த்தவன் “அதுக்கு நான் ஒத்துக்கணும்ல. என்னோட மன அமைதிக்கும் இந்த தண்டனை கண்டிப்பா வேணும்டி. இந்த நாலு மாசமும் என்கிட்ட இருந்து உனக்கு விடுதலை மயா என்ஜாய் பண்ணு. ரிலீஸ் ஆனதுக்கப்புறம் நான் யு.எஸ் போயிருவேன் பேபி.” என்றவனை வெறித்துப் பார்த்தாள் அவள்.

அவள் மறுத்துக் கூற முயல, அங்கே வந்த ஜெயிலரோ “ஏய் டைம் முடிஞ்சு உள்ளே போ..” என ஆதியின் முதுகில் தட்ட ஒருகணம் அவன் உடல் விறைத்து இறுகிப் போனது.

தன்மயாவோ கட்டுப்படுத்த முடியாது அழுது கரைந்தவள் அவனை மன்றாடும் பார்வை பார்த்தாள்.

“போ மயா பேபி. இந்த தண்டனையும் இல்லைன்னா என்னோட மனசாட்சியே என்னைக் கொன்னுரும். போயிரு ப்ளீஸ்.” என்ற ஆதியின் பிடிவாதம் கலந்த உறுதியான குரலில் அவளோ திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

அவனுடைய வார்த்தைகள் அவளை பெரிதும் பாதித்தன.

ஆதியோ பார்வையிடும் நேரம் முடிந்த பின்பும் அசையாது அந்த இடத்திலேயே நின்றவன் செல்லும் தன்னவளை இமைக்காது பார்த்துக் கொண்டே இருந்தான்.

“ஏய் டைம் முடிச்சு உள்ளே போ.”

அவள் வெளியேறும் வரை அவளைப் பார்த்தவாறு நின்றவன் அவள் சென்றதும் உடைந்து போனான்.

மீண்டும் கண் கலங்கிப் போனான் அவன்.

“ஏய் உன்னைத்தான் சொல்றேன் உள்ளே போ.”

உடைந்த மனதோடு மீண்டும் உள்ளே நுழைந்தவனுக்கு அவன் மனதில் இருந்த குற்ற உணர்ச்சி அழிந்து போனது.

விபத்து நடந்தது அவனுடைய பிழை இல்லாவிடினும் தன்மயாவை மனதால் வதைத்து வலிக்கச் செய்தது மாபெரும் குற்றம் அல்லவா.?

எந்த குற்றங்களுக்கும் தண்டனை எனும் முடிவு இருப்பது அவசியம் தானே.?

குற்ற உணர்வோடு வாழ்வதற்கு பதிலாக அதற்கான தண்டனையை ஏற்றுக் கொண்டு குற்ற உணர்ச்சி அற்ற புது மனிதனாக வாழ்வது எவ்வளவோ மேல் அல்லவா.?

அந்தப் பாதையைத்தான் ஆதியும் தேர்வு செய்திருந்தான்.

அவனுடைய குற்றங்களைக் களைந்து தூய காதல் மனதோடு வெளியே வருவான்.

அவன் விடுதலையாகி வெளியே வரும் போது தன்மயாவின் நிலை....?

தன்மயாவைத் தேடிச் செல்வானா.?

அல்லது தன் வைத்தியத் தொழிலில் கால் பதிக்க மீண்டும் யு.எஸ் செல்வானா.?

சிறையை விட்டு வெளியே நடந்து வந்தவளின் உணர்வுகள் அவளை விட்டு தொலைந்து போயின.

"போ மயா பேபி. இங்கே இருந்து போயிரு. இந்த தண்டனையும் இல்லைன்னா என்னோட மனசாட்சியே என்னைக் கொன்னுரும்." என்ற ஆதியின் வார்த்தைகள் அவளை வதைக்கத் தொடங்கின.

'நீ இல்லாத தனிமை என்னை வதைக்குதே ஆதி. உன்னைப் போகச் சொன்னது என்னோட தப்புதான். திருப்பி என்கூட வந்திருக்கலாம்ல. நீ இல்லாம என்னால எப்படி ஆதி இருக்க முடியும்.? இந்த மூணு நாள்லயே நான் உணர்ந்துட்டேன். நீ இல்லைன்னா நானும் இல்லை.' என வலியோடு எண்ணிக் கொண்டாள்.

இல்லம் வந்து சேர்ந்ததும் நேரே ஆதியின் அறைக்குள் வந்தவள் தாங்க முடியாத துயரில் தலையணையில் முகம் புதைத்தாள்.

எல்லையற்ற நீர்வீழ்ச்சியாக கண்ணீர் கன்னத்தை மேவி தலையணையில் கொட்டியது.

அவனின்றி பஞ்சு மெத்தையும் முட்களாக குத்தி அவளை வதைத்து.

அவனுடைய மனதின் நிம்மதிக்காக அவனை விட்டு வந்தவள் அவன் இல்லாத தனிமையில் மிகவும் வாடித்தான் போனாள்.

ஆதி என்றவனின் கைச் சிறைக்குள் இருந்து பழகியவளுக்கு திடீரென நிகழ்ந்த அவனுடைய பிரிவு அவளை உயிரோடு கொன்று புதைத்தது.

அடுத்தடுத்த நாட்களில் அவனை சந்திக்கச் சென்றவளை பார்க்க மறுத்தான் ஆதித்யன். எப்படியாவது அவனை பார்த்து விட வேண்டும் என எண்ணி சென்றவள் வீடு திரும்பும் போது ஏமாற்றத்தோடு வந்து சேர்ந்தாள்.

இறுதியில் மனதால் நொறுங்கிப் போனாள் தன்மயா.

அவனை ஜாமீனில் எடுக்க முயன்ற போதும் அதனை மறுத்தவன் வெளியே வராது போக, அவள் காதல் கொண்ட மனமோ இறுகிப் போனது.

“தொடர்ந்து ஒரு மாத காலமாக அவனை பார்க்கச் சென்று தோல்வியைத் தழுவியவள் தன் இயல்பை தொலைத்தாள். தன்னையும் தொலைத்தாள்.

அழுகையில் சில நாட்கள்,

சீற்றத்தில் சில நாட்கள்,

காதலில் சில நாட்கள்,

ஏக்கத்தில் சில நாட்கள்,

தவிப்பில் சில நாட்கள்,

பிரிவுத் துடிப்பில் சில நாட்கள் என நான்கு மாத காலங்களும் மங்கையவளுக்கு நரகமாக கழிந்து போயின.

இந்த நாள் எப்போது வருமென நாட்காட்டியை பார்த்து காலத்தை கழித்தவளுக்கு அவள் எதிர்பார்த்த பொன் நாளும் வந்தது.

இத்தனை நாட்களும் உயிரற்ற சடப் பொருள் போல நடமாடித் திரிந்தவள் மீண்டும் உயிர் பெற்ற அகலிகை சிலை போல புது உற்சாகம் பொங்க ஆதித்யனை வரவேற்க தயாராகினாள்.

இந்த நாலு மாதங்களும் அவள் அவனின்றி அனுபவித்த துயரை வார்த்தைகளில் வர்ணிப்பது என்பது எளிதல்ல.

அவன் தன்னை பார்க்க மறுத்ததில் அளவற்ற கோபம் அவன் மீது இருந்த போதும் தன் சீற்றத்தை எல்லாம் ஒதுக்கி வைத்தவள் கன்றை நினையும் பசுவைப் போல அவனைக் காணும் நொடிக்காக உள்ளம் கசிந்தாள்.

இத்தனை மாதத்தில் கண்ணாடி ஒன்று இருப்பதைக் கூட மறந்து போனவள், இன்றோ அவனுக்குப் பிடித்த சிவப்பு நிறத்தில் புடவை உடுத்தி கண்ணாடியில் தன் வதனத்தை பார்த்தாள்.

இன்னும் சில நாட்களில் குழந்தை பிறந்து விடும் என அறிந்தவளுக்கு விழிகள் நீரால் நிறைந்தன.

தன் வயிற்றை வருடி “அப்பாவை கூட்டி வந்துரலாம் பட்டும்மா.” என்றவள் தன் செல்ஃபோனை எடுத்துக் கொண்டு ஆதியை பார்க்கச் செல்வதற்காக தயாராகினாள்.

அவளை நெருங்கிய முத்தம்மாவோ இத்தனை மாதங்கள் கழித்து அவளுடைய வதனத்தில் தெரிந்த மகிழ்ச்சியைக் கண்டு மனம் நெகிழ்ந்தார்.

“முத்தம்மா நான் ஆதியை அழைச்சுட்டு வந்துர்றேன்.”

“கண்ணு இந்த மாதிரி நேரத்துல நீ வெளியே போறது நல்லது இல்லைடா. என் புருஷன்கிட்ட சொல்லி ஆதி தம்பியை அழைச்சிட்டு வரச் சொல்றேன்.”

“அச்சோ இல்ல முத்தம்மா. நா... நான் அவரை இப்.... இப்போவே பார்க்கணும்.”

“அம்மாடி இப்போதான் மணி அஞ்சு. இன்னும் நேரம் இருக்குடா. விடிஞ்சதுக்கப்புறம் போகலாம்.”

“ப்ச் அட போங்க முத்தம்மா. நான் விடியற்காலை மூணு மணில இருந்தே புடவை கட்டி ரெடியாகிட்டேன். இதுக்கு மேல என்னால வெயிட் பண்ண முடியாது. நான் போறேன்.”

“சரி.... சரி.... நானும் வர்றேன் கண்ணு. நிறை மாசமா இருக்க. உன்னை இப்படியே தனியா அனுப்ப முடியாது.” என்ற முத்தம்மாவும் தன்மயாவுடன் கிளம்ப ராமு காரை மிக மிக மெதுவாக ஓட்டத் தொடங்கினான்.

“ஜெயில்ல இருந்து வெளியே வந்ததும் நான் யு.எஸ் போயிருவேன்.” என்ற ஆதியின் வார்த்தைகள் நினைவில் இருந்து அழியாமல் அப்படியே இருக்க, சட்டென முத்தம்மாவின் தோள்களில் சாய்ந்தவள் அழத் தொடங்கினாள்.

அவன் கூறிய வார்த்தைகளில் ஒரு சொல்லைக் கூட அவள் இன்னும் மறக்கவே இல்லை. இந்த நான்கு மாத காலமும் அவனுடைய டயரியுடனேயே வாழ்ந்தாள் அவள்.

அதில் அவன் எழுதிய எழுத்துக்கள், வார்த்தைகள் யாவும் அவள் மனதில் சிலையில் எழுத்துப் போல அழியாது பதிந்து போயின.

பொழுது விடிந்ததும் அந்த டயரியை எடுத்தால் ஒரு நாளில் மட்டுமே இரண்டு தடவைகள் அதனை வாசித்து விடுவாள்.

அதனை படித்து படித்து மனப்பாடம் பண்ணியவளுக்கு தன்னவன் மீது இருந்த காதல் அளவுகடந்து எல்லையற்றதாய் விரிந்து போனது.

முத்தம்மாவின் மடியில் அமர்ந்திருந்த யஷ்வியின் தலையை வருடியவள் மீண்டும் எதிர்ப்பார்ப்போடு சாலையை வெறித்தாள்.

சற்று நேரத்திலேயே சிறைச் சாலை வந்தடைந்தனர்.

காரை விட்டு அவசர அவசரமாக இறங்கியவளை முத்தம்மாவோ கடிந்து கொண்டார். அவளோ எதையும் காதில் வாங்காது இறங்கியவள் உயிரே வடிந்தாற் போல அப்படியே காரின் மீது சாய்ந்து அந்த சிறைச் சாலையின் கதவையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவு திறந்தாலே தன்னவன்தான் வருகின்றானோ என அவளுடைய மனது மகிழ்வாய் படபடக்கத் தொடங்கியது.

ஆனால் அவனைத் தவிர வேறு யாரோ எல்லாம் வந்து போக, அவளுடைய விழிகள் அவனுடைய வருகைக்காக ஏங்கித் தவிக்கத் தொடங்கின.

விழிகள் கலங்க வாயிலையே வெறித்துக் கொண்டு நின்றவள் மீண்டும் கதவு திறக்க இமை மூடாது வெளியே வந்தவனைப் பார்த்தாள்.

அது அவன்தான்.

அவளுடைய டெவிலேதான்.

அவனைப் பார்த்ததும் ஓடிச் சென்று இறுக அணைக்க வேண்டும். மூச்சு முட்ட முத்தம் கொடுக்க வேண்டுமென்றெல்லாம் எண்ணிக் கொண்டு வந்தவள் அவனைக் கண்ட நொடி செய்ய நினைத்த அனைத்தையும் மறந்து உறைந்து போன பனிக்கட்டி போல நின்றாள்.

சிறையில் இருந்து வெளியே வந்த ஆதித்யனோ ஆளே மாறிப் போயிருந்தான். உடல் மெலிந்து போய் அவனுடைய படிக்கட்டு தேகமோ காணாமற் போயிருந்தது.

தலை முடியை கோதியவாறு வெளியே வந்தவன் சற்று தூரத்தில் காரில் சாய்ந்து நின்ற தன் மனைவியையும் மகனையும் கண்டு கொண்டான்.

கண்ட நொடி அனைத்தையும் மறந்தான். விழிகளில் அவனுடைய அனுமதியின்றியே கண்ணீர்த் துளிகள் நிறைந்து அவனுடைய பார்வையை மங்கலாக மாற்றியது.

யாரும் அறியாது தன் விழி நீரை துடைத்து எறிந்தவன் தன் குடும்பத்தை நோக்கி நடந்தான்.

ஆதி வருவதைக் கண்ட தன்மயாவின் விழிகளும் நீரை பொழியத் தொடங்கின.

ராமுவோ அவர்களுடைய உணர்வை தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொண்டவர் முத்தம்மாவை நெருங்கி "நாம கொஞ்ச நேரம் அந்த பார்க் போய்ட்டு வரலாம் வா. அவங்க நாலு மாசம் கழிச்சு பார்த்துக்கிறாங்க. பேசட்டும். ஒரு அஞ்சு நிமிஷத்துல திரும்பி வந்துரலாம்." என்றார்.

"சரிங்க." என்றவாறு யஷ்வியை அவர் தூக்க, அவனோ அவருடைய கரத்தில் இருந்து துள்ளி விலகியவன் ஆதியை நோக்கி ஓடினான்.

"அப்பாஆஆஆஆ அப்பாஆஆஆ." என்ற அவனுடைய குரல் அந்த இடமெங்கும் ஓங்கி ஒலித்தது.

தன் மகன் தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டவன் அப்படியே தரையில் மண்டியிட்டு அமர்ந்து அவனை நோக்கி தன் கரங்களை விரித்தான்.

யஷ்விந்தோ பாய்ந்து அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு அவன் முகமெங்கும் முத்தம் வைக்க, நெகிழ்ந்து போனவன் அவனை இன்னும் இன்னும் இறுக அணைத்துக் கொண்டான்.

இத்தனை நாட்களும் சிறையில் அவன் அனுபவித்த துன்பங்கள் யாவும் தன் மகனின் அணைப்பில் கரைந்து போவதை எண்ணி அவனுடைய மனமோ நெகிழ்ந்து போனது.

“கண்ணாஆஆ அப்பா வந்துட்டேன்பா.” என குரல் அடைக்கக் கூறியவன் அவனைத் தூக்கிச் சுற்றி முத்தமிட்டான்.

“ப்பாஆ அம்மா உங்களை தேடி ஒரே க்ரையிங்.” என்றவன் முத்தமாவிடம் ஓடிச் செல்ல முத்தம்மாவும் ராமுவும் யஷ்வியை அழைத்துக் கொண்டு அருகே இருந்த பார்க்கினுள் சென்றனர்.

தேங்கி நின்ற ஆதியோ மீண்டும் தன்மயாவை நெருங்கி வந்தான். அருகே நெருங்க நெருங்க அவனுடைய இதயம் வேகமாக துடித்து அவளிடம் சென்று ஒட்டிக் கொள்ள ஆசைப்பட்டது.

அவளருகே சென்று நின்றவன் அவளை காதலோடு பார்த்தான். அவளுடைய வயிறோ பெரிதாகியிருந்தது.

கண்களில் கனிவோடும் காதலோடும் அவளை பார்த்தவன் அவளை தன் கை வளைவிற்குள் கொண்டு வரத் துடித்தான்.

அவளோ நம்ப முடியாத திகைப்பில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள் மகிழ்ச்சி தாளாது அவனுடைய தாடியடர்ந்த கன்னத்தில் தன் கரத்தை பதித்தாள்.

அவளுடைய ஸ்பரிசம் பட்டதும் உடல் உள்ளம் என அனைத்தும் உருக, “மயா பேபி....” என அழைத்தவன், “நான் இன்னைக்கே யு.எஸ் போறேன்டி.” என்றான்.

அடுத்த நொடியே அவனுடைய கன்னத்தில் ஓங்கி அறைந்தாள் தன்மயா.

“மன்னாங்கட்டி.” அவள் உடலோ சீற்றத்தில் நடுங்கியது.

“ஸ்ஸ்.... ஆஆஆ... என்னடி அடிக்கிற.?” என தன் கன்னத்தை பிடித்தவாறு கேட்டவனின் கன்னத்தில் மீண்டும் அறைந்தாள் அவள்.

“ஏன்டா நான் உன்னை பார்க்க வரும் போது என்னை அவாய்ட் பண்ணின.?” சீறினாள் அவள்.

“எதுக்குடா பெயில் எடுத்தும் வெளியே வரலை.?” குரல் உடைந்தது அவளுக்கு.

“பேபிமா....”

“ஷட் அப் ஆதி வாயை மூடு. நாலு மாசமா நான் எப்படி துடிச்சுப் போனேன்னு தெரியுமா.? இந்த நாள் எப்போ வரும்னு நான் காத்துட்டு இருந்தேன். நீ என்னன்னா வந்ததுமே என்னை விட்டுட்டு யு.எஸ் போறேன்னு சொல்ற.?” என்றவள் தன் கட்டுப்பாட்டை இழந்து அழத் தொடங்கியவள் சட்டென ஆதியின் டீஷர்ட்டை இறுகப் பற்றிக் கொண்டாள்.

“ஏய் மயா என்னடி.? என்னம்மா.?” என அவன் பதறித் துடிக்க,

அவளோ முகம் எல்லாம் சிவந்து போக, நிற்க முடியாது தன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு துடித்தவள் “வ்.... ஆஆஆ ஆதீஈஈஈ வ்வலிக்குதுஉஉ.. ம்மாஆஆ.” என அலற பதறித் துடித்தவன் சட்டென அவளைத் தன் கரங்களில் ஏந்திக் கொண்டான்.

அடுத்த கணமே “முத்தம்மாஆஆஆஆ.” என அலறியவன் அவளுடைய வலி கண்டு துடிதுடித்துப் போனான்.

அவளின் வலியை எங்கணம் அவனால் தாங்க முடியும்.?

ஆதித்யனின் அலறலில் பார்க்கின் வாயிலில் நின்ற முத்தம்மாவும் ராமுவும் பதறி ஓடி வந்தனர்.

அவனால் எதையும் நிதானமாக சிந்தித்துச் செயற்பட முடியாது போனது. தன்னவளின் வலியையும் துடிப்பையும் காணச் சகியாது துடித்துப் போனான் அவன்.

அவளைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டவன் "மயா... கொஞ்சம் பொ... பொறுத்துக்கோ பேபி." என குரல் உடையக் கூறியவன், "முத்தம்மா நான் மயாவை ஹாஸ்பிடல் கூட்டிப் போறேன்.

நீங்க தேவையான திங்க்ஸ் எல்லாம் எடுத்துகிட்டு சீக்கிரமாக வாங்க." என்றவாறு காரில் ஏறியவன் தன்மயாவை தன் மீது சாய்த்துக் கொண்டான்.

முத்தம்மாவோ யஷ்வியுடன் டாக்ஸியில் செல்ல, ராமுவோ சட்டென காரில் ஏறி அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

காரின் பின் இருக்கையில் அமர்ந்து மயாவை தன் மீது குழந்தை போல சாய்த்து வைத்திருந்தவன் பதற்றத்தில் வியர்த்துப் போனான்.

தன்மயாவுக்கோ சில நொடிகளில் வலி குறைந்து விட, அவனுடைய டீஷர்ட்டை இறுகப் பற்றிக் கொண்டவள் மெல்லிய குரலில் "இப்.... இப்போ வலிக்கலை ஆதி.... நீ.. நீங்க டென்ஷன் ஆகாதீங்க." என்று அவனை சமாதானம் செய்தாள்.

அவளுடைய வார்த்தைகளில் மொத்தமாக உடைந்து போனான் ஆதி.

‘அவளுக்கு எப்படி பிரசவ வலியைப் பற்றி தெரிந்திருக்கும்.? இருபத்தொரு வயதேயான சிறு பெண்ணை பழி வெறி என்னும் பெயரில் மோகத்தால் சிதைத்து விட்டோமோ.?’ என எண்ணி தன்னையே வெறுத்தான் அவன்.

பிரசவ வலியின் போதோ பலமுறை தசைச் சுருக்கம் ஏற்படுவதாலும் கர்ப்பப்பை வாய் திறப்பதாலும் குறைந்தகால இடைவெளியில் அடிக்கடி வலி ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

நேரமாக நேரமாக வலி அதிகரித்துக் கொண்டே போகும். வலியின் தன்மை மிக மிக தீவிரமடையும். என்பதை அறிந்து வைத்திருந்தவன் மனதில் துவண்டு போனான்.

‘ஆரம்பத்தில் இப்படித்தான் இருக்கும். போகப் போக வலி கூடுமே. ஐயோ மயா பேபி எப்படி அந்த வலியை தாங்குவாள்.?’ நினைக்கவே அவன் உள்ளம் பதறித் துடித்தது.

“எனக்கொன்னும் இ... இல்ல ஆதி. டெலிவரிக்கு இன்னும் டேட் இருக்கு. நீங்க பயப்படாதீங்க.” என்றவள் சற்றே நிமிர்ந்து அமர்ந்தாள்.

“ஐயோ பேபி.... விட்டு விட்டு வலி வரும்டி. அ.. அடுத்த வலி வர்றதுக்குள்ள ஹாஸ்பிடல் போயிரலாம் பேபிமா.”

என்றவன் “கொஞ்சம் சீக்கிரமா போங்க ராமு.” படபடத்தான்.

மீண்டும் ஒரு முறை அவள் வலியில் துடிப்பதை பார்க்கும் சக்தி அவனிடம் நிச்சயமாக இல்லை.

நிமிர்ந்து அமர்ந்திருந்தவளோ காலை சற்றும் அசைக்க முடியாமல் இடுப்பு எலும்புகள் தொடை எலும்புகள் என அனைத்தையும் கிட்டி போட்டது போல ஏதோ ஒன்று இறுகப் பிடித்தாற் போல இருக்க, அடி வயிற்றில் சுள்ளென்ற வலியை உணர்ந்தவள் அடுத்த கட்ட வலியை தாங்க முடியாது துடித்தாள்.

அவளுக்கு மீண்டும் வலி வந்ததை உணர்ந்தவனின் உதடுகள் நடுக்கமுற்றன.

“ஒ... ஒன்னும் இல்லை பேபி. இன்.... இன்னும் கொஞ்ச... கொஞ்ச நேரத்தில போயிரலாம்.” என்றவனுடைய கண்கள் கண்ணீரைச் சிந்தத் தொடங்கின.

“அம்மாஆஆஆஆஆ ஆஆஆ ஆதீஈஈஈஈஈ மு.... முடியலைடாஆஆ ம்மாஆஆ வ்வலிக்குது.” என கதறியவளைக் காண காண அவனுக்கோ தலை விறைத்தது.

“சீ... சீக்கிரமா போங்க ராமு.” என்றவனின் குரல் உடைந்தது.

“மயா பேபி.... மயா பேபி....” என பதற்றத்தில் என்ன சொல்வது என அறியாது அவளுடைய பெயரை மாத்திரம் மீண்டும் மீண்டும் உருப்போடலானான் ஆதித்யன்.

ஒரு பெண்ணின் வாழ்வின் முக்கிய கட்டம், அவள் குழந்தை பெற்றுக் கொள்ளும் தருணம்.

பத்து மாதங்கள் தன் வயிற்றுக்குள்ளேயே பொத்தி வைத்து பாதுகாத்த குழந்தையை வெளியேற்றும் அந்த நிமிடங்களை அவளால் என்றுமே மறக்க முடியாது.

அந்த தருணத்தின் வலியை பெண் மாத்திரம் அனுபவிக்க வைத்த இறைவனை மனதால் சபித்தான் ஆதி.

அவளின் மொத்த வலியையும் தன்னால் ஏற்க முடியுமாயின் மிக மிக சந்தோஷமாகவே அத்தனை வலியையும் தன் உடலில் ஏற்றிருப்பான் அவன்.

தன்னவளின் மென்மை பற்றி அறிந்து வைத்தவனுக்கு உள்ளம் குமுறியது.

சற்று நேரத்தில் மூச்சு வாங்க அமைதியானவள் அவனுடைய மார்பில் முகம் புதைத்து அழத் தொடங்கினாள்.

பிரசவ நேரத்தில் வலியெடுக்கும் என தெரிந்து வைத்திருந்தவளோ இப்படி வலிக்கும் என சற்றும் எதிர்ப்பார்த்திருக்கவே இல்லை.

ஆதியின் கரங்களுக்குள் இருப்பது மாத்திரமே தன்னை சற்று தைரியமாக வைத்திருப்பதை உணர்ந்தவள் இன்னும் அவனுடைய மார்பினுள் தன் முகத்தை அழுந்தப் புதைத்தாள்.

“ப.... பயமா இருக்கு ஆதீஈஈஈ. ம்ம்மாஆ.” என்றவளின் கன்னங்களை பற்றி முத்தமிட்டவன் “நான் இருக்கேன்ல பேபி.

உனக்கு ஒன்னும் ஆகாது. பயப்படாத பேபிமா.” என்று அவன் படபடப்பாக கூறி முடிக்க முதலே அடுத்த கட்ட வலியில் அவள் துடிதுடித்துப் போனாள்.

சற்று நேரத்தில் குழந்தை மிதந்து கொண்டிருக்கும் பனிக் குடம் உடைந்து அவள் ஆடை நனைத்து அவனையும் நனைத்தது.

“ராமுஉஉஉஉ இன்னும் எவ்ளோ நேரமாகும்.?” பதறினான் அவன்.

“வந்துட்டோம் தம்பி.” எனறவர் காரை நிறுத்தி விட்டு ஓடி வந்து கார்க் கதவை திறந்து பிடித்தார்.

தன்மயாவோ வலியில் அரை மயக்கத்திற்குச் செல்ல, அவளை அவசர அவசரமாக கரங்களில் ஏந்தியவன் மருத்துவமனைக்குள் அவளைக் கொண்டு ஓடினான்.

ஏற்கனவே திவ்யாவுக்கு அலைபேசியில் அழைத்து தயாராக இருக்கும்படி கூறியிருந்ததால் திவ்யாவும் மருத்துவ உபகரணங்களுடன் தயாராகி லேபர் அறையில் தன்மயாவுக்காக காத்திருந்தாள்

தன்மயாவை பிரசவ அறையினுள் கொண்டு வந்து சேர்த்து விட்டு அவளின் வலியைக் காணாது துடிதுடித்தவனாய் அந்த அறையை விட்டு வெளியேற முயன்றவனின் ஒற்றைக் கரத்தை இறுகப் பிடித்துக் கொண்டாள் அவனுடைய குயின்.

எங்கே அவனுடைய கரத்தை விட்டால் மீண்டும் அவன் தன்னைப் பிரிந்து சென்று விடுவானோ.? தன்னையும் குழந்தையும் விட்டுவிட்டு யு.எஸ் சென்று விடுவானோ என எண்ணி அஞ்சியவள் அத்தனை வலியிலும் கூட அவனுடைய கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு “டோ.... டோன்ட் லீவ் மீ ஆதி. எ... என்னை விட்டு அம்மாஆஆஆ.... ஹ்ஹாஆஆ... போஓ.... போகாத.” என்க, தவித்துப் போனான் அவன்.

சட்டென அவள் அருகே வந்தவன் “நான் எங்கேயும் போகலைடி. போகலை. உன்கூடதான் இருக்கேன் பேபிமா.” என்றவாறு வைத்தியரும் அவனுடைய தோழியுமான திவ்யாவை பொருள் பொதிய பார்த்தான் ஆதி.

திவ்யாவோ அவனுடைய பார்வையின் பொருளை உணர்ந்தவள் சம்மதமாக தலையசைத்தாள்.

அடுத்த சில நிமிடங்களில் வைத்தியரும் தாதிகளும் தாய்க்கு எந்தவொரு ஆபத்தும் இன்றி குழந்தையை வெளியே கொண்டு வருவதற்காக போராடத் தொடங்க, தன்னவளின் வலியை தனதாக்கிக் கொண்டவன் தன்னவளோடு சேர்ந்து ஆதரவாய் அவள் கரம் பற்றி, நெற்றி முத்தம் வைத்து அவள் துவளும் தருணம் அவளை மீட்டு, அவள் வலியில் துடிக்கும் தருணம் 'நான் இருக்கிறேன்' என பக்கபலமாக இருந்தான்.

அவளை விட அவன்தான் வலியில் துடித்துப் போனான் எனலாம்.

ஒரு வாறாக எல்லாரையும் ஆட்டிப் படைத்து விட்டு குழந்தை வெளியே வரத் தொடங்க, குழந்தையை ஏந்தி எடுக்க முயன்ற வைத்தியரை தவிர்த்து விட்டு முதன் முதலில் தன் குழந்தையை தன் கரங்களில் ஏந்திக் கொண்டான் ஆதி.

தன் பெண் குழந்தையின் பிஞ்சு மேனியின் ஸ்பரிசத்தில் அவனுடைய மேனி சிலிர்த்தது.

தன்மயாவையே குழந்தை போல பார்ப்பவன் தன் குழந்தையைக் கண்ட நொடி உலகத்தின் ஒட்டு மொத்த இன்பமும் சுளையாக தன் கையில் கிடப்பதாக எண்ணிப் பூரிப்படைந்தான்.

விழிகள் அருவியாக உவர் நீர் மழையை மகிழ்ச்சியில் பொழிந்தன.

தொப்புள் கொடியை வலிக்காது வெட்டி, குழந்தையை சுத்தப்படுத்தி மெல்லிய துணியால் குழந்தையை மூடியவன் மூச்சடக்கி முத்தம் வைத்தான்.

யஷ்வின்தின் குழந்தைப் பருவத்தை தவற விட்டதால் இது வரை இருந்த வருத்தம் இப்போது மறைந்து போனது.

தன் உயிர் நீரிலும் தன்னவளின் மூலமும் உலகை வந்தடைந்த தன் செல்வத்தை வலிக்காது அணைத்துக் கொண்டவன் குழந்தையை தன்மயாவின் அருகே கிடத்தினான்.

குழந்தை வெளியே வந்த கணம் தன்மயாவோ ஆழ்ந்த மயக்கத்திற்கே சென்றுவிட, அவளை கண்ணீரோடு பார்வையால் வருடினான் ஆதி.

வாடிய பூங் கொடி போல, சோர்ந்து போய் கிடந்தவளின் முகத்தில் இருந்த கூந்தலை ஒதுக்கி அவளுடைய நெற்றியில் காதலாய் முத்தம் இட்டான் அவன்.

“எப்படி இருந்த என்னை இப்படி மாத்திட்டியே மயா பேபி. கொஞ்ச நேரத்துல செத்துப் பிழைச்சிட்டேன்டி.” என்றவன் மீண்டும் அவளுடைய நெற்றியில் ஆசையாய் காதலாய் அரவணைப்பாய் மென் முத்தம் பதித்தான்.

சற்று நேரத்தில் கண் விழித்தவள் தன் அருகே கிடந்த குழந்தையைக் கண்டு முகம் மலர்ந்து போனாள்.

“எப்படி இருக்க பேபி.? உடம்பு வலிக்குதா.?” என அவளுடைய கூந்தலை வருடிய வண்ணம் மென்மையாக கேட்டவனை கண்ணீரோடு பார்த்தவள் மறுப்பாக தலையசைத்தாள்.

“நம்ம குழந்தையை பாரு மயா பேபி.” என்றவன் அதனை தூக்கி அவள் மார்பின் மீது கிடத்தினான். நெகிழ்ந்து போனாள் தன்மயா.

குனிந்து தன் குழந்தைக்கும் தன்மயாவிற்கும் முத்தம் பதிக்க, அழகாக சிவந்து போனது அவளுடைய வெண்தாமரை முகம்.

“ஐ லவ் யூ ட்ராமா குயின். ஐ லவ் யு சோ மச். இந்த மயா பேபியோட சேர்த்து இப்போ எனக்கு மொத்தமா மூணு பேபி கிடைச்சிருக்காங்க.” என்றவனைப் பார்த்து முகம் திருப்பிக் கொண்டாள் அவள்.

“ஹேய் என்னாச்சுடி..?”

“என்னடி..?” என்றவன் அவளுடைய முகம் திருப்புதலில் துடிதுடித்துப் போனவனாக கேட்க,

“நத்திங் ஆதி.” என்றவள் விழி மூடி தூங்கிப் போனாள்.

அடுத்த நாளே அவளை மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்தனர். குழந்தையோடு வீட்டுக்கு வந்தவளை தாங்கிக் கொண்டான் ஆதி.

அவளோ அமைதியாக வலம் வர, அவனுடைய மனமோ வாடித்தான் போனது.

அவன் பேச முயற்சிக்கும் நேரமெல்லாம் அவள் ஒதுங்கி ஒதுங்கிப் போக, தவித்துப் போனான் அவன்.

தன்மயாவோ யஷ்விந்தோடும் குழந்தையோடும் தூங்க, ஆதியோ தனி அறைக்கு தள்ளப்பட்டான்.

குழந்தையை ஆசை தீர தூக்கிக் கொஞ்சுபவனுக்கு தன்னவளையும் மடி தாங்கி சேயைப் போல பார்த்துக் கொள்ள வேண்டுமென்ற பேரவா தோன்றி இம்சித்தது.

அவள் தன்னை அருகே அனுமதித்தால் தானே என பெருமூச்சோடு எண்ணிக் கொண்டவன் அவளோடு மனம் விட்டு பேச வேண்டும் என எண்ணிக் கொண்டே தூக்கத்தில் ஆழ்ந்தான்.

அடுத்த நாள் காலையில் துயில் கலைந்து எழுந்தவனின் அருகே யஷ்விந்தும் குழந்தையும் இருக்க, அவன் மனமோ புன்னகையை குத்தகைக்கு எடுத்துக் கொண்டது.

தன் மகனையும் மகளையும் ஆசை தீர முத்தமிட்டவன் தன்மயாவைத் தேடினான்.

இன்று அவளோடு எல்லாவற்றையும் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டுமென எண்ணிக் கொண்டவன் அவளை அழைக்க, படுக்கையின் அருகே இருந்த காகிதத் தாள் ஒன்று காற்றுக்கு படபடத்தது.

அது கடிதம் என்பதை உணர்ந்து கொண்டவன் பதறிய மனதோடு அதனை எடுத்து படிக்கத் தொடங்கினான்.

“ஹாய் மிஸ்டர் ஆதித்யன்.” என ஆரம்பிக்கப்பட்ட அந்த கடிதத்தை எழுதியது தன்னுடைய குயின் என்பதை உணர்ந்தவன் மிஸ்டர் ஆதித்யன் என்ற அவளுடைய விளிப்பில் வேதனை கொண்டான்.

அவன் மனமோ சற்றே பதறத் தொடங்கியது.

தன் ட்ராமா குயின் எங்கே.? ஏனிந்த கடிதம்.? என்றெல்லாம் சிந்தித்தவன் கடிதத்தோடு அந்த அறையை விட்டு வெளியே வந்து தன்னவளை தேடினான்.

“மயாஆஆஆஆ....?”

“மயாஆஆஆ எங்க இருக்க.?” என்ற அவனுடைய அழைப்புக்கு எந்தவித பதிலும் அற்றுப் போக அவனுடைய இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது.

கீழே ஹால், கிட்சன் என எல்லா இடத்திலும் தேடியவன் அவளுடைய அறைக்குச் சென்று பாத்ரூமிலும் அவளைத் தேடிப் பார்த்தான்.

அதே வேகத்தோடு தன் அறைக்கு ஓடி வந்தவன் தன்னுடைய அறை பாத்ரூமிலும் தேடி அவளைக் காணாது போக, அவனுடைய உள்ளமோ துடித்துப் போனது.

கரங்கள் நடுங்க அந்தக் கடிதத்தை மீண்டும் விரித்தவன் தன் மனதை திடப்படுத்த முயன்று தோற்றவனாக படிக்கத் தொடங்கினான்.

“ஹாய் மிஸ்டர் ஆதித்யன். நமக்குள்ள நிறைய விஷயங்கள் நம்மளை மீறி நடந்து முடிஞ்சிருச்சு. இத்தனை நாள் நான் தெரியாம பண்ண தப்புக்கு தண்டனை அனுபவிச்சேன். அதே மாதிரிதான் நீங்களும். நாலு மாசமா ஜெயில்ல இருந்தீங்க. உங்களை பிரிஞ்சு நான் ரொம்ப கஷ்டப்பட்டேன். ஆனா என்னால உங்க கூட சேர்ந்து வாழவும் முடியாதுன்னு இப்போதான் புரியுது. நீங்க கேட்ட மாதிரி குழந்தையை பெத்து உங்ககிட்டேயே கொடுத்திட்டேன்.

என்னை விட அவங்களை நீங்க நல்லா பார்த்துப்பீங்கன்னு எனக்கு தெரியும்.

நான் என்னோட மன நிம்மதியை தேடிப் போறேன் ஆதி. பை." என்றவாறு முடிந்திருந்தது அவளுடைய கடிதம்.

அதைப் படித்து முடித்தவனின் கரங்களில் இருந்த கடிதமோ நழுவி தரையில் விழுந்தது.

அவனால் அதில் உள்ள வார்த்தைகளை நம்பத்தான் முடியவில்லை.

'அவ்ளோதானா.? என்ன விட்டுட்டு போய்ட்டாளா.? என்னோட காதல் அவளைக் கொஞ்சம் கூட பாதிக்கவே இல்லையா.?' என எண்ணியவன் தலையைப் பற்றிக் கொண்டு தரையில் தொப்பென அமர்ந்தான்.

அவன் உலகமோ அந்த நொடியே இருண்டு அழிந்து போனதைப் போல இருந்தது.

விழிகளில் வலி தாங்காது விழி நீர் வழிய, தன் கரத்தை நிலத்தில் ஓங்கி அடிக்க முயன்றவனை பின்னால் இருந்து அணைத்துக் கொண்டன இரு கரங்கள்.

அந்த மென்மையான கரங்களின் ஸ்பரிசத்தில் அதிர்ந்தவன் சட்டென திரும்பிப் பார்த்தான்

அவனுடைய மனதை கொள்ளை கொண்ட மாயக்காரி தன்னை அணைத்திருப்பதைப் பார்த்தவன் அடுத்த நொடியே அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அவனுடைய உதடுகளோ "மயா பேபி." என முணுமுணுத்தன.

காற்றுக் கூட புக முடியாத அளவு இறுக்கமான அணைப்பில் சிக்குண்டு இருந்தவளின் கரங்களோ உயர்ந்து அவனுடைய கழுத்தை வளைத்தது.

சட்டென அவளை விலக்கியவன் கீழே கிடந்த கடிதத்தை எடுத்துக் காட்டி “என்னடி இது.?” என உறுமலாக கேட்டான். அவனுடைய தேகமோ சீற்றத்தில் நடுங்கியது.

“ஹாங் அது நான் உங்களுக்கு எழுதலையே. யாரோ யு.எஸ் போகப் போறேன்னு சொன்னாங்க அவங்களுக்கு எழுதினேன்.” என்றாள் அவள்.

“இடியட். இப்படியா விளையாடுறது.? அறிவில்லையா உனக்கு.? எதுல விளையாடணும் எதுல விளையாடக் கூடாதுன்னு உனக்குத் தெரியாதா ல்டுப்பிட். நான் எப்படி பதறிப் போய்ட்டேன்னு தெரியுமா.” என பழைய டெவிலாக மாறி அவளை திட்டத் தொடங்கியவனின் வாயை தன் கரத்தால் மூடியவள், அவனுடைய தாடியடர்ந்த கன்னத்தில் அழுத்தமாக முத்தம் வைத்தாள்.

திட்டிக்கொண்டிருந்தவனின் அதரங்கள் அவளுடைய முத்தத்தில் அசைவற்று நின்று போயின.

விழிகள் மூடி அவளுடைய முத்தத்தை ரசித்து நின்றவனின் உதட்டில் இருந்து தன் கரத்தை எடுத்துக் கொண்டவள் “என்ன சார் இனி என்னை விட்டுட்டு யு.எஸ் போற ஐடியா இருக்கா.?” எனக் கேட்டாள்.

அவனோ மறுப்பாக தலை அசைத்தவன் விலகி நின்றவளின் இடையோடு கையிட்டு தன் மார்போடு அவளை மோத வைத்து, ஒரு கணம் கூட தாமதிக்காது அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

“உன்னை விட்டுட்டு என்னால இனி ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாதுடி. உண்மையை சொல்லணும்னா உன் மேல

பைத்தியமாகிட்டேன்டி. புரிஞ்சிக்கோ மயா பேபி. இனி நீ எப்போவும் என்கூடதான் இருக்கணும். என்கூட மட்டும்தான் இருக்கணும்." என உள்ளம் நெகிழக் கூறினான் அவன்.

அவளோ அவனுடைய காதலில் கரைந்து போனாள்.

"எனக்கு தெரியும் ஆதி. உங்க காதலோட ஆழத்தை புரிஞ்சுகிட்டேன். நீங்க இல்லாத ரெண்டு நாள்லையே என்னால உங்களை விட்டு இருக்க முடியலை ஆதி.

உங்களைத் தேடி நம்ம வீட்டுக்கு வந்தேன். ஆனா இங்கேயும் நீங்க இல்லை. எப்படி பயந்தேன் தெரியுமா.? உங்களை பார்க்கணும்னு துடிச்சுப் போனேன். அப்புறம்தான் உங்க டயரி எனக்கு கிடைச்சுது." என்றதும் திகைத்தான் அவன்.

"வாட்.? அடிப்பாவி என்னோட டயரியை ரீட் பண்ணிட்டியா.?" என அதிர்ந்து போய் கேட்டவனை சிரிப்போடு பார்த்தவள் "லைட்டா." என்றாள்.

"ஓஹோ அதனாலதான் ட்ராமா குயின் நான் ஜெயில்ல இருக்கேன்னு ஈசியா கண்டு பிடிச்சிட்டீங்க போல." எனக் கேட்டான் அவன்.

"ம்ம்.... ஆமா. பட் உங்களை பார்க்க எத்தனை தடவை வந்தேன். ஏன் ஆதி ஒரு தடவை கூட நீங்க என்னைப் பார்க்க வெளியே வரவே இல்லை.? ஒவ்வொரு முறையும் ஆசையா வந்து எப்படி ஏமாந்து போயிருக்கேன் தெரியுமா.? எத்தனை தடவை ஜாமீன்காக ஜெயில்ல போய் நின்னேன் தெரியுமா.? ஆனா உங்ககிட்ட இருந்து எந்த ரெஸ்பான்ஸும் வரலை. நாலு மாசமா நடை பிணம் மாதிரிதான் இருந்தேன். நீங்க பக்கத்துல இருக்கும் போது உங்க மேல கோபம் மட்டும்தான் இருந்திச்சு. ஆனா நீங்க எப்போ என்னை விட்டு விலகி போனீங்களோ அதுல இருந்து ஒவ்வொரு நிமிஷமும் உங்க மேல இருந்த காதல் கூடிகிட்டே போச்சு. ஒரு தடவையாவது உங்களை பார்க்க மாட்டோமான்னு ரொம்ப ஏங்கிப்

போய்ட்டேன்." என்றவள் சற்றே கோபத்துடன் அவனுடைய கரங்களில் இருந்து வெளியே வந்தாள்.

அவளுடைய விழிகளும் அவளுடைய உணர்வுகளை அப்படியே கண்ணீராகக் கொட்டின.

"ஹேய் எனக்கு மட்டும் உன் மேல ஆசை இல்லையாடி.? அன்னைக்கு என்னைப் பார்க்க வந்தியே அப்போ எவ்ளோ சந்தோஷபட்டேன் தெரியுமா.? உன்னை பார்த்ததே எனக்கு கிடைச்ச வரம்னுதான் நினைச்சேன் மயா.

பட் உன்னை டெய்லி பார்த்தா சத்தியமா என்னால உன்னை விட்டு பிரிஞ்சு இருக்க முடியாதுடி. உன்னைப் பார்க்கணும், உன்னைத் தொடணும், உன்னை என்னோட கைக்குள்ளேயே வெச்சிருக்கணும்னு எத்தனையோ ஆசைகள் ஏக்கமா வந்துகிட்டே இருக்கும்.

என்னால அதைக் கன்ட்ரோல் பண்ணிகிட்டு இருக்க முடியாதுடி. உன்னோட ஒரு துளிக் கண்ணீர் என்னோட உறுதியை ஒரு செக்கன்ல அழிச்சிரும் பேபி. அன்னைக்கே நீ வந்து அழுதுட்டு போனதுக்கே ஒரு வாரமா நான் தூங்கலைடி." என்றவன் மீண்டும் அவளை தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

"ஆரம்பத்துல உன்னை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன்ல சாரி கண்ணம்மா. என்னால என்னையே மன்னிக்க முடியலை." என்றவனின் கன்னத்தில் வருடியவள் "பழசெல்லாம் மறந்துருங்க ஆதி." என்றாள்.

"உன்னால மறக்க முடியுமா குயின்.?" என கேட்டான் அவன்.

“நம்மளோட காதல் அதெல்லாத்தையும் மறக்க வெச்சிரும் ஆதி. எனக்கு எல்லாமே மறந்து போச்சு. இப்போ என் மனசுல இருக்கிறதெல்லாம் என்னோட ட்ராமா கிங் மட்டும்தான்.” என்றாள் அவள்.

“வாட்.? இப்போ நீ என்ன சொன்ன.?”

“என்ன சொன்னேன்.?”

“ப்ச்.... இப்போ நீ என்னை எப்படி கூப்பிட்ட.?”

“ட்ராமா கிங்னு கூப்பிட்டேன். இந்த குயினோட கிங் நீங்கதானே” என்று அவள் புன்னகைக்க, அவளுடைய இதழ்களின் நகைப்பில் அவனுடைய மனமோ தொலைந்து போனது.

“ஹேய் நான் உன்னை இந்த வீடு முழுக்க தேடினேனே. உன்னை எங்கேயும் காணலையே. எங்கடி இருந்த.?”

“நம்ம ரூம் பால்கனில மறைஞ்சிருந்தேன்.” என இமை சிமிட்டிச் சிரித்தாள் அவள். அவளுடைய இமை சிமிட்டலில் தொலைந்து போனவன்,

“லவ் யூ மயா பேபி.” என்றான்.

“போடா டெவில்.”

“லவ் யூ ட்ராமா குயின்.” அவளுடைய இடுப்பை வளைத்து மீண்டும் கூறினான் அவன்.

“போடா ட்ராமா கிங்.” சிலுப்பிக் கொண்டாள் அவள்.

“லவ் யூ டி கண்ணம்மா.” என்றவன் அவள் போடா என்று சொல்ல முயன்ற அடுத்த கணமே அவளுடைய இதழ்களை தன் அதரங்களால் கவ்விக் கொண்டான்.

“ராஸ்கல், டெவில், ஹிட்லர்” என திட்டத் தொடங்கியவள் இறுதியில் முணுமுணுப்பாக மாறி முனகலோடு நிறுத்திக் கொள்ள, ஆதியோ மீண்டும் தன் கை வந்து சேர்ந்த தேவதையின் இதழ்களை சுவைத்துக் கொண்டே இருந்தான்.

அவளுடைய இடையில் இருந்த அவனுடைய கரங்களோ மோட்சம் அடைய வேண்டிய அவளுடைய மெல்லின உடல் பாகங்களை தீண்டி வல்லின பாகங்களை ஆளத் தொடங்க, வெட்கத்தோடு அவன் கரங்களை தட்டி விட்டவள் அவனுடைய கன்னத்தை வலிக்கும்படி கிள்ளி வைத்தாள்.

“ஸ்ஸ்ஆஆ.... வலிக்குதுடி நீ தான்டி லேடி டெவில்.” என்றான் அவன்.

“ஹா.... ஹா....”

“சிரிக்காத பேபி. ஐ கான்ட் கன்ட்ரோல் மை செல்ஃப்.” என பார்வை மாற கூறியவனைக் கண்டு முகம் சிவந்தாள் அவள்.

“ஓ மை காட் என்ன பேபி இது இப்படி சிவந்தா என்னால எப்படி சும்மா இருக்க முடியும்.? கொல்றியே பேபி.” என்றவனை முறைத்தாள் அவள்.

“ஐயோஓஓ முறைக்காதடி. எனக்கு என்னமோ பண்ணுது.” என தன் இதயத்தை தொட்டுக் காட்டியவனைக் கண்டு அவள் முகம் காதலால் மலர்ந்தே போனது. வெட்கப் புன்னகை புரிந்தவள்,

“அம்மாடியோ சரியான இம்சைடா நீ.” என்றாள்.

அவனோ அவளைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டவன் அப்படியே அவளை மொட்டை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

“உனக்கு உயரமான இடம்னா பிடிக்கும்னு சொன்னல்ல. நம்ம ஹனி மூனுக்கு கூலா ஹில் ப்ளேஸ் எங்கயாச்சும் போகலாம்டி.” என்றான் அவன்.

“ம்ம் ஆதிம்மா. எங்க போனாலும் இந்த மயா உங்க கூடவே வருவா.” என்றாள் அவள்.

“காதல் இவ்ளோ அழகா இருக்கும்னு நான் நினைக்கவே இல்லைடி.” என்றவன் அவளுடைய கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.

“காதல் எப்பவுமே அழகுதான் ஆதிம்மா. காதலிக்குறவங்க அதை புரிஞ்சுகிட்டாலே போதும்.” என்றாள் அவனுடைய மோகத்தை வென்றவள்.

அவளுடைய வார்த்தைகளில் இருந்த நிஜம் அவனை சிலிர்க்க வைத்தது.

இனி என்றும் அவர்களுடைய வாழ்வில் காதல் காதல் காதல் மட்டுமே.

அவனுடைய ஆண் கர்வம், பழி வெறி, சீற்றம், மோகம் போன்ற அனைத்தும் அவளுடைய காதலின் முன்பு பணிந்து போனது.

“பணியுமாய் என்றும் பெருமை”

*********சுபம்**********